# எழுநா

இதழ் 48

ஜூலை
2026



ISSN 3093-5210

# எழுநா

இதழ் 48 தொகுதி - 6 எண் - 7


**அட்டைப்படம் :**

கிழக்கிலங்கையின் கரையோரக் கிராமமான களுவன்கேணி மக்களிடையே நிலவும் 'குடாநீலி' எனும் வழிபாட்டைப் பிரதிபலிக்கும் ஓவியம்.

ஓவியம்: பிலோமியநாதன் சலோமியன்

## இயக்குநர் சபை

**கணேசானந்தன் சசீவன்**
நிர்வாக இயக்குநர்

**தில்லைநாதன் கோபிநாத்**
வெளியீடு

**கனகலிங்கம் சுகுமார்**
வளத்திரட்டல்

## வெளியீட்டுக்குழு

**கணேசானந்தன் சசீவன்**
பதிப்பாளர்/ பிரதம ஆசிரியர்

**ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்**
உதவி ஆசிரியர் / நகல் திருத்தம் / நூல் தயாரிப்பு / தர நிர்ணயம்

**தர்ஷனா பிறேம்குமார்**
கற்கை வட்டம் / நிகழ்வுகள் / ஊடக ஒருங்கிணைப்பு

**பியூலா பரமேஸ்வரன்**
வலைத்தளம் / பரவலாக்கம் / அச்சு ஒருங்கிணைப்பு / விநியோகம்

## தயாரிப்புக் குழு

**ஜீவமணி பாலன்**
நூல் வடிவமைப்பு /அட்டை வடிவமைப்பு

**ரவீந்திரன் கருப்பையா**
நூல் வடிவமைப்பு/அட்டை வடிவமைப்பு

**வேணி ஆனந்தா**
சஞ்சிகை வடிவமைப்பு

**கலாமணி பரணீதரன்**
அச்சு ஒருங்கிணைப்பு

**கிறிஸ்ரியன் லக்ஷ்மன் சிசில்**
மெய்ப்புப்பார்ப்பு

**பானு சுதாஹரன்**
மெய்ப்புப்பார்ப்பு

**பாலசுப்ரமணியம் துவாரகன்**
மெய்ப்புப்பார்ப்பு

**நிரோஷா தியாகராசா**
மெய்ப்புப்பார்ப்பு

## வளவாளர்கள்

**தில்லைநாதன் கோபிநாத்**
நூல் தயாரிப்பு / நூல் அச்சாக்கம்

**தங்கராஜா பிரபாகரன்**
ஊடக வீச்சு / மனிதவளத் தொடர்பு

**சிறிதரன் சோமிதரன்**
ஆவணப்படம்

**இ. பத்மநாப ஐயர்**
உசாத்துணை சேவை

**சுஜீவன் தர்மரட்ணம்**
நிகழ்வுகள் / கற்கை வட்டம்

**ஜனனி பாலசுந்தரம்**
வலைத்தளம் / பரவலாக்கம்

## ஆதரவளிப்போர்

**மானுடம் நிறுவனம்**
நூல் தயாரிப்பு / சஞ்சிகை விநியோகம் / உசாத்துணை சேவை

**ஆதிரை வெளியீடு**
ஆவணப்படம்

**நிகரி**
ஆவணப்படம்

**நாளை வெளியீடு**
ஆவணப்படம்

## கூட்டுறவு புத்தக மன்ற ஒருங்கிணைப்பாளர்கள்

- **கனகலிங்கம் சுகுமார்** – ஐக்கிய இராச்சியம்
- **கணேசானந்தன் சசீவன்** – ஐக்கிய இராச்சியம்
- **இ. பத்மநாப ஐயர்** – ஐக்கிய இராச்சியம்
- **சதீசன் தனபாலசுந்தரம்** –ஐக்கிய இராச்சியம்
- **மாதவி சிவலீலன்** – ஐக்கிய இராச்சியம்
- **எஸ்.கே.விக்னேஸ்வரன்** – கனடா
- **இளங்கோ** – கனடா
- **ரமணன் சந்திரசேகரமூர்த்தி** – கனடா
- **சிவராஜா ரூபன்** – நோர்வே
- **சஞ்சயன் செல்வமாணிக்கம்** – நோர்வே
- **தில்லைநாதன் கோபிநாத்** –அவுஸ்திரேலியா
- **அசோக் யோகன் கண்ணமுத்து** – பிரான்ஸ்
- **கந்தையா ரமணிதரன்** –ஐக்கிய அமெரிக்க நாடுகள்
- **ராஜ்குமார் ரஜீவ்காந்த்** – கொழும்பு

## கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்

- **சிவராஜா ரூபன்** – நோர்வே
- **எஸ். கே. விக்னேஸ்வரன்** – கனடா
- **அசோக் யோகன் கண்ணமுத்து**– பிரான்ஸ்

## நிகழ்வு ஒருங்கிணைப்புப் பங்காளர்கள்

**சிறகுகள் அமையம்**
யாழ்ப்பாணம்

**சத்தியமனை நூலகம்**
யாழ்ப்பாணம்

**தமிழ்த் தேசிய கலை இலக்கிய பேரவை**
கிளிநொச்சி

**கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
வவுனியா

**சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம்**
மட்டக்களப்பு

**திரைப்படக் கழகம்**
மட்டக்களப்பு

**ஏறாவூர் வாசிப்பு வட்டம்**
மட்டக்களப்பு

**தளம் கட்டமைப்பு**
திருகோணமலை

**நிகர் சமூக கலை இலக்கிய அரங்கம்**
கண்டி

**கலை இலக்கிய வட்டம்**
பதுளை

**தியேட்டர் மேட்ஸ் பண்பாட்டு கழகம்**
நுவரெலியா

**கொழும்புத் தமிழ்ச் சங்கம்**
கொழும்பு

**கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (PILLARS)**
புத்தளம்

## விநியோகப் பங்காளர்கள்

- **பனுவல் புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
- **குயின்சி புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
- **வெண்பா புத்தகசாலை** – யாழ்ப்பாணம்
- **எங்கட புத்தகங்கள்** – யாழ்ப்பாணம்
- **பாத்திமா புத்தக நிலையம்** – மட்டக்களப்பு
- **மொழி புத்தகம் பதிப்பகம்** – வெள்ளவத்தை

## அச்சுப்பதித்து விநியோகிப்போர்

- **நாளை வெளியீடு** – கனடா

## கலை வட்டம் துறைசார் மதியுரைஞர் குழு

**நிலாந்தன் மகாதேவா**
இலக்கியம் – கவிதை

**பாக்கியநாதன் அகிலன்**
காண்பியக்கலை – கட்டடக்கலை

**ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார்**
ஆற்றுகைக்கலை – அரங்கக்கலை

**இலங்கரெட்ணம் சஜித்**
ஆற்றுகைக்கலை – நடனம்

**சபேஸ் சுகுணசபேசன்**
காண்பியக்கலை – புகைப்படக்கலை

## ஆய்வு நிறுவனம் துறை சார் மதியுரைஞர் குழு

**ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்**
மொழியும் இலக்கியமும்

**கந்தையா ரமணிதரன்**
நீரியலும் நீர்ப்பாசனமும்

**குமாரவடிவேல் குருபரன்**
சட்டமும் சட்ட முறைமையும்

**நடராஜா சிறீஸ்கந்தராஜா**
சூழலும் உயிர்ப் பல்வகைமையும்

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**
சமயமும் இறையியலும்

**பால சிவகடாட்சம்**
சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்

**நாகமுத்து பிரதீபராஜா**
புவியியலும் திட்டமிடலும்

**பரமு புஸ்பரட்ணம்**
வரலாறும் தொல்லியலும்

**சனாதனன் தமோதரம்பிள்ளை**
கட்புல அரங்கேற்றக் கலைகள்

**சேரன் உருத்திரமூர்த்தி**
சமூகவியலும் மானிடவியலும்

**முத்துக்கிருஷ்ணன் சர்வானந்தன்**
பொருளியலும் நிதியியலும்

**சபா ஜெயராசா**
கல்வியியலும் கற்றலும்

**மரியோ அருள்தாஸ்**
அரசியலும் மெய்யியலும்

**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**
கட்டடக்கலையும் வடிவமைப்பும்

**கந்தையா பகீரதன்**
விவசாயமும் மீன்பிடியும்

## வழிப்படுத்தும் குழு

**மீநிலங்கோ தெய்வேந்திரன்**

## விநியோக ஒருங்கிணைப்பாளர்கள்

**இ. பத்மநாப ஐயர்**
ஐக்கிய இராச்சியம்

**எஸ். கே. விக்னேஸ்வரன்**
கனடா

**சிவராஜா ரூபன்**
நோர்வே

**அசோக் யோகன் கண்ணமுத்து**
பிரான்ஸ்

**நந்தன் தர்மபாலன்**
அவுஸ்திரேலியா

# உள்ளே...


இலங்கையின் மகாவம்ச வரலாற்றைப் புரட்டிப்போட்ட கந்தரோடைத் தொல்லியலும் ஆதி இரும்புக்காலம் பற்றிய அறிவியல் ஆய்வுகளும் — பகுதி 1,2,3,4,5 — 03
- சிவ தியாகராஜா

கட்சி அரசியலுக்கு முந்திய யாழ்ப்பாணம் — 51
- கார்த்திகேசு இந்திரபாலா

சமஷ்டி முறை: புனைவுகளும் உண்மைகளும் — பகுதி 1,2 — 56
- ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், தேசிய பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள்: ஒரு கண்ணோட்டம் — 68
- ஆங்கில மூலம்: நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்
தமிழில்: எஸ்.கே. விக்னேஸ்வரன்

மலையகத்தில் காட்டேரியம்மன் வழிபாடும் ஆற்றுகையும் — 82
- மெய்யநாதன் கேதீஸ்வரன்

போரிற்குப் பிறகு வரலாற்றை வாழ்தலும் வரைதலும் — பகுதி 1,2 — 88
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

மன்னார்க் கூத்து மரபு: ஈழத்தமிழ்க் கூத்து மரபில் ஒரு புதிய கிளை — பகுதி 1 — 119
- சி ன்னையா மௌனகுரு

1983 — 1991: உச்சமடைந்த இனப்படுகொலைகளும் ஈழப்போரின் பிராந்தியப் பரிமாணமும் — பகுதி 5 — 124
- சி. அ. யோதிலிங்கம்

உலக முதலாளித்துவ அமைப்பின் சமத்துவமற்ற விருத்தி: சமீர் அமின் கோட்பாடு பற்றிய ஓர் அறிமுகம் — 129
- கந்தையா சண்முகலிங்கம்

மலையக வீதிப்பாடல் இலக்கியம்: சப்ரகமுவ , தென் மாகாணங்களின் முன்னோடிகள் — 135
- அருணாசலம் லெட்சுமணன்

இலங்கையில் தமிழர்கள் மத்தியில் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகளும் நிகழ்த்துகலைகளும் — 142
- கிருபாகரன் கவிதாஞ்சன்

வடக்கு — கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும் — பகுதி 2 — 149
- சுப்ரமணியம் சிவகுமார்

மலையக நாட்டுப்புற வாழ்வியலில் அம்மை நோய் தொடர்பான சடங்கு — 158
- வேலாயுதம் இராமர்

19ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டச் சமூகம்: அடிமைத்தனமும் மீட்சியும் — 162
- பொன் பிரபாகரன்

# இலங்கையின் மகாவம்ச வரலாற்றைப் புரட்டிப்போட்ட கந்தரோடைத் தொல்லியலும் ஆதி இரும்புக்காலம் அறிவியல் ஆய்வுகளும்

யாழ்ப்பாணத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கான நேரடி எழுத்துப் பதிவுகள் குறைவாக இருந்தாலும், தொல்லியல் அகழாய்வுகள் இதன் பழங்காலக் குடியேற்றங்கள், பண்பாடு, மற்றும் சமூக – பொருளாதார வளர்ச்சி பற்றிய மதிப்புமிக்க தகவல்களை வெளிக்கொணருகின்றன. அதன் அடிப்படையில் கந்தரோடை, பண்டைய யாழ்ப்பாண நாகரிகத்தின் ஆதிகேந்திரமாக விளங்கிய ஒரு முக்கியப் பகுதி ஆகும். தொல்லியல் ஆய்வுகள், பொ.யு.மு. 500 ஆம் ஆண்டளவில் கந்தரோடை ஒரு நகரமாகி விட்டதை எடுத்துக்காட்டுகின்றன. இந்த இடத்தில் அடர்த்தியான மக்கள் குடியேற்றம் அன்றிலிருந்து இன்றுவரை, மத்திய காலத்தில் ஒரு சிறு இடைவெளியைத் தவிர, தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கிறது. நாணயவியல், தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் பொ.யு. எட்டாம் நூற்றாண்டுவரை கந்தரோடை பண்டைய யாழ்ப்பாணமான நாகநாட்டின் தலைநகரமாக விளங்கி வந்திருப்பதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையிலும், அதன் பெருங்கற் பண்பாட்டின் தாக்க விளைவுகளுக்கு உட்படுத்தப்பட்ட வடஇலங்கையின் ஆதி இரும்புக்கால மையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகளைக் கொண்டு எழுதப்படும் ‘பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்’ என்னும் இக் கட்டுரைத் தொடர் வடஇலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலங்களிலும், வரலாற்று உதய காலங்களிலும், வரலாற்றுக் காலங்களிலும் வாழ்ந்த மக்களின் வாழ்வியல், ஆளுமை, பண்பாடு, பெருமுயற்சி, துணிவாண்மை என்பனவற்றின் பரந்த காட்சிப்பதிவாக விளங்கும்.



**சிவ தியாகராஜா**

கலாநிதி சிவ தியாகராஜா மருத்துவம், மரபணுவியல், தொல்லியல், வரலாறு ஆகிய கற்கைத் துறைகளில் பட்டங்கள் பெற்று பல ஆய்வு நூல்களை எழுதியுள்ளார். இவர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (University of Ceylon) B.Sc பட்டத்தையும், இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலிருந்து M.B.B.S பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து Ph.D. பட்டத்தையும் பெற்றவராவார். கலாநிதி சிவ தியாகராஜா கடந்த ஐம்பது ஆண்டுகளில் இருபத்து ஆறு நூல்களைப் படைத்திருக்கிறார். Peoples and Cultures of Early Sri Lanka, Genetic Origins of the Tamils, Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE800CE, The Tamils of Lanka – A Timeless Heritage, Archaeological Excavations at the Jaffna Fort, பௌத்தத்தை வளர்த்த பண்டைய தமிழர்கள் ஆகியவை அவற்றுள் சிலவாகும்.

பகுதி –I

"இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த மக்கள் அநேகமாகத் தென்னிந்தியாவில் நிலவிய நாகரிகத்தை ஒத்ததான நாகரிகத்தையே வளர்த்தெடுத்தார்கள் என எண்ணுவது நியாயத்தின் பாற்பட்டதாகும். இத்தகைய நோக்கிற்றான் கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய இலங்கையின் வடபகுதியிற் தழைத்த நாகரிகம் பற்றி விவரிக்க முடியும். இலங்கையின் மதிப்பிட முடியாத தொல்லியற் சின்னங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் போது இத்தகைய ஆய்வுத் தடயங்கள் சான்றுகளாக நின்று இதை நிரூபிக்கும்."

— செ. இராசநாயகம், 1921.

*"It seems reasonable to consider the inhabitants of Peninsular India and Sri Lanka within the traditional framework of the Iron Age culture complex in which the erection of Megalithic structures was a common practice."*

— *Kennedy, K.A.R.* 1975: 6.

*"The archaeological excavations at Kantarodai in 1970 by Dr Vimala Begley was the first step taken to establish that a settlement in Sri Lanka developed on an Iron Age Megalithic cultural basis. Subsequent excavations and studies have proven beyond doubt that the entire island of Sri Lanka was civilized on the adoption of a Megalithic culture during the millennium before the Common Era."*

— *Siva Thiagarajah,* 2016.

## இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் மீளுரைத்த மகாவம்சம் கூறும் இலங்கை வரலாறு

தென்னாசியாவில் தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபு கொண்ட நாடு என்ற சிறப்பு இலங்கைக்கு உண்டு. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவியபோது கூடவே வரலாற்றைப் பேணும் மரபும் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பௌத்த மதம் தொடர்பான செய்திகளைப் பௌத்த விகாரைகளில் இருந்து வாய்மொழிச் செய்திகளாகப் பேணிவந்த பௌத்த குருமார், அம்மதத்திற்குத் தொண்டாற்றிய மன்னர்களின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு, வரலாற்றுச் சம்பவங்களையும் பேணி வந்தனர். அவ்வாறு பேணப்பட்ட வரலாற்றுச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டே கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தீபவம்சம், கி.பி. 6ஆம் நூற்றாண்டில் மகாவம்சம், அதைத் தொடர்ந்து பல குருமார்களினால் கி.பி. 13ஆம் நூற்றாண்டிற்கும் - கி.பி. 19ஆம் நூற்றாண்டிற்குமிடையே பல கட்டங்களில் எழுதப்பட்ட சூளவம்சம் ஆகிய பாளி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இப்பாளி இலக்கியங்கள் பௌத்த மதத்தை, அதிலும் குறிப்பாக தேரவாத மதத்தின் தோற்றம், பரவல், வளர்ச்சி தொடர்பான வரலாற்றை முன்னிலைப்படுத்திக் கூறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டெழுந்தவை. ஆயினும் அவ்விலக்கியங்களே ஈழத்தின் ஆதிகால வரலாற்றை அறிய உதவும் முதன்மை நூல்களாகப் பார்க்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் இலங்கையின் பூர்வீக மக்கள், பண்பாட்டு உருவாக்கம் தொடர்பான வரலாற்றைக் கூறுவதில் மகாவம்சம் முக்கியமான மூலாதாரமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இந்நாட்டின் பூர்வீக மக்களைப் பற்றிக் கூறும் மகாவம்சம், கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்த விஜயன் தலைமையில் குடியேறிய அவனது 700 தோழர்களுடன் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்கியதாகக் கூறுகிறது (*Mahavamsa Ch. vivii:* 5155). இவர்களது வருகைக்கு முன்னர் இந்த நாட்டில் வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் என இந்நூலும், ஏனைய பாளி நூல்களும் குறிப்பிட்டாலும், இலங்கையின் மூத்த வரலாற்று அறிஞர்கள் அவர்களை மனிதப்பிறவிகள் அல்லாத 'அமானுஜர்கள்' என்றே விளக்கம் அளித்துள்ளனர் (*Mendis, G.C.* 1943:9; *Paranav itana, S.* 1961:181).

"The Yakshas and the Nagas mentioned in Buddhist works of this time do not refer to human beings (Footnote 3) – G.C. Mendis, 1943, page 9.

"In the Mahvamsa and the Manimkalai, as indeed in the ancient Sanskrit and Pli literature in general, the Ngas are never represented as human beings, but as a class of superhuman beings who inhabited a subterranean world, whose normal form was that of serpents, but who could assume any form at will. Certain places in the world of men, such as Ngadpa and Kalyni in Ceylon, are also mentioned as their abodes, but the fact that they were not regarded as human beings is proved by the statement in the Mahvamsa that at the time of the Buddha's visit to Ngadpa and other places in Ceylon, there were no human beings in Ceylon (Mahavamsa Ch. xv, verse. 164) – Paranavitana, 1961: page 181.

இதன் மூலம் விஜயன் வழிவந்த சிங்கள மக்களே இலங்கையின் பூர்வீக மக்கள் என்றும், அவர்களுடனேயே இலங்கையின் மனித வரலாறும், நாகரிக வரலாறும் தொடங்குகிறது என்றும் கருத்தாக்கங்கள் இவர்களால் உருவாக்கப்பட்டுள்ளன.

## விஜயனின் வரலாறும் சிங்கள மக்களின் தோற்றமும்

அரசகுமாரன் விஜயனதும் அவனது 700 தோழர்களினதும் வரலாறு கி.பி. 4ஆம் - 6ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் எழுதப்பட்ட பாளி இலக்கியங்களில் இடம்பெறுகிறது. முதலில்

தீபவம்சத்தில் சிறுகதையாக எழுதப்பட்ட இவ்வரலாறு (Dipavamsa - Law, B.C. 1957), பின்னர் மகாவம்சத்தில் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது (Mahavamsa Ch. VI, VII - Geiger, W. 1950).

வட இந்தியாவில் வங்க நாட்டை (Bengal in East India) ஆட்சி செய்த அரசனுக்கும், கலிங்கத்தைச் சேர்ந்த (Orissa, also in East India) அரசிக்கும் அழகான மோகங்கொள்ளக்கூடிய ஒரு மகள் இருந்தாள். அவளது நடத்தையை பெற்றோர் கண்டித்ததை அடுத்து அவள் அவர்களது அரண்மனையை விட்டு வெளியேறி வர்த்தகர்களின் ஒரு பயணக்குழுவைச் சேர்ந்துகொண்டாள். அவர்களுடன் மகத நாட்டுக்குச் செல்லும் காட்டுப்பாதையில் லாலா என்ற இடத்தில் ஒரு சிங்கம் (Sinha) அவளைக் கண்டு ஆசைகொண்டு அவளைத் தூக்கிக்கொண்டு தனது குகைக்கு எடுத்துச் சென்றது. அக்குகையில் அச்சிங்கம் அவளைக் கட்டுப்படுத்தி மனைவியாக்கி குடும்பம் நடத்தியது. அவளுக்கு சிஹபாகு என்ற மகனும் சிஹசீவலி என்ற மகளும் பிறந்தார்கள்.

சிஹபாகுவுக்கு 16 வயதானபோது தனது தாயையும், தங்கையையும் அழைத்துக்கொண்டு சிங்கத்தின் குகையிலிருந்து தப்பியோடினான். கோபங்கொண்ட சிங்கம் அருகிலிருந்த கிராமங்களை அழித்து நாசமாக்கியது. இதை அறிந்த இளைஞன் சிஹபாகு அச்சிங்கத்தைக் கொன்று நாலாயிரம் தங்கக் காசுகள் பரிசாகப் பெற்றான். தான் பிறந்த இடமான லாலாவுக்கு மீண்ட சிஹபாகு அங்கே சிஹபுர என்ற பெயரில் ஒரு நகரம் அமைத்து அதற்கு அரசனானான். தனது தங்கை சிஹசீவலியை மணந்துகொண்ட சிஹபாகுவிற்கு 32 மகன்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவனான விஜயன் பட்டத்து இளவரசனானான்.

இளவரசன் விஜயன் தீய நடத்தை கொண்டவனாக இருந்தான். அவனது நண்பர்களும் சகிக்க முடியாத வன்முறைச் செயல்கள் கொண்டவர்களாக இருந்தார்கள். அரசன் சிஹபாகு விஜயனையும் அவனைப் பின்பற்றும் 700 தோழர்களையும் நாடுகடத்தி துரத்திவிட்டான். அவர்கள் லாலாவிலிருந்து கப்பல் எடுத்து தெற்கு நோக்கிப் பயணமானார்கள். வழியில் சுப்பாரகா என்ற துறையில் சில காலம் தங்கினார்கள். அங்கும் அவர்கள் மேற்கொண்ட துர்நடத்தை காரணமாக உயிருக்குப் பயந்து திரும்பவும் கப்பல் எடுத்துச் சென்றார்கள். இறுதியில் அவர்களது கப்பல் இலங்கையை புத்தபிரான் 'நிப்பான' அடைந்த நாளில் சென்றடைந்தது. அவர்கள் இலங்கையைச் சென்றடைந்த இடமான தம்பபண்ணியில் விஜயன் ஒரு நகரத்தை அமைத்தான். விஜயன் அங்கே சந்தித்த பழங்குடியினரான இயக்கர்களின் இளவரசி குவன்னாவை (குவேனி) திருமணம் செய்துகொண்டான். அவளது துணையோடு அங்கிருந்த இயக்க சமூகத்தை அடக்கியாள முடிந்தது. அவர்களுக்கு ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள் பிறந்தார்கள். இயக்க மனைவியுடன் அரசனாக முடிசூட்ட முடியாது என்பதால் மதுரையிலிருந்து ஒரு பாண்டிய இளவரசியை வரவழைத்து, திருமணம் செய்து விஜயன் அரசனாக முடிசூடிக்கொண்டான். தனது 700 நண்பர்களுக்கும், பாண்டியக் கன்னியர்களை வரவழைத்து மணம் செய்வித்தான். விஜயனதும் அவனது நண்பர்களினதும் வம்சத்தினரே பிற்காலத்தில் சிங்கள மொழி பேசும் சிங்கள மக்களானார்கள்.

விஜயன் இலங்கைக்கு வந்த சமயம் இங்கிருந்த பூர்வீக மக்கள் பற்றி பாளி இலக்கியங்கள் கூறும் வரலாறுகள் புராணக் கதைகள் போன்று இருக்கின்றன. தீபவம்சம் தரும் தகவல்களின்படி (Dipavamsa Ch.1: 1921, Law 1959), இலங்கைக்கு விஜயன் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த குடிமக்கள் ஆவிகள் மற்றும் பேய்கள் ஆவர் (Spirits and Demons). மகாவம்சம் இங்கு வாழ்ந்த மக்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகள் கொண்டவர்கள் எனக் கூறுகிறது.

விஜயனும் அவனது தோழர்களும் பாண்டிய நாட்டிலிருந்து பெண்களைப் பெற்றுக்கொண்ட போதும் வட இந்திய சிங்கபுரத்துடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வந்தார்கள் என பாளி இலக்கியங்கள் உரைக்கின்றன. விஜயன் அரச வாரிசு எவரும் இல்லாமல் இறந்தபோது இலங்கையிலிருந்த வடஇந்தியக் குடியேற்றத்தார் விஜயனின் பிறந்த நகரான சிங்கபுரத்திற்கு தூதுவர்களை அனுப்பி, விஜயனின் மருமகனான பாண்டுகஅபயன் என்பவனை இலங்கையின் அடுத்த அரசனாக அழைத்து வந்தார்கள்.

பாளி இலக்கியங்கள் அடுத்துப் பரிந்துரைப்பது என்னவெனில் விஜயனின் அரசுக்குப் பின்னர் இத்தீவில் பல சிறிய சுதந்திர அரசுகள் இருந்ததாகவும், பாண்டுகஅபயன் அவற்றையெல்லாம் ஒன்றாக்கி அநுராதபுரக் குடியேற்றத்தை நாட்டின் தலைநகரமாக ஆக்கினான் என்பதாகும். பாண்டுகபாயன் அநுராதபுர நகரத்தைச் சுற்றிவரப் பாதுகாப்பு அரண்கள் அமைத்து, புதிய புறநகர் குடியிருப்புகளையும் ஏற்படுத்தினான். குளங்களை அமைத்து விவசாயத்தை வளர்த்தான். தனது மாமனை நகரக் காவலனாகவும், சண்டாளர்களை நகர சேவைகளைப் புரிபவர்களாகவும் ஆக்கினான்.

பாளி இலக்கியங்கள் கூறும் முக்கியமான தகவல், மூன்றாம் நூற்றாண்டில் பாண்டுகஅபயனின் பேரனான தேவநம்பியதீசன் காலத்தில் மௌரிய சக்கரவர்த்தி அசோகனின் மகனான மகிந்தர் தலைமையில் பௌத்த சமயப் பரப்புரைக் குழு இந்த நாட்டை வந்தடைந்ததாகும்.

பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் இரண்டிலும் கூறப்படும் இலங்கையில் ஆரியர்களின் இடப்பெயர்வும் குடியேற்றமும் அந்நூல்கள் எழுதப்படுவதற்கு ஆயிரம் ஆண்டுகள் முன்பாக நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஆயிரம் ஆண்டுக்காலமாக எவ்வாறு இந்த வரலாறு சேகரிக்கப்பட்டிருந்தது என்பது அந்நூல்களில் கூறப்படவில்லை.

## விஜயன் கதையின் மூலம்

மகாவம்சம் கூறும் விஜயனின் கதை முதலில் நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்ட தீபவம்சத்தில் கூறப்பட்ட கதையின் விரிவாக்கம் ஆகும். அக்கதை தீபவம்சத்தில் இவ்வாறு ஆரம்பிக்கிறது (*Dpavamsa Ch. IX: 1*): "லங்கா தீவு சிங்கத்தை (*sha*) ஆதாரமாகக் கொண்டு சீஹல என அழைக்கப்பட்டது. இத்தீவின் தோற்றம் பற்றிய கதையைக் கூறுகிறேன், கேளுங்கள்".

தீபவம்சம் கி.பி. நான்காம் நூற்றாண்டில் அநுராதபுர மகாவிகாரையில் வாழ்ந்த பௌத்த குருமாரினால் எழுதப்பட்டது. இலங்கைத் தீவின் குடியேற்ற ஐதீகம் பற்றி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆக்கப்பட்ட ஒரு கதை 'திவ்வியவதன' என்ற பௌத்த அவதான நூலில் இடம்பெறுகிறது. விஜயனின் கதை இதிலிருந்து மாற்றியமைக்கப்பட்டதாக ஒரு கருத்து உள்ளது.

திவ்வியவதன கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் ஆக்கப்பட்ட ஆதிகால பௌத்த ஐதீகக் கதைகளைக் கொண்டது. இதன் ஆங்கில மொழிபெயர்ப்பு E.B. கொவெல், R.A. நீல் என்னும் இரு பல்கலைக்கழக ஆசிரியர்களால் எழுதப்பட்டு 1886ஆம் ஆண்டில் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தினரால் வெளியிடப்பட்டது. இந்த நூலின் 523529ஆம் பக்கங்களில் இக்கதை கூறப்படுகிறது:

ஜம்புதுவீபத்தைச் சேர்ந்த பெரிய வியாபாரியான சிம்ஹவின் மகனான சிம்ஹள என்பவன் இரத்தினங்களைத் தேடி இலங்கைக்கு தனது நண்பர்களுடன் வருகிறான். இலங்கைக்கு வந்த சிம்ஹளவும் அவனது நண்பர்களும் இங்கே வாழ்ந்த இராட்சதருடன் தங்கி வாழ்கிறார்கள். சில காலம் செல்ல, தமது கள்ளக்காதலிகளின் தூண்டுதலினால் இராட்சதர்களால் அவர்கள் சிறைப்படப் போவதை அறிந்ததும், சிம்ஹளவும் அவனது நண்பர்களும் பறக்கும் குதிரையொன்றின் உதவியுடன் இலங்கையிலிருந்து தப்பிச் செல்கின்றனர். நாளடைவில் சிம்ஹள தனது நாட்டின் அரசனாகிறான். தனது நாட்டிலிருந்து ஒரு பெரும் படையைச் சேர்த்துக்கொண்டு இலங்கைக்குப் படையெடுத்து வருகிறான். இங்கிருந்த இராட்சதரைத் துரத்திவிட்டு இலங்கையில் புதிய அரசை உருவாக்குகிறான்.

அன்றிலிருந்து இந்த நாடு சிம்ஹளத்வீப (*Simhaladvipa*) என அழைக்கப்படுகிறது (*Divyavadna* 1886, *XXXVI: p.* 528).

இலங்கைத் தீவு பாளி மொழியில் சீஹல என அழைக்கப்பட்டமைக்கு மற்றுமொரு விளக்கம் உள்ளதை சில ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இலங்கைத் தீவிற்கு 'ஹெலதிவி' (ஹெலதீவு) என்றொரு பெயர் உள்ளது. இது சிகிரியா எழுத்துப் பதிவுகளிலும் காணப்படுகிறது. இன்று இலங்கை 'ஸ்ரீலங்கா' என அழைக்கப்படுவதைப் போல முற்காலத்தில் 'ஸ்ரீஹெல' என அழைக்கப்பட்டது. பாளி மொழியில் அது 'சீஹெல' ஆயிற்று. அதைத்தொடர்ந்து இந்த நாடும் நாட்டு மக்களும் 'சிஹல' ஆனார்கள்.

'சிஹல' என்ற பதம் பதிவு செய்யப்பட்ட ஆதிப் பெயர் ஆந்திரப் பிரதேசத்திலிருந்த 'சிஹல விஹார' ஆகும். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்து சென்ற பௌத்த குருமார்கள் அங்கே தங்கியிருந்ததனால் அப்பள்ளிக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது. இந்த ஆரம்பத்தை உணராத பௌத்த குருமார்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டில் சீஹல என்ற பதம் சிங்கத்தைக் குறிப்பிடுவதாக எண்ணி, இலங்கையினதும் இலங்கை மக்களின் வரலாற்றிலும் எப்படியாவது சிங்கத்தைத் திணிக்க எண்ணி விஜயனின் கதையைச் சிருஷ்டித்தார்கள்.

இலங்கையின் பாளி நூல்களில் தமிழர், தமிழ் மன்னர்கள், அவர்களது மதங்கள் தொடர்பான வரலாற்றுச் செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஆயினும் இவர்களை இலங்கைக்குரிய மக்களாகக் குறிப்பிடாது அக்கரையில் இருந்து (தமிழகத்தில் இருந்து) வணிகராக, படையெடுப்பாளராக, ஆக்கிரமிப்பாளராக வந்துபோன அந்நியர் எனக் குறிப்பிடுகின்றன. விஜயனும் அவனது 700 தோழர்களும் வடஇந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறியதாகப் பாளி இலக்கியங்களால் கூறப்படுகின்றமை, சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதற்கு அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப்படுகிறது. அதே பாளி இலக்கியங்களால் விஜயனுக்கும் அவனது 700 தோழர்களுக்குமான மணப்பெண்களும், 18 வகைத் தொழில் தெரிந்த 1000 குடும்பங்களும், தமிழ்நாட்டிலிருந்து (பாண்டிய நாட்டிலிருந்து) வந்து இலங்கையில் குடியேறியதாகக் கூறப்படுகின்றமை, விஜயன் காலத்திலேயே தமிழர்களின் மூதாதையினர் தமிழ்நாட்டிலிருந்து வந்ததற்கு ஆதாரமாகக் கொள்ளப்படவில்லை. இதனால் இலங்கை வரலாற்று நூல்களில் பாளி இலக்கியக் கருத்துகளே தற்காலம்வரை செல்வாக்குச் செலுத்தி வருகின்றன (புஷ்பரட்ணம், ப. 2017: 34).

1959ஆம் ஆண்டில் பேராசிரியர் பரணவிதான பதிப்பாசிரியராக இருந்து இலங்கைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட 'இலங்கை வரலாறு' (*History of Ceylon, Vol. 1, Part 1*) என்ற நூலில், 'வரலாற்றுக் காலத்தில் அண்டை நிலப்பகுதிகளிலிருந்து இத்தீவின் இறையாண்மைக்காக சிங்கள மக்களுடன் பல தடவைகள் போரிட்ட திராவிடர்கள், இத்தீவில் முதல் ஆரியக் குடியேற்றங்கள் ஏற்பட்டபோது இங்கே இருந்தார்கள் என்பதற்கு எதுவிதமான ஆதாரமும் இல்லை' எனக் கூறியிருந்தார்.

இதே பேராசிரியர் பரணவிதான 1967ஆம் ஆண்டில் வெளியிட்ட 'சிங்ஹலயோ' (*Sinhalayo*) என்ற நூலில் பின்வருமாறு பதிவு செய்திருக்கிறார்: "பெருங்கற்கால மையங்களும், தாழிப்புதையல் கழனிகளும் திராவிட மக்கள் வசிக்கும் பகுதிகளிலெல்லாம் காணப்படுகின்றன. அவர்களின் சாட்சிகளாக இருக்கும் ஈமச்சடங்கு வழக்கங்கள் ஆதிகால தமிழ் இலக்கியங்களிலே சுட்டிக்காட்டப்படுகின்றன. எனவே கற்பதுக்கைகளிலும், கல்லறைகளிலும், மற்றும் பெரிய தாழிக் குடங்களிலும் தங்களது இறந்தவர்களைப் புதைத்தவர்கள் இத்திராவிடர்கள் என உய்த்துணர்வது நியாயமானதே." அக்காலத்தில் மேற்கூறிய கருத்தை பேராசிரியர் பரணவிதான பொதுப்படையாக திராவிட மக்கள் வாழும் பிரதேசங்களைக் குறித்துக் குறிப்பிட்டாரே ஒழிய, குறிப்பாக இலங்கைத் தமிழரை நோக்கி இது கூறப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

2005ஆம் ஆண்டில், 1980இல் முதலில் வெளிவந்த தனது 'ஸ்ரீலங்காவின் வரலாறு' (*A History of Sri Lanka*) என்ற நூலின் புதிய பதிப்பை வெளியிட்ட பேராசிரியர் கே. எம். டி. சில்வா, நூலின் 'காலனித்துவவாதிகளும் குடியேறிகளும்' என்ற முதல் பகுதியில் இந்தத் தீவில் இ. மு. 125,000 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதக் குடியிருப்புகள் ஏற்பட்டு, இ.மு. 34,000 ஆண்டுக் காலத்தில் இம்மனிதக் குடியேற்றங்களின் தெளிவான ஆதாரங்கள் காணப்பட்ட போதிலும், மகாவம்சம் கூறும் கி.மு. 5ஆம் நூற்றாண்டின் இந்தோஆரிய காலனித்துவமே (*IndoAryan Colonization*) இந்நாட்டின் நாகரிகத்திற்கு வித்திட்ட முக்கியமான நிகழ்வு எனக் கூறியிருந்தார் (*De Silva, K.M. 2005: 69*).

## திருப்புமுனை ஒன்று

### கலாநிதி விமலா பெக்லி: பெருங்கற் பண்பாட்டைப் பேணி வளர்ந்த குடியிருப்பு மையம் கந்தரோடை

*Vimala Begley (1974): Excavations of Iron Age Settlements at Kantarodai 1970, Iowa City, (Unpublished).*

*Vimala Begley (1973): 'Protohistoric Material from Sri Lanka (Ceylon) and Indian Contacts' in Ecological Backgrounds of South Asian Prehistory, Ed. Kenneth A.R. Kennedy and Gregory Possehl, South Asian Occasional Papers and Thesis, Cornell University, pp. 190-196.*

---

இலங்கையின் தொல்லியல் வரலாற்றில் முதன்முதலாக ஒரு 'மக்கள் குடியிருப்பான கந்தரோடை தென்னிந்திய மாதிரியான பெருங்கற் பண்பாட்டைக் கடைப்பிடித்து அதன் படிமுறை வளர்ச்சியால் நகரமயமானதொரு மையம்' என எடுத்துக்காட்டியவர் அமெரிக்க பென்சில்வேனியப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வாளர் கலாநிதி விமலா பெக்லி. இந்த அகழ்வாய்வில் அவரோடு இணைந்து செயலாற்றியவர்கள் அமெரிக்காவில் சிக்காகோ அருங்காட்சியகக் காப்பாளராகப் பணியாற்றிய டாக்டர் பென்னெற் புரொன்சன், மற்றும் டாக்டர் முகம்மது மாறூவ். இந்த மூவருமே பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்திலிருந்து தத்துவக் கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்ட சக மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

இலங்கையில் பொம்பரிப்பிலும், கந்தரோடையிலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் அமெரிக்காவின் பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தின் அருங்காட்சியகத்தின் தென் ஆசியப் பிரிவினரால் இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட கால - வரலாற்று உதயகாலக் கற்கையின் பொருட்டு ஒழுங்கு செய்யப்பட்டது. இதற்கான நிதியை பென்சில்வேனிய பல்கலைக்கழக அருங்காட்சியகத்தினர் ஒழுங்கு செய்திருந்தார்கள். 1967ஆம் ஆண்டில் பென்சில்வேனிய பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் உதவிக் காப்பாளராகவிருந்த கலாநிதி விமலா பெக்லி முதலில் ஒரு தொல்லியல் மேலாய்வு செய்யும் பொருட்டு பொம்பரிப்பு, கந்தரோடை ஆகிய இரு இடங்களுக்கும் வந்து மேலாய்வுகளை மேற்கொண்டார். அவரது தொல்லியல் மேலாய்வுகளின் அறிக்கை 1967ஆம் ஆண்டின் பல்கலைக்கழகச் சஞ்சிகையான 'Expedition' இல் வெளிவந்தது.

1969ஆம் ஆண்டில் டாக்டர் விமலா பெக்லி பென்சில்வேனியப் பல்கலைக்கழக அருங்காட்சியக உதவிக் காப்பாளர் பதவியிலிருந்து விலகியிருந்தார். ஆனாலும் அகழ்வு செய்யும் காலத்தில் அகழ்வைத் தான் ஏற்று நடத்துவதாக உறுதியளித்திருந்தார். பொம்பரிப்பு - கந்தரோடை அகழ்வாய்வுகள் 1970ஆம் ஆண்டு ஜூலைஆகஸ்ட் மாதங்களில் ஒழுங்கு செய்யப்பட்டது. இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த ராஜா டி. சில்வா அதற்கான அனுமதியை வழங்கியிருந்தார். அகழாய்வுகளை

கலாநிதிகள் விமலா பெக்லி, பென்னெற் புறொன்சன், மொகமெட் மாறூவ் ஆகிய மூவரும் மேற்கொண்டார்கள். பொம்பரிப்பு அகழ்வாய்வில் கண்ட சில கபாலங்களையும் எலும்புகளையும் அமெரிக்காவின் கோர்னெல் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துச் சென்று அவற்றைப் பகுப்பாய்வு செய்ய மானிடவியலாளர் டாக்டர் கென்னெத் கென்னெடி ஒப்புக்கொண்டிருந்தார்.

1974ஆம் ஆண்டு மே மாதம் டாக்டர் விமலா பெக்லி கந்தரோடை, பொம்பரிப்பு மையங்களின் அகழ்வாய்வு அறிக்கைகளையும், அவற்றோடு டாக்டர்கள் கென்னெடி, லூக்காக்ஸ் ஆகியோரின் பொம்பரிப்பு அறிக்கைகளையும் இணைத்து இலங்கைத் தொல்லியல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தார். அவர் அந்த அறிக்கைகளை அனுப்பி சரியாக ஏழு ஆண்டுகளின் பின்னர், 1981ஆம் ஆண்டு மே மாதம் வெளியான இலங்கைத் தொல்லியல் திணைக்களச் சஞ்சிகையான *'Ancient Ceylon No. 4'* இல் *'Excavations of Iron Age Burials at Pomparippu, 1970'* என்ற அறிக்கை வெளிவந்தது. ஆனால் அவர் சமர்ப்பித்த *'Excavations of Iron Age Settlements at Kantarodai, 1970'* என்ற அறிக்கையை இலங்கைத் தொல்லியல் திணைக்களம் வெளியிடவில்லை. 1977ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராகவிருந்த கலாநிதி சிரான் தெரனியகல, கந்தரோடை அகழ்வாளராகவிருந்த டாக்டர் பென்னெற் புறொன்சனைத் தொடர்புகொண்டு கந்தரோடை அகழ்வுகளில் கண்டெடுத்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிமத் திகதிகளைப் பெற்றுக்கொண்டார். அக் கால அட்டவணை கலாநிதி இரகுபதியின் 'யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடியிருப்புகள்' நூலில் கீழ்க்கண்டவாறு வெளிவந்தது.

RADIOCARBON DATES FROM KANTARODAI, SRI LANKA (CEYLON) 1977

| P. No. | Sample No. | Trench | Stratum | Pretreatment | 5568 Half-life B.P. 1950 | A.D/B.C. | 5730 Half-life A.D./B.C. | MASCA Corr[1] A.D./B.C. |
|---|---|---|---|---|---|---|---|---|
| P-2521 | 4 | A | IV | — | 2020 ± 50 | 70 B.C. | 140 ± 50 B.C. | 10- 100 ± ,50 B.C. |
| P-2518 | 5 | A | IV | NaOH | 2290 ± 50 | 340 B.C. | 410 ± 50 B.C. | 420 ± 50 B.C. |
| P-2520 | 8 | A | V | — | 2180 ± 60 | 230 B.C. | 290 ± 60 B.C. | 270- 390 ± 60 B.C. |
| P-2524 | 9 | A | VI | — | 2340 ± 50 | 390 B.C. | 460 ± 30 B.C. | 440 ± 50 B.C. |
| P-2514 | 1 | B | V | — | 2250 ± 60 | 300 B.C. | 370 ± 60 B.C. | 410 ± 60 B.C. |
| P-2515 | 2 | B | VI | — | 2990 ± 60 | 1040 B.C. | 1130 ± 60 B.C. | 1290 ± 60 B.C. |
| P-2516 | 3 | B | VI | NaOH | 2070 ± 60 | 120 B.C. | 180 ± 60 B.C. | 130 ± 60 B.C. |
| P-2522 | 7 | B | VII | — | 2110 ± 60 | 150 B.C. | 220 ± 60 B.C. | 170- 200 ± 60 B.C. |
| P-2523 | 15 | B | VIII | — | 2060 ± 50 | 110 B.C. | 170 ± 60 B.C. | 120- 140 ± 60 B.C. |
| P-2525 | 16 | B | VIII | — | 2730 ± 220* | 780 B.C. | 870 ± 220 B.C. | 940- 980 ± 220 B.C. |
| P-2519 | 17 | B | IX | NaOH | 2290 ± 60 | 340 B.C. | 410 ± 60 B.C. | 420 ± 60 B.C. |
| P-2528 | 19 | B | XI | — | 2370 ± 60 | 420 B.C. | 500 ± 60 B.C. | 480 ± 60 B.C. |
| P-2526 | 18 | B | X | — | 2090 ± 50 | 140 B.C. | 200 ± 60 B.C. | 140- 190 ± 50 B.C. |
| P-2529 | 6 | X | III | — | 2350 ± 200* | 400 B.C. | 470 ± 210 B.C. | 440- 460 ± 210 B.C. |
| P-2517 | 12 | X | IV or V | NaOH | 2250 ± 50 | 300 B.C. | 370 ± 50 B.C. | 410 ± 50 B.C. |
| P-2527 | 11 | X | IV or V | Too Small | | | | |

* Large tolerance due to small sample size necessitating counting in small counter.
1 For explanation of MASCA corrections see *MASCA Newsletter*, 1973, Vol.9, No.1, p.1-20.

கந்தரோடையில் பென்சில்வேனியப் பல்கலைக்கழகக் குழுவினர் மேற்கொண்ட விஞ்ஞானபூர்வ அகழ்வில் வெளிக்கொணர்ந்த தொல்பொருட்களின் கதிரியக்கக் கரிம தேதிக் கணிப்பு. Courtesy: Bennet Bronson & Siran Deraniyagala

விமலா பெக்லியின் கந்தரோடை பற்றிய விரிவான தொல்லியல் அறிக்கையை அன்றைய இலங்கை அரசின் வேண்டுகோளின் பேரில் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் வெளியிடாது விட்ட போதிலும், அந்த ஆய்வின் முக்கியமான பகுதிகள் 1973இல் வெளியான அவரது ஒரு கட்டுரையில் வெளிவந்திருந்தன (Begley, V. 1973: 191-196). இந்த ஆய்வின்போது தற்போது பௌத்த ஸ்தூபங்கள் காணப்படும் இடங்களுக்கு அருகில் நான்கு மீட்டர் ஆழத்தில் இரு ஆய்வுக்குழிகள் அமைக்கப்பட்டு அகழ்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் இன்றைய நிலமட்டத்திலிருந்து நான்கு மீட்டர் ஆழத்திற்குக் குடியிருப்பு எச்சங்கள் காணப்பட்டன. அதன் அடிப்பகுதியில் பெருங்கற் பண்பாட்டுக்கு உரிய வரலாற்று உதயகாலப் படையும், அதைத் தொடர்ந்து வரலாற்றுத் தொடக்ககாலப் படையும் அடையாளம் காணப்பட்டன. பொம்பரிப்பு, அநுராதபுரம் ஆகிய இடங்களில் இடைக்கற்காலப் (Mesolithic) பண்பாட்டை அடுத்து ஆதி இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடும், அதையடுத்து வரலாற்றுத் தொடக்ககாலப் பண்பாடும் காணப்பட்டன. ஆனால் கந்தரோடையில் இடைக்கற்காலப் பண்பாட்டுக்குரிய சான்றுகள் காணப்படாது பெருங்கற் பண்பாடும், அதையடுத்து வரலாற்றுத் தொடக்ககாலப் பண்பாடும் காணப்பட்டன. இதிலிருந்து யாழ்ப்பாணத்தின் ஆரம்பகாலக் குடியிருப்பு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் ஆரம்பமானதை அறிய முடிகிறது.

இந்த அகழ்வின்போது வெவ்வேறு வகையான கலாசாரப் படைகள் இனங்காணப்பட்டன. வரலாற்று உதயகால கலாசாரப்படையில் (கலாசாரப்படை மட்டம் ஒன்று) பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் (Megalithic BlackandRed Ware) காணப்பட்டன. அதற்கு மேலுள்ள கலாசார மட்டத்தில் வரலாற்றுத் தொடக்ககாலச் சின்னங்களுடன் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்பட்டன. அதற்கும் மேலுள்ள மூன்றாவது கலாசாரப்படையில் பெருங்கற் பண்பாட்டு கறுப்புசிவப்பு மட்பாண்டங்களுடன் உரோம றூலெட்டெட் மட்பாண்டங்கள் (Rouletted Ware), மற்றும் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள் என்பன காணப்பட்டன. நான்காவது கலாசாரப் படையில் பௌத்த மத எச்சங்களும், உரோம நாணயங்களும் காணப்பட்டன. வேறுபட்ட கலாசாரப் படைகளுக்கிடையிலான தொடர்புகளை நோக்கும்போது வரலாற்று உதயகால மக்களே வரலாற்றுக்காலப் பண்பாட்டையும் வளர்த்தெடுத்தனர் என்பதை அறிய முடிகிறது. விமலா பெக்லி கந்தரோடையின் கறுப்புசிவப்பு

மட்பாண்டங்களுக்கும், தென்னிந்திய பெருங்கற் பண்பாட்டு மட்பாண்டங்களுக்கும், கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட அநுராதபுர கெடிகே பகுதியில் காணப்பட்ட மட்பாண்டங்களுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகக் கூறியுள்ளார். இங்கு கிடைத்த பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய கறுப்புசிவப்பு மட்பாண்டங்களில் பானைகள், குவளைகள், வட்டில்கள் என்பன தென்னிந்திய பெருங்கற் பண்பாட்டு மட்பாண்டங்களைப் பெரிதும் ஒத்திருப்பதாகவும், இந்த ஒற்றுமைகள் கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களும் தென்னிந்தியத் திராவிட மக்களும் ஒரே இனத்தவராக அல்லது நெருங்கிய தொடர்பு கொண்டவர்களாக இருந்தனர் என்பதைக் காட்டுகின்றன எனவும் குறிப்பிடுகிறார். கந்தரோடை மற்றும் பொம்பரிப்பு அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால மட்பாண்டங்களுக்கு இடையிலான மிக நெருக்கமான ஒற்றுமைகளைக் கொண்டு, இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பொம்பரிப்பு முதல் கந்தரோடை வரை இம்முன்னோர்களின் குடியிருப்புகள் ஒரு தொடர்ச்சியாக அமைந்திருக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டுகிறார்.

*1974ஆம் ஆண்டு மே மாதம் விமலா பெக்லி கந்தரோடை அகழ்வாய்வு அறிக்கையை இலங்கைத் தொல்லியல் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்த சமயம் அகழ்ந்தெடுத்த பொருட்களின் கதிரியக்கக் கரிமத் தேதிக் கணிப்புகள் வெளிவரவில்லை. ஓர் ஊகத்தில் இப்பண்பாட்டின் காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டிற்கும், கி.மு. முதலாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார். 1977ஆம் ஆண்டில் பெறப்பட்ட கந்தரோடை கதிரியக்கக் கரிமத் தேதிக் கணிப்பு மேலே தரப்பட்டுள்ளது.*

*விமலா பெக்லியின் ஆய்வின் அடிநாதமாக ஒலிப்பது:*

*“கந்தரோடையில் குடியேற்றம் பெற்ற மக்கள் தென்னிந்திய மக்களின் கலாசார சமுதாயச் சூழலின் வழித்தோன்றல்க ளாகவோ அல்லது அவர்களோடு நெருக்கமான கலாசார உறவைக் கொண்டவர்களாகவோ இருந்திருக்க வேண்டும்” என்பதாகும் (Begley, V. 1973: 191-196).*



*கந்தரோடை அகழ்வில் கண்டெடுத்த கறுப்புசிவப்பு மட்பாண்டம். நன்றி: ப. புஷ்பரட்ணம்.*

## திருப்புமுனை இரண்டு

### கலாநிதி சி.க. சிற்றம்பலம்: இலங்கையில் பெருங்கற் பண்பாடு

*S.K. Sitrampalam (1980): The Megalithic Culture of Sri Lanka, Ph.D. dissertation (Unpublished), University of Poona.*



THE MEGALTHIC CULTURE OF SRILANKA

A THESIS

submitted to

THE UNIVERSITY OF POONA

for the degree of

DOCTOR OF PHILOSOPHY
in
ARCHAEOLOGY

by

S. K. SITRAMPALAM

under the guidance of

Prof. M. K. Dhavalikar

1980

Department of Archaeology
University of Poona
Poona - 411007.

*கந்தரோடையில் ஏற்பட்ட மக்கள் குடியேற்றம் பெருங்கற் பண்பாட்டைப் பேணிய ஒரு மக்கள் குடியேற்றம் எனவும், அப்பண்பாட்டின் பரிணாம வளர்ச்சியே அதனை நாகரிகமடையச் செய்தது எனவும் கூறிச் சென்றவர் கலாநிதி விமலா பெக்லி. இந்த ஆதி இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடே இலங்கையின் மற்றைய மையங்களின் வளர்ச்சிக்கும், நாகரிகத்திற்கும் அடித்தளமாக இருந்தது என்பதற்கான அறிவியல் ஆய்வை முதன்முதலாக மேற்கொண்டு முடிவுகளை முன்வைத்தவர் கலாநிதி சி.க. சிற்றம்பலம்.*

*கலாநிதி சி.க. சிற்றம்பலம் பூனா பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அவர் தனது தத்துவக் கலாநிதிப் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வு ‘இலங்கையில் பெருங்கற் பண்பாடு’ (The Megalithic Culture in Sri Lanka) என்ற பொருளிலானது. இந்த ஆய்வறிக்கையை அவர் 1980ஆம் ஆண்டு சமர்ப்பித்திருந்தார். இலங்கையிலுள்ள பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களும், மையங்களும் தென்னிந்தியாவைப் போன்று பெருங்கற்காலப் பண்பாட்டு அம்சங்களைக் கடைப்பிடித்தே நாகரிகமடைந்து நகரமயமாக்கப்பட்டன என்பதைக் காட்டிய இந்த முதல் ஆய்வு, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் ஆய்வு. ஆனால் இது இன்றுவரை நூலுருவம் பெறாதது ஒரு பெருங்குறை. அவர் பேராசிரியராக இருந்த காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இதை நூல் வடிவில் பிரசுரித்திருக்க வேண்டும்.*

---

*1977ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை இலங்கையின் முக்கியமான வரலாற்று மையங்களில்*



கலாநிதி சிற்றம்பலத்தினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்கான அனுமதியை கலாசார அமைச்சராக இருந்த E.L.B. ஹிருள்ளெ வழங்கியது மட்டுமல்லாது, இலங்கைத் தொல்லியல் திணைக்கள ஆணையாளராக இருந்த ராஜா டி. சில்வாவிடம் இந்த ஆய்விற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறும் கேட்டிருந்தார். இத்துடன் விமலா பெக்லியின் கந்தரோடை அகழ்வு அறிக்கையின் சில பகுதிகளும் அவரிடம் கொடுக்கப்பட்டன. அத்தோடு தொல்லியல் திணைக்கள உதவி ஆணையாளராக இருந்த கலாநிதி சிரான் தெரணியகலவின் முழு உதவியும் அவருக்குக் கிடைத்தது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் இலங்கையின் ஆதிக் குடியிருப்புகள் பற்றிய புதிய தகவல்களை வெளிச்சமிட்டுக் காட்டியிருந்தன. முதலாவது, இலங்கையின் பாளி இலக்கியங்கள் கூறும் ஆரம்பகால குடியிருப்புப் பகுதிகளை இத்தொல்லியல் ஆய்வுகள் உறுதி செய்தன. ஆனால், ஆதிகாலக் குடியிருப்புகள் ஆரிய மக்களின் குடியிருப்புகள் என்பதற்கான ஆதாரம் ஏதும் காணப்படவில்லை. அதுவரை கிடைத்த தொல்லியல் ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் இலங்கையும் தென்னிந்தியாவும் பெருங்கற் பண்பாடு என அழைக்கப்படும் ஒரே கலாசார மண்டலத்தின் கீழ் வருகின்றன என்பதை உறுதிப்படுத்தின. இந்தப் பெருங்கற்காலப் பண்பாடு நான்கு முக்கியமான கூறுகளைக் கொண்டிருந்தது. அவையாவன: குடியிருப்புகள், இறந்தோரைப் புதைக்கும் இடுகாடுகள், குளங்கள், வயற்பரப்புகள் என்பனவாகும். மற்றைய முக்கிய கூறுகளாக இரும்பின் பயன்பாடு, சில்லில் வனைந்த கறுப்புசிவப்பு மட்பாண்டம், அப்பாண்டங்களில் காணப்படும் குறியீட்டு எழுத்துகள் என்பன காணப்படுகின்றன. இடுகாடுகள் விவசாயத்திற்குத் தகுதியில்லாத நிலங்களிலேயே அமைக்கப்பட்டிருந்தன. இவ்வகையான குடியிருப்பு அமைப்பு உலர் வலயங்களில் இன்றுவரை தொடரப்படுகிறது.

கலாநிதி சிற்றம்பலம் ஏற்கனவே அகழ்வாய்வு மேற்கொண்ட பல இடங்களில் மேலாய்வுகளையும், சில அகழ்வாய்வுகளையும் மேற்கொண்டார். இவ்வாறு திவுல் வேவா (*Diwul Wewa*), றம்ப வேவா (*Ramba Wewa*), பண்றெல்ல வெல்லா (*Pandrella Wella*), கோகெபெ (*Kokebe*), கல்பே (*Kalpe*), குருகல்ஹின்ன (*Guru Galhinna*), வலஹவித்த வேவா (*Walahawidda Wewa*), பின்வேவா (*Pinwewa*), மஹாகல்வேவா (*Mahagalwewa*), மாமடுவ (*Mamaduva*), கதிரவெளி (*Kathiraveli*), பொம்பரிப்பு (*Pomparippu*) ஆகிய மையங்களில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன (இந்த ஆய்வுகளின் விவரங்கள் நான்காவது திருப்புமுனைக் கட்டுரையில் இடம்பெறுவதனால் இங்கே தவிர்க்கப்பட்டுள்ளன).

இவற்றோடு அநுராதபுரம், மாந்தை, திஸ்ஸமகாராம ஆகிய பண்டைய நகர அகழாய்வுகளும் மீளாய்வு செய்யப்பட்டன. குளங்கள், குளங்களுக்கருகிலிருந்த வயல்கள், சமீபத்திலிருந்த குடியிருப்புகள், இரும்பின் பயன்பாடு - அனைத்தும் எல்லா மையங்களினதும் குடியிருப்புகளின் ஆரம்ப நாட்களிலிருந்தே காணப்பட்டன. கலாநிதி சிற்றம்பலம் ஆய்வு செய்த மையங்கள் அனைத்திலும் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களே வெளிக்கொணரப்பட்டன. குடியிருப்புகளிலும், ஈமப்புதையல்களிலும் காணப்பட்ட தொல்பொருட்களின் ஒருமைப்பாடு இவற்றிற்கிடையிலிருந்த நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டியது.

இதுவரை அகழ்வாய்வு செய்யப்பட்ட குடியிருப்பு மையங்களில் பண்டைய இராச்சியத்தின் தலைநகரமான அநுராதபுரம் பெரிய அளவினதாகும். அநுராதபுரம் அதன் வரலாற்று உதயகாலத்தில் 10 ஹெக்டேயர் பரப்பைக் கொண்டிருந்தது. இதுவே மிகப் பெரிய வரலாற்று உதயகாலக் குடியேற்றமாகவும் இருந்தது. இதற்கு அடுத்ததாக கந்தரோடை, மாந்தை, திஸ்ஸமகாராம ஆகிய மையங்கள் இடம்பெற்றன.

அநுராதபுரத்து அகழ்வாய்வுகள் மூன்று கலாசாரக் கட்டங்களை - இடைக்கற்காலம், இரும்புக்காலம் (பெருங்கற் பண்பாட்டுக்காலம்), ஆரம்ப வரலாற்றுக்காலம் - காட்டின. இதன் அகழ்வாய்வு ஆதாரங்கள் இடைக்கற்காலக் குடியேற்றங்கள் இரும்புக்காலத்திற்கு மாறி, அவை பின்னர் ஆரம்ப வரலாற்றுக்காலத்திற்கு மாறியதைக் காட்டி நிற்கின்றன. கந்தரோடையில் கற்கால மக்களின் குடியேற்றங்கள் காணப்படவில்லை. அது இரும்புக்காலக் குடியேற்ற மக்கள் ஆரம்ப வரலாற்றுக்கால மக்களாகத் தொடர்ந்ததைக் காட்டுகின்றது. மாந்தை அகழ்வுகள் மத்திய கற்கால, இரும்புக்காலக் குடியேற்றங்களைக் காட்டுகின்றன. திஸ்ஸமகாராமவும் முறையான அகழ்வு செய்யப்படும் போது அநுராதபுரம் போன்ற கலாசாரக் கட்டங்களைக் காட்டலாம். அதன் இரும்புக்கால, ஆரம்ப வரலாற்றுக்காலக் குடியேற்றங்கள் மட்டுமே அகழ்வுகளில் இதுவரை வெளிக்கொணரப்பட்டிருக்கின்றன.

இந்தக் கற்கைக்கு முக்கியமான அடுத்த பகுதி மல்வத்து ஓயா, தெதுறு ஓயா ஆகிய நதிகள் பாயும் வடமேற்கு இலங்கை. இந்த நிலப்பகுதி பண்டைய நாகதீபத்தின்

ஒரு பகுதி மட்டுமல்லாது, இலங்கையின் பாளி இலக்கியங்களின்படி ஆரம்பகால இந்தோஆரியர்கள் இத்தீவில் வந்திறங்கி, பின்னர் தங்களது முதலாவது தலைநகரை அமைத்துக்கொண்ட தம்பபண்ணி என்ற பகுதியுமாகும். இன்று இந்நிலப்பகுதியிலுள்ள முக்கியமான தளங்கள் மாந்தையும், பொம்பரிப்புமாகும். பொம்பரிப்பு அகழ்வுகள் அந்த இடுகாட்டில் 10,000 - 12,000 மக்கள்வரை புதைக்கப்பட்டிருந்ததாகக் காட்டுகின்ற போதிலும், அவர்கள் வாழ்ந்த குடியிருப்புப் பகுதிகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

இறுதியாக நமக்கு முக்கியமான பண்டைய குடியிருப்பு மையம் தென்கிழக்கு இலங்கையிலுள்ள உருகுணை இராச்சியத்தின் தலைநகரமான மகாகமம் (அக்குறுகொட). இங்கே இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் கந்தரோடை, அநுராதபுரம் போன்று கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், மட்பாண்ட எழுத்துகள், இரும்புப் பொருட்கள் என்பன கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொருட்கள் கந்தரோடை, அநுராதபுரம் போன்று பெருங்கற் பண்பாட்டைக் கடைப்பிடித்த மக்களே இங்கும் குடியிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

மட்பாண்டங்களைப் பொறுத்தவரையில் அநுராதபுரத்து மட்பாண்டங்களை இரு கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒன்று பெருங்கற்கால மட்பாண்டங்கள்; அடுத்தது ஆதி வரலாற்றுக்கால மட்பாண்டங்கள். அகழ்வுகளில் பெருங்கற் பண்பாட்டு கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் அகழ்வடுக்கு 3Aஇலும், ஆதி வரலாற்றுக்கால மட்பாண்டங்கள் அகழ்வடுக்கு 4Aஇலும் 4Bஇலும் காணப்பட்டன. அகழ்வடுக்கு 4Bஇல் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும் மற்றைய ஆதி வரலாற்றுக்கால மட்பாண்டங்களும் கலவையாகக் காணப்பட்டன. இங்கே அகழ்வடுக்கு 3Aஉடன் அகழ்வடுக்கு 4Bஇன் இடவியல் மேலணைவு (*Stratigraphical Overlap*) காணப்படுகிறது. இதன் முக்கியத்துவம் இவற்றிற்கிடையே காணப்படும் பண்பாட்டுத் தொடர்ச்சி (*Cultural Continuum*) ஆகும்.

இந்தப் பண்பாட்டுத் தொடர்ச்சியைத் தவிர, இம்மட்பாண்டங்கள் தென்னிந்திய மட்பாண்டங்களுடன் நெருங்கிய ஒற்றுமையைக் காட்டுகின்றன. கந்தரோடையில் அகழ்வுகளை மேற்கொண்ட விமலா பெக்லி கூறுகிறார்: "சில மட்பாண்ட வகைகள், குறிப்பாக கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், தென்னிந்திய இரும்புக்கால மட்பாண்டங்களுக்கு இணையாக உள்ளன. இந்த இரு இடங்களிலும் குடியேறியவர்கள் பொதுவான தோற்றம் கொண்டவர்கள் அல்லது நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம்" (*"Certain ceramic types, especially the blackandred ware, parallel those of the Iron Age of South India and possibilities are great that the settlers in both areas were of common origin or at least in close contact". Begley, V.* 1973: *pp.* 191-196).

மேலும் இதே வகையான கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் அநுராதபுரம், பொம்பரிப்பு, குருகல்ஹின்ன, பின்வேவா, அக்குறுகொட, மெஹேவித்த, கொல்லன்கனத்த, ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

இக் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களான பானைகள், கிண்ணங்கள், தட்டுகள் வெவ்வேறு வடிவங்களிலும் உருவங்களிலும் காணப்படுகின்றன. இவற்றை ஒத்த இணைகளான பெருங்கற் பண்பாட்டு மட்பாண்டங்கள் ஆதிச்சநல்லூர், அமிர்தமங்கலம், சானூர், போர்க்களம், அரிக்கமேடு, திருக்காம்புலியூர், பிரம்மகிரி, மாஸ்கி ஆகிய தீபகற்ப இந்திய மையங்களிலும் காணப்படுகின்றன (*Sitampalam, S.K.* 1980: 191-229).

தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் காணப்படும் பெருங்கற் பண்பாட்டு மட்பாண்டங்களில் காணப்படும் ஒரே வகையான குறியீட்டு எழுத்துகள் (*Graffiti*) நட்சத்திரம், சுவஸ்திகா, சக்கரம், சூலம், அங்குசம், பிராமி எழுத்து 'ம' என்பனவாகும். இவை தவிர இயற்கையாகக் காணப்படும் இலை போன்ற வடிவங்களும் வரையப்பட்டுள்ளன. பொம்பரிப்பு அகழ்வுகளில் ஒரு பானை ஓட்டில் கண்ட 'குதிரையின் கடிவாளம்' வரைபடம் ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட ஒரு பானையிலும் காணப்படுகிறது (*Sitampalam, S.K.* 1980: 265-277).

கலாநிதி சிற்றம்பலத்தின் ஆய்வு மூன்று முதன்மைக் கருத்துகளைக் கொண்டது:

1. பெருங்கற் பண்பாட்டிற்கு முந்திய முன்னோடி மக்கள்.

2. இலங்கையில் பெருங்கற் பண்பாட்டின் விரிவான பரவலாக்கம்.

3. பெருங்கற் பண்பாட்டின் கர்த்தாக்கள் (ஆக்கியோர்).

இலங்கையின் இடைக்கற்காலம் இரு கட்டங்களைக் கொண்டது. ஒன்று இடைக்கற்காலப் பலாங்கொடைப் பண்பாடு, மற்றது இடைக்கற்காலத்திற்குச் சற்று முற்பட்ட இரத்தினபுரிப் பண்பாடு. இவற்றின் பரவல் தீவெங்கும் காணப்பட்ட போதிலும், அவை தென்னிலங்கையிலேயே அடர்த்தியாகக் காணப்பட்டன. இக்கற்காலத்தின் கல்லாயுதங்களின் அமைப்பு தென்னிந்திய இடைக்கற்கால மற்றும்

இடைக்கற்காலத்திற்கு சற்று முற்பட்ட காலக் கல்லாயுதங்களை ஒத்திருக்கின்றன. இந்த அடிப்படைத் தகவல் இலங்கையின் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தை விளக்குவதற்கு உறுதியான பின்னணியாகும்.

இலங்கையின் பாளி இலக்கியங்கள் கூறும் இயக்கர்கள் இந்த மேலைப் பழங்கற்கால - இடைக்கற்கால மக்களின் சந்ததியினராவர். இக்கால வேடர்கள் ஆஸ்திரோஆசிய மொழிகளைப் பேசிய மேலைப் பழங்கற்கால - இடைக்கற்கால மக்களின் வம்சாவளியினர். இவர்கள் அனைவரதும் வம்சாவளியினரே பெருங்கற் பண்பாட்டைப் பேணிய மக்கள் தொகையின் கணிசமான கூறு ஆவர்.

இரண்டாவது அம்சம், இலங்கையின் வரலாற்றில் வரலாற்று உதயகாலம் பெருங்கற் பண்பாடு நிலவிய காலம் என்பதையே இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் காட்டுகின்றன. இக்காலத்தில்தான் பெருங்கற் பண்பாட்டு தாழி அடக்கங்கள், கல்லறைகள், கற்பதுக்கைகள், கல்வட்டங்கள் ஆகியவற்றை இங்கே நாம் காண்கிறோம். இப்பெருங்கற் பண்பாட்டுப் புதையல்கள் இலங்கையின் உலர் வலய மையங்களில் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. இந்த உலர் வலயம்தான் இலங்கையின் ஆதி வரலாற்றுக்கால நாகரிகம் உதயமான இடம். பாளி இலக்கியங்கள் கூறும் ஆதிகாலக் குடியிருப்புகள் இருந்த இடங்களில் இந்தப் பெருங்கற் பண்பாட்டு மையங்கள் காணப்படுவது தற்செயலாக நடைபெற்ற நிகழ்வுகள் அல்ல.

பெருங்கற் பண்பாடு தென்னிந்தியாவில் உருவான ஒரு கலாசார அம்சமாகும். தென்னிந்தியாவில் கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களிலேயே இப்பண்பாட்டு அம்சங்கள் அடர்த்தியாகக் காணப்படுகின்றன. தென்னிந்தியாவிலிருந்தே இப்பண்பாடு இலங்கையை வந்தடைந்திருக்கிறது. இந்த நிலைமை தமிழகப் பெருங்கற்கால மையங்களில் காணப்படும் அதே அம்சங்கள் இலங்கையிலும் காணப்படுவதிலிருந்து புலப்படுகிறது. தமிழகத்தில் இப்பண்பாட்டைப் பேணியோரின் வருகையால் இது இலங்கையை வந்தடைந்திருக்கலாம். அல்லது ஒரு கலாசாரப் பரவலாக இது நிகழ்ந்திருக்கலாம். இப்பண்பாட்டின் வருகையோடு திராவிட மொழிகளும் இந்த நாட்டை வந்தடைந்திருக்கலாம்.

தொல்லியல் ஆய்வுகள் தரும் விஞ்ஞானத் தகவல் யாதெனில்:

“கி.மு. ஆயிரம் ஆண்டளவில் இலங்கையில் ஆரம்பமான பெருங்கற் பண்பாடே இந்நாட்டின் சிங்களதமிழ் மொழிகளைப் பேசும் மக்களின் மூதாதையர்களின் நாகரிக வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாக இருந்திருக்கிறது. தென்னிந்தியாவைப் போன்று இலங்கையின் சமூக உருவாக்கம், உணவு உற்பத்திப் பொருளாதாரம், மட்பாண்டத் தயாரிப்பு, இரும்புப் பொருட்களின் உற்பத்தி, இறந்தோரின் அடக்கம், நகரமயமாக்கம், அரசின் தோற்றம், நாகரிக வளர்ச்சி ஆகிய அனைத்தினதும் தொடக்கப்புள்ளியாக இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டு அம்சங்களே காணப்படுகின்றன.”

---

கலாநிதி சிற்றம்பலம் இந்த ஆய்வை மேற்கொண்ட காலத்தில் இலங்கையிலுள்ள பெருங்கற்கால மையங்களின் ஆரம்பக் குடியேற்றக் கால கதிரியக்கக் கரிமத் தேதிக் கணிப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன் பின்னர் வெளிவந்த ஆரம்பகாலத் திகதிகள்: கந்தரோடை கி.மு. 1350-500, ஆனைக்கோட்டை கி.மு. 915-365, அநுராதபுரம் கி.மு. 840-600, பொம்பரிப்பு கி.மு. 900, இப்பன்கட்டுவ கி.மு. 700-450 ஆகிய ஆண்டுகளைக் காட்டியுள்ளன.

---

### திருப்புமுனை மூன்று

### கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி: யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடியிருப்புகள்

*Ponnampalam Ragupathy (1983): Early Settlements in Jaffna - an Archaeological Survey, Ph.D. dissertation, University of Jaffna.*







*பொ. இரகுபதி (1983): பெருங்கற்கால யாழ்ப்பாணம், பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.*

---

*கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய கல்வி நிறுவனங்களின் பழைய மாணவர். இவர் மைசூர் பல்கலைக்கழகத்தில் தொல்லியலில் முதுகலைப் பட்டம் (M.A.) பெற்று, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தனது தத்துவக் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வைத் தொடர்ந்தார். அவர் எடுத்துக்கொண்ட பொருள் 'யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடியிருப்புகள் - ஒரு தொல்லியல் ஆய்வு' (Early Settle ments in Jaffna - An Archaeological Survey) என்பதாகும். இந்த ஆய்வை 1983ஆம் ஆண்டு சமர்ப்பித்து தத்துவக் கலாநிதிப் பட்டம் பெற்றுக்கொண்டார். இந்த ஆய்வு 1987ஆம் ஆண்டில் ஏராளமான படங்களுடன் நூலுருவில் வெளிவந்துள்ளது.*

---

யாழ்ப்பாணத்தின் ஆதிக் குடியிருப்புகள் என்ற பெயரில் கலாநிதி பொன்னம்பலம் இரகுபதி வெளியிட்ட ஆய்வு வட இலங்கை வரலாற்றிலே ஒரு திருப்புமுனையாக அமைந்த கற்கை எனலாம். அகழ்வாய்வுகளிலும், கள மேலாய்வுகளிலும் கிடைத்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு விஞ்ஞான அறிவியல் பூர்வமாக எழுதப்பட்ட பெரும் படைப்பு இது. வரலாற்றிலும், தொல்லியலிலும் ஆழமான ஆர்வம் கொண்ட ஒருவரின் தனிப்பட்ட முயற்சியினால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தொல்லியலாய்வு, யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு மட்டுமல்ல. அதன் பின்னர் இப்படியானதொரு ஆய்வை வேறு எவருமே தொடர்ந்து மேற்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் ஆதிக்குடிகள் யார்? எப்போது அவர்கள் இந்தத் தீபகற்பத்திற்கு வந்தார்கள்? எப்படி வாழ்ந்தார்கள்? இப்பிரதேசத்தின் தனித்துவமான பண்பாட்டிற்குக் காரணமான வரலாற்றுப் போக்கு என்ன? - இத்தகைய வினாக்களுக்கு விடை காண்பதே கலாநிதி இரகுபதியின் ஆய்வு ஆகும்.

இலங்கையின் வரலாறு தொடங்கும் காலத்தில் அதற்குக் காரணமாய் அமைந்தது தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டின் வருகையே என்பது இப்போது அறிவியல் சார்ந்த தொல்லியல் ஆய்வாளர்களின் கருத்தாகும். இது இலங்கைக்கு ஆரியர் குறித்து இதுவரையும் தெரிவிக்கப்பட்டு வந்த பாரம்பரிய கருத்துகளுக்கு முற்றிலும் முரணானதாகும். இலங்கைக்கு ஆரியர் வந்தமைக்கு எவ்வித தொல்லியல் ஆதாரங்களும் காணப்படவில்லை; அதற்கு மாறாக தென்னிந்திய வரலாற்றுத் தொடக்ககாலப் பெருங்கற் பண்பாடே இலங்கையிலும் வரலாற்றுத் தொடக்கத்தைக் கொணர்ந்தது என்ற கருத்து அண்மைக்காலங்களில் பலமடைந்து வருகின்றது.

1980ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கலாநிதி இரகுபதி மேற்கொண்ட மேலாய்வொன்றில் ஆனைக்கோட்டையில் பெருங்கற் பண்பாட்டுத் தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் பேராசிரியர் இந்திரபாலா தலைமையில், கலாநிதி சிற்றம்பலம், கலாநிதி இரகுபதி ஆகியோருடன் இணைந்து இங்கே அகழ்வாய்வை நடத்தினார்கள். இங்கே பெருங்கற் பண்பாட்டு ஈம அடக்கங்கள் யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக வெளிக்கொணரப்பட்டன.

ஆய்வுக்குழியில் இரு எலும்புக்கூட்டு அடக்கங்கள் மேற்குக்கிழக்காக நீட்டிக்கிடத்தப்பட்ட நிலையில் காணப்பட்டன. இவற்றைச் சுற்றி ஈமப்படையல்கள் பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்களில் இடப்பட்டிருந்தன. இரும்புக் கருவிகள், இரும்பு அகல் விளக்கு, சங்குகள், மணிவகைகள், கடல் உணவு எச்சங்கள் ஆகிய பல பொருட்கள் ஈமப்படையல்களில் இடம்பெற்றிருந்தன. எலும்புக்கூடு ஒன்றின் தலைமாட்டில் வைக்கப்பட்டிருந்த கறுப்புசிவப்பு வட்டில் ஒன்றில் 'கோவேத' என்ற பெயர் பொறித்த ஸ்டீயடைட் (Steatite) கல்லினாலான முத்திரை மோதிரம் கிடைத்தது. இம்முத்திரை எழுத்துகளின் தொல்லெழுத்தியலை அடிப்படையாகக் கொண்டு இப்பண்பாட்டின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டென நிர்ணயிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையைத் தொடர்ந்து 1981ஆம் ஆண்டு ஜனவரியிலும், பின்னர் நவம்பரிலும் காரைநகரில் உள்ள சந்திராந்தையில் மேற்கொண்ட அகழ்வாய்வில் ஆனைக்கோட்டையில் கிடைத்தவற்றை ஒத்த ஈம அடக்கங்களும், ஈமப் புதையல்களும் காணப்பட்டன. இரும்புக் கருவிகள் காணப்படாத போதிலும், பளிங்குக் கல்லினாலான (Quartz) ஒரு குறுணிக்கல் கருவி கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. கறுப்புசிவப்பு மட்பாண்ட வகை ஒப்பீட்டாய்வின்படி சந்திராந்தைப் புதையல் ஆனைக்கோட்டையைக் காட்டிலும் பழமை வாய்ந்ததாகக் கணிக்கப்படுகிறது.

கலாநிதி இரகுபதி யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் வரலாற்றின் தொல் குடியிருப்புகள் இருந்ததாகக் கணிக்கப்பட்ட 41 மையங்களில் தொல்லியல்

மேலாய்வுகளையும் கள ஆய்வுகளையும் மேற்கொண்டார். அவர் மேற்கொண்ட ஆய்வுகளில் ஆரம்பகால மையங்களில் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்பட்டன. இவற்றோடு பண்டைய குடியிருப்புகள், வாழ்வாதார முறைகள், சுற்றுச்சூழல் நிலைமைகள், நீர்வளம், நெல் வயல்கள், கடற்கரைக்கான அண்மை, ஆரம்பகாலத் தொடர்பு முறைகள், உள்நாட்டுப் பெருவழிகள், பரவைக்கடல் வழிகள் ஆகிய பல நடைமுறை வாழ்வியல் ஆய்வுகளும் அவரது தொல்லியல் ஆய்வுகளோடு இணைக்கப்பட்டமை அவரது யாழ்ப்பாணக் கற்கையின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பெருங்கற்கால மக்கள் யாழ்ப்பாணத்தில் குடியேறியமைக்கு சில அடிப்படைக் காரணிகள் உள்ளன. அவர்களது பண்பாட்டிற்கும் தொழில்நுட்பத்திற்கும் இக்குடாநாட்டின் இயற்கையமைப்பு சாதகமாக இருந்ததே காரணமெனலாம். வறண்ட காலநிலை, ஆரம்பகாலத்து எளிமையான இரும்புக் கருவிகளால் அழிக்கப்படக்கூடிய பற்றைக்காடு, சுண்ணாம்புத் தரையில் இயற்கையாகத் தோன்றிய சிறு குளங்கள், கடலுணவை ஆபத்தின்றிப் பெற்ற ஆழமற்ற பரவைக் கடல் - இவைகளே பெருங்கற் பண்பாட்டு மனிதனை ஈர்த்த யாழ்ப்பாணத்தின் கவர்ச்சிகள் ஆகும்.

பெருந்தொகையான கடல் உணவு எச்சங்களும், கால்நடை எலும்புகளும் ஈமப் படையல்களில் பெறப்பட்டன. சுறா, பிற மீன்களின் முள்ளந்தண்டு; நண்டு, கடலாமை போன்றவற்றின் ஓடுகள்; உள்ளிருக்கும் இறைச்சியை எடுப்பதற்காக உடைக்கப்பட்ட சங்குகள்; கூரிய ஆயுதத்தினால் வெட்டப்பட்ட அடையாளமுள்ள கால்நடை எலும்புகள்; விலங்குகளின் பற்கள் ஆகியவை மீன்பிடித்தலும், மந்தை வளர்ப்பும் இந்த ஆதிக் குடிகளின் வாழ்க்கையில் வகித்திருந்த முக்கிய பங்கை விளக்குகின்றன.

பெருங்கற்கால யாழ்ப்பாணத்தில் வர்த்தகம் முக்கிய இடத்தை வகித்துள்ளது. சில வகை மட்பாண்டங்கள், மணிவகைகள், கல்வகைகள், உலோகம் போன்றவை வர்த்தகப் பொருட்களாகவே இங்கு வந்திருக்க வேண்டும். சோழ மண்டலக் கடற்கரைக்கும் இலங்கைக்குமிடையே இருந்த கடல் வர்த்தகப் பாதைகளில் யாழ்ப்பாணம் கேந்திரத் தானத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது. கந்தரோடையின் நகரமயமாக்கத்திற்கு வெளிநாட்டுக் கடல் வர்த்தகமும், தென்னிலங்கையுடனான வர்த்தகப் பாதைகளின் வளர்ச்சியும் காரணமாகலாம். கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை நீடித்த உரோம வர்த்தகம் கந்தரோடையின் நகரமயமாக்கத்திற்கு உந்துதலாக இருந்திருக்கும். இதை உறுதிப்படுத்தும் வகையில் கந்தரோடையில் அதிகமான அளவில் மிகச் செறிவான உரோம மட்கலன்களும், உரோம நாணயங்களும் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இது தமிழ்நாட்டில் சேர் மோட்டிமர் வீலர் அகழ்ந்தாராய்ந்த அரிக்கமேடு என்ற இந்திய-உரோமத் துறைமுக நகரச் சான்றுகளுக்கு ஒப்பானதாகும்.

யாழ்ப்பாணத்திற்கும் அநுராதபுரகால இலங்கைக்கும் இருந்த தொடர்பு என்ன? இக்காலத்தில் அநுராதபுரம் இலங்கையின் பலம்வாய்ந்த மையநகரமாக விளங்கியதென்பதில் ஐயமில்லை. ஆயினும், யாழ்ப்பாணம் அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் உள்ளடங்கியிருந்ததற்கான தெளிவான சான்றுகள் இல்லை. அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட பாளி இலக்கிய ஆதாரங்கள் தொலைவில் இருக்கும் மகாகமையைப் பற்றி அதிகம் கூறும் அதே நேரத்தில், யாழ்ப்பாணம் குறித்து மிகக் குறைந்த விவரங்களைக்கூடத் தரவில்லை எனலாம்.

இக்கால யாழ்ப்பாணம், இக்காலகட்டத்தில் தென்னிந்தியாவிற்கும் தென்னிலங்கைக்கும் இடையில் பண்பாடுகள் சந்திக்கும் இடைக்குறு நிலமாகவும், இந்திய உபகண்டத்தில், குறிப்பாகத் தென்னிந்தியாவில் தோன்றிய புதிய அலைகளை முதலில் ஏற்றுக்கொண்ட படிக்கல்லாகவும் இருந்திருக்கலாம். இந்நாட்டிற்குப் பௌத்தத்தின் வருகை சம்புத்துறையூடாக வந்தமை போலவே, பின்னர் தென்னிந்தியாவில் ஏற்பட்ட பிராமணிய மறுமலர்ச்சியும் இங்கு வந்திருக்கக்கூடும்.

பண்டைய யாழ்ப்பாண வரலாற்றியல் இலக்கியங்கள் யாவும் புகைபடர்ந்த, ஆனால் ஏகோபித்த ஒரு தகவலைத் தருகின்றன. அது ஆரியச் சக்கரவர்த்திகள் கால யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னரே கதிரைமலையில் இருந்து யாழ்ப்பாணம் ஆளப்பட்ட ஒரு செய்தியாகும். சோழர் வருகையுடன் இவ்வரசு முடிவடைவதை இவ்விலக்கியங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன. கதிரைமலையில் இருந்து அரசாண்ட உக்கிரசிங்கன் மாருதப்புரவல்லியைத் திருமணம் செய்த பின்னர், கதிரைமலை இந்நூல்களால் மறக்கப்பட்டுவிடுகின்றது.

## திருப்புமுனை நான்கு

### கலாநிதி சுதர்ஷன் செனெவிரத்ன: இலங்கையின் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களின் தொல்லியல்

*Sudharshan Seneviratne* **(1984):** *The Archaeology of the Black and Red Ware in Sri Lanka, Ancient Ceylon, No.* **5***, Journal of the Archaeological Survey Department, Sri Lanka.*

---

கலாநிதி சுதர்ஷன் செனெவிரத்ன ஆசியாவில் முதனிலை பெற்றிருந்த ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திலே பயின்று தத்துவக் கலாநிதி பட்டம் பெற்றவர். பாரபட்சமின்றி நடுநிலை பேணி வரலாற்றை உரைத்த ரோமிலா தாப்பர் போன்ற மேதைகளிடம் கல்வி பயின்றவர். இலங்கைக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஆதாரமற்ற, புனைகதை போன்ற இலங்கை வரலாற்றைக் கற்க வேண்டிய அனுபவம் அவருக்கு ஏற்படவில்லை. 1984 ஆம் ஆண்டில் அவரது ஆய்வான 'இலங்கையில் பெருங்கற் பண்பாட்டு கறுப்புசிவப்பு மண்பாண்டத் தொகுதியின் தொல்லியல்' (The Archaeology of the Megalithic Black and Red Ware Complex in Sri Lanka) என்ற ஆய்வறிக்கை இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் சஞ்சிகையான 'Ancient Ceylon No. 5' இல் 1984 இல் வெளியானது.

---

இலங்கையின் வரலாற்றாய்வில் இடைக்கற்காலத்திற்கும், ஆரம்ப வரலாற்றுக் காலத்திற்குமிடையிலான கால இடைவெளி பாளி இலக்கியங்களில் காணப்படும் மரபுவழிக் கதைகளைக் கொண்டே நிரப்பப்பட்டு வந்திருக்கிறது. இந்த ஆய்வுகள் கடைப்பிடித்த ஆய்வு நெறிமுறைகள் தொல்லியல் கற்கையைப் புறக்கணித்தே வந்திருக்கின்றன. ஆனால் சமீபகால தொல்லியல் ஆய்வுகள் இலங்கையின் நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப காலங்களையும், உருவாக்க காலங்களையும் பற்றிய பிரச்சினைக்குரிய கேள்விகளை எழுப்பி வருகின்றன.

இந்தக் கற்கையில் முன்வைக்கப்படும் முதன்மையான தொல்லியல் சான்றுகள் (Primary Archaeological Evidence), முக்கியமாக ஆதி இரும்புக் காலத்தைய பெருங்கற் பண்பாட்டு ஈமப்புதையல்கள் எனக் கூறப்படும் நினைவுச் சின்னங்களிலிருந்தும், பண்டைய பெருங்கற் பண்பாட்டுக் குடியிருப்புகளிலிருந்தும் பெறப்பட்ட கலைப்பொருட்கள், குறிப்பாக சிறப்பியல்பு கொண்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்களாகும். இந்த மட்பாண்டப் பொருட்கள் ஈமப் புதையல்களுக்கும், இலங்கையின் ஆதிகாலக் குடியேற்றங்களுக்குமிடையே காணப்படும் முக்கியமான தொடர்புகளை நிலைநாட்டுகின்றன. ஆகவே ஆதி வரலாற்றுக் காலத் தெக்காணத்தினதும், இலங்கையினதும் பரந்த பண்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்ட இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டு கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களின் கற்கை மிக முக்கியமாகிறது.

**பகுதி -2**

### சுற்றுச்சூழல் பின்னணி

வட இலங்கையில் பெருங்கற் பண்பாட்டுக் கறுப்பு வெள்ளை மட்பாண்டங்கள் காணப்படும் இடங்கள் விவசாயம், மந்தை வளர்ப்பு, மீன்பிடிப்பு, வேட்டையாடல் ஆகிய உணவு தேடும் நடவடிக்கைகளுக்கு ஏற்ற இடங்களாகக் காணப்படுகின்றன. ஆதிக் குடியேற்றங்கள் காணப்படும் கடலோர நிலப்பகுதிக்கு அருகாமையில் ஒரு விவசாயப் பின்னிலமும் காணப்படுவது ஒரு பொதுவான பரவல் பாங்கு.

வட இலங்கையின் பெருநிலப்பரப்பில் ஓடிவரும் ஆறுகள் மூலம் நீரைப் பெற முடிந்தது. இந்த ஆறுகள் தகவல் தொடர்பு இணைப்புகளாகவும் விளங்கின. இலங்கையின் ஆரம்பகாலப் பிராமி எழுத்துப்பதிவுகள் இக்குடியேற்றப் பகுதிகளிலேயே காணப்படுகின்றன. வட இலங்கையில் 310 அடி ஆழத்தில் சுலபமாக நிலத்தடி நீரைப் பெற முடிகிறது. கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் அதிகமாகக் காணப்படும் பகுதியை இக்குடியிருப்புகளின் நடுவப்பகுதியாகக் (Core Area) கொள்ளலாம். இவ்வகையான மட்பாண்டங்கள் குளங்களின், நீர்த்தேக்கங்களின் அருகாமையிலும் அதிகமாகக் காணப்படுகின்றன.

மேற்கூறிய நடுவப்பகுதிக்குச் சமீபமாக உலர்ந்த - ஈரமான பயிர்ச் செய்கைகளுக்கேற்ற விவசாயத்திற்கான வயல்கள் காணப்படுகின்றன. செழிப்பு மிகுந்த சிவந்த மண் விவசாயத்திற்குச் சிறந்த மண். இந்த மண்ணின் தன்மை ஆரம்பகால மக்களின் குடியேற்றப் பரவலைத் தீர்மானித்த ஒரு காரணி ஆகும். வட யாழ்ப்பாணத்தில் மக்கள் பரவலாகக் குடியேறியிருப்பதற்கும், வட மேற்கில் மக்கள் நேரியலாக (நேர் கோட்டில்) குடியேறியிருப்பதற்கும், வட மத்திய இலங்கையில் குடியேற்றங்கள் சில இடங்களில் குவிந்தும் சில இடங்களில் வெற்றுக் காடாகவும் இருப்பதற்கும் மண்ணின் தன்மையே காரணமாகும்.

வட இலங்கையில் பெருங்கற் பண்பாட்டுக் கறுப்பு சிவப்பு மட்பாண்டத்துடன் தொடர்புடைய ஆரம்பகால இடங்கள் முதலில் பருவகாலக் காடுகளாகவும், முட்புதர்க் காடுகளாகவும் இருந்தன. வடமேற்கு இலங்கையின் பருவகாலக் காடுகளை நீக்க மேம்பட்ட உலோகக் கருவிகள் வேண்டியதில்லை. நெருப்பை வைத்தே இவற்றை அழித்து விடலாம். முட்புதர்க் காடுகள் அடர்ந்த செறிவான அடிமரங்களைக் கொண்டிருக்கும். இவற்றை மேம்பட்ட இரும்புக் கருவிகளைக் கொண்டு நிரந்தரமாக அகற்றி, வதிவிடங்களுக்கும் வயல்

காணிகளுக்கும் ஏற்ற நிலங்களாக அமைத்துக்கொள்ள முடியும். மேலே கூறப்பட்ட சுற்றுச்சூழல் பின்னணி சமூக அசைவியக்கத்தையும், மக்களின் குடியேற்றத்தையும், வாழ்வாதார முறைகளையும், தொழில்நுட்பப் பரிமாணத்தையும் தீர்மானிக்கும் காரணிகளாக இருந்தன.

## பெருங்கற் பண்பாட்டு மையங்கள்

இலங்கையில் இதுவரை (1984) கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டு மையங்கள் இவை.

### 1. காரைநகர் - நீளக்கிடத்திய புதையல்

இந்த மையம் 1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரால் அகழப்பெற்றது. நிலத்திலிருந்து ஒரு அடி கீழே ஈமப்புதையல் காணப்பட்டது. அதனோடு கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், குறியீட்டு எழுத்துகள், இரும்புக் கசடு (Iron Slag), சுறா எலும்புகள் காணப்பட்டன.




இலங்கையின் பெருங்கற்காலக் குடியிருப்புகளும் ஈமப்புதையல் மையங்களும். உரையில் குறிப்பிடப்படும் இலக்கங்கள் படத்தில் இலக்கமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

### 2. ஆனைக்கோட்டை - நீளக்கிடத்திய புதையல்

இந்தக் கடற்கரையை அண்டிய ஈமக்காடு 1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுப் பிரிவினரால் அகழப்பெற்றது. 2 அடி ஆழத்தில் மேற்குக் கிழக்காக நீளக்கிடத்திய இரு எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டன. ஒரு எலும்புக்கூட்டின் தலைப்பக்கத்திலிருந்த கறுப்புசிவப்பு மட்பாண்டத்தில் கோவேத என ஆதிப் பிராமி எழுத்துப் பொறித்த ஒரு முத்திரை மோதிரம் காணப்பட்டது. மற்றும் சுறா, கால்நடை எலும்புகள், சில்லில் செய்த கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், சிவப்பு மட்கலன்கள், இரும்புக் கருவிகள், செம்புப் பொருட்கள், லக்ஷ்மி பட்டயம் என்பன கிடைத்தன.

### 3. கந்தரோடை - குடியிருப்பு உறைவிடம்

சுன்னாகம் பகுதியில் கடற்கரையிலிருந்து 6 மைல் தூரத்தில் அமைந்த இந்த நடுவம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அறிஞர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. இக்குடியிருப்பிற்குச் சமீபமாக உள்ள கந்தரோடைக்குளம் அப்பகுதியின் ஊடாக ஓடும் வழுக்கை ஆற்றுடன் யாழ்ப்பாணப் பரவைக்கடலை இணைக்கிறது. ஆரம்பத்தில் இவ்விடத்தில் அகழ்வுகளை மேற்கொண்ட போல் பீரிஸ் மெருகூட்டப்பட்ட ஓடுகள், முத்திரை நாணயங்கள், ஆரம்பகாலப் பாண்டிய நாணயங்கள், உரோம நாணயங்கள், லக்ஷ்மி பட்டயங்கள், இரும்பு, செம்பு, தங்க உலோக எச்சங்களைக் கண்டெடுத்தார். பின்னர் இவ்விடத்தில் பௌத்த நிறுவனங்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

விமலா பெக்லியால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் இன்றைய நிலமட்டத்திலிருந்து 12 அடி ஆழத்திற்கு குடியிருப்பு எச்சங்கள் காணப்பட்டன. பெக்லி கந்தரோடையின் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களுக்கும், தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மட்பாண்டங்களுக்கும், கிறிஸ்தாப்தத்திற்கு முற்பட்ட அநுராதபுர கெடிகே பகுதியில் காணப்பட்ட மட்பாண்டங்களுக்கு மிடையிலான நெருங்கிய ஒற்றுமை குறிப்பிடத்தக்கதாக இருப்பதாகக் கூறியுள்ளார்.

கடந்த இரு ஆண்டுகளாக யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு மேற்கே இருக்கும் தீவுகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினர் மேற்கொண்ட மேலாய்வுகளில் பல கறுப்பு சிவப்பு மட்பாண்ட மையங்களைக் கண்டுபிடித்திருப்பதாக தனிப்பட்ட தகவல் தொடர்புகளில் சி.க. சிற்றம்பலம், பொ. இரகுபதி ஆகிய இருவரும் என்னிடம் கூறியுள்ளார்கள் - 1982 (Seneviratne 1984: p. 244).

### 4. மாந்தை (திருக்கேதீஸ்வரம்) - குடியிருப்பு - நீளக்கிடத்திய புதையல்

பண்டைய கோட்டைப் பட்டினமான மாந்தை அருவி ஆற்றின் கழிமுக நிலத்தில் அமைந்திருக்கிறது. இந்த முக்கியமான குடியிருப்பு மையம் அநுராதபுர கெடிகே பகுதியைப் போன்ற ஒரு கலாசார வரிசையை வெளிக்காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சமீபகால ஆய்வுகள் (Prickett, 1980:21) இந்த நகரின் குடியிருப்புச் சிதைவுகள் 30 அடி ஆழத்திற்கு ஆழ்ந்திருப்பதாக அறியத் தருகின்றன.

1950இன் அகழ்வுகளின் போது நகர மதில்களுக்கு வெளியே 4 அடி, 8 அங். ஆழத்தில் ஒரு நீளக்கிடத்திய எலும்புக்கூட்டை சண்முகநாதன் அகழ்ந்தெடுத்தார். இதுவும் ஆனைக்கோட்டைப் புதையலைப் போல மேற்குக் கிழக்காகப் புதைக்கப்பட்டிருந்தது.

*1980 இல் ஜோன் கார்ஸ்வெல் மேற்கொண்ட அகழ்வுகள் குறிப்பிடத்தக்க அளவு ஆரம்ப வரலாற்றுக்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்களையும், றூலெற்றெட் கலன்களையும் கொடுத்திருந்தன. 4 அடி ஆழத்தில் நீர் மட்டத்தின் கீழ் கண்டெடுத்த கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் பெருங்கற் பண்பாட்டிற்குரிய கலன்களாகக் கருதப்படுகின்றன (Prickett, 1980).*

**5. தேக்கம் - தாழிப்புதையல்**

*வில்பத்து வனவிலங்கு புகலிடப் பகுதிக்குள் பொம்பரிப்பைப் போன்று தாழிப்புதையல்களைக் கொண்ட ஒரு பகுதி தேக்கம். இது மோதரகம் ஆற்றின் இடது கரையில் அமைந்திருக்கிறது. இந்த நடுவம் 1977 ஆம் ஆண்டில் சரத் வத்தள என்ற ஆய்வாளரால் அகழப்பெற்றது. மோதரகம் ஆற்றின் முகத்துவாரத்திலுள்ள பூக்குளம் என்ற இடத்தில் சிப்பி ஓடுகளோடு கறுப்புசிவப்பு மட்பாண்டக் கலவோடுகள் காணப்படுகின்றன.*

**6. பொம்பரிப்பு - தாழிப்புதையல்**

*இலங்கையில் மிகவும் விரிவாக ஆய்வு செய்யப்பட்ட நடுவம் பொம்பரிப்பு. வில்பத்து வனவிலங்கு புகலிடப் பகுதிக்குள் புத்தளம்மன்னார் வீதியில் 21 ஆவது மைல்கல் இருக்கும் இடத்திற்குச் சமீபமாக, கடற்கரையிலிருந்து 4 மைல் தூரத்தில் இந்த இடம் இருக்கிறது. இந்த நடுவத்திற்குத் தெற்கே வற்றாத கலாஓயா நதி ஓடுகிறது.*

*விமலா பெக்லியின் மதிப்பீட்டின்படி இந்த நடுவத்தில் 8,000 தாழிகளில் 10,000-12,000 மக்கள் வரை புதைக்கப்பட்டிருக்கிறார்கள். இங்கே புதையுண்டிருக்கும் மக்களின் குடியிருப்புப் பகுதி இவ்விடத்திலிருந்து கிழக்கே அமைந்திருக்கலாம் என பெக்லி கருதுகிறார். இவ்விடத்தில் பலதரப்பட்ட தாழிகள், கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள், கீறல் எழுத்துகள் கொண்ட ஓடுகள், இரும்புப் பொருட்கள், செம்பு, வெண்கலம், மணிகள், விலங்கு எலும்புகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன (Begley, V. 1981: 49-95).*

*இந்தப் பகுதியிலுள்ள கொல்லன் கனத்தவில் 1971 இல் அகழாய்வுகளை மேற்கொண்ட சிரான் தெரணியகல, அநுராதபுரம் கெடிகே பகுதியில் கண்டது போன்ற 'பெருங்கற் பண்பாட்டு வகை' கறுப்புசிவப்பு மட்பாண்டங்களை இங்கே கண்டதாகத் தெரிவித்திருக்கிறார் (Deraniyagala, S. 1972a: 117).*

**7. மாமடுவ - கல்லறை, கல்வட்டம்**

*வவுனியாமாமடுவ வீதியில் வவுனியாவிலிருந்து 5 மைல் தூரத்தில் தேக்கு மரக் காடுகளினிடையே கடல் மட்டத்திலிருந்து 250-300 அடி உயரத்தில் இவை காணப்படுகின்றன. இதன் கிழக்கே பிராமி எழுத்துப் பொறித்த பாறைகள் (பெரிய புளியங்குளம்) காணப்படுகின்றன. இதன் சமீபத்தில் மாமடுவ குளம் காணப்படுகிறது.*

*இந்த மையம் 1976 இல் எம்.எச். சிறிசோம என்ற உதவி தொல்லியல் ஆணையாளரால் ஆய்வு செய்யப்பெற்றது. இரு வகையான புதையல்கள் காணப்பட்டன. பெரிய அளவிலான 6 அடி X 4 அடி கொண்ட பல கல்லறைகள் காணப்பட்டன. இவற்றை மூடிய கல்மேசைகள் காணப்பட்டன. இக்கல்லறைகள் மிக நெருக்கமாகக் கணிசமான அளவு நிலப்பரப்பை உள்ளடக்கியிருந்தன.*

*இரண்டாவது வகைப் புதையல்கள் மரக்காட்டிற்கு வெளியே இருந்த கூட்டுப் பண்ணையில் கல்லறைகளிலிருந்து வேறாக அமைந்திருந்தன. புதையல்களைச் சுற்றிவர வட்ட வடிவில் பெரிய கற்கள் அடுக்கப்பட்டிருந்தன. சில கல்வட்டங்கள் தாழிப்புதையல்களைச் சுற்றிவர அடுக்கப்பட்டிருந்தன. இவை தென்னிந்திய தாமிரபரணி நதிக்கரைக் கல்வட்டங்கள் கொண்ட தாழிப்புதையல்களை ஞாபகப்படுத்தின. இவ்விடத்தின் மேலாய்விலே பல கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்விடத்தில் வாழும் கிராம மக்கள் கிணறு தோண்டும் பொழுதில் எலும்புகளும், சாம்பலும் கொண்ட பெரிய குடங்கள் வெளிவருவதாகக் கூறியுள்ளார்கள்.*

*1978-79 ஆண்டுகளின் பின்னர் இக் கல்வட்டங்களைக் காண முடியவில்லை. அதிகாரத்துவ அலட்சியம் காரணமாக அவை முழுதாக மறைந்து போயின (Completely disappeared due to bureaucratic negligence).*

**8. அளுத்பொம்புவ - கல்லறைப் புதையல்**

*1982 ஆம் ஆண்டில் வில்பத்து காட்டுவிலங்கு புகலிடப் பகுதிக்குள் காணப்பட்ட கல்லறை வகைப் புதையல் இது (சிரான் தெரணியகலவுடனான தனிப்பட்ட தொடர்பு மூலம் பெறப்பட்ட தகவல்). இப்புதையல் பகுதி ஆலடிமுறிப்புக் குளத்தினருகே காணப்படுகிறது.*

**9. கரம்பன் குளம் - தாழிப்புதையல்**

*வில்பத்து வனவிலங்கு புகலிடப் பகுதிக்குள் காணப்படும் இன்னொரு தாழிப்புதையல் நடுவம் இது. இப்பகுதிக்கு கலாஓயாவின் ஒரு கிளை நதியான எல்பத்து ஆற்றினால் நீர் வழங்கப்படுகிறது. பொம்பரிப்பிற்கு அருகாமையில் இருப்பதனால் இது கலாஓயாவின் பெருங்கற் பண்பாட்டுக் குழுவிற்குள் வருகிறது.*

**10. தம்மென்னகொடெல்ல - கல்லறைப் புதையல்**

*மதவாச்சிஹொரவப்பொத்தான வீதியில் 16 ஆவது மைல்கல்லுக்கு வடக்காக தம்மென்னகொடெல்ல*

குளத்திற்கும் கிழக்கேயுள்ள பாறைகளுக்கும் இடையிலுள்ள கல்நிலத்தில் 125 கல்லறைகள் வரை காணப்படுகின்றன.

**11. குருகல்ஹின்ன - கல்லறைப் புதையல்**

அநுராதபுரம்திருகோணமலை வீதியில் 73 ஆவது மைல்கல்லுக்கு அப்பாலுள்ள மேட்டு நிலத்தில் 2 ஏக்கர் பரப்பளவில் இக்கல்லறை நிலப்பகுதி காணப்படுகிறது. இதை முதலில் 1885-86 ஆம் ஆண்டில் R.W. லீவர்ஸ் என்ற ஆங்கிலேயர் கண்டுபிடித்தார். 1970 இல் அகழ்ந்த ராஜா டி சில்வா இக்கல்லறைகளில் ஈமக் குடங்களையும், வெண்கலப் பொருட்களையும் கண்டெடுத்தார் (Silva, R. de. 1970).

**12. வடிகவேவா - கல்லறைப் புதையல்**

குருகல்ஹின்ன புதையல் மையத்திலிருந்து கிழக்கே இரு மைல் தொலைவில் காணப்படும் இக்கல்லறைப் புதையல் மையம் 1981 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இடத்தில் 15 புதையல்கள் வரை காணப்பட்டன. இவற்றில் சிலவற்றை 1981 இல் ராஜா டி சில்வா அகழ்ந்திருந்தார்.

**13. கொக்கெபே - கல்லறைப் புதையல்**

கொக்கெபே கல்லறைகள் பகுதியும் அதைத் தொடர்ந்த 'வடகஹகல்ஹின்ன' என்ற கல்மேடும் குருகல்ஹின்னவிலிருந்து சில மைல் தூரம் தென்கிழக்கே அமைந்திருக்கிறது. இதற்கு மேற்கே ஒரு மைல் தொலைவில் யான்ஓயா ஓடிக்கொண்டிருக்கிறது. ஆதி வரலாற்றுக்காலத்தில் இந்த ஆறு இம்மையத்திற்குச் சமீபமாக ஓடியதாக நம்பப்படுகிறது. இவ்விடத்தில் 15 ஏக்கர் பரப்பில் 200 வரையான கல்லறைப் புதையல்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில கல்லறைகள் ராஜா டி சில்வா, சி.க. சிற்றம்பலம் ஆகியவர்களால் அகழ்வாய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

**14. திவுல்வேவா - கல்லறைப் புதையல்**

கோன் வேவ சந்திக்கடுத்து 27 ஆவது மைல்கல்லில் மேற்கே திரும்பி இரண்டரை மைல் தூரத்தில் திவுல்வேவா கல்லறைகள் நடுவம் வருகிறது. 15 ஏக்கர் பரப்பில் பரந்து கிடக்கும் இந்த மையத்தில் 100 கல்லறைகள் வரை கண்ணுக்குத் தெரிகின்றன. ஒரு புதையல் குழியிலிருந்து இரும்பினாலான ஓர் ஏர்க்கொழு பெறப்பட்டது (சி.க. சிற்றம்பலத்திடமிருந்து தனிப்பட்ட தொடர்பு மூலம் பெறப்பட்ட தகவல்).



திவுல்வேவாவில் கண்ட கல்லறை.
*Picture source: Lanka Excursions.*

**15. றொபெவ - கல்லறைப் புதையல்**

யான்ஓயா ஆற்றுப்படுகை நிலங்களில் மற்றுமொரு கல்லறைப் புதையல் பகுதி ஜனவரி 1982 இல் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த மையம் திவுல்வேவாவிலிருந்து தெற்காக இரு மைல் தூரத்தில் உள்ளது. வருங்காலத்தில் இலங்கையின் வரலாற்று உதயகால, ஆதி வரலாற்றுக்காலக் கற்கைகளுக்கு 'யான்ஓயா கல்லறைப்புதையல் வளாகம்' (The Yan Oya Burial Complex) மிக முக்கியமான ஒரு தலமாக அமையும்.

இச்சந்தர்ப்பத்தில், குச்சவெளியிலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள திரியாயிக்குச் சமீபமாக உள்ள புதுவக்காட்டில் ஒரு கிணறு தோண்டியபோது நிலத்திலிருந்து 10 அடி ஆழத்தில் எலும்புகளையும், சாம்பலையும் கொண்ட ஒரு ஈமத்தாழி கண்டுபிடிக்கப்பட்டதை குறிப்பிட வேண்டும். யான்ஓயா நதியின் கழிமுகப் பகுதியில் திரியாய் தொல்லியல் மையத்திற்குச் சமீபமாக இது காணப்பட்டது முக்கியத்துவம் வாய்ந்தது. திரியாய் பாறையில் பழைய பிராமிக் கல்வெட்டுகளும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

**16. மச்சகம - கல்லறைப் புதையல்**

மிகப் பரந்த அளவினதான இந்த கல்லறைப் புதையல்களைக் கொண்ட மையம் 1979 ஆம் ஆண்டில் உதவி தொல்லியல் ஆணையாளராகவிருந்த P.M. ரத்னாயக்காவினால் அறிவிக்கப்பட்டது. கலாஓயா பெருங்கற் பண்பாட்டு வளாகத்தின் ஒரு பகுதியான மச்சகம, மரதன்கடவலஅநுராதபுர வீதியில் 66 ஆவது மைல்கல்லுக்கு மேற்கே மாநாவமரதன்கடவல வீதியில் 4 மைல் தொலைவில் உள்ளது. இங்கே புதையல்கள் மேடான நிலத்தில் காணப்படுகின்றன. இடுகாட்டைச் சுற்றிவர அரை வட்டமானதொரு இயற்கை மேடு கிழக்குப் பக்கத்தில் வடக்குத் தெற்காக ஓடுகிறது. இம்மேட்டுக்கு அப்பால் மச்சகம குளமும், நெல் வயல்களும் காணப்படுகின்றன. இடுகாட்டில் 100 கல்லறைப் புதையல்கள் வரை காணப்படுகின்றன. திறந்து கிடந்த ஒரு கல்லறையினுள்ளே கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகளும், நிலத்தில் படிந்த எலும்புகளும், அதன் முன்னால் இரண்டு வரிசையாக அடுக்கப்பட்ட சிறு மட்குடங்களும் காணப்பட்டன.

**17. அநுராதபுரம் கெடிகே - குடியிருப்புப் பகுதி**

மல்வத்து ஓயாவின் கரையில் அமைந்துள்ள அநுராதபுரம் நகரை, அந்த நதி வடமேற்குக் கரையோடு இணைக்கிறது. 1972 ஆம் ஆண்டில் கலாநிதி சிரான்

தெரணியகல அநுராதபுரம் கெடிகே பகுதியில் முன்னெடுத்த தொல்லியல் அகழ்வாய்வுகளின் போது, ஆகப்பழமையான ஆதி இரும்புக்காலக் குடியிருப்பு அடுக்கு (Stratum 3A) கண்டறியப்பட்டது. இந்த அடுக்கில் பெருங்கற்காலத்திற்கே உரிய தனித்துவமான கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. அதற்கு உடனடி மேலிருந்த மட்பாண்டங்களில் குறியீட்டு எழுத்துகளும் (Graffiti Symbols), சிலவற்றில் பிராமி எழுத்துகளும் காணப்பட்டன. அதே மட்டத்தில் நெல் உமிகளும், விலங்குகளின் எலும்புகளும் (உணவிற்காக உட்கொள்ளப்பட்டவை) காணப்பட்டன (Deraniyagala, S. 1972b: 48-169).

**18. கதிரவெளி - கல்லறைப் புதையல்**



கதிரவெளி - குழம்பிய கல்லறையின் பக்கக்கற்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்றுப் பிரிவில், மகாவலி கங்கையின் கழிமுகக் கடற்கரை ஓரமாக அமைந்துள்ள இப்பகுதி 'குரங்கு படையெடுத்த வேம்பு' என அழைக்கப்படுகின்றது. சிறு மரங்களைக் கொண்ட மணற்தரையான இப்பிரதேசம் மழைக்காலங்களில் சதுப்பு நிலமாகக் காணப்படும். இதற்குச் சமீபமாக சிறிய குளங்களும், நெல்வயல்களும் காணப்படுகின்றன. இவ்விடத்தைச் சூழ மூன்றரை அடி உயரமான வெட்டாத கற்கள் காணப்படுகின்றன. இங்கே காணப்படும் குழம்பிய கல்லறையில் மேல் மூடி காணப்படவில்லை.

**19. இப்பன்கட்டுவ - கல்லறைப் புதையல்**

குருநாகல்திருகோணமலை வீதியில் 90 ஆவது மைல்கல்லுக்குச் சமீபமாக தம்புல்லவிலிருந்து இரு மைல் தொலைவில் இப்பன்கட்டுவ இடுகாட்டுப் பிரதேசம் காணப்படுகிறது. இந்த மையத்திற்கு அருகாமையில் வடக்குமேற்காக ஓடும் மல்ஓயா, கலாஓயாவுடன் இணைகிறது. 550 அடி உயரத்திலிருக்கும் இப்பிரதேசத்தில் இரு குளங்களும் நெல்வயல்களும் காணப்படுகின்றன. வீதியின் இடது பக்கத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவான தனியார் நிலத்தில் வரலாற்று உதயகாலக் கட்டத்திற்கு உரியதாகக் கருதப்படும் இடுகாட்டில் பலகைகளாக வெட்டிய பெரிய கற்களைக் கொண்டு பெட்டி வடிவில் நிர்மாணிக்கப்பட்ட சமாதிகள் 1970 ஆம் ஆண்டில் தொல்பொருள் திணைக்களத்தினரால் இனங்காணப்பட்டன. அதே ஆண்டில் ராஜா டி சில்வா 20 கல்லறைகளை வெளிக்கொணர்ந்தார். 1980 ஆம், 1982 ஆம் ஆண்டுகளின் மேலாய்வுகளில் வெளிப்படுத்தப்பட்ட கல்லறைகளில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் மற்றும் சிவப்பு மட்பாண்டங்களை நாம் கவனித்தோம்.

**20. பின்வேவா - கல்லறைப் புதையல்**




பின்வேவாவில் வெளிப்படுத்தப்பட்ட கல்லறை. Image Source: Tharaka Dias.

குருநாகல் மாவட்டத்தில் மாகோவிலிருந்து தென்கிழக்காக, புராதன நகரமான யாப்பகுவாவிலிருந்து ஒரு மைல் தொலைவில் இந்தக் கல்லறை இடுகாடு காணப்படுகிறது. உயர்ந்த மேடான நிலத்தில் 15 ஏக்கர் பரப்பில் இது அமைந்திருக்கிறது. இங்கே காணப்படும் கல்லறைகள் அளவில் பெரியவை. ஒரு கல்லறை மூடிக்கல் 6 அடி 4 அங். x 3 அடி 3 அங். அளவைக் கொண்டிருந்தது. இங்கே 1965-66, 1966-67 ஆம் ஆண்டுகளில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்த ராஜா டி சில்வா அகழ்வுகளை மேற்கொண்டிருந்தார். இங்கே சில கல்லறைகளினுள்ளே தாழிப்புதையல்கள் காணப்பட்டன. அவற்றினுள் எலும்புகள், மட்பாண்டங்கள், இரும்பு, செம்புப் பொருட்கள் காணப்பட்டன. இங்கு காணப்பட்ட கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் பொம்பரிப்புத் தாழிகளை ஒத்திருந்தன (Archaeology Dept Reports, 1965-66: 104; 1966-67: 78).

**21. கல்அத்தர - கல்லறைப் புதையல்**

இலங்கையின் ஈரமான தாழ்வான மலைப்பகுதியில் உள்ள இக்கல்லறை இடுகாடு கேகாலை மாவட்டத்தில் அஸ்மதால மலைப்பகுதியில் உள்ள ரப்பர் தோட்டத்தினுள்ளே கடல் மட்டத்திலிருந்து 1000 அடி உயரத்தில் உள்ளது. இந்த நடுவம் 1967 இல் கலாநிதி

கொடகும்புரவினால் அகழ்வாய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் குடங்கள், எலும்புகள், இரும்பு ஆயுதங்கள், உலோக அணிகலன்கள் என்பன காணப்பட்டன. பெரிய குடங்களினுள்ளே பல சிறிய குடங்கள் வைக்கப்பட்டிருந்தன (Archaeology Dept Reports, 1966-67: 64). 1977 ஆம் ஆண்டில் இந்த நடுவத்தில் நமது மேலாய்வில் 16 கல்லறைப் புதையல்களை இனங்காணக்கூடியதாக இருந்தது.

**22. மக்கேவித்த - குழி அடக்கம்**

இலங்கையின் தாழ்நில ஈரமண்டலத்தில் காணப்பட்ட இக் குழி அடக்கம் கொழும்பிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள மக்கேவித்த கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கிருந்த ஒரு கிராமவாசி வாழைமரம் நடுவதற்காக நிலத்தைத் தோண்டியபோது இக் குழி அடக்கம் காணப்பட்டது. இதிலிருந்த கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் பொம்பரிப்பு மட்பாண்டங்களை ஒத்திருந்தன.

## தொகுப்புரை

### அடக்கம் செய்யும் நடைமுறைகள்

இலங்கையில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் முக்கியமான மூன்று வகைகள்: நீளக்கிடத்திய குழி அடக்கம், தாழிப் புதையல், கல்லறை அடக்கம் என்பன. இவற்றில் இலங்கையின் வடக்கு முனையில் நீளக்கிடத்திய அடக்கம் அதிகமாக நடைமுறையில் உள்ளது. புதிய கற்காலத்தில் இந்தியத் தீபகற்பமெங்கும் நீளக்கிடத்திய புதையல்முறை நடைமுறையில் இருந்தது. ஆனால் பெருங்கற்காலத்தில் தென்னிந்தியாவைக் காட்டிலும் தென்தெக்காணத்தில் இந்தப் புதையல்முறை அதிகம் கடைப்பிடிக்கப்பட்டது. இதற்கான காரணம் அங்கிருந்த வலுவான புதிய கற்காலவெண்கலக்காலப் பாரம்பரியமாக இருக்கலாம். இலங்கையில் நீளக்கிடத்திப் புதைக்கப்பட்டவர்கள் மேற்குகிழக்கு திசை நோக்கி (காரைநகர், ஆனைக்கோட்டை, மாந்தை) அடக்கம் செய்யப்பட்டார்கள்.

தூய்மையான தாழிப்புதையல் வகை முக்கியமாக இலங்கையின் வடமேற்குப் பகுதியில் பொம்பரிப்பில் காணப்படுகிறது. ஒரே குழியில் ஒன்று அல்லது பல தாழிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. மாமடுவவில் தாழிப் புதையலைச் சுற்றிவர ஒரு கல்வட்டம் காணப்படுகிறது. புதையல் தாழியை மூடிய நிலையில் 'மூடிக்கல்' காணப்படுகிறது. இவ்வகையான மூடிக்கற்கள் சித்தாறுதாமிரபரணித் தாழ்நிலங்கள் வழியாக குற்றாலம், காயல், கொற்கை, வலியங்கோட்டை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. பொம்பரிப்பு, மக்கேவித்த ஆகிய இடங்களில் நிலத்தில் தோண்டிய குழிகளினுள்ளே தாழிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. பின்வேவா, கில்அதற ஆகிய கல்லறைகளினுள்ளே தாழிகள் புதைக்கப்பட்டிருக்கின்றன. இக்கல்லறைகள் பெரும்பாலும் ஒரு கல் மேசையால் மூடப்பட்டிருக்கும்.

நான்கு கல்தட்டுகளை ஒரு பெட்டி வடிவில் நிலத்தில் புதைத்து அதை ஒரு கல் மேசையால் மூடிவிடுவார்கள். மேல் மூடி நில மட்டத்தில் இருக்கும். இலங்கையில் இவ்வகையான கல்லறைகள் வடமத்திய சமதரைகளில் அதிகம் காணப்படுகின்றன.

சில இடங்களில் இந்தக் கற்கட்டுமானம் நிலத்தின் மேலே ஒரு சிறிய வீடுபோல நிற்கும். இவ்வகையான கட்டுமானம் 'முனியறை' (Dolmenoid Cist) என அழைக்கப்படுகிறது.

### பெருங்கற் பண்பாட்டின் பரவல்

தென்தெக்காணத்திலும் தென்னிந்தியாவிலும் பெருங்கற் பண்பாட்டுக் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களின் பரவல் பாங்கு பிற்காணும் அம்சங்களைக் காட்டுகிறது.

இரும்பை உபயோகிக்கும் பெருங்கற்கால கறுப்புசிவப்பு பண்பாடு ஊடுருவும் தன்மை கொண்டது. கர்நாடகத்தில் இப்பண்பாடு ஹல்லூரில் கி.மு. 945ஆம் ஆண்டில் புதியகற்காலவெண்கலக்காலங்களை ஊடுருவி வெற்றி கண்டது. அந்தக் காலம் கி.மு. 1200 ஆகவும் இருக்கலாம் (Nagaraju Rao, 1979:324).★ அந்த மையத்திலிருந்து இப்பண்பாடு ஆந்திரம், கேரளம், தமிழ்நாடுகளின் கீழ்வளமான வண்டல் படிந்த சமவெளிகளுக்குப் பரவியது.

கர்நாடகத்திலிருந்து இப்பண்பாட்டுப் பரவல் தெற்கே இரு வழிகளில் பரவியிருக்கிறது. ஒரு வழி தென்னிந்தியாவின் மத்திய மலைப் பகுதிகளினூடாக கேரள, தமிழ்நாடுகளின் வளமான சமவெளிகளுக்குப் பரவியமை. இவற்றில் முக்கியமானவை தூர தெற்குவரை வைகை ஆற்று நிலக்கரை வழியாகவும் (மதுரை மாவட்டம்), சித்தாறுதாமிரபரணியின் வளமான பாதைகள் வழியாகவும் ஓடிச்சென்ற (திருநெல்வேலி மாவட்டம்) தாழியடக்க ஓடைகள் ஆகும். அகச்சுற்றுச் சான்றுகளின்படி தென்தமிழ்நாட்டின் தாழிப்புதையல்கள் வடகிழக்குத் தமிழ்நாட்டின் தாழிப் புதையல்களைக் காட்டிலும் ஒப்பீட்டில் பழமையானவை.

கர்நாடகத்திலிருந்து வந்த மற்றுமொரு பெருங்கற் பண்பாட்டுப் பரவல் பாதை வடக்குத் தமிழ்நாட்டின் - தர்மபுரி, சேலம், வடஆர்க்காடு போன்ற புறப்பகுதிகளுக்குப் பரவியது. அங்கிருந்து இப் பெருங்கற் பண்பாடு கிழக்கே கடற்கரைச் சமநிலங்களுக்குப் பரவியது.

I

மேலே கூறப்பட்டுள்ள கர்நாடகத்தின் பெருங்கற்காலப் பண்பாட்டின் ஆரம்ப காலங்கள் சமீபகாலங்களில் கதிரியக்கக் கரிம ஆய்வுகளைக் கொண்டு மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளன. கர்நாடகத்தில் ஹல்லூர், குமரனஹல்லி, தடஹனகல்லி, மாஸ்கி ஆகிய பல மையங்களிலிருந்து இப்பண்பாடு தென்னிந்திய நாடுகளுக்கு, கி.மு. 1900-1500 ஆண்டுக் காலங்களில் பரவியிருக்கிறது (Moorti, U.S. 1994; Possehl, G.L. 1994; Possehl & Guntupalli 1999).

RADIOCARBON DATES FROM MEGALITHIC BURIALS, MASKI, KARNATAKA – 2015

| Lab code | Provenance | 14C age (BP) | Calibrated date |
|---|---|---|---|
| ISGS A2282 | MARP79B no. 1 | 2955 15 | 1222–1117 cal BC |
| ISGS A2283 | MARP79B no. 1 | 3070 20 | 1407–1276 cal BC |
| ISGS A3229 | MARP79B no. 6 | 3040 20 | 1389–1225 cal BC |
| ISGS A3230 | MARP79B no. 7 | 3510 20 | 1895–1756 cal BC |

Reproduced from Radiocarbon, Vol. 56, 2015, Page 800, University of Arizona.

ஆந்திராவின் மையப்பகுதியில் இப்பெருங்கற் பண்பாட்டுப் பாரம்பரியம் விரைவில் வழக்கிழந்து போய்விட்டது போலத் தெரிகிறது. அகழ்வுகளில் அமராவதி ஸ்தூபத்தின் 7 அடிக்கும் கீழே தாழிப்புதையல் காணப்பட்டது. அதுபோல யேலேஷ்வரம் ஸ்தூபங்களின் கீழே கல்லறைப் புதையல்கள் காணப்பட்டன (Khan, 1963: 56). இவற்றை ஆதாரமாகக் கொண்டு கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் கிருஷ்ணா நதி தாழ்நிலப் பகுதிகளில் பெருங்கற் புதையல் பழக்கம் முடிவிற்கு வந்துவிட்டது என எண்ண வேண்டியுள்ளது.

பெருங்கற் பண்பாட்டுடன் தொடர்புடைய சில குறிப்பிட்ட அம்சங்கள்: இரும்பின் தொழில்நுட்பம், வளையும் சில்லு, இரும்புநுனி பொருத்திய ஏர் (ஏர்க்கொழு), நெல் பயிரீடு, குள நீர்ப்பாசனம், ஆரம்பகால கறுப்புசிவப்பு மட்பாண்டம் என்பன. கி.பி. முதலாம் நூற்றாண்டில் கறுப்புசிவப்பு மட்பாண்டம் பிரபலம் இழந்து அதற்குப் பதிலாக உரோம மட்பாண்டங்கள் இப்பிராந்தியங்களில் பிரபலமாயின.

II

இலங்கையின் வடமேற்குப் பகுதியிலிருக்கும் ஈமப்புதையல் கலாசாரம் (தாழி - கல்வட்டம்) பாண்டிய நாட்டின் வைகை - தாமிரபரணிப் பகுதிகளிலிருந்து வந்திருக்கிறது என்பது நிச்சயமாகிறது. 'தம்பபண்ணி' என்ற பெயர் திருநெல்வேலியிலுள்ள முக்கியமான நதிக்கும், வடமேற்கு இலங்கையில் தெதுறு ஓயா, கலா ஓயா நதிகள் பாயும் பிரதேசத்திற்கும் கொடுக்கப்பட்ட பெயர். இலங்கையின் பாளி இலக்கியங்களின்படி 'தம்பபண்ணி' இலங்கையில் வடஇந்தியர்கள் வந்து குடியேறிய முதல் உறைவிடமாகும். இந்த வடஇந்தியர்கள் மதுரையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள் (Dipavamsa; Mahavamsa, vii: 49-50, 72-73).

திருநெல்வேலியிலிருந்து முதலில் வடமேற்கு இலங்கைக்கு வந்தவர்கள் அவ்வப்போது வந்த பருவகால முகாம் மக்களாக இருக்கலாம். இவ்வாறு அடிக்கடி வந்தவர்கள் பொருத்தமான நுண்ணிய சுற்றுச்சூழல் மண்டலங்களில் நிரந்தரமான குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். கடற்கரைக்குச் சமீபமாகக் காணப்படும் ஆதி ஈமத்தாழிப் புதையல்கள், ஆரம்பகால குடியேற்றங்களின் சுற்றுச்சூழல் கவனிப்புகளை எடுத்துக்காட்டுகின்றன. கடலிலிருந்து பெற்ற முத்து, சங்கு ஆகிய கடல்வளங்கள் அப்பகுதியில் அவர்களைக் குடியேறச் செய்திருக்கலாம்.

ஆதிகால இலங்கையில் ஆற்றங்கரைகளே மக்கள் நாட்டின் உட்பகுதிக்குச் செல்லக்கூடிய வழிகளாக அமைந்தன. ஈமப்புதையல் மையங்களும், பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டக் குடியிருப்புகளும் ஆற்றங்கரையிலேயே காணப்படுவது அநுராதபுரம் கெடிகே மற்றும் ஏனைய அகழ்வுகளில் வெளிக்கொணரப்பட்டிருக்கிறது. இலங்கையின் ஆரம்பகால குடியிருப்புகளில் பெருங்கற்கால கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் என்பன நாகர்களோடும், வடஇந்தியக் குடியிருப்பாளர்களோடும் தொடர்புபடுத்தும் நாகதீப, கல்யாணி, தம்பபண்ணி, மகாதீர்த்த, அநுராதகம, உபதிஸகம, உருவெல, விஜிதபுர, கொனகம ஆகிய இடங்களிலெல்லாம் பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் காணப்படுவது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்வுகளல்ல.

III

இலங்கையின் வடமத்திய, வடகிழக்குப் பகுதிகளில் காணப்படும் கல்லறை அடக்கங்கள் வடகிழக்கு வழியாகப் பரவியது எனக் கொள்ளலாம். தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து ஆந்திராவின் சித்தூர் மாவட்டம் வரை பரந்து காணப்படும் கிழக்குக்கரைப் பகுதியில் கல்லறை அடக்கங்களே பரவலாகக் காணப்படுகின்றன. இக்கல்லறை அடக்கப் பண்பாடு அங்கிருந்தே இலங்கையின் கிழக்கு வழியாக வடமத்திய பகுதிக்குப் பரவியுள்ளது.

தமிழ்நாட்டின் கிழக்குக்கரையை அண்டிய காவேரி நதி வளப்படுத்திய நிலத்தில் கல்லறை அடக்கங்கள் காணப்படுகின்றன. அங்கிருந்து இப்பண்பாடு வடகிழக்கு இலங்கையை அடைந்து யான் ஓயா நதிக்கரை வழியாக வடமத்திய இலங்கை வரை பரவியிருக்கிறது. முதலில் கூறியது போல முக்கியமான கல்லறை அடக்கங்கள் தமென்னகொடெல்ல, குருஹல் ஹின்ன, வடிகவேவா, கொக்கெபெ, திவுல்வேவ, றொபெவ ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

*IV*

இந்தச் சந்தர்ப்பத்தில் நமக்கெழும் கேள்வி என்னவெனில் இந்தியத் தீபகற்பத்திலிருந்து இரும்பு உபயோகிக்கும் மக்களின் திரளான சனவரத்து இங்கே ஊடுருவியதா அல்லது இங்கிருந்த கற்கால மக்களில் ஒரு பகுதியினர் மேம்பட்ட கலாசாரக் கூறுகளைக் கொண்ட பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டப் பண்பாட்டை மேற்கொண்டார்களா? என்பதுதான். மானிடவியலாளர்களையும் இந்தக் கேள்வி எழுப்பியுள்ளது: இலங்கையின் இரும்புக்கால குடியிருப்பாளர்கள் உள்நாட்டவர்களா? அல்லது இந்திய நாட்டிலிருந்து வந்த இரும்பு உபயோகிக்கும் மக்களா?

இதற்குச் சரியான விடையை ஊகிக்கவே இயலும். இலங்கையில் இந்த இரு நிலைமைகளும் இருந்திருக்கின்றன எனக் கொள்ளுவதே சரியான விடையாக இருக்கும். தீபகற்ப இந்தியாவிலிருந்து வந்து பெருங்கற் பண்பாட்டைக் கடைப்பிடித்து வந்த மக்கள் தங்களது இரும்புக் கருவிகளுடன் குள நீர்ப்பாசன விவசாயத்தில் ஈடுபடுவதைக் கண்ட உள்நாட்டுக் கற்கால மக்கள், தாங்களும் அந்தப் பண்பாட்டைக் கடைப்பிடித்தார்கள் எனக் கொள்ளுவதே பொருத்தம்.

*V*

இலங்கையின் பாளி இலக்கியங்கள் பதிவு செய்திருக்கும் இயக்கர், நாகர், புலிந்தர், விஜயன்குவேனி கதைகள், பாண்டுகாபயனுக்கும் இயக்கருக்கும் இடையிலான தொடர்புகள் என்பன இரும்புக்கால மக்களுக்கும், கற்கால மக்களுக்கும் முன்னொரு காலத்திலிருந்த தொடர்புகளின் மரபு ஞாபகங்கள் ஆகும். இவை பின்னர் நாட்டுப்புற மரபுக் கதைகளாகத் தொடரப்பட்டிருக்கலாம். பாண்டுகாபயனின் கதை வேறு வழியாக வந்த சம்பிரதாயம். இது சிங்கள பௌத்தர் அல்லாத ஒரு மக்கள் கூட்டத்தினரிடமிருந்து உருவாகியிருக்க வேண்டும் (Perera, 1974: 145).

## திருப்புமுனை ஐந்து

## கலாநிதி கென்னெத் கென்னெடி: இலங்கையின் பெருங்கற் கட்டடக் கலைஞர்களின் உடல்சார் மானிடவியல்

*The Physical Anthropology of the Megalithicbuilders of Sri Lanka*


KENNEDY, K.A.R. & DERANIYAGALA, S.U. (1989): Fossil Remains of 28,000 Year Old Hominids from Sri Lanka, Current Anthropology, Vol. 30, No. 3: 394-399.

LUKACS, J.R. & KENNEDY, K.A.R. (1981): 'Biological Anthropology of Human Remains from Pomparippu' in Excava tions of Iron Age Burials at Pomparippu 1970, Ancient Ceylon 4: 97-142.

KENNEDY, K.A.R (1975): The Physical Anthropology of the Megalithicbuilders of South India and Sri Lanka, ANU Press, Canberra.

KENNEDY, K.A.R. (1965): Human Skeletal material from Ceylon with an analysis of the island's prehistoric and contempo rary populations, Bulletin of British Museum, No. II: 135-213.




கலாநிதி கென்னெத் கென்னெடி அமெரிக்காவில் கோர்னெல் பல்கலைக்கழகத்தில் உயிரின மானிடவியல் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். இவர் தென் ஆசிய மக்களின் மானிடவியல் கற்கைத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர். பல தடவைகள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வருகை தந்து வரலாற்றிற்கு முற்பட்ட கால மக்களினதும், பெருங்கற்கால மக்களினதும் உடல்சார் மானிடவியல் ஆய்வுகளில் ஈடுபட்டவர். மத்திய இந்தியாவில் நர்மதாவில் கண்டெடுக்கப்பட்ட கபாலத்தை ஆராய்ந்து, அது ஹோமோ இரக்டஸிற்கும் ஹோமோ சேப்பியன்ஸிற்கும் இடைப்பட்ட ஒரு மனிதனின் கபாலம் என அறிவித்தவர். 1970 ஆம் ஆண்டில் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தினர்

பொம்பரிப்பில் அகழ்வாய்வுகளை நிகழ்த்தியபோது அங்கே கண்டெடுத்த எலும்புகளை ஆராய்ந்து தனது முடிவுகளைத் தந்தவர். உயிரின மானிடவியல் துறையில் உலகப் புகழ்பெற்ற மேதை இவர்.

---

தென் ஆசியாவில் உடற்கூறியல் ரீதியாக நவீன ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் மிகப் பழமையான புதைப்படிவ எலும்புகள் காணப்படுவது இலங்கையில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள பட்டதொம்ப லென குகையில்தான். இந்தக் குகையில் நீண்ட காலமாக மனிதர்கள் வசித்த சான்றுகள் காணப்படுகின்றன. இதைத்தவிர கித்துல்கலவில் உள்ள பெலி லென குகை, பாகியன் லென குகை மற்றும் பெல்லன்பாந்தி பலஸ்ஸ ஆகிய இடங்களிலிருந்தும் பண்டைய மனிதர்களின் எலும்புகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

1982ஆம் ஆண்டில் தொல்லியலாளர் சிரான் தெரணியகல பட்டதொம்ப லென குகையில் ஆழமாக அகழ்ந்தபோது அடியில் 7C மட்டத்தில் மனித எலும்புகளையும், 17 நுண்கல் ஆயுதங்களையும், எரிந்த கரித்துண்டுகளையும் கண்டெடுத்தார். இவைகள் கதிரியக்கக் கரிம ஆய்வுகளுக்கு அனுப்பப்பட்டு அவற்றில் பழமையானவை இ.மு. 28,500 ஆண்டுகளுக்கு (இற்றைக்கு முன்னர்) உரியனவாகக் கணிக்கப்பட்டன. 1987ஆம் ஆண்டில் பேராசிரியர் கென்னெடி இந்தக் குகையைச் சென்று பார்வையிட்டு, அங்கிருந்து பெறப்பட்ட குவார்ட்ஸ், சேட் கற்களினாலான நுண்கல் ஆயுதங்களையும் ஆய்வு செய்து எலும்புகளையும் பரிசோதனை செய்தார். இவற்றில் ஏழு பெரியவர்களினதும், ஒரு குழந்தையினதும் எலும்புகள் அடையாளம் காணப்பட்டன. இது அக்காலத்தில் இடம்பெற்ற பகுதியளவு மற்றும் இரண்டாம் நிலை அடக்கம் செய்யும் நடைமுறைகளை (Fractional and Secondary Burial Practices) எடுத்துக்காட்டின (Kennedy & Deraniyagala, 1989: 394-399).

இலங்கையிலிருந்து பெறப்பட்ட மனிதப் பேரினப் படிமங்கள் தென் ஆசியாவின் தொல்மானிடவியல் ஆய்விற்கும், மேல் பிளைஸ்டோசீன் காலத்தைய நவீன ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் புவியியல் பரவலைக் கணிப்பிடவும் உதவுகின்றன. பட்டதொம்ப லெனவிலிருந்து பெறப்பட்ட 28,500-28,000 ஆண்டுகள் பழமையான மனித எலும்புகளும், அதன் அகழ்வில் சற்று மேல் மட்டத்திலிருந்து பெறப்பட்ட 16,000 ஆண்டுகள் பழமையான எலும்புகளும், கித்துல்கல பெலி லெனவிலிருந்து பெறப்பட்ட 12,000 ஆண்டுகள் பழமையான எலும்புகளும் பழைய கற்காலத்தின் பின்னர் ஆசியாவின் வெப்பமண்டலப் பகுதிகளில் இடம்பெற்ற உயிரியல் மாற்றங்கள் பற்றிய தரவுகளை அறிந்துகொள்ள உதவுகின்றன (Kennedy & Deraniyagala, 1989: 394-399).




இலங்கையில் பண்டைய மனிதர்களின் புதைபடிவ எலும்புகள் காணப்படும் குகைகள்.

புவியமைப்பியல் ரீதியாக இலங்கை இந்தியக் கண்டத் தகட்டிலேயே அமைந்திருக்கிறது. இந்தியப் பெருநிலத்தின் தென் முனையிலிருந்து இலங்கை இருபது மைல் நீளமான ஓர் ஆழம் குறைந்த கடலினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்பெருநிலத்தின் பிந்திய கற்காலக் கலாசாரங்களுடன் இலங்கை நெருங்கிய தொடர்பு வைத்திருந்திருக்கிறது. இந்த நெருங்கிய கலாசாரத் தொடர்பு இரும்புக்காலத்திலும் தொடர்ந்ததைக் காணமுடிகிறது. தென்னிந்தியாவில் காண்பது போன்ற இரும்புக்காலப் பெருங்கல் நினைவுச் சின்னங்களும், கல்வட்டங்களும் இலங்கையின் அநுராதபுரம், பதவிகம்பொல, கதிரவெளி போன்ற இடங்களில் காணப்படுகின்றன (Kennedy, 1975: 24).

இந்தியாவில் காணப்படும் பெருங்கற் பண்பாட்டு ஈமப்புதையல்களில் 99 சதவிகிதமானவை தென்னிந்தியாவிலேயே காணப்படுகின்றன. இக்காலத் திராவிட மொழிகளைப் பேசும் மக்களின் முன்னோடிகளே இவற்றின் கர்த்தாக்கள் என்ற கருத்து ஆதிகாலத்திலிருந்தே உணரப்படுகிறது. ஆரம்பகால ஆய்வாளரான பிலிப்ஸ், சேலம் மாவட்டத்தில் உள்ள புதைகுழி மேடுகளில் இறந்தவர்களைப் புதைத்தவர்கள் இந்தோஆரிய மொழிகளைப் பேசும் மக்களுக்கு முற்பட்டவர்களாவர் எனக் கூறியுள்ளார். இந்தோ ஆரியர்கள் இறந்தவர்களை எரித்தவர்களே ஒழிய

புதைத்தவர்கள் அல்ல எனவும் குறிப்பிடுகிறார் (Phillips, 1873: 226, 228).

1915ஆம் ஆண்டில் ரிஸ்லியின் 'இந்திய மக்கள்' என்ற மானிடவியல் பகுப்பாய்வில் திராவிட மொழிகளைப் பேசும் மக்கள் இந்தியாவின் ஆரம்பகாலக் குடிமக்களின் நேரடி வம்சாவளியினர் என்றும், இவர்களே பெருங்கற் பண்பாட்டின் கர்த்தாக்கள் என்றும் கூறப்படுகிறது (Risley 1915).

ஆதிச்சநல்லூரில் கண்டெடுத்த இரு கபாலங்களை ஆராய்ந்த எலியட் சிமித், ஒன்றை முதுஆஸ்திரலோயிட் எனவும், மற்றதை திராவிட மக்களின் முன்னோடிகளான மத்தியதரை மக்கள் எனவும் இனங்காண்கிறார் (Smith 1927: 130, 136).

ஆதிச்சநல்லூர் அகழ்வுகளில் கண்ட இரு கபாலங்களை ஆராய்ந்த இலண்டன் பல்கலைக்கழக உடற்கூற்றியலாளர் ஸக்கர்மன் (S. Zuckerman, Anatomist, University College, London) தரும் தகவல் இது:

"ஆதிச்சநல்லூரில் கண்ட முதலாம் இலக்கக் கபாலம் (Adichanallur No. 1) இன்றைய ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களை நிகர்த்த தென்னிந்தியாவின் பழங்குடியினரின் கபாலம். இது ஹக்ஸ்லியின் ஆஸ்திரேலியதிராவிட உறவுக் கருத்தை ஆதரிக்கிறது. இந்தியாவின் திராவிடருக்கு முந்திய இன மக்கள் ஆஸ்திரேலியர், வேடர் மற்றும் தென்னிந்தியக் காட்டுப் பழங்குடியினராவர்.

ஆதிச்சநல்லூர் இரண்டாம் இலக்கக் கபாலம் (Adichanal lur No. 2) திராவிடக் கபாலம். ஆகவே ஆதிச்சநல்லூர் புதையல்கள் திராவிட மக்களின் வருகையின் பின்னரே நடைபெற்றிருக்கின்றன. ஆதிகால மனிதன் இந்தியா வழியாகவே ஆஸ்திரேலியாவை அடைந்தான் என்பதற்கு ஆதிச்சநல்லூர் கபாலங்கள் சான்றாகின்றன (Zuckerman, S. 2000: 1920)."

ஒரு மொழியைப் பேசும் மக்கள் அனைவரும் மானிடவியல் ரீதியாக ஒரே வகையான உடற்கூறுகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டியதில்லை. மனிதர்களின் கபால அளவை மானிடவியலாளர்கள் 1. நீளவடுவ மண்டை (Doli chocranic), 2. அகன்ற மண்டை (Brachycranic), 3. நடுத்தர மண்டை (Mesocranic) என மூன்று வகைகளாகப் பிரித்திருக்கிறார்கள். இதில் ஒவ்வொரு இன மக்களும் ஒவ்வொரு வகையான கபால அளவுகளைக் கொண்டிருக்கிறார்கள் என முன்னர் கூறப்பட்டது. திராவிட மக்கள் நீளவடுவத் தலையைக் கொண்டவர்கள் எனக் கூறப்பட்டது. சமீபகாலங்களில் தலை அளவை மட்டும் கொண்டு ஒரு மொழி சார்பான இனத்தை அடையாளம் காண இயலாது என மேனாட்டு மானிடவியலாளர்கள் கருதுகிறார்கள் (Kennedy, K.A.R. 1975: 69).

தென்னாசியாவில் பெருங்கற் பண்பாட்டுச் சின்னங்களை எழுப்பியவர்கள் அவற்றை தொலைதூரத் தொன்மையில் எழுப்பவில்லை. வரலாற்று உதயகாலத்திற்குச் சற்று முன்னதாகவே அமைத்திருக்கிறார்கள். திராவிட மொழிகளின் தோற்றம் இப்பெருங்கற் சின்னங்களின் தோற்றத்துடன் இணைந்து தோன்றியிருக்கிறது என்பது ஒரு பாதுகாப்பான மற்றும் நியாயமான அனுமானமாகத் தெரிகிறது (Kennedy, K.A.R. 1975: 69).

### பொம்பரிப்பு எலும்பு ஆய்வு முடிவுகள்

'பொம்பரிப்பில் நாம் கண்ட எலும்புத் தொடர் ஒரு சிறிய கல்லறை மக்கள் தொகையை மட்டுமே காட்டுகிறது. இதன் பெரும்பகுதி இன்னும் அகழ்வாய்வு செய்யப்பட வேண்டியுள்ளது. பண்டைய சனத்தொகையின் உயிரின மானிடவியல் (Biological Anthropology) அம்சங்கள் அனைத்தையும் பரந்த அளவிலான அகழ்வாய்வுகள் மூலமே வெளிக்கொணர முடியும்' (Lukacs & Kennedy, 1981: 106).

1. மத்திய கற்கால பெல்லன்பாந்திபலஸ்ஸவில் வாழ்ந்த மக்களுக்கும் பொம்பரிப்பு இரும்புக்கால மக்களுக்கும் ஓரளவான உயிரியல் தொடர்புநிலை (Some Level of Biological Affinity) காணப்படுகிறது (Lukacs & Kennedy, 1981: 107).

2. 'இரும்புக்காலத்தில் இந்தப் பிரதேசத்தில், குறிப்பாக இலங்கையின் மேற்குக் கரைப்பகுதிகளில் புதிய, வியத்தகு வகையில் வேறுபட்ட உடற்கூறியல் பண்புகள் கொண்ட மக்கள் அறிமுகப்படுத்தப்பட்டார்கள் என்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை.' ('There is no evidence of an introduction of new and strikingly different anatomical traits into this part of the world nor, for that matter, into the western coastal region of Sri Lanka') (Lukacs & Kennedy, 1981: 107).

3. பொம்பரிப்பில் கண்ட மக்களின் பற்கள் இலங்கையின் வேடர்களின் பற்களை ஓரளவு ஒத்திருக்கின்றன (Lukacs & Kennedy, 1981: 107). கி.மு. 1000 ஆண்டுக் காலம்வரை மாமிசம் புசித்து வந்த மக்களின் பற்கள் வேடர்களின் பற்களை ஒத்திருப்பதில் ஆச்சரியமில்லை. மக்கள் தாவர உணவு புசிப்பவர்களாக மாறிய பின்னரே பற்களின் அமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்.

பகுதி -3

## திருப்புமுனை ஆறு

### கலாநிதி விமலா பெக்லி: பொம்பரிப்பில் இரும்புக்கால பெருங்கற் தாழிப்புதையல்கள்



கலாநிதி விமலா பெக்லி

*BEGLEY, VIMALA* **(1967)**: *Archaeological Exploration in Northern Ceylon, Expedition Summer* **1967**, *University of Pennsylvania, Philadelphia.*

*BEGLEY, VIMALA* **(1973)**: *'Protohistoric Material From Sri Lanka (Ceylon) and Indian Contacts', Ecological Backgrounds of South Asian Prehistory, ed. Kenneth A.R. Kennedy and Gregory Possehl, South Asian Occasional Papers and Thesis, Cornell University, pages* **190-196.**

*BEGLEY, VIMALA* **(1981)**: *Excavations of Iron Age Burials at Pomparippu* **1970**, *Ancient Ceylon, No.* **4: 49-95.**

---

இந்தியாவில் நியூ டெல்லியைப் பிறப்பிடமாகக் கொண்ட விமலா சஹானி அங்கே இளமாணி, முதுமாணிப் பட்டங்களைப் பெற்ற பின்னர் அமெரிக்காவின் பிலடெல்பியா பல்கலைக்கழகத்தில் தொல்லியலில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றார். பின்னர் 1965 முதல் 1967 வரை அதே பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராகவும், பல்கலைக்கழக அருங்காட்சியகத்தின் உதவிக்காப்பாளர் பதவியிலும் பணியாற்றினார். அதே பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய கலாநிதி வேய்ன் எடிசன் பேக்லியைத் (Dr. Wayne Edison Begley) திருமணம் செய்து கொண்ட பின்னர் தனது பெயரை விமலா பெக்லி என மாற்றிக்கொண்டார். தமிழ்நாட்டில் அரிக்கமேட்டில் நீண்டகாலம் அகழ்வுகளை மேற்கொண்டிருந்தார். இலங்கையில் பொம்பரிப்பு, கந்தரோடை ஆகிய தொல்லியல் தலங்களில் அகழ்வாய்வுகளை மேற்கொண்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கிறார். (04 May 1931 - 22 March 2000).

### அறிமுகம்

இலங்கையின் தொல்லியலில் இடைக்கற்காலத்திற்கும் ஆதாரபூர்வமாக எழுதப்பட்ட வரலாற்றுக் காலத்திற்குமிடையே நீண்டதொரு கலாசார மற்றும் காலவரிசை இடைவெளி காணப்படுகிறது. இலங்கையின் பிந்திய இடைக்கற்காலத்தைப் பற்றி கணிசமான அளவு ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அதைத் தொடர்ந்த ஐயாயிரம் ஆண்டுக்கால தொல்லியல் ஆதாரங்கள் அளவிலும், தரத்திலும் அருகியே காணப்படுகின்றன. அதற்கு இலங்கை வரலாற்றின் இயல்பு, வரலாற்றுப் பதிவுகள், தொல்லியலாய்வுகளின் நோக்குநிலை என்பனவே காரணமாகும்.

இலங்கைக்கு தேரவாத பௌத்தம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு மக்கள் தொகையில் பெரும் பகுதியினரால் தழுவிக்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக இலங்கையின் கல்விசார் ஆராய்ச்சி பௌத்தமத இலக்கியங்களினது ஆய்வு மற்றும் பொருள் விளக்கம் பற்றியும், அவை எழுதப்பட்ட மொழியின் (பாளி) கற்கையிலும் மையமாக அமைந்தது. இலங்கையின் ஆய்வுகளில் காணப்பட்ட கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் ஆதாரங்கள் இலக்கியங்களைச் சார்ந்து விளக்கப்பட்டன அல்லது முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன. உண்மையில் இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் இந்த நாட்டின் ஆதி வரலாற்றை பாளி மொழியிலுள்ள நிகழ்ச்சித் தொடர்கதையான (Chronicle) மகாவம்சத்திலிருந்தே எடுத்துரைக்கிறார்கள். மகாவம்சம் மதிப்புமிக்க ஒரு பதிவேடாக இருந்த போதிலும், ஒரு வரம்பிற்கு உட்பட்டு, பழைய காலத்து நிகழ்வுகளை புராணக்கதை போல உரைக்கிறது (Begley, V. 1981: p. 53).

இலங்கையின் இடைக்கற்கால ஆய்வுகள் விரிவாக முன்னெடுக்கப்பட்டாலும், தேசிய மற்றும் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்களைச் சுத்திகரிப்பதிலும், புனரமைப்பதிலுமே அதிக கவனம் செலுத்தப்படுகிறது. மாறாக, ஆதி மனிதர்களின் வரலாறு அல்லது அவர்களின் வாழ்வியல் கூறுகளைக் கற்றுக்கொள்வதற்கான நோக்குநிலை புறக்கணிக்கப்படுகிறது. இதன் காரணமாக இலங்கையில் தொல்லியலுக்கும் அதனைச் சார்ந்த, தொடர்புடைய துறைகளுக்கும் ஒரு பெரிய செயற்பாட்டுப் பணி காத்திருக்கிறது (Begley, V. 1981: p. 53).

இலங்கையின் இடைக்கற்காலத்திற்கும் வரலாற்றுப் பதிவுகள் ஆரம்பமான காலத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒரு பரவலான கருத்து நிலவுகிறது. அதாவது, வேட்டையாடி உணவு சேகரிக்கும் முறை மிக நீண்ட காலம் தொடர்ந்தது என்றும், விவசாயச் சமூகங்களின் உருவாக்கம் மற்றும் நாகரிக வளர்ச்சி என்பது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்திய இந்தோஐரோப்பிய மொழியினரின் வருகைக்குப் பின்னரே நிகழ்ந்தது என்றும், அதன் தொடர்ச்சியாக இரு நூற்றாண்டுகள்

கழித்து பௌத்த மதம் பரவிய பிறகே இவை முழுமை பெற்றன என்றும் ஆதாரமற்ற ஒரு நம்பிக்கை நிலவி வருகிறது. இந்தோஐரோப்பிய மொழிகளும், பௌத்த மதமும் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் கலாசாரப் பண்புகள். இந்நாட்டின் வளர்ச்சிக்கும், நாகரிகத்திற்கும் அவை பெரும் உத்வேகத்தை அளித்திருக்கின்றன. ஆனாலும் மற்றைய பங்களிப்புக் காரணிகளான மக்கள் தொகைப் பரவல், சுற்றுச்சூழல், பொருளியல் கூறுகள் போன்ற அம்சங்கள் தீவிரமாக வரையறுக்கப்படவுமில்லை, அல்லது ஆய்வு செய்யப்படவுமில்லை. மக்கள் ஆதியில் மட்பாண்டங்களை உபயோகிக்க ஆரம்பித்த காலத்திலிருந்து இன்று உபயோகப்படுத்தும் மட்பாண்டங்கள் வரையான வரிசை (Ceramic Sequence) உபயோகமான வரலாற்றுத் தகவல்களைத் தருகிறது. இலங்கையில் அதன் கற்கைக்கான அடித்தளம் அமைக்கும் பணி இதுவரை முயற்சிக்கப்படவில்லை (Begley, V. 1981: p. 53).

இலங்கையின் இடைக்கற்காலத்திற்கும், வரலாற்றுக் காலத்திற்கும் இடையிலான இடைவெளி நிகழ்வுகள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லையே ஒழிய அக்காலத்தில் ஒன்றும் நடைபெறவில்லை என்று அர்த்தம் அல்ல. சில சமூகங்களில் இடைக்கற்காலம் நவீன காலம்வரை நீடித்திருக்கிறது. இலங்கையின் வேடர் சமூகத்தைப் பொறுத்தவரை ‘உயர் நாகரிகமும்’, ‘பழமையான கலாசாரங்களும்’ அருகருகே ஒரே சமயத்தில் இயங்கி வந்திருக்கின்றன. இது இலங்கையில் மட்டுமல்ல, தென்னாசியாவின் வரலாற்றில் ஒரு பொதுவான அம்சம்.

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகாலம், வரலாற்றுதயகாலம் என்பன தீபகற்ப இந்தியாவின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம், வரலாற்றுதயகாலம் என்பனவற்றுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் ஊகிக்கக்கூடிய வரையில் தீபகற்ப இந்தியாவிலிருந்தே இலங்கைக்கு வந்திருக்கிறான். புத்தமத காலத்திலிருந்து தொடர்ச்சியாக இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தொடர்புகள் இருந்து வந்திருப்பது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படியான தொடர்புகளும், கருத்துகளின் பரிமாற்றங்களும், மக்களின் இடப்பெயர்வும் புத்தமதம் வருவதற்கு முந்திய ஆண்டுகளிலும் நடைபெற்றிருக்கும். புவி இயற்பியல் மற்றும் கலாசாரத் தொடர்புகள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நடைபெற்றிருக்கும் என்பதை மறுக்க இயலாது. ஆனால், அக்காலகட்டம் பற்றிய பதிவுகள் எதுவும் காணப்படவில்லை. இலங்கையின் பண்பாட்டுப் பரிணாமமானது அதன் வரலாறு நெடுகிலும் ஒரு தனித்துவமான போக்கைக் கொண்டுள்ளது. எங்களது ஆய்வுகளில் ஆதிகால வடஇந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறுதியான தொல்லியல் தொடர்புகளைக் காட்டும் சான்றுகள் ஏதும் இதுவரை காணப்படவில்லை. ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களின் பண்பாட்டுக் காலக்கணிப்பிற்கு அவற்றைத் தென்னிந்திய மட்பாண்டங்களின் தொடர்வரிசையுடன் ஒப்பிடுவதே மிகவும் பொருத்தமானதாக இருந்தது (Begley, V. 1981: p. 54).

இலங்கையின் வரலாற்றாய்வில் இடைக்கற்காலத்திற்கும் வரலாற்றுக் காலத்திற்கும் இடையிலான காலப்பகுதி மிகக் குறைவாக ஆய்வு செய்யப்பட்டிருப்பது மிகவும் வெளிப்படையாகவே தெரிகிறது. எங்களது ஆய்வின் குவிமையம் இந்தக் காலப்பகுதியைக் கொண்டிருந்தது. இதன் தொடக்கப்புள்ளியாக எங்கள் ஆய்வுகளுக்கு நாங்கள் இலங்கையின் வடக்குப் பிராந்தியங்களையே தேர்ந்தெடுத்தோம். இந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று: இலங்கையின் வடமேற்குப் பகுதித் துறைமுகங்களுக்கும், தென்னிந்தியத் துறைகளுக்கும் இடையே அடிக்கடி நிகழும் கலாசார மற்றும் வணிகப் போக்குவரத்து காரணமாக இரு இடங்களுக்கும் இடையே நெருங்கிய ஒப்புமைகள் இருப்பதாக எதிர்பார்ப்பதனால், பண்பாடுகளின் ஒப்பீட்டுக் காலக்கணிப்புகளுக்கு இது தரவுகளை வழங்கும். இரண்டாவது: இந்தப் பிராந்தியம் இந்தியப் பெருநிலம் போன்ற சுற்றுச்சூழலைக் கொண்டு, ஒத்த பின்னணியைச் சேர்ந்த விவசாய சமூகங்களின் நகர்விற்கும் குடியேற்றத்திற்கும் ஏற்றதாக இருந்தது.

1967ஆம் ஆண்டில் இப்பிரதேசங்களில் மேலாய்வு ஒன்று நடத்தப்பட்டது (Begley, V. 1967). குடியிருப்புப் பகுதிகளில் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை, ஆய்விற்கு மிகவும் ஏற்றதாகப்பட்டது. இதற்கான காரணம் மிகப்பரந்த பகுதியில் மேற்பரப்பு மட்பாண்டங்கள் சிதறிக் கிடந்தமை ஆகும். அவற்றினிடையே தென்னிந்திய வகை கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும், றூலெட்டெட் மட்பாண்டங்களும் காணப்பட்டன. இடுகாட்டு மையங்களைப் பொறுத்த மட்டில் கோகபே, பொம்பரிப்பு இரண்டும் அகழ்விற்குப் பொருத்தமானதாகப் பட்டன.

1970 ஆம் ஆண்டில் கந்தரோடையிலும் பொம்பரிப்பிலும் சிறிய அளவில் அகழ்வாய்வுகள் நடத்தப்பட்டன. கந்தரோடையில் குடியேற்ற ஆரம்பகாலத்தையும், மட்பாண்டங்களின் பண்பாட்டுக்கால வரிசையையும் கண்டறிவது முக்கியமான நோக்காக இருந்தது. பொம்பரிப்பில்

தாழியடக்க வளாகத்தின் தன்மையையும், அங்கே புதையுண்டிருக்கும் மக்களின் மானிடவியல் அம்சங்களை பேராசிரியர் கென்னெடியின் உதவியுடன் கண்டறிவதும் நோக்கமாக இருந்தது.

## பொம்பரிப்பு இடுகாட்டு வளாகம்

இலங்கையின் வடபகுதியில் மேற்குக் கரையில் புத்தளத்திலிருந்து 32 கி.மீ. வடக்கேயும், மன்னாரிலிருந்து 89 கி.மீ. தெற்கிலும் அமைந்திருக்கும் நன்கு அறியப்பட்ட வரலாற்றுதயகால இடுகாடு பொம்பரிப்பு. இத்தலம் வில்பத்து தேசிய காட்டு மிருகப் புகலிடத்தின் தெற்கு எல்லைக்குள் அமைந்திருப்பதனால் மக்கள் வசிக்காத பகுதியாக உள்ளது. எளிதில் கடல்வழியாக அடையக்கூடிய ஒரு கடற்கரையிலிருந்து இத்தலம் 6 கி.மீ. தொலைவில் உள்ளதனால் கடல் வழியாக இவ்விடத்தை சுலபமாக அடைய முடியும். முற்காலத்தில் கந்தரோடைக்கும் அநுராதபுரத்திற்கும் வழித்தொடர்பு இருந்ததற்குத் தொல்லியல் சான்றுகள் உள்ளன. அது போன்று பொம்பரிப்புக்கும் அநுராதபுரத்திற்கும் தொடர்புவழி இருந்திருக்கலாம்.

இந்த இடுகாட்டு வளாகத்திற்குச் சமீபமாக காலம் அறியப்படாத பழமையான குளங்கள் உள்ளன. இந்த இடுகாட்டுக்குத் தெற்கே 1.6 கி.மீ. தொலைவில் ஓடும் கலாஓயா நதி நன்னீருக்கான முக்கிய மூலமாகும். இந்த விசாலமான இடுகாடு ஏறக்குறைய 4 ஏக்கர் பரப்பைக் கொண்டிருக்கிறது. இதில் 1.5 முதல் 2 மீட்டர் தூரத்திற்கு ஒரு புதையல் குழி வீதம் 8,000 தாழிப் புதையல்கள் காணப்படுகின்றன. சராசரியாக ஒரு புதையல் குழியில் 1.6 தனிநபர்களின் படி இங்கே 10,000-12,000 மக்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த இடுகாட்டை உபயோகித்த மக்களின் குடியிருப்பு இந்த இடுகாட்டிற்குச் சமீபத்தில்தான் இருக்க வேண்டும். இந்த இடுகாட்டிற்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவில் பழைய பௌத்த விகாரையான ‘கல்கே விகாரை’ காணப்படுகிறது.

இந்த இடத்தில் முதன் முதலாக 1924இல் A.M. ஹோகார்ட் ஒரு புதைகுழியைக் கண்டுபிடித்தார். 1956ஆம் ஆண்டில் தொல்லியல் திணைக்களத்தினருக்காக டாக்டர் ராஜா டி சில்வா அகழ்வுகளை மேற்கொண்டு பல தாழிகளை வெளிக்கொணர்ந்தார். அவரது ஆய்வு இவ்விடத்தில் ஏராளமான தாழிகளைக் கொண்ட தென்னிந்திய இரும்புக் காலத்துடன் தொடர்புடைய ஓர் இடுகாட்டு வளாகம் (Burial Complex) இருப்பதைக் காட்டியது (Deraniyagala, P.E.P. 1957:8; 1958: 1617). இலங்கையின் வரலாற்றுதய காலத்தைப் பற்றிய கற்கைக்கு இந்த இடுகாட்டு வளாகங்களைப் பற்றிய புரிந்துணர்வு இன்றியமையாததாகத் தோன்றுகிறது. 1967, 1970 ஆம் ஆண்டுகளில் நாங்கள் பார்வையிட்ட ஐந்து இடங்களில் பொம்பரிப்பு, அதனுடைய பரப்பினாலும், ஏற்கனவே அது பற்றிய தகவல்கள் இருப்பதாலும் அகழ்வாய்வு செய்வதற்குப் பொருத்தமான இடமாகப்பட்டது.

### புதையல்கள்

குழம்பியிராத புதையல்கள் உள்ள ஒரு பகுதியில் 100 மீ x 100 மீ. பரப்பு (100 சதுர மீட்டர்) அளந்து குறிக்கப்பட்டு அதனுள் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தளத் திட்டம், படங்கள் வரைதல், குழிகள் தோண்ட வேண்டிய இடங்கள் அனைத்தும் டாக்டர் பென்னெட் புரொன்ஸனால் மேற்கொள்ளப்பட்டன.

மொத்தத்தில் A முதல் N வரை குறிக்கப்பட்ட 14 புதையல்கள் அகழ்வு செய்யப்பட்டன. அவற்றில் குறைந்தது 23 பேர் புதைக்கப்பட்டிருப்பார்கள். இந்த இடுகாட்டு வளாகத்தையும், அதில் புதையுண்ட சமூகத்தையும் பற்றிய உறுதியான முடிவுகளைப் பெறுவதற்கு இது போதுமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் நிச்சயமாகக் கூற முடியும். எல்லாப் புதையல்களும் பல தலைமுறைகளைக் கொண்டிருந்த போதிலும், ஒரே பண்பாட்டு அம்சங்களையே வெளிப்படுத்துகின்றன.

பொம்பரிப்பில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் A முதல் N வரை இலக்கமிடப்பட்ட 14 அகழ்வுக் குழிகளில் பெரிய தாழிகளும் அவற்றுள்ளே புதைக்கப்பட்டவர்களின் எலும்புகளும், அல்லது உடைந்த தாழிகளும் அவற்றோடு உடைந்த எலும்புத் துண்டுகளும், சிறிய பாத்திரங்களும், கறுப்புசிவப்பு மற்றும் பலவகையான மட்பாண்டங்களும், செப்புக் கம்பிகள், மணிகள், நெய்த பருத்தித் துணித்துண்டுகள், செப்புக் காப்புகள், செப்பு வளையல்கள், இரும்புக் கத்திகள், இரும்பு வேல் ஆகிய பல பொருட்களும் ஈமப் படையல்களாகக் காணப்பட்டன.

அடக்கம் செய்யும் நடைமுறைகளைப் பொறுத்த வரையில் ஒரு பொதுவான முறை வெளிப்படுகிறது. எல்லாப் புதைகுழிகளிலும் (புதைகுழி A ஒன்றைத் தவிர) தாழிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு குழியிலும் ஒன்று முதல் பல தாழிகள் காணப்படுகின்றன. குழிகள் அனைத்தும் சுண்ணாம்புப் பாறாங்கற்களால் மூடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெரிய தாழியும் 40 முதல் 90 செ.மீ. விட்டம் கொண்டவை. எலும்புகளும், ஈமப் பொருட்களும் தாழியின் அடியில் வைக்கப்பட்டிருக்கின்றன. புதைக்க முன்னர் எலும்புகள் பிரிக்கப்பட்டு, முழுமையற்று இருக்கின்றன. இறந்த

பின்னர் உடல்கள் சில நாட்கள் வெளியே வைக்கப்பட்டிருந்த பின்னரே புதைக்கப்பட்டிருக்கின்றன. சிறு பிள்ளைகளைப் பொறுத்த வரையில் அவர்களின் உடல்கள் தீக்கிரையாக்கப்பட்ட பின்னர், பாதி எரிந்த நிலையில் புதைக்கப்பட்டிருக்கின்றன. கபாலங்கள் தனியாக கறுப்புசிவப்பு மட்பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. சில சமயங்களில் இருவரின் எலும்புகள் ஒரே தாழியில் வைக்கப்பட்டிருக்கின்றன. தாழிகளில் எலும்புகளும், ஈமப் பொருட்களும் வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்குமுறை, இது திட்டமிட்டு நிதானமாக இப்படி இருக்கவேண்டுமென்றே வைக்கப்பட்டிருப்பதைக் காட்டுகிறது. புதைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கிடையிலான பரஸ்பர உறவைக் கண்டுபிடிக்கக்கூடிய சான்றுகள் ஏதுமில்லை. இத்தாழி அடக்கங்களில் சமூக பொருளாதார நிலைகளுக்கேற்ப வேறுபாடுகள் இருந்திருக்க வேண்டும். நாங்கள் அகழ்ந்த குழிகளில் அதற்கான சான்றுகளை உறுதியாகக் காணமுடியவில்லை. அடக்கக் குழிமீது மிக உயரமாக அமைக்கப்பட்ட மண்மேடுகள் சமூகத்தில் உயர்நிலைகளைக் கொண்டவர்களின் புதையல்களாக இருக்கலாம்.

### தாழிப்புதையல் பொருட்கள்

எங்களது 1970ஆம் ஆண்டு அகழ்வில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான தாழிப்பொருட்களே கிடைத்தன. அதிகமான பொருட்கள் அணிகலன்களான மணிகள், வளையல்கள், காப்புகள், ஊசிகள் என்பனவாகும். மெல்லிய செப்புத் தண்டுகள் கோலம் பூசுவதற்காக (Kohl Sticks) உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம். நாங்கள் அகழ்ந்த புதையல்கள் குறைவாக இருந்தமையால் இப்பண்பாட்டின் முழுமையான கற்கையைப் பெற முடியவில்லை.

### இரும்புப் பொருட்கள்

இந்த அகழ்வில் மூன்று இரும்புப் பொருட்கள் மட்டுமே கிடைத்தன. முழுமையான இலை வடிவான ஓர் இரும்புக் கத்தி கிடைத்தது. மற்ற இரு இரும்புப் பொருட்களும் உடைந்த துண்டுகளாக இருந்தன.

### செம்புப் பொருட்கள்

செம்பினால் செய்த, செம்புடன் உலோகக்கலவை செய்யப்பட்ட பொருட்கள் இரும்புடன் ஒப்பிடும்போது அதிகமாகக் கிடைத்தன. இவற்றில் ஏழு பொருட்களை எங்கள் பல்கலைக்கழக அருங்காட்சியக ஆய்வகத்திற்கு அனுப்பிப் பரிசோதித்ததில் செம்புடன் சிலவற்றில் தகரமும் ஈயமும், சிலவற்றில் ஈயம் மட்டும் கலக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இந்த உலோகங்களின் விகிதாசார அளவுகளைக் காட்டும் பகுப்பாய்வு மேற்கொள்ளப்படவில்லை.

### அகழ்வுகளில் கண்ட செப்புப் பொருட்கள்:

(1) செப்பு மணிகளால் செய்யப்பட்ட 23 கழுத்தணிகள். இம்மணிகளைத் தொடுத்த நூல்கள் இன்னும் மணிகளோடு இணைக்கப்பட்டிருந்தன. மணிகள் 4 மி.மீ. நீளமும், 4 மி.மீ. விட்டமும், 2 மி.மீ. துவாரத்தையும் கொண்டிருந்தன.

(2) பல வகையான செப்பு வளையல்கள்: வெவ்வேறு தடிப்புகளில், உள் விட்டம் 45 மி.மீ. கொண்டவை. இவை தவிர உடைந்த வளையல் துண்டுகள் காணப்பட்டன.

(3) நுனிகள் தடித்த செப்புத் தண்டுகள், உடைந்த செப்புத் தண்டுகளின் துண்டுகள். இவை கோலக்குச்சிகளாக இருக்கலாம்.

(4) நீண்ட செப்பு ஊசிகள் - பல அளவுகளில்: 190 மி.மீ., 160 மி.மீ., 28 மி.மீ., 12 மி.மீ. நீளமானவை.

(5) 15 துண்டுகளாகப் போயிருந்த அடையாளம் தெரியாத செப்புப் பொருள்.

### மணிகள்

மொத்தமாக 171 மணிகள் கிடைத்தன. இவற்றில் ஒன்றைத் தவிர மிகுதி அனைத்தும் புதையல்களிலிருந்தே பெறப்பட்டன. ஏராளமான மணிகள் கிடைப்பதற்கான காரணம் தனிப்பட்ட நகைப் பொருட்களை இறந்தவர்களுடன் புதைக்க வேண்டும் என்ற செயலுக்குக் கொடுத்த முக்கியத்துவமாகும். மணிகள் சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், பச்சை, சாம்பல், பழுப்பு நிறங்களில் காணப்பட்டன.

### கற்கருவிகள்

எல்லாமாக ஏழு கல் செதில்களும், கல் கருவிகளும் காணப்பட்டன. இவற்றில் சில குழியின் அடியில் தாழிக்குடங்களுக்குக் கீழே காணப்பட்டன. கல் செதில்கள் மண்ணிற மஞ்சள் சேட் கல்லினால் (Chert) ஆனவை. இரு நுண்கற்கருவிகள் (Microliths) சேட், குவார்ட்ஸ் கற்களினால் செய்யப்பட்டவை.



*1970 பொம்பரிப்பு அகழ்வில் கண்ட முழுமையான தாழி. Image Source: Bennet Bronson.*



*கொழும்பு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பொம்பரிப்புத் தாழி (முன்னர் ராஜா டி சில்வாவின் 1956 ஆம் ஆண்டு அகழ்வில் பெறப்பட்டது).*

**மட்பாண்டங்கள்**

*பொம்பரிப்பு மட்பாண்டங்கள் அனைத்தும் ஈமப் பாண்டங்களாகும் (Funerary Pottery). ஆகவே அவற்றின் தொகையும், பல்வகை வேறுபாடும் புதையல் சார்ந்த வரம்புகளால் நிபந்தனைக்குட்பட்டது. மட்பாண்டங்களின் வடிவங்களும், உருவங்களும் ஈமச்சடங்கு நோக்கங்களுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டிருந்தன. தட்டுகளும், கிண்ணங்களும் ஈமப் பொருட்களைக் கொள்ளும் பாத்திரங்களாக மட்டும் அல்லாது, தாழிகளின் மூடிகளாகவும் உபயோகப்படுத்தப்பட்டிருந்தன.*

*இப்புதையல்களில் இருவகையான மட்பாண்டங்கள் காணப்பட்டன. பெரிய தாழிகள் புதையல்களின் கொள்கலன்களாகவும், தட்டுகளும், பெரிய அகன்ற கிண்ணங்களும் அவற்றை மூடவும், ஈமப் பொருட்களின் கொள்கலன்களாகவும் பாவிக்கப்பட்டன. மற்றைய வகை மட்பாண்டங்கள் உருவத்தில் சிறியனவாக, தாழிகளுக்குள்ளே வைக்கக்கூடிய அளவில் இருந்தன. மண்டையோட்டுக் கபாலத்தை வைத்திருந்த அனைத்து மட்பாண்டங்களும் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களாகவே இருந்தன. இவற்றை அடக்கம் செய்ய கறுப்புசிவப்பு மண்பாண்டங்களை உபயோகிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட முன்னுரிமை இருப்பதாகத் தோன்றியது.*

*மட்பாண்டங்கள் எளிமையானவையாகவும், நுட்பங்கள், நுணுக்கங்கள் இல்லாமலும் காணப்பட்டன. அவை ஒரே சீராக கரடுமுரடானதாக மணலும் கற்களும் மேற்பரப்பில் தெரியுமாறும் இருந்தன. சில மட்பாண்டங்கள் சில்லில் வனைந்தும், சில கைகளினால் செய்யப்பட்டும் காணப்பட்டன. பொதுவாக நடைபெறுவது போல, கறுப்புசிவப்பு மட்பாண்டங்களை தலைகீழாகப் புரட்டி சூளையில் சுடும்போது கலன்களின் உட்பக்கமும், வெளிப்பக்கத்தின் கழுத்துப் பகுதியும் உயிரகவாயுக் குறைவினால் கறுப்பு நிறமாக வர, வெளிப்புறத்தின் மிகுதிப் பகுதிகள் உயிர்வாயு ஏற்றப்பட்டு (Oxidized) சிவப்பு நிறம் அடைகின்றன. தென்னிந்திய கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களைப் போல அவற்றின் வெளிப்பகுதி மெருகிடப்பட்டோ, மினுமினுப்பூட்டப்பட்டோ இருக்கவில்லை.*

*மத்திய அளவான மட்பாண்டங்களில் சுடப்பட்டபின் வரையப்பட்ட ஆறு வகையான குறியீட்டு அடையாளங்கள் (Postfiring Graffiti Symbols) காணப்பட்டன. இவ்வகையான குறியீட்டு அடையாளங்கள் பொம்பரிப்பில் மட்டுமல்லாது அநுராதபுரம் கெடிகே அகழ்வுகளில் கண்ட மட்பாண்டங்களிலும் (Deraniyagala, 1972), கந்தரோடை மட்பாண்டங்களிலும் காணப்படுகின்றன (Kantarodai report to be published shortly., Vimala Begley 1981: Page 85).*

*மட்பாண்ட வகைகளை பல வகையான கிண்ணங்கள், தட்டுகள், குடுவைகள், சாடிகள், வட்டத் திருகணிகள் (Ring Stands), 'பேசின்கள்', பெரிய தாழிகள் எனப் பிரிவுபடுத்தலாம். பெரிய தாழிகள் வெவ்வேறு அளவுகளில் காணப்பட்டன. அவற்றின் விட்டம் 40 செ.மீ. முதல் 90 செ.மீ. வரை வெவ்வேறு அளவுகளில் காணப்பட்டன. தாழிகளின் வெளிப்பகுதி பெரும்பாலும் கரடுமுரடானதாக கற்களையும், மணலையும் கொண்டிருந்தது. (முன்பு 1956 இல் இங்கே ராஜா டி சில்வா அகழ்ந்தெடுத்த சில தாழிகளின் வெளிப்பகுதி களி மண்ணினால் சீராகப் பூசப்பட்டு இணைக்கோட்டு வடிவங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது).*

**தொகுப்புரை**

*பொம்பரிப்பு அகழ்வாய்வில் நாங்கள் மேற்கொண்ட முக்கிய நோக்கங்கள் ஓரளவுக்கு நிறைவேறியுள்ளன. இந்த மையத்தின் தன்மை மற்றும் அதன் விஸ்தீரணம் குறித்த புரிதலை எட்ட முடிந்தது. அத்துடன், அங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை, இடுகாடு பரவியுள்ள நிலப்பரப்பு மற்றும் வரும் காலங்களில் விரிவான முறையில் அகழ்வாராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புகள் போன்ற விடயங்கள் தொடர்பான தெளிவான பார்வையைப் பெறக்கூடியதாக இருந்தது. இங்கே தீர்வு காணப்படாத பிரச்சினை பொம்பரிப்புப் புதையல்களை கலாசார மற்றும் காலவரிசைச் சூழலில் எந்த இடத்தில் வைப்பது என்பதுதான்.*

*(இந்த அகழ்வு மேற்கொண்ட காலத்தில் பொம்பரிப்பின் காலம் கணிப்பிடப்படவில்லை. பின்னர் மேற்கொண்ட கதிரியக்கக் கரிம ஆய்வுகளில் பொம்பரிப்பு மயானபூமி கி.மு. 900ஆம் ஆண்டுக் காலகட்டத்திற்கு உரியது எனக்*

*கணிப்பிடப்பட்டுள்ளது - பிரிஷாந்த குணவர்த்தன, 2018: பக். 4.)*

இந்தப் புதையல்களில் இரும்புப் பொருட்களும், அவற்றோடு கறுப்புசிவப்பு மட்பாண்டங்களும் இடம்பெறுவது தென்னிந்திய இரும்புக்கால பெருங்கற் கலாசாரத்திற்கு ஒப்புமையுடைய பண்பாகத் தெரிகிறது. இந்த இரு பண்பாடுகளும் 'மரபுவழி' உறவானது என அனுமானிப்பது நியாயமானதாக உள்ளது. மட்டுமல்லாது, பொம்பரிப்பு இடுகாடு இந்திய உபகண்டத்தின் தெற்குப் பகுதியில் முகிழ்த்த ஆதி இரும்புக்கால அடக்கச் சடங்கின் ஒரு பகுதியேயாகும்.

பொம்பரிப்பின் மிகப் பெரிய தொடர்புகள் தென்னிந்தியாவின் கிழக்குக்கரை மையங்களுடனானது. பொம்பரிப்பில் இரும்பு குறைவாகவே காணப்படுகிறது. தென்னிந்திய மையங்களோடு ஒப்பிடும் போது கறுப்பு சிவப்பு மட்பாண்டம் சொரசொரப்பாகவும், பளபளப்பாக மெருகேற்றப்படாமலும் காணப்படுகிறது.

தென்னிந்தியாவின் பெருங்கற் பண்பாட்டு ஈமப்புதையல்களை அடையாளம் காண்பதற்குரிய மிக முக்கியமான அம்சம் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களாகும். இலங்கையில் தென்னிந்திய வகை கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் அநுராதபுரம் கெடிகேயிலும் (Deraniyagala, 1972), கந்தரோடையிலும் (Forthcoming Ancient Ceylon) காணப்படுகின்றன. இதைக் கருத்தில்கொண்டு நோக்குமிடத்து பொம்பரிப்பில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களைக் கொண்ட ஈமப்புதையல்கள் இடம்பெறுவது ஆச்சரியப்படுவதற்கில்லை. இங்கே பிரச்சினை இப்புதையல் காலத்திற்கான முழுமையான காலக்கணிப்பை வழங்குவதாகும் (இக்காலம் கி.மு. 900 ஆண்டாகப் பின்னர் கணிக்கப்பட்டுள்ளது). தென்னிந்திய அடக்கப் பாரம்பரியம் மிக நீண்ட காலத்திற்கும், நீண்ட பரப்பளவிற்கும் பரந்திருக்கிறது.

கர்நாடகத்தின் மைசூர் சமவெளி இப்பண்பாட்டின் ஆரம்ப இடமாகத் தெரிகிறது. இப்பண்பாடு, அது பரவிச் சென்ற கடலோரப் பிரதேசங்களுக்குச் சற்று தாமதமாகவே சென்றடைந்துள்ளது. இருப்பினும், அங்கு நிலைபெற்ற பின்னர் மிக நீண்ட காலத்திற்குத் தொடர்ந்திருந்தது. குடியேற்றப் பகுதிகளில் ஆதி இரும்புக்காலம் ஏறக்குறைய கி.மு. 50ஆம் ஆண்டுக்காலத்தில் முடிவுக்கு வருகிறது. ஆனால் கறுப்புசிவப்பு மட்பாண்டம் உடனடியாக முடிவுக்கு வரவில்லை. ஜெல்லீஸ்வரம், ஐடிஹெனஹல்லி மற்றும் திருநெல்வேலி மையங்களில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் வரலாற்றுக்காலம் வரை நீடித்திருக்கின்றன. பொம்பரிப்புப் பிரதேசத்தின் இரும்புக்காலத்தை முழுமையாக அறிந்து கொள்வதற்கு இடுகாட்டை மட்டும் அகழ்வு செய்வதால் பெறும் தகவல்கள் மட்டும் போதாது. இந்த இடுகாட்டை உபயோகித்த மக்கள் வாழ்ந்த குடியிருப்பைக் கண்டுபிடித்து அங்கே அகழ்வாய்வுகளை மேற்கொள்ள வேண்டும். பொம்பரிப்பு ஆய்வின் அடுத்த கட்டம் இந்த இடுகாட்டுடன் தொடர்புடைய குடியேற்றத்தின் இடத்தைக் கண்டுபிடித்து அங்கே அகழ்வுகளை மேற்கொள்வதாகும். அத்துடன், இப்பகுதியில் காணப்படும் குளங்கள் எக்காலத்தைச் சேர்ந்தவை என்பது குறித்தோ, அவற்றின் செயல்பாடுகள் எத்தகையவை என்பது குறித்தோ முறையான தகவல்கள் ஏதும் இதுவரை அறியப்படவில்லை. பொம்பரிப்பிற்குச் சமீபத்திலிருக்கும் கல்கே விகாரை கி.பி. முதலாம் நூற்றாண்டில் நிறுவப்பட்டதாக மகாவம்சம் கூறுவதாக வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்திருக்கிறார்கள் (P.E.P. Deraniyagala, 1957). இந்தக் கருத்து தொல்லியல் ரீதியாக ஆய்வு செய்யப்படவில்லை. விகாரை இருக்கும் இடத்திற்குச் சமீபமாக ஒரு குடியிருப்பு இருந்திருக்க வேண்டும். இவற்றை ஆய்வு செய்வதன் மூலம் பொம்பரிப்பின் முழுமையான வரலாற்றை வெளிக்கொணர முடியும்.

(பிலடெல்பியா பல்கலைக்கழகத்தில் விமலா பெக்லி மேற்கொண்ட கலாநிதிப்பட்ட ஆய்வு 'தென்னிந்தியாவின் ஆதி இரும்புக்காலப் பண்பாடு' என்பது குறிப்பிடத்தக்கது).



*1992 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அரிக்கமேட்டு அகழாய்வில் பணியாற்றிய பெண்களோடு சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடும் விமலா பெக்லி (தொப்பி அணிந்திருப்பவர்).*

## கலாநிதி ராஜா டி சில்வா: இப்பன்கட்டுவ பெருங்கற் பண்பாட்டுக் கல்லறைப் புதையல்



*De SILVA, RAJA (1970-71): 'Archaeological Excavations at Ibbankattuwa' Annual Report of the Dept. of Archaeological Survey 1970-71, Colombo.*

*PREMATILLAKE, LEELA NANDA; BANDARANAYAKE, SENAKA; De SILVA, RAJA; DERANIYAGALA, SIRAN U. (Eds.) (2007): History and Archaeology of Sri Lanka: The Art and Archaeology of Sri Lanka, Vol II, The Central Cultural Fund, Ministry of Cultural Affairs, Colombo.*

*GUNAWARDENA, PRISHANTHA (2018): Ibbankatuwa, Central Cultural Fund, Dept. of Cultural Affairs, Colombo.*

---

இலங்கையின் ஆரம்பகால முன்னோடித் தொல்லியலாளர்களில் ஒருவரான கலாநிதி ராஜா டி சில்வா 1967-1979 ஆம் ஆண்டுகளுக்கிடையே தொல்லியல் திணைக்கள ஆணையாளராகப் பணியாற்றியவர். இலங்கையின் தொல்லியல் தலங்களுக்கு - முக்கியமாக சிகிரியா சுவரோவியங்களுக்கு விஞ்ஞான ரீதியான பாதுகாப்பு நுட்பங்களை அறிமுகப்படுத்தியவர். சிகிரியா ஓர் அரண்மனை அல்ல, அது ஒரு மகாயான பௌத்த மடாலயம் என ஆதாரபூர்வமாக வாதாடியவர். இலங்கைப் பல்கலைக்கழகத்திலிருந்து வேதியியல் இளங்கலைப் பட்டத்தையும், இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து முதுகலைப் பட்டத்தையும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து D.Phil. பட்டத்தையும் பெற்றுக்கொண்டவர். 1956ஆம் ஆண்டிலிருந்து பொம்பரிப்புத் தாழிகளையும், 1967ஆம் ஆண்டிலிருந்து யான் ஓயா தாழ்நிலப் பகுதிகளின் கல்லறை மயானங்களையும் அகழ்ந்து வெளிக்கொணர்ந்தவர். 1970ஆம் ஆண்டில் இப்பன்கட்டுவ மயானத்தை முதன் முதலாக அகழ்ந்து கல்லறைகளை வெளிக்கொணர்ந்தவர் ராஜா டி சில்வா.

---

1970ஆம் ஆண்டில் இலங்கையின் தொல்பொருள் திணைக்கள ஆணையாளராகவிருந்த கலாநிதி ராஜா டி சில்வா, இப்பன்கட்டுவ ஈமக்காட்டை இனம்கண்டு அவ்விடத்தின் வடக்குப் பக்கத்தில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டார். அந்த அகழ்வுகளின் போது வெட்டிய கற்களால் பெட்டி வடிவில் அமைக்கப்பட்டு மற்றொரு கல் மேசையால் மூடப்பட்ட 20 கல்லறைகள் வெளிக்கொணரப்பட்டன. இக்கல்லறைகள் சில முழுவதும் நிலத்தினுள் புதையுண்டு மேல் மூடி நிலமட்டத்திலும், சில நிலத்தினுள் பாதி புதையுண்டு, மிகுதி வெளியே சிறிய சுவர்கள் போலத் துருத்திக்கொண்டும் இருந்தன.

இப்பன்கட்டுவ பெருங்கற் கல்லறை இடுகாடு குருநாகல் - தம்புல்ல வீதிக்கருகாமையில் தம்புல்ல நகரிலிருந்து 5 கி.மீ. தூரத்தில், கலா ஓயாவின் கிளை நதிகளான தம்புல்ல ஓயா, மல்வத்து ஓயா ஆகியவற்றின் எல்லையில் அழகிய இயற்கைச் சூழலில் ஒரு சதுர கி.மீ. அளவு பரப்பில் அமைந்துள்ளது.

இந்த ஈமப்புதையல் பூமியில் மூன்று தடவை வெவ்வேறு பகுதிகளில் அகழ்வாய்வுகள் நடைபெற்றுள்ளன. 1. 1970 ஆம் ஆண்டில் கலாநிதி ராஜா டி சில்வா மேற்கொண்ட அகழ்வாய்வு, 2. 1982-1990ஆம் ஆண்டுகளில் ஜேர்மன் நாட்டின் காவா நிறுவனம், களனிப் பல்கலைக்கழகம், தொல்லியல் பட்டப்படிப்பு நிறுவனம் என்பன இணைந்து நடத்திய அகழ்வாய்வுகள், 3. மத்திய கலாசார நிதியத்தினால் 2015ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது அகழ்வாய்வு. முதலாவது அகழ்வில் 20 கல்லறைகளும், இரண்டாவது அகழ்வில் 16 கல்லறைகளும், மூன்றாவதில் 26 கல்லறைகளும் வெளிக்கொணரப்பட்டன. இங்கே மொத்தமாக பெட்டிக்கல்லறைகள் (Cist) 42 கூட்டுக்களாக (Clusters), ஒவ்வொரு கூட்டிலும் ஏறக்குறைய பத்துக் கல்லறைகள் வீதம் காணப்படுகின்றன.

இந்த அடக்க முறையில், நீள்சதுரமாக வெட்டிய குழியில் நான்கு பக்கங்களிலும் நான்கு கற்பலகைகள் அடுக்கப்பட்டு, அதன்மேலும் ஒரு கற்பலகை கொண்டு மூடப்படும். இவ்வாறு அமைக்கப்படுகிற இடுகாட்டுப் புதையல்கள் 'சிஸ்ற் புதையல்கள்' (Cist Burials) என அழைக்கப்படும். சில சமயங்களில் இரண்டு 'சிஸ்ற்' பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்தும் காணப்படும். இப்பன்கட்டுவ இடுகாட்டில் இறந்தவர்களின் உடலைத் தகனம் செய்த பின்னர் அச்சாம்பலை கறுப்பு சிவப்பு நிற மட்பாண்டத் தாழிகளில் இட்டு, அத்தாழிகளை இக்கல்லறைக் கூடத்தினுள் அடக்கம் செய்த வழக்கமும் உண்டு. அவற்றோடு இறந்தவர்களின் பாவனைப் பொருட்களும் வேறு தாழிகளில் இடப்பட்டு அவை ஈம நிவேதனப் பொருட்களாக அக்கல்லறைக் கூட்டினுள் வைக்கப்பட்டுள்ளன. இக்கல்லறைகளில் ஈம நிவேதனப் பொருட்களாக கறுப்புசிவப்பு மற்றும் பலவகையான மட்பாண்டங்கள்,

செம்பு கலந்த உலோகங்கள், இரும்புத்துண்டுகள், தங்கம், உணவுக்குப் பயன்படும் தானிய வகைகள், அகேற், சூதுபவளம், குவார்ட்ஸ், கண்ணாடி ஆகியவற்றிலான மணிக்கற்கள் என்பன காணப்பட்டுள்ளன.

இந்த அகழ்வுகளில் கண்ட கறுப்புசிவப்பு, செந்நிற மட்பாண்டங்கள் சில்லில் வனைந்து வெளிப்புறம் மெருகூட்டப்பட்டிருந்தமை அக்கால மக்களின் உயர்ந்த தொழில்நுட்ப அறிவைப் பிரதிபலிக்கிறது. கதிரியக்கக் கரிம ஆய்வுகள் இந்தச் இடுகாட்டின் கால வரையறையை (1). கி.மு. 700 முதல் கி.மு. 400 ஆண்டுகளாகவும், (2). கி.மு. 600 முதல் கி.மு. 450 ஆண்டுகளாகவும் கணிப்பிடுகின்றன (Prematilleke, L. et al. 2007).

வெளிப்படுத்தப்பட்ட இப்பன்கட்டுவ



இடுகாட்டுக் கல்லறை.

மக்கள் உயிருடன் வாழ்ந்த காலத்தில் அவர்களால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் குறித்த ஈமக் கூடத்தினுள் அடக்கம் செய்யப்படுகின்றன. இறந்தவர் மீண்டும் மறுபிறப்பு எடுத்தால் அடக்கம் செய்யப்பட்ட அப்பொருட்களை அவர் பாவனைக்கு எடுத்துக்கொள்வார் என்ற நம்பிக்கையின் பிரதிபலிப்பு இது. இதன் பிரகாரம் இங்கே வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த மக்கள் மறுபிறப்பிலும், பூசைகள், சடங்குகள் என்பவற்றிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பது புலனாகிறது.

இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டத் தாழிகளில், உட்புறம் கறுப்பு நிறமாகவும் வெளிப்புறம் சிவப்பு நிறமாகவும் அமையப்பெற்ற தாழிகளே அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றுடன் சில முழுமையான கறுப்பு நிறத் தாழிகளும், முழுமையான சிவப்பு நிறத் தாழிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. 2015ஆம் ஆண்டின் அகழ்வுகளில் மட்டும் 112 மட்பாண்டத் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. இந்த மையத்தின் அகழ்வுகளில் கண்ட ஈமப்புதையல் பொருட்களைக் கொண்டு சமூகத்தில் ஒரு சமூகபொருளாதார வேறுபாடு இருந்ததைக் காண முடிகிறது. பெரிய அளவிலான மூடப்பட்ட கல்லறையில் கண்ட தங்க அணிகலன்கள், இறக்குமதி செய்யப்பட்ட ஒளிர்மணிகள் என்பன சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்த ஒருவரைக் காட்ட, சிறிய அளவிலான சுட்ட களிமண் மணிகளையும், குறைந்த அளவிலான மட்பாண்டங்களையும் கொண்ட கல்லறைகள் எளிய வாழ்க்கைத்தரம் கொண்ட மற்றொருவரைக் காட்டுகின்றன. இந்த இடுகாட்டிற்குச் சமீபத்தில் காணப்படும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கமும், அங்கே கண்டெடுக்கப்பட்ட நெல் உமிகளும் அவ்விடத்தில் நெல் விவசாயம் நடைபெற்றதை எடுத்துக்காட்டுகின்றன.

1988ஆம் ஆண்டில் இலங்கை மத்திய கலாசார நிறுவனமும் ஜேர்மன் காவா நிறுவனமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் போது இந்த இடுகாட்டிலிருந்து 200 மீட்டர் தொலைவில் தம்புல்ல குருநாகல் பிரதான பாதையில் பொல்வத்த என்ற இடத்தில் இந்த இடுகாட்டுடன் தொடர்புடைய குடியிருப்புகள் இருந்ததாகக் கூறப்பட்டது. குடியிருப்புகள் இருந்ததற்கான ஆதாரமாக மட்பாண்டத் துண்டுகள் அங்கே காணப்பட்டமை எடுத்துக்காட்டப்பட்டது. மட்பாண்டத் துண்டுகள் காணப்பட்ட ஒரு சிறிய பகுதியில் வாழ்ந்த மக்கள் இப்பெரிய கல்லறை இடுகாட்டை நிரப்பியிருப்பார்களா? என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.



கல்லறையினுள் காணப்படும் தாழிப்புதையல்: இப்பன்கட்டுவ கல்லறைப் புதையல் இடுகாடு.

## கலாநிதி றொபின் கொனிங்ஹாம்: அநுராதபுரமும் ஆதி இரும்புக்காலமும்




*CONINGHAM, R.A.E. (1995): 'The Rise of Cities in Sri Lanka' in F.R. Allchin: The Archaeology of Early Historic South Asia, Cambridge University Press.*

*ALLCHIN, F.R. (1995): The Archaeology of Early Historic South Asia, Cambridge U.P.*

*CONINGHAM, ROBIN (1999): Anuradhapura: The British - Sri Lankan Excavations at Anuradhapura Salgaha Watta 2: Volume 1 The Site, Archaeopress, Oxford.*

*CONINGHAM, ROBIN (2006): Anuradhapura: The British - Sri Lankan Excavations at Anuradhapura Salgaha Watta 2: Volume 2 The Artefacts, Archaeopress, Oxford.*

---



பேராசிரியர் றொபின் கொனிங்ஹாம் தொல்லியல், மானிடவியல் ஆகிய கற்கைகளை கேம்பிரிஜ் பல்கலைக்கழக கிங்ஸ் கல்லூரியில் கற்று கலாநிதிப் பட்டம் பெற்றவர். 2005ஆம் ஆண்டிலிருந்து டர்ஹாம் பல்கலைக்கழகத்தில் தொல்லியல் பேராசிரியராகக் கடமையாற்றி வருகிறார். இவர் UNESCO நிறுவனத்தினரால் 2014ஆம் ஆண்டில் 'தொல்லியல் கலாசார பாரம்பரியத்தில் நெறிமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கான' தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் தனது குழுவினருடன் நேபாளம், இந்தியா, இலங்கை, ஜோர்டான், எகிப்து ஆகிய நாடுகளில் தொல்லியல் ஆய்வுகளுக்குத் தலைமை தாங்கியிருக்கிறார். இலங்கையில் 1994-95, 1996-97, 1998-99 ஆம் ஆண்டுகளில் அநுராதபுரத்திலும், 2017இல் யாழ்ப்பாணம் கோட்டையிலும் தொல்லியல் அகழ்வாய்வுகளை மேற்கொண்டார். அநுராதபுர அகழ்வாய்வுகளை மேற்கொண்ட சமயம் இலங்கை முழுவதினதும் இடைக்கற்கால மையங்கள், வரலாற்றுக்கு முற்பட்ட மையங்கள், பெருங்கற்காலக் கறுப்புசிவப்பு மட்பாண்ட மையங்கள் பற்றித் தனது அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்.

---

இன்றைய அநுராதபுரம் இலங்கையின் வடமத்திய மாகாணத்தின் தலைநகரமாகும். ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அது ஒரு காட்டின் நடுவிலிருந்த சிறிய கிராமமாகவே இருந்தது (Davy 1821: 225). அநுராதபுரத்தின் தற்போதைய தோற்றத்திற்கு, அவ்விடத்தின் புராதன நீர்ப்பாசன அமைப்பை மறுசீரமைத்த பிரித்தானிய காலனித்துவவாதிகளே காரணமாவர் (Brohier, 1934). அநுராதபுரத்தின் பெருமை, அதிகமான இலங்கை மக்களின் இதயத்திலும் மனத்திலும், ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தீவின் அரச தலைநகரமாக அது விளங்கியதன் பதிவாகும். வேறு சிலருக்கு அது காலனித்துவ காலத்திற்கு முற்பட்ட அற்புதமான பிரம்மாண்டமான கடந்தகாலத்தின் சின்னமாகும். இன்னும் சிலருக்கு யாத்திரை மேற்கொள்ள வேண்டிய ஒரு புனிதத் தலமாகும். மேலும் சிலருக்கு ஆசியாவின் செழுமையான பண்பாட்டுப் பாரம்பரியத்தை நினைவூட்டும் பண்டைய நகரமாகும்.

தொல்லியல் ரீதியாக, இலங்கையின் வரலாற்றில் காலவரன்முறையிலும் கலைப்பொருட்களின் வரிசையிலும் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் சான்றுகளை வெளிக்கொணர்ந்தது என்ற வகையில் அநுராதபுரம் மிக முக்கியமான மையமாகும். கடந்த அரை நூற்றாண்டாக மாந்தை, கந்தரோடை, பொம்பரிப்பு, இப்பன்கட்டுவ ஆகிய இடங்களில் முக்கியமான அகழ்வாய்வுகள் நடைபெற்றபோதிலும், அவற்றின் அறிக்கைகள் இன்னும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. இந்த நிலை காரணமாக, இந்த நாட்டின் ஆதி வரலாற்றை அறிந்துகொள்வதற்கு உரைமூலங்களைச் சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனுடன், நம்பிக்கைக்குரிய காலவரன்முறைத் தேதிவரிசை இல்லாததும், அநுராதபுரத்தை இந்த நாட்டின் கால ஆராய்ச்சிக்கான மாதிரி ஆய்வுத்தளமாகக் கொண்டு அகழ்வாய்வுகளை மேற்கொள்ள வழிவகுத்தது.

1984ஆம் ஆண்டிலிருந்து 1990ஆம் ஆண்டு வரை இங்கே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள், காலவரன்முறையான ஒரு கட்டமைப்பு வரிசையை அநுராதபுரத்திற்குக் கொடுத்துள்ளன. இதை

மாதிரியாகக் கொண்டு இத்தீவின் மற்றைய தொல்லியல் மையங்களை ஒப்பீட்டு ரீதியில் காலக்கணிப்புச் செய்ய முடியும் (Coningham, 1995: 1).

---

## அநுராதபுரத் தொல்லியல்

தொல்லியல் அகழ்வாய்வுகளும், கதிரியக்கக் கரிம ஆய்வுகளும் அநுராதபுர நகரத்தின் ஆரம்பத்தை கி.மு. 800ஆம் ஆண்டிற்கு எடுத்துச் செல்கின்றன. அநுராதபுரம் மல்வத்து ஓயா நதிக்கரையில் நிறுவப்பட்டது. மல்வத்து ஓயா ஒரு ஆழமற்ற ஆறாகும். இதிலிருந்து பெறக்கூடிய நீரைக் கொண்டு கணிசமான மக்கள் தொகையைத் தக்கவைக்க இயலாது. மேலதிகமாகக் குளங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். கி.மு. முதலாவது ஆயிரத்தாண்டின் முதற்பாதி வரையிலும் மேலதிகமான குளங்கள் எவையும் கட்டப்படவில்லை. இந்த நிலையில், அங்கே நகரம் ஏற்பட்ட காலத்தில் பெரியதொரு சனத்தொகை இருந்திருக்க வாய்ப்பில்லை.

அநுராதபுரத்தின் முக்கியத்துவம் இருவகையானது. ஒன்று, வரலாற்றுக் காலத்தில் நாட்டின் வரலாற்று, சமய, கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணியமை. இரண்டாவது, தொல்லியல் ரீதியாக அதன் அளவு, ஆழம், தொழில்சார் நிலப்படிவங்களின் செழுமை, வரலாற்றுக்கு முற்பட்ட மற்றும் ஆதி வரலாற்றுக் காலங்களில் அங்கே வாழ்ந்த மக்களின் இயல்புகள் என்பனவாகும்.

## நகரத்தின் வளர்ச்சி

கி.மு. 800ஆம் ஆண்டுக் காலத்தில் குடியிருப்புகளின் பரப்பு 50 ஹெக்டேர்களாகக் கணிக்கப்படுகிறது. கி.மு. 700-600ஆம் ஆண்டு காலத்தில் அது ஒரு நிறுவப்பட்ட நகரமாக வளர்ச்சியடைந்திருந்தது. கி.மு. 300ஆம் ஆண்டளவில் நகரத்தின் பரப்பு 100 ஹெக்டேர்களாக விரிவடைந்திருந்தது. அக்காலகட்டத்தில் அநுராதபுரம் தென் ஆசியாவின் பெரிய நகரங்களில் ஒன்றாக இருந்தது (Deraniyagala 1992, Addendum I).

அநுராதபுர நகரம் இருந்த இடத்தில் அகநகர், வெளிநகர் என இரண்டு நகரப் பகுதிகள் காணப்படுகின்றன. மத்தியில் இருக்கும் அகநகர் (Citadel) என அழைக்கப்படும் மண்மேடு பண்டைய நகரத்தின் மையப் பகுதியாகும். வெளிநகரில் நான்கு பெரிய தாதுகோபங்கள் காணப்படுகின்றன. அவையாவன மகாதூபமான றுவன்வெலிசாய, ஜேதவனராமய, மிரிசவெட்டி, அபயகிரி என்பன. அவற்றிற்குரிய ஆராமங்களும், மேலும் பல குளங்களும், நீர்ப்பாசன வேலைகளும் அங்கே காணப்படுகின்றன.

## தொல்லியல் அகழ்வாய்வுகள்

கலாநிதி சிரான் தெரணியகல 1969ஆம் ஆண்டில் அகநகர் (Citadel) மேட்டில் பல இடங்களில் ஆழமான சோதனைக் குழிகளை வெட்டியிருந்தார். இந்தக் குழிகள் அகநகரின் வெவ்வேறு இடங்களில் காணப்பட்ட வெவ்வேறு குடியிருப்பு மட்டங்களின் 'குடியிருப்பு வரிசை' முறையை அறியத் தந்தன.

1990-91ஆம் ஆண்டுகளில் பெரிய அளவிலான அகழ்வாய்வு நடத்தப்பட்டது. 'பிரித்தானிய-அநுராதபுரத் திட்டம்' என்ற இந்த அகழ்வாய்விற்கு பிரித்தானிய அகழ்வாராய்ச்சியாளர்களான ரேமண்ட் ஆல்சின் மற்றும் றொபின் கொனிங்ஹாம் ஆகியோர் தலைமை தாங்கினர். ஆங்கிலத்தில் இது 'Anuradhapura Salgaha Watta Plot 2: ASW2' என அழைக்கப்பட்டது (Coningham 1999, 2006).

2004-2008ஆம் ஆண்டுகளில் நகரத்தின் வெளிப்பகுதியிலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன (Anuradhapura - The Hinterland Project). கொழும்பிலுள்ள கலைகள் மற்றும் மானிடவியல் ஆய்வு மன்றம் (Arts and Humanities Research Council) ஆதரவு வழங்கிய இந்தத் தொல்லியல் ஆய்வில் டர்ஹாம், களனியா, பிராட்ஃபோர்ட், ஸ்டெர்லிங், பிரிஸ்டல் ஆகிய பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல்துறை ஆய்வுக் குழு பங்குபற்றியது. இந்த ஆய்வின் நோக்கம், பரந்த நிலப்பரப்பில் அநுராதபுரம் நகரமயமாக்கப்படுவதற்கு முன்னரும் பின்னரும், அதனை அண்டிய பகுதிகளில் வாழ்ந்த சமூகங்களின் வாழ்வியல் மாற்றங்கள் எவ்வாறு இருந்தன என்பதை ஆராய்வதாகும் (Coningham 2013).

அகநகர் மேட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் பின்வரும் அகழ்வு வரிசைகள் இனங்காணப்பட்டன. பிரித்தானிய அகழ்வுக்குழு ASW2 குழியில் கண்ட அடுக்குநிலைகளுக்கு (Stratified Levels), அடிப்பகுதியிலிருந்து மேல்நோக்கி, 'L' இலிருந்து ஆங்கில எழுத்துகளை வரிசையாக வழங்கியுள்ளனர்.

### காலம் L: இடைக்கற்காலம் (கி.மு. 2000-840)

ஆரம்பகால மனிதக் குடியேற்றம் ASW2 குழியின் அடிப்பகுதியில், பிற்காலக் குடியேற்றங்களுக்குக் கீழே, சரளைக் கற்களிடையே காணப்பட்டது. குவார்ட்ஸ் கற்களினால் செய்யப்பட்ட கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. விறாண்டிகள், கத்திகள், கூர்க்கற்கள், சுத்தியல்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் என்பன கணிசமான அளவில் கிடைத்தமை, இப்பகுதியில் மக்கள் குடியிருந்ததைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்பொருட்களின் கதிரியக்கக்

காலக்கணிப்புகள், இம்மக்கள் கி.மு. இரண்டாம் ஆயிரத்தாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே இவ்விடத்தில் வாழ்ந்திருந்தனர் என்பதைக் காட்டுகின்றன (*Deraniyagala 1992; Allchin 1995; Coningham 2001, 2006a*).

**காலம் K: ஆதி இரும்புக்காலம் (கி.மு. 840-460)**

*சரளைக் கற்களுக்கு மேலே காணப்படும் செந்நிற மண்ணிறப் பழைய மண்ணில் இக்குடியிருப்பு அடுக்கு காணப்படுகிறது. இந்தக் குடியிருப்பு அடுக்கு 18 ஹெக்டேர் பரப்பிலுள்ள பல குழிகளில் இனங்காணப்பட்டுள்ளது. ASW2 குழியில் 2.5 மீட்டர் விட்டத்தில் வட்டவடிவில் பல தூண்குழிகள் காணப்பட்டன. ஒரு பக்கத்தில் இத்தூண்குழிகள் பக்கவாட்டாகச் சென்றன. இது ஒரு ஆரம்பகால வீடு (குடிசை) இருந்த இடத்தைக் காட்டியது. அந்த மட்டத்தில் பல மெருகூட்டப்பட்ட கறுப்புசிவப்பு மட்பாண்ட ஓடுகள், குறியீட்டு எழுத்துகளைக் கொண்ட ஓடுகள், இரும்புக் கசடுகள், இரும்புப் பொருட்கள் மற்றும் கால்நடை எலும்புகள் கிடைத்தன. அந்த மட்டத்தில் மக்களின் குடியிருப்புச் செறிவு, அநுராதபுரம் ஒரு நகரமாக மாறியிருந்ததைக் காட்டியது. கதிரியக்கக் கரிம ஆய்வுகள் இக்காலத்தின் ஆரம்பத்தை கி.மு. 840ஆம் ஆண்டாகக் காட்டின (Deraniyagala 1992; Allchin 1995; Coningham 2006a).*

**காலம் J: ஆரம்ப வரலாற்றுக் காலம் I (கி.மு. 460-350)**

*இந்த அகழ்வு மட்டத்தில் ASW2 குழி ஐந்து கட்டமைப்புக் கட்டங்களைக் காட்டியது. இவை ஆழமாகப் புதைக்கப்பட்ட பெரிய தூண்களைக் கொண்ட வட்டவடிவான குடிசைகள் இருந்ததைக் காட்டுகின்றன. இரண்டாவது கட்டத்தில் 5 மீட்டர் விட்டம் கொண்ட வட்டவடிவான குடிசையின் தளம் காணப்பட்டது. இதன் அருகில் 1.25 மீட்டர் விட்டம் கொண்ட ஒரு குழி காணப்பட்டது. அக்குழி சாம்பலால் நிரப்பப்பட்டு சிவப்பு மண்களியால் மூடப்பட்டிருந்தது. அதை அகழ்ந்தபோது இரும்பு அம்புநுனி, சிறிய செப்புக் கலவையினாலான ஒரு பொருள், மூன்று கறுப்புசிவப்புக் கிண்ணங்கள், 'கிராபிட்டி' குறியீடுகள் பொறிக்கப்பட்ட மூன்று கலன்கள் ஆகியன கண்டுபிடிக்கப்பட்டன.*

*"இந்தக் குழியில் எலும்புகள் காணப்படாத போதிலும், சாம்பலோடு காணப்பட்ட கூட்டமைப்புப் பொருட்கள் தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு இரும்புக்கால ஈமப்புதையல்களை, குறிப்பாக பொம்பரிப்பிலும் மாஸ்கியிலும் அகழப்பெற்ற ஈமப்புதையல்களை நினைவூட்டுகின்றன" (Allchin 1995: 163-164).*



*அநுராதபுர ASW2 அகழ்வுகளில் கண்ட மட்பாத்திரங்களும் சாம்பலும் கொண்ட ஈமப்புதையல் குழி. Image source: R.A.E. Coningham.*

*மூன்றாவது கட்டத்தில் நெருப்பூட்டும் சூளைகளும், இரும்புக் கசடுகளும் காணப்பட்டன. நான்காவது கட்டத்தில் 5.5 மீட்டர் விட்டம் கொண்ட குடிசையின் நடுவில் நான்கு தூண்களின் அடித்தளங்கள் காணப்பட்டன. இது மரத்தினாலான ஒரு கூரையைத் தாங்குவதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இக்குடிசையின் பக்கச் சுவர்களும் கூரையும் ஓலைகளாலும் புற்களாலும் மூடப்பட்டிருக்கலாம் (Allchin 1995; Coningham 2006b).*

*இக்காலத்தின் மட்பாண்டங்கள் அனைத்திலும் ஆதிக்கம் செலுத்துவது மெருகூட்டப்பட்ட பளபளப்பான கறுப்புசிவப்பு மட்பாண்டங்களாகும். இவற்றைத் தவிர இரும்பு மற்றும் செம்புக் கசடுகள், மணிகள், குதிரை எலும்புகள், அம்பு நுனிகள், தந்தம் என்பனவும் காணப்பட்டன. இந்த மட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான பொருட்களில் ஒன்று பிராமி எழுத்துகளின் பகுதிகள் கீறப்பட்ட மட்கலத் துண்டுகளாகும். இந்த மட்டத்தின் கதிரியக்கக் காலக்கணிப்புகள் கி.மு. 450க்கும் கி.மு. 350க்கும் இடைப்பட்ட ஆண்டுகளைத் தந்திருந்தன (Allchin, 1995). ஆனால் முன்னர் தெரணியகல மேற்கொண்ட வெப்பஒளிர்வு (Thermoluminescence Dating) தேதிக்கணிப்பு ஆய்வுகளில், இந்த அகழ்வு மட்டத்திற்குக் கி.மு. 600-500 ஆண்டுகள் வழங்கப்பட்டிருந்தன (Deraniyagala, ASW1-1992).*

**காலம் I : ஆரம்ப வரலாற்றுக் காலம் 2 (கி.மு. 350-275)**

*இக்காலத்தில் நகரின் குடியிருப்புப் பகுதி 66 ஹெக்டேர்களாக விரிவடைந்திருந்தது. முன்பிருந்த உருண்டையான மரக்கட்டைகள் கொண்ட தூண்குழிகளுக்குப் பதிலாக, நீள்சதுரமான மரக்கட்டைகளைக் கொண்ட தூண்குழிகள் காணப்பட்டன. இக்காலம் எட்டுக் கட்டங்களைக் கொண்டிருந்தது.*

முதலாவது கட்டத்தில் 5.7 சதுர மீட்டர் அளவுடைய தனி அறை ஒன்று அதன் தூண்குழிகளையும் சுவர் அடிகளையும் கொண்டு இனங்காணப்பட்டது.

நான்காவது கட்டத்தில் அந்தக் கட்டுமானம் 40 சதுர மீட்டர் அளவுக்கு விரிவுபடுத்தப்பட்டிருந்தது. முதல் கூறிய அறையுடன் மேலும் ஒரு அறை வடக்குப் பக்கத்தில் கட்டப்பட்டிருந்தது. அத்துடன் மேற்குப் பக்கத்தில் இரு அறைகளையும் இணைக்கும் வகையில் ஒரு விறாந்தை அமைக்கப்பட்டிருந்தது. உள் இரண்டு அறைகளும் அவற்றை இணைக்கும் விறாந்தையும் வரலாற்று மற்றும் சமகாலச் சிங்களக் கட்டடக்கலையின் முக்கிய அலகுகளில் ஒன்றாகும். கி.மு. நான்காம் நூற்றாண்டிற்குரிய இக்கட்டடம் ஒரு மூலப்படிமமாகக் கருதப்படுகிறது. நான்காவது கட்டத்தில் சுடப்பட்ட கூரை ஓடுகள் முதல்முறையாகத் தோன்றுகின்றன (Allchin 1995: 165; Coningham 2001, 2006a).

### காலம் H: ஆரம்ப வரலாற்றுக் காலம் 3-4 (கி.மு. 275-225; கி.மு. 225-150)

இந்த இரு காலப்பகுதிகளும் முன்னர் சிரான் தெரணியகல குறிப்பிட்ட நான்காம் காலத்திற்குச் (Period IV) சமமானவை. இக்காலத்தில் ASW2 குழியில் வீடுகள் எவையும் காணப்படவில்லை. இங்கே காணப்பட்ட ஒரு குழியில் மரக்கட்டைகள் வைத்து எரித்ததற்கான அடையாளங்கள் கண்டறியப்பட்டன. குழியைச் சுற்றியிருந்த மண் உயிர்க்காற்றுடன் இணைவுற்றிருந்தது (Oxygenated). எரித்த பின்னர் அக்குழி மண்போட்டு மூடப்பட்டிருந்தது.

அந்தக் குழியினுள் விகிதாசாரமற்ற உயர் செறிவில் மணிகள், அப்பிரகம் (Mica), சங்கு, இரும்புப் பொருட்கள், றூலெட்டெட் மட்பாண்டங்கள், மட்பாண்டத் துண்டுகள், பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட ஓடுகள் என்பன காணப்பட்டன. இக்குழியின் வடிவம், அளவு மற்றும் அதில் காணப்பட்ட பொருட்களை அடிப்படையாகக் கொண்டு, ஆய்வாளர் ரேமண்ட் ஆல்சின் இவ்விடம் ஓர் ஈமச்சடங்கு நடைபெற்ற இடமாக இருந்திருக்கலாம் எனக் கருதுகிறார் (Allchin, 1995: 168).

இதற்கு மேலுள்ள மட்டத்தில் ஒன்றின் மேல் ஒன்று அமைக்கப்பட்டிருந்த, முன்பு கூறிய வடிவத்திலான ஐந்து வீடுகள் காணப்பட்டன. இவற்றில் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டிருந்த அமைப்பு, 16 சதுர மீட்டர் அளவுடைய செங்கற்கள் பதிக்கப்பட்ட தரையைக் கொண்டிருந்தது. அதன் சுவர்கள் வெண்காரை பூசப்பட்டு, அதன் மேல் வெள்ளையடிக்கப்பட்டிருந்தன. இச்சுவருக்கு அப்பால் ஒரு குறுகலான ஒழுங்கை காணப்பட்டது. இந்த ஒழுங்கை, நகரத்து வீடுகள் ஒழுங்கைகளாலோ வீதிகளாலோ பிரிக்கப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றது (Allchin 1995; Coningham 2001, 2006a).

இக்காலத்தின் மற்றைய பொருட்களாக றூலெட்டெட் மட்பாண்டங்கள், அரிக்கமேடு வகை மட்பாண்டங்கள், மெருகிடப்பட்ட கறுப்பு மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் நாணயங்கள் காணப்பட்டன. நாணயங்களில் யானை மற்றும் சுவஸ்திகா குறியீடுகள், புத்தச் சக்கரங்கள், லக்ஷ்மி நாணயங்கள் என்பன குறிப்பிடத்தக்கவை (Allchin 1995: 169).

### கோட்டைச் சுவர்

அகநகர் மேட்டின் தென்பக்கத்தில் தோண்டப்பட்ட குழிகள், நகரின் வெளிப்புறத்தில் எட்டு மீட்டர் உயரமுடைய ஒரு மண் அரணையும் (Rampart), அதன் மேல் அமைக்கப்பட்ட சுவரையும் வெளிக்கொணர்ந்தன. மண் அரண் 2.5 மீட்டர் அகலமுடையதாக இருந்தது. இதன் இரண்டாம் கட்டத்தில் கல்லும் சிவப்பு மண்ணும் கலந்து கட்டப்பட்ட அரணின் அகலம் 3 மீட்டராக அதிகரித்திருந்தது. மூன்றாவது கட்டத்தில் அரணின் உயரம் மேலும் 3 மீட்டராலும் அகலம் மேலும் 1 மீட்டராலும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

அரணின் விளிம்பு ஆய்வு வரைவின் கணக்கெடுப்பு (Contour Survey), அந்த அரண் 100 ஹெக்டேர் பரப்பளவைச் சுற்றியிருந்ததை அறியத் தருகிறது (Coningham 1993).

### இடைக்கற்கால-இரும்புக்கால மேலணைவு

அநுராதபுர அகழ்வாய்வுகள், இடைக்கற்காலத்திற்கும் ஆதி இரும்புக்காலத்திற்கும் இடையே ஒரு மேலணைவு (Overlap) இருப்பதைக் காட்டுகின்றன. பழங்குடியினரான இடைக்கற்கால மக்களுக்கும் இரும்பை உபயோகித்த பெருங்கற்கால மக்களுக்கும் இடையே உடல் ரீதியான மற்றும் கலாசார ரீதியான கலப்பு (Cultural and Physical Fusion) ஏற்பட்டிருக்கலாம் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது (Seneviratne, S. 1985: 66).

கதிரியக்கத் தேதிக்கணிப்புகளின்படி அநுராதபுரத்தின் ஆதி இரும்புக்காலம் கி.மு. 1000ஆம் ஆண்டு எனக் கணிக்கப்படுகிறது (Deraniyagala, S.U. 1996: 4).

#### விவசாயமும் நீர்ப்பாசனமும்

அநுராதபுரத்தில் மக்கள் தொகை பெருகி, அது பெரிய நகரமாக விரிவடைந்ததற்கு வேளாண்மைப் பெருக்கமே முக்கிய காரணியாக இருந்தது. அங்குள்ள பழமையான

குளங்களும், அவற்றின் நவீன காலம் வரையான தொடர்ச்சியான இருப்பும் இதற்குச் சான்று பகர்கின்றன.

ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் வெள்ளம் பாயும் இப்பிரதேசத்தில், ஏனைய மாதங்களில் தண்ணீர்ப் பற்றாக்குறை காணப்படும். ஆறுகளின் நீர் வற்றி, அவை ஆழமற்ற இணைக்கப்பட்ட குளங்களாகக் காட்சியளிக்கும்.

மாரி காலத்தில் மேலதிக நீரும், கோடையில் தண்ணீர்ப் பஞ்சமும் கொண்ட நிலப்பரப்பில் வாழும் ஒரு பெரிய நிரந்தர சமூகத்தை ஆதரிப்பதற்காக, நீரைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு முறையான அமைப்புத் தேவைப்பட்டிருக்க வேண்டும். நீர் மேலாண்மை இரண்டு சாத்தியமான முறைகளால் செயல்படுத்தப்படலாம்:

(1) பள்ளத்தாக்குகளுக்குக் குறுக்கே அணைக்கரை அமைத்து ஒரு வடிகால் குளத்தை உருவாக்குவது. இதன் மூலம் மேலதிக மழைநீரைப் பாதுகாக்கலாம்.

(2) குளங்களுக்கிடையே தொடுவாய்க்கால்கள் அமைப்பதன் மூலம் நீரை ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் திசைதிருப்பலாம்.

அநுராதபுரத்தில் ஆரம்பகாலத்தில் எவ்வகையில் தண்ணீரைக் கட்டுப்படுத்தினார்கள் என்பதைத் தொல்லியல் ஆய்வுகள் மூலம் அறிய முடியவில்லை. இலக்கிய ஆதாரங்களே இது பற்றிய தகவல்களை வழங்குகின்றன (Allchin, R. 1995). இலக்கிய ஆதாரங்களின்படி, இவ்விடத்தில் அநுராதகமம் என்ற கிராமத்தை நிறுவிய அநுராதா என்ற அரசகுமாரன் ஒரு குளத்தைக் கட்டியிருந்தான் (Mahavamsa IX:11). பின்னர் பாண்டுகாபயன் இக்குடியிருப்பைப் பெரிதாக்கி, நீர் வழங்கல் அமைப்பையும் விரிவுபடுத்தினான் (Mahavamsa IX:59-60) எனக் குறிப்பிடப்படுகிறது.

## அநுராதபுரத்தின் ஆதிக்குடியிருப்பாளர்கள்

அநுராதபுரத்தில் ஆதியில் குடியிருந்த மக்களின் இனக்குழும அமைப்பைப் பற்றி இன்று எதுவும் உறுதியாகத் தெரியவில்லை. ஆனால் குடியிருப்பாளர்களில் பெரும்பான்மையான மக்கள் இடைக்கற்கால மக்களின் வம்சாவளியினராகவே இருந்திருக்கலாம். அவர்களில் ஒரு பகுதியினர் — ஒருவேளை உயரடுக்கைச் சேர்ந்தவர்களாக இருந்து — தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டை (Megalithic BRW Culture) கொண்டுவந்த வேளாண் குடியினராக இருந்திருக்கலாம் என ஆல்சின் கருதுகிறார் (Allchin 1995: 159-169).

## ஆதி இரும்புக்காலம்

இலங்கையில் ஆதி இரும்புக்காலத்திற்கும் ஆரம்ப வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்ட 75 குடியேற்ற மையங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன (Deraniyagala 1992). இந்த மையங்களின் பரவலாக்கம், இந்தத் தீவின் பல்வேறு சுற்றுச்சூழல் மண்டலங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்த வாழ்வாதார நடவடிக்கைகள் ஹொலோசீன் காலத்திற்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு, சில மையங்களில் சமீப காலம் வரை தொடரப்பட்டிருக்கின்றன (ஹொலோசீன் காலம்: 11,700 ஆண்டுகளுக்கு முன்னர் கடைசிப் பனியுகம் முடிவுற்ற காலம்).

இந்த மையங்களில் பெரும்பாலானவை கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ள கிளிஞ்சல் மேடுகள் (Shell Middens) ஆகும். இவை கடல்வள உணவை உட்கொண்ட மக்கள் வாழ்ந்த மையங்களாகும். அம்பாந்தோட்டைக்குச் சமீபமாக தென்கரையில் அமைந்துள்ள ஹெனகஹபுகல (Henagahapugala) குடியிருப்பு கி.மு. 1400க்கும் கி.மு. 1000க்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகக் கணிக்கப்படுகிறது. இலங்கையின் மேற்குக் கரையில் புத்தளத்தின் அர்ணகல்லு (Arnakallu Archaeological Site) குடியிருப்பு கி.மு. 1130 முதல் கி.மு. 900 வரையான ஆண்டுகளைக் காட்டுகிறது. மாந்தைக்கு அருகிலுள்ள ஒரு திறந்தவெளி முகாம் தளம் கி.மு. 1800ஆம் ஆண்டைக் காட்டுகிறது.

உள்நாட்டு மையங்களில் திறந்தவெளிக் குடியிருப்பான 'பெல்லன்பண்டி பலஸ்ஸ' (Bellanbandi Palassa), ஓர் அருவிக்கரையில் அமைந்த மையமாகும். இது காட்டும் கி.மு. 380ஆம் ஆண்டு, ஐயத்திற்குரிய காலக்கணிப்பாகக் கருதப்படுகிறது. பாததொம்ப லெனா, பெலிலெனா ஆகிய குகைக் குடியிருப்புகள் கி.மு. 26,500க்கும் கி.மு. 9500க்கும் இடைப்பட்ட ஆண்டுகளைத் தருகின்றன. அநுராதபுர அகழ்வாய்வுகளில் கண்ட அடிமட்டங்கள், கி.மு. இரண்டாம் ஆயிரத்தாண்டிலேயே இங்கு அடர்த்தியான குடியிருப்பு இருந்ததைக் காட்டுகின்றன.

இத்தீவின் வரலாற்றுக்கு முற்பட்டகால மையங்களின் பரந்த செறிவும், அங்கே காணப்படும் எலும்புகளின் தொகையும் — மூன்று உள்நாட்டு மையங்களில் 53 மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன (Deraniyagala 1985: 19) — கணிசமான அளவு வேட்டையாடி உணவு சேகரிக்கும் மக்கள் இங்குள்ள சுற்றுச்சூழல் மண்டலங்களைப் பயன்படுத்தியிருந்தனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இத்தீவில் வாழும் வேட்டையாடிஉணவு சேகரித்து வாழும் வேடர்களின் வாழ்வாதார முறைகள் வரலாற்றில் பதிவு

செய்யப்பட்டுள்ளன. 1881ஆம் ஆண்டு அரசாங்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 2,228 வேடர்கள் ஆறு புறமண (அயல் திருமணமுறை), தாய்வழி மற்றும் பிராந்தியக் குலங்களாகப் பிரிந்திருந்தனர் (Sarasin and Sarasin 1892: 79-80). ஒவ்வொரு குழுவினரும் அவர்களுக்குச் சொந்தமான குகைகள், காடுகள் மற்றும் நீரோடைகளைக் கொண்டிருந்தனர். குறிப்பிட்ட குளங்களும் மரங்களும் தனிப்பட்ட குடும்பங்களுக்குச் சொந்தமானவையாக இருந்தன (Seligman and Seligman 1911: 33).

கென்னெடியின் மாதிரியின்படி, இலங்கையின் பழங்குடி மக்கள் சூழலுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொண்டு, ஒருங்கிணைந்து உயிர்வாழ்ந்தனர்.

புராதனகால மையங்களிலிருந்து பெறப்படும் தேதிகள், பரந்த அடிப்படையிலான வாழ்வாதார முறைகளை மேற்கொண்ட கணிசமான மக்கள், பெரும்பாலான சூழலியல் மண்டலங்களைப் பயன்படுத்திக்கொண்டு, ஹொலோசீன் காலத்திற்கு முன்னரே இந்தத் தீவில் தங்களை நிலைநாட்டிக் கொண்டிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன (Deraniyagala 1992).

தீபகற்ப இந்தியாவில் இனாம்காவன் (Inamgaon) அகழ்வாய்வுகளில் கண்டது போல, வெண்கலக் கால மக்கள் படிப்படியாக வளர்ச்சி பெற்று, இடைநிலைக் கட்டங்களை அடைந்து, பின்னர் நகர்ப்புறச் சமூகங்களாக மாற்றமடைந்திருக்கின்றனர். இலங்கையில் அம்மாதிரியான இடைநிலைக் கட்டங்கள் எவையும் காணப்படவில்லை. இத்தீவில் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு புதிய கற்காலம் இருந்ததாகவும் தெரியவில்லை.

இத்தகைய தொடர்பற்ற வளர்ச்சியை, இலங்கையின் பல மையங்களில் இரும்புக்காலப் பண்பாடு நுண்கற்காலக் கருவிகளின் மேல் நேரடியாகக் காணப்படுவதன் மூலம் அறிய முடிகிறது (Coningham 1995: 136). பல அறிஞர்கள், இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் இரும்பு பற்றிய அறிவு கொண்ட புதிய மக்கள் தொகையொன்றின் வருகையே எனக் கூறியுள்ளனர். பொம்பரிப்பில் இரும்புக்கால மக்களின் எலும்பு எச்சங்களை ஆராய்ந்த இரு மானிடவியலாளர்கள், அவை புதிய மக்களொன்றின் வருகையை உறுதிப்படுத்துவதாகக் கூறியுள்ளனர் (Lukacs and Kennedy 1981: 106).

இக்கருத்து செனிவிரத்தின காட்டிய பரவல் கோட்பாட்டுடன் இணக்கமாக உள்ளது (Seneviratne 1984: 283). அவர் பரிந்துரைத்ததாவது:

வடமேற்கு இலங்கையின் ஈமப்புதையல் பண்பாடு அதன் உத்வேகத்தை வைகை-தாமிரபரணி சமவெளிகளின் தாழி-கல்வட்ட அடக்க முறையிலிருந்து பெற்றுக்கொண்டது மிகவும் சாத்தியமாகும்.... அதுபோன்று வடமத்திய இலங்கையின் கல்லறை அடக்க முறை, புதுக்கோட்டையிலிருந்து (தமிழ்நாடு) சித்தூர் (ஆந்திரப் பிரதேசம்) வரை பரந்திருக்கும் கல்லறை அடக்க மரபின் நீட்சியாகும்.

ஆதி இரும்புக்காலத்தின் உள்நாட்டுப் பரவல் முறை இன்னும் தெளிவற்றதாக உள்ளது. ஆரம்பகாலக் குடியிருப்பு மையங்களில் இரண்டு கடற்கரையிலிருந்து உள்நாட்டில் அமைந்துள்ளன. வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இரும்புக்காலக் குடியிருப்பைக் காட்டுகிறது. அதே சமயம் இப்பன்கட்டுவ கி.மு. 540-400ஆம் ஆண்டுகளைக் காட்டுகிறது. வடக்கே கந்தரோடை இரும்புக்காலக் குடியிருப்பு கி.மு. ஐந்தாம் நூற்றாண்டைக் காட்டுகிறது (Deraniyagala 1992: 356).

(மேற்குறிப்பிட்டது தவறான தகவல். கந்தரோடையில் 1970ஆம் ஆண்டு அகழ்வாய்வுகளில் 'B' குழியிலிருந்து எடுத்த இரு பதக்கூறுகள் கி.மு. 1000க்கு மேற்பட்ட ஆண்டுகளைக் காட்டுகின்றன. மேலே ஆரம்பத்தில் உள்ள கந்தரோடை கதிரியக்கக் கரிம அட்டவணையைப் பார்க்கவும்.)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆதி இரும்புக்காலக் குடியிருப்புகள் இரு குடியிருப்பு மையங்களை மட்டுமே காட்டுகின்றன. ஒன்று அநுராதபுரம்; மற்றொன்று கந்தரோடை. யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் மேலாய்வுகளில் சந்தேகத்திற்குரிய 18 ஆதி வரலாற்றுக்கால அல்லது பெருங்கற் பண்பாட்டுத் தலங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன (Ragupathy 1987). முறையான அகழ்வாய்வுகளும் கதிரியக்கத் தேதிக்கணிப்புகளும் கிடைக்காததனால் அவை இந்தப் பகுதியில் சேர்க்கப்படவில்லை.

அநுராதபுரத்தின் இரும்புக்கால அகழ்வாய்வுகளைப் பற்றி விரிவாக இந்த நூலிலும் வேறு பல இடங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் கந்தரோடையின் விஞ்ஞானபூர்வமான தொல்லியல் வரிசை தெரியவில்லை. 1970ஆம் ஆண்டில் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தினர் அகழ்வாய்வு செய்தார்கள். ஆனால் அத்தலத்தின் கட்டமைப்பு வரிசை எதுவும் தெரியவில்லை. இந்த முக்கியமான தலத்தின் அகழ்வாய்வு அறிக்கையை புதிய மிலேனியம் ஆரம்பமாவதற்கு முன்னர் பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தினர் முடித்து வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது (Coningham, R. 1995: 137). (பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தின் கந்தரோடை

அகழ்வாய்வு அறிக்கையும், பொம்பரிப்பு அகழ்வாய்வு அறிக்கையும் கலாநிதி விமலா பெக்லியால் 1974ஆம் ஆண்டு மே மாதம் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன. சரியாக ஏழு ஆண்டுகள் கழித்து, 1981ஆம் ஆண்டு மே மாதம் Ancient Ceylon No. 4 சஞ்சிகையில் பொம்பரிப்பு அகழ்வாய்வு அறிக்கை பிரசுரிக்கப்பட்டது. இந்தப் பொம்பரிப்பு அறிக்கையின் இறுதிப் பகுதியில் (பக். 94) கந்தரோடை அகழ்வாய்வு அறிக்கை இதே சஞ்சிகையில் வரவிருக்கிறது என விமலா பெக்லி குறிப்பிடுகிறார். ஆனால் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் இந்த அறிக்கையை வெளியிடவே இல்லை. இந்த உண்மையை பேராசிரியர் றொபின் கொனிங்ஹாமிற்கு எவரும் தெரிவித்திருக்கவில்லை போல உள்ளது.)

இதன் இரண்டாவது தரவுத் தொகுப்பு பெருங்கற் பண்பாட்டு ஈமப்புதையல்கள் பற்றியது. இந்த இடுகாடுகள் அமைப்பிலும், காலத்திலும் பெரிய வேறுபாடுகளைக் காட்டுகின்றன. 1984ஆம் ஆண்டில் செனிவிரத்ன இவ்வகையான 19 மையங்களைப் பதிவு செய்திருந்தார். அவரது அறிக்கையில் தேக்கம், பொம்பரிப்பு, கரம்பன்குளம் என்பன தாழிப்புதையல்களைக் கொண்டிருந்தன. தமென்னகொடெல்ல, வடிகவேவா, கோக்கெபெ, திவுல்வேவா, றபீவா, மச்சகம, கதிரவெளி, இப்பன்கட்டுவ, பின்வேவா, கலதற, மாமடுவ, அலுத்பொம்புவ ஆகிய மையங்கள் கல்லறைப் புதையல்களைக் கொண்டிருந்தன (Seneviratne 1984). யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்பட்ட ஆய்வு, வல்லிபுரத்தில் ஒரு கல்லறைப் புதையலையும், ஆனைக்கோட்டையில் ஒரு தாழிப்புதையலையும் எடுத்துக்காட்டியிருந்தது (Ragupathy 1987).

இந்த இடுகாட்டு மையங்கள் அளவிலும், உள்ளடக்கத்திலும், காலத்திலும் வேறுபடுகின்றன. பொம்பரிப்பு ஏறக்குறைய 8,000 தாழிப்புதையல்களையும், அவற்றுள் 10,000 முதல் 12,000 மக்களின் சடலங்களையும் கொண்டிருக்கின்றது (Begley 1981). அதே சமயம் காரைநகரில் ஒரே ஒரு நீளக்கிடத்திய புதையல் மட்டுமே காணப்பட்டது (Seneviratne 1984: 240).

இப்பன்கட்டுவவின் காலம் கி.மு. 700ஆம் ஆண்டிற்கும் கி.மு. 400ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும். ஆனைக்கோட்டை நீளக்கிடத்திய புதையலோடு காணப்படும் பள்ளமிட்ட ஓடுகள், லக்ஷ்மி பட்டயங்கள், றூலெட்டெட் மட்பாண்டங்கள் என்பன அதன் காலத்தை கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு எடுத்துச் செல்கின்றன. இதன் அருகாமையில் ஆதிகால நீர்ப்பாசன அமைப்புகள் காணப்படுவதால், அருகிலேயே பண்டைய குடியேற்றங்களின் எச்சங்கள் காணப்பட வேண்டும் (Seneviratne 1984). இருந்தாலும், விரைவான காட்டு வளர்ச்சியும் புதிய வாழ்விட வீடுகளின் தோற்றமும் பண்டைய குடியிருப்புகளைத் தொல்லியல் ரீதியாகக் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துவிடுகின்றன.

---

அநுராதபுர ASW2 அகழ்வாய்வுகளில், வாழ்வாதார முறைகளைப் பொறுத்த அளவில், வரலாற்றிற்கு முற்பட்ட பிற்கால விலங்கின உணவு எச்சங்களுக்கும் ஆரம்பகாலக் குடியிருப்புகளுக்கும் இடையே காணப்படும் நெருங்கிய உறவு குறிப்பிடத்தக்கது. செனிவிரத்ன குறிப்பிட்டிருப்பது போன்று, சமூகத்தினரால் கட்டமைக்கப்பட்ட பெரிய கட்டடங்கள் இல்லாதது, தலைவர்களுக்கு அதிக குடிமக்களை அணிதிரட்டும் திறன் இல்லாததைக் காட்டுகிறது.

பெருங்கற்காலக் கல்லறைகள் அளவில் சிறியன. அவை ஒரு கூட்டுக் குடும்பத்தின் பயன்பாட்டிற்கு மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டன. ஒரு கல்லறையை அமைக்க (கற்களைப் பாறைகளிலிருந்து கற்பலகைகளாக வெட்டியெடுத்து, அவற்றைக் கொண்டுவந்து நிலத்தில் வெட்டிப் பொருத்த) 5000 மணித்தியால வேலை நேரம் எடுக்கும் எனக் கணிக்கப்படுகிறது (Renfrew & Bahn 1991: 180).

---

இந்திய உபகண்டத்தின் வடபகுதியில் நகரமயமாக்கப்பட்ட இடங்களின் தொழில்நுட்பம் இங்கே வருகை தந்ததற்கான தொல்லியல் சான்றாகக் கருதப்படும் ஆரம்ப பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட ஓடுகள், அநுராதபுர ASW2-J மட்டக் குடியிருப்புகள் ஆரம்பித்து ஒன்றரை நூற்றாண்டுக்குள் இடம்பெறுகின்றன எனக் கூறப்பட்டுள்ளது (Coningham 1993: 121). இப்பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட கலவோடுகளின் வெப்பஒளிர்வு (Thermoluminescence) காலக்கணிப்பு, கி.மு. 700க்கும் கி.மு. 500க்கும் இடைப்பட்ட காலத்தைக் காட்டியது.

சிரான் தெரணியகல இதை வடஇந்திய மக்களின் இடப்பெயர்விற்கான ஆதாரமாக எடுத்துக்கொண்டார்.

“இரு மண்பாண்டங்களில் காணப்படும் வடஇந்தியப் பிராமி எழுத்துகள் இக்காலத்தில் ஸ்ரீலங்காவை வந்தடைந்த வெளிப்புறத் தூண்டுதல்களாகும். எனவே, மகாவம்சம் கூறும் கி.மு. ஆறாம் நூற்றாண்டில் ‘விஜயனினதும் அவனைப் பின்பற்றியவர்களினதும்’ வருகையோடு தொடர்புடைய ஆதாரமாக இதைக் கொள்ளத் தூண்டுகிறது” (Deraniyagala 1990a: 160).

தெரணியகல அநுராதபுரம் ‘ASW1 - Anuradhapura Salgaha Watta Plot 1’ இல் மேற்கொண்ட அகழ்வுக் குழியில் ‘பிய

அநுராத' என்ற பிராகிருத எழுத்துப்பதிவு கொண்ட ஒரு கலவோட்டைக் கண்டெடுத்தார் (Deraniyagala 1992: 746). அக் கலைப்பொருளைப் பற்றி அவர் இவ்வாறு கூறினார்: "ஒரு கலவோட்டில் 'அநுராத' என்ற பெயர் இடம்பெறுவது மிகவும் முக்கியமானது. அநுராதபுரத்தை நிறுவியவர் விஜயனின் ஒரு மந்திரியான அநுராத என்பவர். 'அநுராத' என்ற விண்மீன் கூட்டத்தின் கீழ் இது நிறுவப்பட்டதாகக் கூறப்படுகிறது. 'அநுராதர்கள்' இங்கே வசித்தார்கள். பாண்டுகாபயனின் தாய்வழி மாமனின் பெயரும் அநுராத. இந்த ஆதாரம் கி.மு. 500 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற விஜயனின் காலம் பற்றிக் கூறும் அடிப்படை வரலாற்று உண்மையின் மையக் கருத்திற்குச் சான்றாக அமைகிறது" (Deraniyagala 1992: 747).

---

இக்கால அகழ்வாய்வுகளின்படி, கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் தமிழ்நாட்டின் கீழடி, அழகன்குளம், பொருந்தல், கொடுமணல் ஆகிய இடங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தில் கண்ட கலவோட்டில் காணப்படும் 'தயாகுடெ' (தயாவின் குடம்) என்ற வாசகம் தமிழ்ப் பிராமி எழுத்து என இந்திய கல்வெட்டு நிபுணர் கே.வி. ரமேஷ் இனங்கண்டுள்ளார். மேலும், 'குட', 'குடம்', 'குடுவை' ஆகிய குடத்தைக் குறிக்கும் சொற்கள் சமஸ்கிருதம், பிராகிருதம், பாளி ஆகிய மொழிகளில் கிடையாது. தமிழிலும் மலையாளத்திலும் மட்டுமே இச்சொற்கள் காணப்படுகின்றன.

அநுராதபுரத்தில் காணப்படும் பிராமி எழுத்துப் பதிவுகள் தமிழ்நாட்டிலிருந்தே சென்றதாகக் கருதப்படுகின்றன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பிராமி எழுத்துப் பதிவுகள் இதுவரை வடஇந்தியாவில் கண்டெடுக்கப்படவில்லை. மேலும், மட்பாண்டங்களில் எழுதும் வழக்கம் வடஇந்தியாவில் கிடையாது. பண்டைய தமிழகத்திலும் இலங்கையிலுமே இவ்வழக்கம் காணப்படுகிறது.



இலங்கையில் அநுராதபுரத்தில் கண்டெடுத்த கலவோட்டில் காணப்படும் ' தயா குடெ' என்ற தமிழ்பிராமி வாசகம். இதன் வெப்பேற்றுக் கதிர் காலக்கணிப்பு இதன் திகதியை கி.மு 700–500 ஆண்டிற்கு எடுத்துச் செல்கிறது.
நன்றி: S.U. Deraniyagala



அநுராதபுரத்தில் கண்ட 'பிய அநுரத' கலவோடு.
Image Courtesy: S.U. Deraniyagala




யாழ்ப்பாணத்தில் கண்ட 'அநுராத ஸ' கலவோடு.
Image Courtesy: S. Krishnarajah.

'அநுராத' என்ற பெயர் பொறித்த கலவோடு அநுராதபுரத்தில் மட்டுமல்ல, யாழ்ப்பாண அகழ்வுகளிலும் கிடைத்திருக்கிறது. இந்தப் பெயர் கொண்டவர்கள் யாழ்ப்பாணத்திலும் இருந்திருக்கிறபடியால், 'பிய அநுராத' (பிரியமான அநுராதா) அநுராதபுரத்தை நிறுவியவரின் உறவினரைக் குறிப்பதாக உறுதியாகக் கூற முடியாது. இது ஒரு சாதாரண குடிமகளைக் குறிப்பிடுவதாகவும் இருக்கலாம். 'பிய' (பிரியமான) என்ற பிராகிருதப் பதம் கல்வெட்டுகளில் பொதுவாகப் பெண்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

---

## இலங்கையில் பெருங்கற் பண்பாட்டு கறுப்புசிவப்பு மட்பாண்ட மையங்கள்

இதுவரை பேசப்பட்ட தொல்லியல் மற்றும் மானிடவியல் ஆய்வுகள், இற்றைக்கு 3200 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் இடைக்கற்காலத்தில் நுண்கற்கருவிகளைக் கொண்டு வேட்டையாடிஉணவு சேகரித்து வாழ்ந்த மக்கள், சடுதியாக காடுகளை விட்டு நாட்டுக்குள் வந்து, கல்லாயுதங்களுக்குப் பதிலாக இரும்பு ஆயுதங்களை உபயோகித்து, குளக்கரைகளிலும் ஆற்றங்கரைகளிலும் ஆரம்பகால விவசாயத்தில் ஈடுபட்டு,

மட்பாண்டங்களில் உணவை உட்கொண்டு, இறந்தவர்களை தாழிகளிலும் கல்லறைகளிலும் புதைத்து, சடுதியானதொரு சமூக வாழ்வியல் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையே காட்டுகின்றன.

இந்த வாழ்வியல் மாற்றத்திற்கு தமிழகத்திலிருந்து பொங்கி வந்து இலங்கைத் தீவெங்கும் பரவிய பெருங்கற் பண்பாடே காரணம் என்பதையும் நீங்கள் இங்கே பேசப்பட்ட ஆய்வுகள் மூலம் அறிந்திருக்கிறீர்கள். இப்பெருங்கற் பண்பாட்டின் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

1. அடிப்படையான இரும்பு உலோகத் தொழில்நுட்பம். தமிழகத்தில் பல மையங்களில் கி.மு. மூன்றாம் ஆயிரத்தாண்டு காலத்திலிருந்தே இரும்பு பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. சமீபகால கதிரியக்க ஆய்வுகள் இரும்புப் பயன்பாட்டின் ஆரம்ப காலத்தை சிவகளை: கி.மு. 3345, கி.மு. 3259; ஆதிச்சநல்லூர்: கி.மு. 2522; மயிலாடும்பாறை: கி.மு. 2172; கீழ்நமண்டி: கி.மு. 1692 ஆகிய ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்கின்றன. இவ்விடங்களிலிருந்து கி.மு. 1200ஆம் ஆண்டுக்கு முன்னரே இரும்புத் தொழில்நுட்பம் தமிழகத்தின் பெரும்பாலான மையங்களைச் சென்றடைந்திருந்தது. கி.மு. 1200-1000 காலப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாடு இலங்கையை அடைந்தபோது, இரும்பு உலோகத் தொழில்நுட்பம் ஆரம்ப நிலையில் இல்லாமல், முன்னேற்றமடைந்த ஒரு தொழில்நுட்ப வடிவமாகவே இலங்கையை அடைந்திருக்கும்.

2. மட்பாண்டச் செய்கைக்கான சக்கரம்.

3. பெருங்கற்கால கறுப்புசிவப்பு மட்பாண்டம்.

4. உழுவதற்கான ஏர்; இரும்பினாலான ஏர்முனை.

5. நெற்பயிர்ச் செய்கை.

6. குளங்கள் மற்றும் அணைக்கட்டுகளின் உதவியுடன் நீர்ப்பாசனம்.

7. புதிய குடியிருப்புகளின் நிறுவல் - ஊர்களின் தோற்றம்.

8. இறந்தவர்களுக்கான புதிய அடக்க முறைகள்.

9. மட்பாண்டங்களில் குறியீட்டு எழுத்துகள்.

10. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவுத் தன்னிறைவு.

11. சமூகத் தலையார் - வேள்

தமிழகத்திலிருந்து மூன்று வழிகளில் பெருங்கற்காலப் பண்பாடு இலங்கையை அடைந்திருக்கிறது. சுதர்ஸன் செனிவிரத்ன ஏற்கனவே தனது ஆய்வில் இரு வழிகளைக் கூறியிருந்தார்.

1. இலங்கையின் வடமேற்குப் பகுதியிலிருக்கும் ஈமப்புதையல் கலாசாரம் (தாழி-கல்வட்டம்) பாண்டிய நாட்டின் வைகை-தாமிரபரணிப் பகுதிகளிலிருந்து வந்திருக்கிறது என்பது நிச்சயமாகிறது. 'தம்பபண்ணி' என்ற பெயர் திருநெல்வேலியிலுள்ள முக்கியமான நதிக்கும், வடமேற்கு இலங்கையில் தெதுறு ஓயா, கலா ஓயா நதிகள் பாயும் பிரதேசத்திற்கும் கொடுக்கப்பட்ட பெயராகும். இலங்கையின் பாளி இலக்கியங்களின்படி, 'தம்பபண்ணி' இலங்கையில் வடஇந்தியர்கள் வந்து குடியேறிய முதல் உறைவிடம். இந்த வடஇந்தியர்கள் மதுரையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள் என அவை கூறுகின்றன.

2. இலங்கையின் வடமத்திய, வடகிழக்குப் பகுதிகளில் காணப்படும் கல்லறை அடக்கங்கள் வடகிழக்கு வழியாகப் பரவியது எனக் கொள்ளலாம். தமிழ்நாட்டின் புதுக்கோட்டை மாவட்டத்திலிருந்து ஆந்திராவின் சித்தூர் மாவட்டம் வரை பரந்து காணப்படும் கிழக்குக் கரைப் பகுதியில் கல்லறை அடக்கங்களே பரவலாகக் காணப்படுகின்றன. இக்கல்லறை அடக்கப் பண்பாடு அங்கிருந்தே இலங்கையின் கிழக்கு வழியாக வடமத்திய பகுதிக்குப் பரவியுள்ளது.

தமிழ்நாட்டின் கிழக்குக் கரையை அண்டிய காவேரி நதி வளமளித்த நிலத்தில் கல்லறை அடக்கங்கள் காணப்படுகின்றன. அங்கிருந்து இப்பண்பாடு வடகிழக்கு இலங்கையை அடைந்து யான்ஓயா நதிக்கரை வழியாக வடமத்திய இலங்கை வரை பரவியிருக்கிறது. முன்பு கூறியபடி, முக்கியமான கல்லறை அடக்கங்கள் தமென்னகொடெல்ல, குருஹல்ஹின்ன, வடிகவேவா, கொக்கெபெ, திவுல்வேவா, றொபீவா ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

3. இவற்றோடு மூன்றாவது வழியும் ஒன்று உண்டு.

பண்டைய யாழ்ப்பாணத்தின் சம்புகோவளத் துறை வழியாகவும், பண்ணைத்துறை (யாழ்ப்பாணக் கோட்டையிருக்கும் துறை) வழியாகவும் இப்பண்பாடு கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய மையங்களையும், மற்றைய பெருங்கற்கால மையங்களையும் அடைந்திருக்கிறது. திண்டுக்கல், மதுரை வழியாக அழகன்குளம் வரை வரும் வைகை ஆற்றின் தாழ்நிலப் பகுதிகளிலிருந்த தாழிப்புதையல் மற்றும் நீளக்கிடத்திப் புதையல் பண்பாடு அங்கிருந்து யம்புகோளத் துறை, பண்ணைத்துறை வழியாக யாழ்ப்பாணத்தின் பெருங்கற்பண்பாட்டு மையங்களை வந்தடைந்திருக்கிறது.

இலங்கையின் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டுப் பரவலை, அப்பண்பாட்டின் முக்கிய கூறுகளில் ஒன்றான கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களின் பரவலைக் கொண்டு கண்டறியலாம் என தொல்லியல் பேராசிரியர் றொபின் கொனிங்ஹாம் கணிப்பிடுகிறார். இலங்கையில் அம்மட்பாண்டத்தின் பரவலை ஐந்து வலயங்களாகப் பிரித்துள்ளார் (Coningham 1999: 143). கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களின் உற்பத்தி கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முடிவதற்கு முன்னரே முடிவடைந்துவிட்டது. எனவே, இம்மட்பாண்டங்கள் காணப்படும் இடங்களில் அவற்றைப் பயன்படுத்திய மக்கள் இக்காலத்திற்கு முன்பே அவ்விடங்களில் குடியேறி அவற்றை உபயோகித்திருக்க வேண்டும்.




*இலங்கையில் ஐந்து வலயங்களாக அமைந்த பெருங்கற் பண்பாட்டு கறுப்புசிவப்பு மட்பாண்ட மையங்கள்.*
*Image Source: Dr Robin Coningham, 1999.*

**1) வடஇலங்கை வலயம்: யாழ்ப்பாணத் தொகுதி**

கடந்த அரை நூற்றாண்டுகளாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் தனியான ஒரு தொகுதியாக அமைகின்றன. இம்மட்பாண்டங்கள் மிக அதிகமாகக் காணப்பட்ட மிகப் பழமையான மையம் கந்தரோடை ஆகும். இவ்விடத்தில் கி.மு. 1350ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 200ஆம் ஆண்டு வரையான கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. கந்தரோடையைத் தவிர, கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் காணப்பட்ட இரு தாழிப்புதையல் மையங்களும் (ஆனைக்கோட்டை, வல்லிபுரம்), நீளக்கிடத்திப் புதையல் கொண்ட இரு மையங்களும் (ஆனைக்கோட்டை, சந்திராந்தை), ஒரு கல்லறைப் புதையல் மையமும் (வல்லிபுரம்) அகழ்வுகளில் காணப்பட்டமை ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. இவை தவிர, பல யாழ்ப்பாணக் குடியிருப்பு மையங்களில் கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனைக்கோட்டையில் கி.மு. 915ஆம் ஆண்டிலிருந்து குடியேற்றம் இடம்பெற்றமைக்கான கதிரியக்கக் கரிமத் திகதிகள் ஜேர்மனிய கதிரியக்க ஆய்வுக்கூடத்திலிருந்து தொல்லியல் ஆய்வாளர் கலாநிதி பரமு புஷ்பரட்ணத்தினால் பெறப்பட்டுள்ளன.

**Anaikoddai - Radiocarbon Dates 2024 - German Archaeological Institute, Bonn.**

| | | | | | Calibrated Age | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Lab Nr MAMS | Sample Name | $^{14}C$ Age [yr BP] | ± | d13C AMS [‰] | Probability 68% | Probability 95% | C [%] | Material |
| 71763 | 118 | 1504 | 16 | -22,1 | cal AD 563 - 593 | cal AD 549 - 601 | 0,7 | charcoal |
| 71764 | 119 | 1381 | 16 | -26,1 | cal AD 647 - 660 | cal AD 612 - 669 | 61,1 | charcoal |
| 71765 | 148 | 1574 | 16 | -31,6 | cal AD 436 - 544 | cal AD 432 - 549 | 60,5 | charcoal |
| 71766 | KAN 23 - C1 | -654 | 15 | -30,4 | | Cal AD 1957<br>Cal AD 2000-2002 | 31,3 | charcoal |
| 71767 | KAN 23 - C4 | 1496 | 16 | -25,0 | cal AD 569 - 597 | cal AD 549 - 605 | 49,8 | charcoal |
| 71768 | KAN 23 - C5 bottom | 1714 | 16 | -25,7 | cal AD 262 - 382 | cal AD 257 - 405 | 58,6 | charcoal |
| 71769 | KAN 23 - C18 bottom | 2178 | 17 | -27,4 | cal BC 349 - 176 | cal BC 355 - 167 | 65,3 | charcoal |
| 71770 | KAN 23 - C25 | 2231 | 17 | -29,1 | cal BC 366 - 209 | cal BC 379 - 205 | 61,8 | charcoal |
| 71771 | KAN 23 - C40 | -602 | 15 | -34,1 | | Cal AD 1957<br>Cal AD 2001-2004 | 45,3 | charcoal |
| 71772 | JAK 24 - C9 | 2089 | 17 | -21,6 | cal BC 148 - 51 | cal BC 164 - 47 | 0,5 | charcoal |
| 71773 | JAK 24 - C27 | 2257 | 17 | -30,1 | cal BC 386 - 233 | cal BC 391 - 209 | 43,1 | charcoal |
| 71774 | JAK 24 - C18 | 2726 | 24 | -32,9 | cal BC 897 - 831 | cal BC 915 - 815 | 0,0 | charcoal |
| 71775 | JAK 24 - C21 | 2208 | 17 | -23,4 | cal BC 356 - 204 | cal BC 365 - 197 | 58,9 | charcoal |
| 71776 | JAK 24 - C9 | 2102 | 16 | -20,3 | cal BC 152 - 56 | cal BC 169 - 52 | 61,9 | charcoal |
| 71777 | JAK 24 - C18 | 2208 | 17 | -23,6 | cal BC 356 - 204 | cal BC 365 - 197 | 59,2 | charcoal |
| 71778 | JAK 24 - C5 | 350 | 15 | -24,0 | cal AD 1490 - 1623 | cal AD 1476 - 1633 | 60,3 | charcoal |

*Image Source: Dr. Paramu Pushparatnam.*

தாழிப்புதையலும் நீளக்கிடத்தி அடக்கம் செய்யப்பட்ட குழிகளும் காணப்பட்ட இடம் ஆனைக்கோட்டை. இப் புதைகுழிகளில் கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளும் இரும்புப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கலாநிதி இரகுபதி, சந்திராந்தை (காரைநகர்), கும்புறுப்பிட்டி, சாட்டி (வேலணை), கொட்டுப்பணிவு (மண்ணித்தலை) ஆகிய மையங்களில் புதையல்களோடு கறுப்பு-சிவப்பு மட்கலன்கள் கண்டெடுக்கப்பட்டதைப் பதிவு செய்திருக்கிறார் (Ragupathy, P. 1987: 57-78).

1972ஆம் ஆண்டில் வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் சமீபமாக இருந்த ஒரு மண்மேட்டை அகழ்ந்தபோது, பெரிய கல் மேசையினால் மூடப்பட்டு, கற்களினால் சுவரமைக்கப்பட்ட ஒரு புதைகுழியும் அதனுள்ளே எலும்புகளைக் கொண்ட ஒரு தாழியும் (Urn in a Cist) காணப்பட்டது. இப் பெருங்கற் பண்பாட்டுப் புதையலில் கார்னீலியன் மற்றும் மதிப்புமிக்க கற்கள், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், குடுவைகள், இரும்பு ஆணிகள், நாணயங்கள் என்பன காணப்பட்டன (இந்திரபாலா, கா. 1973; Ragupathy, P. 1987: 83). வன்னிப் பகுதியில் மண்ணித்தலை, கல்முனை,

வெட்டுக்காடு, பள்ளிக்குடா, பல்லவராயன், ஈழவூர், கட்டுக்கரை, சாட்டி மற்றும் பல மையங்களின் அகழ்வாய்வுகளிலும் மேலாய்வுகளிலும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் காணப்பட்டதை தொல்லியல் அறிக்கைகளில் கலாநிதி புஷ்பரட்ணம் கூறியுள்ளார் (புஷ்பரட்ணம், ப. 1987: 83; 2017: 35-37).

**(2) அநுராதபுரத் தொகுதி**

அநுராதபுர மாவட்டத்தில் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டு மையம் குருகல்ஹின்ன என்ற இடமாகும். வடமத்திய மாகாணத்தில் அரசாங்க அதிபராக இருந்த ஆர். டபிள்யூ. லீவேர்ஸ் 1889ஆம் ஆண்டில் இவ்விடத்தில் இரு பெருங்கற் கல்லறைகளைக் (Cist burials) கண்டுபிடித்தார். அதன் பின்னர் 75 ஆண்டுகள் கழித்து இந்த மையத்தில் இரு கல்லறைகள் அகழ்ந்து திறக்கப்பட்டன (Godakumbura, 1967: 105). இந்த அகழ்வாய்வின் அறிக்கை வெளியிடப்படவில்லை.

அநுராதபுரத்தின் பழைய நகரத்தின் அகழ்வுகளின் போது அதன் ஆரம்பகால குடியிருப்புகள் கி.மு. இரண்டாம் ஆயிரத்தாண்டைக் காட்டியுள்ளன. அங்கு காணப்பட்ட ஆதி இரும்புக்காலம் கி.மு. 840-450 ஆண்டுக் காலத்தைக் காட்டியுள்ளது. இக்காலப் பகுதியில் மெருகேற்றப்பட்ட கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், கீறல் எழுத்துப் பொறித்த கலவோடுகள், இரும்புக் கசடுகள், கால்நடை எலும்புகள் என்பன கண்டெடுக்கப்பட்டுள்ளன (Coningham & Allchin, 1995: 159-169).

இப்பன்கட்டுவ பெருங்கற் கல்லறைப் புதையல்கள் குருநாகல்-தம்புல்ல வீதியில், தம்புல்ல நகரிலிருந்து தென்கிழக்காக 5 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கிறது. இப்புதையல்கள் 1970ஆம் ஆண்டில் இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டு, 1988-1991 ஆண்டுகளில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. இப்புதையல்களில் கண்ட ஈமப் பொருட்களில் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், பலவகையான களிமண் கலன்கள், இரும்பு, செம்பு, தங்கத்தினாலான கலைப் பொருட்கள், மணிகள், இரத்தினக் கற்கள், கழுத்தணிகள் என்பன காணப்பட்டன. இப்புதையல்களின் கதிரியக்கக் கரிம ஆய்வுகள் கி.மு. 700ஆம் ஆண்டுக் காலத்தைச் சுட்டிக்காட்டுகின்றன (Karunaratne, P.P. 2010; Sunday Observer, 6/10/2013).

நீண்ட காலமாக மிக விரிவாக ஆய்வு செய்யப்பட்ட ஈமப் புதையல்கள் பொம்பரிப்பில் காணப்பட்ட 8,000க்கும் மேற்பட்ட தாழிப் புதையல்களாகும். இவற்றோடு பலவகையான கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் காணப்படுகின்றன. இங்கே காணப்படும் இரும்புக் காலம் கி.மு. 1200-1000 ஆண்டுகளுக்கு எடுத்துச் செல்கிறது. இந்த ஈமப் புதையல்கள் காணப்படும் பிரதேசம் வில்பத்து வனவிலங்குப் புகலிடமாகும் (Begley, V. 1981; Seneviratne, S. 1984). இப் புகலிடத்தினுள் காணப்படும் ஆதி இரும்புக்கால மையங்களான தெக்கம், அலுத்பொம்புவ, கரம்பன்குளம் ஆகிய மையங்கள் இதுவரை அகழ்வாய்வு செய்யப்படவில்லை.

மாந்தையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள், இரும்பு மற்றும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் மிக ஆதியான காலப் பகுதிகளிலிருந்தே இவ்விடத்தில் காணப்படுவதை எடுத்துக்காட்டுகின்றன. மாந்தையில் காணப்படும் இரும்பின் தொழில்நுட்பம் தமிழகத்தின் கொற்கையிலிருந்து பரவிவந்ததாகக் கருதப்படுகிறது. இலங்கையில் இரும்பின் பயன்பாடு கி.மு. 1380ஆம் ஆண்டளவில் ஆரம்பமானதாக ஆய்வாளர் சிரான் தெரணியகல கூறியுள்ளார் (Deraniyagala, S.U. 2013: 511). இந்த உலோகத் தொழில்நுட்பம் மாந்தை வழியாக வந்திருப்பின், அக்காலகட்டத்தில் அதன் பயன்பாடு மாந்தையிலும் அருகாமையிலுள்ள மற்றைய ஆதிக் குடியேற்ற மையங்களிலும் பரவியிருக்கும்.

**(3) கிழக்கு இலங்கைத் தொகுதி**

கிழக்கு இலங்கையின் ஈமப்புதையல்கள் அதிகமான கல்லறைப் புதையல்களைக் (Cist Burials) கொண்டிருக்கின்றன. பெரும்பாலான கல்லறைகள் யான்ஓயா நதிக் கரைகளிலே காணப்படுகின்றன. இவை இலங்கையின் வடமத்திய பகுதிகளிலிருந்து வடகிழக்கு கடற்கரை வரை தொடர்ந்து காணப்படுகின்றன (Seneviratne, S. 1984: 283).

ஆரம்ப இரும்புக்காலப் புதையல்கள் யான்ஓயாவின் கழிமுகப் பகுதிகளிலும், அதிகமான புதையல்கள் இந்நதியின் நடுப்பகுதிக் கரைகளிலும் காணப்படுகின்றன. இதிலிருந்து இப்பண்பாடு கடல்வழியாகவே இப்பிரதேசத்தை வந்தடைந்திருக்கிறது என்பதை ஊகிக்கலாம். பெருவாரியான கல்லறைப் புதையல்கள் தமென்னகொடெல்ல, குருங்கல்ஹின்ன, வடிகவேவா, கொக்கெபெ, திவுல்வேவா, றொபேவா ஆகிய இடங்களிலே காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஒருங்கிணைத்து 'யான்ஓயா கூட்டுத் தொகுதி' (YanOya Complex) என அழைக்கப்படுகின்றன (Seneviratne, S. 1984: 283).

இக்கல்லறைப் புதையல்கள் மிக ஆழமாக முழுவதும் நிலத்தில் புதைக்கப்பட்டும், ஒரு பகுதி புதைக்கப்பட்டு மிகுதி நிலத்திற்கு மேல் தெரியும்படி அமைக்கப்பட்டும்

அல்லது கற்கள் முழுவதும் நிலத்தின் மேல் அமைக்கப்பட்டும் இருக்கின்றன. இக் கல்லறைகளைச் சுற்றி கல்வட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஈமப் புதையல்களில் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், மணிகள், இரும்புப் பொருட்கள் என்பன காணப்படுகின்றன (Seneviratne, S. 1984: 283).



*நிலத்தினுள்ளே புதைக்கப்பட்ட கல்லறை - Fully Buried Cist with Cover Stone*




*நிலத்தின் மேல் அமைக்கப்பட்ட கல்லறை - Fully Exposed Overground Cist*

தமிழ்நாட்டில் பின்னாளில் சோழநாடு என அழைக்கப்பட்ட பிராந்தியத்தில் கல்லறைப் புதையல்கள் முக்கியமான ஈமச் சின்னங்களாகக் காணப்படுகின்றன. இப்பிராந்தியத்திலிருந்தே, முக்கியமாகக் காவேரி நதியின் கழிநிலப் பகுதிகளிலிருந்தே இப்பண்பாடு வடகிழக்கு இலங்கையை வந்தடைந்திருக்கிறது. ஆரம்ப இரும்புக்காலம் முழுவதும் இப்பண்பாட்டுப் பெயர்ச்சி இயற்கையாக நடைபெற்ற ஒரு நிகழ்வாகும் (*The flow of influence from this area, particularly from the Kaveri delta, to the northeast of Sri Lanka is a natural process that continued throughout the Early Iron Age*) (Seneviratne, S. 1984: 283).

### (4) மேற்கு இலங்கைத் தொகுதி

தென்மேற்கு இலங்கையில் இரும்புக்கால பெருங்கற் புதையல்கள் அருகியே காணப்படுகின்றன. கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் களனி ஆற்றங்கரையோர மையங்களிலும், கித்துல்கல, இரத்தினபுரி ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கல்அத்தற என்ற இடத்தில் ஒரு கல்லறைப் புதையலும், மக்கேவித்த என்ற இடத்தில் பெருங்கல் பரல் உயர்பதுக்கையும் காணப்பட்டுள்ளன (Deraniyagala, 1992).

இந்த நிலைக்கு மாறாக, அத்தனகல என்ற இடத்தில் காணப்படும் குகைகளான அலுலென, பெலிலென, பாதாதொம்பலென, பாகியன்லென ஆகிய குகைகள் அகழ்வாய்வு செய்யப்பட்டு, அவற்றில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் முறையாக கதிரியக்கக் கரிம ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இப்பொருட்கள் இலங்கையின் ஆரம்பகால நவீன மனிதரின் (Homo Sapiens Sapiens) குடியிருப்புகளைக் காட்டியுள்ளன. இவற்றில் காணப்பட்ட மனித எலும்புகளின் காலம் கி.மு. 28,000 ஆண்டுகள் எனவும், கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்களின் ஆரம்பகாலம் கி.மு. 1000-800 ஆண்டுகளுக்கு இடைப்பட்டது எனவும் கண்டறியப்பட்டுள்ளது (Kennedy & Deraniyagala 1989; Deraniyagala, S.U. 1992).

### 5) தெற்கு இலங்கைத் தொகுதி

தென் இலங்கையில் கிரிந்தி ஓயா, கும்புக்கன் ஓயா ஆகிய நதிக் கழிமுக மையங்களிலும், வளவ கங்கைத் தீரமான ரிடியகமவிலும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. 1996ஆம் ஆண்டில் தொல்லியலாளர் ஒஸ்மண்ட் போப்பியராய்ச்சியும் சகாக்களும் இப்பிரதேசத்தில் மேற்கொண்ட அகழ்வாய்வுகளில் பெருந்தொகையான கறுப்பு-சிவப்பு மட்பாண்ட ஓடுகளை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள் (“*We are able to collect not only at Ridiyagama, but also along the Walawe Ganga, large quantities of early Black and Red Ware, some of which were engraved with early megalithic symbols*” (Bopearachchi & Wickremasinghe 1999: 7). தென்இலங்கையின் ஆரம்பகாலத் தலைநகரமான உருகுணை, இக்கால நகரமான திஸ்ஸமகாராமை என இனம் காணப்பட்டுள்ளது. இந்த மையத்தில் காணப்படும் 6 மீட்டர் உயரமான மேடும் அதைச் சுற்றியுள்ள நான்கு பௌத்த துறவிமடங்களும் (Monasteries) கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக அகழாய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. இந்த மையங்களில் காணப்படும் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், றூலெற்றெட் கலன்கள், கலவோடுகளில் காணப்படும் பிராமி எழுத்துப் பதிவுகள், இரும்புப் பொருட்கள், இந்தோரோமானிய மற்றும் செம்பினாலான முத்திரை நாணயங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கன (Allchin 1995: 172-173; Bopearachchi & Wickremasinghe 1999: 7).

I

நவீனகால கதிரியக்கக் காலக் கணிப்புகளின்படி (Radiometric Dating Methods) இற்றைக்கு 4,000-3,800 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே (கி.மு. 2033-கி.மு. 1895) கர்நாடக மாநிலத்தின் மாஸ்கி, தமிழகத்தின் பையம்பள்ளி ஆகிய மையங்களிலும், கி.மு. 1600 ஆண்டுகளுக்கு முன்னரிருந்து கர்நாடகத்தின் ஹல்லூர், தடகனஹள்ளி, குமரனஹள்ளி ஆகிய மையங்களிலும் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு ஆரம்பமாகி, அங்கிருந்து தமிழ்நாடு வழியாக கி.மு. 1200 ஆண்டளவில் இலங்கையை வந்தடைந்திருக்கிறது.

இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் கதிரியக்கக் காலக்கணிப்பு ஆய்வுகள் இன்னும் முழுமையாக முன்னெடுக்கப்படவில்லை. எனினும், இரும்புக்காலப் பெருங்கற் பண்பாட்டிற்குரிய கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டு, காலக்கணிப்புச் செய்யப்பட்ட முக்கிய மையங்களின் தரவுகள் பின்வருமாறு அமைகின்றன: கந்தரோடை (கி.மு. 1300), ஆனைக்கோட்டை (கி.மு. 915), பொம்பரிப்பு (கி.மு. 900), அநுராதபுரம் (கி.மு. 840) மற்றும் இப்பன்கட்டுவ (கி.மு. 700). இந்தப் பண்பாடு தமிழகத்திலிருந்து இலங்கையை வந்தடைந்ததை மேலே கூறப்பட்ட கலாநிதிகள் விமலா பெக்லி, சி.க. சிற்றம்பலம், பொன்னம்பலம் இரகுபதி, சுதர்ஷன் செனெவிரத்ன போன்ற ஆய்வாளர்களின் ஆய்வுகளிலிருந்து அறிந்திருப்பீர்கள்.

இப்பண்பாடு கடல் மார்க்கமாக இலங்கையை அடைந்தபடியினால் கடற்கரையை அண்டிய மையங்களிலேயே பெருங்கற் பண்பாட்டின் ஆதி ஆரம்பத் திகதிகள் கிடைக்க முடியும். இதன்படி கந்தரோடை கி.மு. 1300 ஆண்டையும், ஆனைக்கோட்டை கி.மு. 915 ஆண்டையும், பொம்பரிப்பு கி.மு. 900 ஆண்டையும் காட்டுகின்றன. இவற்றை 'மாதிரி'யாக எடுத்துக்கொண்டால் கி.மு. 1200 - கி.மு. 1000 ஆண்டுக் காலத்தில் இரும்புக்காலப் பெருங்கற் பண்பாடு இலங்கையை வந்தடைந்திருக்கிறது எனக் கொள்ளலாம்.

RADIOCARBON DATES FROM MEGALITHIC BURIALS, MASKI, KARNATAKA – 2015

| Lab code | Provenance | 14C age (BP) | Calibrated date |
|---|---|---|---|
| ISGS A2282 | MARP79B no. 1 | 2955 15 | 1222–1117 cal BC |
| ISGS A2283 | MARP79B no. 1 | 3070 20 | 1407–1276 cal BC |
| ISGS A3229 | MARP79B no. 6 | 3040 20 | 1389–1225 cal BC |
| ISGS A3230 | MARP79B no. 7 | 3510 20 | 1895–1756 cal BC |

*Reproduced from Radiocarbon, Vol. 56, 2015, Page 800, University of Arizona.*

கர்நாடகத்தின் மாஸ்கியில் பெருங்கற் பண்பாட்டுப் புதையல்களின் கதிரியக்க கரிமத் திகதிகள்.

**TABLE1 [ Possehl, Gregory L. and Gullapalli, Praveena, 1999 ]**
**RADIOMETRIC DATES FOR MEGALITHIC IRON IN PENNINSULAR INDIA**

| SITE AND PERIOD | LAB NO. | CALIBRATED DATE BC/AD (1δ CAL) (CALIB-3 PROGRAM) |
|---|---|---|
| **RADIOCARBON DATES** | | |
| Hallur, Period IB, Late Neolithic | TF-586<br>TF-576 | 1415 (1310) 1134 BC<br>1679 (1522) 1426 BC |
| Hallur, Period II, Neolithic/Iron Age Overlap | TF-575<br>TF-573<br>TF-570 | 1255 (1039) 918 BC<br>1116 (976, 965, 935) 837 BC<br>1378 (1196, 1181, 1165, 1141, 1139) 1007 BC |
| Kakoria, Megalithic | TF-179<br>TF-183 | AD 1646 (1673, 1779, 1797, 1945, 1953) 1954<br>AD 1643 (1672, 1781, 1795, 1946, 1953) 1954 |
| Korkai, Megalithic | TF-987 | 906 (818) 795 BC |
| Naikund, Megalithic | BS-94<br>BS-92 | 797 (759, 676, 658, 641, 550) 405 BC<br>782 (522) 398 BC |
| Paiyampalli, Megalithic | TF-828<br>TF-824<br>TF-823<br>TF-825 | 333 (102) BC AD 9<br>AD 1183 (1271) 1294<br>800 (764, 614, 606) 410 BC<br>AD 1262 (1294) 1396 |
| **Paiyampalli, Neolithic/Megalithic Transition** | **TF-827** | **2033 (1892) 1747 BC** |
| Paiyampalli, Late Southern Neolithic | TF-833<br>TF-829<br>TF-832<br>TF-829 (BS) | 1735 (1499, 1481, 1456) 1223 BC<br>AD 978 (1027) 1176<br>AD 1193 (1278) 1300<br>AD 787 (897, 910, 958) 1015 |
| Palavoy, Neolithic/Megalithic Transition | TF-700 | 1855 (1680) 1526 BC |
| Satanikota, Megalithic | BS-202<br>BS-201<br>BS-204<br>BS-203 | AD 544 (635) 672<br>AD 340 (427) 554<br>8081 (8018) 7927 BC<br>6458 (6372) 6182 BC |
| Takalghat, Pre-Iron Megalithic | TF-783<br>TF-784<br>TF-784 (BS) | 796 (759, 676, 658, 641, 550) 406 BC<br>768 (487, 442, 424) 395 BC<br>758 (401) 264 BC |
| **THERMOLUMINESCENCE DATES** | | |
| Kumaranhalli | PRL-TL-47<br>PRL-TL-50 | 1290±90 BC<br>1270±170 BC |
| **Gufkral** ( RADIOCARBON DATES, PERIOD II , MEGALITHIC IRON AGE ) | **BS 434<br>BS 431<br>BS 433<br>BS 371** | **2195 ( 2035 ) 1900<br>1885 ( 1747 ) 1677<br>2131 ( 1945 ) 1779<br>1888 ( 1747 ) 1674** CALIBRATED DATE BC |

இந்தியத் தீபகற்பத்தில் பெருங்கற் பண்பாட்டுப் புதையல்களின் கதிரியக்கத் திகதிகள்.



**Gregory Possehl**



**Praveena Gullapalli**

*இந்தியத் தீபகற்பத்தின் கதிரியக்கத் திகதிகளை வெளியிட்ட ஆய்வாளர்கள்.*

II

இலங்கையில் பெருங்கற்கால யுகத்திற்குரிய (கி.மு. 1200 - கி.மு. 1000) கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் அச்சுற்றாடலின் தன்மையைப் பொறுத்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டமையைக் காண முடிகிறது. கடல் வளங்களில் ஆர்வம், வேட்டையாடல், மிருக வளர்ப்பு, விவசாயம் போன்ற துறைகளை அடிப்படையாகக் கொண்ட படிநிலை வளர்ச்சி இலங்கையில் இரும்பு யுகத்தின் ஆரம்பத்திலிருந்து ஏற்பட்டிருக்கிறது. இலங்கையில் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்ட பிரதேசங்கள் முக்கியமாக வறண்ட வெப்ப வலயப் பிரதேசங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரும்புத் தொழில்நுட்பத்தில் நாட்டம் கொண்ட மனிதனின் அறிவு விவசாயத் துறையுடன் இணைந்தபடியினால் விவசாயத் துறை வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக அவசியமான பொருளாதாரத்தை அமைக்கும் நோக்கத்துடன் தொழில்நுட்ப உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன. குடியிருப்புகளை அமைப்பதற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் நீர் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இரும்பு உபகரணங்களின் உதவியோடு குளங்களை நிர்மாணிப்பதிலும், கால்வாய்களை அமைப்பதிலும் மக்கள் ஊக்கம் கொண்டனர். சிறிய குளங்களை நிர்மாணித்து, உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் நவீன தொழில்நுட்ப முறைகளும் கையாளப்பட்டன. இப்பெருங்கற்காலம் உணவு உற்பத்தியின் ஒரு புரட்சிகரமான காலகட்டம் எனலாம்.

இக் காலகட்டத்திற்குரிய பொருளாதார மற்றும் உற்பத்தித் துறைகளை நோக்குமிடத்து சமூக வளர்ச்சி பல படிமுறைகளைக் கொண்டிருந்தது. விசேடமாக இரும்பு உற்பத்தி, விவசாயம், மட்பாண்டக் கைத்தொழில் ஆகிய துறைகள் பொருளாதார ரீதியான சலுகைகளுக்கு உரித்தான உயர்மட்டத்தைச் சார்ந்தவர்களுடைய கைத்தொழில்களாக அமைந்திருந்தன. சில சந்தர்ப்பங்களில் சாதாரண மட்டத்தில் உள்ளவர்களும் மேற்கூறிய உற்பத்திகளில் ஈடுபட்டிருந்திருக்கலாம். இக்கருத்தை ஏற்றுக்கொள்வதாயின் ஈமப்பூமியில் காணப்படும் அடக்கங்கள் பெரும்பாலும் உயர்மட்டத்தைச் சார்ந்தவர்களுடைய அடக்கங்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

கி.மு. 1200 ஆண்டு முதலான காலகட்டத்தில் மனித சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கை வரலாற்றில் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் வேட்டையாடித் தனது உணவைத் தேடிக்கொள்வதில் ஈடுபட்ட மனிதன் படிப்படியாக முன்னேற்றமடைந்து உணவைத் தயாரிப்பதற்கான வழிவகைகளை அமைத்துக்கொண்டான். விவசாயத்தை மேற்கொண்டு, அதற்கான குளங்களை நிர்மாணிப்பதிலும், நீர்ப்பாசனத்தை வழங்குவதிலும், தமக்கென நிரந்தரமான வதிவிடங்களை நிர்மாணிப்பதிலும் மனிதன் ஈடுபட்டான்.

இக்காலத்தில் மக்கள் சிறு சிறு கிராமங்களிலே செறிந்து வாழ்ந்தனர். இக்கிராமங்களிலே பல்வேறு தொழில்புரியும் குழுக்களும் வாழ்ந்தன. ஆரம்பகாலத்தில் கிராம மக்களிடையே நெருங்கிய ஒற்றுமையும் கூட்டுறவும் இருந்தன. ஈமச்சின்னங்களையும் குளங்களையும் உற்று நோக்கும்போது இவை பல நாட்களாகப் பலரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியாலேயே ஆக்கப்பட்டமை தெரிகிறது.

இலங்கையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஈமச்சின்ன மையங்கள் காணப்படும் இடங்களில் மக்கள் குடியிருந்த பகுதிகள் பற்றிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. கல்லறைகளையும் தாழிகளையும் அமைப்பதில் கவனம் செலுத்திய மக்கள் ஏன் தமக்கென வசதியான இல்லங்களை அமைக்கவில்லை என்பது புரியவில்லை. ஈமச்சின்னங்களை அமைப்பதில் கைதேர்ந்த இவர்களிடம் அழியாத பொருட்களைக் கொண்டு வதிவிட மனைகளை அமைக்கும் திறன் இருக்கவில்லை என்ற வாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது. அநுராதபுர அகழ்வுகளில் வீடுகளைக் கட்டுவதற்கு மரத்தூண்கள் நாட்டப் பயன்படுத்தப்பட்ட குழிகள் மண்ணிலே துளைகளாகக் காணப்படுவதை நோக்குமிடத்து, அக்கால மக்களின் இருப்பிடங்கள் பெரும்பாலும் அழியும் பொருட்களான மரம், மண் போன்றவற்றால் ஆக்கப்பட்டன என அறிய முடிகிறது.

III

இரும்புக்காலப் பெருங்கற் கலாசாரத்தில் ஏற்பட்ட துரித வளர்ச்சி வெகு சீக்கிரத்தில் மனித நாகரிக வளர்ச்சியின் அடுத்த கட்டமாகிய வரலாற்றுக் காலத்திற்கு இலங்கையை இட்டுச் சென்றது. இக்காலத்தில் ஏற்பட்ட விவசாயம், வணிகம் ஆகியவற்றின் பெருவளர்ச்சியையும், நகரங்கள், துறைமுகப் பட்டினங்கள் ஆகியவற்றின் எழுச்சியையும் தொல்லியல் ஆய்வுகளின் மூலம் அறிய முடிகிறது. கி.மு. 800ஆம் ஆண்டளவில் அநுராதபுரம் மக்கள் செறிவாக வாழ்ந்த ஒரு ஆரம்பகால நகரமாகிவிட்டிருப்பதை ஏற்கனவே கலாநிதி கொனிங்ஹாமின் அகழ்வு அறிக்கையில் பார்த்தோம்.

கி.மு. 500ஆம் ஆண்டளவில் கந்தரோடையும், சமகாலத்தில் மகாகமையும் நகரங்களாகிவிட்டன. கி.மு. 700ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்துறை (Davis, C. et al. 2018) ஒரு துறைமுகமாக ஆகிவிட்டிருந்தது. அக்காலப்பகுதியில் சம்புகோளமும் துறைமுகமாகியிருக்கலாம். கி.மு. 700ஆம் ஆண்டு காலத்திலிருந்தே அநுராதபுரத்தில் பிராமி எழுத்துப் பதிவுகள் இருந்ததை கதிரியக்கத் தேதிக்கணிப்பு ஆய்வுகள் காட்டுகின்றன. இவை அனைத்தையும் ஆதாரமாகக் கொண்டு கி.மு. 700ஆம் ஆண்டளவில் இலங்கையில் மையப்படுத்தப்பட்ட அரசாங்கக் கட்டமைப்பு உருவாக்கம் (State Formation) இடம் பெற்றதாகக் கொள்ளலாம்.

மேற்கூறப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகளும் அவற்றின் கண்டுபிடிப்புகளும், கி.மு. ஆயிரத்தாண்டின் ஆரம்ப காலத்திலிருந்தே பெருங்கற் பண்பாடும் அதன் முக்கிய அங்கங்களான கறுப்புசிவப்பு மட்பாண்டப் பயன்பாடு, இரும்பின் பயன்பாடு, நீர்ப்பாசன விவசாயம், நெல் வளர்ப்பு என்பனவும் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்து இலங்கைத் தீவு முழுவதிலும் பரவலாகப் பயன்பாட்டிலிருந்ததை எடுத்துக்காட்டுகின்றன. தொல்லியல் அகழ்வாய்வுகள் காட்டும் கறுப்புசிவப்பு மட்பாண்டமும், அதில் காணப்படும் ஆரம்பகால எழுத்துப் பதிவுகளையும் கொண்ட பெருங்கற் பண்பாட்டின் வருகைக் காலம், இலங்கையின் நாகரிக வளர்ச்சியின் ஆரம்ப காலமாகக் கொள்ளப்பட வேண்டும்.

*IV*

இலங்கையின் சில மூத்த ஆய்வாளர்கள் 'பெருங்கற் கலாசாரம்' என்று ஒரு பண்பாடு கிடையாது, தென்னாசியாவில் இந்தியாவின் கங்கைச் சமவெளியிலிருந்து இலங்கையின் ஹம்பாந்தோட்டை வரை பரவியிருப்பது 'இரும்புக்காலக் கலாசாரம்தான்' என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார்கள். 'இரும்புக்காலம்' அல்லது 'இரும்பு யுகம்' என்பது மனித வரலாற்றின் நாகரிக வளர்ச்சியில் - 'கற்காலம்', 'வெண்கலக்காலம்', 'இரும்புக்காலம்' என - ஒரு காலகட்டத்தைக் குறிக்கும் பதம். அக்காலகட்டங்களில் வெவ்வேறு நாடுகளின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு வகையான கலாசாரங்களை மக்கள் பின்பற்றி வந்திருக்கிறார்கள்.

உதாரணத்திற்கு, தென்னாசிய இரும்புக்காலக் கலாசாரத்தின் ஓர் அம்சத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் - ஆதி இரும்புக்கால வடஇந்திய மக்கள் இரும்பின் அறிமுகத்தோடு முதலில் வண்ணப் பூச்சுடைய சாம்பல் மட்பாண்டங்களையும் (Painted Grey Ware), சுமாராக கி.மு. 550ஆம் ஆண்டுக் காலத்திலிருந்து வடக்கின் மெருகூட்டப்பட்ட கறுப்பு மட்பாண்டங்களையும் (Northern Black Polished Ware) பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். அதே காலகட்டத்தில், ஆதி இரும்புக்காலத்தில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்த மக்கள் கறுப்புசிவப்பு மட்பாண்டங்களைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எனவே, வட இந்திய, தென்னிந்திய, இலங்கையின் ஆதி இரும்புக்காலக் கலாசாரங்கள் ஒன்றானவை அல்ல.

இரும்புக்காலத்தை ஒரு காலப்பகுதியாகவும், அக்காலத்தில் நிகழ்ந்த ஒரு தனிப்பட்ட கலாசாரப் பண்பாட்டை வலியுறுத்தும் முகமாகவும், விமலா பெக்லி போன்ற ஆய்வாளர்கள் 'இரும்புக்காலப் பெருங்கற் கலாசாரம்' என்ற வார்த்தையைப் பிரயோகித்தனர். வங்காளப் பேராசிரியர் சுனித்தி குமார் சாட்டர்ஜீ அக்காலத்தைய மற்றொரு கலாசாரத்தை விளக்கும் முகமாக 'இரும்புக்காலத் தகனக் கிரியை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்.

எனவே, 'இரும்புக்காலக் கலாசாரம்' என்ற பதம் ஒரு பொதுப்படையான தலைப்பே தவிர, ஒரு குறிப்பிட்ட மக்களின் தனித்துவமான கலாசாரப் பண்பாட்டைக் குறிப்பிடும் பதம் எனக் கூற முடியாது.

*V*

தென்னாசிய வரலாற்றில் இந்தியப் பெருநிலத்திற்கு இல்லாத ஒரு தனிச்சிறப்பு இலங்கைக்கு உள்ளது. தெளிவாக எழுதப்பட்ட ஒரு குலவரலாற்று நூல் இங்கைக்கு உள்ளது. இந்திய வரலாற்றை எழுதும்போது பல தருணங்களில் காலநிர்ணயம் மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருக்கிறது. அதே சமயம், மகாவம்சம் ஒரு மதகுலவரலாறு மட்டுமே. ஒரு குலம் தனது மதத்தை முன்வைத்து தனக்காக எழுதிக்கொண்ட வரலாறு அது. அதன் பின்னணியில் பௌத்த மதப் பெருமிதங்கள் பேசப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

இலங்கையின் புத்த குருமாரினால் எழுதப்பட்ட மகாவம்ச வரலாற்றில் வலுவான மதச்சார்பும், அற்புதங்களும், உண்மைக்குப் புறம்பான கண்டுபிடிப்புகளும் உட்பொதிந்துள்ளன. உதாரணமாக -

1. புத்தபிரான் மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்தமை.

2. கி.மு. 500ஆம் ஆண்டில் விஜயன் தனது 700 சகாக்களுடன் ஒரே பாய்க்கப்பலில் வந்து சேர்ந்தது (அக்காலத்தில் அத்தகைய பெரிய பாய்க்கப்பல் உலகில் எங்குமே இருக்கவில்லை).

3. விஜயன் புத்தபிரான் பரிநிர்வாணம் அடைந்த அதே நாளில் (பொதுவாக கி.மு. 483ஆம் ஆண்டு எனக் கணிக்கப்பட்டிருக்கிறது) இலங்கையை வந்தடைந்தது.

4. கிழக்கு இந்தியாவிலிருந்த லாலாவிலிருந்து (வங்காளம்) இலங்கை நோக்கிப் புறப்பட்ட விஜயனின் கப்பல், வழியில் மேற்கு இந்தியக் கரையிலிருந்த துறைமுகமான 'சுப்பாரகா' துறைமுகத்தில் தங்கி, பின்னர் அங்கிருந்து புறப்பட்டு இலங்கை வந்தடைந்தது.

5. விஜயனும் அவனது 700 சகாக்களும் இலங்கையை வந்தடைந்த போது இலங்கையில் மனித இனங்கள் இருக்கவில்லை. இங்கிருந்த இயக்கர் இராட்சத இனத்தவர். நாகர்கள் அமானுஷ்யர்கள். இலங்கையில் காலடி வைத்த முதல் மனித இனத்தவர் விஜயனும் அவனது தோழர்களும் ஆவர். இவர்களின் வம்சாவளியினரே சிங்கள மக்களாவர்.

மேற்கூறிய சம்பவங்களை ஏற்றுக்கொள்ளாத இலங்கையின் வரலாற்றாசிரியர்கள் பலர், இச்சம்பவங்கள் வடஇந்தியாவிலிருந்து பெருந்திரளாக இங்கே வருகை தந்து குடியேறிய மக்களைக் (Exodus of NorthIndian Settlers) குறிப்பிடுவதாக எடுத்துக்கொண்டார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரித்தானிய வரலாற்றாசிரியர்களும், அவர்களைத் தொடர்ந்த இருபதாம் நூற்றாண்டின் இலங்கை ஆசிரியர்களும் இக்கருத்தை அடிநாதமாகக் கொண்டே இலங்கையின் வரலாற்றை அமைத்தார்கள்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் குடியேற்றங்கள் ஆரம்பமாகிவிட்டமை, 34,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நுண்கற்களைப் பயன்படுத்தும் மக்கள் வாழ்ந்தமை, 1200 ஆண்டுகளுக்கு முன்னர் ஆதி இரும்புக்கால மையங்கள் இலங்கை முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டமை ஆகிய உண்மைகளை அறிந்திருந்தும், 2005ஆம் ஆண்டில் பென்குயின் நிறுவனம் வெளியிட்ட பிரபலமான பேராசிரியர் கே. எம். டி சில்வாவின் 'இலங்கையின் வரலாறு' (A History of Sri Lanka) என்ற நூலின் முதலாவது அத்தியாயம் 'காலனித்துவவாதிகளும் குடியேறியவர்களும்' (Colonists and Settlers) என்ற தலைப்பில், இந்தோஆரிய மக்களின் குடியேற்றத்துடன் இலங்கை வரலாறு ஆரம்பிப்பதாகக் கூறுகின்றது.

VI

இலங்கையில் இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து பெருவாரியான மக்கள் இங்கே வந்து குடியேறியதற்கான ஆதாரம் ஏதும் கிடைக்கவில்லை. அவர்கள் அவ்வாறு வந்து குடியேறியிருந்தால் அக்காலத்தில் அவர்கள் பயன்படுத்திய 'வண்ணப் பூச்சுக்கொண்ட சாம்பல் மட்பாண்டமோ' அல்லது 'வடஇந்திய மெருகூட்டப்பட்ட கறுப்பு மட்பாண்டமோ' பரவலாக நாடெங்கும் கிடைத்திருக்கும். இலங்கையின் அகழ்வுகளில் 'வண்ணப் பூச்சுக்கொண்ட சாம்பல் மட்பாண்டங்கள்' காணப்படவில்லை. 'வட இந்திய மெருகூட்டப்பட்ட கறுப்பு மட்பாண்ட' ஓடுகள் சில யாழ்ப்பாணக் கோட்டை அகழ்விலும், அநுராதபுரம் ASW2 அகழ்விலும், மகாகமையிலும், மாந்தை அகழ்விலும் (ஒரேயொரு கலவோடு) கிடைத்திருக்கின்றன. இவை வர்த்தகம் வழியாக வந்த மட்பாண்டங்களாகும். இதைத் தவிர இம்மட்பாண்டம் இலங்கையில் வேறு எங்குமே காணப்படவில்லை. இதனோடு ஒப்பிடும்போது, கி.மு. 1200 ஆண்டுக்காலம் முதலாக பெருங்கற் பண்பாட்டுக் கறுப்புசிவப்பு மட்பாண்டங்கள் இலங்கையெங்கும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

கி.மு. 1200 ஆண்டுக் காலத்திலிருந்தே பெருங்கற் பண்பாட்டின் வருகையோடு இரும்பின் பயன்பாடு, நீர்ப்பாசன விவசாயம், நெற்பயிரீடு, கறுப்புசிவப்பு மட்பாண்டப் பயன்பாடு ஆகிய அம்சங்களுடன் இலங்கை மக்களின் நாகரிக வளர்ச்சி ஆரம்பமாகியுள்ளது. கி.மு. 800ஆம் ஆண்டுக் காலத்திலேயே - விஜயன் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படும் கி.மு. 500ஆம் ஆண்டு காலத்திற்கு 300 ஆண்டுகள் முன்னதாகவே - அநுராதபுரம் மையப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்பைக் கொண்ட ஓர் ஆதிகால நகரமாகிவிட்டதை அகழ்வாய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே வடஇந்திய வர்த்தகர்கள் இலங்கைக்கு வருகை தந்ததற்கான தொல்லியல் சான்றுகள் கந்தரோடையிலும் மாந்தையிலும் காணப்படுகின்றன. அவர்களின் வருகையோடு பிராகிருத மொழியும் இலங்கையை வந்தடைந்திருக்கும். அநுராதபுர அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகளின் பின்னணியை ஆராயும்போது, இவ்வெழுத்து முறை தமிழகத்திலிருந்தே இலங்கைக்குப் பரவியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

1. ஒன்று, மட்பாண்டத்தில் எழுத்துகளைப் பதிக்கும் வழக்கம் தமிழகத்திலும் இலங்கையிலும் மட்டுமே காணப்படுகிறது. வடஇந்தியாவில் இப்படி

ஒரு வழக்கம் இருந்ததாகத் தொல்லியல் சான்றுகள் கிடையாது.

2. இரண்டாவது, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்னர் வடஇந்தியாவில் பிராமி எழுத்துப் பதிவுகள் இருப்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மேலும், இலங்கையின் ஆரம்பகாலப் பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படும் எழுத்து வடிவங்கள் தமிழகப் பிராமிக் கல்வெட்டு வடிவங்களை ஒத்திருப்பதை சத்தமங்கல கருணாரத்ன போன்ற ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள் (*Karunaratne, S.* 1984).

கி.மு. 250ஆம் ஆண்டளவில் இலங்கையை வந்தடைந்த பௌத்த மதத்துடனேயே பாளி மொழி இலங்கையை வந்தடைந்தது. சிங்கள மொழியின் உருவாக்கத்தில் ஹெளு, தமிழ், பிராகிருதம், பாளி ஆகிய மொழிகள் இடம்பெற்ற போதிலும், பெரும்பாலான சொற்பதங்கள் பாளி மொழியிலிருந்தே பெறப்பட்டுள்ளன. 'சொற்பதங்களை அடிப்படையாகக் கொண்டு அதை ஓர் இந்தோஆரிய மொழி என வகைப்படுத்திய போதிலும், அதன் அடிப்படை இலக்கணமும் கட்டமைப்பு அடித்தளமும் திராவிட மொழிகளினுடையதாகும்' என்கிறார் பன்மொழி வல்லுநரான ஆய்வாளர் முதலியார் குணவர்த்தன.

*"This forced me to the conclusion that the structural foundations of the Sinhalese language are Dravidian while its superstructure, i.e. the vocabulary, is Aryan"* (*Gunawardhana, W.F.* 1924).

### உசாத்துணை நூல்கள், சஞ்சிகைகள்


BEGLEY, VIMALA (1965): The Iron Age of South India, Ph. D. Dissertation, University of Pennsylvania, Philadelphia.

BEGLEY, VIMALA (1967): Archaeological Exploration in Northern Ceylon, Expedition Summer 1967, University of Pennsylvania, Philadelphia.

BEGLEY, VIMALA (1973): 'Protohistoric Material From Sri Lanka (Ceylon) and Indian Contacts', Ecological Backgrounds of South Asian Prehistory, ed. Kenneth A.R. Kennedy and Gregory Possehl, South Asian Occasional Papers and Thesis, Cornell University, Pp. 190196.

BEGLEY, VIMALA (1981): Excavations of Iron Age Burials at Pomparippu 1970, Ancient Ceylon, No. 4: 4995.

BROHIER, R.L. (1934): Ancient Irrigation Works in Ceylon, 3 vols. Survey Department. Colombo.

BRONSON, BENNET (1970): 'The Excavation at Kantarodai' Proc. Smithsonian Seminar on Pre and Protohistory of Ceylon, 21st August, Colombo. (unpublished).

CONINGHAM, R.A.E. (1993): Anuradhapura Citadel Archaeological Project: Preliminary results of the excavation of the southern rampart, 1992., South Asian Studies 9: 111–122.

CONINGHAM. (1995a): Monks, Caves and Kings: An Archaeologi cal Assessment of the Nature of Early Buddhism in Sri Lanka, World Archaeology xxvii / 2: 222242.

CONINGHAM, R.A.E. (1995): 'The Rise of Cities in Sri Lanka' in F.R. Allchin: The Archaeology of Early Historic South Asia, Cambridge University Press.

CONINGHAM, ROBIN (1999): Anuradhapura: The British – Sri Lankan Excavations at Anuradhapura Salgaha Watta 2: Volume 1 The Site, Archaeopress, Oxford.

CONINGHAM, ROBIN (2006): Anuradhapura: The British – Sri Lankan Excavations at Anuradhapura Salgaha Watta 2: Volume 2 The Artefacts, Archaeopress, Oxford.

DAVY, J., 1821 (reprinted 1983): An Account of the Interior of Ceylon and of its Inhabitants with Travels in that Island, Tisara Praka sakayo, Dehiwala.

De SILVA, K.M. (2005): A History of Sri Lanka, Penguin Books, India.

De SILVA, RAJA (1970): 'The work done hitherto on the protohistory of Ceylon', Pros. Smithsonian Seminar on pre and Proto history of Ceylon, 21 Aug. 1970, Colombo.

De SILVA, RAJA (197071): 'Archaeological Excavations at Ibbankattu wa'Annual Report of the Dept. of Archaeological Survey 197071, Colombo.

DERANIYAGALA, P.E.P. (1957): Administrative Report of the Archaeological Commissioner for 1956, Archaeological Survey of Ceylon.

DERANIYAGALA, P.E.P. (1958): Administrative Report of the Archaeological Commissioner for 1957, Archaeological Survey of Ceylon.

DERANIYAGALA, S. U. (1972a): Archaeological Explorations in Ceylon, Pt. 2: Kollan Kanatta, Vilpattu, Ancient Ceylon, No. 2: 117.

DERANIYAGALA, S.U. (1972b): The Citadel of Anuradhapura: Excavations in the Gedige area, Ancient Ceylon, No. 2: 117.

DERANIYAGALA, S.U. (1985): The Prehistory of Sri Lanka: An Outline, in A.R.B. Amerasinghe and S.J.S. Banda, James Rutnam Festschrift 1985: 1421, UNESCO, Colombo.

DERANIYAGALA, S.U. (1986): Excavations in the Citadel of Anuradhapura: Gedige 1984, A Preliminary Report, Ancient Ceylon 2: 49169.

DERANIYAGALA, S.U. (1990a): Radiocarbon dating of Early Brahmi Script in Sri Lanka 600500 B.C., Ancient Ceylon, 11: 148168.

DERANIYAGALA, S.U. (1990b): The proto and early historic radiocarbon chronology of Sri Lanka, Ancient Ceylon, No. 12: 252292

DERANIYAGALA, S.U. (1992): The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Archaeological Survey Department, Colombo.

DIPAVAMSA (195758): Transl. & Ed. Bimala Churn Law, The Historical Journal, No. 7: 1240.

DIVYAVADANA (1886): ed. E.B. Cowell and R.A. Neil, Cambridge University Press, Cambridge.

GOONATILAKA, SUSANTHA (1981): The Formation of Sri Lankan Culture, Ancient Ceylon, No. 4: 157174.33

GUNAWARDHANA, MUDALIYAR W.F. (1924): The Origin of the Sinhalese Language (Text of lecture delivered at Ananda College, Colombo in 1918), Siddhanta Parikshanaya, Colombo

GUNAWARDENE, R.A.L.H. (1982): 'Social function and political power: a case study of state formation in irrigation society', in H.J.M. Claessen and P. Skalknik (eds), The Study of the State: 133154., Mouton, The Hague.

KARUNARATNE, SADDHAMANGALA (1984): The Brahmi Inscriptions of Sri Lanka: Special Volume, Epigraphia Zeylanica VII, Archaeolog ical Survey of Ceylon.

KARUNARATNE, PRIYANTHA PADMALAL (2010): Secondary State Formation During the Early Iron Age on the Island of Sri Lanka, Ph.D. dissertation, University of California, San Diego.

KENNEDY, KENNETH A.R. (1974): The Palaeodemography of Ceylon: The Study of the Biological Continuation of a Population from Prehistoric to Historic Times, Ed. Gosh. pp. 95112.

KENNEDY, KENNETH, A.R. (1975): The Physical Anthropology of the Megalithbuilders of South India and Sri Lanka, ANU Press, Canberra.

KENNEDY, KENNETH A.R. & GREGORY L. POSSEHL (1976): Ecological Backgrounds of South Asian Prehistory, Cornell University.

LUCACS, JOHN R. & KENNEDY, KENNETH A.R. (1981): Biological anthropology of human remains from Pomparippu, Ancient Ceylon, No. 4: 97-132.

MAHAVAMSA (1950): Ed. Wilhelm Geiger, The Government of Ceylon Information Dept., Colombo.

MALONEY, C.T. (1968): The Effect of Early Coastal Sea Traffic on the Development of Civilization in South India, Ph.D. Thesis, University of Pennsylvania, Philadelphia.

MANN, S. (1970): The Marriage of the Stupa and the Megalith, Unpublished M.Sc. dissertation, University of Bradford, Bradford.

MENDIS, G.C. (1943): The Early History of Ceylon, Y.M.C.A. Publishing House, Calcutta.

MOORTI, U.S. (1994): Megalithic Culture of South India, Ganga Kaveri Publishing House, Varanasi.

PARANAVITANA, S. (1967): Sinhalayo, Lake House Investments Ltd., Colombo.

PARANAVITANA, S. (1981): 'The Arya Kingdom in Northern Sri Lanka', The Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, Vol. VII, Part 2, pp 174-224.

PERERA, FRANK (1974): The Early Buddhist Historiography of Ceylon, Unpublished Ph.D. thesis., Gottingen University, Germany.

PHILLIPS, M. (1873): 'Tumuli in the Salem District', Indian Antiquary 2: 223-228.

POSSEHL, G.L. (1994): Radiometric Dates from South Asian Archaeology, An Occasional Publication of the Asia Section, University Museum, University of Pennsylvania, Philadelphia.

POSSEHL, GREGORY L. & GULLAPALLI, PRAVEENA (1999): Radiomet ric Dates for Megalithic Iron in peninsular India, An Occasional Publication of the Asia Section, University Museum, University of Pennsylvania, Philadelphia.

PREMATILLAKE, LEELANANDA; BANDARANAYAKE, SENAKA; De SILVA, RAJA; DERANIYAGALA, SIRAN U. (Eds.) (2007): History and Archaeology of Sri Lanka: The Art and Archaeology of Sri Lanka, Vol II, The Central Cultural Fund, Ministry of Cultural Affairs, Colombo.

PRICKETT, MARTHA (1980): Excavations at Mantai 1980: Preliminary Report of the Field Director (unpublished).

RAGUPATHY, P. (1987): Early Settlements in Jaffna, Mrs Ragupathy, Madras.

RAJAN, K. (1994): Archaeology of Tamilnadu, Indian Publishing Co. Delhi.

REA, A. (1902): 'Prehistoric antiquities in Tinnevelly', in Annual report of the Archaeological Survey of India, 1.2: 111140.

RISLEY, H.H. (1915): The People of India (2nd Ed.), Thacker, Spink & Co., Calcutta.

SARASIN, P., and SARASIN, F. (1892): Ergebnisse naturwissenschaft licher Forschungen auf Ceylon: die Weddas von Ceylon und die sie umgebenden Vlkerschaften, C.W. Kreidel, Wiesbaden.

SELIGMAN, C.G., and SELIGMAN, B.Z. (1911): The Veddas, Cambridge University Press, Cambridge.

SENARATNE, S.P.F. (1965): Prehistoric Archaeology in Ceylon, Ceylon National Museums Handbook Series, Dept. of National Museums, Ceylon.

SENEVIRATNE, SUDHARSHAN (1984): The Archaeology of the Megalithic – Black and Red Ware Complex in Sri Lanka, Ancient Ceylon, No. 5.,

SENEVIRATNE, S. (1985): The Social Base of Early Buddhism in South India and Sri Lanka (c. 3rd Century B.C. – 3rd Century A.D. ), Ph.D. Dissertation, Jawaharlal Nehru University, New Delhi.

SENEVIRATNE, S. (1985): The Baratas: A Case of Community Integration in Early Historic Sri Lanka, Festschrift 1985: James Thevathasan Rutnam, ed. A.R.B. Amerasinghe, Sri Lanka UNESCO National Commission, Colombo.

SENEVIRATNE, S. (1992): PreState Chieftains and Servants of the State: A Case Study of Parumaka, Sri Lanka Journal of Humanities 15: 99131.

SITRAMPALAM, S.K. (1980): The Megalithic Culture in Sri Lanka, Ph. D. Thesis (Unpublished), University of Poona.

SMITH, ELLOT G. (1927): Essays on the Evolution of Man, 2nd Ed., Oxford Univ. Press.

SRINIVASAN, K.R., and BANERJEE, N.R. (1953): Survey of South Indian Megaliths, Ancient India, 9: 103115).

THIAGARAJAH, SIVA (2016): Kantarodai Civilization of Ancient Jaffna, Kumaran Book House, Colombo – Chennai.

ZUCKERMAN, S. (2000): 'The Adichanallur Skulls', Bulletin of the Madras Government Museum, Government Museum, Chennai.

இரகுபதி, பொ. (1983): பெருங்கற்கால யாழ்ப்பாணம், பாவலர் தெ.அ. துரையப்பாபிள்ளை நினைவுப்பேருரை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

குணவர்தன, பிரியந்த. (2018). இப்பன்கட்டுவ மரபுரிமைகளைப் பார்வையிடுவோம். மத்திய கலாசார நிதியம், கொழும்பு.

புஷ்பரட்ணம், ப. (2017): இலங்கைத் தமிழர் – ஒரு சுருக்க வரலாறு, தமிழ்க் கல்விச் சேவை, சுவிற்சர்லாந்து.

# கட்சி அரசியலுக்கு முந்திய யாழ்ப்பாணம்

'வேந்தர் இல்லா வையகம்: இருபதாம் நூற்றாண்டு யாழ்ப்பாணம்' எனும் இத்தொடர் 'ஒருவர் வாழ்க்கை ஊடாகத் தென்படும் காட்சிகள்' பற்றியதாகும். இத்தொடர் கட்டுரைகள் என் வாழ்க்கையில் கண்ட, கேட்ட, கேள்விப்பட்ட, வாசித்தறிந்த நிகழ்ச்சிகள் ஏற்படுத்திய மனப்பதிவுகள் பற்றியும் அவற்றால் என் மனதில் உருவாகிய கருத்துகள் பற்றியும் கூறுபவை. இவை வரலாற்று ஆய்வுக் கட்டுரைகள் அல்ல. இவை யாழ்ப்பாணத்தைப் பற்றியவை; 20 ஆம் நூற்றாண்டை மையமாகக் கொண்டவை. வரலாற்றை எழுதுவோர்க்குச் சான்றுகளைக் கொடுத்துதவும் சுவடிகள் போன்று இத்தகைய நினைவுப் பதிவுகளும் பயன்படும் என்ற நோக்கத்துடன் இவை எழுதப்படுகின்றன.


## கார்த்திகேசு இந்திரபாலா



பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் கல்வெட்டியலாளர், வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியவரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

இலங்கையில் *1931*இல் வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டு, நாட்டின் சட்டவாக்க சபைக்கு முதலாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. அப்பொழுது அரசியல் கட்சிகள் இருக்கவில்லை. இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஏ.ஈ. குணஸிங்ஹ தலைமையில் தொழில் கட்சி (Labour Party) என்ற பெயரால் ஒரு கட்சி நிறுவப்பட்டிருந்தது. வேறு கட்சிகள் *1935*இன் பின்னர்தான் அமைக்கப்பட்டன. *1931*இல் கட்சி அரசியல் (Party Politics) இருக்கவில்லை.

ஓர் அரசியல் கட்சி என்பது குறிப்பிட்ட ஒரு கருத்தியலை (சித்தாந்தம் / Ideology) அடித்தளமாக வைத்துச் சில குறிக்கோள்களை அடைய இயங்கும் அமைப்பு. இக்கருத்தியலைப் பொதுப்பட ஏற்றுக்கொள்வோர் கட்சியில் சேர்ந்து அல்லது அதை ஆதரித்து, அதன் குறிக்கோள்களை அடைவதற்கு வலுவூட்டுவர். தனியாட்களாக அரசியலில் செயலாற்றுவதை விட, கட்சியின் ஒழுங்கமைப்பு (Structure) மூலம் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவது (Structural Participation) கூடுதலான பலனை அளிக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட கருத்தியலை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் அரசியல் கட்சி உதவுகின்றது. ஆளுமைப் பலம் மிக்க சில தனியாட்களுடைய புரட்சிகரமான சிந்தனைகளைப் பெருந்திரள் மக்களிடையே பரப்பி மாற்றங்களுக்கு வழிவகுப்பதற்குக் கட்சியமைப்பு மிகவும் பயன்படுகின்றது. இது கட்சியரசியலின் நன்மையாகவும் அமையலாம், தீமையாகவும் அமையலாம். அடொல்வ் ஹிட்லர், விலாடிமிர் லெனின், மாஓ சே டுங், ஈ.வே. ராமசாமி போன்ற தலைவர்களின் வரலாற்றில் இதைக் காணலாம்.

இலங்கையில் *1931*இல் முதல் தடவையாக வயதுவந்தோர் வாக்குரிமை வழங்கப்பட்டு, புதிதாக நிறுவப்பட்ட அரச சபைக்கு (State Council - இது அந்நாட்களில் அரசாங்க சபை எனத் தமிழ்ச் செய்தித்தாள்களில் பெயர்க்கப்பட்டது) தேர்தல் நடத்தப்பட்ட போது கட்சி அடிப்படையில் அல்லாது தனியாட்களாக வேட்பாளர்கள் போட்டியிட்டனர் (முதலாவது முக்கிய அரசியல் கட்சியாக நிறுவப்பட்ட லங்கா சம சமாஜக் கட்சி *1935*இலேதான் உருவாகியது).

### தேர்தல் பகிஷ்கரிப்பு

பிரித்தானியர் ஆண்ட இலங்கை *1930*கள் தொடங்கியபோது ஒரு புதிய வரலாற்றுக் கட்டத்திற்குள் நுழைந்தது. இதுவே பிரித்தானியர் ஆட்சியின் இறுதிக் கட்டமும் ஆகும். டொனமூர் சீர்திருத்தங்கள் ஒரு புதிய சட்டவாக்க சபையை அறிமுகப்படுத்தியது. வயதுவந்தோர் வாக்குரிமை பொதுமக்களை அரசியலில் பங்குகொள்ள வைத்தது. அரசியல் தலைவர்கள் இவர்களைப் புறக்கணிக்க முடியாத நிலை தோன்றியது. இன அடிப்படையிலான பிரதிநிதித்துவம் ஒழிந்தது. கட்சி அரசியல் வருவதற்கு வழிதிறக்கப்பட்டது.

இப்புதிய சூழலில், *1931*இல் இலங்கையின் முதலாவது பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அரசியலில் அக்கறைகொண்ட மத்திய வகுப்பினர் தேர்தலில் பங்குகொள்ள ஆர்வமுற்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய திருப்பம் உருவாகியது.

இத்திருப்பத்தை விளங்கிக்கொள்ள *1920*களில் வளர்ச்சிபெற்ற இந்திய அரசியல் செல்வாக்கை அறிந்திருக்க வேண்டும். இந்தியத் தேசிய இயக்கம், குறிப்பாக மகாத்மா காந்தியின் போராட்டம், யாழ்ப்பாணத்தில் பொதுவாகவும் இளைஞர் மத்தியில் சிறப்பாகவும் செல்வாக்குப் பெற்றிருந்தது. காந்தி *1927*இல் வருகை தந்து, பல இடங்களில் உரையாற்றி இளைஞர்களுக்கு ஊக்கம் கொடுத்ததின் விளைவாகத் தேசிய உணர்ச்சி பொங்கத் தொடங்கியது எனலாம்.

இப்பின்புலத்தில் யாழ்ப்பாணத்து மாணவர் காங்கிரஸ் டொனமூர் சீர்திருத்தங்களை வன்மையாக எதிர்த்து, இலங்கைக்கு ஸ்வராஜ் (தன் ஆட்சி) வழங்கப்பட வேண்டும் என்று குரல் எழுப்பிப் பரவலாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டது. இவற்றின் விளைவாகத் தேசிய உணர்ச்சி *1930*களில் எங்கும் எழுந்தது. இந்நிலை பற்றி *1935*இல் குல சபாநாதன் எழுதும்போது, "இக்காலத்திலே 'தேசீயக் கிளர்ச்சி, தேசீயக் கிளர்ச்சி' எனப் பலர் சத்தமிடுகின்றனர்" எனச் சுருக்கமாகக் கூறினார் (Jaffna College Miscellany *1935*).

யாழ்ப்பாணத்தில் இளைஞர்கள் *1931*இல் மிகுந்த ஆர்வத்துடன் அரசியல் எதிர்ப்பில் ஈடுபட்டமைக்கு இந்தியத் தலைவர்கள் சிலர் வருகைதந்து கொடுத்த ஆதரவும் ஒரு முக்கிய காரணமாகும். பெரும் மதிப்புப் பெற்றிருந்த முன்னிலைத் தலைவர்களாகிய சரோஜினி நாயுடு அம்மையார், கமலாதேவி சட்டோபாத்யாய அம்மையார், ஜவஹர்லால் நேரு அவர்கள் யாழ்ப்பாணத்தில் பெரும் கூட்டங்களில் இளைஞர்களுக்கு உரையாற்றி அவர்களுக்கு ஊக்கத்தை அளித்தனர்.

கமலாதேவி சட்டோபாத்யாய மாணவர் காங்கிரஸின் *1931*ஆம் ஆண்டுக்குரிய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டவர். அவர் தலைமையில் பல

தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. ஏப்பிரல் 23இல் மாணவர் காங்கிரஸின் ஆண்டு அமர்வுகள் தொடங்கியபோது கமலாதேவி யாழ்ப்பாணம் தட்டார் தெருவில் இருந்து நீண்ட ஊர்வலமாக முற்றவெளிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். இளைஞர்கள் கதர் உடை உடுத்து, காந்தித் தொப்பி அணிந்து, 'வந்தே மாதரம்' பாடலையும் பாரதியார் பாடல்களையும் பாடிச் சென்றனர். முற்றவெளியில் ஒரு பெரும் மக்கள் கூட்டம் கூடியிருந்தது. கமலாதேவி தலைமை இருக்கையில் அமர்ந்தார். அது யாழ்ப்பாண வரலாற்றில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகியது. முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் இத்தகைய மாபெரும் பொதுக்கூட்டத்துக்கு ஒரு பெண்மணி தலைமை தாங்கிய நிகழ்வாக இது கருதப்படுகின்றது. கே. நேசையா (பிற்காலத்தில் பல்கலைக்கழகத்தில் கல்வித் துறைப் பேராசிரியர்) வரவேற்புரை வழங்கினார்.

ஏப்பிரல் 25இல் நடைபெற்ற பொதுமக்கள் கூட்டத்தில் பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது:

*"Whereas the Donoughmore Constitution militates itself against the attainment of Swaraj, this Congress further pledges itself to boycott the scheme."*

இந்திய விடுதலைப் போராளிகளின் பேச்சுகள் இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்தின. கமலாதேவி சட்டோபாத்யாய அம்மையாரும் சரோஜினி நாயுடு அம்மையாரும் உரையாற்றியபின், இளைஞர்கள் தெருவழியே ஓடி, பிரித்தானியக் கொடியைக் கிழித்தெறிந்து, 'ஸ்வராஜ்', 'பகிஷ்கரிப்பு' என்று முழக்கம் செய்தனர் எனக் கூறப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் தீவிர எதிர்ப்புத் தன்மையுடையவர்கள் என்பதை நேருவும் அவதானித்திருந்தார். மனைவி கமலா, மகள் இந்திரா ஆகியோருடன் மே 1931இல் யாழ்ப்பாணம் சென்ற நேரு தன் சகோதரி கிருஷ்ணாவுக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார்:

*"We went to Jaffna in the far north by train and had a tumultu ous welcome. Jaffna is the centre of the Tamil and of the aggressive youth leagues. We had a heavy programme, motored all over the neighbourhood, and had a dip in the sea..." (Letter to Krishna Nehru, 22/05/1931).*

தேர்தலைப் பகிஷ்கரிப்பதற்கு இளைஞர்கள் தீர்மானம் எடுத்தபோது வேட்பாளர்களாகப் பதிவு செய்வதற்கு அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்த பலர் தயாராகிக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் மிகுந்த ஆவலுடன் தேர்தலில் போட்டியிடக் காத்திருந்தனர் என அறியமுடிகின்றது. வயதில் மூத்தோரான இவர்களைத் தேர்தலில் பங்குகொள்ள வேண்டாம் என நிறுத்துவது இளைஞர்களுக்கு ஒரு சவாலாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

## இளைஞர் வெற்றி

வட மாகாணத்தில் தேர்தல் வேட்பாளர்களாக முன்வந்தோருள் நால்வர் முக்கியமானவர்கள். ஒருவர் அருணாசலம் மகாதேவா (பிறப்பு 1885). இவர் பொன்னம்பலம் அருணாசலத்தின் மகன்; பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராக முன்னர் கடமை ஆற்றியவர். ஆகவே இவருக்குக் குறிப்பிடத்தக்க செல்வாக்கு இருந்தது எனலாம். இவரைப் போன்று செல்வாக்குப் பெற்றவர் சு. நடேசபிள்ளை (பி. 1895). இவர் பொன்னம்பலம் இராமநாதனின் மருமகன் (மகளை மணம் முடித்தவர்; தமிழ்நாட்டில் இருந்து வந்தவர்). அத்துடன், பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபராகப் பெருமதிப்பைப் பெற்றிருந்தவர். மகாதேவாவின் உறவினராகிய சிறீ பத்மநாதனும் போட்டியிட ஆவலுடன் இருந்தார். இவர்களுக்கு இளையவராக அப்பொழுது அரசியலில் தன் நீண்ட பயணத்தைத் தொடங்கியவர் ஜி.ஜி. பொன்னம்பலம் (பி. 1902) ஆவார். இவர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் ஒரு தொகுதியில் போட்டியிடத் தயாராக இருந்தார்.


அருணாசலம் மகாதேவா


சு. நடேசபிள்ளை

இவர்களை விட மூத்தவராகக் காணப்பட்டவர் முன்னர் சட்டவாக்க சபையில் இருந்த வைத்திலிங்கம் துரைசுவாமி (பி. 1875) ஆவார். இவரும், க. பாலசிங்கமும் (பி. 1876) தேர்தலில் பங்குகொள்ளத் தயாராய் இருந்தனர் என அறியமுடிகின்றது.

இவர்களுடனும் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்பிய பிறருடனும் இளைஞர்கள் வாதிட்டு வெற்றிபெறுவது கடினமாக இருந்திருக்கும். இதனால் அவர்கள் ஓர் உபாயத்தைக் கடைப்பிடித்தனர். தத்தம் ஊர்களில் இயங்கிய ஊர்ச் சபைகளைப் பகிஷ்கரிப்புக்கு ஆதரவு வழங்கச் செய்தனர். இளைஞர்கள் செயல்பாடுகளை ஆழமாக ஆய்வு செய்த

*Jane Russell* நிகழ்ந்ததை இவ்வாறு வர்ணித்துள்ளார்:

*“On May 1st, a significant date, the Youth Congress decided to force the candidates to boycott the elections by seeking a mandate from the villages. The conservatives were thrown into panicky confusion. Two days later, on the eve of polling, led by Du raiswamy and Balasingham, whom the Youth Congress leaders most respected among the ‘conservatives’, they agreed to withdraw their candidatures.”*

யாழ்ப்பாணத் தொகுதிகளில் வேட்பாளர் அனைவரும் பகிஷ்கரிப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் அவசரமாக மன்னாருக்குச் சென்று அங்கு வேட்பாளராக நின்ற ஜி.ஜி. பொன்னம்பலத்தைத் தேர்தலில் இருந்து விலகுமாறு வேண்டினர். அவர் அதற்கு மறுத்தார். அதனால் அங்கு தேர்தல் நடைபெற்றது. ஆனாலும் அதில் பொன்னம்பலம் வெற்றிபெறவில்லை.

### அரசியலில் பிளவு

தேர்தல் பகிஷ்கரிப்பு யாழ்ப்பாண அரசியலில் ஒரு பெரும் பிளவை ஏற்படுத்தியது. தேர்தலைப் பகிஷ்கரித்தமை தவறு எனக் கருதியோர் ஒரு புறம். பகிஷ்கரிப்பை ஆதரித்து இளைஞர்களுக்கு உற்சாகம் அளித்தோர் இன்னொரு புறம். அக்காலத்தில் வெளிவந்த ஈழகேசரி, இந்து சாதனம், *Hindu Organ* போன்ற செய்தித்தாள்களைப் பார்க்கும்போது கல்விகற்ற மத்திய வகுப்பினரிடையே பகிஷ்கரிப்புக்குச் சார்பான நிலை குறிப்பிடத்தக்கதாக இருந்தது எனலாம்.

பகிஷ்கரிப்புக்கு எதிரானவர்களும் துரிதமாகச் செயல்பட்டுக்கொண்டு இருந்தனர் என்றே கூறவேண்டும். இவர்கள் பெரும்பாலும் ஆங்கிலக் கல்விகற்ற மத்திய வகுப்பினர். இவர்களைப் பொதுப்பட *‘Conservatives’* (பழமைவாதிகள்) என *Jane Russell* போன்ற ஆய்வாளர் கருதுவர். இவர்களுள் பலர் *Ceylon Tamil League* என்ற அரசியல் கழகத்தில் உறுப்பினராக இருந்தனர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் நியாயதுரந்தரர் என அக்காலத்தில் அழைக்கப்பட்ட (இன்று சட்டத்தரணிகள் எனப்படுவோர்) சட்ட வல்லுநர்கள் இக்கழகத்தில் இருந்தனர்.

ஏச்.ஏ.பி. சந்திரசேகரா 1932இல் இக்கழகத்தின் தலைவராகக் கடமையாற்றினார். இவருக்குப் பின் 1933இல் அருணாசலம் மகாதேவா தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். துணைத் தலைவர்களாகத் தேர்வான ஒன்பதின்மருள் ஒருவராக ஜி.ஜி. பொன்னம்பலம் இருந்தார்.

யாழ்ப்பாணத்துச் சைவ மத்திய வகுப்பினருடைய அபிப்பிராயத்தைப் பிரதிபலிப்பதாகவும் அவர்களுடைய கருத்துகளை உருவாக்கும் செல்வாக்குடையதாகவும் காணப்பட்ட இந்து சாதனம், *Hindu Organ* ஆகிய செய்தித்தாள்களின் ஆசிரியர் தலையங்கத்திலும் கட்டுரைகளிலும் மகாதேவா, பொன்னம்பலம் ஆகியோர் விமர்சிக்கப்படுவதைக் காணலாம்.

மகாதேவாவின் அரசியல் கொள்கை இனவாத (அக்காலத்தில் வகுப்புவாதம் எனப்பட்டது) பண்புகளைக் கொண்டது என்றும் அவர் தலைமை வகிக்கும் கழகம் இலங்கைத் தமிழர் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என அவர் தவறாகக் கோருகிறார் என்றும் வெளிப்படையாக மகாதேவாவை விமர்சிக்க *Hindu Organ* தயங்கவில்லை:

*“The League’s claim to represent the Thamils as a whole is as preposterous as it is unfounded ... Mr. Mahadeva knows only too well that communalism in any shape or form will not find favour with the Thamils of this Province. Moreover, the Thamil League never enjoyed the confidence of the Thamils in the Island. Conceived in hate, the League was ushered into existence by the late Sir P. Arunachalam to prop up his claim for a Thamil seat for the Western Province. When Sir P. Arunachalam broke away from the Congress, he wanted a stage from which he could vent his communal bitterness and organized the Thamil League. Before the League could aspire to lead the Thamils it should purge itself of the canker of communalism which appears to have poisoned its very soul.”* (Editorial, 05/10/1933)

### இறக்குமதிப் பொருள்களைப் பகிஷ்கரித்தல்

இந்திய விடுதலை இயக்கத்தினர் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதியான பல பொருள்களை வாங்கவேண்டாம் எனப் பகிஷ்கரிப்பை நடத்தியமை யாழ்ப்பாணத்து இளைஞர்களையும் சில பிரமுகர்களையும் அத்தகைய இயக்கத்தை நடத்துவதற்குத் தூண்டியது. இந்த இயக்கத்தை முன் நின்று நடத்திய தலைவர் கதிரவேற்பிள்ளை பாலசிங்கம் ஆவர். வெளியில் இருந்து இறக்குமதியான சீனி, சிகரெட்டு, புடவை ஆகியவற்றைப் பகிஷ்கரித்து, பனங்கட்டி, சுருட்டு, கதர் ஆடை ஆகியவற்றைக் கூடுதலாக உற்பத்தி செய்து பயன்படுத்துமாறு இளைஞர்கள் ஊரூராகச் சென்று பரப்புரை செய்தனர்.

பகிஷ்கரிப்பு தொடங்கி ஓர் ஆண்டு நிறைவுற்றபோது யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற கூட்டத்துக்கு அரியாலை, திருநெல்வேலி, கொக்குவில் ஆகிய இடங்களில் இருந்து ஊர்வலமாக மக்கள் சென்றனர்.

### தேர்தலை நடத்த முயற்சி

இத்தகைய இயக்கத்தினால் மாணவர் காங்கிரஸ் (1931இல் இதன் பெயர் இளைஞர் காங்கிரஸ் என மாற்றப்பட்டது) தொடக்கிய பகிஷ்கரிப்பு மக்கள் ஆதரவை இழக்காது தொடர்ந்து நீடித்தாலும், அரசாங்கமும் அரச சபைக்கு (State Council) உறுப்பினராகச் செல்ல விழைந்தோரும் பகிஷ்கரிப்பை நீக்கித் தேர்தலை நடத்துவதற்கு வழிசெய்ய முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டனர். இது தொடர்பாக அருணாசலம் மகாதேவா முக்கியத்துவம் பெற்றார் எனலாம்.

பகிஷ்கரிப்பை எதிர்த்தோர் சார்பில் செயல்பட்ட ஒருவர் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அலுவலகத்தில் பணிபுரிந்த கச்சேரி முதலியாராகிய சி.கே. சுவாமிநாதன் என்பவர் ஆவர். இவர் பகிஷ்கரிப்புக்கு எதிராக எழுதிய கட்டுரை செய்தித்தாள்களில் வெளிவந்தன. இதனை விமர்சித்த Hindu Organ இவரும் தொடக்கத்தில் பகிஷ்கரிப்பை ஆதரித்தவர் என்பதைச் சுட்டிக்காட்டியது.

பகிஷ்கரிப்பால் யாழ்ப்பாணம் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது (Isolated) என்றும் பகிஷ்கரிப்பு மூலம் சில தலைவர்கள் தங்களிடத்தில் அரசியல் புத்திசாலித் தன்மை (Political Wisdom) இல்லாமையையும் மெய்நிலையை (Reality) உணரமுடியாத தன்மை இருப்பதையும் வெளிப்படுத்தினார்கள் எனவும் சுவாமிநாதன் கண்டனம் தெரிவித்தார்:

*"... it showed a lack of political wisdom and appreciation of realities on the part of some of our leaders to imitate the actions of the great Indian leaders in their struggle for freedom."*

பகிஷ்கரிப்பு யாழ்ப்பாண அரசியலில் 1933ஆம் ஆண்டு முழுவதும் பிளவை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

மகாதேவா, நடேசன், பொன்னம்பலம் ஆகியோரும் வேறு சில தலைவர்களும் விடாமுயற்சியுடன் ஊர்ச்சபைத் தலைவர்களையும் பிற பிரமுகர்களையும் சந்தித்துத் தேர்தலை நடத்துமாறு ஆளுநருக்கு விண்ணப்பிக்க நடவடிக்கை எடுத்தனர் எனச் செய்தித்தாள்களில் தகவல் வெளிப்பட்டது. இந்துசாதனம் இம்முயற்சியை இவ்வாறு கேலிசெய்தது:

"... யாழ்ப்பாணத்திலேயுள்ள சிலரினுஞ்சிலர் இன்னமும் அரசாங்க சபையுட் புகத்தான் வேண்டுமென்று கரவாக முயற்சி செய்தல் யாது பற்றியோ அறிகிலேம்... தம் நயங்கருதி அரசசபையுட் பிரவேசிக்க ஆசைகொண்டு உழலும் இந்தச் சிலரினுஞ்சிலருள் 4 பேர் பின்புறக்கதவாலேனும் சட்டசபையுள் ஒருவாறு புகுந்து விட்டால்..." (07/09/1933).

### அரச சபைத் தேர்தல்

முதல் தடவையாக, அனைவருக்கும் வாக்குரிமையுடன், 1934 ஜூலையில் யாழ்ப்பாணம் பொதுத் தேர்தலுக்குச் சென்றது. நான்கு தொகுதிகள் இருந்தன - யாழ்ப்பாணம், காங்கேசந்துறை, ஊர்காவல்துறை, பருத்தித்துறை. தெற்கில் போல, வடக்கில் தொடக்கத்திலேயே வம்ச அரசியலின் (Dynastic Politics) அறிகுறி காணப்பட்டது. தெற்கில் சேனாநாயக்க குடும்பத்தைச் சேர்ந்தோர் (டொன் ஸ்டீபின், டட்லி, ஜோன் கொத்தலாவெல) போட்டியிட்டது போல, வடக்கில் இராமநாதன் - அருணாசலம் குடும்பத்தினர் (மகாதேவா, நடேசன், சிறீ பத்மநாதன்) போட்டியில் இறங்கினர். மூத்த தலைவர்களாகிய வை. துரைசுவாமியும் க. பாலசிங்கமும் (பகிஷ்கரிப்பை ஆதரித்தவர்கள்) போட்டியிடவில்லை.

தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்: அ. மகாதேவா (யாழ்ப்பாணம்), சு. நடேசன் (காங்கேசந்துறை), ஜி.ஜி. பொன்னம்பலம் (பருத்தித்துறை), நெவின்ஸ் செல்வத்துரை (ஊர்காவல்துறை). யாழ்ப்பாண அரசியலில் (முழு இலங்கையிலும் கூட) பொன்னம்பலத்தின் எழுச்சியைக் குறிக்கும் தேர்தல் இதுவாகும்.

### இலட்சியவாதி இளைஞர்கள்

இத்தேர்தலுடன் யாழ்ப்பாண வரலாற்றில் மறக்கமுடியாத, ஒப்பற்ற ஓர் அத்தியாயம் முடிவுற்றது எனலாம். இலட்சியவாதி இளைஞர் பரம்பரை ஒன்று ஆங்கிலக் கல்வி மூலம் மனித உரிமைகள், மக்களாட்சி, ஏகாதிபத்தியச் சுரண்டல், காந்தியின் அகிம்சைப் போராட்டம் ஆகியவற்றை ஆவலுடன் கற்று, தமது சமூகத்துக்கும் நாட்டுக்கும் சுதந்திரத்தைச் சுவைத்து வாழும், சமத்துவமும் நீதியும் நிலவும் காலத்தை உருவாக்கத் தீவிரமாக உழைத்துத் தோல்வி கண்டனர். இவர்களுடைய இலங்கையர் தேசிய இயக்கத்தைப் பற்றித் தனது Ph.D. பட்டத்துக்கு ஆய்வுரை எழுதிய Jane Russell அளிக்கும் தீர்ப்பு இதுவாகும்:

*"They saw far beyond their time..."* (அவர்கள் கண்டது அவர்கள் காலத்துக்கு மிகவும் அப்பாற்பட்டது).

இவர்களது இயக்கம் பற்றியும் இவர்களுக்குப் பக்கபலமாக உதவிய, முன் நின்று வழிகாட்டும் தகைமையுடைய தலைவராக உயர்வு பெற்ற க. பாலசிங்கம் மற்றும் வை. துரைசுவாமி பற்றியும் பின்னர் பார்க்கலாம்.

# சமஷ்டி முறை: புனைவுகளும் உண்மைகளும்

இலங்கையின் சட்டத்துறை அறிஞர்களும், அரசியல் விஞ்ஞானிகளும் இலங்கையின் அரசியல் யாப்புகள் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் (Core Issues) பற்றிய உயராய்வுகள் பலவற்றை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளனர். 1947, 1972, 1978 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைக்கு வந்த மூன்று அரசியல் யாப்புகள் பற்றியும், இம்மூன்று அரசியல் யாப்புகளுக்கும் கொண்டுவரப்பட்ட யாப்புத் திருத்தங்கள் பற்றியும், நீதிமன்றத் தீர்ப்புகள் பற்றியும் இவ் உயராய்வுகளில் விரிவாக அலசப்பட்டுள்ளன. இவ்வாய்வுகளில் உள்ளடங்கிய பெறுமதிமிக்க கருத்துகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதே 'அரசியல் யாப்புச் சிந்தனைகள்' என்னும் இத்தொடரின் நோக்கமாகும்.

***ஆங்கில மூலம்: றொகான் எதிரிசிங்க***

பகுதி
**1**


## கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது. 'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

இக்கட்டுரை ஆங்கிலத்தில் றொகான் எதிரிசிங்க அவர்கள் 'Federalism: Myths and Realities' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையின் எளிமைப்படுத்தப்பட்ட தழுவலாக்கமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிறுவனத்தின் (CPA) 'Essays on Federalism' (2016) என்ற கட்டுரைத் தொகுப்பு நூலின் நான்காவது அத்தியாயமாக இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. இன்றைய பொருத்தம் கருதி இத் தழுவலாக்கத்தைத் தந்துள்ளோம்.

2002ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. சமஷ்டி முறையைப் பரிசீலித்தல், உள்ளக சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வைக் காணுதல் எனும் இரு விடயங்களில் இரு தரப்பினரிடையேயும் உடன்பாடு ஏற்பட்டது. இது அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஒரு முக்கியமான திருப்பமாக அமைந்தது என றொகான் எதிரிசிங்க குறிப்பிடுகிறார்.

அடுத்து அவர் இலங்கையின் இனப்பிரச்சினை ஆரம்பத்தில் ஒரு சிறிய, சிக்கலற்ற பிரச்சினையாகவே இருந்தது. இன்று அது பூதாகரமான வடிவத்தைப் பெற்று பெரிய, சிக்கலான பிரச்சினையாகி விட்டது எனக் குறிப்பிடுகிறார். இனப் பிரச்சினையின் பரிணாம வளர்ச்சியை நான்கு கட்டங்களாக அவர் வகுத்துக் காட்டுகிறார்.

1. சட்டசபை/ பாராளுமன்றத்திற்கான பிரதிநிதித்துவம் பற்றிய பிரச்சினைகள் (Questions of Representation), மனக்குறைகள் (Grievances), மொழியின் அடிப்படையிலான பாரபட்சம், மொழி உரிமைக் கோரிக்கைகள் என்பனவாகவே முதற்கட்டத்தில் இப்பிரச்சினை இருந்தது.

2. அடுத்த நிலையில் அதிகாரப் பரவலாக்கம் (Decentral isation) என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

3. மூன்றாவது கட்டம் சுயாட்சிக்கான (Autonomy) கோரிக்கையாக அமைந்தது.

4. அண்மைக்காலத்தில் முற்கூறிய மூன்று கட்டங்களையும் தாண்டிய வேறொரு நிலைக்கு இது நகர்ந்துள்ளது. இப்போதுள்ள கோரிக்கைகளாவன - தமிழ் மக்கள் தாம் ஒரு தேசிய இனம் என்றும், தமக்கு தேசம் என்ற தகுதி (Nationhood), சுயநிர்ணய உரிமை (SelfDetermination) என்பனவற்றின் அடிப்படையிலான அபிலாசைகள் உள்ளன என்றும், அவை நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும், கொன்பெடரேஷன் (Confedera tion) என்பதன்படியான சமஷ்டித் தீர்வு வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

மேற்கண்டவாறு இலங்கையின் இனப்பிரச்சினையின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டும் றொகான் எதிரிசிங்க, கட்டுரையின் தலைப்பில் குறிப்பிட்ட சமஷ்டி முறை பற்றிய புனைவுகளையும் உண்மைகளையும் (Myths and Realities) பிரித்து அறிவதற்கான வழியைக் காட்டுகிறார்.

## தவறு எங்கே உள்ளது?

இலங்கையின் இனப்பிரச்சினையின் தோற்றம், வளர்ச்சி வரலாற்றை மேற்கண்டவாறு வகுத்துக் கூறும் கட்டுரையாசிரியர், இனப்பிரச்சினையின் ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கையின் அரசாங்கங்களின் எதிர்வினை (Response) என்னவாக இருந்தது? என்ற வினாவை எழுப்பும் முறையில் பின்வருமாறு கூறுகிறார்.

"இலங்கையில் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்திருந்த அரசாங்கங்கள் உரிய வேளையில் நியாயமான தீர்வுகளை வழங்கத் தவறின. பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை 1957இல் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருந்தால் பல்லாண்டுகளாகத் தொடர்ந்த யுத்தம் இடம்பெற்றிருக்காது. இரத்தக் களரியும், பேரழிவுகளும் தவிர்க்கப்பட்டிருக்கும். 2000ஆம் ஆண்டில் அரசாங்கம் ஓர் அரசியல் யாப்பு வரைவை (Draft Constitution) முன்வைத்திருந்தது. இது முன்னேற்றமான வரைவாக இருந்தது. 1980களிலேயே 2000ஆம் ஆண்டு வரைவு போன்ற தீர்வுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்திருந்தால் அக்காலத்திலேயே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு இலகுவாக எட்டப்பட்டிருக்கும்."

## ஒற்றையாட்சி அரசு

அடுத்தடுத்து தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்தன. ஒவ்வொரு தோல்வியும், ஒவ்வொரு மீறலும் பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்கின. துரோகத்தனம் (Betrayal) காரணமாக எழும் நம்பிக்கையீனம், சந்தேகம் (Distrust and Suspicion) என்பன பேச்சுவார்த்தை என்ற செயல்முறையைச் (Process) சிக்கலாக்கின. பேச்சுவார்த்தையின் போது பேசுவதற்கான விடயப் பொருளும் (Substance) மாறிக் கொண்டிருந்தது. 1994-1995 காலத்தில் பேச்சுவார்த்தையின் தோல்வி, 2002-2003 பேச்சுவார்த்தையின் போது பேசுவதற்குரிய விடயப் பொருளை மாற்றியது. 1994-1995 காலத்தில் அரசியல் யாப்புக்கான 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துதல் பேசுபொருளாக இருந்தது.

**இன்றைய நிலையில் எதிர்காலத்தில் அரசியல் தீர்வு காண வேண்டுமானால் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்களில் (Devolved Powers) மத்திய அரசு தலையீடு செய்து, அவ்வதிகாரங்களைப் பறிப்பது இடம்பெறாத வகையில் அரசியல் யாப்புப் பாதுகாப்புகள் இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. எதிர்கால அரசியல் யாப்பு யோசனைகள் ஒற்றையாட்சி அரசு (Unitary State) என்ற எல்லைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது என்றே தோன்றுகிறது (It seems almost certain that this will require moving beyond the frontiers of unitary state).**

அப்பேச்சுவார்த்தை தோல்வியடைந்துவிட்டதால் 20022003இல் பேசுபொருளான விடயம் (Substance) வேறாக அமைதல் தவிர்க்க முடியாததாயிற்று.

இன்றைய நிலையில் எதிர்காலத்தில் அரசியல் தீர்வு காண வேண்டுமானால் பகிர்ந்தளிக்கப்படும் அதிகாரங்களில் (Devolved Powers) மத்திய அரசு தலையீடு செய்து, அவ்வதிகாரங்களைப் பறிப்பது இடம்பெறாத வகையில் அரசியல் யாப்புப் பாதுகாப்புகள் இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. எதிர்கால அரசியல் யாப்பு யோசனைகள் ஒற்றையாட்சி அரசு (Unitary State) என்ற எல்லைக்கு அப்பாற்பட்டதாகவே இருக்க வேண்டும். இது தவிர்க்க முடியாதது என்றே தோன்றுகிறது (It seems almost certain that this will require moving beyond the frontiers of unitary state). 'ஒற்றையாட்சி அரசு' என்ற எல்லையைத் தாண்டிச் சிந்திக்கும் தேவையை றொகான் எதிரிசிங்க வலியுறுத்துகிறார்.

### துணிச்சலான முடிவு

1995 - 2000 காலத்தில் அரசியல் யாப்புத் திருத்தம் பற்றிய திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அப்போது தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு வரைவில் 'இலங்கை ஒற்றையாட்சி அரசு' (Sri Lanka is a unitary state) என்ற சொல்லாட்சியை நீக்குவது என்ற முடிவை அரசியல் யாப்பை வரைந்த குழுவினர் மேற்கொண்டனர். இம்முடிவைத் துணிச்சலான முடிவு (Courageous Decision) என றொகான் எதிரிசிங்க குறிப்பிடுகிறார். சிங்கள மொழியில் 'எக்சத்', 'எக்கீய' என்ற இரு சொற்களும் ஒரே அர்த்தம் உடையனவாகப் பாவிக்கப்படுகின்றன. அதாவது, 'எக்சத்' என்றால் 'United' என்றும் 'Unitary' என்றும் விளக்கப்படுத்தலாம். இதனால் இச்சொல்லை அரசியல் யாப்பில் இருந்து நீக்க வேண்டும்; அரசியல் யாப்பில் 'ஒற்றையாட்சி நாடு', 'பெடரல் நாடு' (சமஷ்டி நாடு) போன்ற லேபல்கள் (Labels) இருக்கக்கூடாது என அரசியல் யாப்பை வரைந்த குழுவினர் முடிவு செய்தனர்.

அடுத்து இலங்கையின் அரசியல் வரலாற்றில் 'பெடரலிசம்' (சமஷ்டி) என்ற சொல்லாடல் எப்போது ஆரம்பித்தது? அது பின்னர் இன்று வரை என்னென்ன விதமான திரிபுகளுடன் பேசப்பட்டு வருகிறது என்பதை எதிரிசிங்க விவரித்துக் கூறுகிறார். 'Federalism in Ceylon's Political Discourse' என்ற உப தலைப்பில் அவர் கூறியிருப்பனவற்றை அடுத்து நோக்குவோம்.

### இலங்கையின் அரசியல் வரலாற்றில் சமஷ்டி என்ற அரசியல் சொல்லாடல்

சமஷ்டி என்ற அரசியல் சொல்லாடல் (Political Discourse) 1920களில் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களால் முதன் முதலாகத் தொடக்கி வைக்கப்பட்டது. அவர் அப்போது இளைஞராகவும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுத் திரும்பிய ஒருவராகவும் இருந்தார். 1920களின் பிற்பகுதியில் டொனமூர் ஆணைக்குழு இலங்கைக்கு வந்து பல இடங்களுக்கும் சென்று மக்களிடம் விசாரணை நடத்தியது. அப்போது கண்டியின் சிங்களவர்களின் பிரதிநிதிகள் குழுவொன்று, டொனமூர் ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த போது இலங்கைக்கு சமஷ்டி முறையிலான அரசியல் யாப்பு தேவை எனக் கூறியது.

கண்டியின் சிங்களவர்கள், கரைநாட்டுச் சிங்களவர்களில் இருந்து வேறானவர்கள் என்றும், கண்டிய மாகாணம் என்பதை சமஷ்டியின் ஓர் அலகாக ஏற்றுத் தமக்குச் சுயாட்சி (Autonomy) அதிகாரங்கள் தரப்பட வேண்டும் எனவும் அக்குழுவினர் டொனமூர் ஆணைக்குழுவினரைக் கேட்டனர். அக்குழுவினர் இலங்கை மூன்று தனித்தனி மாகாணங்களைக் கொண்ட சமஷ்டியாக இருத்தல் வேண்டும் எனவும் கோரினர்.

அவர்கள் உபயோகித்த சொற்தொடர்களும், மொழியும், வாதங்களும் (Language and Arguments) இன்று தமிழர்கள் பேசுபவற்றை ஒத்தனவாய் இருந்தன.

கண்டியில் அக்காலத்தில் 'கண்டி மக்களின் தேசிய அசெம்பிளி' (Kandyan National Assembly) என்ற அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டது. இலங்கைத் தேசிய காங்கிரசில் (Ceylon National Congress) உறுப்பினர்களாக இருந்த பல அரசியல் தலைவர்கள் அந்த அமைப்பில் இருந்து விலகி 'கண்டி மக்களின் தேசிய அசெம்பிளி' என்ற அமைப்பில் சேர்ந்து கொண்டனர். கண்டி மக்களின் தேசிய அசெம்பிளி பிரதிநிதிகள் குழு டொனமூர் ஆணைக்குழுவின் முன்னர் தோன்றி பின்வருமாறு கூறினர்.

*"Ours is not a communal claim or a claim for the aggrandise ment of a few: It is a claim of a nation to live its own life and realise its own destiny....We suggest the creation of a federal state as in the United States of America.... a federal system..... will enable the respective nationals of the several states to prevent further inroads into their territories and to build up their own nationality"*

மேற்படி கூற்றில் உள்ளடங்கியிருக்கும் கருத்துகளைத் தமிழில் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

"எமது கோரிக்கை இனவாதக் கோரிக்கை அன்று; அல்லது இதை ஒருசில தனிநபர்களின் ஆதிக்க மனப்பாங்கை வெளிப்படுத்தும் கோரிக்கையாகவும் கருத முடியாது. இக்கோரிக்கை ஒரு தேசிய இனத்தின் கோரிக்கை (A Claim of a Nation). அத்தேசிய இனம் தனது வாழ்வைத் தானே அமைத்துக்கொள்ள விரும்புகிறது. தன் தலைவிதியைத் தானே தீர்மானித்துக் கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ளது போன்ற சமஷ்டி அரசை (Federal State) இலங்கையில் நிறுவ வேண்டும் என நாம் விரும்புகிறோம். நாம் ஒரு சமஷ்டி முறை (Federal System) இலங்கைக்கு தேவை என்று கேட்கிறோம். அமெரிக்காவில் உள்ளது போன்ற சமஷ்டி முறையை இங்கு உருவாக்க வேண்டும் எனக் கோருகிறோம். அந்தச் சமஷ்டி முறையில் சேர்ந்துள்ள பல அரசுகளில் ஒவ்வொரு மாநில அரசும் தனது புவியியல் பரப்புகளை (Territories) வெளியில் இருந்து வரும் ஊடுருவல்களிலிருந்து தடுத்து நிறுத்தி, தமது தேசிய இனத்தை (Nationality) வளர்ச்சிப் பாதையில் எடுத்துச் செல்ல முடியும்."

கண்டி மக்களின் பிரதிநிதிகளின் மேற்படி கூற்றை மேற்கோள் காட்டும் றொகான் எதிரிசிங்க, இன்று தமிழ்த் தேசிய அரசியல் குழுக்களின் மொழியை ஒத்த மொழியில் கண்டியர்கள் 1920களில் பேசினர் என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

## 1972 அரசியல் யாப்பு

1948இன் பின்னர் கொண்டுவரப்பட்ட முதலாவது குடியரசு அரசியல் யாப்பான 1972இன் அரசியல் யாப்பில் முதல் தடவையாக 'ஒற்றையாட்சி அரசு' (Unitary State) என்ற 'லேபல்' ஒட்டப்பட்டது. இவ்வாறு இலங்கை அரசை ஒற்றையாட்சி அரசு என்று அடையாளப்படுத்திய அரசியல் பின்புலத்தை நோக்கும்போது, இதுவொரு வக்கிரமான செயல் என்றே கூற வேண்டும். இச்செயல் தமிழ்மக்களின் முகத்தில் அறைந்தது போன்ற ஓர் அவமதிப்பு என்றும் கூறலாம். 1972க்கு முந்திய காலத்தில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை, டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை என்னும் இரு உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. அவ்வுடன்படிக்கைகளில் தமிழ் மக்களின் குறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதோடு, அதிகாரப் பகிர்வு (Devolution of Power) வழங்குவதற்கான உடன்பாடும் காணப்பட்டது.

இவ்வாறான உடன்படிக்கைகள் இரண்டிலும் பொருத்திக் கொண்ட விடயங்கள் உதாசீனம் செய்யப்பட்டிருந்த பின்னணியில் 1970 பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்டது. அக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் சமஷ்டி முறையிலான அரசியல் யாப்பு (Federaltype of Constitu tion) வேண்டும் என்றும், அத்தகைய அரசியல் யாப்பின் மூலமே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும் என்றும் நம்புகிறார்கள். சமஷ்டி முறையின் கீழ் தமது அலுவல்களைத் தாமே நிர்வகித்துக் கொள்ளவும், தம்மை அழிவில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் முடியும் என நம்புகிறார்கள். அத்தகைய முறை ஒன்றின் கீழ்தான் தமிழ் பேசும் மக்கள் கௌரவத்துடன் வாழ முடியும் எனவும், தமது பிறப்புரிமையான சுதந்திரத்தையும், பிரஜைகளுக்குரிய சமத்துவத்தையும் உடையவர்களாகத் தமது சிங்களச் சகோதரர்களுடன் ஒற்றுமையாக வாழ முடியும் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்."

தமிழரசுக் கட்சியின் தலைவர் செல்வநாயகம் காந்தியின் அகிம்சை வழியிலான அமைதிவழிப் போராட்டமான சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டார். அவரது செயற்பாடுகள் ஜனநாயக - அரசியல் வழிமுறையாகும். இந்த அணுகுமுறை தோல்வியடைந்து விட்டது என தமிழர்களில் பலர் அக்காலத்தில் உணர்ந்தார்கள்.

இக்காரணத்தால் தமிழ் மக்களிடையே இருந்த கிளர்ச்சிவாதிகள் 1970 பாராளுமன்றத் தேர்தலின் போது, பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்துத் தேர்தலில் போட்டியிட்டார்கள். இந்த வேட்பாளர்களுக்குத் தமிழரசுக் கட்சி தனது உறுதியான எதிர்ப்பை வெளிப்படுத்தியது. அக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் பிரிவினைக் கோரிக்கையை முற்றுமுழுதாக நிராகரிப்பதாக அமைந்தது.

*"It is our firm conviction that division of the country in any form would be beneficial neither to the country nor the Tamil speaking people. Hence we appeal to the Tamil speaking people not to lend their support to any political movement that advocates the bifurcation of the country."*

தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடங்கியுள்ள மேற்படி கூற்று தமிழரசுக் கட்சி பிரிவினைவாதம் தொடர்பாக உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்ததை எடுத்துக்காட்டுகிறது. இக்கூற்றின் தமிழாக்கம் வருமாறு:

"நாட்டைப் பிரிப்பதனால் இலங்கைக்கு நன்மை கிடைக்கப்போவதில்லை; அதனால் தமிழ்பேசும் மக்களுக்கும் நன்மை இல்லை. ஆகையால் நாட்டைப் பிரிக்கும் கொள்கையுடைய அரசியல் இயக்கங்களுக்கு தமிழ்பேசும் மக்கள் ஆதரவளிக்கக் கூடாது என நாம் கேட்டுக்கொள்கிறோம்."

இந்தப் பின்னணியில் இலங்கையின் அரசியல் யாப்பில் 'ஒற்றையாட்சி' என்ற அடையாள 'லேபலை' பொறிக்கும் தேவை எதுவும் இருக்கவில்லை. சோல்பரி அரசியல் யாப்பும் அத்தகைய 'லேபலை' கொண்டிருக்கவில்லை. அதுமட்டுமல்ல, உலகின் எந்தவொரு ஜனநாயக நாட்டினதும் அரசியல் யாப்பிலும் இத்தகைய பிரகடனத்தைக் காண முடியாது.

ஒற்றையாட்சித் தீர்மானத்தை அரசியல் யாப்புப் பேரவையின் (Constitutional Assembly) அமர்வில் முன்வைத்து உரையாற்றிய டாக்டர் கொல்வின் ஆர்டி. சில்வா, "எமக்கு ஞாபகத்தில் உள்ள காலம் தொட்டு இலங்கை ஒற்றையாட்சி அரசு முறையுடையதாகவே இருந்தது (*From the time we can remember Sri Lanka had been a unitary state*)" என்று குறிப்பிட்டார். நாடு முழுமையினதும் நன்மையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது ஒற்றையாட்சி என்ற 'லேபல்' அவசியமானது என்று அவர் வாதம் புரிந்தார்.

இத்தீர்மானத்திற்கு எதிரான விமர்சனத்தை உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் முன்வைத்தார். அரசியல் யாப்புப் பேரவையில் அவர் உரையாற்றும் போது அரசியல் யாப்புக்கு நாட்டின் எல்லா மக்கள் சமூகங்களினதும் (Communities) உடன்பாடும் சம்மதமும் அவசியம் எனக் குறிப்பிட்டார். சிங்கள மக்கள், தமிழ் மக்கள் மீது அவர்களின் சம்மதம் இல்லாமல் ஓர் அரசியல் யாப்பைத் திணிப்பதன் விளைவுகள் குறித்து எச்சரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து பேசிய அவர், இலங்கைக்கு ஏன் சமஷ்டி அரசியல் முறை அவசியம் என்பதை எடுத்துக்காட்டி ஆணித்தரமான வாதங்களை முன்வைத்தார். பல இனத்துவக் குழுக்கள் வாழும் பன்மைத்துவச் சமூகங்களுக்கு சமஷ்டி முறையே மிகப் பொருத்தமானது. இலங்கைத் தமிழரசுக் கட்சி சமஷ்டி அரசைத் தோற்றுவிப்பதன் மூலம் நாட்டைப் பிளவுபடுத்த முயற்சி செய்யவில்லை; மாறாக வேற்றுமையில் ஒற்றுமையைக் கட்டி வளர்ப்பதற்கே (*To achieve unity in diversity*) விரும்புகிறது என்று குறிப்பிட்ட அவர், என்றோ ஒரு நாள் இலங்கையில் சமஷ்டி அரசுமுறை ஏற்படுத்தப்படுவது உறுதி என்றும் கூறினார். சோவியத் ரஷ்யாவிலும், யுகோசிலாவியாவிலும் சமஷ்டி முறை இருப்பதால் அந்நாடுகளில் இனங்களுக்கிடையே ஒற்றுமை இருப்பதாகவும் வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

வி. தர்மலிங்கம் அவர்களின் உரைக்கு எதிர்வினையாக கம்யூனிஸ்ட் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சரத் முத்தேட்டுவவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ரட்ணே தேசபிரிய சேநாயக்க என்ற பாராளுமன்ற உறுப்பினரும் தமது உரைகளில் கூறியவை கவனிப்புக்குரியவை.

கம்யூனிஸ்ட் கட்சியின் சரத் முத்தேட்டுவ, சோவியத் ரஷ்யாவிலும் யுகோசிலாவியாவிலும் சமஷ்டி முறை இருப்பதால்தான் இன ஐக்கியம் உள்ளது என்று கூறுவது உண்மையல்ல என்றார். அந்நாடுகளில் உற்பத்தி, பரிவர்த்தனை என்பனவற்றுக்கான சாதனங்களும், சொத்துகளும் பொது உடமையாக உள்ளன. அதாவது, அங்கு சோஷலிச முறை செயற்பாட்டில் உள்ளது; அதுவே இன ஐக்கியத்திற்கு உண்மையான காரணம் என்றார்.

ரட்ணே தேசபிரிய, சோஷலிச அபிவிருத்தித் திட்டத்தை (*Socialist National Development Plan*) தமது அரசாங்கம் திறமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஒற்றையாட்சி அரசு முறை தேவை என்றார். இவர்களிருவரும் சிங்கள தேசியவாதத்தின் ஒற்றையாட்சித் திட்டத்திற்கு ஆதரவான வாதத்தை சோஷலிசக் கருத்தியல் நோக்கில் (*Socialist Ideological Perspective*) முன்வைத்தமையைக் காண முடிகிறது.

1972 அரசியல் யாப்பின் பிரிவு 45 (1)

டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா 1972 அரசியல் யாப்பின் சிற்பி ஆவார். அவர் வரைந்தளித்த அரசியல் யாப்பின் பிரிவு 45 (1), இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்ற பேச்சுக்கே இனிமேல் இடமில்லை என்ற வகையிலான ஏற்பாட்டைச் செய்திருப்பதை றொகான் எதிரிசிங்க எடுத்துக்காட்டுகிறார். அப்பிரிவு வருமாறு:

*"The national state assembly may not abdicate, delegate or in any manner alienate its legislative power, nor may it set up an authority with any legislative power other than the power to make subordinate laws."*

மேற்படி பிரிவை அதன் வாசகங்களில் சிறிதளவும் மாற்றம் செய்யாமல் அப்படியே 1978இன் அரசியல் யாப்பில் சேர்த்துள்ளார்கள். ஆக 1972, 1978 என்ற இரு அரசியல் யாப்புகளும் உருவாக்கியிருக்கும் பிரச்சினை தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாகி விட்டது. இதை நாம் தமிழ் வாசகர்களுக்காக விளக்கிக் கூற வேண்டியுள்ளது.

1. தேசிய அரசுப் பேரவையின் (பாராளுமன்றம்) சட்டவாக்க அதிகாரம் (Legislative Power) கையளிக்கப்படவோ அல்லது வேறு எந்த வகையிலும் பிரித்தெடுக்கப்படவோ முடியாது என்றும், சட்டவாக்க அதிகாரம் உடைய வேறு எந்த அதிகாரத்துவ நிறுவனத்தையும் நிறுவவும் முடியாது என்றும் 45 (1) பிரிவு கூறுகிறது.
2. ஆயினும் ஒரே விதிவிலக்கு இருக்கிறது. துணைநிலைச் சட்டவாக்க (Subordinate Legislation) அதிகாரங்களை ஏதேனும் அதிகார நிறுவனத்திற்கு கையளிக்கலாம்.

இப்பிரிவு மாகாணசபைகளிடமோ, வேறு எந்தவகையான அரசு அலகுகளிடமோ சட்ட ஆக்க அதிகாரத்தை வழங்குவதைத் தடை செய்கிறது. ஏதாவது அதிகாரங்களை மாகாணங்களிலும் மாவட்டங்களிலும் உள்ள நிறுவனங்களுக்கு வழங்குவதென்றால், அவை உள்ளூராட்சி உபவிதிகள் (ByLaws) போன்ற துணைநிலைச் சட்டங்களை ஆக்கும் அதிகாரங்களாகவே இருக்க வேண்டும் என்றும் 45 (1) பிரிவு கூறுகிறது. 1978 அரசியல் யாப்பு இப்பிரிவை அப்படியே சேர்த்துக் கொண்டதன் மூலம் இதனை முற்றாகவே மாற்ற முடியாத அரசியல் யாப்பு ஏற்பாடாக மாற்றிவிட்டது என்றே கூறலாம்.

மாகாணசபைகள் உருவாக்கப்படுவதை எதிர்த்து சிங்கள ஆணைக்குழு (The Sinhala Commission) ஒன்றை நிறுவி, விசாரணை நடத்தி, அவ்விசாரணை பற்றிய அறிக்கை ஒன்று சிங்களத் தேசியவாதக் குழுக்களால் வெளியிடப்பட்டது. இந்த அறிக்கையிலும், சிங்களத் தேசியவாதிகளின் பிற வெளியீடுகளிலும் அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி என்ற அரசின் தகுதியை மாற்ற முடியாது என்று வாதிடப்பட்டது. அரசியல் யாப்பின் இந்த அம்சம் அரசியல் யாப்பின் அடிப்படைக் கூறு (The basic feature of the constitution) என்றும், ஓர் அரசியல் யாப்பின் அடிப்படைக் கூறுகளை யாப்புத் திருத்தம் (Constitutional Amendment) மூலம் திருத்த முடியாது என்றும் வாதிடப்பட்டது.

## ஒற்றையாட்சி வாதமும் பிரிவினை இயக்கத்தின் தோற்றமும்

1972 அரசியல் யாப்பு ஒற்றையாட்சி வாதம் (Unitarianism) என்னும் தத்துவத்தை இலங்கையின் அரசியல் யாப்பினுள் புகுத்தியது. 1956ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம் அரசியல் யாப்பின் ஒரு பிரிவாக ஆக்கப்பட்டது. பௌத்த மதத்திற்கு முதன்மையிடம் அளிக்கும் பிரிவும் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டது.

இப்பின்னணியில் 1972 அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்ததும், பிரிவினை இயக்கம் தமிழர்களிடையே படிப்படியாகச் செல்வாக்கைப் பெறத் தொடங்கியது. தமிழ் அரசியல் தலைவர்களால் சமத்துவமும் அரசியல் தன்னாட்சியும் (Equality and Political Autonomy) என்ற கோரிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த அனைத்துச் செயற்பாடுகளும் தோல்வியில் முடிந்ததைத் தமிழ் இளைஞர் இயக்கம் உணர்ந்து கொண்டது.

சோல்பரி அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த சிறுபான்மையினருக்கான காப்பீடுகள் (Minority Safeguards) நீக்கப்பட்டு, சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் மேற்குறிப்பிட்டவாறு அரசியல் யாப்பில் உயர் அந்தஸ்து வழங்கப்பட்டது. புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்ட பின்னர் தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) என்ற அரசியல் அமைப்பை 1975இல் உருவாக்கின.

அவ்வமைப்பின் முதலாவது மாநாடு 1976ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானம் 'தமிழ்த் தேசம், நாட்டின் ஐக்கியத்திற்குப் பங்கம் இல்லாதபடி அரசியல் யாப்பு அங்கீகாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பை'

*1972* அரசியல் யாப்பு இல்லாமல் செய்துவிட்டது எனக் குற்றம்சாட்டியது. அத்தீர்மானம் இறைமையுள்ள சோஷலிச தமிழீழ அரசை (Sovereign Socialist State of Tamil Eelam) அமைக்கும் வரை மன உறுதியோடு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்படி தமிழ் இளைஞர்களை வேண்டிக் கொண்டது. வட்டுக்கோட்டையில் நடைபெற்ற *1976*ஆம் ஆண்டு மாநாட்டுடன் தமிழ்த் தேசியப் போராட்டம் தீவிரமடைந்தது.

## 1978 அரசியல் யாப்பு

*1977*ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தது. அத்தேர்தலில் புதிய அரசியல் யாப்பு ஒன்றினை இயற்றுவதற்கான மக்கள் ஆணையையும் அக்கட்சி பெற்றிருந்தது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு ஜனாதிபதி முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவம் என்ற இரு முக்கிய மாற்றங்களைக் கொண்டு வந்தது. இம்மாற்றங்களோடு அவ்வரசியல் யாப்பு ஒற்றையாட்சி 'லேபல்' (Unitary Label) என்பதையும் இணைத்தது. ஒற்றையாட்சி என்பதை இலகுவில் திருத்த முடியாத அரசியல் யாப்பு உறுப்புரையாக மாற்றி, பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் மட்டுமே திருத்தப்பட முடியும் என்பதையும், சர்வசன வாக்கெடுப்பு மூலம் (Referendum) மக்களின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் விதித்தது.

சமஷ்டி, தமிழர்களின் அரசியல் கோரிக்கை (Tamil Political Demand) என்ற தன்மையுடையதாகவே *1970*களின் இறுதிவரை நீடித்த பின்னணியில், *1980*களில் 'Council For Liberal Democracy - CLD' (தாராண்மை ஜனநாயகத்திற்கான கவுன்சில்) என்ற இயக்கம் சமஷ்டிக் கோரிக்கைக்கான தனது ஆதரவை வெளியிட்டது. இந்த 'CLD' என்ற அமைப்பில் இலங்கையின் எல்லா இனக்குழுமங்களைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக இருந்தனர்.

*1987*இல் இவ்வியக்கம் Liberal Party (லிபரல் கட்சி) என்ற கட்சியாக உருவாக்கம் பெற்றது. லிபரல் கட்சியின் தலைவர்கள் இலங்கைக்கு சமஷ்டி அரசியல் முறை வேண்டும் என்பதை முன்வைத்தனர்.

இலங்கையின் இனத்துவப் பிரச்சினையை (Ethnic Conflict) தீர்வு செய்வதற்கு சமஷ்டி முறையே பொருத்தமானதோர் அரசியல் முறை என இக்கட்சியினர் கூறினர்.

*1972* முதல் இலங்கையில் மேலோங்கியிருந்த அரசியல் ஏதேச்சதிகாரம் (Political Authoritarianism) என்ற கெடுதல் போக்கிற்கு மாற்றான கொள்கையை லிபரல் கட்சி முன்வைத்தது. லிபரல் கட்சியின் செயலாளர் நாயகம் சானக அமரதுங்க (Chanaka Amaratunga), சமஷ்டியை ஆதரித்து *1986*இல் வெளியிட்ட ஓர் அறிக்கையில் லோர்ட் ஆக்டனை (Lord Acton) மேற்கோள் காட்டி பின்வருமாறு குறிப்பிட்டார்.

*"Of all the checks on democracy, federation has been the most efficacious and the most congenial... the federal system limits and restrains the sovereign power by dividing it, and by assigning to the government only certain defined rights. It checks not only the majority but the power of the whole people, and it affords the strongest basis for a second chamber, which has been found to be the essential security for freedom in every true democracy.'*

ஆட்சியாளர்கள் அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதற்கு சமஷ்டி முறையின் இறைமைப் பிரிவு (Dividing Sovereign Power) மிகச்சிறந்த வழிமுறை என்பதை மேற்குறிப்பிட்ட மேற்கோள் எடுத்துக்காட்டுகிறது.

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் (Parliamentary Select Committee) *1991* அறிக்கை, சமஷ்டி முறைக் கருத்தை பரிசீலனைக்கு உகந்த சிறந்த கருத்தாகச் சிபார்சு செய்தது. அக்குழு *13*ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த அதிகாரப் பகிர்வை விடக் கூடியளவு அதிகாரப் பகிர்வு வழங்கப்படுவதை ஏகமனதாக ஏற்றுச் சிபார்சு செய்திருந்தது.

குழுவின் அறிக்கையில் அதிகாரப் பகிர்வு 'இந்தியாவின் அரசியல் யாப்பில் உள்ளது போன்றதாக இருத்தல் வேண்டும்' என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. மங்கள முனசிங்க குழுவின் அறிக்கை, இலங்கைக்கு இந்தியாவில் உள்ளதைப் போன்ற அரைகுறைச் சமஷ்டி முறையை (QuasiFederal Constitutional Arrangement) சிபார்சு செய்தது என்று அக்காலத்தில் விளக்கம் கூறப்பட்டது.

இலங்கையின் இன்றைய அரசியல் யாப்பில் அதிகாரப் பகிர்வு

இந்திய அரசின் அழுத்தம் காரணமாக 1987 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அந்த உடன்படிக்கையின் விளைவாக அதிகாரப் பகிர்வு (Devolution) என்ற கருத்து இலங்கையின் அரசியல் யாப்பினுள் புகுந்தது.

13 ஆவது அரசியல் திருத்தம் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட மாகாண சபை முறை உண்மையான அதிகாரப் பகிர்வை வழங்கத் தவறியது. மாகாண சட்டசபைகள் (Legislatures) அதிகாரம் அற்றவையாக இருந்தமையால், மக்களின் நம்பிக்கையைப் பெற்ற முறைமையாக இது விளங்கவில்லை. இம்முறைமை குறித்து ஏமாற்றமும் விரக்தியுணர்வும் மக்களிடம் மேலோங்கியிருந்தது. இம்முறைமையின் பிரதான குறைபாடுகள் பின்வருவன:

அ. மாகாண சபைகளுக்கு எந்தவொரு விடயம் குறித்தும் முழுமையான அதிகாரம் இருக்கவில்லை.

ஆ. மாகாணங்களுக்கு மத்திய அரசாங்க மட்டத்தில் அரசியல் செல்வாக்கு இருக்கவில்லை.

இ. இவ்வாறு அரசியல் செல்வாக்கு இல்லாத காரணத்தால், மாகாண சபைகளுக்கு எனப் பகிர்ந்தளிக்கப்பட்ட அரசியல் அதிகாரங்களை (Devolved Political Powers) மத்திய அரசாங்கம் திருப்பித் தானே பறித்தெடுத்துக்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

ஈ. இலங்கையின் அரசியல் முறைமையில் அரசியல் யாப்பு மேன்மையானது; அதனை மீற முடியாது என்ற நிலை இருக்கவில்லை (The constitution of Sri Lanka is not supreme). இக்காரணத்தால் அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தம் வழங்கிய அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை மீறும் சட்டங்கள் பலவும் இருந்தன.

உ. மாகாண சபைகளை மத்திய பாராளுமன்றம் ஒருதலைப்பட்சமாகக் கலைத்து விடலாம். அல்லது மாகாண சபைகளின் அதிகாரங்களைக் குறைக்கலாம்; நீக்கிவிடலாம். (Provincial councils can be abolished, or their powers curtailed, by the central parliament acting unilaterally)

ஊ. சுகாதாரம், கல்வி போன்ற முக்கியமான துறைகளில் வழங்கப்பட்டுள்ள குறைந்த அளவான அதிகாரங்களைக் கூட மத்திய அரசின் நிர்வாகத் துறைக்கு இலகுவாக மாற்றிவிடலாம். (The central executive can recentralize power very easily)

மேற்குறிப்பிட்ட ஐந்து குறைபாடுகளும் இல்லாத அதிகாரப் பகிர்வு மூலமே சுயாதீனமான மாகாண சபை முறையினை உருவாக்கலாம். இந்த ஐந்து குறைபாடுகளும் இல்லாத அதிகாரப் பகிர்வு சமஷ்டியின் (Federalism) சாரம்சமான கூறாக அமையும். இக்கருத்தை றொகான் எதிரிசிங்க அவர்கள் பின்வருமாறு தெளிவாக விளக்கிக் கூறுகிறார்.

பகுதி
2

*"The way to overcome the glaring deficiencies in the present provincial council system is to introduce a scheme of devolution of power which includes the five features described above as the essence of federalism. Substantial devolution of power which is secure, guaranteed, which provides for a remedy in situations where such powers are exceeded or undermined, and which ensures that provincial/regional interests are represented at the centre and that the centre and provinces/regions do not have an adversarial relationship with each other, requires the incorpora tion of these basic features of federalism."*

13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் நடைமுறையில் தோல்வியில் முடிவடைந்துவிட்டது; ஒற்றையாட்சி லேபலுடன் கூடிய இலங்கையின் அரசியல் யாப்பின் வெளிப்படையான குறைபாடுகள் (Glaring Deficiencies) ஐந்து உள்ளன. அவை 13 ஆவது திருத்தம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அதிகாரப் பகிர்வை (Devolution of Powers) நடைமுறைப்படுத்துவதைத் தடை செய்கின்றன என றொகான் எதிரிசிங்க எடுத்துக்கூறுகிறார். மாகாண சபைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். அவை அரசியல் அதிகாரங்கள் (Political Powers) உடைய அலகுகளாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும். மத்திய அரசாங்கம் மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பறித்தெடுக்கக் கூடாது. மாகாண சபைகளினதும் பிராந்தியங்களினதும் நலன்களைப் பாதுகாக்கும் வலுவுடைய அரசியல் அலகுகளாக மாகாண சபைகள் செயற்பட வேண்டும் என்பன றொகான் எதிரிசிங்க அழுத்திக் கூறும் கருத்துகளாகும்.

### பாராளுமன்றத்தின் இறைமை

பாராளுமன்றத்தின் இறைமை என்னும் பிரித்தானிய யாப்புத் தத்துவம் (British Constitutional Doctrine), ஜனநாயக முறைமையைப் பின்பற்றும் உலக நாடுகளால் காலத்துக்கு ஒவ்வாத பிற்போக்கான தத்துவம் எனப் புறக்கணிக்கப்பட்டுள்ள தத்துவமாகும். பிரித்தானியாவின் காலனிகள் சிலவற்றின் அரசியல் யாப்புகளில் இது புகுத்தப்பட்ட போதும், பின்னர் அந்நாடுகளால் இத்தத்துவம் புறந்தள்ளப்பட்டுவிட்டது. இன்று பிரித்தானியாவும் பாராளுமன்ற இறைமை என்ற தனது கண்டுபிடிப்பைக் காலத்துக்கு ஒவ்வாதது எனப் புறந்தள்ளிவிட்டது.



இந்நிலையில் இலங்கையில் *1972* இல் கொல்வின் ஆர்.டி. சில்வா இத்தத்துவத்தை இலங்கையின் அரசியல் யாப்பில் புகுத்திவிட்டார். ஆயினும், *1972*க்கு முன்னர் இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டவியலில் (*Constitu tional Jurisprudence*) காணப்படாத அந்நியமான கருத்து இது. *1972-1978* என்னும் குறுகிய காலம் மட்டும் இலங்கையின் அரசியல் யாப்பின் பகுதியாக இக்கருத்து இருந்தது. அது பின்னர் *1978* இல் மறைந்துவிட்டது என்றும் றொகான் எதிரிசிங்க குறிப்பிடுகிறார்.

*"The sovereignty of parliament is an obsolete British constitution al doctrine which has been incorporated in a handful of countries and today rejected in most of them, including the country of its origin! It is somewhat quaint that the Sinhala nationalist forces are so besotted by this British doctrine, which, incidentally, was not a feature of our constitutional jurisprudence either from **1948-1972** or from **1978** to date! in Sri Lanka the doctrine of parliamentary sovereignty existed, and that too by implication, only between **1972** to **1978**."*

காலத்துக்கு ஒவ்வாத (*Quaint*) இக்கருத்தால் சிங்கள தேசியவாத சக்திகள் கவரப்பட்டுப் பாராளுமன்ற இறைமை என்றும், மாகாண சபைகளுக்குப் பாராளுமன்றம் தனது இறைமையை விட்டுக்கொடுக்கக் கூடாது என்றும் பேசுவதுமான வேடிக்கை இலங்கையில் நடைபெறுவதை றொகான் எதிரிசிங்க எடுத்துக்காட்டுகிறார். ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் அதிகாரப் பகிர்வு மூலம் அரசியல் தீர்வு காணப்படும் ஒரு சந்தர்ப்பம் எவ்வாறு கைநழுவிப் போனது என்பதையும் அவர் எடுத்துக்காட்டுகிறார்.

### இலங்கையில் 'கொன்பெடரேசன்' அரசியல் முறைமையை ஏற்படுத்த வேண்டும் என்ற முன்மொழிவு

இலங்கையில் உச்சபட்ச அதிகாரப் பகிர்வை (*Maximum Devolution*) நடைமுறைப்படுத்த வேண்டும்; அதற்கு மிகவும் பொருத்தமான முறையாக 'கொன்பெடரேசன்' முறை அமைய முடியும்; அதுவே இலங்கையை ஐக்கியப்பட்ட தேசமாக (*United Country*) வைத்திருக்க உதவும் என்ற கருத்தை *1995* டிசம்பர் *20* ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்தார். அதே கருத்தைப் பிரபாகரனும் அப்போது கூறினார் என்று றொகான் எதிரிசிங்க குறிப்பிடுகிறார். இந்த ஆலோசனையை ஆராய்ந்து ஓர் அறிக்கையைத் (*Frame work Document*) தயாரிக்கும்படி பேட்ஸ், வெல்ஸ் அண்ட் பிரைத்வெய்ட் என்ற பிரித்தானிய சட்ட நிறுவனத்திடம் (*British Firm of Solicitors, Bates, Wells and Braithwaite*) வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த வேண்டுகோள் '*Sri Lanka Peace Support Group*' என்ற குழுவால் மேற்படி நிறுவனத்திடம் விடுக்கப்பட்டது எனவும் றொகான் எதிரிசிங்க குறிப்பிடுகிறார். சிறிலங்கா சமாதான ஆதரவுக் குழு என்ற அமைப்பில் '*Tamil Academics, Professionals and Clergy from International Community*' போன்றோர் உள்ளடங்கியிருந்தனர் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

*1995* காலத்தில் இப்படியான ஒரு '*Confederal Proposal*' ஒன்றிற்கான திட்ட வரைவினை பிரித்தானியாவின் சொலிசிட்டர் நிறுவனம் தயாரித்து வழங்கியது என்பது பெரும்பாலான இலங்கையர்களின் நினைவில் இருந்து மறைந்தே போய்விட்டது எனலாம். *1995*க்கும் *2000* ஆவது ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் அதிகாரப் பகிர்வு பற்றிய பயனுள்ள உரையாடல்கள் இடம்பெற்றன. இக்காலத்தில் நான்கு முக்கிய ஆவணங்கள் (*Documents*) தயாரிக்கப்பட்டன. அவையாவன:

1. *1995* ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகள் (*The Devolution Proposals of August 1995*). இந்த ஆவணத்தில் அதிகாரப் பகிர்வு பற்றிய பொதுத் தத்துவங்கள் (*General Principles*) எடுத்துக்கூறப்பட்டன.
2. *1996* ஜனவரியில் முற்கூறிய ஆவணத்தின் அடிப்படையில் விரிவான அதிகாரங்களைப்

பகிர்ந்தளிக்கும் யோசனைகள் அடங்கிய அரசியல் சட்ட வரைவு (*The Legal Draft of January 1996*) வெளியிடப்பட்டது.

3. 1997 மார்ச் மாதம் அரசியல் யாப்பு யோசனைகள் வரைவு (*Draft Constitutional Proposal of March 1997*) வெளியிடப்பட்டது. இது மூன்றாவது முக்கிய ஆவணமாகும்.

4. இறுதியாக, ஆகஸ்ட் 2000 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பு மசோதா வரைவு (*Draft Constitution Bill of August 2000*) வெளியிடப்பட்டது.

மேற்குறித்த நான்கு ஆவணங்களிலும் அரசியல் யாப்பின் ஒற்றையாட்சி லேபல் நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இக்காலத்தில் 'Unitary Label'ஐ நீக்குவதில் ஒருமித்த கருத்து இந்த ஆவணங்களூடாக உருவாகியிருந்தமை முக்கியமான விடயம் என றொகான் எதிரிசிங்க குறிப்பிடுகிறார். ஆயினும், அதிகாரப் பகிர்வு பற்றிய 1995-2000 கால உரையாடல்கள் நடைமுறையில் பயனுடைய அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கவில்லை. இக்கால முயற்சிகள் தோல்வியடைந்த பின்புலத்திலேயே 2001-2003 கால சமாதான முயற்சிகள் இடம்பெற்றன.

### 2001-2003 காலத்தில் இடம்பெற்ற அரசியல் யாப்பு விவாதங்களும் சமாதான முயற்சிகளும்

றொகான் எதிரிசிங்க அவர்களின் கட்டுரையில் அடுத்து '*The Constitutional Debate and the Peace Process, 2001-2003*' என்னும் உபதலைப்பின் கீழ் அவர் எழுதியிருப்பவற்றை அறிமுகம் செய்யும் வகையில், ஒஸ்லோ பேச்சுவார்த்தையின் பின்னணி பற்றியும் அப்பேச்சுவார்த்தையின் மூன்றாவது சுற்று உரையாடலின் முடிவில் வெளியிடப்பட்ட ஒஸ்லோ அரசாங்க அறிக்கையில் (*Oslo Communiqué*) கூறப்பட்டவை பற்றியும் சில முக்கிய பின்னணித் தகவல்களை இப்பகுதியில் தருகின்றோம்.

2001 ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தவேளை ஒஸ்லோ பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் முடிவில் டிசம்பர் 2002 இல் நோர்வே அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளடங்கியிருந்த பிரகடனம், சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வு தொடர்பான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை உள்ளடக்கியிருந்தது.

*"The agreement reached between the government of Sri Lanka and the LTTE to explore federalism and internal selfdetermination within a united Sri Lanka as the basis of a political solution to the ethnic conflict in late 2002 raised hopes for a durable peace in the island."*

**மாகாண சபைகள் வலுப்படுத்தப்பட வேண்டும். அவை அரசியல் அதிகாரங்கள் உடைய அலகுகளாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும். மத்திய அரசாங்கம் மாகாண சபைகளின் அதி காரங்களைப் பறித்தெடுக்கக் கூடாது. மாகாண சபைகளினதும் பிராந்தி யங்களினதும் நலன்களைப் பாதுகாக்கும் வலுவுடைய அரசியல் அலகுகளாக மாகாண சபைகள் செயற்பட வேண்டும் என்பன றொகான் எதிரிசிங்க அழுத்திக் கூறும் கருத்துகளாகும்.**

மேலே தரப்பட்ட ஆங்கில வாக்கியத்தில் உள்ளடங்கியுள்ள கருத்துகளை பின்வருமாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. உள்ளக சுயநிர்ணயம் (*Internal Selfdetermination*), சமஷ்டி (*Federalism*) என்பனவும், தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகப் பகுதிகளுக்கு (*In areas of historical habitation of the Tamil speaking people*) அதிகாரத்தைப் பகிர்தல் என்பதும் இரு தரப்பினராலும் ஏற்கப்பட்டன.

2. மேற்படி விடயங்களின் அடிப்படையிலான அரசியல் தீர்வு ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் (*Within a United Sri Lanka*) ஏற்படுத்தப்படும் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. மேற்குறித்த அடிப்படைகளின்படி, இனத்துவப் பிரச்சினைக்கான தீர்வைப் பரிசீலிப்பதென இருதரப்பினரும் இணங்கிக்கொண்டனர்.

4. இந்த இணக்கப்பாடு இலங்கையில் நிலையான சமாதானம் (*Durable Peace*) ஏற்படப் போகின்றது என்ற நம்பிக்கையை 2002 ஆம் ஆண்டின் இறுதியில் தோற்றுவித்தது.

*"It helped allay the concerns of the sceptics that the organisation was not interested in accommodation and compromise. The breakdown in the negotiations since April 2003 may have*

*rekindled the views of the sceptics, but the constitutional debate in the past one and a half years has focused on federalism, which is in itself a significant development. Many of us have argued for years that a solution must be based on federal lines."*

மேற்கண்ட பந்தியில் ஒஸ்லோ பேச்சுவார்த்தைகள் குறித்துக் கூறியிருக்கும் ஒரு கருத்தை அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம். அப்பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தபோதிலும், அவை அரசியல் யாப்பு விவாதத்தை (Constitutional Debate) சமஷ்டி குறித்துக் குவியப்படுத்துவதாக அமைந்தது. இது குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றமாகும் (A Significant Development).

## ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் அடிப்படை இயல்புகள்

இலங்கையில் சிங்களவர் மத்தியில் சமஷ்டி பற்றிய அச்சமும் தவறான கருத்துகளும் உள்ளன. இதற்குக் காரணம், அவர்கள் சமஷ்டி என்றால் என்ன என்பதைப் பற்றிய அடிப்படையான விடயங்களையே புரியாதவர்களாக இருப்பதுதான். ஒற்றையாட்சி என்றால் என்ன என்பது பற்றியும் சரியான புரிதல் இல்லாதவர்களாகவே சிங்கள மக்களில் பெரும்பான்மையினர் உள்ளனர். தமிழ் மக்களிடமும் கூட சமஷ்டி-ஒற்றையாட்சி என்பன குறித்த தப்பெண்ணங்கள் நிறைய உள்ளன. இப்பின்னணியில் றொகான் எதிரிசிங்க 'The Essence of a Unitary Constitution' என்ற உபதலைப்பின் கீழ் எழுதியிருப்பவற்றைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

### அ. ஒற்றையாட்சி வரைவிலக்கணம்

*"The unitary form of government is one in which all legislative and executive authority is vested in a single legislature and a single government. The Latin "unus" means one. It has also been described as one in which the habitual exercise of supreme legislative authority is carried out by one central power."*

மேலே தரப்பட்ட மேற்கோளில் பொதிந்துள்ள கருத்துகளைத் தமிழில் இவ்வாறு கூறலாம்:

1. 'Unus' என்ற லத்தீன் மொழி வேர்ச்சொல் 'ஒன்று' என்ற பொருளுடையது. ஒற்றையாட்சி முறை அரசாங்கம் என்ற பொருளுடைய 'Unitary Form of Government' என்ற தொடர், நாட்டில் ஒரே ஒரு சட்டசபை மட்டுமே இருக்கும்; நாட்டை நிர்வகிக்கும் அரசாங்கமும் ஒன்று மட்டுமே இருக்கும் என்ற பொருளுடையது.
2. ஆகையால், சட்டங்களை ஆக்கும் மேலான அதிகாரங்களை உடைய சட்டசபை (Legislature), மத்தியப்படுத்தப்பட்ட அதிகாரமுடையதாக (Central Power) இருக்கும்.

ஒற்றையாட்சி என்பதன் சாரம்சமான அடிப்படைக் கருத்து இதுவே.

### ஆ. துணைநிலைச் சட்ட ஆக்கமும் துணைநிலைச் சட்டவாக்க அதிகாரமுடைய அரச நிறுவனங்களும்

ஒற்றையாட்சி முறையில் ஒரே ஒரு சட்டசபை மட்டுமே இருக்க முடியும் என்றபோதும், துணைநிலைச் சட்டவாக்கம் (Subsidiary Legislation) என்ற வகையிலான துணைநிலைச் சட்டங்களை ஆக்கும் முனிசிபல் சபைகள், பட்டின சபைகள், கிராம சபைகள் என்பன இயங்கி வருவதைக் காண முடியும். இவை கையளிக்கப்பட்ட அதிகாரங்கள் (Delegated Powers) மூலம் நாட்டின் மத்திய பாராளுமன்றத்திலிருந்து துணைநிலைச் சட்டவாக்க அதிகாரத்தைப் பெறுகின்றன. 'நவீன அரசியல் யாப்புகள்' (Modern Constitutions) என்ற நூலின் ஆசிரியர் சி. எஃப். ஸ்ரோங் (C. F. Strong) என்பவரின் பின்வரும் மேற்கோளைத் தரும் றொகான் எதிரிசிங்க இக்கருத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

*"It does not mean the absence of subsidiary lawmaking bodies, but it does mean that they exist and can be abolished at the discretion of the central authority."*

"துணைநிலைச் சட்டவாக்க நிறுவனங்களை அவற்றை உருவாக்கிய பாராளுமன்றமே தனது தற்துணிவு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒழித்துவிடலாம். மத்திய பாராளுமன்றம் துணைநிலைச் சட்டவாக்க நிறுவனங்களைத் தனது ஒருதலைப்பட்சமான முடிவின் மூலம் (Unilaterally) ஒழித்துவிடலாம்."

13 ஆவது திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகள், துணைநிலைச் சட்ட ஆக்கச் சபைகளுக்குரிய அதிகாரங்களை உடைய அமைப்புகளே அன்றி, முழுமையான சட்ட ஆக்க அதிகாரத்தையும் நிர்வாக அதிகாரத்தையும் உடைய அமைப்புகள் அல்ல என்பது நிரூபணமாகியுள்ளது.

### இ. சமஷ்டி முறையின் அடிப்படை இயல்புகள் ஒற்றையாட்சியில் இருந்து முற்றிலும் வேறானவை

சமஷ்டி முறையில்: அ) மத்திய அரசுக்கும் மாநிலங்கள்/ பிராந்தியங்கள்/ அரசுகள் (Provinces/ Regions/ States) என அழைக்கப்படும் அலகுகளுக்கும் இடையில் அதிகாரங்கள் பிரிக்கப்பட்டிருக்கும்; ஆ) மாநில/ பிராந்திய/ அரசு அலகுகள் சுயாட்சி (Autonomy) உடையனவாக இயங்கும். மாக்ஸ் பிராங்கெல் (Max Frankel), றொனால்ட் வாட்ஸ் (Ronald Watts) ஆகிய அரசியல் யாப்பு அறிஞர்களை மேற்கோள் காட்டும்

றொகான் எதிரிசிங்க, சமஷ்டி முறை எவ்வாறு ஒற்றையாட்சி முறையில் இருந்து வேறுபடுகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். றொனால்ட் வாட்ஸ் சமஷ்டி முறையின் அடிப்படை இயல்புகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார் எனக் கூறுகிறார். அவர் கூறியிருப்பவற்றை எமது வார்த்தைகளில் தமிழில் தந்துள்ளோம்.

**1. இருநிலை அரசுகள் (Two Orders of Government)**

சமஷ்டி முறையில் மத்திய-மாநில/ பிராந்தியம் என்ற இருநிலைகளில் அரசாங்கம் செயற்படும். அவ்விரு நிலை அரசுகளுக்கிடையில் சட்டவாக்க அதிகாரமும் நிர்வாக அதிகாரமும் பகிரப்பட்டிருக்கும். அரசியல் யாப்பின்படி தெளிவாக வகுக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு (*ClearCut Division of Powers*) இருக்கும். இந்நிலை அரசுகளுக்கிடையில் வருவாய் வளங்கள் (*Revenue Resources*) ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும்.

**2. மத்திய நிறுவனங்களில் மாநில/ பிராந்திய அரசுகளுக்குப் பிரதிநிதித்துவம்**

பிராந்தியங்களின் கருத்துகளைக் கேட்டறிந்து மத்திய அரசின் நிறுவனங்கள் கொள்கை வகுப்பதற்கு (*Federal/ Central PolicyMaking*) ஏதுவாக, மாநிலங்கள்/ பிராந்தியங்களின் குறித்தளவு எண்ணிக்கையுடைய பிரதிநிதிகளை மத்திய அரசின் சட்டவாக்கச் சபைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் சமஷ்டி முறைகளில் இருக்கும். இப்பிரதிநிதித்துவம் பாராளுமன்றத்தின் இரண்டாம் சபை எனப்படும் செனட் சபையின் (*Second Chamber of Parliament*) ஊடாக வழங்கப்படும்.

**3. எழுதப்பட்ட அரசியல் யாப்பு**

சமஷ்டி அரசியல் யாப்பு எழுதப்பட்ட அரசியல் யாப்பாக (*Written Constitution*) இருக்கும். எழுதப்பட்ட அரசியல் யாப்பினை சமஷ்டியின் அலகுகளான மாநில/ பிராந்திய அரசுகளின் சம்மதமின்றி, ஒருதலைப்பட்சமாக மத்திய அரசால் திருத்தம் செய்தல் இயலாது. சமஷ்டி அரசியல் யாப்பு மத்திய அரசுக்கும் மாநில/ பிராந்திய அரசுகளுக்கும் இடையிலான ஒப்பந்தம் (*Compact or Covenant*) போன்று அமைவதால், மத்திய அரசு, மாநில/ பிராந்திய அரசுகள் என்ற இரு சாராருடையதும் சம்மதமின்றி அதனைத் திருத்த முடியாது.

**4. பிணக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறும் நடுவர்**

சமஷ்டி முறைகளில் மத்திய அரசுக்கும் மாநில/ பிராந்திய அரசுகளுக்கும் இடையில் எழும் பிணக்குகளை விசாரித்துத் தீர்ப்புக் கூறும் நடுவர் (*Umpire*) என்னும் வகிபாகத்தைப் பெறும் நீதிமன்றம் (*Judiciary*) அவசியமான ஒரு நிறுவனமாகும். சமஷ்டி முறைகளில் நீதிமன்றங்கள் நீதி மீளாய்வு (*Judicial Review*) அதிகாரம் உடையனவாக விளங்கும்.

**5. மத்திய-மாநில உறவுகள்**

மத்திய அரசுக்கும் மாநில/ பிராந்திய அரசுகளுக்கும் இடையே பகிரப்பட்ட பொறுப்புகள் (*Shared Responsi bilities*) இருக்கும் விடயங்களில் ஒற்றுமையான செயற்பாடுகள் அமைய வேண்டும். இதனை உறுதி செய்வதற்காக மத்திய-மாநில/ பிராந்திய உறவுகளை நெறிப்படுத்தும் அமைப்பொழுங்கு செயற்பாட்டில் இருக்கும்.

மேற்குறித்த ஐந்து பண்புகளும் சமஷ்டி முறையின் அடிப்படையான இயல்புகளாகும். இம்முறையில் பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களை (*Devolved Powers*) மத்திய அரசாங்கம் ஒருதலைப்பட்சமாகப் பறித்தெடுக்கவோ அல்லது அரசியல் யாப்பைத் திருத்தவோ முடியாது.

‘*Federalism*’ என்ற ஆங்கிலச் சொல் ‘*Foedus*’ என்னும் வேர்ச்சொல்லில் இருந்து பிறந்த சொல்லாகும். ‘*Foedus*’ என்ற வேர்ச்சொல் ஒப்பந்தம், உடன்பாடு, சம்மதம் என்னும் பொருளுடையதாகும். ஆகையால், ‘சமஷ்டி’ (*Federalism*) என்பது இருநிலை அரசுகளிடையே சுயாட்சி (*SelfRule*), பகிரப்பட்ட ஆட்சி (*Shared Rule*) என்ற இரண்டினதும் கூட்டான உறவைக் குறிப்பதாக அமைகிறது. இக்காரணத்தால் சமஷ்டி முறை ஒருவகையான கூட்டாளி (*Partnership*) உறவாகும். சம்பந்தப்பட்ட தரப்பினர்களான மத்திய அரசு, மாநில/ பிராந்திய அரசுகள் என்பவற்றின் பரஸ்பர உடன்பாடின்றிச் சமஷ்டி ஒழுங்கமைப்பை மாற்றவோ அல்லது திருத்தங்களைக் கொண்டுவரவோ முடியாது என்ற கருத்தை றொகான் எதிரிசிங்க அழுத்திக் கூறுகிறார்.

‘*Essays on Federalism*’ நூலின் நான்காவது அத்தியாயமான (பக்கங்கள் 85 முதல் 108 வரை) ‘*Federalism: Myths and Realities*’ என்ற கட்டுரையின் 85 முதல் 99 வரையான 15 பக்கங்களில் கட்டுரையாசிரியர் றொகான் எதிரிசிங்க அவர்களால் கூறப்பட்டுள்ள கருத்துகள் இத்தமிழ்க் கட்டுரையில் தொகுத்தும் சுருக்கியும் கூறப்பட்டுள்ளன. இத்தமிழாக்கத்தை ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டு வாசித்துக்கொள்ளுமாறு தமிழ் வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

# பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், தேசிய பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள்: ஒரு கண்ணோட்டம்

1978 ஆம் ஆண்டு அன்றைய ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஆட்சியாளர்களால் இயற்றப்பட்டு, நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டு கடந்த நாலு தசாப்தங்களுக்கு மேலாக இருந்துவரும் 'பயங்கரவாதத் தடைச்சட்டம்: இல – 48/1979' தமிழ் வாசகர்களுக்கு ஒன்றும் புதுமையான ஒரு சட்டம் அல்ல. அது முதலில் ஒரு தற்காலிக தேவைக்கான சட்டமாகக் கொண்டுவரப்பட்டுப் பின்னர் நிரந்தரமான ஒரு சட்டமாக (1982) மாற்றப்பட்டது. பல்வேறு உலக நாடுகள் உட்பட உள்நாட்டு மக்களாலும் எதிர்க்கப்பட்டு வந்ததன் காரணமாக அவ்வப்போது சில திருத்தங்களுக்கான முயற்சிகள் நடந்தபோதும், அதற்குப் பதிலாக ஒரு திருத்தமாக 2022 இல் தயாரிக்கப்பட்ட 'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்' என்ற ஒரு 'சட்டவரைபு – 2023' வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, இன்னமும் பழைய பயங்கரவாதத் தடைச் சட்டமே அரசாங்கத்தால் பயன்படுத்தக்கூடிய வகையில் நடைமுறையில் உள்ளது. அதை ஓர் அரசாங்கம் தனது  நடவடிக்கைகளுக்காகக் கைகளில் எடுக்கின்றதா, இல்லையா என்பதைப் பொறுத்தே அது அதிகமாகப் பேசப்படும் சூழல் உருவாகிறது. இப்போது அத்தகைய ஒரு நிலை நிலவவில்லை என்றாலும் கூட, இந்தச் சட்டம் பற்றிய, மக்களது ஜனநாயக உரிமைகளைக் கட்டுப்படுத்த அரசுக்கு அது வழங்குகின்ற அதிகாரங்கள் பற்றிய உரையாடல் அவசியமானது.
அந்த அடிப்படையில், இந்த 'இலங்கை: பயங்கரவாதத் தடைச்சட்டம் – ஒரு விமர்சனரீதியான மதிப்பீடு' என்றநூலிலுள்ள கட்டுரைகளை நமது 'எழுநா' வாசகர்களுக்காக அதே பெயரில் தொடராக இங்கு தமிழில் தருகிறோம். இந்த நூல், 'மனித உரிமைகளுக்கும் அதன் வளர்ச்சிக்குமான மையத்'தைச் (Centre for Human Rights and Development – CHRD) சேர்ந்த, பேராசிரியர் பேற்றன் பஸ்தியாம்பிள்ளை, றோகண எதிரிசிங்க, என். கந்தசாமி ஆகிய அதன் அமைப்பாளர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட, நாட்டின் முக்கிய ஆளுமைகளால் எழுதப்பட்ட சட்டம் பற்றிய விமர்சனபூர்வமான பத்து ஆக்கங்களைக் கொண்ட ஒரு தொகுப்பு நூலாகும். எழுநா வாசகர்களுக்கு, நமது ஏனைய நூல்கள் போலவே இதுவும் இன்னொரு முக்கிய நூலாக அமையும் என்று நம்புகிறோம்.

**ஆங்கில மூலம்: நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன்**


## எஸ்.கே. விக்னேஸ்வரன்



எஸ்.கே. விக்னேஸ்வரன், எழுபதுகளின் பிற்கூறுகளில் சிறுகதை எழுத்தாளராக ஈழத்தின் எழுத்துத்துறைக்குள் அறிமுகமானவர். வடமராட்சியிலுள்ள அம்பன் கிராமத்தைச் சேர்ந்த இவர், சிறுகதைகள், கவிதைகள் எழுதுவதுடன் மட்டுமன்றி, இலக்கியம், அரசியல் சார்ந்த கட்டுரைகள் எழுதுவதிலும், ஆங்கிலத்தில் வரும் முக்கியமான எழுத்துகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் இயங்கி வருபவர். தொண்ணூறுகளில் கொழும்பிலிருந்து வெளியான 'சரிநிகர்' வாரப்பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், பின்னர் கனடாவில் வெளியான 'தீபம்' வாரப்பத்திரிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டு வந்தவர். சரிநிகரில் தொடராக வெளிவந்த அவரது மொழிபெயர்ப்பு நூலான 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற பெற்றோருக்கான வழிகாட்டிநூல் இன்றுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இப்போது தாய்வீடு இதழில் அவரது 'பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே' என்ற இன்னொரு மொழிபெயர்ப்பு நூல் தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே சரிநிகரில் வெளிவந்து பாதியில் நின்றுபோன மொழிபெயர்ப்பு நூலான, 'தலைமறைவு வாழ்க்கை' என்ற, மறைந்த மதிப்புக்குரிய றெஜி சிறிவர்த்தன அவர்களது நூல், அண்மையில் வெளியாகியுள்ளது. ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் (MBA) பட்டம்பெற்ற இவர் இப்போது கனடாவில் வசித்து வருகிறார்

பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், எண் 48, 1979இன் (இனிமேல் ‘பயங்கரவாதத் தடைச் சட்டம்’ என அழைக்கப்படும்) விளக்கக் குறிப்பும் அதன் முன்னுரையும், பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப்படுவதற்கு வழிவகுத்த பின்னணியைப் பின்வருமாறு விவரிக்கிறது:

“இலங்கையில் பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கும், இலங்கைக்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ உள்ள எந்தவொரு தனிநபர், தனிநபர்களின் குழு, சங்கம், அமைப்பு அல்லது ஆட்களது, குழுக்களது சட்டவிரோதச் செயல்பாடுகளைத் தடுப்பதற்கும், அது தொடர்பான அல்லது அதனுடன் இணைந்த விடயங்களுக்குமான தற்காலிக ஏற்பாடுகளைச் செய்வதற்கான ஒரு சட்டம்.”

“இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம், சட்டத்தின் ஆட்சிக்கு மதிப்பளிப்பதன் அடிப்படையில் சுதந்திரம் நிறுவப்படும்போது மட்டுமே, மனிதர்களும் நிறுவனங்களும் சுதந்திரமாக இருக்க முடிகிறது என்றும், அதன் குறைகள் அரசியலமைப்பு முறைகளால் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்துகிறது;

மேலும், இலங்கையில் அரசாங்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகவோ, அல்லது உதவியாகவோ வன்முறையைப் பயன்படுத்துவதை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுவதை ஆதரிக்கும் பிரிவினர்கள், தனிநபர்கள், இத்தகைய நோக்கம் கொண்ட குழுக்கள், அல்லது சங்கங்களால் இலங்கையில் பொது ஒழுங்கு தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகிறது; இவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், அத்தகைய செயல்களுக்குச் சாட்சிகளாக இருப்பவர்கள் மற்றும் சட்டத்தை மதிக்கும் பிற அப்பாவிக் குடிமக்கள் மீது, கொலைகளையும் கொலை அச்சுறுத்தல்களையும் செய்வதில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன், ஆயுதமேந்திய கொள்ளை, அரச சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தல், நேரடியான அச்சுறுத்தல் அல்லது அச்சுறுத்தும் வகையிலான வற்புறுத்தல், வன்முறையை உள்ளடக்கிய பிற வன்செயல்கள் போன்ற பலவகையான பயங்கரவாதச் செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர்.”

இவற்றைக் கையாளும் வகையில், பிற ஜனநாயக நாடுகள் பயங்கரவாதச் செயல்களைக் கையாள்வதற்காகச் சிறப்புச் சட்டங்களை இயற்றியுள்ளன என்ற அடிப்படையின் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டம் இலங்கையில் கொண்டுவரப்படுகிறது.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்ற இந்தச் சட்டம் இயற்றப்படுகிறது:

1. இச்சட்டம், ‘பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்’ என அழைக்கப்படலாம்.

இலங்கையில், ‘பயங்கரவாதத் தடைச் சட்டத்தை’ இயற்றுவதற்கான முதன்மையான காரணம், (அங்கு நடந்துவரும்) பயங்கரவாதச் செயல்களைத் தடுக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே தோன்றுகிறது. அத்துடன், இவ்விடயத்தில் மற்றைய ஜனநாயக நாடுகளும் இவ்வகையான சிறப்புச் சட்டங்களை இயற்றியுள்ளன என்பது இதற்கான நியாயமாகவும் இருந்தது.

ஆனால், ‘பயங்கரவாதச் செயல்கள்’ என்ற சொற்றொடர், மேலே குறிப்பிட்டபடி முன்னுரையில் மறைமுகமாகக் குறிப்பிடப்பட்டிருந்ததைத் தவிர, இச்சட்டத்தில் (வேறெங்கும்) வரையறுக்கப்படவில்லை. இச்சட்டத்தின் கீழ் குற்றங்களாகப் பட்டியலிடப்பட்டவையும் கூட, ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் ‘தண்டனைச் சட்டம்’ அல்லது இது தொடர்பான வேறு சட்டங்களில் குறிப்பிடப்பட்டிருந்த குற்றங்களேதான் என்றபோதும், அவை சில வேறுபாடுகளையும் கொண்டிருந்தன. அத்தகைய செயல்கள் யாருக்கு எதிராகச் செய்யப்பட்டால் அவை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றங்களாக மாறும் என்பதற்கான நபர்கள் அல்லது அதிகார அமைப்புகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. அதாவது, பிரிவு 31இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘குறிப்பிடப்பட்ட நபர்கள்’ (Specified Persons), அல்லது ‘அரசாங்கம்’ என்பவற்றுக்கு எதிரான குற்றச் செயல்களே அவையாகும். ‘ஜனாதிபதி, நீதிபதிகள், வெளிநாடுகளின் தூதுவர்கள் அல்லது அரசுகளுக்கிடையேயான (தொடர்புகளைப் பேணும்) சர்வதேச அமைப்புகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைப்புகள், அவற்றின் உறுப்பினர்கள், விசாரணைக் குழுக்களின் உறுப்பினர்கள், நீதிமன்ற அலுவலர்கள், இறுதியாக அரசின் ஆயுதப் படைகள், காவல்துறையினர் மற்றும் பொது ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்புள்ள பிற படைகளின் உறுப்பினர்கள்’ ஆகியோரே இவ்வாறு இந்தக் ‘குறிப்பிடப்பட்ட நபர்கள்’ எனக் குறிப்பிடப்பட்டனர். அரசாங்கச் சொத்துகளைக் கொள்ளையடிப்பது அல்லது அத்தகைய சொத்துகள் மீது சேதங்களை

ஏற்படுத்துவது என்பவை குற்றங்களாகக் கருதப்பட்டன. இது தவிர்ந்த பிற குற்றங்களில், துப்பாக்கிகள், தாக்குதலுக்குப் பயன்படும் ஆயுதங்கள், சொற்கள், சைகைகள் போன்றவற்றால் நல்லிணக்கமின்மையை ஏற்படுத்துதல் என்பவற்றுடன், பொது இடத்தில் உள்ள சொற்கள், கல்வெட்டுகள் போன்றவற்றைச் சிதைத்தல் என்பவற்றுக்காகத் தேடப்படுபவர்களாக அறிவிக்கப்பட்டுள்ள நபர்களுக்கு அடைக்கலம் கொடுத்தல் போன்றவையும் கூட அடங்குகின்றன.

அதாவது, பிரதானமாக மேலே சொல்லப்பட்ட 'குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு' எதிரான செயல்கள் பயங்கரவாதச் செயல்களாகக் கருதப்பட வேண்டும். ஆனால், மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் தம்மளவிலேயே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) அதிகார வரம்பிற்குள் அடங்குபவை அல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) பயன்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால், இச்செயல்கள் மேற்கூறப்பட்ட 'குறிப்பிடப்பட்ட நபர்களுக்கு' எதிராகச் செய்யப்பட்டவையாக இருக்க வேண்டும். இதன் காரணமாகவே, ஒரு குறிப்பிட்ட வகை நபர்களின் பாதுகாப்பையும் அரசாங்கச் சொத்துகளின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கும் ஏற்ற வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது. துப்பாக்கிகள் முதலியவை தொடர்பான பிற செயல்கள் பொதுச் சட்டத்தின் கீழும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் குற்றங்களாக இருந்தன. இந்தக் குற்றங்கள் தொடர்பாக பொதுச் சட்டத்தைப் பயன்படுத்துவதா அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதா என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் அரசாங்கத்திற்கு இருந்தது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர், குறிப்பாக இலங்கையின் வடக்கு, தெற்கு மாகாணங்களில், காவல்துறை அதிகாரிகள், ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் போன்றோரால் நிகழ்த்தப்பட்ட கொடூரமான செயல்கள், அப்பகுதி மக்களிடையே, குறிப்பாக இளைஞர்களிடையே, கடுமையான உணர்வுரீதியான எதிர்வினைகளை ஏற்படுத்தியிருந்தன. 1974இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட அப்பாவி மக்கள் மின்சாரம் பாய்ச்சிக் கொல்லப்பட்டதும், அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடந்த தொடர்ச்சியான ஜனநாயகப் போராட்டங்கள் செவிசாய்க்கப்படாமல் போனதும், வட மாகாணத்தில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த சில பொலிஸ் அதிகாரிகளால் இளைஞர்கள் மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டதும், வட மாகாண இளைஞர்களிடையே இவற்றுக்கெதிரான போர்க்குணத்தை ஏற்படுத்தியிருந்தன. குறிப்பாக தென் மாகாணத்தில், 1971இல் சிங்கள இளைஞர்கள் நடத்திய கிளர்ச்சியை ஆயுதப் படைகள் மிருகத்தனமாகக் கையாண்ட விதம், தெற்கில் அமைதியின்மையை ஏற்படுத்தியது. பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர், அரசால் நிகழ்த்தப்பட்ட மிருகத்தனமான செயல்களடங்கிய சம்பவங்களின் விளைவாகவே இந்தவகையான போர்க்குணமும் அமைதியின்மையும் இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தன. அப்போதைய ஜனாதிபதியின் உறவினரான இராணுவத் தளபதிக்கு வடக்கில் 'பயங்கரவாதத்தை ஒழிக்கும்' பணி ஒப்படைக்கப்பட்ட போது, இரண்டு தமிழ் இளைஞர்களின் தலைகள் சிதைக்கப்பட்டு, அவர்களின் உடல்கள் பண்ணைப் பாலத்தில் வீசப்பட்டன. ஆயுதப் படையினரால் கதிர்காம அழகி கொடூரமாகக் கொல்லப்பட்டது தெற்கில் நிலவிய சூழலைப் பிரதிபலித்தது. அன்றைய அரசாங்கங்களால் கண்டுகொள்ளப்படாத இத்தகைய செயல்கள் பெருகியபோது, இளைஞர்களின் பதிலடிச் செயல்கள் இயல்பாகவே தீவிரமடைந்தன. இதன் விளைவாக, தனது பாதுகாப்பிலும், தன்னைக் காப்பவர்களான ஆயுதப் படைகளுக்கான பாதுகாப்பிலும் மட்டுமே அக்கறை கொண்ட ஓர் அரசாங்கத்தால், இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) இயற்றப்பட்டது.

சமூகரீதியான பாகுபாட்டிற்கு உள்ளான பிரிவினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் சிரமங்களையும் புரிந்துகொள்ளவும், அனுதாபம் காட்டவும், அவற்றைச் சரி செய்யவும் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் தொடர்ச்சியாகத் தவறியதன் விளைவாக எழுந்துவந்த அரச எதிர்ப்பு நடவடிக்கைகளைக் காரணமாக முன்வைத்து, அரசு தனது தற்காப்பிற்காக அவற்றை எதிர்கொள்வதை நோக்கமாகக் குறிப்பிட்டே இறுதியில் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) அரசினால் இயற்றப்பட்டது.

ஒரு பசியுள்ள நாய்க்கு (உண்பதற்கு) எதையாவது கொடுப்பதற்குப் பதிலாக, நான் அதன் மீது கல்லை எறிகிறேன்; அது இன்னும் வன்மையாக எதிர்வினையாற்றுகிறது. பிறகு நான் ஒரு பெரிய தடியை எடுத்து அதைத் தாக்குகிறேன். அந்தப் பெரிய தடிதான் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA). அது வடக்கையும் தெற்கையும் சேர்ந்த இளைஞர்களுக்கு எதிராக, மிக இழிவான முறையில், கொடூரமாகப் பயன்படுத்தப்பட்டது. உண்மையில், அரசியல் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான

தீர்வுகளை வழங்கத் தவறியதும், அதற்குப் பதிலாக அடுத்தடுத்த அரசாங்கங்களின் பகுத்தறிவற்றதும் பாகுபாடு நிறைந்ததுமான கொள்கைகளைக் கொண்ட அரசியலுக்கு எதிராக எழுந்த இயல்பான எதிர்ப்பை ஒடுக்குவதற்காகத் தொடர்ச்சியாக வன்முறையைக் கையாண்டதும் தான், வேறு வழியின்றி, தமது கடைசிப் புகலிடமாக, கொடுங்கோன்மைத் தன்மை கொண்ட இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) இயற்றுவதற்கு அரசைத் தூண்டிய காரணங்களாகும்.

இலங்கை அரசு, அரசியல் பிரச்சினைகளை அடக்குவதற்காகப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டது. இத்தகைய பயங்கரவாதச் செயல்களுக்கு எதிராக இளைஞர்களிடமிருந்து எழுந்த இயல்பான அரசுக்கு எதிரான பதில் எதிர்வினைகளும், பதிலடிகளும் தீவிரமடைந்தன. அதன் போதெல்லாம், அவற்றுக்கெதிராக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட (அந்த இளைஞர்கள் மீதான) அடக்குமுறை, ஊழல், கண்டனத்துக்குரிய வேறுபல நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு எதிராக மக்கள் மத்தியிலிருந்து (பரவலான) எதிர்ப்புகள் எழுந்தபோது, அரசு தானே கட்டவிழ்த்துவிட்ட தனது அடக்குமுறைக்கும், தனது பயங்கரவாதத்திற்கும் ஒரு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற்காகவே ‘பயங்கரவாதத் தடைச்சட்டம்’ கொண்டுவரப்பட்டது.

வன்முறை நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக, அதற்குக் காரணமான தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் மக்கள் மத்தியில் இருந்தன. தலைமுறை தலைமுறையாக அடக்கமாகவும், படிப்பிலும், கடின உழைப்பிலும் கவனத்தைச் செலுத்துபவர்களாகவும் இருந்த வட மாகாணத்தைச் சேர்ந்த குழந்தைகள் ஏன் வன்முறைச் செயல்களில் ஈடுபட வேண்டும்? சுதந்திரத்திற்குப் பிறகு வந்த அடக்குமுறை அரசாங்கங்கள், வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அழிக்கத் தொடங்கியபோது, அடிப்படை மனித விழுமியங்களும் நேர்மைத்தன்மைகளும் முழுமையாக மீறப்பட்டன. பிரித்தானிய ஆக்கிரமிப்புக் காலத்தின் மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் புள்ளிவிவரங்களைச் சுதந்திரத்திற்குப் பிறகான புள்ளிவிவரங்களுடன் ஒப்பிடும்போது, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மக்கள்தொகை அளவில் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படுகிறது. கிழக்கு மாகாணத்தில் உள்ள நிலங்களில், அரசின் காலனித்துவம், உள்ளூர் மக்களுக்கு முதல் முன்னுரிமை அளிப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. வெளியிலிருந்து ஆட்கள் கொண்டுவரப்பட்டு வலுக்கட்டாயமாகக் குடியேற்றப்பட்டனர். முழுத் தீவுக்கும் ‘சிங்களம் மட்டும்’ என்ற கொள்கை கொண்டுவரப்படுகிறது. ஏழு மாகாணங்களில் சிங்களமும், இரண்டு மாகாணங்களில் தமிழும் என்று இருந்திருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. பல்கலைக்கழகங்களில் சேரும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகவே தரப்படுத்தல் என்ற ஒரு புதுமையான முறை கொண்டுவரப்பட்டது. 1956க்குப் பிறகு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் புதிய தொழில் நிறுவனங்கள் எதுவும் நிறுவப்படவில்லை. வடக்கு - கிழக்கின் பொருளாதார வளர்ச்சி தேக்கமடைந்தது. அப்பகுதிகளில் வேலையின்மை கடுமையாக உயர்ந்தது. பிரிவினைவாதக் கொள்கையைக் கையாண்ட அடுத்தடுத்த அரசாங்கங்களிடமிருந்து அந்த இரண்டு மாகாணங்களுக்கும் கிடைத்ததெல்லாம் மிகக் குறைந்த அளவிலான பலன்களே கிடைக்கும் நிலையோ அல்லது எந்தவகையான பலன்களும் கிடைக்காத நிலையோதான். இயல்பாகவே, இந்தக் காரணிகள் அனைத்தும் ஒன்றிணைந்து, வடக்குக் கிழக்கு இளைஞர்களிடம் பழிவாங்கும் மனப்பான்மை வளர்வதற்கு வழிவகுத்தன.

இலங்கையின் தென்பகுதியில் உள்ள கிராம சமூகத்தில் நிலவிய சாதிப் பாகுபாடுகள், ஏழைப் பிரிவினர் மீதான நிலப்பிரபுத்துவ அடக்குமுறை மனப்பான்மைகள், அதிகாரமும் செல்வாக்கும் உள்ளவர்களால் ஒடுக்கப்பட்ட மக்கள் அப்பட்டமாகச் சுரண்டப்படுதல் போன்ற அனைத்தும் இணைந்த நிலைமை, தென்பகுதி இளைஞர்களிடையே அவற்றுக்கெதிரான போர்க்குணம் கொழுந்துவிட்டு எரிவதற்குக் காரணமாக அமைந்திருந்தன.

இலங்கையின் சமூகப்பரப்பின் மத்தியில் இருந்த இந்தப் பாதிக்கப்பட்ட மக்கட் பிரிவினரின் இயல்பான எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒவ்வொன்றும், மேலும் மேலும் அதிகமான அரச அடக்குமுறைகளுக்கு வழிவகுத்தன. தமது சமூகத்தின் ஒரு பிரிவினருக்கு எதிரான பாகுபாட்டையும் ஆக்கிரமிப்பையும் கையாண்ட பிரிவைச் சேர்ந்தவர்களது நலன்களைப் பாதுகாப்பதற்காக, பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) இயற்றப்பட்டது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தப் பாகுபாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஜனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆயுதப் படைகள் போன்றோரைப் பாதுகாப்பதற்காகவே இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டது. இருந்தபோதும், அந்த உண்மையை மறைக்கும் நோக்குடன், நீதிபதிகளும் பிறரும் குறிப்பிடத்தக்க நபர்களாக அந்த அணிக்குள் சேர்க்கப்பட்டிருந்தனர்.

இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது, இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் உணர்திறனற்றதும், ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்டதுமான போக்குகளுக்கான பொருத்தமான ஓர் அடையாளமாகவே இருந்தது. ஒரு கண்ணியமான, நியாயமுள்ள அரசாங்கம் தனது மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இலங்கையில், சுதந்திரத்திற்குப் பிறகு, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக, புதியதும் மேலும் சிக்கலானதுமான பிரச்சினைகளை மக்கள் மீது திணிப்பதையே செய்தன. சுதந்திரத்தின் போது செழிப்பாகவும் வளமாகவும் இருந்த ஒரு நாடு, அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் சிந்தனையற்ற செயல்களால் மோசமான வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் முன்னுரையில், அதன் "குறைகள், அரசியலமைப்பு முறைகளால் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்" என்றும் கூறப்பட்டிருந்தது. உண்மையில் இது ஓர் உன்னதமான எண்ணம்தான்! ஆனால், அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் உணர்வின்மை, இரக்கமின்மை, அலட்சியம், அப்பட்டமான (இனரீதியான) பாகுபாடு என்பவை காரணமாக, எண்ணற்ற இன்னல்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாக்கப்பட்ட ஒரு சமூகப் பிரிவினரின் உண்மையான அரசியல் ரீதியான, சமூக ரீதியான குறைகளை நிவர்த்தி செய்வதற்கு என்று உள்ள அனைத்து அரசியலமைப்பு முறைகளும் தோல்வியுற்றால், அரசியலமைப்பு முறைகள் மூலம் தங்கள் குறைகளை அவர்களால் எவ்வாறுதான் நிவர்த்தி செய்ய முடியும் என்று எதிர்பார்க்க முடியும்?

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இலங்கையில் ஓர் இனப் பெரும்பான்மையினர் பாராளுமன்றத்தைத் தொடர்ந்து கட்டுப்படுத்தியபோது, பிராந்தியப் பெரும்பான்மையினராக இருந்த தேசிய இனச் சிறுபான்மையினருக்கு அரசியலமைப்பு முறைகள் மூலம் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய என்ன வாய்ப்பு இருந்தது? பெரும்பான்மையினரின் தட்டுகளிலிருந்து மூச்சுத்திணறி எலும்புகள் விழும் வரை அடிபணிந்து காத்திருப்பது ஒரு முறையாக இருந்தது. ஆனால், அத்தகைய எலும்புகளும் கூட மிக அரிதான இடைவெளிகளில் சொட்டுச் சொட்டாக விழுந்தபோது, ஆளும் சக்திகளின் ஆணவத்திற்கும் ஆக்கிரமிப்பு மனப்பான்மைக்கும் எதிராக வடக்கு மற்றும் கிழக்கின் சிறுபான்மையினருக்கு செய்வதற்கென என்னதான் வாய்ப்பு இருந்தது?

இதே போன்ற அலட்சியமே, முன்னர் ஒருங்கிணைந்த பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் உருவாவதற்குக் காரணமாக அமைந்தது.

ஆகவே, இலங்கை சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மற்றும் பாகுபாட்டிற்கு உள்ளான பிரிவினரின் நிலைமைகளை மேம்படுத்துவதில் ஏற்பட்ட தோல்வியே, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து எதிர்வினையையும் பழிவாங்கும் நடவடிக்கைகளையும் தூண்டியது என்பதே எனது வாதம். பின்னர் அரசு, தனது சட்ட அமுலாக்க நடவடிக்கைகள் மூலம் வன்முறையைப் பயன்படுத்தி, கடுமையாக அவர்களது அரசியல், சமூக, மனிதாபிமானப் பிரச்சினைகளை அமுக்கிவிட்டது. பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து, தவிர்க்க முடியாத வகையில், பழிவாங்கும் நடவடிக்கைகளும் எதிர்வினைகளும் ஏற்பட்டபோது, அதன் விளைவாக இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப்பட்டது.

அத்தகைய சட்டத்தை இயற்றுவதை நியாயப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட நடைமுறைகள் பின்வரும் மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

அ. பயங்கரவாதச் செயல்களால் பொது ஒழுங்குக்கு ஆபத்தை விளைவிப்பதை, தேசிய பாதுகாப்புக்கு எதிரான ஓர் அச்சுறுத்தலாகச் சித்தரிப்பது.

ஆ. பயங்கரவாதச் செயல்களைக் கையாள்வதற்காக மற்ற ஜனநாயக நாடுகளும் சிறப்புச் சட்டங்களை இயற்றியிருப்பது.

இ. சட்டம் தற்காலிகமானதுதான் என்ற தோற்றத்தை ஏற்படுத்துவது.

இந்தத் தற்காலிகச் சட்டம் இப்போது 25 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் உள்ளது!

பெரும்பாலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) ஒரு தேசிய பாதுகாப்புச் சட்டமாகச் சித்தரிக்கப்படுகிறது. நமது பொதுப் பாதுகாப்புச் சட்டங்கள், நாம் 1948 பிப்ரவரி 4 அன்று சுதந்திரம் பெறுவதற்கு முன்பு, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட 1947 ஆம் ஆண்டின் பொதுப் பாதுகாப்பு அவசரச் சட்டம் எண் 25இலிருந்து உருவானவை என்பது குறிப்பிடத்தக்கது. இருப்பினும், அந்த அவசரச் சட்டம் காலனித்துவ ஆக்கிரமிப்பின் போது, தேசிய பாதுகாப்பிற்காக அல்லாமல், பொதுப் பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பேணுதல், சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களையும் சேவைகளையும் பராமரித்தல் ஆகியவற்றுக்காக இயற்றப்பட்டது. வேறுவிதமாகக் கூறுவதென்றால்,

பொது ஒழுங்கைப் பேணுதல், பொதுப் பாதுகாப்பை உறுதி செய்தல் என்பவற்றுக்காக இந்த நாட்டின் குடிமக்களின் உரிமைகள் தற்காலிகமாகக் குறைக்கப்பட வேண்டும் எனக் கருதுவது.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இந்தச் சட்டங்களை வெற்றிகரமாக தேசிய பாதுகாப்புச் சட்டங்களாக மாற்றியுள்ளன. பொதுப் பாதுகாப்புக்கும் தேசிய பாதுகாப்புக்கும் இடையே பெரும் வேறுபாடு உள்ளது. தேசிய பாதுகாப்பு என்பது, ஒருவேளை அதன் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியால் (அல்லது நாட்டால்), ஒட்டுமொத்த தேசத்திற்கும் நிலவக்கூடிய பாதுகாப்பின்மையை அடிப்படையாகக் கொண்டது. 1979ஆம் ஆண்டில் நமது அரசாங்கங்கள், இந்த நாட்டின் ஏழு மாகாணங்களுக்கு மட்டுமே தங்கள் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தி, மற்ற இரண்டு மாகாணங்களை அந்நிய மண்ணாகக் கருதியிருந்தாலன்றி, (அப்படியானால் அந்த இரண்டு மாகாணங்களிலும் அரசாங்கப் படைகளே ஆக்கிரமிப்பாளர்களாகக் கருதப்பட்டிருக்க வேண்டும்!), இதில் தேசிய பாதுகாப்பு சம்பந்தப்படவில்லை; மாறாக, பொது ஒழுங்குமுறை மட்டுமே சம்பந்தப்பட்டிருந்தது. ஆயினும், 1982ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்தால் கொண்டுவரப்பட்ட பிரிவு 15A, இதை "தேசிய பாதுகாப்பு அல்லது பொது ஒழுங்கின் நலன்களை நோக்கமாகக் கொண்டு" என்று குறிப்பிடுகிறது.

தற்போதைய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, கையாளப்பட வேண்டியதெல்லாம் உள்நாட்டுப் பொதுப் பாதுகாப்புக்கான ஒரு விடயம் மட்டும்தான் என்றபோதும், ஆரம்ப நாட்களில் இதை ஒரு தேசிய பாதுகாப்புப் பிரச்சினையாகச் சித்தரிக்க மேற்கொள்ளப்பட்ட பல தொடர்ச்சியான பிரசாரங்கள், அரசியலமைப்பின் 13(5), 13(6) ஆகிய பிரிவுகளின்படி குடிமக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு அரசாங்கங்கள் கொண்டிருந்த வெளிப்படையான ஆர்வத்தை வைத்தே கண்டறியப்படலாம். இது தொடர்பாக, அரசியலமைப்பின் 15(1) பிரிவின் விதிகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். அது பின்வருமாறு கூறுகிறது:

"15(1): சரத்துகள் 13(5), 13(6) என்பவற்றால் அறிவிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்துவதும் செயற்படுத்துவதும், தேசிய பாதுகாப்பின் நலன்களுக்காகவென, சட்டத்தால் பரிந்துரைக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகளுக்கு மட்டுமே உட்பட்டதாக இருக்கும்." இந்தப் பத்தியின் நோக்கங்களுக்காக, 'சட்டம்' என்பது பொதுப் பாதுகாப்பு தொடர்பான, அவ்வப்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் உருவாக்கப்படுகின்ற ஒழுங்குமுறைகளையும் உள்ளடக்கியது.

மேற்கூறப்பட்ட அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சரத்தால் முன்வைக்கப்பட்ட ஒரே ஒரு காரணம் 'தேசியப் பாதுகாப்பின்' நலன் மட்டுமே; பொதுப் பாதுகாப்பு அல்ல.

இந்தத் 'தேசிய பாதுகாப்பு' என்ற சொல், மனித உரிமைகளின் மீதான வன்முறை அடக்குமுறையைத் தக்கவைப்பதற்காகவும், பாதுகாப்பு வரி போன்ற பல்வேறு கட்டணங்களை விதிப்பதற்காகவும் என்றே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

பிரிட்டன் போன்ற பிற ஜனநாயக நாடுகள் சிறப்புச் சட்டங்களை இயற்றுவதைப் பொறுத்தவரை, போல் சீகார்ட் (Paul Sieghart) தனது "இலங்கை - தவறுகளால் பெருகிவரும் சோகம்" (Sri Lanka - Mounting Tragedy of Errors) என்ற புத்தகத்தில், பிரித்தானிய பயங்கரவாதம் தொடர்பான சட்டத்திற்கும் நமது பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கும் இடையே உள்ள பல வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். நமது பயங்கரவாதத் தடைச் சட்டம், அவர்களது பிரித்தானியச் சட்டத்தை விட மிகவும் கடுமையானதாக அமைந்துள்ளது. உதாரணமாக, பிரிட்டனில் குற்றச்சாட்டு இல்லாமல் ஒரு கைதியைத் தடுத்து வைத்திருப்பதற்கு 7 நாட்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் நமது சட்டத்திலோ அது 18 மாதங்கள்! பிரித்தானியச் சட்டத்தில் இல்லாத பல சட்டங்கள் இதில் உள்ளன. உதாரணமாக, அங்கு இல்லாத 'கட்டுப்பாட்டு உத்தரவுகள்' (Restriction Orders) இங்கே இருக்கின்றன; அரசுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டுக்காக ஒருவருக்கு 5 ஆண்டுகளில் இருந்து 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்குதல், இவற்றைச் செய்தித்தாள்களில் வெளியிடுவதற்கான தடைகள் போன்றவை எதுவும் அங்கு இல்லாதவை.

நமது தேசிய எல்லைகளுக்கு அப்பால் உள்ள எந்தவொரு அமைப்பாலும் எத்தகைய ஆபத்தும் இல்லாத நிலையில், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் அவசரக் கவனக் குவிப்புக்கும் அவசியமாக இருந்த விடயங்கள், வறுமைக்கும் பாகுபாட்டிற்கும் எதிரான நடவடிக்கைகள் மட்டுமே. அப்படி இருந்த ஒரு சூழலில்தான், தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்ற போர்வையில், பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) இயற்றப்பட்டது.

அடுத்து, சில குறிப்பான அடிப்படை உரிமைகளைக் கடுமையாகக் கட்டுப்படுத்திய இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள சில பிரிவுகளைப் பற்றிப் பார்ப்போம்:

அத்தகைய விதிகளில் முதலாவது, சட்டப் பிரிவு 5 ஆகும். அது பின்வருமாறு கூறுகிறது:

"A. எந்தவொரு நபராவது,

1. இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்துள்ளார் அல்லது செய்துகொண்டிருக்கிறார் அல்லது,

2. இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்தும் அல்லது செய்கிறார் என நம்புவதற்கு நியாயமான காரணம் இருந்தும், அதை ஒரு காவல்துறை அதிகாரியிடம் தெரிவிக்கத் தவறினால் அல்லது,

B. இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்த, அல்லது செய்துகொண்டிருக்கின்ற, அல்லது செய்ய முயற்சிக்கின்ற எந்தவொரு நபரின் நடமாட்டம் அல்லது அவரது இருப்பிடம் தொடர்பான எந்தவொரு தகவலையும் தன்வசம் வைத்திருந்தும், அதை ஒரு காவல்துறை அதிகாரியிடம் தெரிவிக்கத் தவறினால்,

அவர் ஒரு குற்றத்தைச் செய்தவராகக் கருதப்படுவார், மேலும் இந்த இருவகைக் குற்றங்களில் ஏதாவதொன்றைச் செய்ததற்காக வழங்கப்படும் தீர்ப்பின் பேரில், அவர் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனைகளில் ஒன்றிற்கு உள்ளாவார்."

பொதுவாக, சமூகத்தின் மற்ற உறுப்பினர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய, வேண்டுமென்றே செய்யப்படும் செயல்களுக்கு எதிராகவே சட்டங்கள் இயற்றப்படுகின்றன. மேலே கூறப்பட்ட பிரிவு 5, ஒரு செயலைச் செய்ததற்காக அல்ல; மாறாக, ஒரு செயலைச் செய்யத் தவறியதற்காக நபர்களைத் தண்டிப்பதற்காக இயற்றப்பட்டுள்ளது. இது செய்யத் தவறியதைக் கையாளும் ஒரு சட்டப்பிரிவு. செய்ததைக் கையாளும் பிரிவு அல்ல.

இங்கே நான் சாலையில் நடந்து கொண்டிருக்கிறேன்; என் உடல்நிலை சரியில்லாத அம்மா, மனைவி அல்லது குழந்தையைப் பற்றியோ, அல்லது அடுத்த சம்பளம் வரும் வரை வரும் மாதத்திற்கான செலவுகளை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியோ கவலைப்பட்டபடி நடந்து கொண்டிருக்கிறேன். ஒருவர் என்னைக் கடந்து செல்கிறார். நான் அவரைக் காண்கிறேன். ஆயினும், நான் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறேன். சிறிது நேரம் கழித்து ஒரு பொலிஸ் அதிகாரியோ அல்லது ராணுவ வீரரோ என்னை நிறுத்தி, "இப்படி ஒருவர் உங்களைக் கடந்து சென்றதை நீங்கள் பார்க்கவில்லையா?" என்று கேட்கிறார்.

அவரைப் பார்த்தது எனக்கு மங்கலாக நினைவுக்கு வருகிறது. நான் சொல்கிறேன்:

"ஆம், ஒருவர் என்னைக் கடந்து சென்றார்."

சரி. அவ்வளவுதான், அதுவே அவர்களுக்குப் போதும்.

சட்டத்தின் கீழ் அந்த நபர் ஒரு குற்றத்தைச் செய்துள்ளார் என்றோ, அல்லது அந்த நபர் ஒரு குற்றத்தைச் செய்யத் தயாராகிக் கொண்டிருந்தார் என்றோ, அல்லது ஒரு குற்றத்தைச் செய்வதற்கு முயன்று கொண்டிருந்தார் என்றோ நம்புவதற்கு எனக்கு ஏதாவது நியாயமான காரணம் இருந்தால், "என்னைக் கடந்து சென்ற அவரைப் பற்றி நான் காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டுமே" என்று நினைத்து, ஆனால் அதைக் காவல்துறையிடம் தெரிவிக்கத் தவறியதற்காக நான் காவல்துறையினரால் கைது செய்யப்படலாம். பெரும்பாலும், யாருக்கு எதிராகப் புகார் அளிக்கப்படவில்லையோ, அவர் செய்த ஒரு குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுபவராக இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால், குற்றம் செய்ததாக அவர்கள் யாரைக் குறிப்பிடுகிறார்களோ, அந்த நபர்தான் உண்மையில் அத்தகைய குற்றத்தைச் செய்திருப்பார் என்று காவல்துறை கருதுகிறது. முற்காலத்தில் இருந்தது போல, ஒரு கிராமத்தில் உள்ள மக்களுக்கு, 'இன்னார்' ஒரு தேடப்படும் குற்றவாளி என்றும் அவரைக் கைது செய்வது அவசியம் என்றும் பறைசாற்றப்பட்டால், 'இன்னார்' ஓர் அறிவிக்கப்பட்ட குற்றவாளி என்று தெரிந்திருந்தும், அந்த நபரின் இருப்பிடம் குறித்த தகவல்களைத் தெரிவிக்காததற்காகவாவது ஒரு கிராமவாசியை நாம் குறை கூற முடியும். ஆனால், கொழும்பு உயர்நீதிமன்றத்தில் என் முன் வந்த சில வழக்குகள் எனக்கு நினைவிலிருக்கின்றன. அவற்றில், சட்டத்தின் கீழ் குற்றங்களைச் செய்தவர்கள் என்று கூறும் ஒப்புதல் வாக்குமூலங்களில் குறிப்பிடப்பட்டிருந்தவர்கள், சட்டப் பிரிவு 5இன் கீழ் காவல்துறையிடம் இருப்பிடம் குறித்துப் புகார் அளிக்கப்படாத நபர்களாகவும், இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் ஒருபோதும் தண்டிக்கப்பட்டிராதவர்களாகவுமே இருந்தனர். சில சமயங்களில், அவர்கள் விசாரணைக்குப் பிறகு விடுவிக்கப்பட்ட நபர்களாகவும் இருந்தனர். எனவே, இது தொடர்பான ஒப்புதல் வாக்குமூலங்கள் என்று கூறப்படுபவை சந்தேகத்துடன் ஆராயப்பட்டன.

பெரும்பாலும் ஒரு கிராமத்து மக்களுக்கு ஒரு தீவிரவாதியைத் தெரிந்திருக்கலாம். அத்தகைய நபரின்

தீவிரவாதத்திற்கு வழிவகுத்த காரணங்களையும் அவர்கள் அறிந்திருப்பார்கள். பொறுப்புடனும் முதிர்ச்சியுடனும் இருக்க வேண்டியவர்கள் மத்தியில் அப்பட்டமான அலட்சியமும் உணர்வின்மையும் இருக்கின்ற போது, தீவிரவாதம் எதிர்பார்க்கப்படக்கூடிய ஒன்றுதான். உண்மையில், சூர சரடியல், வீர கெப்பெட்டிபொலா ஆகியோர் ஓர் ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகப் போராடிய நாயகர்களாகக் கருதப்பட்டதைப் போலவே, இத்தகைய தீவிரவாதியும் கிராம மக்களால் மிகுந்த பிரமிப்புடனும் உத்வேகத்துடனும் பார்க்கப்பட்டிருக்கலாம். ஆனால், பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், எதிரியை விட பெரும்பாலும் நண்பர்களாகவே இருக்கும் அத்தகைய நபர்களையே உண்மையில் சாதாரண குற்றவாளிகள் என்றும், அவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. இல்லையென்றால், நீங்களும் கைது செய்யப்படுவீர்கள்.

சாதாரண திருடனான பரபாஸையும், மனிதகுலத்தின் மீட்பரான ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையும் பிலாத்துவின் ஆட்கள் குற்றவாளிகளாகக் கருதிய நிகழ்வை நாம் நினைவுகூரத் தவற முடியாது. உண்மையில், புனித இயேசு கிறிஸ்து பரபாஸை விட ஒரு பெரிய அயோக்கியனாகவே கருதப்பட்டார். வீரபுரன் அப்பு, வீர கெப்பெட்டிபொல மற்றும் சூர சரடியல் ஆகியோர் ஆங்கிலேயர்களின் பார்வையில் குற்றவாளிகளாக இருந்தனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது; இருப்பினும், இப்போது அவர்களின் நினைவாக நாம் வீதிகளுக்கும் நிறுவனங்களுக்கும் பெயரிட்டுள்ளோம்.

சட்டப் பிரிவு 5, ஒரு கிராமத்தில் உள்ள அனைத்து அமைதியான மக்களையும், அவர்கள் தங்கள் சொந்த உறவினர்களுக்கு எதிரான காட்டிக்கொடுப்பவர்களாகவும், காவல்துறைக்குத் தகவல் கொடுப்பவர்களாகவும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டே இயற்றப்பட்டிருந்தது. அத்துடன், அவர்களது சொந்தங்களான உறவினர்கள் ஒவ்வொருவரும், தத்தமது எதிர்வினைகளுக்கு முன்பதாகவே, அதிகாரத்தில் இருந்த நபர்களால் தவறாகவோ, உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ செய்யப்படுகின்ற ஏதாவதொரு நடவடிக்கைக்கு எதிர்வினையாற்றிக் கொண்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ் குற்றம் செய்ததாகச் சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைது செய்ய, பொலிஸ் அத்தியட்சகர் (Police Superintendent) அல்லது எழுத்துபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட உதவிக் காவல்துறை அதிகாரிக்கு (Sub Inspector) மட்டுமே பிரிவு 6 அதிகாரம் அளித்திருந்த போதும், காக்கிச் சட்டை அணிந்த எந்தவொரு பொலிசாரும் கைது செய்யவும், வழக்குத் தாக்கல் செய்யப்படும்போது மட்டும் பதிவேட்டில் (கைது செய்தவர் பெயரைத்) திருத்தி அமைக்கவும் செய்கின்றனர். சட்டத்தில் ஒரு கைதை மேற்கொள்வதற்கு, ஒரு மூத்த அதிகாரி ஏன் குறிப்பிடப்பட்டிருக்கிறார் என்பதற்கான காரணம் யாராலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

முந்தைய நாட்களில், வடக்குக் கிழக்கு மாகாணங்களில், ஒருவர் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு ஒரு காவல் (பொலிஸ்) நிலையத்திற்குச் செல்வதென்றால், அதைச் செய்வது ஏறக்குறைய சாத்தியமற்றதாகவே இருந்தது. ஏராளமான பாதுகாப்புச் சோதனைகள் இருந்தன. மட்டக்களப்பில் வெகு காலத்திற்கு முன்பு, எங்கோ ஒரு காவல் நிலையப் பாதுகாப்புச் சோதனைச் சாவடிக்கு முன், தங்கள் வாகனத்திலிருந்து இறங்கியபோது, பல குழந்தைகள் கொல்லப்பட்டனர்; ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் படுகாயமடைந்தார். அந்த அநாதைக் குழந்தைகளை இந்தப் பாதிரியார்தான் சுற்றுலாவுக்கு அழைத்து வந்திருந்தார்.

இதுபோன்ற பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளைக் கடக்கும்போது, நீங்கள் உள்ளே சென்று, குற்றம் செய்த ஒருவரைப் பற்றிப் புகார் அளிக்க விரும்புவதாகக் கூறினால், காவல்துறை மிகவும் எச்சரிக்கையாகிவிடும். குற்றம் செய்ததாகக் கூறப்படும் நபர், தகவல் கொடுப்பவருடன் கைகோர்த்துச் செயல்படுவதாக அவர்கள் அஞ்சுவர். எனவே, அவர்கள் அத்தகைய தகவல் கொடுப்பவரை ஒரு சாதாரண குற்றவாளியைப் போல விசாரித்துச் சோதனையிடுவர்.

நீங்கள் காவல் நிலையத்திற்குள் நுழைந்தவுடன், பல மணிநேரம் கழித்து ஒரு காவல்துறை அதிகாரி வரும் வரை உங்கள் வாக்குமூலத்திற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கும். உங்களுக்கு வேறு சந்திப்புகள் இருப்பதாக அவர்களிடம் கூற உங்களுக்கு உரிமை இல்லை. இறுதியில், உங்களுக்குத் தெரியாத ஒரு மொழியில் அந்த வாக்குமூலம் பதிவு செய்யப்படும். உங்கள் வாக்குமூலத்தின் உண்மைத்தன்மையைச் சரிபார்க்க உங்களுக்கு எந்த வழியும் இருக்கப் போவதில்லை. ஆனால், பெரும்பாலும் ஒரு மூத்த அதிகாரி உங்களைக் கேள்வி கேட்க அழைத்துவரப்படும் வரை, நீங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பீர்கள்.

இதை இன்னொரு வகையில் கூறுவதென்றால், நீங்கள் ஒரு குற்றவாளியாகவே நடத்தப்படுவீர்கள். ஆனால், உங்கள் மீதான 'பிரிவு 5இன் அடிப்படையிலான குற்றச்சாட்டைத்' தவிர்க்க விரும்பினால், அதற்கான முழுச் சுமையையும் நீங்கள்தான் சுமந்து அனுபவிக்க வேண்டும் என்று சட்டம் எதிர்பார்க்கிறது. இந்தச் 'சட்டப் பிரிவு 5' இன் குற்றச்சாட்டு என்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டாகும். அரசு வழக்கறிஞர் உங்கள் மீது குற்றம் சாட்டுவதற்கு ஆதாரம் எதுவும் இல்லை என்று கண்டறிந்தால், உங்கள் வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுவதற்கு முன்பு, நீங்கள் குறைந்தது 2 ஆண்டுகளுக்கு காவலில் வைக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில், உங்களை இந்தச் சட்டப்பிரிவின் அடிப்படையிலான குற்றச்சாட்டின் கீழ் கொண்டு வருவார். 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 10 இன் படி திருத்தப்பட்ட பிரிவு 15(2) பின்வருமாறு கூறுகிறது:

"15 (2). இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள ஏதேனும் ஒரு குற்றம் தொடர்பாகவோ அல்லது பிரிவு 23 இன் விதிகள் பொருந்தக்கூடிய ஏதேனும் ஒரு குற்றம் தொடர்பாகவோ எந்தவொரு நபருக்கும் எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை பெறப்பட்டவுடன், நீதிமன்றம், ஒவ்வொரு வழக்கிலும், விசாரணை முடியும் வரை அத்தகைய நபரை காவலில் வைக்க உத்தரவிட வேண்டும்."

அடுத்து, குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) மற்றும் அவசரகால ஒழுங்குமுறைகளின் கீழ் தாக்கல் செய்யப்படும் குற்றச்சாட்டுகளின் ஏற்புத்தன்மை குறித்துப் பார்ப்போம். ஒரு குடிமகன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படும்போது, அவர் எதிர்கொள்ளும் மிகப்பெரிய குறைபாடுகளில் ஒன்று, அவர் செய்த குற்றங்களை அரசு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் எடுத்துரைக்க முடியாமலிருக்கும் நிலையாகும். பெரும்பாலும், குற்றச்சாட்டுகள் தெளிவற்றனவாகவே இருக்கின்றன.

ஒரு குற்றச்சாட்டைத் தாக்கல் செய்யும்போது, குற்றம் சாட்டப்பட்டவர் சட்டத்தின் ஒரு பிரிவை அல்லது ஒழுங்குமுறையின் எந்தப் பகுதியை மீறியுள்ளார் என்பது குறித்து (குற்றம் சாட்டும்) அரசு தரப்பு தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன், அதையே குறிப்பிடவும் வேண்டும். ஒரு பிரிவில் உள்ள மாற்று வழிகளைக் குறிப்பிட்டு, குற்றம் சாட்டப்பட்டவர் அவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்துள்ளார் என்று அரசு தரப்புக் கூறுவது ஏற்கப்படுவதில்லை. இந்த விடயத்தில் அரசு தரப்பு ஒரு முடிவுக்கு வர இயலாவிட்டால், அரசு தரப்பு மாற்றுக் குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்ய வேண்டும். அதன் மூலம், நீதிமன்றம் நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவரை இறுதியில் விடுவிக்கவும், அரசு தரப்பால் தேவையான ஆதாரங்களை நிரூபிக்க முடிந்த குற்றச்சாட்டுகளில் குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி எனக் கண்டறியவும் ஏதுவாக, மாற்றுக் குற்றச்சாட்டுகளைத் தாக்கல் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு குற்றச்சாட்டும், குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட குற்றத்தைக் குறிப்பிட வேண்டும் (குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 164(1)ஐப் பார்க்க). குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட விஷயம் குறித்து அவருக்குத் தெரியப்படுத்தும் வகையில், குற்றத்தின் வரையறையின் ஒரு பகுதியை அது குறிப்பிட வேண்டும் (பிரிவு 164(3)ஐப் பார்க்க). குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பது என்பது, குற்றம் சாட்டப்பட்ட குற்றத்தை உருவாக்க, சட்டத்திற்கு அவசியமான ஒவ்வொரு சட்டபூர்வ நிபந்தனைகளும் ஒரு குறிப்பிட்ட வழக்கில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்ற கூற்றுக்குச் சமமாகும் (பிரிவு 164(5)ஐக் காண்க). குற்றச்சாட்டு, குற்றம் நடந்ததாகக் கூறப்படும் நேரம் மற்றும் இடம் குறித்த விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும் (பிரிவு 165(1) ).

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 165(2)இல், குற்றவியல் நம்பிக்கை மீறல் மற்றும் குற்றவியல் முறைகேடு தொடர்பாக ஒரு வருட காலம் குறிப்பிடப்பட்டுள்ளது. முறைகேடாகப் பயன்படுத்துதல் தொடர்பான குற்றம் பொதுவாக நீண்ட காலத்திற்கு நீடிக்கும் என்பதே இதற்குக் காரணம். இருப்பினும், அத்தகைய வழக்குகளுக்கும் கூட, பிரிவு 165(2)இல் ஓராண்டு கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், குறிப்பிட்ட சில குற்றச் செயல்களைப் பொறுத்தவரை, ஓராண்டு கால வரம்பு பொருந்தாது. நேரம் மற்றும் இடம் குறித்த விவரங்கள், ஓராண்டுக் காலத்திற்குத் தெளிவற்ற முறையில் நீட்டிக்கப்படாமல், மிகவும் திட்டவட்டமாக இருக்க வேண்டும். சட்டத்தின் பிரிவு 164இன் படி கொடுக்கப்பட்ட விவரங்கள், குற்றம் சாட்டப்பட்டவருக்கு அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்துப் போதுமான முன்னறிவிப்பை அளிக்கவில்லை என்றால், குற்றச்சாட்டில், குற்றம் சாட்டப்பட்ட செயல் எவ்வாறு செய்யப்பட்டது என்பது குறித்த விவரங்கள் இடம்பெற வேண்டும் (பிரிவு 165(3) ).

இந்த விதிகள் அனைத்தும், செய்யப்பட்ட குற்றத்தின் தன்மை குறித்து அரசுத் தரப்பு தனது பக்கத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்ற உண்மையை வெளிப்படுத்துகின்றன.

இது தவிர, அரசு தரப்பு தான் தனது வழக்கை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டும். சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு குற்றத்தின் பல கூறுகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவற்றையோ குற்றம் சாட்டப்பட்டவர் செய்துள்ளார் என்று கூறி, அத்தகைய கூறுகளில் ஒன்றிலிருந்து அல்லது அதற்கு மேற்பட்டவற்றிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர் தன்னை விடுவித்துக் கொள்வார் என அரசு தரப்பு எதிர்பார்ப்பது ஏற்புடையதல்ல. குறிப்பிட்ட சில செயல்கள் எந்தக் கூறின் கீழ் வருகின்றன என்பதை அரசு தரப்பினரால் உறுதியாக நிர்ணயிக்க முடியாத பட்சத்தில், அவை மாற்றுக் குற்றச்சாட்டுகளுடன் கூடிய ஒரு குற்றப்பத்திரிகையாக அவர்களால் தயாரிக்கப்பட வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவர் 2 அல்லது 3 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் வைக்கப்பட்டிருந்த பல வழக்குகளில், அரசு தரப்பு தனது வழக்குகளை நிரூபிக்க முழுமையாக ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டுமே சார்ந்திருந்த காரணத்தால், குற்றம் சாட்டப்பட்டவரது என்று குறிப்பிடப்படும் செயல்கள் எந்தக் (குற்றச் செயல்களின்) கூறின் கீழ் வருகின்றன என்பதைக் குறிப்பிடாமலேயே குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்திருந்தது. மேற்குறிப்பிட்ட அத்தகைய ஒப்புதல் வாக்குமூலங்கள் மூலமாகத் தெரிய வந்ததைத் தவிர, அதில் கூறப்படும் செயல்கள் நடந்ததற்கான (சுயாதீனமாகக் கண்டடையப்பட்ட ஆதாரமான) சான்றுகள் எதுவும் அரசிடம் இல்லை.

ஆனால், 1979ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் இலக்கம் 48 அல்லது அவசரகால ஒழுங்குமுறைகள் போன்ற சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தன என்பதன் மூலம், இந்த நாட்டின் நடைமுறைச் சட்டம் மாற்றப்பட்டுவிடவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 25, அத்தகைய ஒப்புதல்களைத் தடை செய்தபோதிலும், இந்தச் சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட பதவிக்கு மேற்பட்ட காவல்துறை அதிகாரிகளிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களை வழக்குகளுக்கான சாட்சியங்களாக ஏற்றுக்கொண்டன.

வழக்குத் தொடுக்கும் தரப்பு தனது வழக்கை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டும் என்ற நடைமுறை விதி இன்னமும் செல்லுபடியாகும் ஒரு விதியாகும். வழக்குத் தரப்பின் வழக்கை நிரூபிக்க ஒரு தன்னார்வ சாட்சியின் வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆனால், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட செயல்கள் உண்மையில் செய்யப்பட்டன என்ற முடிவுக்கு வர, போதுமான சுயாதீனமான ஆதாரங்கள் இல்லாமல், வழக்குத் தரப்பு தனது வழக்கை நிரூபிப்பதற்கு ஒரு வாக்குமூலத்தை மட்டுமே முழுமையாக நம்பியிருக்க முடியாது. கொலை வழக்குகளில், மரண தண்டனை விதிக்கப்படும்போது, சட்டம் ஒரு 'தானாகவே முன்வந்து' வழங்கப்படுகின்ற குற்ற ஒப்புதலைக் கூட ஏற்றுக்கொள்வதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்பது போலவே அது விசாரணையைத் தொடர்கிறது (குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 205இன் நிபந்தனையைப் பார்க்கவும்).

எனவே, ஒரு தண்டனை மரணதண்டனையாக இருக்கும் என்ற முடிவுக்கு வருவதில் சட்டம் மிகவும் கவனமாக இருக்கிறது. உதாரணமாக, அவசரகால சட்ட விதிமுறைகள் 23, மரணதண்டனையைத் தண்டனையாக விதிக்கிறது. இருப்பினும், குற்றம் சாட்டப்பட்டவர் தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் ஒரு வழக்கிற்கும், ஒரு வாக்குமூலமே வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஒரே அடிப்படையாக இருக்கும் வழக்கிற்கும் இடையே வேறுபாடு உள்ளது. முதலாவது வகை வழக்கில், அரசு தரப்பு, விசாரணைக்குப் பிறகு போதுமான ஆதாரங்களைப் பெற்ற பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை மறுக்கக் கூடும் என்ற அனுமானத்தின் அடிப்படையில் வழக்கை நிரூபிக்க ஒரு குற்றப்பத்திரிகையைத் தயாரிக்கிறது. மற்ற வழக்கில், அரசு தரப்பு எந்த விசாரணையும் செய்வதில்லை. மேலும், குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் என்று சொல்லப்படுவதைத் தவிர, குற்றத்தை உருவாக்கும் செயல்கள் குறித்து அதற்கு சுயாதீனமான அறிவு எதுவும் இருப்பதில்லை. ஒரு நபர் தன்னலமற்ற காரணங்களுக்காகவோ, பயம் அல்லது எரிச்சலின் காரணமாகவோ, அல்லது சூழ்நிலைகள் குறித்த தவறான புரிதலின் காரணமாகவோ, தன்னைத்தானே குற்றவாளியாக்கும் ஒரு தன்னார்வ வாக்குமூலத்தைக் கூட அளிக்கலாம் (நாகமணி ரவேந்திரன் வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைக் காண்க). எனவே, அரசு தரப்பு, ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, வாக்குமூலத்தை மட்டும் சார்ந்திராமல், குற்றப்பத்திரிகைக்கு அடிப்படையாக அமைந்த சம்பவம் அல்லது நிகழ்வின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும்.

ஒரு வாக்குமூலம், அது தானாக முன்வந்து அளிக்கப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டாலும் கூட, அது உண்மையானதுதான் என்று அனுமானிக்க முடியாது. அந்த வாக்குமூலத்தைச் சார்ந்திராமல்

உண்மை கண்டறியப்பட வேண்டும். எனவே, ஒரு வழக்கில் அரசு தரப்பு தனது வழக்கை நிரூபிக்க ஒரு வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டால், அரசு தரப்பால் தனது வழக்கை நிலைநிறுத்த முடியாது என்பதே அதன் தவிர்க்க முடியாத பொருளாகும். அரசு தரப்பு வாக்குமூலங்களை மட்டுமே சார்ந்திருக்கும்போது, அரசின் மீதான சுமை அதிகமாகிறது. உதாரணமாக, ஒரு நபர் தனது வாக்குமூலத்தில், ஒரு குறிப்பிட்ட தேதியில், X அல்லது Y என்பவரால் ஓர் இராணுவ வாகனம் சுடப்பட்டதையும், அதன் விளைவாக X அல்லது Y ஆல் பல வீரர்கள் கொல்லப்பட்டதையும் கண்டதாகக் கூறினால், குறிப்பிடப்பட்ட இடத்திலும் நேரத்திலும் உண்மையில் ஓர் இராணுவ வாகனம் தொடர்பான அத்தகைய சம்பவம் நடந்ததா என்பதை இராணுவத் தளபதியிடம் சரிபார்ப்பது அரசின் கடமையாகும். ஒருவேளை, அந்தக் குறிப்பிட்ட நாளில், சம்பந்தப்பட்ட நேரத்தில், கொடுக்கப்பட்ட இடத்தில் ஓர் இராணுவ வாகனம் தொடர்பான அத்தகைய சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று இராணுவத் தளபதி கூறினால், அந்த வாக்குமூலம் எப்படி ஒரு கற்பனையான இராணுவ வாகனத்தையும் வீரர்களையும் உருவாக்கி, அந்த நேரத்தில் அவர்களையும் கொல்ல முடியும்?

பெரும்பாலும் இந்தக் குற்றம் ஒரு 'குறிப்பிட்ட நபரின்' மரணம் தொடர்பானது என்பதை மறந்துவிடக் கூடாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) பிரிவு 31இன் படி 'குறிப்பிட்ட நபர்' என்பது, மற்றவற்றுடன், "ஆயுதப் படைகள், காவல் படை மற்றும் பொது ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்புள்ள பிற படைகளின் எந்தவொரு உறுப்பினரையும்" குறிக்கும். எனவே, இந்தக் குற்றம் ஒரு 'குறிப்பிட்ட நபருடன்' தொடர்புடையது என்று நிரூபிக்கப்படாவிட்டால், அந்தக் குற்றச்சாட்டு செல்லுபடியாகாது. ஒருவேளை, வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம், தேதி மற்றும் இடத்தில் உண்மையில் ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்திருந்தும், அதன் விளைவாக 'குறிப்பிட்ட நபர்கள்' யாரும் உயிரிழக்கவில்லை என்றாலும், குற்றச்சாட்டுப் பத்திரம் தோல்வியடையும். ஏனெனில், அந்தக் குற்றம் குறிப்பிட்ட நபர்களுக்கு ஏற்பட்ட மரணம் தொடர்பானது மட்டுமே.

சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதித்திட்டம் என்ற அடிப்படையில் அடிக்கடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு சதிகாரர்களதும் பொதுவான நோக்கம் அல்லது பொதுவான எண்ணம் என்ன என்பது பற்றித் தெரிந்திருந்தது என்பதற்கு ஆதாரம் இருக்க வேண்டும் (பார்க்க: 67 NLR, பக். 193). ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் அளித்த வாக்குமூலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான பொதுவான நோக்கம் அல்லது பொதுவான எண்ணம் பற்றி குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 'மற்றவர்களுக்குத் தெரிந்திருந்தது' என்பதை அரசு தரப்பால் நிரூபிக்க முடியாது. குற்றப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் அடையாளம் குறித்து மிகக் குறைவான ஆதாரங்களே இருக்கும்; மேலும், அவர்களின் நோக்கம் குறித்து எந்த ஆதாரமும் இருக்காது.

குற்றம் சாட்டப்பட்ட பங்கேற்பாளர்களின் ஒருங்கிணைந்த முயற்சிக்கு ஆதாரம் கிடைக்காத வரையில், ஒரு வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தச் செயலும் இலங்கையின் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கான சதித்திட்டமாக அமையாது. பங்கேற்றதாகக் கூறப்படும் ஒரு தனி நபரின் வாக்குமூலத்தால் இதை நிரூபிக்க முடியாது. ஒருவேளை, ஓர் ஒட்டுமொத்தத் தலைவரின் வாக்குமூலம் சற்றே சிறந்ததாக இருக்கலாம். ஆயினும்கூட, பங்கேற்ற அனைவரின் பொதுவான நோக்கம் மற்றும் ஒருங்கிணைந்த முயற்சி குறித்து அவரால்கூடப் பேச முடியாமல் போகலாம்.

சட்டப்படி அமைக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது குறித்து எந்தவிதமான அனுமானங்களோ அல்லது முன்முடிவுகளோ இருக்க முடியாது. கவிழ்ப்பதற்கான சதித்திட்டமோ அல்லது கவிழ்ப்பதற்கான முயற்சியோ அல்லது தயாரிப்போ கற்பனையானதாக இல்லாமல் உண்மையானதாக இருக்க வேண்டும். இலங்கை அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது, கொழும்பில் தற்போதுள்ள சட்டப்படி அமைக்கப்பட்ட அரசாங்க நிறுவனத்தை இடம்பெயரச் செய்வதாகும். துப்பாக்கிப் பயிற்சி பெறுவது அல்லது ஆயுதமேந்திய போராளிகளுக்கு உணவு அல்லது எரிபொருள் வழங்குவது போன்றவை வேறு சில சட்டங்களின் கீழ் குற்றங்களாக இருக்கலாம். ஆனால், மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தையோ அல்லது இயந்திரத்தையோ கைப்பற்றி, அதற்குப் பதிலாக ஒத்துழைப்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்களைக் கொண்ட ஒரு புதிய இயந்திரத்தை நிறுவுவதற்கான ஓர் ஒருங்கிணைந்த திட்டம் இல்லாத நிலையில், அச்செயல்கள் மட்டுமே ஓர் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் குற்றமாக நிச்சயமாக அமையாது.

எனவே, தொடர்புடைய உண்மைகளுக்கான ஆதாரம் இல்லாமல், குற்றம் சாட்டப்பட்டவர்களின்

வாக்குமூலங்களின் அடிப்படையில் மட்டுமே அரசு தரப்பு எந்தச் சூழ்நிலையிலும் தங்கள் வழக்கை நிரூபிக்க முடியாது என்பதை நினைவில் கொள்வது அவசியம். நிலைநிறுத்த முடியாத குற்றச்சாட்டுகளுடன் வழக்கை முன்னெடுத்துச் செல்வது என்பது, நீதிமன்றங்களின் முன் ஏற்கனவே உள்ள வழக்குகளுடன் சேர்த்து மேலும் வேலைச் சுமையை அதிகரிக்கின்ற ஒரு செயலாகவே அமையும். உண்மையில், வாக்குமூலங்களில் கூறப்பட்டுள்ள சம்பவங்களின் உண்மைத்தன்மையையும் அவை நிகழ்ந்திருப்பதையும் அரசால் சரிபார்க்க முடியும் என்பதால், இதுபோன்ற வழக்குகள் ஒருபோதும் தொடரப்படக்கூடாது. ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் விதிகள், தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக, மக்களைத் துன்புறுத்தவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

ஓர் உயர் நீதிமன்ற நீதிபதி, தன்னிடம் கொண்டுவரப்பட்ட அனைவரும் பயங்கரவாதிகள் அல்லது குற்றவாளிகள் என்று முன்கூட்டியே தீர்மானித்திருந்தாலன்றி, வாக்குமூலங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தாக்கல் செய்யப்பட்ட பெரும்பாலான வழக்குகள் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தண்டனைத் தீர்ப்பில் முடிவடையவில்லை. அந்தத் தண்டனைத் தீர்ப்புகள்கூட, மேல்முறையீடுகளில் பலமுறை ரத்து செய்யப்பட்டன. சில சமயங்களில், உச்ச நீதிமன்றத்தால் மேல்முறையீடுகள் தள்ளுபடி செய்யப்பட்டதற்கு எதிராகத் தனக்குக் கிடைத்த தகவல்தொடர்புகள் தொடர்பாக, ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் குழு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தண்டனை பெற்றவர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது. சமீபத்திய நல்லையா சிங்கராசா வழக்கில் (தகவல் தொடர்பு எண் 1033/2000 இல்), இலங்கை அரசு எதிர்காலத்தில் இதுபோன்ற மீறல்களைத் தவிர்க்கக் கடமைப்பட்டுள்ளது என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) சில ஆட்சேபிக்கப்பட்ட பிரிவுகள் (உ.ம். பிரிவு 16), அனைத்துலக குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) விதிகளுடன் இணக்கமாக ஆக்கப்படுவதை அது உறுதி செய்ய வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் அனைத்திலும் ஏற்பட்ட இறுதி விளைவு என்னவென்றால், கைது செய்யப்பட்டவர்கள் சிறைக் காவலில் வைக்கப்பட்டு, நீண்ட காலத்திற்குத் வெளித் தொடர்பில்லாத நிலையில் இருப்பதன் காரணமாக, அவர்களது அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்பட்டன என்பதுதான். இறுதியில், அத்தகைய நபர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை, ஒப்புதல் வாக்குமூலங்கள் என்று சொல்லப்படுபவற்றை மட்டுமே கொண்டு நிலைநிறுத்த முடியவில்லை என்பது தெரியவந்துள்ளது. அப்படியென்றால், நாம் ஏன் இன்னும் இதுபோன்ற வழக்குகளைத் தொடர்ந்து தாக்கல் செய்து கொண்டிருந்தோம்? அது குடிமக்களைத் துன்புறுத்துவதற்கா அல்லது வழக்குகளின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன் மூலம் சந்தேகத்திற்குரிய செயல்திறனைக் காட்டுவதற்காகவா?

3.5.2000 தேதியிட்ட அவசரகால ஒழுங்குமுறைகள், ‘பிணை வழங்குதல்’ தொடர்பான முந்தைய ஒழுங்குமுறை 54(3)ஐ நீக்கியது. ஒழுங்குமுறை 19(2) இன் கீழ், அரசு தரப்பு வழக்கறிஞரால் ஒரு நபரைத் தொண்ணூறு நாட்கள் காவலில் வைத்துப் பின்னர் விடுவிக்க முடியும். ஆனால் நடந்தது என்னவென்றால், அதன் பிறகு அந்த நபர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரிவு 7இன் கீழ், நீதிபதி முன் முன்னிலைப்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். நிச்சயமாக, அந்த 90 நாட்களில் ஒரு ‘தன்னார்வ’ ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுதல் நடக்கவே செய்தது!

பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப்பட்டதென்பது, சட்ட அடிப்படையில் எந்த அடிப்படைகளையும் கொண்டிராத வழக்குகளைத் தாங்கிப் பிடிப்பதன் மூலம், இந்த நாட்டின் குடிமக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பறித்தது. மக்களின் இயல்பான மனித வாழ்க்கையைப் பறித்து, அவர்களைச் சிறையில் அடைத்து, அரசின் கருவூலத்திலிருந்து அவர்களுக்கு உணவளித்து, இதுபோன்ற ஆதாரமற்ற வழக்குகளின் முடிவில் அவர்களை விடுவிப்பதற்காகவே பல ஆண்டுகளாக நாம் அவர்களைத் தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருக்கிறோம்.

1979ஆம் ஆண்டின் ‘தற்காலிக ஏற்பாடுகள் சட்டம்’ எண் 48 இயற்றப்பட்ட பிறகு, ஒரு முழுத் தலைமுறை மனிதர்களும் தங்களின் உண்மையான மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்பில் பட்டியலிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பற்றிய எந்த அறிவும் இன்றி பிறந்து வளர்ந்தனர் என்பதை நாம் உணர்ந்தோமா? இந்த நாட்டின் சில பகுதிகளில் இராணுவ ஆட்சியை நிலைநிறுத்த இந்தத் தற்காலிக ஏற்பாடுகள் இன்னும் எவ்வளவு காலம் பயன்படுத்தப்படும்?

இதுவரை நாம் அனுபவித்த அனைத்து அவசரத்

தேவைகளையும் சமாளிக்க நாட்டின் சாதாரண சட்டங்களே போதுமானதாக இருந்தன என்பது என் நம்பிக்கை. உண்மையில், ஆயுதப் படைகளுக்கும் காவல்துறைக்கும் வழங்கப்பட்ட பரந்த அதிகாரங்கள், மனித உரிமை மீறல்கள், வன்முறை, காவலில் ஏற்படும் மரணங்கள் மற்றும் காணாமல் போதல் ஆகியவற்றை நிச்சயமாக அதிகரித்துள்ளன. உண்மையான குற்றவாளிகளைத் தண்டிப்பதை விட, அரசியல் காரணங்களுக்காகத் தன் குடிமக்களைத் துன்புறுத்த அரசு விரும்புவதையே இது குறிக்கவில்லையா?

இத்தகைய சட்டங்களால் இந்த நாட்டின் சில குடிமக்களின் மனித உரிமைகள் மட்டும் பாதிக்கப்படவில்லை. நம் அனைவரின் மனப்பான்மை, மனிதாபிமானம் மற்றும் மனித உணர்திறன் ஆகியவையும் பாதிக்கப்பட்டுள்ளன. மற்றவர் மீது குற்றம் சாட்டுவது எளிது. பல நேரங்களில், நாம் சரியாகச் செயல்படாததால்தான் மற்றவர் ஒரு குறிப்பிட்ட விதத்தில் செயல்படுகிறார். தேசியப் பாதுகாப்புச் சட்டங்கள் வடிவில் அதிகாரம் நம் கைகளில் இருப்பதால், இந்த நாட்டின் சில பகுதிகளில் ஆயுதப் படைகளின் சர்வாதிகாரத்தை உருவாக்குவதற்கு அது ஒரு காரணமாகாது. ஏற்கனவே, ஆயுதப் படைகளின் கைகளில் அதிகாரம் அளவுக்கு அதிகமாகக் குவிக்கப்பட்டிருப்பது, இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் வன்முறை மற்றும் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதன் காரணமாக சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் ரீதியாகவோ அல்லது வேறு விதமாகவோ அதிகாரத்தைக் கையாள விரும்பும் நபர்களுக்கு அவர்கள் மேலும் மேலும் பயனுள்ளவர்களாக மாறுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. சில காலத்திற்கு முன்பு நடந்த ஒரு பொதுத் தேர்தலின் போது, இந்த நாட்டின் சில பகுதிகளில் நாம் கண்டது போல, அத்தகைய தப்பியோடியவர்களால் சமூகத்தில் ஏற்படும் தாக்கம் சந்தேகத்திற்கு இடமின்றி பேரழிவாக இருக்கும்.

போர் நிறுத்தப்பட்டவுடன், பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) திரும்பப் பெறப்பட்டிருக்கும் என்று ஒருவர் எதிர்பார்த்திருப்பார். ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்களின் பாதுகாப்பிற்காக, அது இன்னும் சட்டப் புத்தகத்தில் உள்ளது.

பாதுகாப்புச் சட்டங்களுடன் ஒப்பிட்டு மனித உரிமைகளைப் பற்றி விவாதிக்கும்போது, மனிதக் கடமைகளைப் பற்றியும் விவாதிப்பது பொருத்தமற்ற ஒன்றல்ல. மேற்கத்திய நாடுகள் வருவதற்கு முன்பு இந்தியத் துணைக்கண்டத்தில், மனித உரிமைகளை விட கடமைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது என்பது எனது வாதம். மேற்கத்திய நாடுகள் சுதந்திரத்தையும் மனித உரிமைகளையும் வலியுறுத்திய அதே வேளையில், சீனா உட்பட கிழக்கத்திய நாடுகள் பல நூற்றாண்டுகளாக மனிதர்களுக்கிடையேயான உறவையும் கடமைகளையும் வலியுறுத்தி வந்தன. இந்தியப் பார்வையில் தர்மம் என்பதன் பொதுவான பொருள் கடமை அல்லது கடமையுணர்வாகும். அனைத்து உயிர்களும் வேரூன்றியிருப்பது ஒரேயொரு இருப்பில்தான்.

ஒவ்வொரு ஆணும் பெண்ணும் ஒரு முழுமையின் ஒரு பகுதியாகவே இருந்தனர். ஒருவர் தனித்து இருக்கவில்லை. அவர் சுதந்திரமானவராக இருக்கவில்லை. அவர், பரந்து விரிந்த, ஒன்றோடொன்று இணைந்த மற்றும் ஒன்றையொன்று சார்ந்த ஓர் ஒழுங்கின் உள்ளார்ந்த பகுதியாக அல்லது அங்கமாக இருந்தார். கிழக்கத்தியக் கருத்தின்படி, மனிதன் சுதந்திரமாகப் பிறக்கவில்லை. அவன் எண்ணற்ற கடமைகளுடன் பிறந்தான். இவ்வுலகில் தோன்றி வாழ்வதன் மூலம், அவன் தனது கடமைகளைத் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருந்தான்.

எந்த மனிதனும் தனக்காகவோ அல்லது தனது தனிப்பட்ட நோக்கங்களுக்காகவோ வாழ்வதில்லை. அவன் அனைவருக்காகவும், பொதுவான நோக்கங்களுக்காகவும் வாழ்கிறான். ஒரு கை உடலின் ஒரு பகுதியாகும்; அது உடலில் இருக்கிறது மற்றும் உடலின் பயன்பாட்டிற்காகவே உள்ளது. அதுபோலவே, மனிதன் சமூகத்தின் ஒரு பகுதி; சமூகத்தில் வாழ்கிறான் மற்றும் சமூகத்தின் மீது கடமைகளைக் கொண்டுள்ளான். மேற்கத்தியர்களைப் போல சுதந்திரமாகவும் தன்னிச்சையாகவும் இருக்க முடியும் என்று நினைப்பது ஓர் அபத்தமாகும். அது அறியாமையிலிருந்து வருகிறது. அது தனித்தன்மையின் மாயையிலிருந்து வருகிறது.

உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இடையில் சாராம்சமான வேறுபாடு எதுவும் இல்லை என்பதை நாம் அறிவோம். அவை துணைவிதிகள். அவை ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். ஆனால் அணுகுமுறைகள் இரண்டு வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து வருகின்றன. தனது

சமூகத்தை உரிமைகளின் அடிப்படையில் அமைக்கும் மேற்கத்தியர், “இது என்னுடையது. இதை எனது உரிமையாக நான் கோருகிறேன்” என்கிறார். தனது சமூகத்தைக் கடமைகளின் அடிப்படையில் அமைக்கும் கிழக்கத்தியர், “இது உங்களுடையது. இதை எனது கடமையாக உங்களுக்கு அளிக்கிறேன்” என்கிறார். இந்த இரண்டு அணுகுமுறைகளுக்கும் இடையிலான மனப்பான்மை முற்றிலும் வேறுபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, விளைவுகளும் வேறுபட்டவை. உரிமைகளின் அணுகுமுறை ஆக்ரோஷமானது, போர்க்குணம் கொண்டது மற்றும் பிரிவினைக்கு வழிவகுக்கிறது. கடமைகளின் அணுகுமுறை விட்டுக்கொடுப்பது, அமைதியானது மற்றும் ஒற்றுமைக்கு வழிவகுக்கிறது. தர்மம் எனும் இலட்சியத்திலிருந்து எழும் நற்பண்புகள் அனைத்தும், கடமையுணர்வின் வேரிலிருந்து வெளிப்படும் இந்தக் கடப்பாட்டு உணர்வின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.

உரிமைகளுக்குப் பதிலாகக் கடமைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்தான் இந்த நாட்டின் எதிர்காலம் அடங்கியுள்ளது. அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இந்த முக்கிய உண்மையை நினைவில் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் இந்த நாட்டிற்கான தங்கள் கடமைகளைத் தீவிரமாகக் கருதியிருந்தால், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற ஒரு சட்டத்தை இயற்றுவது அவசியமாகக் கருதப்படும் ஒரு சூழல் உருவாக அவர்கள் ஒருபோதும் அனுமதித்திருக்க மாட்டார்கள்.

அணுத்துகள் இயற்பியலின் பல்வேறு மாதிரிகளை ஆய்வு செய்தபோது, பருப்பொருளின் கூறுகளும் அவற்றை உள்ளடக்கிய அடிப்படை நிகழ்வுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை, ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவை, ஒன்றையொன்று சார்ந்தவை என்ற முடிவுக்கு அறிவியல் ஏற்கனவே வந்திருந்தது. எதையும் தனித்தனிக் கூறுகளாகப் புரிந்துகொள்ள முடியாது; மாறாக, ஒரு முழுமையின் ஒருங்கிணைந்த பகுதிகளாக மட்டுமே புரிந்துகொள்ள முடியும்.

ஆட்சியிலும் கடமைகளையும் சுய விழிப்புணர்வையும் வலியுறுத்துவதன் அவசியத்தை நாம் உணராவிட்டால், மேலும் மேலும் கடுமையான, தேசியப் பாதுகாப்புச் சட்டங்கள் என்று அழைக்கப்படுபவை நடைமுறைக்கு வந்து சேரும். சுதந்திரத்திற்குப் பிறகு நமது அரசாங்கங்கள் முறையாக ஆட்சி செய்து, பிரச்சினைகளை மனிதாபிமானத்துடனும் உறுதியுடனும் தீர்த்திருந்தால், ஆட்சியாளர்களை மக்களிடமிருந்து பாதுகாக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தேவை எழுந்திருக்காது.

பிரச்சினைகளைத் தீர்க்க, துயருற்றவர்களை பலவந்தத்தாலும் வன்முறையாலும் நசுக்க வேண்டியதில்லை. மற்றவர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்வதும் பாராட்டுவதும் பெரும் பயனைத் தரும். மனித உரிமைகளை ஒடுக்குவதற்கான ஒரு நயமான சொல்லாக இருக்கும் பாதுகாப்புச் சட்டங்களை இயற்றுவதும் அமல்படுத்துவதும் மூலம் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. மனிதர்களின் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு, அவர்களுடன் அனுதாபம் கொண்டு, தீர்வுகளைக் காண வேண்டும்.

கடமையே உந்து சக்தியாக இருக்கும் இடத்தில், சுய முன்னேற்றம், தற்பெருமை மற்றும் சுயநலம் ஆகியவற்றுக்கு இடமில்லை. நமது கடமைகளைச் செய்ய நாம் உறுதி கொள்ளும்போது, சுயநல ஆட்சிக்குப் பதிலாக சட்டத்தின் ஆட்சிக்குத் தானாகவே வழிவிடுவோம். அப்போது மனித உரிமைகள் மதிக்கப்படும்; தேசியப் பாதுகாப்புச் சட்டங்கள் என்பன இயற்கையாகவே அழிந்துவிடும்.

### கட்டுரையாசிரியர் பற்றிய குறிப்பு

**நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன், பி.ஏ. (இலண்டன்), எல்.எல்.பி. (இலங்கை)**

கொழும்பு அரசு சட்டக் கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைப் பெற்றார். கொழும்பு சட்டக் கல்லூரியில், அவர் 1962-63 ஆம் ஆண்டில் சட்ட மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்தார். படிப்பை முடித்த பிறகு, நீதித்துறைப் பதவிக்கு அழைக்கப்படுவதற்கு முன்பு, அவர் ஹல்ஃப்ட்ஸ்டோர்ஃபில் பதினைந்து ஆண்டுகள் வழக்கறிஞராகப் பணியாற்றினார். கொழும்பில் மேலதிக மாவட்ட நீதிபதியாக நியமிக்கப்படுவதற்கு முன்பு, அவர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மாவட்ட நீதிபதியாகவும், நீதித்துறை நடுவராகவும் பணியாற்றினார்.

1988 ஆம் ஆண்டில் அவர் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 1995 ஆம் ஆண்டில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதியரசரானார். 2001 இல் உச்சநீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

# மலையகத்தில் காட்டேரியம்மன் வழிபாடும் ஆற்றுகையும்

கோப்பி, தேயிலைத் தோட்ட உழைப்பிற்காக இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இலங்கை மலையகத் தமிழர்கள், 200 ஆண்டுகள் கழித்தும் தங்கள் வழிபாட்டு மரபுகளையும், சடங்கு முறைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களின் சமூக வாழ்வியலில் வழிபாடு அல்லது சடங்கு என்பது வெறும் மத நிகழ்வன்று; அது சமூகத்தின் தொடர்ச்சியை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள பண்பாட்டுச் செயல்முறையாகவும் உள்ளது. எனினும், சமகால மாற்றங்களால் இச்சடங்குகள் அருகி வருவதால், அவற்றை ஆவணப்படுத்தும் தேவை உண்டாகின்றது. சடங்குகளை வெறும் வாய்மொழித் தகவல்களாக அல்லாமல், நேரடிச் செயல், இசை, உணர்வியல் ஆகியவற்றின் நிகழ்த்துகை (Performance) வடிவமாகப் புரிந்துகொள்ள, நிகழ்த்துகை ஆய்வு அணுகுமுறை அவசியமாகின்றது. அந்தவகையில் இத்தொடர் 'நிகழ்த்துகை நோக்கில் மலையகத்தின் வழிபாடுகளும், சடங்குகளும்' எனும் தலைப்பில் எழுதப்படுகின்றது. இது வாழ்க்கைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், கலைகளோடு இணைந்த சடங்குகள் எனப் பல அடுக்குகளில் ஆராயப்படும். நிகழ்த்துகை முறைமைகளை ஆவணப்படுத்துவதன் மூலம், மலையகத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளம், வரலாறு ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான முயற்சியாகவும் இது அமையும்.



## மெய்யநாதன் கேதீஸ்வரன்

மெய்யநாதன் கேதீஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும் துறை விரிவுரையாளராக பணியாற்றுகின்றார். இவர் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நாடகம் மற்றும் அரங்கியல் துறையில் இளங்கலைமாணிப் பட்டமும், பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தில் அரங்கக் கலைகள் துறையில் முதுகலைமாணிப் பட்டமும் பெற்றுள்ளதோடு, தனது கலாநிதிப்பட்ட ஆய்வை 'பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில்' மேற்கொண்டுவருகிறார். நாடக எழுத்தாக்கம், நடிப்பு, நெறியாள்கை என்ற அடிப்படையில் நாடகச் செயற்பாட்டாளராக பல்வேறு அரச விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் நவீன நாடகம், கூத்து மற்றும் தமிழ் பண்பாட்டு மரபுகள் குறிப்பாக மலையக பாரம்பரிய வாழ்வியல், கலை மற்றும் பண்பாடுகள் பற்றி பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச ஆய்வு மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை முன்வைத்துள்ளார். சகதிப்புழுக்கள் இவரது நாடகப்பனுவல்களின் தொகுப்பு ஆகும்.

## தமிழகத்தில் காட்டேரி அம்மன் வழிபாடு

தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஆன்மிக மற்றும் பண்பாட்டு வரலாற்றில், நாட்டுப்புறச் சமய வழிபாட்டு மரபுகள் மிக ஆழமான வேர்களைக் கொண்டுள்ளன. இத்தகைய வழிபாட்டு முறைகள் பெரும்பாலும் வைதீகக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டு, மக்களின் அன்றாட வாழ்வியல் தேவைகள், இயற்கை மீதான அச்சம் மற்றும் பிணி நீக்கல் ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை ஆகும். பண்டைய காலங்களில் காடுகளிலும், காடுகளை ஒட்டிய எல்லைப்புறக் கிராமங்களிலும் வாழ்ந்த மனிதர்களுக்கு இயற்கைச் சீற்றங்கள், கொடிய காட்டு விலங்குகள், நச்சுப் பாம்புகள் மற்றும் கொள்ளைநோய்கள் போன்றவற்றின் மீதான அச்ச உணர்வே தெய்வ வழிபாட்டின் முதன்மைத் தூண்டுகோலாக அமைந்தது. இத்தகைய பயங்களிலிருந்து தங்களைக் காத்துக் கொள்ளும் நோக்கில், உக்கிரமான தோற்றமும் ஆயுதங்களும் கொண்ட பெண் தெய்வங்களை உருவாக்கி மக்கள் வழிபடத் தொடங்கினர். இவ்வகையிலேயே வனப்பேச்சி, வனப்பிடாரி, செல்லி மற்றும் காட்டேரி போன்ற காவல் தெய்வங்கள் தோற்றம் பெற்றன.

சங்க இலக்கியப் பாடல்களிலும் இத்தகைய உக்கிரத் தெய்வ வழிபாட்டிற்கான சான்றுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பதிற்றுப்பத்து அல்லது புறநானூற்றுப் பின்னணியைக் கொண்ட சங்ககாலப் பாடலொன்றில், அதியனுக்கும் மிஞிலிக்கும் இடையே நடந்த பெரும் போரில், தனக்கு வெற்றி கிடைத்தால் ‘பாழி’ நகரத்துத் தெய்வத்திற்குப் பெரும் பலி தருவதாக மிஞிலி வேண்டிக் கொள்கிறான். போரில் அதியனைக் கொன்று வென்ற பின்னர், அந்தப் பேய் தெய்வத்திற்குப் பலியிட்டு ‘அமலைக் கூத்து’ ஆடி மகிழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இத்தகைய போர்க்களப் பலி மற்றும் பேய் வழிபாட்டு மரபுகளே, பிற்காலத்தில் காடுகளையும் சுடுகாடுகளையும் எல்லையாகக் கொண்டு விளங்கும் காட்டேரி அம்மன் வழிபாட்டின் ஆதி எச்சங்களாக மானிடவியலாளர்களால் பார்க்கப்படுகின்றன.

‘காட்டேரி’ என்ற சொல்லின் பொருள், காடுகளிலும் இருள் சூழ்ந்த கிராம எல்லைகளிலும் அலைந்து திரியும் ஆற்றல் என்பதாகும். காடு மற்றும் ஏரி ஆகிய இயற்கை எல்லைகளோடு தொடர்புடைய நிலப்பரப்பைக் காக்கும் தெய்வமாக விளங்குவதால் இத்தெய்வத்திற்கு இப்பெயர் சூட்டப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. கிராமிய வழக்காறுகளில் காட்டேரி அம்மனுக்குப் பல மாற்றுப் பெயர்களும் வட்டாரப் பெயர்களும் வழங்கப்படுகின்றன. அவற்றுள் மிக முதன்மையானது ‘இருசி’ என்பதாகும். இப்பெயரானது வட்டார வாரியாக நல்லிருசி, பொன்னிருசி, குழி இருசி எனப் பலவாறாக மருவி வழங்கப்படுகிறது. மானிடவியல் நோக்கில் ‘இருசி’ என்ற சொல்லிற்குப் பல ஆழமான வாழ்வியல் அர்த்தங்கள் உள்ளன. நாட்டுப்புற வழக்காறுகளின்படி, ‘இருசி’ (உட்காரு) என்பது பெண்கள் பூப்படையும் அல்லது பருவமடையும் காலத்தைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. அதே வேளையில், அதற்கு நேர் எதிர் அர்த்தமாகப் பருவமடையாத அல்லது பூப்படையும் தன்மையற்ற பெண்ணைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. இந்த மொழியியல் தொடர்பு, காட்டேரி அல்லது இருசி வழிபாட்டிற்கும் பெண்களின் இனப்பெருக்கச் சுழற்சி, மகப்பேறு மற்றும் மகளிர் உடல்நலம் ஆகியவற்றிற்கும் இடையே உள்ள ஆதித் தொடர்பை வெளிப்படுத்துகிறது. வட இந்தியாவில் புராணங்கள் தோன்றுவதற்கு முன்பே விளங்கிய கரிய நிறக் காளி வழிபாட்டின் திராவிட வடிவமாகவே இத்தெய்வங்கள் தமிழ்நாட்டில் நிலைபெற்றன.



**காட்டேரியம்மன் வழிபாடு**

நாட்டுப்புற வழிபாட்டு வடிவங்கள் காலப்போக்கில் பெருந்தெய்வ வழிபாட்டுடன் இணையும் செயல்முறையை (*Sanskritization/ Assimilation*) காட்டேரி

அம்மன் வழிபாட்டிலும் தெளிவாகக் காண முடிகிறது. தமிழ்நாட்டில் இத்தெய்வம் ஆதிசக்தியான பார்வதி தேவியின் உக்கிர வடிவமாகக் கருதப்பட்டுச் சைவ சமயத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இத்தெய்வத்தின் தோற்றம் குறித்துத் தமிழகத்தில் வழங்கும் முதன்மையான தொன்மக் கதையினை நோக்கும்போது அது தெளிவாகும்.

ஒரு சமயம் கையிலாயத்தில் சிவபெருமானும் பார்வதி தேவியும் துயிலச் சென்றபோது, சிவன் உறங்கிய பின் பார்வதி தேவி நள்ளிரவில் படுக்கையை விட்டு ரகசியமாக வெளியேறுவதைச் சிவபெருமான் தற்செயலாகக் கண்டறிந்தார். அவளைத் தொடர்ந்து சென்றபோது, தேவி சுடுகாட்டிற்குச் சென்று விகாரமான உக்கிர உருவம் கொண்டு அங்கிருந்த பிணங்களை எடுத்து உண்பதைச் சிவன் அதிர்ச்சியுடன் கண்டார். தேவியின் இந்த உக்கிர மற்றும் ராட்சஸ குணத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கத் திட்டமிட்ட சிவபெருமான், அவள் செல்லும் பாதையில் ஓர் ஆழமான குழியை வெட்டி, அதனைத் தழைகளைக் கொண்டு மூடி வைத்தார். நள்ளிரவில் அதிவேகமாகச் சென்ற பார்வதி தேவி அக்குழியில் விழுந்தாள். அங்கு தோன்றி நின்ற சிவபெருமானிடம் தேவி மன்னிப்புக் கோரினாள். அதற்குச் சிவபெருமான், அவளுள் இருக்கும் உக்கிரமான ராட்சஸ குணத்தை அங்கேயே விட்டுவிட்டு வந்தால் மட்டுமே அவளைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியும் என்று கூறினார். அதன்படியே தேவி தன் உக்கிரச் சக்தியை அக்குழியிலேயே விட்டுவிட்டுச் சாந்த சொரூபியாகத் திரும்பினாள். அவ்வாறு பூமியின் அடியில் புதையுண்டு எஞ்சிய உக்கிரச் சக்தியே 'காட்டேரி அம்மன்' என்ற பெயரில் உலகைக் காக்கும் காவல் தெய்வமாக மாறியது என்பது தொன்மக் கதையாகும்.

இதற்கு நேர்மாறாக, கிராமியச் சமூகங்களின் நாட்டுப்புறப் புராணங்களில் காட்டேரியின் தோற்றம் சிவபெருமானின் சாபத்தோடு தொடர்புடையதாகச் சித்தரிக்கப்படுகிறது. சிவபெருமானின் சாபத்தினால் அடர்ந்த காடுகளில் அலைந்து திரிய நேரிட்ட காட்டேரி, தன்னை வழிபடாதவர்களின் கர்ப்பிணிப் பெண்களின் கருவினைச் சிதைத்துண்ணும் கொடூரமான சூனியக்காரியாகவும், தன்னை வணங்குபவர்களின் குழந்தைகளைக் காக்கும் அன்பான தாயாகவும் இருவேறுபட்ட குணங்களைக் கொண்டவளாக விவரிக்கப்படுகிறாள். இன்றும் கிராமப்புறங்களில் நிகழும் தொடர்ச்சியான கருச்சிதைவுகளை 'முனி அல்லது காட்டேரி அடித்தல்' என்று நம்புவதும், அதற்கான பரிகாரமாகக் காட்டேரி பூஜைகளை மேற்கொள்வதும் இந்தத் தொன்ம நம்பிக்கையின் நேரடி விளைவாகவே கருதலாம்.

காட்டேரி அம்மன் வழிபாட்டுச் சடங்குகள் உக்கிரமும், அதே வேளையில் அரிய இயற்கை மருத்துவக் கூறுகளும் நிறைந்தவை ஆகும். இத்தெய்வத்திற்கு முறையான கோபுரக் கோயில்கள் கட்டுவதைத் தவிர்த்து, மரங்களின் அடியில் அல்லது நீர்நிலைகளின் கரைகளில் எளிய கல் மேடைகள் அமைத்து வழிபடுவதே ஆதி வழக்கமாகும். காட்டேரி அம்மன் எப்போதும் மற்றொரு உக்கிரக் காவல் தெய்வமான முனீஸ்வரனுடன் இணைத்தே சித்தரிக்கப்படுகிறாள். நாட்டுப்புற மரபுகளின்படி, முனீஸ்வரனை வணங்காமல் காட்டேரி பூஜை முழுமையடைவதில்லை. இதனால், காலையில் முனீஸ்வரனுக்குப் பொங்கல் வைத்துப் பூஜித்துவிட்டு, நள்ளிரவில் காட்டேரி அம்மனுக்கான பிரதான பூஜைகளைத் தொடங்குவது மரபாகும்.

### மலையகத்தில் காட்டேரியம்மன் திருவிழா

மலையகத்தில் காட்டேரியம்மன் வழிபாடு என்று நோக்கும் போது, தென் இந்தியாவின் நாமக்கல் மாவட்டம் நல்லிப்பாளையத்திலிருந்து இலங்கைக்கு பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்காக அழைத்துவரப்பட்ட மலையகத் தமிழர்களே இந்தக் காட்டேரியம்மன் திருவிழாவினையும் கூடவே அழைத்து வந்தனர் எனலாம். இவ்வாறு கொண்டுவரப்பட்ட இந்தக் காட்டேரியம்மன் திருவிழா மலையகத்தில் லிந்துலை சென்றெகுலாஸ் தோட்டத்தில்தான் சிறப்பிடம் பெறுகின்றது. இங்கு



காட்டேரியம்மன் வழிபாடு

இத்திருவிழா ஆரம்பிக்கப்பட்ட காலம் எது என்பது யாருக்கும் தெரியவில்லை எனவும் தமது மூத்தகுடிகள்தான் ஆரம்பித்தனர் எனவும் இத்தோட்டத்தின் முதியவர்கள் தெரிவித்தனர்.

எனினும் காட்டேரியம்மன் திருவிழாவை செல்லக்குட்டி கவுண்டர் என்பவர் செய்து வந்ததும் அவர் பிறகு இந்தியா சென்றவுடன் தோட்டத்தின் முதியவர்களும் இளைஞர்களும் சேர்ந்து மிக ஆர்வத்துடன் இத்திருவிழாவினை நடத்தி வருவதும் சிறப்புக்குரியதாகும். மாரியம்மனின் கோட்டையை துஷ்ட சக்திகள் உடைத்தெறிய வரும் போது மாரியம்மன் காட்டேரியம்மனாக (மயான காளியாக) உருவெடுத்து துஷ்ட சக்திகளை விரட்டியடிப்பதாகக் கூறுகின்றனர். இத்திருவிழாவானது பிடிமண் எடுக்கும் நிகழ்வுடன் ஆரம்பமாகின்றது.

மலையகத்தில் பங்குனி மாதம் என்றாலே அது பக்திப் பரவசமிக்க திருவிழாக் காலம்தான். இங்குள்ள தோட்டப் பகுதிகளில் பொதுவாக ஐந்து முதல் ஏழு நாட்கள் வரை மிகவும் விமரிசையாக நடைபெறும் இத்திருவிழாக்கள், கொடிமரம் நடுதல் மற்றும் கரகம் பாலித்தலுடன் பக்திபூர்வமாகத் துவங்கும். விழாக்காலங்களில் நேர்த்திக்கடனுக்கான பாற்குடப் பவனி, சுவாமி வீதி உலா வரும் உள்ளூர் மற்றும் வெளியூர் வலம் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்று, இறுதியாக மஞ்சள் நீராட்டு விழாவுடன் விழா கோலாகலமாக நிறைவடையும். மேலும், திருவிழா தொடங்கிய பின்னர் வரும் செவ்வாய்க்கிழமையானது காட்டேரியம்மன் வழிபாட்டிற்காகவே சிறப்பாக ஒதுக்கப்பட்டு, அன்று அம்மனுக்குரிய சிறப்புத் திருவிழா பயபக்தியுடன் நடத்தப்படுவது மலையகத் திருவிழாக்களின் தனித்துவமான மரபாகும். அதற்கு முந்தைய திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணிக்கே அதன் அதிதீவிரமான சடங்குகள் தொடங்கிவிடுகின்றன. நள்ளிரவில் காட்டேரியம்மன் வேடம் தரிப்பவர் பிறந்த மேனியுடன் சுடுகாட்டிற்குச் சென்று, அங்கு அம்மனுக்குச் சூடம், தேசிக்காய், பால், முட்டை போன்றவற்றை மடைப்படையலாக வைத்து வழிபடுவார்; வழிபாட்டின் போது அம்மன் ஆட்கொண்டு அருள் வந்ததும், அவர் சுடுகாட்டில் அம்மன் காட்டும் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சுடுகாட்டு மண்ணை எடுத்துக்கொண்டு அதிகாலை 3 மணியளவில் இரகசியமாகத் தன் வீட்டிற்கு வந்து அதை மறைத்து வைப்பார். அதன்பின்னர், செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு விழாக்குழுவினர் அந்தப் புனித மண்ணைப் பெற்று, சலித்து, வீட்டினுள் காட்டேரியம்மனுக்குப் படைத்து, வேடம் தரிப்பவரின் அணிகலன்களுடன் வைத்துச் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது மலையகத்தின் தனித்துவமான தொன்மப் பண்பாட்டு மரபாகும்.

ஒருவர் காட்டேரியம்மனாக வேடம் தரித்து காணப்பட, ஏனைய சிலர் துஷ்ட சக்திகள் போன்று வேடம் தரித்துக் காணப்படுகின்றனர். காட்டேரியம்மன் கருப்பாடை தரித்தவளாகவும் சடாமுடியுடனும் காட்சியளிக்கின்றாள். துஷ்ட சக்திகளும் கருப்பாடையுடன் உடல், முகம் என்பனவற்றில் கருப்பு மை பூசி காட்சியளிக்கின்றனர். பின்னர் துஷ்ட சக்திகள் காட்டேரியம்மனை கோபமூட்டுவது போன்ற பாடல்கள் இடம்பெறுகின்றன. இதில் 'பச்சை உலக்கை பாரமில்ல, பச்சைப் பால், பச்சை முட்டை பாரமில்ல' போன்ற பாடல்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் ஒரு வகை நடனமும் இடம்பெறுகின்றது. இங்கு காட்டேரி அம்மன் கோபம் கொண்டவளாக துஷ்ட சக்திகளை விரட்டியடிப்பதாக நிகழ்வு அமைகின்றது.

காட்டேரியம்மன் கையில் திரிசூலத்திற்குப் பதிலாக சுளகும், துஷ்ட சக்திகளின் கையில் கடப்பாரைக்கு பதிலாக உலக்கையும் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் இந்த அம்மனுக்கு நேர்த்திக்கடன் வைக்கும் நிகழ்வும், அத்துடன் நேர்த்திக்கடனைப் பூர்த்தி செய்யும் நிகழ்வும் திருவிழாவின் போது இடம்பெறுகின்றது. பக்தர்கள் பால், முட்டை, தேசிக்காய் என்பவற்றை காட்டேரியம்மனுக்கு வழங்கி நேர்த்தியை நிறைவு செய்கின்றனர்.




Image Source - Amma Tookay devotees

வீட்டினுள் காட்டேரி வேடம் தரித்தவர்க்கு படையல்கள் வைத்து சுடுகாட்டில் இருந்து எடுத்து வந்த மண் உணவாகக் கொடுக்கப்படும். அதனை சாப்பிடச் சாப்பிட காட்டேரியின் அருளும் கோபமும் உக்கிரமடையும். இதனைத் தொடர்ந்தே தனது விளையாட்டையும் ஆட்டத்தையும் ஆரம்பிப்பாள் காட்டேரித்தாய். காலை 11 மணியளவில் ரோதமுனி ஆலயத்தில் ஆரம்பமாகும் இந்நிகழ்வில் காட்டேரியம்மனோடு சேர்ந்து எதிரில் உள்ள உலக்கை ஏந்திய குழுவினரும் இசைக்கு ஏற்றாற்போல் ஆடுவர். இங்கு பிரதான இசைக்கருவியாக தப்பு பயன்படுத்தப்படுகின்றது. காட்டேரியம்மனானது உலக்கை ஏந்தி ஆடுபவர்களை துஷ்டர்களாக எண்ணி, அவர்களை விரட்டியடிப்பது தீமையை விலக்கி நன்மை பெருக்குவதாக அமைந்துள்ளது. மேலும் காட்டேரியம்மன் ஓர் உயரமான மலையில் வாழ்வதாகவும் அதனை இடிக்க துஷ்டர்கள் உலக்கையைக் காட்டுவதாகவும் அவர்களை விரட்டியடிக்கவே காட்டேரியம்மன் அவதரித்ததாகவும் ஊர் மக்கள் நம்புகின்றனர்.

மேலும் காட்டேரியம்மன் தப்பிசைக்கு ஏற்றவாறு சுளகை விசுக்கி விசுக்கி ஆடி வருவார். எதிரணியில் உலக்கை வைத்துள்ள ஒருவர் 'பச்சொலக்க' எனக்கூற, அணியில் உள்ள ஏனையோர் 'பாரமில்லை' எனக் கோசமிடுவர். 'பச்சொலக்க பாரமில்லை' என்ற கோசம் கேட்டவுடன் அம்மனுக்கு கோபம் உச்சமடையும். காட்டேரியம்மனை கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வதற்காக இடுப்பில் துணி ஒன்றைக் கட்டி பின்னால் இருந்து இழுத்து இழுத்து விடுவர். மேலும் சுற்றியுள்ள பக்தர்கள் 'ஓஒ.....ஹாஹாஹா' எனக் கோசமிடுவர்.

சுமார் 3 மணித்தியால ஆட்டத்தின் பின்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு வருகை தந்து இறுதியாகக் கோவிலை வலம் வந்து பக்தர்களுக்கு ஆசி வழங்குவதுடன் இந்நிகழ்வு நிறைவு பெறுகிறது. ஆரம்பக்காலத்தில் வருகைதந்த கருப்பண்ணன் கவுண்டர் முதல் மாயழகு புஷ்பராஜ் தலைமுறை வரை சுமார் 6 தலைமுறைகள் தொடர்ச்சியாக இன்று வரை இந்தச் சடங்கைச் செய்து வருகின்றனர். ஊர் நன்மைக்காகவும், ஊரின் காவலுக்காகவும், மக்கள் நலம் வேண்டியும் இந்நிகழ்வு நடைபெறுகின்றது.

இவ்வாறு நிகழ்த்தப்படும் இவ்வழிபாடு, வெறும் மதச்சடங்கு மட்டுமல்லாமல், அது ஒரு நிகழ்த்துகை அல்லது ஆற்றுகையாகவும் வடிவமெடுக்கிறது. மானிடவியல், சமூகவியல் மற்றும் நாடகக் கோட்பாடுகளின் அடிப்படையில், காட்டேரியம்மன் வழிபாடு எவ்வாறு ஒரு சடங்காகவும் அதே நேரத்தில் ஓர் ஆற்றுகையாகவும் பேணப்படுகின்றது என்பதை நோக்கலாம்.

ரிச்சர்ட் செக்னர் மற்றும் விக்டர் டர்னர் போன்றோரின் ஆற்றுகைக் கோட்பாட்டின்படி, ஒரு நிகழ்வு ஆற்றுகையாக மாறுவதற்கு 'நிகழ்த்துபவர்', 'நிகழ்த்தப்படும் சூழல்', மற்றும் 'பார்வையாளர்கள்' ஆகிய காரணிகள் அவசியமாகின்றன. காட்டேரியம்மன் வழிபாட்டில் இந்தக் கூறுகள் மிகத் துல்லியமாக வெளிப்படுகின்றன. திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு வேடம் தரிப்பவர் பிறந்த மேனியுடன் சுடுகாட்டிற்குச் செல்லும் போது, அவர் அன்றாடச் சமூக மனிதன் என்ற நிலையிலிருந்து விடுபடுகிறார்.

அங்கு அவர் மேற்கொள்ளும் சடங்கு முறைகள், ஆடை மற்றும் அணிகலன்கள் அணிதல் என்பன அவரது அன்றாட நடத்தையை மாற்றி, 'அம்மன்' என்ற தெய்வீகப் பாத்திரத்தை அவருக்குள் மீளுருவாக்கம் செய்கின்றன. இது ஆற்றுகைக் கோட்பாட்டில் 'மறுபடி நிகழ்த்தப்படும் நடத்தை' என அழைக்கப்படுகிறது. மேலும், இங்கு சுடுகாடு மற்றும் வீட்டின் உட்பகுதி என்பன சாதாரண இடங்கள் அல்ல. அவை சடங்குசார் ஆற்றுகை வெளிகளாக மாற்றமடைகின்றன. நள்ளிரவில் சுடுகாட்டின் தனிமையும் பயமும் கலந்த சூழல், அந்த ஆற்றுகையின் தீவிரத்தன்மையை அதிகரிக்கின்றது.

மானிடவியலாளர் விக்டர் டர்னரின் சடங்குக் கோட்பாட்டில் முக்கியமானது 'இடைநிலை நிலை' என்பதாகும். ஒரு நபர் பழைய நிலையிலிருந்து புதிய நிலைக்கு மாறும் இடைப்பட்ட காலப்பகுதியே இதுவாகும். காட்டேரியம்மன் வழிபாட்டில் இந்த இடைநிலை நிலை மிகவும் துல்லியமாகப் பேணப்படுகிறது. திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு நிர்வாணமாகச் சுடுகாடு நோக்கிச் செல்லுதல் என்பது 'பிரிவு நிலை' ஆகும். இதன்மூலம் அவர் சமூகக் கட்டமைப்பு மற்றும் ஆடைகள் என்ற அடையாளங்களில் இருந்து தன்னைத் துண்டித்துக் கொள்கிறார்.

நள்ளிரவு 12 மணி முதல் அதிகாலை 3 மணி வரை சுடுகாட்டில் இருக்கும் நிலை 'இடைநிலை நிலை' ஆகும். இக்காலத்தில் அவர் மனிதனும் அல்ல, தெய்வமும் அல்ல என்ற இரு உலகங்களுக்கும் இடைப்பட்ட மர்மமான நிலையில் இருக்கிறார். செவ்வாய் காலை 6 மணிக்கு மண்ணைச் சலித்துப் படைத்து, அணிகலன்களுடன் வழிபடுவது 'மீளிணைவு நிலை' ஆகும். இதன்மூலம் அவர் புனிதமான ஆற்றலோடு மீண்டும் சமூகத்திற்குள் அல்லது குடும்பத்திற்குள் வருகிறார். இந்த இடைநிலை

நிலையில், 'பிறந்த மேனியுடன்' சுடுகாட்டிற்குச் செல்வது என்பது உலகியல் அடையாளங்கள், சாதி, வர்க்கப் படிநிலைகள் அனைத்தையும் துறந்து, இயற்கையோடும் ஆதி ஆற்றலோடும் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் ஒரு குறியீட்டுச் சடங்காகும்.

நவீன ஆற்றுகைக் கோட்பாடுகளில் 'உடல்' என்பது வெறும் சதைப்பிண்டம் அல்ல; அது கருத்துகளை, நம்பிக்கைகளைக் கடத்தும் ஓர் ஊடகம் ஆகும். காட்டேரியம்மன் வழிபாட்டில் வேடம் தரிப்பவரின் உடல், தெய்வத்தின் ஆற்றலைத் தாங்கும் ஒரு புனிதக் கொள்கலனாக மாறுகிறது. சூடம், தேசிக்காய், பால், முட்டை போன்ற 'உக்கிரப் படையல்களை'ச் சுடுகாட்டில் வைத்து வழிபடும் போது, வேடக்காரருக்கு 'அருள்' வருகிறது. இந்த அருள் வருதல் என்பது ஒரு வகையான உளமெய் உடலியல் ஆற்றுகை ஆகும். சுடுகாட்டில் அம்மன் தேர்ந்தெடுக்கும் இடத்தை அறிந்து, அங்கிருந்து மண்ணை எடுத்து வந்து ரகசியமாக ஒளித்து வைப்பது 'உயிர்ப்பித்தல்' என்ற சடங்கைக் குறிக்கிறது. சுடுகாட்டு மண் என்பது மரணத்தின் குறியீடு; ஆனால், அதை அதிகாலை 6 மணிக்குச் சலித்து, வீட்டிற்குள் வைத்து வழிபடும் போது, அது 'பாதுகாப்பு' மற்றும் 'மறுபிறப்பின்' குறியீடாக மாறுகிறது. மரணத்தின் எல்லையிலிருந்து வாழ்வின் எல்லைக்குள் ஆற்றல் கடத்தப்படுவதை இவ்வுடல் நிகழ்த்திக் காட்டுகிறது.

காட்டேரி வேடம் தரிப்பவர் தனி ஆளாகச் சுடுகாட்டிற்குச் சென்றாலும், அதிகாலை 6 மணிக்கு 'குழுவில் உள்ளவர்கள்' அந்த மண்ணைப் பெற்றுச் சலித்து, வழிபாடுகளைத் தொடர்கின்றனர். விக்டர் டர்னர் இதனை 'கம்யூனிடாஸ்' என்பார். அதாவது, சடங்குகளின் போது சமூகத்தில் நிலவும் தீவிரமான ஒருமைப்பாடு ஆகும். மலையகத் தோட்டப்புறச் சூழலில், அன்றாட உழைப்புச் சுரண்டல் மற்றும் சமூகப் படிநிலைகளால் ஒடுக்கப்படும் மக்கள், இத்திருவிழாச் சடங்கின் மூலம் ஒன்றிணைகிறார்கள். 'குழுவினர்' என்ற கூட்டுச் செயல்பாடு, தனிநபர் ஆற்றுகையை ஒரு கூட்டுச் சடங்காக மாற்றுகிறது. செக்னரின் வரைபட விளக்கத்தின்படி, சடங்கு என்பது விளைவை நோக்கியும், நாடகம் என்பது மகிழ்வூட்டலை நோக்கியும் பயணிப்பதாகும். மலையகக் காட்டேரியம்மன் வழிபாடு முற்றிலும் விளைவை அடிப்படையாகக் கொண்ட ஒரு சடங்குசார் ஆற்றுகையாகும். இங்கு வேடம் தரிப்பது பிறரைக் கவர்வதற்காக அல்ல; மாறாக, ஊருக்கும் குடும்பத்திற்கும் ஏற்படும் காட்டேரி தோஷம், திருஷ்டி மற்றும் தீய சக்திகளை விரட்டுவதற்காகவே ஆகும். நள்ளிரவு 12 மணி, அதிகாலை 3 மணி, காலை 6 மணி என நேரக் கட்டுப்பாடுகள் மிகத் துல்லியமாகப் பேணப்படுகின்றன. இந்த விதிகளை மீறினால் சடங்கு பலிக்காது என்ற பயமும் பக்தியும் கலந்த மனநிலை, இந்த ஆற்றுகையை மிகவும் புனிதமான சடங்காக நிலைநிறுத்துகிறது.

சமகாலத்தில் நவீன கண்டுபிடிப்புகளின் தாக்கமும், உலகம் மிக வேகமான வாழ்வியலுக்குள் அகப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில், கிராமிய வழிபாடுகளும் மரபுசார்ந்த அம்சங்களும் வழக்கொழிந்து மருவிப்போகின்ற ஓர் அபாய நிலையும் தோன்றியிருப்பதனைக் காணலாம். இக்காலகட்டத்தில் மரபுசார் வழிபாடுகளையும், அதனோடு இணைந்த வகையில் சடங்கு முறைகளையும் கலைகளையும் பாதுகாத்துப் பேண வேண்டிய தேவையும் காணப்படுகின்றது. சமகாலத்தில் பெரும்பாலான கிராமிய வழிபாட்டிடங்கள் பெரிய ஆகம ஆலயங்களாக மாற்றப்பட்டு, அதன் மரபும் பழமையும் மாற்றப்பட்டு, சமஸ்கிருதமயமாக்கல் ஊடாக வழக்கொழிந்து காணப்படுகின்றது. இது ஓர் ஆபத்தான விடயமாக இருக்கின்றது. ஆனால் லிந்துலை சென்றெகுலாஸ் தோட்டத்தில் அவ்வாறு அல்ல; அது இன்னும் பழமை மாறாமல் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது எனலாம். இது இன்னும் பல தலைமுறைகள் தொடரும் வண்ணமும், வழிமுறைகளை இனங்கண்டு செயல்படுத்த வேண்டியது தேவையானதாகும்.

**உசாத்துணை மூலங்கள்**


சுந்தரம்பிள்ளை, காரை. செ. (2005). ஈழத்து மலையகக் கூத்துகள். பாரதிப் பதிப்பகம்.

தருமராஜன், டி. (2006). சனங்களின் சாமிகள். நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.

தாம்ஸன், ஜார்ஜ். (2005). மனித சாரம் (எஸ். வி. ராஜதுரை, தமிழாக்கம்). விடியல் பதிப்பகம்.

பக்தவத்சல பாரதி. (2012). மானிடவியல் கோட்பாடுகள். அடையாளம் வெளியீடு.

பக்தவத்சல பாரதி. (1990). பண்பாட்டு மானிடவியல். மெய்யப்பன் பதிப்பகம்.

வித்தியானந்தன், சு. (2009). நாடகம் நாட்டாரியல் சிந்தனைகள். குமரன் புத்தக இல்லம்.

மௌனகுரு, சி. (2014). மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள். குமரன் புத்தக இல்லம்.

மௌனகுரு, சி. (1988). சடங்கிலிருந்து நாடகம் வரை. நாகலிங்கம் நூலாலயம்.

# போரிற்குப் பிறகு வரலாற்றை வாழ்தலும் வரைதலும்

இலங்கையில் ஆயுதப் போர் முடிவுக்கு வந்து 16 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், வடக்கு – கிழக்குச் சமூகத்தின் உண்மையான நிலையை ‘போருக்குப் பின் அமைதிக்கு முன்: வடக்குக் கிழக்கில் அறிவு, அதிகாரம், அன்றாட வாழ்க்கை’ எனும் இந்தத் தொடர் ஆராய்கிறது. ‘போர் முடிந்துவிட்டது’ என்ற மேலோட்டமான கொண்டாட்டங்களை நிராகரிக்கும் இத்தொடர், அங்கு இராணுவக் கட்டுப்பாடு, கண்காணிப்பு மற்றும் நில அபகரிப்பு போன்றவை இன்றும் ஒரு தொடர்ச்சியான நிர்வாக முறையாகவே நீடிப்பதாக வாதிடுகிறது. சமூகவியல், தொல்லியல், வரலாறு, மானிடவியல் எனப் பல துறைகளின் ஊடாக, மக்களின் அன்றாட வாழ்வில் அதிகாரம் எவ்வாறு ஊடுருவியுள்ளது என்பதை இது வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை முன்னிறுத்தி, முறையான அரசியல் தீர்வில்லாத இந்த நிலையை ‘முழுமையடையாத இறையாண்மை’ என வரையறுக்கிறது. போருக்குப் பிந்தைய நீதி மற்றும் நல்லிணக்கம் குறித்த ஒரு புதிய முன்னோக்கை வெளிப்படுத்துவதாக இத்தொடர் அமையும்.

1




## மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

## தொடக்கக் குறிப்புகள்

துப்பாக்கிகள் ஓய்ந்தவுடன் போர்கள் முடிவதில்லை. அவை நினைவுகள், மௌனம், சடங்குகள், அதிகாரத்துவம், நிலப்பரப்பு, மொழி ஆகியவற்றின் வழியே நீடிக்கின்றன. சேதமடைந்த வீடுகள், காணாமல் போன ஆவணங்கள், மாற்றப்பட்ட கடற்கரைகள், தணிக்கை செய்யப்பட்ட நினைவுகூரல்கள் ஆகியவற்றில் அவை உயிர் வாழ்கின்றன. மக்கள் நினைவில் வைத்திருப்பவற்றிலும், அவர்கள் கூற மறுப்பவற்றிலும், அரசுகள் மறக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துபவற்றிலும் அவை தொடர்கின்றன. போருக்குப் பிந்தைய சமூகங்களில், வரலாறு மீதான போராட்டம், நிலப்பரப்பிற்கான போராட்டத்தைப் போலவே அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறுகிறது. இலங்கையின் 2009க்குப் பிந்தைய நிலை இதைத் தீவிரத்துடன் விளக்குகிறது. உள்நாட்டுப் போரின் முடிவானது, ஒரு நிலைபெற்ற வரலாற்றுப் புனைவையோ அல்லது கடந்த காலத்தைப் பற்றிய ஒருமித்த புரிதலையோ உருவாக்கவில்லை. மாறாக, அது பிளவுபட்ட, ஆழமாகப் போட்டியிடப்பட்ட ஒரு வரலாற்று நிலப்பரப்பை உருவாக்கியது. அதில் போட்டியிடும் தரப்பினர், போர் என்றால் என்ன, அதன் பொருள் என்ன, யார் துன்பப்பட்டார்கள், யார் தியாகம் செய்தார்கள், அதன் பின்விளைவுகளிலிருந்து எத்தகைய எதிர்காலம் சட்டபூர்வமாக உருவாக முடியும் என்பவற்றை வரையறுக்க முயல்கின்றனர்.

போருக்குப் பிந்தைய இலங்கையின் வரலாறு என்பது வெறும் பின்னோக்கிய பார்வை மட்டுமல்ல என்ற கருத்திலிருந்து இந்தக் கட்டுரை தொடங்குகிறது. அது போரின் போது நடந்தவற்றை ஆவணப்படுத்துவது மட்டுமல்ல; மாறாக, ஆளுகையினதும் அரசியல் போராட்டத்தினதும் ஒரு செயலூக்கமான களமாகவும் உள்ளது. அதன் வழியாக சட்டபூர்வத்தன்மை, இறையாண்மை, பாதிக்கப்பட்ட நிலை, சொந்தம் என்ற உணர்வு ஆகியவை தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படுகின்றன. பாதுகாப்பு நிறுவனங்கள் அல்லது சீரற்ற வளர்ச்சி ஆகியவற்றின் மூலம் மட்டுமல்ல, நினைவுகளின் மேலாண்மையின் மூலமாகவே போர் நிலைத்திருக்கிறது. உத்தியோகபூர்வ விவரிப்புகள், பொது நினைவுகூரல்கள், ஆவணக்காப்பகங்கள், நினைவுச்சின்னங்கள், பள்ளிப் பாடத்திட்டங்கள், சட்டப் பிரிவுகள், குடும்பக் கதைகள், மௌனங்கள் ஆகிய அனைத்தும், போர் எவ்வாறு அறியப்படுகிறது என்பதையும், போருக்குப் பிந்தைய தேசம் எவ்வாறு கற்பனை செய்யப்படுகிறது என்பதையும் வடிவமைப்பதில் பங்கேற்கின்றன.

எனவே, ஒரு பேரழிவிற்குப் பிறகு வரலாற்றை எழுதுவது என்பது நிகழ்வுகளை மீண்டும் கட்டமைப்பது மட்டுமல்ல. அது, கடந்த காலத்தை விவரிக்கும் அதிகாரமே அரசியல் ரீதியாகச் சார்புடையதாக இருக்கும் ஒரு சர்ச்சைக்குரிய களத்தில் நுழைவதாகும். இலங்கையில், இந்தக் களம் ஆழ்ந்த சமச்சீரற்ற தன்மைகளால் குறிக்கப்படுகிறது. உத்தியோகபூர்வ ஆவணக்காப்பகங்கள், கல்வி அமைப்புகள், ஊடக விவரிப்புகள், தேசிய நினைவுகூரல் நடைமுறைகள் ஆகியவற்றின் மீது அரசு நிறுவன ரீதியான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில், தமிழ்ச் சமூகங்கள், முன்னாள் போராளிகள், உயிர்பிழைத்தவர்கள், காணாமல் போனவர்களின் குடும்பங்கள், அதிகாரபூர்வ அங்கீகாரத்திற்கு அப்பாற்பட்டு, துண்டுதுண்டான மற்றும் பெரும்பாலும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய மாற்று வரலாறுகளைத் தக்கவைத்துக் கொள்கின்றன. இந்த வரலாறுகள், கண்காணிப்பு மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மையின் கீழ் அடிக்கடி நிலையற்றதாக இருக்கும் தனிப்பட்ட ஆவணக்காப்பகங்கள், கிசுகிசுக்கப்படும் கதைகள், சடங்கு ரீதியான துக்க அனுசரிப்புகள், புகைப்படங்கள், சாட்சியங்கள், நினைவுப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் மூலம் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.



Image Source - bbc.com

போருக்குப் பிந்தைய அரசு, வெற்றி, தேசிய ஒற்றுமை, பயங்கரவாதத்திலிருந்து விடுதலை ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு மேலாதிக்கக் கதையை வலுப்படுத்த முயன்றுள்ளது. இந்தக் கட்டமைப்பிற்குள், அமைதியையும் பிராந்திய ஒருமைப்பாட்டையும் மீட்டெடுத்த ஒரு மனிதாபிமான நடவடிக்கையாகப் போர் சித்தரிக்கப்படுகிறது. இராணுவம் இறையாண்மையினதும் மனிதாபிமானத்தினதும் நாகரிகத்தினதும் பாதுகாவலராகப் போற்றப்படுகிறது. புனரமைப்பு, உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை

நல்லிணக்கத்திற்கும் முன்னேற்றத்திற்குமான சான்றுகளாக முன்வைக்கப்படுகின்றன. இந்த அதிகாரபூர்வக் கதையில், போர் முடிந்துவிட்டது, தேசம் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டுவிட்டது, மேலும் வரலாறு நிலைத்தன்மை அடைந்து வளர்ச்சியை நோக்கி முன்னேறுகிறது. ஆயினும், வடக்கிலும் கிழக்கிலும், போரின் முடிவின் பொருள் வேறுவிதமாக உணரப்படுகிறது. பல தமிழ் குடிமக்களுக்கு, மே 2009 ஒரு முடிவைக் குறிக்கவில்லை, மாறாக ஒரு பேரழிவையே குறிக்கிறது. போரின் இறுதிக் கட்டங்கள், பெருமளவிலான பொதுமக்களின் இறப்பு, இடப்பெயர்வு, காணாமல் போதல், இராணுவமயமாக்கல், தீர்க்கப்படாத துக்கம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகவே இருக்கின்றன.

போருக்குப் பிந்தைய காலம், வன்முறையிலிருந்து ஒரு முழுமையான முறிவைக் குறிப்பதற்குப் பதிலாக, கண்காணிப்பு, இடஞ்சார்ந்த ஒழுங்குமுறை, அதிகாரத்துவப் புறக்கணிப்பு, நினைவுக் கட்டுப்பாடு போன்ற பிற வழிகளில் போரின் தொடர்ச்சியாகவே பெரும்பாலும் உணரப்படுகிறது. எனவே, அரசால் கற்பனை செய்யப்பட்ட வரலாற்றுப் பிளவு என்பது அனைவராலும் பகிரப்படுவதில்லை. வெவ்வேறு சமூகங்கள் வெவ்வேறு வரலாற்று காலங்களில் வாழ்கின்றன. முள்ளிவாய்க்காலில், உயிர் பிழைத்த ஒருவர் இதை இவ்வாறு வெளிப்படுத்தினார்: “வெளியில் உள்ளவர்கள் போர் முடிந்துவிட்டது என்கிறார்கள். ஆனால் இங்குள்ள பல குடும்பங்களுக்கு, அது அவர்களுக்குள் இன்னும் முடிவடையவில்லை.”



Image Source - bbc.com

அதிகாரபூர்வ முடிவுக்கும், வாழ்ந்து தொடரும் நிலைக்கும் இடையிலான இந்த வேறுபாடு, போருக்குப் பிந்தைய வரலாற்று உணர்வைப் புரிந்துகொள்வதற்கு மையமானது. போரின் “பின்” என்பது ஒரே மாதிரியாக அனுபவிக்கப்படுவதில்லை. சிலருக்கு, வரலாறு இயல்புநிலையை நோக்கி நகர்கிறது. மற்றவர்களுக்கு, அது தீர்க்கப்படாத துக்கத்திலும் நிச்சயமற்ற தன்மையிலும் இடைநிறுத்தப்பட்டு நிற்கிறது. எனவே, வரலாறு மீதான போராட்டம் என்பது காலம் மீதான போராட்டமும் ஆகும். கடந்த காலத்தை மூடிவிட முடியுமா, துக்கத்தை நிறைவு செய்ய முடியுமா, அரசியல் வன்முறையை ஒரு நிலையான தேசிய விவரிப்பாக மாற்ற முடியுமா என்பது குறித்த போராட்டமாகவே அது நிலைபெற முயல்கிறது.

போருக்குப் பிந்தைய இலங்கை, ஆவணக்காப்பகச் சமச்சீரின்மை என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றால் வகைப்படுத்தப்படுகிறது. ஆவணக்காப்பகங்கள் உண்மைகளின் நடுநிலையான களஞ்சியங்கள் அல்ல. அவை, எது வரலாற்று ரீதியாகத் தெரியும், எது விளிம்புநிலையில் இருக்கும் அல்லது அழிக்கப்படும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தின் நிறுவனங்கள். அரச ஆவணக்காப்பகம் நிலைத்தன்மை, நிறுவன அங்கீகாரம் மற்றும் பொதுத் தெரிவுநிலை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அது அருங்காட்சியகங்கள், நினைவிடங்கள், பாடப்புத்தகங்கள், உரைகள் மற்றும் சட்ட உரையாடல்கள் மூலம் நினைவுகளை ஒழுங்கமைக்கிறது. அது தேர்ந்தெடுக்கப்பட்ட விவரிப்புகளைத் தேசிய வரலாறாக உருமாற்றுகிறது.

இதற்கு மாறாக, பல ஈழத்தமிழரின் நினைவுகள் பலவீனமான, சிதறிய வடிவங்களில் நிலைத்திருக்கின்றன. குடும்பங்கள் காணாமல் போனவர்களின் புகைப்படங்களை இழுப்பறைகளிலும், நெகிழிப் பைகளிலும், மறைக்கப்பட்ட அலமாரிகளிலும் பாதுகாக்கின்றன. தாய்மார்கள் அரசாங்க அலுவலகங்களுக்கும் மனித உரிமை ஆணைக்குழுக்களுக்கும் பலமுறை சென்றதற்கான சான்றுகளைக் கொண்ட தேய்ந்த ஆவணங்களைச் சுமந்து செல்கின்றனர். முன்னாள் போர் வலயங்கள் முறையான அங்கீகாரம் இன்றி, அதிகாரபூர்வமற்ற நினைவு நிலப்பரப்புகளாக மாறுகின்றன. இந்த ஆவணக்காப்பகங்கள் நிறுவனமயமானவை அல்ல, மாறாக நெருக்கமானவை. பாதுகாக்கப்பட்டவை அல்ல, மாறாக எளிதில் பாதிக்கப்படக்கூடியவை. நினைவுகூர்தலே அரசியல் ரீதியாக உணர்திறன் மிக்கதாக மாறக்கூடிய சூழல்களில் அவை நிலவுகின்றன.

வவுனியாவில் ஒரு பெண், காணாமல் போன தன் மகன் தொடர்பான தான் வைத்திருக்கும் ஆவணங்களைப் பற்றி விவரித்தார்: “இந்தப் பேப்பர்கள்தான் என்னட்ட மிஞ்சிக்கிடக்கு. இதை நான் துலைச்சா, அவனை இன்னொருக்கா

தொலைச்சது போலதான்.” போருக்குப் பிந்தைய இலங்கையில் உள்ள ஆவணக்காப்பகங்கள் வெறும் அருவமான வரலாற்றுத் தொகுப்புகள் அல்ல. அவை உயிர்வாழ்தல், கண்ணியம், அங்கீகாரம் ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்ட ஆழ்ந்த உணர்வுபூர்வமான பொருள்கள் என்பதை அவரது கூற்று வெளிப்படுத்துகிறது. அந்த ஆவணக்காப்பகம் சான்றாகவும் துக்கமாகவும் மாறுகிறது. அதே நேரத்தில், போருக்குப் பிந்தைய வரலாற்று நிலப்பரப்பில் மௌனம் ஒரு மைய இடத்தைப் பிடித்துள்ளது. இங்கு மௌனத்தை நினைவின் அல்லது அறிவின் இல்லாமையாகப் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, அது சமூகத்தால் உருவாக்கப்பட்ட, அரசியல் ரீதியாக கட்டமைக்கப்பட்ட ஒரு நிலையாகும். மக்கள் தாங்கள் வெளிப்படையாகக் கூறாத வரலாறுகளை அறிந்திருக்கிறார்கள். குடும்பங்கள் சில நிகழ்வுகளைத் தங்களுக்கு நம்பிக்கையான வட்டங்களுக்குள் மட்டுமே விவாதிக்கின்றன. முன்னாள் போராளிகள் கடந்த காலத்தைப் பற்றிய பொது விவாதத்தைத் தவிர்க்கிறார்கள். வகுப்பறைகளில் போரைப் பற்றி எவ்வாறு பேசுவது என்பது குறித்த நிச்சயமற்ற தன்மையை ஆசிரியர்கள் கையாளுகிறார்கள். மௌனம் என்பது உயிர்வாழ்தல், எச்சரிக்கை மற்றும் சில சமயங்களில் சோர்வின் ஒரு முறையாக மாறுகிறது.

இந்த மௌனம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் அது வரலாற்றுப் பரிமாற்றத்தையே வடிவமைக்கிறது. இளைய தலைமுறையினர் பெரும்பாலும் துண்டு துண்டான வரலாறுகளைப் பெறுகிறார்கள். அதாவது, இடைநிறுத்தங்கள், விடுபடல்கள் மற்றும் பொதுவில் விவாதிக்கக் கூடாதவை பற்றிய எச்சரிக்கைகளால் குறுக்கிடப்பட்ட முழுமையற்ற கதைகள். யாழ்ப்பாணத்தில், ஒரு பல்கலைக்கழக மாணவர் இவ்வாறு குறிப்பிட்டார்: “நாங்கள் கதைகளின் துண்டுகளைக் கேட்டு வளர்ந்தோம், முழுமையான கதையை ஒருபோதும் கேட்டதில்லை. துண்டுகளிலிருந்து புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்கிறோம்.” இந்தப் பிளவு, போருக்குப் பிந்தைய ஒரு வரலாற்று உணர்வை உருவாக்குகிறது. அது தெளிவால் அல்ல, மாறாக இருபொருள்தன்மையாலும் முழுமையின்மையாலும் குறிக்கப்படுகிறது. வெளிப்படையான விவரிப்புகளின் மூலம் மட்டுமல்லாமல், குறிப்புகள், சைகைகள், உணர்ச்சிபூர்வமான சூழல்கள் மற்றும் மௌனங்கள் மூலமாகவும் போரின் நிச்சயமற்ற நிலை நிலைத்திருக்கிறது.

எனவே, இந்தக் கட்டுரை வரலாற்றை ஒரு நிலையான அறிவுத் தொகுப்பாக அணுகாமல், போட்டி நினைவுப் பழக்கவழக்கங்களின் ஒரு களமாக அணுகுகிறது. அதிகாரபூர்வ நினைவு, ஒத்திசைவு, முடிவு, சட்டபூர்வத்தன்மை ஆகியவற்றை நாடுகிறது. எதிர் நினைவு, பிளவு, இழப்பு மற்றும் தீர்க்கப்படாத வன்முறையைப் பாதுகாக்கிறது. சர்வதேச மனித உரிமைகள் ஆவணப்படுத்தல், சான்று, பொறுப்புக்கூறல், சட்ட அங்கீகாரம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட மற்றொரு ஆவணக்காப்பகத்தை அறிமுகப்படுத்துகிறது. புலம்பெயர் சமூகங்கள், டிஜிட்டல் ஊடகங்கள், நினைவு நிகழ்வுகள், அரசியல் செயல்பாடுகள் ஆகியன மூலம் பரவும் நாடுகடந்த நினைவு வடிவங்களை உருவாக்குகின்றன. இந்த வெவ்வேறு நினைவு அமைப்புகள் ஒன்றையொன்று இடைவெட்டுகின்றன, போட்டியிடுகின்றன, சில சமயங்களில் முரண்படுகின்றன.

முக்கியமாக, வரலாறு மீதான இந்தப் போட்டி, இறையாண்மை மற்றும் அரசியல் அதிகாரம் மீதான பரந்த போராட்டங்களிலிருந்து பிரிக்க முடியாதது. போரின் விவரிப்பைக் கட்டுப்படுத்துவது என்பது, நாட்டின் தார்மீகக் கட்டமைப்பையே வரையறுப்பதாகும். எனவே, போருக்குப் பிந்தைய இலங்கையின் வரலாறு என்பது கடந்த காலத்தைப் பற்றியது மட்டுமல்ல. அது அடிப்படையில் நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தைப் பற்றியது. அது குடியுரிமை, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், சொந்தம் என்ற உணர்விற்கான சாத்தியக்கூறுகள் ஆகியவற்றை வடிவமைக்கிறது.

சமமற்ற சமூக சீரமைப்பு, இறையாண்மையற்ற பிரதேசம் குறித்து முந்தைய கட்டுரைகளில் உருவாக்கப்பட்ட வாதங்களின் அடிப்படையில் இந்தக் கட்டுரை கட்டமைக்கப்பட்டுள்ளது. மீட்சியும் இடஞ்சார்ந்த சொந்தம் என்ற உணர்வும் சமமற்ற முறையில் விநியோகிக்கப்படுவதைப் போலவே, வரலாற்று அங்கீகாரமும் அவ்வாறே உள்ளது. சில வரலாறுகள் நிறுவனமயமாக்கப்பட்டு பொதுவெளியில் நினைவுகூரப்படுகின்றன. மற்றவை பாதிக்கப்படக்கூடியவையாகவும், சிதறடிக்கப்பட்டவையாகவும், நிலையற்றவையாகவும் இருக்கின்றன. வரலாற்றுப் பார்வை என்பதே ஒருவித அதிகாரமாக மாறுகிறது.

போட்டி விவரிப்புகள், ஆவணக் காப்பக மௌனங்கள் மற்றும் உத்தியோகபூர்வ நினைவு நடைமுறைகளை ஆராய்வதன் மூலம், போர் அதன் முறையான முடிவுக்குப் பிறகும் எவ்வாறு தொடர்ந்து மீண்டும் எழுதப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள இந்தக் கட்டுரை முயல்கிறது. போரின் போது என்ன நடந்தது என்பதை மட்டும் இது கேட்கவில்லை, மாறாக விவரிப்பு, ஆவணப்படுத்தல், நினைவுகூர்தல் ஆகியவற்றின் அரசியல் மூலம் போர் எவ்வாறு

தொடர்கிறது என்றும் கேட்கிறது. அவ்வாறு செய்வதன் மூலம், போருக்குப் பிந்தைய இலங்கை என்பது வன்முறையிலிருந்து மீண்டு வரும் ஒரு சமூகம் மட்டுமல்ல, மாறாக வன்முறையின் அர்த்தம் குறித்தே ஒரு தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒரு சமூகம் என்று அது வாதிடுகிறது.

பின்வரும் பிரிவுகள் இந்த இயக்கவியலை விரிவாக ஆராய்கின்றன. அடுத்த பிரிவு, போருக்குப் பிந்தைய கதையாடல் மீதான போராட்டத்தையும், போர் விளக்கப்பட்டு நினைவுகூரப்படும் போட்டிக் கட்டமைப்புகளையும் ஆராய்கிறது. அடுத்தடுத்த பிரிவுகள் உத்தியோகபூர்வ ஆவணக்காப்பகங்கள், அந்தரங்கமான மற்றும் துண்டுதுண்டான நினைவுப் பழக்கவழக்கங்கள், வரலாற்று வடிவமாக மௌனம், போரின் போட்டிக் காலங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆவணப்படுத்தலின் அரசியல் ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்கின்றன. இவை அனைத்தும் சேர்ந்து, போருக்குப் பிந்தைய இலங்கையில் வரலாறு முழுமையடையாததாகவும், நிலையற்றதாகவும், ஆழமாக சர்ச்சைக்குரியதாகவும் உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றன.

### போருக்குப் பிந்தைய கதையாடல் மீதான போராட்டம்

2009 மே மாதம் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தபோது, அந்தப் போர் என்னவாக இருந்தது அல்லது அதன் முடிவின் அர்த்தம் என்ன என்பது குறித்த ஒரு பொதுவான புரிதல் ஏற்படவில்லை. மாறாக, போருக்குப் பிந்தைய காலகட்டம், கதையாடல் அதிகாரம் மீதான ஒரு தீவிரமான போராட்டத்தைத் தொடங்கி வைத்தது. வன்முறை, தியாகம், இறையாண்மை, பாதிக்கப்பட்ட நிலை, தேசிய பிணைப்பு ஆகியவற்றின் அர்த்தத்தை வரையறுக்கும் உரிமை யாருக்கு உண்டு என்பது குறித்த ஒரு போட்டி அது. வரலாற்றாசிரியர்கள் அல்லது அரசியல் உயரடுக்கினருக்குள் மட்டும் அடங்கிவிடாமல், இந்தப் போராட்டம் அன்றாட வாழ்வில் ஊடுருவி, பொதுச் சடங்குகள், பாடசாலைப் பாடத்திட்டங்கள், ஊடக உரையாடல்கள், நினைவு அனுசரிப்புகள் ஆகியவற்றை மட்டுமன்றி நெருக்கமான குடும்ப உரையாடல்களைக் கூட வடிவமைக்கிறது. அந்தப் போர் வெறுமனே போட்டி நிறைந்த நினைவுகளை மட்டும் விட்டுச் செல்லவில்லை. அது போட்டி நிறைந்த தார்மீக உலகங்களையும் உருவாக்கியது.

2009 இனைத் தொடர்ந்து வந்த ஆண்டுகளில், இலங்கை அரசு ஒரு மேலாதிக்கக் கதையாடல் கட்டமைப்பை நிறுவுவதில் தீர்க்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதிகாரபூர்வ உரையாடல்கள் விடுதலை, மனிதாபிமான மீட்பு, தேசிய ஒன்றிணைப்பு, பயங்கரவாதத்தின் தோல்வி ஆகிய கருப்பொருள்களை வலியுறுத்தின. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியானது, ஒரு உத்திசார் வெற்றியாக மட்டுமல்லாமல், பல தசாப்த கால வன்முறைக்குப் பிறகு நாட்டைப் பிளவுபடுவதிலிருந்து காப்பாற்றி அமைதியை மீட்டெடுத்த ஒரு நாகரிகச் சாதனையாகவும் சித்தரிக்கப்பட்டது. அரச விழாக்கள், இராணுவ நினைவுக் கொண்டாட்டங்கள், தொலைக்காட்சி ஆவணப்படங்கள், அரசியல் உரைகள் இந்தக் கதையாடலை மீண்டும் மீண்டும் வலுப்படுத்தின. பொதுமக்களைப் பாதுகாக்கவும் இறையாண்மையைப் பேணவும் மேற்கொள்ளப்பட்ட, அவசியமான, தார்மீக ரீதியாக நியாயப்படுத்தப்பட்ட ஒரு போராக அது சித்தரிக்கப்பட்டது. இராணுவ வீரர்கள், அவர்களின் தியாகங்களால் அமைதியையும் வளர்ச்சியையும் சாத்தியமாக்கிய தேசிய நாயகர்களாகப் போற்றப்பட்டனர். வடக்குக் கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட வீதிகள், பாலங்கள், இரயில் பாதைகள், பொதுக் கட்டடங்கள் போன்ற புனரமைப்புத் திட்டங்கள், முன்னர் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசு முன்னேற்றத்தைக் கொண்டு வந்துள்ளது என்பதற்கான சான்றுகளாகக் காட்சிப்படுத்தப்பட்டன.

இந்தக் கதையாடல் கட்டமைப்பு ஒரே நேரத்தில் பல அரசியல் செயல்பாடுகளைச் செய்தது. முதலாவதாக, அது இராணுவ வெற்றியைப் போருக்குப் பிந்தைய அரசின் தார்மீக அடித்தளமாக மாற்றியது. இரண்டாவதாக, தேசிய ஒற்றுமையின் ஒரே முறையான உத்தரவாதமாக அரசை அது நிலைநிறுத்தியது. மூன்றாவதாக, அது போரைப் பற்றிய மாற்று விளக்கங்களை பிரிவினைவாதம், தீவிரவாதம் அல்லது தேசத்துரோகம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தி, அவற்றின் நம்பகத்தன்மையைச் சிதைத்தது. கொழும்பில் ஓர் அரசாங்க அதிகாரி இந்த நிலைப்பாட்டைச் சுருக்கமாக இவ்வாறு கூறினார்: "பயங்கரவாதத்தால் நாடு முப்பது ஆண்டுகளாகத் துன்புற்றது. இராணுவம் மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து, அமைதிக்கான சூழலை உருவாக்கியது. அதுதான் மைய உண்மை." "மைய உண்மை" என்ற சொற்றொடர் முக்கியமானது. போருக்குப் பிந்தைய வரலாற்றுப் பேச்சு வெறும் விவரிப்பு மட்டுமல்ல. அது நெறிமுறை சார்ந்தது என்பதை அது வெளிப்படுத்துகிறது. அது ஏற்றுக்கொள்ளக்கூடிய பொது நினைவின் எல்லைகளை நிறுவுகிறது. ஆயினும், வடக்கிலும் கிழக்கிலும், இந்த உத்தியோகபூர்வமான விவரிப்பு, போரினதும் அதன் பின்விளைவுகளினதும் முற்றிலும் மாறுபட்ட அனுபவங்களுடன் அடிக்கடி

மோதுகிறது. பல தமிழர்களிடையே, போர் முதன்மையாக விடுதலை அல்லது தேசிய மீட்சி என்ற கண்ணோட்டத்தில் நினைவுகூரப்படவில்லை, மாறாக இடப்பெயர்வு, அச்சம், இழப்பு, இராணுவமயமாக்கல் மற்றும் தீர்க்கப்படாத துக்கம் ஆகியவற்றின் வழியாகவே நினைவுகூரப்படுகிறது. குறிப்பாக மோதலின் இறுதி மாதங்கள், அளவற்ற பொதுமக்களின் துன்பத்துடனும் பேரழிவுடனும் தொடர்புடையதாகவே இருக்கின்றன.

முல்லைத்தீவில், ஓர் ஆசிரியர் விளக்கினார்: "அரசியல்வாதிகள் வெற்றியைப் பற்றிப் பேசும்போது, நாங்கள் வாழ்ந்த போரிலிருந்து வேறுபட்ட ஒரு போரைப் பற்றி அவர்கள் பேசுவது போல் உணர்கிறோம்." இந்தக் கூற்று, போருக்குப் பிந்தைய இலங்கையின் வரையறுக்கும் பண்புகளில் ஒன்றான, இணை வரலாற்று யதார்த்தங்களின் இருப்பைப் பிரதிபலிக்கிறது. ஒரே நிகழ்வுகள் முற்றிலும் மாறுபட்ட தார்மீக, உணர்ச்சிபூர்வமான கட்டமைப்புகள் மூலம் விளக்கப்படுகின்றன. அரசைப் பொறுத்தவரை, மே 2009 என்பது இறையாண்மையின் மீள்நிறுத்தம், பயங்கரவாதத்தின் தோல்வி, அமைதியினதும் அபிலாஷையினதும் தொடக்கம் ஆகியவற்றைக் குறிக்கிறது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரையில் அது பெருமளவிலான பொதுமக்கள் மரணம், இடப்பெயர்வும் இழப்பும், அரசியல் அபிலாஷைகளின் சரிவு, பெருமளவில் இராணுவமயமாக்கப்பட்ட போருக்குப் பிந்தைய ஒழுங்கின் தொடக்கம் ஆகியவற்றைக் குறிக்கிறது. இவை வரலாற்றைப் பற்றிய வெறும் முரண்பட்ட கருத்துகள் அல்ல. அவை சட்டபூர்வத்தன்மை என்பதைப் புரிந்துகொள்வதற்கான போட்டிக் கட்டமைப்புகளாகும்.

பொது நினைவுகூர்தல்களின் போது, கதையாடல் மீதான இந்த முரண்பாடு குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. அரசால் வழிநடத்தப்படும் வெற்றி நாள் கொண்டாட்டங்கள், இராணுவ வீரம், தேசபக்தி ஒற்றுமை, தேசத்திற்கான தியாகம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. இராணுவ அணிவகுப்புகள், உரைகள் மற்றும் நினைவு நிகழ்வுகள், போர் மீட்பிலும் ஸ்திரத்தன்மையிலும் முடிவடைகிறது என்ற ஒரு வெற்றிவாதக் கதையாடலை மீண்டும் உருவாக்குகின்றன. அதே நேரத்தில், தமிழரின் நினைவுகூர்தல் நடைமுறைகள் பெரும்பாலும் துக்கம், பிரிவு, இறந்தவர்களை நினைவுகூர்தல் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளன. இந்த நடைமுறைகள் துக்கம், அரசியல் எச்சரிக்கை ஆகிய இரண்டாலும் வடிவமைக்கப்படுகின்றன. வடக்கிலும் கிழக்கிலும் பொது நினைவுகூர்தல், குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் அல்லது போர்க்கால பொதுமக்களின் உயிரிழப்புகள் தொடர்பான நினைவுகூர்தல் விஷயத்தில், வரலாற்று ரீதியாகக் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில், ஒரு பல்கலைக்கழக மாணவர் நினைவுகூர்தல் நிகழ்வுகளைச் சுற்றியுள்ள சூழல் குறித்து இவ்வாறு குறிப்பிட்டார்: "தெற்கில், அவர்கள் போரின் முடிவைக் கொண்டாடுகிறார்கள். இங்கே, மக்கள் இறந்தவர்களை அமைதியாக நினைவுகூர்கிறார்கள்." கொண்டாட்டத்திற்கும் அமைதியான நினைவுகூர்தலுக்கும் இடையிலான இந்த வேறுபாடு, வரலாற்றுக் கதையாடல்கள் இடரீதியாக எவ்வாறு வேறுபடுத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. நாட்டின் வெவ்வேறு பகுதிகள், போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் வெவ்வேறு உணர்வுபூர்வமான புவியியல்களைக் கொண்டுள்ளன. முக்கியமாக, கதையாடல் மீதான போராட்டம் அரசுக்கும் தமிழ் குடிமக்களுக்கும் இடையே மட்டுமல்ல, அது தமிழ்ச் சமூகங்களுக்குள்ளும் நிலவுகிறது. முன்னாள் போராளிகள், குடிமைச் சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர்கள், புலம்பெயர் குழுக்கள் மற்றும் இளைய தலைமுறையினர், போரைப் பற்றியும் அதன் மரபு குறித்தும் பெரும்பாலும் மாறுபட்ட புரிதல்களைக் கொண்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு மாற்றான இயக்கங்களின் சில முன்னாள் ஆதரவாளர்களுக்கு, இந்தப் போர் அரசியல் இலட்சியம், கூட்டுத் தியாகம் மற்றும் அரசுக்கு எதிரான எதிர்ப்பு ஆகிய கதையாடல்களுடன் இன்னும் பிணைக்கப்பட்டுள்ளது. மற்றவர்களோ, விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குள் இருந்த சர்வாதிகாரம், கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் நீடித்த இராணுவமயமாக்கலின் பேரழிவுகரமான விளைவுகள் ஆகியவற்றை வலியுறுத்தி, தங்கள் ஏமாற்றத்தை வெளிப்படுத்துகின்றனர். வன்னியில் வசிக்கும் ஒரு முன்னாள் மாற்று இயக்க உறுப்பினர் விளக்கினார்: "ஒரு காலத்தில், இந்தப் போராட்டம் கண்ணியத்தையும் சுய ஆட்சியையும் கொண்டு வரும் என்று பலர் நம்பினர். ஆனால் போர் பல உயிர்களையும் அழித்தது. இரண்டுமே உண்மைதான்." இந்த இருநிலைத்தன்மை, தமிழ் நினைவுகளை ஒருங்கிணைந்த அல்லது ஒத்திசைவானவை என எளிமையாகச் சித்தரிப்பதைச் சிக்கலாக்குகிறது. போரின் நினைவுகள் சமூகங்களுக்கு இடையில் மட்டுமல்ல, அவற்றுக்குள்ளும் பிளவுபட்டுள்ளன.

புலம்பெயர் சமூகங்கள் இந்த விவரிப்புக் களத்திற்கு மற்றொரு அடுக்கை அறிமுகப்படுத்துகின்றன. இலண்டன், டொராண்டோ, ஒஸ்லோ உள்ளிட்ட பிற இடங்களில், இலங்கையில் போருக்குப் பிந்தைய சூழலில் வாழும் குடிமக்கள் வெளிப்படுத்தும் தேசியவாதக் கண்ணோட்டங்களை விட, புலம்பெயர்

சமூகங்களின் நினைவுப் பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் மோதலைப் பற்றிய வலுவான கண்ணோட்டங்களைப் பாதுகாக்கின்றன. டிஜிட்டல் ஊடகங்கள், படங்கள், உரைகள், தியாகிகளின் கதைகள், நினைவு உள்ளடக்கங்களை நாடுகடந்த வலைப்பின்னல்களில் பரப்பி, புவியியல் ரீதியாகப் பரவியிருந்தாலும் உணர்ச்சி ரீதியாகத் தீவிரமான வரலாற்று உணர்வு வடிவங்களைத் தக்கவைக்கின்றன.

இது குறித்து ஒரு வன்னிக் குடிமகன் என்னிடம் சொன்னார்: "வெளிநாடுகளில் உள்ள மக்கள் போராட்டத்தைப் பற்றி வேறுவிதமாகப் பேசுகிறார்கள். இங்கே, மக்கள் மிகவும் கவனமாக இருக்கிறார்கள், ஏனென்றால் நாங்கள் ஒவ்வொரு நாளும் அதன் விளைவுகளுடன் வாழ்கிறோம்." ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளால் தயாரிக்கப்படும் அறிக்கைகள், பொதுமக்களின் உயிரிழப்புகள், காணாமல் போதல், தடுப்புக்காவல், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மீதான குண்டுவீச்சு மற்றும் கூறப்படும் போர்க்குற்றங்கள் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகின்றன. இந்த விவரிப்புகள், பொறுப்புக்கூறல், சான்றுகள் மற்றும் உரிமை மீறல்களை மையமாகக் கொண்ட சட்ட மற்றும் மனிதாபிமானக் கட்டமைப்புகளின் மூலம் உருவாக்கப்படுகின்றன.

பல உயிர் பிழைத்தவர்களுக்கு, இத்தகைய ஆவணங்கள் உள்நாட்டு நிறுவனங்களில் இல்லாத அங்கீகாரத்தை வழங்குகின்றன. காணாமல் போன ஒருவரின் தாய் இவ்வாறு விளக்கினார்: "குறைந்தபட்சம், எங்களுக்கு என்ன நடந்தது என்பதை யாரோ ஒருவர் பதிவு செய்துள்ளார்." இருப்பினும், சர்வதேச விவரிப்புகளுக்கும் வரம்புகள் உள்ளன. அவை பெரும்பாலும், மோதலின் அரசியல், வரலாறு என்பவற்றின் சிக்கலான தன்மையை மழுங்கடிக்கக்கூடிய உலகளாவிய சட்டப் பிரிவுகளின் மூலம் துன்பத்தை வரையறுக்கின்றன. மேலும், அறிக்கைகளின் பரவல் என்பது நீதி, பொறுப்புக்கூறல் அல்லது களத்தில் பொருள்ரீதியான மாற்றமாக மாறும் என்று அவசியமில்லை.

கிளிநொச்சியில் ஒரு சமூக ஆர்வலர் இவ்வாறு குறிப்பிட்டார்: "பல அறிக்கைகள், பல விசாரணைகள், பல கூட்டங்கள் உள்ளன. ஆனால் இங்கு அன்றாட வாழ்க்கை எளிதில் மாறுவதில்லை." ஆவணப்படுத்துதலுக்கும் உருமாற்றத்திற்கும் இடையிலான இந்த இடைவெளி, ஒரு பரந்த வரலாற்று இடைநிறுத்த உணர்விற்கு வழிவகுக்கிறது. போர் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலும், உள்நாட்டில் சர்ச்சைக்குரியதாக உள்ளது; பகிரங்கமாக ஆவணப்படுத்தப்பட்டிருந்தாலும், அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படாமல் உள்ளது. கதையாடல் மீதான இந்தப் போராட்டம், கல்வியின் மூலமும் தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுதல் மூலமும் வெளிப்படுகிறது. பாடசாலைப் பாடத்திட்டங்கள் பெரும்பாலும், இன மோதலின் கட்டமைப்பு சார்ந்த காரணங்களையோ அல்லது தமிழ் அரசியல் குறைகளின் சிக்கலான தன்மையையோ குறைத்து மதிப்பிடும் அதேவேளையில், பயங்கரவாதம், தேசிய ஒற்றுமை, இராணுவ வெற்றி ஆகியவற்றை வலியுறுத்தி, மோதலின் அரசை மையமாகக் கொண்ட வரலாறுகளையே மீண்டும் உருவாக்குகின்றன.

ஆசிரியர்கள் பெரும்பாலும் இந்தத் தலைப்புகளை எச்சரிக்கையுடன் கையாளுகிறார்கள். யாழ்ப்பாணத்தில், ஒரு வரலாற்று ஆசிரியர் விளக்கினார்: "பாடப்புத்தகங்களில் சில விஷயங்கள் உள்ளன, மாணவர்கள் வீட்டில் சில விஷயங்களைக் கேட்கிறார்கள். சில சமயங்களில் அவை பொருந்துவதில்லை." எனவே, மாணவர்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த மற்றும் சில சமயங்களில் முரண்பாடான வரலாற்று கட்டமைப்புகளுக்குள் வளர்கிறார்கள். அதிகாரபூர்வ விவரிப்புகள், குடும்ப நினைவுகள், சமூக ஊடக உரையாடல்கள், புலம்பெயர்ந்தோர் சித்தரிப்புகள், உள்ளூர் மௌனங்களும் வதந்திகளும் ஆகியன பன்மைத் தன்மையுடையனவாகவும் முரண்பட்டனவாகவும் உள்ளன. இந்தத் துண்டாடல், ஒரு சீரான வரலாற்றை ஒருமித்த கருத்தின் மூலம் அல்லாமல், முழுமையற்ற மற்றும் போட்டி நிறைந்த விவரிப்புகளின் மூலம் போரை மரபுரிமையாகப் பெறும் ஒரு தலைமுறையை உருவாக்குகிறது. ஒரு பல்கலைக்கழக மாணவர் இவ்வாறு சிந்தித்தார்: "நாம் வரலாற்றின் துண்டுகளை வெவ்வேறு மூலங்களிலிருந்து அறிந்துகொள்கிறோம். முழுமையான உண்மை என்ன என்பதை அறிவது கடினம்." இந்தச் சூழலில் "முழுமையான உண்மை" என்ற சொற்றொடரே நிலையற்றதாகிறது. போட்டி நிறைந்த விவரிப்புகள் வெறுமனே வெவ்வேறு உண்மைகளை முன்வைப்பதில்லை. அவை உண்மைகளை வெவ்வேறு தார்மீக உலகங்களுக்குள் ஒழுங்கமைக்கின்றன.

இந்த நிலையற்ற தன்மை அச்சத்தாலும் சுய தணிக்கையாலும் தீவிரப்படுத்தப்படுகிறது. மௌனம் என்பது இல்லாமையாக அல்ல, மாறாக நிச்சயமற்ற அரசியல் களத்தில் வழிசெலுத்தும் ஒரு முறையாகச் செயல்படுகிறது. தனிப்பட்ட முறையில் என்ன

**போருக்குப் பிந்தைய இலங்கையில், வரலாறு குறித்த போராட்டம் பேச்சு, சாட்சியம் அல்லது பொது விவாதம் ஆகியவற்றின் மூலம் மட்டும் நடத்தப்படவில்லை. அது ஆவணக்காப்பகங்கள், அருங்காட்சியகங்கள், நினைவிடங்கள், பாடசாலைப் பாடத்திட்டங்கள், நினைவுச் சடங்குகள், அரசாங்க வெளியீடுகள் மற்றும் அரசால் கட்டுப்படுத்தப்படும் குறியீட்டு நிலப்பரப்புகள் ஆகியவற்றின் மூலம் நிறுவனமயமாக்கப்பட்டது. இந்த நிறுவன வடிவங்கள் நினைவைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், அதைத் தீவிரமாக ஒழுங்கமைத்து ஒழுங்குபடுத்துகின்றன.**

சொல்லலாம், பொதுவில் என்ன சொல்லலாம் என்பதற்கு இடையே மக்கள் பெரும்பாலும் வேறுபாடு காண்கிறார்கள். வடக்கைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் விளக்கினார்: “எல்லைகள் உண்டு என்பது அனைவருக்கும் தெரியும். கவனமாகப் பேசக் கற்றுக்கொள்கிறீர்கள்.” இந்தக் கவனமே வரலாற்று உரையாடலை வடிவமைக்கிறது. விவரிப்புகள் குறியீட்டு வடிவிலும், துண்டு துண்டாகவும், மறைமுகமாகவும் மாறுகின்றன. அதே நேரத்தில், மௌனம் சோர்வையும் பிரதிபலிக்கக்கூடும். சிலர், போர்க்கால அனுபவங்களை மீண்டும் நினைவுகூரத் தயக்கம் காட்டினர்; அது பயத்தினால் மட்டுமல்ல, உணர்ச்சி ரீதியான சோர்வின் காரணமாகவும் ஆகும். ஒருவர் இவ்வாறு கூறினார்: “இந்த விஷயங்களைப் பற்றி நாங்கள் பலமுறை பேசியுள்ளோம். சில நேரங்களில் மக்கள் உயிர் பிழைத்து, வாழ்க்கையில் முன்னேறிச் செல்லவே விரும்புகிறார்கள்.”

சாதாரண வாழ்க்கைக்கான இந்த விருப்பம், போருக்குப் பிந்தைய அனைத்து நினைவுகளும் அரசியல் அணிதிரட்டலை நோக்கியே அமைந்துள்ளன என்ற அனுமானங்களைச் சிக்கலாக்குகிறது. பலருக்கு, நினைவுகள் சோர்வு, நடைமுறைவாதம் மற்றும் அன்றாட உயிர்வாழ்வின் தேவைகளுடன் சேர்ந்தே இருக்கின்றன. எனவே, போருக்குப் பிந்தைய விவரிப்பு மீதான போராட்டத்தை, உண்மைக்கும் மறுப்புக்கும் இடையிலான ஓர் இருமைக்குள் சுருக்கிவிட முடியாது. அது பலதரப்பட்ட பங்களிப்பாளர்கள், காலங்கள், உணர்ச்சிப் பதிவுகள் மற்றும் அரசியல் திட்டங்களை உள்ளடக்கியது. நடந்தவை குறித்து மட்டுமல்லாமல், பின்வரும் விடயங்கள் குறித்தும் விவரிப்புகள் போட்டியிடுகின்றன:

எவ்வகையான துன்பங்கள் பொதுவெளியில் அங்கீகரிக்கப்படுகின்றன?

பேசுவதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது?

எந்த மரணங்களுக்காக வருந்த வேண்டும்?

எந்த அரசியல் அபிலாஷைகள் சட்டபூர்வமானவை?

போரை உண்மையிலேயே முடிந்துவிட்டதாகக் கருத முடியுமா?

இந்த அர்த்தத்தில், வரலாறு என்பது குறியீட்டு மற்றும் நிறுவன வழிமுறைகள் மூலம் மோதலின் தொடர்ச்சியாக மாறுகிறது. விவரிப்பு மீதான இந்தப் போராட்டம், போருக்குப் பிந்தைய இலங்கை வரலாற்றைக் கடந்து சென்ற ஒரு சமூகம் அல்ல, மாறாக அதற்குள் ஆழமாக மூழ்கிய ஒரு சமூகம் என்பதை இறுதியில் வெளிப்படுத்துகிறது. போட்டியிடும் விவரிப்புகள் கடந்த காலத்தின் எச்சங்கள் அல்ல அவை நிகழ்காலத்தில் ஆளுகை, அடையாளம், நினைவகம் மற்றும் அரசியல் சாத்தியக்கூறுகளை வடிவமைக்கும் செயலூக்கமுள்ள சக்திகளாகும்.

### உத்தியோகபூர்வ நினைவும் அரச ஆவணக்காப்பகமும்

போருக்குப் பிந்தைய இலங்கையில், வரலாறு குறித்த போராட்டம் பேச்சு, சாட்சியம் அல்லது பொது விவாதம் ஆகியவற்றின் மூலம் மட்டும் நடத்தப்படவில்லை. அது ஆவணக்காப்பகங்கள், அருங்காட்சியகங்கள், நினைவிடங்கள், பாடசாலைப் பாடத்திட்டங்கள், நினைவுச் சடங்குகள், அரசாங்க வெளியீடுகள் மற்றும் அரசால் கட்டுப்படுத்தப்படும் குறியீட்டு நிலப்பரப்புகள் ஆகியவற்றின் மூலம் நிறுவனமயமாக்கப்பட்டது. இந்த நிறுவன வடிவங்கள் நினைவைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், அதைத் தீவிரமாக ஒழுங்கமைத்து ஒழுங்குபடுத்துகின்றன. உத்தியோகபூர்வ நினைவு என்பது, போருக்குப் பிந்தைய அரசு தனது சட்டபூர்வத்தன்மையை உறுதிப்படுத்தவும், தேசிய அடையாளத்தை உருவாக்கவும், மோதல் குறித்த ஒரு குறிப்பிட்ட விளக்கத்தை நிலைப்படுத்தவும் உதவும் மைய வழிமுறைகளில் ஒன்றாகிறது. இந்த அர்த்தத்தில், ஆவணக்காப்பகம் என்பது உண்மைகளின் ஒரு செயலற்ற களஞ்சியம் அல்ல, மாறாக அது அரசியல் அதிகாரத்தின் ஒரு கருவியாகும்.

நவீன அரசு தனது வரலாற்றுத் தொடர்ச்சியையும் தார்மீக சட்டபூர்வத்தன்மையையும் நிலைநிறுத்த ஆவணக்காப்பகங்களைச் சார்ந்துள்ளது. எது வரலாற்று ரீதியாகக் காணக்கூடியதாகிறது, எது சான்றாக வகைப்படுத்தப்படுகிறது, எது அங்கீகரிக்கப்பட்ட தேசிய நினைவின் எல்லைக்குள் நுழைகிறது என்பதை ஆவணக்காப்பகங்களே தீர்மானிக்கின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையில், அரச ஆவணக்காப்பகங்களும் உத்தியோகபூர்வ நினைவு நடைமுறைகளும் பிராந்திய ஒற்றுமை, இராணுவத்தின் தியாகம், பயங்கரவாத எதிர்ப்பு, தேசிய மீட்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஓர் ஒத்திசைவான கதையை உருவாக்கப் பணியாற்றியுள்ளன. இந்தக் கதையாடலின் மூலம், போரானது ஒரு சிக்கலான அரசியல் மற்றும் வரலாற்று மோதலில் இருந்து, மீட்பு மற்றும் மறுசீரமைப்பின் தார்மீக ஒழுங்குடைய ஒரு கதையாக உருமாற்றப்படுகிறது.

போர் முடிவடைந்த பின்னர் அரசின் சொல்லாடல்களில் இந்தச் செயல்முறை தெளிவாகத் தெரிந்தது. அரசாங்க உரைகள், பொதுமக்களைப் பயங்கரவாதத்திலிருந்து காப்பாற்றுவதற்கும் தேசத்தை மீண்டும் ஒன்றிணைப்பதற்கும் நடத்தப்பட்ட ஒரு “மனிதாபிமான நடவடிக்கை” என்று இராணுவ நடவடிக்கையை மீண்டும் மீண்டும் சித்தரித்தன. பொது நினைவுகூரல்கள் வீரம், தேசபக்தி, தியாகம் ஆகியவற்றை வலியுறுத்தின. வடக்குக் கிழக்கில் உள்ள அபிவிருத்தித் திட்டங்கள், அரசின் கருணைமிக்க மறுசீரமைப்பிற்கான சான்றுகளாகக் காட்டப்பட்டன. இது, இராணுவ வெற்றியானது அமைதியையும் செழிப்பையும் உருவாக்கியுள்ளது என்ற கருத்தை வலுப்படுத்தியது. கொழும்பில் உள்ள ஓர் ஓய்வுபெற்ற அரசு ஊழியர் விளக்கினார்: “அதிகாரபூர்வ நிலைப்பாடு மிகவும் தெளிவாக உள்ளது. நாடு பிளவிலிருந்து காப்பாற்றப்பட்டது. தேசிய அளவில் போர் இப்படித்தான் நினைவுகூரப்படுகிறது.” இந்தத் தெளிவு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. அதிகாரபூர்வ நினைவகம் ஒருமைப்பாட்டை நாடுகிறது, ஏனெனில் ஒருமைப்பாடு இறையாண்மையை நிலைப்படுத்துகிறது. தெளிவின்மை, போருக்குப் பிந்தைய சட்டபூர்வத்தன்மை சார்ந்திருக்கும் தார்மீக உறுதியை அச்சுறுத்துகிறது.

அதிகாரபூர்வ நினைவகத்தின் உருவாக்கம் கதையாடல்கள் மூலம் மட்டுமல்ல, பொருள் மற்றும் நிறுவன வடிவங்கள் மூலமாகவும் நிகழ்கிறது. அருங்காட்சியகங்கள், நினைவுச்சின்னங்கள், இராணுவ நினைவிடங்கள், பொது விழாக்கள், போர் எவ்வாறு இடரீதியாகவும் உணர்வுபூர்வமாகவும் அனுபவிக்கப்படுகிறது என்பதை வடிவமைக்கின்றன. அவை நினைவுகூர்தலின் ஒரு படிநிலையை நிறுவுகின்றன. அதில் சில வகையான துன்பங்கள் உயர்த்தப்படுகின்றன, மற்றவை குறைக்கப்படுகின்றன, உள்வாங்கப்படுகின்றன அல்லது அழிக்கப்படுகின்றன. தெற்கில், போர் நினைவிடங்கள் பெரும்பாலும் வீரர்களை தேசத்தின் பாதுகாவலர்களாகச் சித்தரிக்கின்றன. இராணுவக் கல்லறைகளும் நினைவுச்சின்னங்களும் தியாகம் பகிரங்கமாகக் கௌரவிக்கப்படும் புனிதமான தேசிய இடங்களாகப் பராமரிக்கப்படுகின்றன. ஆண்டுதோறும் நடைபெறும் வெற்றி நாள் நினைவுகூரல்கள், இராணுவ அணிவகுப்புகள், உரைகள் மற்றும் தேசபக்தி நிகழ்ச்சிகள் மூலம் இந்த அடையாளபூர்வ ஒழுங்கை வலுப்படுத்துகின்றன. போர், தேசிய மீட்பின் ஒரு கதைக்குள் பொதிந்துவிடுகிறது. இதற்கு மாறாக, ஈழத்தமிழரின் துயரங்கள் அதிகாரபூர்வ நினைவுகளில் மிகவும் நிச்சயமற்ற ஒரு நிலையை வகிக்கின்றன. அது மனிதாபிமான அடிப்படையில் அங்கீகரிக்கப்படலாம், ஆனால் அரசு வன்முறை, இடப்பெயர்வு அல்லது சர்ச்சைக்குரிய இறையாண்மை ஆகியவற்றின் பரந்த அரசியல் வரலாற்றின் ஒரு பகுதியாக அரிதாகவே கருதப்படுகிறது. பொதுமக்கள் உயிரிழப்புகள் பெரும்பாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் சோகமான ஆனால் தவிர்க்க முடியாத விளைவுகளாகவே சித்தரிக்கப்படுகின்றன. இன ரீதியான ஓரங்கட்டல், போர்க்காலப் பொறுப்புக்கூறல் அல்லது இராணுவமயமாக்கல் தொடர்பான கட்டமைப்பு சார்ந்த கேள்விகள், அரசை மையமாகக் கொண்ட விவரிப்புகளில் பெரும்பாலும் இடம்பெறுவதில்லை. இந்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட பார்வை, ஆவணக்காப்பக உள்ளடக்கத்தின் அரசியல் என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றைப் பிரதிபலிக்கிறது. ஆவணக் காப்பகங்களும் அதிகாரபூர்வ நினைவு நடைமுறைகளும் வெறுமனே தகவல்களைச் சேமிப்பதில்லை. வரலாற்று ரீதியாக முறையான துயரமாகக் கருதப்படுவது எது என்பதை அவையே தீர்மானிக்கின்றன.

அரசால் நிதியுதவி செய்யப்படும் அருங்காட்சியகங்களிலும் இராணுவக் கண்காட்சிகளிலும் இந்தச் சமச்சீரற்ற தன்மை குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. வடக்கிலுள்ள ஒரு இராணுவ அருங்காட்சியகத்தில், கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள், சீருடைகள், தகவல் தொடர்பு சாதனங்கள், இராணுவ நடவடிக்கைகளின் புகைப்படங்கள் ஆகியவை முக்கியமாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய மீட்பு, இராணுவ வீரம், தொழில்நுட்ப வெற்றி

ஆகியவற்றை வலியுறுத்தும் கண்காட்சிகள் வழியாகப் பார்வையாளர்கள் வழிநடத்தப்படுகிறார்கள். தமிழ் பொதுமக்கள், அரசியல் அதிகாரம் கொண்ட அல்லது வன்முறையின் சிக்கலான அனுபவங்களைக் கொண்ட வரலாற்றுப் பாத்திரங்களாகக் காட்டப்படாமல், பயங்கரவாதத்திலிருந்து மீட்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களாகவே பெரும்பாலும் சித்தரிக்கப்படுகிறார்கள். அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட ஒரு தமிழ்ப் பாடசாலை ஆசிரியை தனது கருத்தை இவ்வாறு விவரித்தார்: "கண்காட்சி வழியாக நடந்து செல்லும்போது, எங்களைப் போன்றவர்கள் அதில் இடம்பெறாமலேயே முழுப் போரும் விளக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் உணர்வீர்கள்." அவரது கூற்று, ஆவணக்காப்பகப் புறக்கணிப்பின் வன்முறையைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. அழித்தொழிப்பு என்பது எப்போதும் மறுப்பின் மூலம் நிகழ்வதில்லை. அது பெரும்பாலும் தனிநபர்களதும் சமூகங்களினதும் அரசியல் குரலைப் பறிக்கும் விவரிப்புகளில் உள்ளடக்கப்படுவதன் மூலமே நிகழ்கிறது.

இந்த அருங்காட்சியகம், போரின் அரசை மையமாகக் கொண்ட ஒரு தார்மீகப் புவியியலைக் கட்டமைக்கிறது, அதில் இராணுவம் தியாகத்தையும் சட்டபூர்வமான தன்மையையும் உருவகப்படுத்துகிறது, அரசு பாதுகாப்பையும் ஒழுங்கையும் பிரதிபலிக்கிறது, பொதுமக்கள் முதன்மையாக மீட்புப் பணிகளைப் பெறும் செயலற்றவர்களாக நிலைநிறுத்தப்படுகிறார்கள், தமிழ் அரசியல் வரலாறுகள் பயங்கரவாதத்தில் சுருக்கப்படுகின்றன. இந்தத் தார்மீக ஒழுங்குமுறை, மோதலின் சிக்கலான தன்மையை எளிதாக்கி, ஒரு தனித்துவமான தேசிய கதையை நிலைப்படுத்துகிறது.

பாடசாலைப் பாடத்திட்டங்கள் இந்தக் கதைக்கட்டமைப்பை மேலும் நிறுவனமயமாக்குகின்றன. வரலாற்றுப் பாடப்புத்தகங்கள் பொதுவாக பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தேசியப் பாதுகாப்பு ஆகிய கருப்பொருள்கள் மூலம் மோதலைச் சித்தரிக்கின்றன. அதே நேரத்தில் இலங்கையில் இன மோதலின் ஆழமான அரசியல், மொழி மற்றும் வரலாற்று வேர்களைக் குறைத்து மதிப்பிடுகின்றன. போருக்குப் பிந்தைய தேசம், அரச இறையாண்மையின் கீழ் ஒன்றுபட்டதாகவும் நல்லிணக்கம் கொண்டதாகவும் சித்தரிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு தமிழ் வரலாற்று ஆசிரியர் இந்த முரண்பாடு குறித்து இவ்வாறு சிந்தித்தார்: "பாடத்திட்டத்தில் இருப்பதால் நாங்கள் சில விஷயங்களைக் கற்பிக்கிறோம்; மாணவர்கள் வீட்டில் வேறு சில விஷயங்களைக் கேட்கிறார்கள். சில சமயங்களில் இந்த இடைவெளி மிகவும் பெரியதாக இருக்கிறது."

அதிகாரபூர்வ வரலாற்றுக்கும் வாழ்ந்த நினைவுகளுக்கும் இடையிலான இந்த இடைவெளி, இளைய தலைமுறையினரிடையே ஒரு துண்டுபட்ட வரலாற்று உணர்வை உருவாக்குகிறது. மாணவர்கள் நிறுவன அமைப்புகளில் போரின் ஒரு பதிவைக் கற்கும் அதே வேளையில், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் வேறுபட்ட கதையாடல்களை எதிர்கொள்கின்றனர். சில ஆசிரியர்கள் சில தலைப்புகளை முற்றிலுமாகத் தவிர்ப்பதன் மூலம் இதைக் கவனமாகக் கையாளுகிறார்கள். மற்றவர்கள், அதிகாரபூர்வ விஷயங்களுடன் நேரடியாக முரண்படாமல், நுட்பமான விமர்சனப் பிரதிபலிப்பு வடிவங்களை அறிமுகப்படுத்துகிறார்கள். ஓர் ஆசிரியர் விளக்கினார்: "நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். பாடத்திட்டத்தை நீங்கள் வெளிப்படையாக எதிர்க்க முடியாது, ஆனால் சில விஷயங்கள் விடுபட்டுள்ளன என்பதை மாணவர்களும் அறிவார்கள்." அந்த "விடுபட்டவை" வரலாற்று முக்கியத்துவம் பெறுகின்றன. இல்லாமை என்பதே ஒரு கதையாடல் கட்டுப்பாடாகச் செயல்படுகிறது.

அதிகாரபூர்வ நினைவுகள் இடரீதியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. போருக்குப் பிந்தைய இலங்கையில் நினைவுகூர்தலின் புவியியல், யாருடைய இழப்புகளுக்காகப் பொதுவில் வருந்த வேண்டும் என்பதில் உள்ள கடுமையான சமச்சீரற்ற தன்மைகளை வெளிப்படுத்துகிறது. அரசால் ஆதரிக்கப்படும் நினைவுகூர்தல் நிகழ்வுகள் மிகவும் வெளிப்படையாகவும் நிறுவன ரீதியாகவும் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால், தமிழ் நினைவுகூர்தல் நடைமுறைகள் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்டவையாகவோ, தற்காலிகமானவையாகவோ அல்லது அரசியல் ரீதியாக நிலையற்றவையாகவோ இருக்கின்றன.

வடக்கில், பொதுமக்கள் உயிரிழப்புகள் அல்லது தமிழ்ப் போராளிகளின் நினைவுகூர்தல் தொடர்பான நிகழ்வுகள் வரலாற்று ரீதியாக கண்காணிப்பு, கட்டுப்பாடுகள் அல்லது தலையீடுகளை எதிர்கொண்டுள்ளன. நினைவாற்றல் என்பது இறையாண்மையுடனும் சட்டபூர்வத்தன்மையுடனும் பிணைக்கப்பட்டிருப்பதால், பொதுத்துக்க அனுசரிப்பே அரசியல்மயமாக்கப்படுகிறது. நினைவுக் காலங்களில் நிலவும் சூழலை ஒரு பல்கலைக்கழக மாணவர் இவ்வாறு விவரித்தார்: "மக்கள் கவனமாக நினைவுகூர்கிறார்கள். துக்கம் அனுசரிப்பது கூட அரசியல் சார்ந்ததாக உணரப்படலாம்." இந்தக் கவனமானது, இப்புத்தகம் முழுவதும் ஆராயப்படும் பரந்த நிலையைப் பிரதிபலிக்கிறது. போருக்குப்

பிந்தைய காலகட்டம், நிறுவனங்கள் மற்றும் வெளியின் மூலம் மட்டுமல்லாமல், உணர்ச்சிபூர்வமான மற்றும் குறியீட்டு ரீதியான ஒழுங்குமுறையின் மூலமும் நிர்வகிக்கப்படுகிறது. அரசின் ஆவணக்காப்பகமும் அதிகாரத்துவ வகைப்பாட்டின் மூலமே செயல்படுகிறது. "பயங்கரவாதி", "புனர்வாழ்வளிக்கப்பட்டவர்", "காணாமல் போனவர்", "போர் வீரர்" அல்லது "பொதுமக்கள் உயிரிழப்பு" போன்ற வகைப்பாடுகள், தனிநபர்கள் நிறுவன நினைவகத்தில் எவ்வாறு நுழைகிறார்கள் என்பதை வடிவமைக்கின்றன. இந்த வகைப்பாடுகள் அங்கீகாரத்தை மட்டுமல்ல, இழப்பீடு பெறுவதற்கான வாய்ப்பு, சட்டபூர்வமான தன்மை மற்றும் பொதுமக்களின் பார்வை ஆகியவற்றையும் தீர்மானிக்கின்றன.

காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன் பணியாற்றும் ஒரு சமூக ஆர்வலர் இவ்வாறு விளக்கினார்: "அரசு நிர்வகிக்கக்கூடிய வகைப்பாடுகளை விரும்புகிறது. ஆனால் பல அனுபவங்கள் அந்த வகைப்பாடுகளுக்குள் நேர்த்தியாகப் பொருந்தவில்லை." வாழ்ந்த அனுபவத்திற்கும் நிர்வாக வகைப்பாட்டிற்கும் இடையிலான இந்தப் பொருந்தாமை, அதிகாரத்துவ நினைவகத்தின் வரம்புகளை வெளிப்படுத்துகிறது. ஆவணக்காப்பகம் சிக்கலான தன்மையை நிர்வகிப்பதற்காக அதை எளிதாக்குகிறது. அதே நேரத்தில், அதிகாரபூர்வ நினைவகம் முற்றிலும் நிலையானதாகவோ அல்லது கேள்விக்குட்படுத்தப்படாததாகவோ இல்லை. இலங்கையில் உள்ள வெவ்வேறு அரசியல் நிர்வாகங்கள் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், நினைவுகூர்தல் தொடர்பான முக்கியத்துவத்தை மாற்றி வந்துள்ளன. சர்வதேச அழுத்தம், உள்நாட்டுச் செயல்பாடுகள் மற்றும் மாறிவரும் அரசியல் சூழல்கள் ஆகியவை போர்க்கால வன்முறை மற்றும் வரலாற்று அங்கீகாரம் குறித்த விவாதங்களை அவ்வப்போது மீண்டும் எழுப்புகின்றன. ஆயினும், இந்த மாற்றங்கள் அரசை மையமாகக் கொண்ட நினைவின் ஆழமான கட்டமைப்பை அரிதாகவே தகர்க்கின்றன. இராணுவ சட்டபூர்வத்தன்மை மற்றும் பிராந்திய மீட்புக் குறித்த மையக் கதை, அரசியல் மாற்றங்கள் கடந்தும் குறிப்பிடத்தக்க வகையில் நெகிழ்ச்சியுடன் நிலைத்திருக்கிறது. கொழும்பில் உள்ள ஒரு பத்திரிகையாளர் குறிப்பிட்டார்: "அரசாங்கங்கள் மொழியைச் சற்றே மாற்றலாம், ஆனால் போரைப் பற்றிய அடிப்படைக் கதை பொதுவாக அப்படியேதான் இருக்கிறது." இந்தத் தொடர்ச்சி, சமகால இலங்கை அரசின் சட்டபூர்வத்தன்மைக்கு போர் எவ்வளவு மையமானது என்பதைப் பிரதிபலிக்கிறது. வெற்றிக் கதை போருக்குப் பிந்தைய அரசியல் அமைப்புடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது.

முக்கியமாக, உத்தியோகபூர்வ நினைவு என்பது அடக்குமுறை அல்லது புறக்கணிப்பு மூலம் மட்டுமே செயல்படுவதில்லை. அது உள்வாங்குதல் மற்றும் இயல்பாக்குதல் மூலமாகவும் செயல்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்கள், உட்கட்டமைப்புப் புனரமைப்பு, பொது விழாக்கள் ஆகியவை வரலாற்று முடிவை ஊக்குவிக்கும் முன்னேற்றத்தையும் முன்னோக்கிய இயக்கத்தையும் பற்றிய ஒரு பிம்பத்தை உருவாக்குகின்றன. வீதிகள், தொடர்வண்டிப் பாதைகள், நகர அபிவிருத்தி ஆகியவை அமைதியினதும் புனரமைப்பின் பொருள்சார்பினதும் சின்னங்களாக மாறுகின்றன. கிளிநொச்சியில், ஒரு முதலாளி இதை இவ்வாறு விளங்கப்படுத்தினார்: "செய்தி எப்போதும் உடனடி வளர்ச்சியைப் பற்றியதாகவே இருக்கிறது. மக்கள் கடந்த காலத்தை விடுத்து எதிர்காலத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே இதன் கருத்து." எனவே, வளர்ச்சி குறித்த உரையாடல் ஒரு தற்காலிக உத்தியாகச் செயல்படுகிறது. அது சர்ச்சைக்குரிய வரலாறுகளிலிருந்து விலகி, நவீனமயமாக்கல், பொருளாதார வளர்ச்சி குறித்த விவரிப்புகளை நோக்கி நகர்வதை ஊக்குவிக்கிறது.

பல பிரதேசவாசிகள் இந்த முன்னோக்கிய உரையாடலை இருவிதமான உணர்வுகளுடன் அனுபவிக்கின்றனர். உட்கட்டமைப்பு மேம்பாடுகள் சமூகங்களுக்குப் பொருள்ரீதியாகப் பயனளித்தாலும், அவை இழப்பு, பொறுப்புக்கூறல் அல்லது வரலாற்று அங்கீகாரம் தொடர்பான கேள்விகளுக்குத் தீர்வு காண்பதில்லை. போரின் போது தன் கணவரை இழந்த ஒரு பெண் குறிப்பிட்டார்: "வீதிகள் முக்கியமானவை. ஆனால் மக்களுக்கு என்ன நடந்தது என்பதற்கு வீதிகள் பதிலளிப்பதில்லை." அவரது கூற்று, வளர்ச்சி சார்ந்த நினைவின் வரம்புகளை வெளிப்படுத்துகிறது. பொருள்சார்ந்த புனரமைப்பு, தார்மீக அல்லது வரலாற்று அங்கீகாரத்திற்கு முழுமையாக மாற்றாக அமைய முடியாது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் அதிகாரபூர்வ நினைவகம் என்பது, நிறுவன அதிகாரம், குறியீட்டுப் புலப்பாடு, அதிகாரத்துவ வகைப்பாடு, இடஞ்சார்ந்த அமைப்பு, வளர்ச்சிசார் உரையாடல், தேர்ந்தெடுத்த உள்ளடக்கமும் நீக்கமும் ஆகிய கூறுகளின் கலவையின் மூலம் செயல்படுகிறது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து, மாற்று வரலாறுகளைப் பலவீனமானவையாகவோ அல்லது முழுமையற்றவையாகவோ ஆக்கும் அதே வேளையில், அரச இறையாண்மையை நிலைப்படுத்தும் ஒரு

வரலாற்றுக் கட்டமைப்பை உருவாக்குகின்றன. ஆயினும், இத்தகைய விரிவான கதை மேலாண்மையின் தேவையே, அதிகாரபூர்வ ஒத்திசைவின் கீழ் உள்ள உறுதியற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது. மாற்று நினைவுகள், வீட்டுக் காப்பகங்கள், அமைதியான நினைவுகூரல்கள் மற்றும் தீர்க்கப்படாத துக்கம் ஆகியவற்றின் தொடர்ச்சி, போர் வரலாற்று ரீதியாக இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளது என்பதைக் காட்டுகிறது. ஆகவே, காப்பகம் என்பது வரலாறு சேமிக்கப்படும் ஓர் இடம் மட்டுமல்ல, அது தொடர்ச்சியான அரசியல் போராட்டத்தின் ஒரு களம். நிறுவனக் காப்பகங்களிலிருந்து, போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களே பேணிவரும் துண்டு துண்டான, அந்தரங்கமான நினைவு வடிவங்களுக்கு நாம் திரும்பும்போது, இந்தப் போராட்டம் இன்னும் தெளிவாகத் தெரிகிறது.

## ஆவணக் காப்பக மௌனங்களும் தமிழர் நினைவின் பலவீனமும்

போருக்குப் பிந்தைய இலங்கையில் உத்தியோகபூர்வ நினைவுகள் நிறுவனங்கள், நினைவுச்சின்னங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் அரச ஆவணக் காப்பகங்கள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தாலும், தமிழ் நினைவுகள் பெரும்பாலும் மிகவும் பலவீனமான வடிவங்களில் நிலைத்திருக்கின்றன. அது சேதமடைந்த புகைப்படங்கள், மறைக்கப்பட்ட ஆவணங்கள், கிசுகிசுக்கப்பட்ட விவரிப்புகள், மங்கிவரும் கல்லறைகள், அலைபேசிப் பதிவுகள், கையெழுத்துக் கடிதங்கள் மற்றும் குடும்பங்களுக்குள் சொல்லப்படும் கதைகளில் காணப்படுகிறது. இந்த நினைவு வடிவங்கள் அரச ஆவணக் காப்பகங்களின் நிலைத்தன்மையையோ அல்லது சட்டபூர்வமான தன்மையையோ அரிதாகவே கொண்டுள்ளன. அவை சிதைவு, பறிமுதல், அச்சம், இடப்பெயர்வு, சோர்வு ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடியவை. ஆயினும், போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள் பேரழிவின் பின்விளைவுகளில் தொடர்ச்சியைப் பேண முயற்சிக்கும் மிக முக்கியமான வரலாற்றுத் தளங்களில் ஒன்றாக அவை விளங்குகின்றன.

போருக்குப் பிந்தைய தமிழரின் நினைவுகள் ஆவணக் காப்பகப் பலவீனம் என்ற நிலையால் குறிக்கப்படுகின்றன. வரலாற்று நினைவுகள் இருக்கின்றன, ஆனால் பெரும்பாலும் நிறுவனப் பாதுகாப்போ அல்லது பொதுப் பாதுகாப்போ இன்றி இருக்கின்றன. சமூகங்கள், அரசியல் ரீதியாக நிலையற்றதாகவும் உணர்ச்சி ரீதியாகச் சுமையாகவும் இருக்கும் நெருக்கமான மற்றும் பரவலான நினைவுப் பழக்கவழக்கங்கள் மூலம் வரலாறுகளைத் தக்கவைத்துக் கொள்கின்றன. மௌனமே ஆவணக்காப்பகத்தின் ஒரு பகுதியாக மாறுகிறது. வெறுமனே ஒரு வெறுமையாக இல்லாமல், பொதுவெளியில், தனிப்பட்ட முறையில், அல்லது எதை நினைவுகூரலாம் என்பதை வடிவமைக்கும் ஒரு கட்டமைக்கப்பட்ட சூழலாக அது விளங்குகிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள பல வீடுகளில், ஆவணக்காப்பகங்கள் முறையான சேகரிப்புகளாக ஒழுங்கமைக்கப்படாமல், சாதாரண வீட்டுப் பொருட்கள் மூலமாகவே பாதுகாக்கப்படுகின்றன. ஒரு கட்டிலுக்கு அடியில் உள்ள பிளாஸ்டிக் பை, பூட்டப்பட்ட அலமாரி, ஒரு பழைய இரங்குப்பெட்டி, அல்லது கவனமாக மடிக்கப்பட்ட ஒரு கோப்பு ஆகியவற்றில், தொலைந்துபோன குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தடைப்பட்ட வாழ்க்கையின் எஞ்சிய தடயங்கள் இருக்கலாம். வவுனியாவில், காணாமல் போன தன் மகனைத் தேடிக்கொண்டிருந்த ஒரு தாய், ஒரு மர அலமாரிக்குள் இருந்து ஒரு சிறிய பிளாஸ்டிக் பையை எடுத்தார். அதற்குள், ஆணையங்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட புகார்களின் நகல்கள், கடவுச்சீட்டு அளவுப் புகைப்படங்கள், பாடசாலைச் சான்றிதழ்கள், மங்கிய அடையாள அட்டை ஆகியவை இருந்தன. பேசுவதற்கு முன், அவர் ஒவ்வொரு ஆவணத்தையும் கவனமாகக் கையாண்டார். “அவனைப் பற்றி எனக்கு எஞ்சியிருக்கும் ஒரே விஷயங்கள் இவைதான்” என்று அவர் மெதுவாகக் கூறினார். அந்தக் கோப்புறையே காத்திருப்பின் ஓர் ஆவணக்காப்பகமாக மாறியிருந்தது. ஒவ்வொரு ஆவணமும் ஒரு முடிவைக் குறிக்கவில்லை, மாறாக மீண்டும் மீண்டும் நிகழ்தலைக் குறித்தது: அரசு அலுவலகங்களுக்கு மீண்டும் மீண்டும் செல்வது, மீண்டும் மீண்டும் சாட்சியமளிப்பது, அதிகாரபூர்வ அங்கீகாரம் கிடைக்கக்கூடும் என்ற மீண்டும் மீண்டும் வரும் நம்பிக்கை. அந்த ஆவணக்காப்பகம் நிச்சயமற்ற தன்மையைத் தீர்க்கவில்லை, அது அதைப் பாதுகாத்தது.

காணாமலாக்கப்பட்ட கணவனைத் தேடிக் கொண்டிருக்கும் பெண்ணொருத்தி போரின் இறுதி ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தை சுட்டிக்காட்டினாள். “சனங்கள் அவற்ற முகத்தை மறந்துவிடுவார்கள் என்று நான் பயப்படுறன். இதனாலதான் அவற்ற படத்தை வச்சிருக்கிறன்.” காணாமல் போனவர்களின் குடும்பத்தினருடனான உரையாடல்களில், மறதி குறித்த இந்த அச்சம் அடிக்கடி வெளிப்பட்டது. ஆவணக்காப்பகம் என்பது நிறுவனங்களுக்கான ஒரு சான்றாக மட்டுமல்லாமல், அழிவிலிருந்து தற்காத்துக் கொள்ளும் ஓர் அரணாகவும் மாறுகிறது. சமூக, அரசியல் சூழல் அங்கீகாரத்திற்கு உத்தரவாதம் அளிக்காததால், நினைவுகள் பொருள் வடிவில் பாதுகாக்கப்படுகின்றன. பல வீடுகளில், புகைப்படங்கள் ஒரு குறிப்பிட்ட முக்கிய பங்கை

வகிக்கின்றன. காணாமல் போன அல்லது இறந்த உறவினர்களின் உருவப்படங்கள் கவனமாக, ஆனால் பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் காட்சிப்படுத்தப்படுகின்றன. சில குடும்பங்கள் புகைப்படங்களை வரவேற்பறைகளில் முக்கியமாக வைக்கின்றன. மற்றவர்கள் அவற்றை மறைத்து வைத்து, நம்பகமான உரையாடல்களின் போதோ அல்லது நினைவுகூரும் தருணங்களிலோ மட்டுமே வெளியே எடுக்கிறார்கள்.

கிளிநொச்சியில், போரின் இறுதிக் கட்டங்களில் காணாமல் போன தனது கணவரின் புகைப்படங்களை எவ்வாறு கையாளுகிறார் என்பதை ஒரு பெண் விவரித்தார். "சில நேரங்களில் நான் படத்தை வெளியே வைப்பேன். சில நேரங்களில் அதை உள்ளே வைத்துவிடுவேன். அது யார் வருகிறார்கள் என்பதைப் பொறுத்தது." அவரது கூற்று, எச்சரிக்கையையும், இடஞ்சார்ந்த விழிப்புணர்வால் நினைவாற்றல் நடைமுறைகள் எவ்வாறு வடிவமைக்கப்படுகின்றன என்பதையும் வெளிப்படுத்துகிறது. நினைவுகளின் வெளிப்படைத்தன்மை தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்படுகிறது. பொதுவெளியில் காட்சிப்படுத்துவது உணர்ச்சிபூர்வமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது, ஆனால் அது பாதிப்புக்குள்ளாகும் தன்மையையும் உருவாக்கக்கூடும். மற்றொரு பெண் விளக்கினார்: "மக்கள் இந்த விஷயங்களை எப்படிப் புரிந்துகொள்வார்கள் என்று ஒருபோதும் சொல்ல முடியாது." இந்த நிச்சயமற்ற தன்மை, போருக்குப் பிந்தைய சூழலில் நினைவுகளின் அரசியல் நிலையற்ற தன்மையைப் பிரதிபலிக்கிறது. நினைவுகூர்தலே சந்தேகத்திற்குரியதாக மாறக்கூடும், குறிப்பாக விடுதலைப் புலிகளுடனோ அல்லது போர்க்கால அணிதிரட்டலுடனோ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புடைய நபர்களுடன் இணைக்கப்படும்போது அது சிக்கலானதாகிறது.

தமிழர் நினைவின் பலவீனமானது, இடப்பெயர்ச்சியுடனும் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. போர் முழுவதும் மீண்டும் மீண்டும் இடம்பெயர்ந்த போது, பல குடும்பங்கள் ஆவணங்கள், கடிதங்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை இழந்தன. குண்டுவீச்சு, தப்பி ஓடுதல், வெள்ளம், கைவிடுதல் ஆகியவற்றால் முழு வீட்டு ஆவணக் காப்பகங்களும் காணாமல் போயின. தப்பிப்பிழைப்பவை பெரும்பாலும் தற்செயலாகவே அவ்வாறு ஆகின்றன. முல்லைத்தீவில் உள்ள ஒரு முன்னாள் பாடசாலை அதிபர், பல வருட இடப்பெயர்வுக்குப் பிறகு தனது அழிக்கப்பட்ட வீட்டிற்குத் திரும்பியதை நினைவு கூர்ந்தார். "எல்லாம் சேதமடைந்திருந்தது. புத்தகங்கள், சான்றிதழ்கள், குடும்பப் புகைப்படங்கள். ஏதாவது எஞ்சியிருக்கிறதா என்ற ஏக்கத்தோடு இடிபாடுகளுக்குள் நாங்கள் தேடினோம்." இறுதியில், அவர் தனது மகளுக்குச் சொந்தமான, பாதி எரிந்த ஒரு கொப்பியைக் கண்டுபிடித்தார். "அது ஒரு சாதாரண பாடசாலைக் கொப்பிதான், ஆனால் இதற்கு முன்பு இங்கு ஒரு வாழ்க்கை இருந்தது என்பதை அது எங்களுக்கு நினைவூட்டியதால் நாங்கள் அதை வைத்திருந்தோம்" என்று சொன்னார்.

சாதாரணமானதாகத் தோன்றும் பொருட்களின் மீதான இந்த பற்றுதல், ஆவணக் காப்பகங்கள் அதிகாரபூர்வ முக்கியத்துவத்தின் மூலம் மட்டுமல்லாமல், உணர்வுபூர்வமான தொடர்ச்சியின் மூலமும் எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பிரதிபலிக்கிறது. அன்றாடப் பொருட்கள் பேரழிவுகளில் இருந்து தப்பிப்பிழைப்பதால் வரலாற்றுப் பொருள்களாக மாறுகின்றன. ஆவணக்காப்பகங்களின் அழிவு பரந்த சமூக விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. போரினால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளில், நிலப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்கள், பிறப்புப் பதிவேடுகள், அடையாள ஆவணங்கள் தொலைந்து போயின அல்லது சேதமடைந்தன. இந்த இழப்பு நினைவாற்றலை மட்டுமல்ல, உரிமைகள், வாழ்வாதாரங்கள் மற்றும் நிறுவன அங்கீகாரம் ஆகியவற்றைப் பெறுவதையும் பாதிக்கிறது. மன்னாரைச் சேர்ந்த ஒரு விவசாயி சொன்னார்: "ஆவணங்கள் இல்லாமல், உங்கள் வரலாறு மறைந்துவிடுவது போலாகும். நீங்கள் யார், நீங்கள் எவ்விடத்தைச் சேர்ந்தவர் என்பதை மீண்டும் நிரூபிக்க வேண்டியுள்ளது." இங்கு ஆவணக்காப்பகம் இறையாண்மை மற்றும் குடியுரிமையிலிருந்து பிரிக்க முடியாதது. தனிநபர்களை நிறுவனங்கள் அங்கீகரிக்கும் அடிப்படையாக ஆவணங்கள் அமைகின்றன. ஆவணக்காப்பகங்கள் துண்டாடப்படும் போது, சொந்தம் என்ற உணர்வே நிலையற்றதாகிவிடுகிறது.

அதே நேரத்தில், தமிழரின் நினைவுகள் பொருள்கள் மூலமாக மட்டுமல்லாமல், வாய்மொழிப் பரிமாற்றம் மூலமாகவும் பேணப்படுகின்றன. கதைகள் வீடுகளுக்குள், பெரும்பாலும் தேர்ந்தெடுத்தும் எச்சரிக்கையுடனும் புழங்குகின்றன. மூத்த தலைமுறையினர் இடப்பெயர்வு, ஒளிந்து கொள்ளுதல், குண்டுவீச்சு மற்றும் அச்சம் ஆகியவற்றை விவரிக்கின்றனர். ஆனால் இந்தக் கதைகள் பெரும்பாலும் மௌனத்தால் துண்டு துண்டாகின்றன. யாழ்ப்பாணத்தில், ஒரு பல்கலைக்கழக மாணவி, தன் பெற்றோரிடமிருந்து போரைப் பற்றி எவ்வாறு அறிந்துகொண்டார் என்பதைப் பற்றி இவ்வாறு நினைவுகூர்ந்தார்: "அவர்கள் ஒருபோதும் அமர்ந்து

முழுக் கதையையும் சொன்னதில்லை. பல ஆண்டுகளாக சிறு சிறு துண்டுகளையே நீங்கள் கேட்கிறீர்கள்." அவர் சற்று நிறுத்திவிட்டு மேலும் கூறினார்: "சில சமயங்களில், தாங்கள் அதிகமாகச் சொல்லிவிட்டதைப் போல, திடீரென்று நிறுத்திவிடுவார்கள்." இந்தத் தடைப்பட்ட கதைசொல்லல், மன அதிர்ச்சியும் அரசியல் எச்சரிக்கையும் வரலாற்றுப் பரிமாற்றத்தை எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது. நினைவுகள், சீரான கதைகளாக அல்லாமல், துண்டுகளின் மூலமாகவே பரிமாறப்படுகின்றன.

மற்றொரு மாணவர், சில விஷயங்கள் தன் குடும்பத்திற்குள் பெரும்பாலும் பேசப்படாமல் இருந்ததை விவரித்தார். "நடந்தவை என்ன என்பது பற்றி அனைவருக்கும் தெரிந்த சில விஷயங்கள் உள்ளன, ஆனால் யாரும் அதை நேரடியாக விளக்குவதில்லை." இந்த மௌனத்தை மறதி என்று தவறாக எண்ணிவிடக் கூடாது. மாறாக, இது கட்டமைக்கப்பட்ட மறைத்தல் என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றைப் பிரதிபலிக்கிறது. அதாவது, அச்சம், சோர்வு, நிச்சயமின்மை மற்றும் பேரழிவு அனுபவங்களை முழுமையாக விவரிக்க இயலாமை ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட ஒருவகை நினைவகம். மௌனமே ஒரு வரலாற்று வடிவமாகச் செயல்படுகிறது என்று இனவரைவியல் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. பொது உரையாடலில் எவை பாதுகாப்பாக நுழையலாம், எவை தனிப்பட்டதாகவோ அல்லது தெளிவற்றதாகவோ இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதன் மூலம் அது நினைவகத்தை ஒழுங்கமைக்கிறது. கிளிநொச்சியில் உள்ள ஒரு வீட்டில், ஒரு வயதான பெண்மணி போரின் இறுதி மாதங்களை மறைமுகமாக மட்டுமே விவரித்தார். குறிப்பிட்ட நிகழ்வுகளை விவரிப்பதற்குப் பதிலாக, அவர் அருகிலுள்ள ஒரு வயலை நோக்கி மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினார். "அங்கே பல விஷயங்கள் நடந்தன" என்றார் அவர். "இங்கே உள்ளவர்களுக்குத் தெரியும்" என்றார். அவர் விரிவாகக் கூற மறுத்தது நினைவகம் இல்லாததால் அல்ல. அது சில அனுபவங்களைத் தெளிவான விவரிப்பாக மாற்றுவதில் உள்ள சிரமத்தையும் - ஒருவேளை ஆபத்தையும் - பிரதிபலித்தது.

உணர்ச்சி ரீதியான சோர்விலிருந்தும் மௌனம் உருவாகிறது. பல பதிலளிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள், ஆணையங்களிடம் போர்க்காலத் துன்பங்களை மீண்டும் மீண்டும் விவரிப்பதில் ஏற்பட்ட சோர்வை வெளிப்படுத்தினர். ஒரு சமூக ஆர்வலர் அதை இவ்வாறு விளக்கினார்: "மக்கள் தங்கள் கதைகளை பலமுறை சொல்லியிருக்கிறார்கள். சில சமயங்களில், எதுவும் மாறவில்லை என்று அவர்கள் உணர்வதால், பேசுவதை நிறுத்திவிடுகிறார்கள்." இந்தச் சோர்வு மற்றொரு வகையான ஆவணச் சிதைவை உருவாக்குகிறது. அங்கீகாரமும் மாற்றமும் பின்தொடரத் தவறும்போது, சாட்சியம் நிலைத்திருக்க முடியாததாகிவிடுகிறது. அதேவேளை, சடங்குகள் மற்றும் நினைவுகூர்தல் வாயிலாக, பெரும்பாலும் அமைதியான அல்லது தன்னிச்சையான முறைகளில் நினைவுப் பழக்கவழக்கங்கள் நீடிக்கின்றன.

வடக்கில், போர்க்கால இழப்புடன் தொடர்புடைய நினைவுக் காலங்களில் சில குடும்பங்கள் தனிப்பட்ட முறையில் கூடுகின்றன. மெழுகுவர்த்திகள் மறைவாக ஏற்றப்படுகின்றன, பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன, புகைப்படங்கள் தற்காலிகமாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன. முல்லைத்தீவில், ஓர் இளைஞன், போரின்போது இழந்த உறவினர்களைத் தனது குடும்பம் எவ்வாறு நினைவுகூருகிறது என்பதை விவரித்தான். "நாங்கள் பெரிதாக எதுவும் செய்வதில்லை. நாங்கள் வீட்டிலேயே தங்கி, விளக்குகளை ஏற்றி, அமைதியாக நினைவுகூருகிறோம்." அமைதிக்கு அளிக்கப்படும் இந்த முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கது. பெரிய பொதுச் சடங்குகளை விட, கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் அந்தரங்கமான பழக்கவழக்கங்கள் மூலமே நினைவுகள் நிலைத்திருக்கின்றன.

பல குடும்பங்களுக்கு, கல்லறைகளும் புதைகுழிகளும் கூட சிதைவடையக்கூடிய நினைவு நிலப்பரப்புகளாக இருக்கின்றன. சில போர்க்காலப் புதைகுழிகள் போருக்குப் பிறகு அழிக்கப்பட்டன, மாற்றியமைக்கப்பட்டன அல்லது அணுக முடியாதபடி விடப்பட்டன. குறிப்பாக, முன்னாள் விடுதலைப் புலிகளின் கல்லறைகள் மிகுந்த சர்ச்சைக்குரிய இடங்களாக மாறின. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு முன்னாள் குடியிருப்புவாசி, தன் கிராமத்திற்கு அருகிலுள்ள ஒரு கல்லறை அழிக்கப்பட்டது குறித்து நினைவுகூர்ந்தார். "சிலருக்கு , அந்த இடங்கள் அரசியல் சார்ந்தவையாக இருந்தன. குடும்பங்களுக்கு, அவை அன்புக்குரியவர்கள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களாக இருந்தன." அரசியல் குறியீட்டிற்கும் தனிப்பட்ட துக்கத்திற்கும் இடையிலான வேறுபாடு மிக முக்கியமானது. நினைவுகூர்தலுக்கான அதிகாரபூர்வ அணுகுமுறைகள் பெரும்பாலும் அத்தகைய இடங்களை முதன்மையாகப் பாதுகாப்பு அல்லது கருத்தியல் கட்டமைப்புகள் வழியாகவே விளக்குகின்றன. அதேசமயம் உள்ளூர் சமூகங்கள் அவற்றை துக்கம் மற்றும் உறவுமுறையின் மூலம் அனுபவிக்கின்றன. டிஜிட்டல் தொழில்நுட்பம் நினைவுகளைப் பாதுகாப்பதற்கும் பரப்புவதற்கும் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இளைய தலைமுறையினர் புகைப்படங்கள், சாட்சியங்கள் மற்றும் நினைவுப்

பொருட்களைச் சேமிக்க கைபேசிகள், சமூக ஊடகத் தளங்கள் மற்றும் இணைய ஆவணக்காப்பகங்களை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இந்த நாடுகடந்த நினைவுவெளிகளைப் பராமரிப்பதில் புலம்பெயர் சமூக வலைப்பின்னல்கள் குறிப்பாக முக்கிய பங்கு வகிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மாணவர் விளக்கினார்: "இணையத்தில், மக்கள் வெளிப்படையாகப் பேச அஞ்சும் விஷயங்களை நீங்கள் காணலாம்." எனவே, எண்ணிம ஆவணக்காப்பகங்கள் வரலாற்றுப் பரவலுக்கான மாற்று இடங்களாகச் செயல்படுகின்றன. ஆயினும், அவை புதிய பதற்றங்களையும் அறிமுகப்படுத்துகின்றன. இணையத்தில் உள்ள தகவல்கள் பெரும்பாலும் துண்டு துண்டாக, உணர்ச்சிபூர்வமாக அல்லது அரசியல் ரீதியாகப் பிளவுபட்டவையாக உள்ளன. நினைவுகள், நெறிமுறைகள், புலம்பெயர் சமூகச் செயல்பாடுகள் மற்றும் காட்சிக் குறியீடுகள் மூலம் பெருகிய முறையில் ஊடகப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு, தமிழர் நினைவின் பலவீனம் என்பது பொருள் சார்ந்தது மட்டுமல்ல, அறிவு சார்ந்ததுமாகும். பின்வருவனவற்றைப் பற்றி தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது:

யாருடைய விவரிப்புகள் முறையானவை?

எந்த வகையான சான்றுகள் கணக்கில் கொள்ளப்படும்?

கடந்த காலத்தை விவரிப்பதற்கு யாருக்கு அதிகாரம் உள்ளது?

எந்த நினைவுகள் பொது வரலாற்றில் இடம்பெறலாம்?

இந்த நிச்சயமற்ற தன்மையே மக்கள் தங்கள் சொந்த வரலாறுகளுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை வடிவமைக்கிறது. ஒரு முன்னாள் ஆசிரியர் இவ்வாறு சிந்தித்தார்: "சில நேரங்களில், எங்கள் அனுபவங்கள் நாட்டின் வரலாற்றில் இல்லாமல், குடும்பங்களுக்குள் மட்டுமே இருப்பதாக நாங்கள் உணர்கிறோம்." அவரது கூற்று, அந்தரங்க நினைவிற்கும் உத்தியோகபூர்வ வரலாற்றுக்கும் இடையிலான சமச்சீரற்ற தன்மையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. சமூகங்கள், தேசிய நிறுவனங்களுக்குள் போதுமான அளவு அங்கீகரிக்கப்படாத வரலாறுகளைத் தாங்கி நிற்கின்றன. அதே நேரத்தில், இந்த அந்தரங்க ஆவணக்காப்பகங்கள் குறிப்பிடத்தக்க விடாமுயற்சியை வெளிப்படுத்துகின்றன. கண்காணிப்பு, இடப்பெயர்வு, சோர்வு, இழப்பு ஆகியவற்றையும் மீறி, மக்கள் கடந்த காலத்தின் தடயங்களைத் தொடர்ந்து பாதுகாத்து வருகின்றனர். நிறுவனங்கள் அங்கீகாரம் அளிக்க மறுத்தாலும், தனிநபர்கள் அவற்றை முன்னோக்கி எடுத்துச் செல்ல வலியுறுத்துவதால் ஆவணக்காப்பகங்கள் நிலைத்து நிற்கின்றன.

முல்லைத்தீவில் உள்ள ஒரு கிராமத்தில், போருக்கு முன்பு உறவினர்கள் கூடியிருந்ததைக் காட்டும் சேதமடைந்த புகைப்படம் ஒன்றை ஒரு பெண்மணி கவனமாக விரித்தார். "எல்லாம் மாறுவதற்கு முன்பு இது நடந்தது" என்றார் அவர். சில கணங்கள் அந்தப் படத்தை மௌனமாக உற்றுப் பார்த்த பிறகு, அதைத் துணியால் சுற்றப்பட்ட ஒரு கோப்புறைக்குள் மீண்டும் வைத்தார்.

அந்தச் செயலே ஆவணக்காப்பக முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. பாதுகாத்தல் என்பது வரலாற்று உயிர்வாழ்வின் ஒரு செயலாக மாறுகிறது. எனவே, தமிழர் நினைவின் உடையக்கூடிய தன்மையை வெறும் பலவீனமாக மட்டும் புரிந்துகொள்ளக் கூடாது. உடையக்கூடிய ஆவணக்காப்பகங்கள், சகிப்புத்தன்மையின் வடிவங்களையும் வெளிப்படுத்துகின்றன. கடினமான சூழ்நிலைகளிலும் சமூகங்கள் அவற்றைத் தொடர்ந்து நிலைநிறுத்துவதால்தான் அவை துல்லியமாக நீடிக்கின்றன. இந்தப் பலவீனமானது அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுகிறது. சிதறிக் கிடக்கும், தனிப்பட்ட, மற்றும் எளிதில் பாதிக்கப்படக்கூடிய ஆவணக்காப்பகங்கள், அதிகாரபூர்வ வரலாற்றோடு தொடர்புடைய நிலைத்தன்மையையும் சட்டபூர்வமான அங்கீகாரத்தையும் அடைவதற்குப் போராடுகின்றன. அவை நிச்சயமற்ற சூழல்களில் நிலவுகின்றன. அங்கு நினைவுகள், தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுவதையும், தொடர்ச்சியான துக்க அனுசரிப்பையும் பெரிதும் சார்ந்திருக்கின்றன.

அதிகாரபூர்வ ஆவணக்காப்பகங்களுக்கும், அந்தரங்கமான மாற்று ஆவணக்காப்பகங்களுக்கும் இடையிலான இந்தச் சமமின்மையானது, இந்தக் கட்டுரைகள் முழுவதும் ஆராயப்பட்ட போருக்குப் பிந்தைய இலங்கையின் பரந்த சமச்சீரற்ற தன்மைகளைப் பிரதிபலிக்கிறது. நிலப்பரப்பும் மீட்சியும் சமமற்ற முறையில் விநியோகிக்கப்பட்டிருப்பதைப் போலவே, வரலாற்று அங்கீகாரமும் அவ்வாறே உள்ளது. ஆவணக்காப்பகம் என்பது இறையாண்மை சமமற்ற முறையில் செயல்படுத்தப்படும் மற்றொரு தளமாக மாறுகிறது. அங்கு சில நினைவுகள் நிறுவனமயமாக்கப்பட்டுப் பொதுவெளியில் பாதுகாக்கப்படுகின்றன, மற்றவை வீடுகள், கிசுகிசுக்கள், சடங்குகள் மற்றும் தனிப்பட்ட பொருட்கள் வழியாக நிலையற்ற முறையில் உயிர்வாழ்கின்றன.

### வரலாற்று வடிவமாக மௌனம்

**2**

போருக்குப் பிந்தைய இலங்கையில், மௌனம் எங்கும் நிறைந்திருக்கிறது. அது குறுக்கிடப்பட்ட உரையாடல்களிலும், தாழ்ந்த குரல்களிலும், முடிக்கப்படாத கதைகளிலும், விடுபட்ட பெயர்களிலும், கேட்கப்படாத கேள்விகளிலும், கவனமாகக் கையாளப்படும் பொதுப் பேச்சுகளிலும் நிலவுகிறது. ஆசிரியர்கள் சில தலைப்புகளை விரைவாகக் கடந்து செல்லும் வகுப்பறைகளிலும், போர்க்கால அனுபவங்கள் மறைமுகமாக மட்டுமே குறிப்பிடப்படும் வீடுகளிலும், எச்சரிக்கையுடன் வடிவமைக்கப்பட்ட பொது நினைவுகூரல்களிலும், யாரிடம், என்ன நிபந்தனைகளின் கீழ் பேசலாம் என்பதை மக்கள் உள்ளுணர்வாகக் கணக்கிடும் அன்றாட உரையாடல்களிலும் அது தோன்றுகிறது. ஆயினும், மௌனத்தை வெறுமனே ஓர் இல்லாமையாக - பேச்சு, நினைவு அல்லது அரசியல் உணர்வின் பற்றாக்குறையாக - புரிந்துகொள்ளக் கூடாது. மாறாக, மௌனம் ஒரு வரலாற்று வடிவமாகச் செயல்படுகிறது. போரின் மரபுகள் வாழப்பட்டு, கடத்தப்பட்டு, ஒழுங்குபடுத்தப்படும் ஒரு சமூக ரீதியாக உருவாக்கப்பட்ட மற்றும் அரசியல் ரீதியாகக் கட்டமைக்கப்பட்ட நிலையாக அது விளங்குகிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனம் செயலற்றதோ அல்லது வெறுமையானதோ அல்ல. கண்காணிப்பு, நிச்சயமற்ற தன்மை, துக்கம், சமமற்ற இறையாண்மை ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட ஒரு நிலப்பரப்பிற்குள் அது ஒரு செயல்திறன் மிக்க வழிசெலுத்தல் முறையாகும். மௌனம் பாதுகாக்கிறது, மறைக்கிறது, ஒழுங்குபடுத்துகிறது, சோர்வடையச் செய்கிறது, சில சமயங்களில் எதிர்க்கவும் செய்கிறது. வரலாறு எவ்வாறு நினைவுகூரப்பட்டு, கடத்தப்படுகிறது என்பதை இது கட்டமைக்கிறது. சொல்லப்படாதவை எவை என்பதை மட்டுமல்லாமல், குடும்பங்கள், சமூகங்கள், நிறுவனங்கள் வழியாக அறிவு எவ்வாறு பரவுகிறது என்பதையும் இது தீர்மானிக்கிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலவும் மௌனத்தின் தொடர்ச்சியை, அதனை உருவாக்கிய வரலாற்றுச் சூழல்களிலிருந்து பிரிக்க முடியாது. போரின் போது, பேச்சு ஆபத்தைக் கொண்டிருந்தது. சோதனைச் சாவடிகளில் கேள்விகள் கேட்பது, ஆயுதம் ஏந்திய தரப்பினருடனான உரையாடல்கள், கிராமங்களுக்குள் நடக்கும் அரசியல் உரையாடல்கள் ஆகிய அனைத்திற்கும் எச்சரிக்கை தேவைப்பட்டது. சொற்கள் சந்தேகத்தையோ, கண்காணிப்பையோ, அல்லது வன்முறையையோ உருவாக்கக்கூடும் என்பதை உணர்ந்து, பொதுமக்கள் மொழியைக் கவனமாகக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொண்டனர். இந்த எச்சரிக்கைப் பழக்கம் ஆயுத மோதல் முடிவடைந்தவுடன் மறைந்துவிடவில்லை. மாறாக, அது அன்றாட வாழ்வில் ஆழமாகப் பதிந்துவிட்டது. யாழ்ப்பாணத்தில், ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் இந்தத் தொடர்ச்சியை இவ்வாறு விவரித்தார்: "போரின் போது, அனைவரும் கவனமாகப் பேசக் கற்றுக்கொண்டனர். போருக்குப் பிறகும், அந்தப் பழக்கம் தொடர்ந்தது." "பழக்கம்" என்ற சொல் முக்கியமானது. மௌனம் என்பது எப்போதும் நேரடி அடக்குமுறையாக உணரப்படுவதில்லை. அது பெரும்பாலும் உடலால் உணரப்படும் நினைவாகச் செயல்படுகிறது. மக்கள் பேசுவதற்கு முன் சற்று நிறுத்துகிறார்கள், சில இடங்களில் தங்கள் குரலைத் தாழ்த்துகிறார்கள், அல்லது தனிநபர்களின் பெயர்களை நேரடியாகக் குறிப்பிடுவதைத் தவிர்க்கிறார்கள். இது உடனடி அச்சுறுத்தலால் மட்டுமல்ல, மாறாக எச்சரிக்கை உணர்வு இயல்பானதாகிவிட்டதால்தான். ஒரு பல்கலைக்கழக மாணவர் விளக்கினார்: "சில நேரங்களில், வெளிப்படையான காரணம் எதுவும் இல்லாதபோதும் நீங்கள் கவனமாக இருக்கிறீர்கள் என்பதை உணர்கிறீர்கள். அது இயல்பாகிவிடுகிறது."

மௌனத்தின் இந்த இயல்பாக்கம், வன்முறை முறையாக முடிவடைந்த பின்னரும், நடத்தை மூலம் போர் எவ்வாறு நீடிக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. மௌனம் சாதாரண வாழ்வின் ஓர் அங்கமாகிவிடுகிறது. அதே நேரத்தில், மௌனம் சீரற்ற முறையில் பரவியுள்ளது. வெவ்வேறு தலைமுறைகள், வர்க்கங்கள், பாலினங்கள் மற்றும் அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டவர்கள் மௌனத்தை வெவ்வேறு விதமாக அனுபவித்து வெளிப்படுத்துகிறார்கள். இடப்பெயர்வு, குண்டுவீச்சு, தடுப்புக்காவல் அல்லது போராளிகளின் கட்டுப்பாடு போன்றவற்றை அனுபவித்த மூத்த தலைமுறையினர், பொதுவெளியில் வெளிப்படுத்தக் கடினமான நினைவுகளை பெரும்பாலும் கொண்டுள்ளனர். இளைய தலைமுறையினர் இந்த மௌனங்களை மறைமுகமாகப் பெறுகிறார்கள். முழுமையான விவரிப்புகளுக்குப் பதிலாக, துண்டுகள், சைகைகள் மற்றும் உணர்ச்சிபூர்வமான சூழல்கள் மூலம் வரலாற்றின் வடிவங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

கிளிநொச்சியில், ஓர் இளம் பெண், போர்க்கால வரலாறு தன் குடும்பத்திற்குள் எவ்வாறு கடத்தப்பட்டது என்பதை விவரித்தார்: "என் பெற்றோர் சில விஷயங்களை ஒருபோதும் நேரடியாக விளக்கவில்லை. சிறிய கருத்துகளிலிருந்தும், இடங்கள் அல்லது காலங்களுக்கு அவர்கள் எதிர்வினையாற்றும் விதத்திலிருந்தும் நீங்கள் புரிந்துகொள்வீர்கள்." அவர் சற்று நிறுத்திவிட்டு மேலும் கூறினார்: "சில

நேரங்களில் மௌனமே, ஏதோவொரு வேதனையான சம்பவம் நடந்திருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்கிறது." இந்தக் கருத்து, மௌனம் வரலாற்றை அழிப்பதில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. மாறாக, வரலாறு கடத்தப்படும் விதத்தை அது மறுசீரமைக்கிறது. அறிவு, குறிப்புணர்த்தல், மனநிலை, குறுக்கீடு, தேர்ந்தெடுத்து வெளிப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் பரவுகிறது. குடும்பங்கள் பெரும்பாலும் விரிவான நினைவுகளைத் தாங்கிக்கொண்டு, அதே நேரத்தில் வெளிப்படையான விவரிப்பைத் தவிர்க்கின்றன.

முல்லைத்தீவில் ஒரு மாலைப்பொழுதில், ஒரு முதியவர் போரின் இறுதிக் கட்டங்களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளை விவரித்தார். பொதுமக்கள் இறப்புகள் சம்பந்தப்பட்ட ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைப் பற்றி விவாதிக்கும்போது திடீரென நிறுத்துவதற்கு முன்பு, அவர் சில நிமிடங்கள் அமைதியாகப் பேசினார். அறை அமைதியானது. நீண்ட மௌனத்திற்குப் பிறகு, அவர் கூறினார்: "அந்த விஷயங்களைப் பற்றிப் பேசுவது கடினம்." அறையில் இருந்த யாரும் அவரை மேலும் வற்புறுத்தவில்லை. அதைத் தொடர்ந்து ஏற்பட்ட மௌனம் வெறுமையானதாக இருக்கவில்லை. அது அங்கீகாரம், சங்கடம், துக்கம், பரஸ்பரப் புரிதல் ஆகியவற்றைத் தன்னுள் கொண்டிருந்தது. அங்கு கூடியிருந்த அனைவரும், ஏதோ ஒரு முக்கியமான விஷயம் மறைக்கப்பட்டிருந்தது என்பதைப் புரிந்துகொண்டனர். ஆயினும், அந்த மறைப்பே உரையாடலின் ஒரு பகுதியாக மாறியது. இங்கு மௌனம் ஒரு சமூக மற்றும் உணர்வுபூர்வமான மொழியாகச் செயல்பட்டது.

இந்த இயங்குமுறை, வன்முறை மற்றும் நினைவுகள் குறித்த பரந்த மானிடவியல் விவாதங்களை எதிரொலிக்கிறது. குறிப்பாக, பேரழிவு நிகழ்வுகள் பெரும்பாலும் ஒரு சீரான கதை வடிவில் அல்லாமல், துண்டு துண்டான மற்றும் முழுமையற்ற வடிவங்களில் சாதாரண வாழ்வில் நுழைகின்றன என்ற கருத்தை இது பிரதிபலிக்கிறது. சில அனுபவங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்படுவதை எதிர்க்கின்றன, ஏனெனில் வன்முறையை அடக்குவதற்கு மொழியே போதுமானதாக இருப்பதில்லை. போருக்குப் பிந்தைய இலங்கையில், பலர் ஒரே நேரத்தில் நிகழ்காலத்திலும் சொல்ல முடியாத நிலையிலும் இருக்கும் நினைவுகளுடன் வாழ்கின்றனர். போருக்குப் பிறகு உயிர் பிழைத்தவர்களை நேர்காணல் செய்தது குறித்து ஒரு முன்னாள் மனிதாபிமானப் பணியாளர் இவ்வாறு நினைவு கூர்ந்தார்: "மக்கள் கதைகளைச் சொல்லத் தொடங்குவார்கள், பின்னர் திடீரென்று நிறுத்திவிடுவார்கள். சில சமயங்களில் அவர்கள் அழுவார்கள். சில சமயங்களில் அவர்கள் பேச்சை முழுவதுமாக மாற்றிவிடுவார்கள்." இந்தக் குறுக்கீடுகள் சாட்சியத்தின் உணர்வுபூர்வமான வரம்புகளை வெளிப்படுத்துகின்றன. மன அதிர்ச்சியை எப்போதும் நேர்கோட்டு வடிவில் விவரிக்க முடிவதில்லை. மௌனம் என்பது பயத்திலிருந்து மட்டுமல்ல, சில அனுபவங்களை ஒரு நிலையான மொழியாக மாற்ற முடியாத சாத்தியமின்மையிலிருந்தும் உருவாகிறது.

அதே நேரத்தில், போருக்குப் பிந்தைய இலங்கையில் நிலவும் மௌனம் ஆழமான அரசியல் தன்மை கொண்டது. பதிலளித்தவர்களில் பலர், தனிப்பட்ட முறையில் என்ன பேசலாம், பொதுவில் என்ன பேசலாம் என்பதை வேறுபடுத்திக் காட்டினர். போரைப் பற்றிய உரையாடல்கள், இடம், கேட்போர் மற்றும் உணரப்படும் அபாயம் ஆகியவற்றைப் பொறுத்து அடிக்கடி மாறுகின்றன. யாழ்ப்பாண நகரில், ஒரு பத்திரிகையாளர் இவ்வாறு விளக்கினார்: "மக்கள் வீட்டில் விவாதிக்கும் சில விஷயங்கள் உள்ளன, ஆனால் பொது இடங்களில் அல்ல. கண்ணுக்குப் புலப்படாத எல்லைகள் உள்ளன என்பது அனைவருக்கும் தெரியும்." இந்தக் கண்ணுக்குப் புலப்படாத எல்லைகள் எப்போதும் நேரடியாக அமல்படுத்தப்படுவதில்லை. அவற்றின் சக்தி துல்லியமாக நிச்சயமற்ற தன்மையில்தான் உள்ளது. எல்லைகள் எங்கே இருக்கின்றன என்பது மக்களுக்கு அரிதாகவே துல்லியமாகத் தெரியும், இது சுயஒழுங்குமுறையை ஊக்குவிக்கிறது.

ஒரு சமூக ஆர்வலர் இந்த நிலையை இவ்வாறு விவரித்தார்: "உங்களை வெளிப்படையாகத் தணிக்கை செய்ய யாரும் தேவையில்லை. என்ன விளைவுகள் ஏற்படக்கூடும் என்பதில் நிச்சயமற்ற தன்மை இருப்பதால், மக்கள் தங்களைத் தாங்களே தணிக்கை செய்துகொள்கிறார்கள்." இந்த நிச்சயமற்ற தன்மை, "முன்னறிவிப்பு மௌனம்" என்று அழைக்கப்படக்கூடிய ஒன்றை உருவாக்குகிறது. தனிநபர்கள் பேச்சை ஒழுங்குபடுத்துவது, அடக்குமுறை உடனடியாக நடப்பதால் மட்டுமல்ல, சாத்தியக்கூறுகளே நடத்தையை வடிவமைப்பதால்தான். பொது நினைவுகூரல்கள் இந்த இயக்கவியலைத் தெளிவாக விளக்குகின்றன. போர்க்கால மரணங்களுடன் தொடர்புடைய நினைவுக் காலங்களில், பல குடும்பங்கள் தனிப்பட்ட இடங்களில் அமைதியான சடங்குகளில் ஈடுபடுகின்றன. விளக்குகள் ஏற்றப்படுகின்றன, பிரார்த்தனைகள் செய்யப்படுகின்றன, மேலும் புகைப்படங்கள் மறைவாகக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த ஒரு பெண் விளக்கினார்: "நாங்கள் வீட்டில் நினைவுகூர்கிறோம். நாங்கள் கவனத்தை ஈர்ப்பதைத் தவிர்க்கிறோம்." "கவனத்தை

ஈர்ப்பது" என்ற சொற்றொடர், நினைவுகூர்தல் நடைமுறைகள் கண்காணிப்பு மற்றும் அரசியல் எச்சரிக்கையுடன் எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. மௌனம் ஒரு பாதுகாப்பாக மாறுகிறது. ஆயினும், சோர்விலிருந்தும் மௌனம் உருவாகிறது. போரினால் பாதிக்கப்பட்ட பலர், பல ஆண்டுகளாகத் தங்கள் அனுபவங்களைப் பத்திரிகையாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள், ஆணையங்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆர்வலர்கள் ஆகியோரிடம் மீண்டும் மீண்டும் விவரித்துள்ளனர். சாட்சியமளித்தல் என்பது பெரும்பாலும் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவதாகவும், உணர்ச்சி ரீதியாகச் சோர்வூட்டுவதாகவும், அர்த்தமுள்ள மாற்றத்திலிருந்து தொடர்பற்றதாகவும் ஆகிவிடுகிறது. காணாமல் போன தன் மகனைத் தேடும் ஒரு தாய் இந்தச் சோர்வை இவ்வாறு விவரித்தார்: "நாங்கள் எங்கள் கதைகளைப் பலமுறை கூறியுள்ளோம். நாங்கள் கூட்டங்கள், ஆணையங்கள், நேர்காணல்களுக்குச் செல்கிறோம். ஆனாலும், எதுவும் மாறவில்லை. சில நேரங்களில் மக்கள் பேசிப் பேசிச் சோர்வடைந்து விடுகிறார்கள்." இந்தச் சோர்வு மௌனத்தின் மற்றொரு அடுக்கை உருவாக்குகிறது. அது பயம் மட்டுமல்ல, ஏமாற்றமும் கூட. சாட்சியமளித்தல் பொறுப்புக்கூறலையோ அல்லது அங்கீகாரத்தையோ ஏற்படுத்தத் தவறும்போது, மௌனம் என்பது உணர்ச்சி ரீதியான சுயபாதுகாப்பின் ஒரு வடிவமாக மாறக்கூடும்.

முக்கியமாக, மௌனம் என்பது அதிகாரபூர்வமான கதைகளுடன் உடன்படுவதை எப்போதும் குறிப்பதில்லை. சில சமயங்களில், மௌனம் என்பது மறுப்பாகச் செயல்படுகிறது. மக்கள் அரசால் ஆதரிக்கப்படும் நினைவுச் சின்னங்களில் பங்கேற்காமல் இருக்கத் தேர்வு செய்யலாம் அல்லது வரலாற்றின் அதிகாரபூர்வ பதிப்புகளைப் பொதுவெளியில் விவாதிப்பதைத் தவிர்க்கலாம். ஒரு முன்னாள் ஆசிரியர் விளக்கினார்: "பொதுவெளியில் உண்மையை நேர்மையாகப் பேச முடியும் என்று நம்பாததால் சிலர் மௌனமாக இருக்கிறார்கள்." இந்த மௌனத்தில் ஐயுறவும், மென்மையான எதிர்ப்பும் அடங்கியுள்ளது. சில வகையான பேச்சுகள் உள்வாங்கப்படலாம், திரிக்கப்படலாம் அல்லது அரசியல் ரீதியாக ஆபத்தானதாக மாற்றப்படலாம் என்ற ஒரு விழிப்புணர்வை இது பிரதிபலிக்கிறது. மௌனம் தலைமுறைகளுக்கு இடையிலான உறவுகளையும் கட்டமைக்கிறது. பல பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளை அச்சத்திலிருந்தோ அல்லது மன அதிர்ச்சியிலிருந்தோ பாதுகாக்க வேண்டும் என்ற நம்பிக்கையில், அவர்களைப் போர்க்கால வரலாறுகளிலிருந்து உணர்வுபூர்வமாகப் பாதுகாக்கிறார்கள். வவுனியாவில் உள்ள ஒரு தந்தை விளக்கினார்: "நாங்கள் பிள்ளைகளிடம் எல்லாவற்றையும் சொல்வதில்லை. அவர்கள் அதிக வலியைச் சுமக்காமல் வளர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்." இருப்பினும், இத்தகைய பாதுகாப்பு பெரும்பாலும் துண்டு துண்டான வரலாற்றுப் புரிதலை உருவாக்குகிறது. இளைய தலைமுறையினர், தெளிவான விளக்கங்களை எப்போதும் பெறாமலேயே உணர்ச்சிபூர்வமான சூழல்களைப் பெறுகிறார்கள்.

ஒரு பல்கலைக்கழக மாணவர் இவ்வாறு விளக்கினார்: "எங்கள் பெற்றோர் துன்பப்பட்டார்கள் என்பது எங்களுக்குத் தெரியும், ஆனால் பெரும்பாலும் முழுமையான கதை எங்களுக்குத் தெரியாது." இந்த முழுமையற்ற பரிமாற்றம், துண்டுகளாலும் தெளிவின்மையாலும் வடிவமைக்கப்பட்ட ஒரு வரலாற்று நிலையை உருவாக்குகிறது. குடும்ப மௌனத்தால் ஏற்பட்ட இடைவெளிகளை நிரப்ப, இளைய தலைமுறையினர் பெரும்பாலும் சமூக ஊடகங்கள், புலம்பெயர் சமூகக் கதைகள், திரைப்படங்கள், சக வயது உரையாடல்கள் ஆகியவற்றைச்  சார்ந்திருக்கிறார்கள். அதே சமயம், இளைய தலைமுறையினர் சில சமயங்களில் இந்த மௌனங்களுக்குச் சவால் விடுகின்றனர். பல மாணவர்கள், போரைப் பற்றி பெற்றோரிடம் நேரடியாகக் கேட்டபோது, அவர்கள் தயக்கத்தையோ அல்லது உணர்ச்சி ரீதியான விலகலையோ சந்தித்ததாக விவரித்தனர். ஒரு மாணவர் இவ்வாறு விவரித்தார்: "நான் என் தாயிடம் சில நிகழ்வுகளைப் பற்றிக் கேட்டபோது, அவர் அமைதியாகி, பேச்சை மாற்றினார்." மௌனம் எவ்வாறு வரலாற்றுத் தொடர்ச்சியைத் தடைசெய்ய முடியும் என்பதை இந்தத் தருணங்கள் வெளிப்படுத்துகின்றன. கடந்தகாலம் உணர்ச்சி ரீதியாகச் சுறுசுறுப்பாக இருந்தாலும், அது பகுதியளவு அணுக முடியாததாகவே இருக்கிறது.

மௌனம் நிறுவன இடங்களிலும் ஊடுருவியுள்ளது. ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரசு சாரா நிறுவனப் பணியாளர்கள், பத்திரிகையாளர்கள், போர்க்காலப் பிரச்சினைகளை எவ்வளவு வெளிப்படையாக விவாதிக்கலாம் என்பது குறித்த நிச்சயமற்ற தன்மையை அடிக்கடி எதிர்கொள்கின்றனர். வடக்கில் உள்ள ஒரு விரிவுரையாளர் சொன்னார்: "எல்லைகள் எங்கே இருக்கின்றன என்பதை யாரும் தெளிவாக வரையறுக்காவிட்டாலும், மக்கள் ஓர் உணர்வை வளர்த்துக் கொள்கிறார்கள்." இந்த உள்ளுறைந்த எச்சரிக்கை, இந்தத் தொடர் முழுவதும் ஆராயப்படும் பரந்த போருக்குப் பிந்தைய நிலையைப் பிரதிபலிக்கிறது. ஆளுகை என்பது வெளிப்படையான

ஒழுங்குமுறை மூலம் மட்டுமல்ல, அது நடத்தை மற்றும் கண்ணோட்டத்தை வடிவமைப்பதன் மூலமும் செயல்படுகிறது. ஆயினும், மௌனம் ஒருபோதும் முழுமையானதல்ல. மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட சூழல்களில்கூட, நினைவுகள் மறைமுக வடிவங்களில் நிலைத்திருக்கின்றன. ஒரு கிராமத்தில், குடியிருப்பாளர்கள் அருகிலுள்ள ஒரு வயலை மீண்டும் மீண்டும் "அந்த இடம்" என்று மட்டுமே குறிப்பிட்டனர். யாரும் வெளிப்படையாக விளக்கவில்லை, ஆனால் அது போர்க்கால வன்முறையுடன் தொடர்புடையது என்பதை அனைவரும் புரிந்துகொண்டனர். அந்த நிலப்பரப்பே மௌனத்தின் ஓர் ஆவணமாக மாறுகிறது. அதேபோல், திகதிகள் சொல்லப்படாத முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. பொது நினைவுகூர்தல் இல்லாதபோதும், சில நாட்கள் வீடுகளுக்குள் அமைதியாகக் குறிக்கப்படுகின்றன. எனவே, மௌனம் கூட்டு நினைவை அழிப்பதில்லை; அது அதன் வெளிப்பாட்டை மறுசீரமைக்கிறது.

போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனத்தை ஒரு வகையான வரலாற்று உழைப்பாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்று இனவரைவியல் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. எதை வெளிப்படுத்துவது, மறைப்பது, மென்மையாக்குவது அல்லது ஒத்திப்போடுவது என்பது குறித்து தனிநபர்கள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். இந்த உழைப்பு உணர்வுபூர்வமாக சவாலானது மற்றும் சமூகத்தில் பரவலாகக் காணப்படுகிறது. குறிப்பாக, வீடுகளுக்குள் மௌனத்தை நிர்வகிப்பதில் பெண்கள் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க பொறுப்பை ஏற்கிறார்கள். தாய்மார்களும் விதவைகளும் நினைவுகூர்தலுக்கும் பாதுகாப்பிற்கும் இடையில் அடிக்கடி மத்தியஸ்தம் செய்கிறார்கள்; குழந்தைகள் என்ன தெரிந்துகொள்ள வேண்டும், இழப்பைப் பற்றி எப்படி விவாதிக்க வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்கிறார்கள். கிளிநொச்சியில் உள்ள ஒரு விதவை இவ்வாறு குறிப்பிட்டார்: "குழந்தைகளைப் பயமுறுத்தாமல் நினைவுகூர முயற்சிக்கிறீர்கள்." அவரது கூற்று, பல குடும்பங்கள் நினைவிற்கும் உயிர்வாழ்விற்கும் இடையில் பேண முயற்சிக்கும் நுட்பமான சமநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

மௌனம் வர்க்கம் மற்றும் சமூக நகர்வு ஆகியவற்றுடனும் தொடர்பு கொள்கிறது. வலுவான அரசியல் வலைப்பின்னல்கள், கல்விப் பின்னணிகள் அல்லது புலம்பெயர் சமூக இணைப்புகளைக் கொண்ட தனிநபர்கள் வெளிப்படையாகப் பேச அதிக திறன் கொண்டவர்களாக உணரக்கூடும்; அதே நேரத்தில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் பெரும்பாலும் அதிக எச்சரிக்கையுடன் இருக்கின்றன. அதே நேரத்தில், புலம்பெயர் சமூக இடங்கள் முற்றிலும் மாறுபட்ட பேச்சுச் சூழல்களை உருவாக்கக்கூடும். இலங்கைக்குள்ளேயே இருப்பதை விட, சில புலம்பெயர் சமூகங்களில் போர்க்கால விவரிப்புகள் மிகவும் வெளிப்படையாகவும் அரசியல் ரீதியாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பதிலளிப்பாளர் குறிப்பிட்டார்: "வெளிநாடுகளில் உள்ள மக்கள் வித்தியாசமாகப் பேச முடியும், ஏனெனில் அவர்கள் ஒரே மாதிரியான சூழ்நிலைகளில் வாழ்வதில்லை." இந்த வேறுபாடு, உளளூர் - பன்னாட்டுத் தமிழ்ச் சமூகங்களிடையே மாறுபட்ட வரலாற்றுப் பண்பாடுகளுக்கு வழிவகுக்கிறது.

இறுதியில், போருக்குப் பிந்தைய இலங்கையில் நிலவும் மௌனம், வரலாறு என்பது ஆவணக்காப்பகங்கள், பொது விவரிப்புகள் மூலம் மட்டுமல்ல, இல்லாமைகள், தயக்கங்கள், உணர்ச்சிபூர்வமான சமரசங்கள் மூலமாகவும் உருவாக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. மௌனம் என்பது வரலாற்றிற்கு அப்பாற்பட்டது அல்ல. வரலாறு நிலைத்திருக்கும் வழிகளில் அதுவும் ஒன்றாகும். நினைவில் வைக்கப்பட்டவை மூலம் மட்டுமல்ல, சொல்வதற்குக் கடினமாக இருக்கும் விஷயங்கள் மூலமாகவும் போர் தொடர்கிறது. இந்தப் புரிதல், நிலைமாறுகால நீதிக்கும் நல்லிணக்கத்திற்குமான வழக்கமான அணுகுமுறைகளைச் சிக்கலாக்குகிறது. ஏனெனில் அவை, பேச்சும் சாட்சியமும் மட்டுமே குணமளிப்பதாகவோ அல்லது ஒரு முடிவை எட்டுவதாகவோ பெரும்பாலும் கருதுகின்றன. இலங்கையில், பேச்சு என்பதே சமத்துவமற்ற அரசியல் சூழல்களுக்குள் புதைந்து கிடக்கிறது. மௌனத்தை, உடைக்கப்படக் காத்திருக்கும் ஓர் அடக்குமுறையாக மட்டும் கருதிவிட முடியாது; அது எச்சரிக்கை, சோர்வு, கண்ணியம் மற்றும் தீர்க்கப்படாத துயரம் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட ஓர் அனுபவபூர்வமான உத்தியும் ஆகும்.

## போரின் முரண்பட்ட காலங்கள்

போருக்குப் பிந்தைய இலங்கையின் வரையறுக்கும் பண்புகளில் ஒன்று, போர் அனைவருக்கும் ஒரே மாதிரியாக முடிவடையவில்லை என்பதுதான். மே 2009 அதிகாரபூர்வமாக ஒரு தனித்துவமான வரலாற்றுப் பிளவாக - மோதலில் இருந்து அமைதிக்கான திட்டவட்டமான மாற்றமாக - சித்தரிக்கப்பட்டாலும், போருக்குப் பிந்தைய காலத்தின் வாழ்வனுபவம் ஆழமாகப் பிளவுபட்டும் சீரற்றதாகவும் உள்ளது. வெவ்வேறு சமூகங்கள் போருக்குப் பிந்தைய வெவ்வேறு

காலங்களில் வாழ்கின்றன. சிலருக்கு, போர் உறுதியாகக் கடந்த காலத்தைச் சேர்ந்ததாகி, ஒரு நிறைவுற்ற தேசிய வெற்றியாகவும் கடந்துவந்த ஒரு கடினமான அத்தியாயமாகவும் நினைவுகூரப்படுகிறது. மற்றவர்களுக்கு, போர் அன்றாட வாழ்க்கை, குடும்ப அமைப்புகள், நிலப்பரப்புகள் மற்றும் உணர்வுபூர்வமான உலகங்களுக்குள் பொதிந்துள்ள ஒரு தீர்க்கப்படாத இருப்பாகத் தொடர்கிறது.

போருக்குப் பிந்தைய இலங்கை, முரண்பட்ட காலங்களால் - அதாவது, மக்கள் நினைவகம், இழப்பு, இறையாண்மை மற்றும் எதிர்காலத்தைப் புரிந்துகொள்ளும் விதத்தை வடிவமைக்கும் வரலாற்று நேரத்தின் முரண்பட்ட அனுபவங்களால் - வகைப்படுத்தப்படுகிறது. இந்தக் காலங்கள் வெறுமனே அகநிலை உணர்வுகள் அல்ல. அவை சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் உருவாக்கப்பட்டவை. அரசு, ஒரு முடிவையும், புனரமைப்பையும், முன்னேற்றத்தையும் கொண்ட ஒரு தற்காலிகத் தன்மையை ஊக்குவிக்கிறது. ஆனால், போரினால் பாதிக்கப்பட்ட பல சமூகங்கள் காத்திருப்பு, மீண்டும் மீண்டும் நிகழ்தல், முழுமையடையாமை, தீர்க்கப்படாத துக்கம் ஆகியவற்றின் வழியாகவே காலத்தை அனுபவிக்கின்றன. இந்த அர்த்தத்தில், போர் என்பது ஒரே நேரத்தில் முடிந்தும், தொடர்ந்தும் இருக்கிறது.

2009க்குப் பிறகு அரசின் அதிகாரபூர்வப் பேச்சு, கால இடைவெளியை வலுவாக வலியுறுத்தியது. அரசியல் உரைகள், அபிவிருத்திப் பிரசாரங்கள், நினைவுச் சடங்குகள் ஆகியவை போரின் முடிவை ஒரு புதிய தேசிய சகாப்தத்தின் தொடக்கமாக மீண்டும் மீண்டும் சித்தரித்தன. “அமைதி”, “அபிவிருத்தி”, “மீள்கட்டுமானம்”, “முன்னோக்கிச் செல்லுதல்” ஆகிய சொற்கள் போருக்குப் பிந்தைய ஆட்சிமுறையின் மையமாக மாறின. வீதிகள், பாலங்கள், இருப்புப்பாதைகள், தங்கும் விடுதிகள், நகரப் புனரமைப்புத் திட்டங்கள் ஆகியவை நாடு ஒரு புதிய வரலாற்றுக் காலகட்டத்திற்குள் நுழைந்துவிட்டது என்பதற்கான புலப்படும் அடையாளங்களாக முன்வைக்கப்பட்டன. கொழும்பில் உள்ள ஓர் அரசாங்க அதிகாரி “போர் 2009இல் முடிவடைந்தது. அன்று முதல், நாடு மீள்கட்டுமானத்திலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தி வருகிறது. நாம் எதிர்காலத்தை நோக்கிப் பார்க்க வேண்டும்” என்றார். இந்த எதிர்கால நோக்குடைய பேச்சு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனெனில் அது வரலாற்று முடிவை ஊக்குவிக்கிறது. போருக்குப் பிந்தைய நாடு, கடந்த காலத்தின் பிளவுகளையும் வன்முறையையும் பின்தள்ளி, காலத்திலும் இடத்திலும் முன்னோக்கி நகர்வதாகக் கற்பனை செய்யப்படுகிறது. வளர்ச்சியே ஒரு வரலாற்று மாற்றத்தின் சின்னமாக மாறுகிறது. வடக்குக் கிழக்குப் பகுதிகளில், இந்த முடிவு குறித்த விவரிப்பு பெரும்பாலும் முழுமையற்றதாகவோ அல்லது முன்கூட்டியே நிகழ்ந்ததாகவோ உணரப்படுகிறது. போரினால் பாதிக்கப்பட்ட பலர், போருக்குப் பிந்தைய காலத்தை வன்முறையிலிருந்து ஒரு முழுமையான முறிவாக விவரிக்காமல், அதன் உருமாறிய தொடர்ச்சியாகவே விவரிக்கின்றனர். குண்டுவீச்சும் ஆயுத மோதல்களும் இல்லாதது, ஒரு வரலாற்றுத் தீர்வு ஏற்பட்ட உணர்வை அவசியமாக ஏற்படுத்திவிடாது. முல்லைத்தீவில், போரின் இறுதிக் கட்டங்களில் தன் கணவரை இழந்த ஒரு விதவை “போர் முடிந்துவிட்டது என்று மக்கள் சொல்கிறார்கள். ஆனால், என்ன நடந்தது என்று இன்னும் அறியாத குடும்பங்களுக்கு அது எப்படி முடிவுக்கு வரும்?” என்ற கேள்வியை முன்வைத்தார். அவருடைய கேள்வி, காணாமல் போதலின் நிலையற்ற தன்மையை வெளிப்படுத்துகிறது. காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு, காலம் நம்பிக்கைக்கும் துக்கத்திற்கும் இடையில் உறைந்து நிற்கிறது. இறப்பு அல்லது திரும்புதல் குறித்த உறுதிப்படுத்தல் இல்லாமல், ஒரு முடிவுக்கு வருவது சாத்தியமற்றதாகவே இருக்கிறது. நிச்சயமற்ற தன்மையின் மூலமாகவே போர் தொடர்கிறது.

காணாமல் போனவர்களின் பல தாய்மார்கள், காணாமல் போன உறவினர்கள் திரும்பி வரக்கூடும் என்ற - எவ்வளவு மங்கலாக இருந்தாலும் - சாத்தியக்கூற்றைச் சுற்றியே தங்கள் அன்றாட வாழ்க்கையைத் தொடர்ந்து அமைத்துக் கொள்வதாக விவரித்தனர். வவுனியாவில் உள்ள ஒரு பெண், தன் மகனுக்குச் சொந்தமான ஒரு ஜோடி ஆடைகளை இன்னும் ஓர் அலமாரியில் கவனமாக மடித்து வைத்திருப்பதாக விளக்கினார். “என்னால் அவற்றை தூக்கி எறிய முடியாது, பதில் கிடைக்காத வரை, இந்தக் கதை முடிவடையாது” என்றார். இந்த முடிவடையாத நிலை, கால அனுபவத்தை ஆழமாக வடிவமைக்கிறது. நாட்காட்டி முன்னோக்கி நகர்கிறது, ஆனால் உணர்வுபூர்வமாகவும் அரசியல் ரீதியாகவும், சில தருணங்கள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. குடும்பங்கள் ஒரு முடிவுக்கு வராமல், அதே திகதிகள், நினைவுகள், கேள்விகளை மீண்டும் மீண்டும் சந்திக்கின்றன. காத்திருத்தல் என்பது போருக்குப் பிந்தைய காலத்தின் மையமான கால வடிவங்களில் ஒன்றாக மாறுகிறது.

இந்தக் காத்திருப்பு செயலற்றதல்ல. அது அன்றாட வழக்கங்கள், உணர்வுபூர்வமான வாழ்க்கை மற்றும் அரசியல் ஈடுபாட்டை வடிவமைக்கிறது. ஆயினும், அது சோர்வையும் ஏற்படுத்துகிறது. காணாமல் போனவர்களின் குடும்பங்களுடன் பணிபுரியும் ஒரு

செயற்பாட்டாளர் சொன்னார்: “பலர் கடந்த காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் இடையில் சிக்கிக்கொண்டதாக உணர்கிறார்கள். அவர்களால் முழுமையாகத் துக்கிக்கவும் முடியவில்லை, அதே சமயம் அவர்களால் முழுமையாக அதிலிருந்து மீண்டு வரவும் முடியவில்லை.” “மீண்டு வர” முடியாத இந்த இயலாமையானது, சமரசம் செய்துகொள்வதற்கான அரசியல் விருப்பமின்மையின் சான்றாக அதிகாரபூர்வ உரையாடல்களால் அடிக்கடி விளக்கப்படுகிறது. ஆயினும், இனவரைவியல் ரீதியாக, இது மிகவும் சிக்கலான ஒன்றைப் பிரதிபலிக்கிறது. அதாவது இது, சாதாரண வாழ்க்கைக்குள் தீர்க்கப்படாத வன்முறை நீடிப்பது பற்றியது.

போட்டியிடும் காலங்கள் நினைவுச் சடங்குகளிலும் காணப்படுகின்றன. அரசால் ஆதரிக்கப்படும் வெற்றி நாள் நிகழ்வுகள், ஒரு முடிவையும் வெற்றியையும் கொண்டாடுகின்றன. போர் என்பது ஒரு நிறைவுற்ற வரலாறாக விவரிக்கப்படுகிறது. இராணுவத் தியாகமும் தேசிய மீட்பும் மீட்டெடுக்கப்பட்ட இறையாண்மையின் கட்டமைப்பிற்குள் நினைவுகூரப்படுகிறது. இதற்கு மாறாக, தமிழ் நினைவு அனுசரிப்புகள், கடந்தகாலத் துன்பங்களுக்கும் தற்போதைய நிலைக்கும் இடையிலான தொடர்ச்சியைப் பெரும்பாலும் வலியுறுத்துகின்றன. நினைவு அனுசரிப்பு என்பது ஒரு முடிவை நோக்கியதை விட, தொடர்ச்சியான நினைவுகூரலை நோக்கியே அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில், ஒரு பல்கலைக்கழக மாணவர் நினைவுக் காலங்களைச் சுற்றியுள்ள சூழலை இவ்வாறு விவரித்தார்: “அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இது கடந்தகால வெற்றியைப் பற்றியது. இங்குள்ள பல குடும்பங்களுக்கு, இது நிகழ்காலத்தில் தொடரும் இழப்பைப் பற்றியது.” இந்த வேறுபாடு, நினைவகம் என்பது நிகழ்வுகளின் விளக்கத்தைப் பற்றியது மட்டுமல்ல, வரலாற்றுக் காலத்தின் அனுபவத்தைப் பற்றியதுமாகும் என்பதை வெளிப்படுத்துகிறது.

தலைமுறை வேறுபாடுகள் போருக்குப் பிந்தைய காலத்தன்மையை மேலும் சிக்கலாக்குகின்றன. இடப்பெயர்வு, குண்டுவீச்சு, தடுப்புக்காவல் அல்லது போராளிகளின் அணிதிரட்டலை அனுபவித்த மூத்த தலைமுறையினர், பெரும்பாலும் போர்க்கால வாழ்க்கையின் ஆழமான நினைவுகளைத் தங்கள் உடலிலேயே சுமந்து செல்கின்றனர். இளைய தலைமுறையினர், குறிப்பாகப் போரின்போது குழந்தைகளாக இருந்தவர்கள் அல்லது 2009க்குப் பிறகு பிறந்தவர்கள், மோதலுடன் துண்டு துண்டான கால உறவுகளைப் பெறுகிறார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு பல்கலைக்கழக மாணவர்; “நாங்கள் போருக்குப் பிறகு வளர்ந்தோம், ஆனால் கதைகளிலும், மௌனங்களிலும், அரசியலிலும் போர் இன்னும் எல்லா இடங்களிலும் இருக்கிறது என்பதை உணர்கிறோம்” என்றார்.

இளம் தலைமுறையினருக்கு, போர் பெரும்பாலும் ஒரு முரண்பாடான வரலாற்று இருப்பாகத் தோன்றுகிறது. ஒரே நேரத்தில் தொலைவிலும் அண்மையிலும் இருப்பது போல உணர்வதாகப் பலர் தெரிவித்தனர். அவர்கள் போர்க்கள வன்முறையை நேரடியாக நினைவில் வைத்திருக்காமல் இருக்கலாம், ஆனாலும் அவர்கள் இராணுவமயமாக்கல், நினைவுகூர்தல், தீர்க்கப்படாத இழப்புகள் ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட நிலப்பரப்புகளில் வாழ்கிறார்கள். உயர்தரம் கற்கின்ற பாடசாலை மாணவன் “சில நேரங்களில், முழுமையாக அனுபவிக்காத ஒரு போரின் அங்கமாக நாங்கள் இருப்பது போல் உணர்கிறோம்” என்று தனது எண்ணத்தை விவரித்தான்.

இந்த மரபுவழிப்பட்ட காலத்தன்மை, நினைவிற்கும் அடையாளத்திற்கும் இடையே ஒரு சிக்கலான உறவை உருவாக்குகிறது. அதே நேரத்தில், சில இளம் பதிலளிப்பாளர்கள், தாங்கள் மரபுவழியாகப் பெற்ற நினைவுகளின் உணர்ச்சிபூர்வமான சுமையாக உணர்ந்தவற்றின் மீது தங்கள் விரக்தியை வெளிப்படுத்தினர். யாழ்ப்பாணத்தில் ஓர் இளைஞர் இவ்வாறு குறிப்பிட்டார்: “மூத்த தலைமுறையினர் இன்னும் போரின் சுமையைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள். இளைஞர்களுக்கு வேலைகளும், நிலைத்தன்மையும், சாதாரண வாழ்க்கையும் வேண்டும்.” இந்தக் கூற்று, போருக்குப் பிந்தைய சமூகத்தில் நிலவும் மற்றொரு காலப் பதற்றத்தைப் பிரதிபலிக்கிறது, அதாவது, நினைவிற்கும் இலட்சியத்திற்கும் இடையிலான பதற்றம். சிலர் நினைவுகூர்தலுக்கும் வரலாற்று அங்கீகாரத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கும்போது, மற்றவர்களோ பொருளாதாரப் பிழைப்புக்கும் எதிர்கால வாய்ப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்றனர். முக்கியமாக, இந்த நிலைப்பாடுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. பலர் தீர்க்கப்படாத துக்கத்தைச் சுமந்துகொண்டே, நிலையான எதிர்காலத்தை உருவாக்கப் பாடுபடுகின்றனர். போருக்குப் பிந்தைய நிலை என்பது, ஒரே ஒரு காலகட்டத்தில் மட்டும் வாழ்வதை விட, ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தும் காலங்களில் வாழ்வதை உள்ளடக்கியது.

முள்ளிவாய்க்காலில், ஒருவர் விளக்கினார்: “நீங்கள் முன்னோக்கிச் செல்ல முயன்றாலும், அந்த நிலம் உங்களுக்கு நினைவூட்டுகிறது”. நிலக்காட்சிக்கும்

நினைவிற்கும் இடையிலான இந்த உறவு, காலம் எவ்வாறு இடஞ்சார்ந்ததாக மாற்றப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. கடந்த காலம் என்பது அருவமானதல்ல் அது அன்றாட நடமாட்டத்தின் மூலம் உடல்ரீதியாக எதிர்கொள்ளப்படுகிறது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு மீனவர், போர்க்கால இடப்பெயர்ச்சியுடன் தொடர்புடைய சில கடலோரப் பகுதிகளை இதேபோல் விவரித்தார்: "நாங்கள் அங்கு செல்லும்போது, வயதானவர்களுக்கு உடனடியாக நினைவுக்கு வருகிறது. அந்த இடமே நினைவுகளைத் தாங்கி நிற்கிறது." இடங்கள், நிகழ்கால வாழ்க்கையை பேரழிவுகரமான வரலாறுகளுடன் இணைக்கும் காலப் பிணைப்புகளாக மாறுகின்றன. வளர்ச்சி குறித்த உரையாடல்கள் மூலமாகவும் போட்டி மனப்பான்மைகள் வெளிப்படுகின்றன. உட்கட்டமைப்புத் திட்டங்கள், நாடு போரைக் கடந்துவிட்டது என்பதற்கான சான்றாக அரசால் அடிக்கடி கட்டமைக்கப்படுகின்றன. வீதிகள், நெடுஞ்சாலைகள், சுற்றுலாத் தலங்கள், நகர விரிவாக்கம் ஆகியவை தேசிய முன்னேற்றத்தின் சின்னங்களாக விளங்குகின்றன. இருப்பினும், பல குடியிருப்பாளர்கள் இந்தத் திட்டங்களை இருவிதமான உணர்வுகளுடன் புரிந்துகொள்கின்றனர். உட்கட்டமைப்பு மேம்பாடுகள் சமூகங்களுக்குப் பொருள்ரீதியாகப் பயனளித்தாலும், அவை உணர்வுபூர்வமான அல்லது அரசியல்ரீதியான ஒரு நிறைவை அவசியமாக ஏற்படுத்துவதில்லை. கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு விவசாயி இவ்வாறு சொன்னார்: "சாலைகள் நல்லது. மின்சாரம் நல்லது. ஆனால், நடந்ததை இவையெல்லாம் அழித்துவிடாது". இந்த வேறுபாடு மிக முக்கியமானது. வளர்ச்சியானது முன்னேற்றம், நவீனமயமாக்கல் என்ற கால வரையறைக்குள் இயங்குகிறது, ஆயினும் துயரமும் வரலாற்று அநீதியும் பெரும்பாலும் இந்தக் கட்டமைப்பிற்கு வெளியே நீடிக்கின்றன.

வளர்ச்சி குறித்த உரையாடலானது, தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் முன்பே "முன்னேறிச் செல்ல வேண்டும்" என்ற ஒருவித கால அழுத்த உணர்வைக்கூட ஏற்படுத்துகிறது என்று சிலர் தெரிவித்தனர். ஓர் ஆசிரியர் இதை இவ்வாறு விளக்கினார்: "சில சமயங்களில், வளர்ச்சி வந்துவிட்டதால் மக்கள் விரைவாக மறந்துவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவது போல் உணர்கிறேன்". இந்த எதிர்பார்ப்பு, முன்னேற்றம் குறித்த அதிகாரபூர்வ விவரிப்புகளுக்கும், முழுமையடையாத தன்மை குறித்த உள்ளூர் அனுபவங்களுக்கும் இடையே பதற்றங்களை ஏற்படுத்துகிறது. புலம்பெயர்ந்தோரின் காலத்தன்மை மீண்டும் வேறுபடுகிறது. பல புலம்பெயர் சமூகங்கள், போருடன் மிகவும் நினைவுகூரத்தக்க, அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உறவுகளைப் பேணுகின்றன. இலங்கைக்குள் உள்ள உள்ளூர் நடைமுறைகளை விட, வெளிநாடுகளில் நடைபெறும் நினைவு நிகழ்வுகள் பெரும்பாலும் வலுவான தேசியவாத சின்னங்களையும் வரலாற்றுத் தொடர்ச்சியையும் கொண்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் ஒருவர் குறிப்பிட்டார்: "வெளிநாட்டில் உள்ள மக்கள், போர் முடிவதற்கு முன்பே வெளியேறிவிட்டதால், சில சமயங்களில் உணர்வுபூர்வமாக போருக்குள்ளேயே இருக்கிறார்கள்." புலம்பெயர்ந்தோரின் காலத்தன்மைகள், நாடுகடத்தல், தூரம் மற்றும் நாடுகடந்த நினைவு நடைமுறைகளால் வடிவமைக்கப்படுகின்றன. சில உள்ளூர்வாசிகளுக்கு, இந்த விவரிப்புகள் உணர்வுபூர்வமாக சக்தி வாய்ந்தவையாகத் தோன்றினாலும், போருக்குப் பிந்தைய அன்றாட வாழ்வின் நடைமுறை யதார்த்தங்களிலிருந்து துண்டிக்கப்பட்டவையாக உள்ளன. இதை ஒரு விவசாயி அழகாக விளக்கினார்: "இங்குள்ள மக்கள் ஒவ்வொரு நாளும் உயிர் பிழைப்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும். அது நீங்கள் கடந்த காலத்தைக் கையாளும் விதத்தை மாற்றுகிறது". எனவே, போரின் காலத்தன்மைகள் புவியியல் ரீதியாகவும் சீரற்றவையாக உள்ளன.

நிறுவன மட்டத்தில், நிலைமாறுகால நீதி முயற்சிகளும் குறிப்பிட்ட கால அனுமானங்கள் மூலம் செயல்படுகின்றன. உண்மை ஆணையங்கள், விசாரணைகள், நல்லிணக்கக் கட்டமைப்புகள் ஆகியவை பெரும்பாலும் வன்முறையிலிருந்து குணமடைதல், ஒரு முடிவுக்கு வருதல் ஆகியவற்றை நோக்கிய ஒரு நேர்கோட்டு நகர்வையே அனுமானிக்கின்றன. ஆயினும், பதிலளித்தவர்களில் பலர் போருக்குப் பிந்தைய காலத்தை ஒரு நேர்கோட்டு மாற்றமாக அல்லாமல், ஒரு சுழற்சிமுறைத் திரும்பத் திரும்ப நிகழ்தலாகவே அனுபவிக்கின்றனர். குடும்பங்கள் மீண்டும் மீண்டும் கூட்டங்களில் கலந்துகொள்கின்றன, ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றன, சாட்சியமளிக்கின்றன, மேலும் அரிதாகவே வரும் பதில்களுக்காகக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு புதிய ஆணையமும் காயங்களை மீண்டும் கிளறுவதோடு, நிச்சயமற்ற தன்மையையும் மீண்டும் உருவாக்குகிறது. காணாமல் போனவர்களின் தாய் ஒருவர் குறிப்பிட்டார்: "ஒவ்வொரு சில வருடங்களுக்கும் ஒரு புதிய செயல்முறை தொடங்குகிறது. நாங்கள் இந்தக் கதையை மீண்டும் மீண்டும் சொல்கிறோம்." இந்தத் திரும்பத் திரும்ப நிகழ்தலே சோர்வூட்டுகிறது. காலம் முன்னேறுவதாக இல்லாமல், தேங்கி நிற்பதாக உணர்கிறோம். இந்தச் சுழற்சிமுறைக் காலப்போக்கு, "முழுமையான மாற்றம்" என அரசு கூறும் கூற்றுக்கு முற்றிலும் முரணாக உள்ளது. போருக்குப் பிந்தைய தேசம் அதிகாரபூர்வமாக

முன்னேறுகிறது, ஆனால் பல தனிநபர்கள் காத்திருப்புக்குள்ளும் தீர்க்கப்படாத துயரத்தின் திரும்பத் திரும்ப வரும் கட்டமைப்புகளுக்குள்ளும் சிக்கித் தவிக்கின்றனர்.

அதே சமயம், சாதாரண வாழ்க்கை தொடர்கிறது. குழந்தைகள் பாடசாலைக்குச் செல்கிறார்கள், வணிகங்கள் இயங்குகின்றன, திருமணங்கள் நடைபெறுகின்றன, இடப்பெயர்வு சமூகங்களை மறுவடிவமைக்கிறது. கடந்த காலம் தீர்க்கப்படாமல் இருக்கும்போதும், அன்றாட வாழ்விற்கு எதிர்காலத்துடனான ஈடுபாடு அவசியமாகிறது. மன்னாரில் உள்ள ஒரு கடைக்காரர் இவ்வாறு குறிப்பிட்டார்: "மக்கள் நினைவுகளுக்குள் மட்டுமே வாழ முடியாது. வாழ்க்கை உங்களைத் தொடரச் செய்கிறது". தொடர்ச்சிக்கும் முழுமையின்மைக்கும் இடையிலான இந்த முரண்பாடே போருக்குப் பிந்தைய காலப்போக்கின் மையத்தில் உள்ளது. மக்கள் நடைமுறையில் முன்னேறினாலும், தீர்க்கப்படாத வரலாறுகளுடன் உணர்வுபூர்வமாகவும் அரசியல் ரீதியாகவும் இணைந்தே இருக்கிறார்கள்.

போருக்குப் பிந்தைய இலங்கையை ஒரேயொரு காலக் கட்டமைப்பின் மூலம் புரிந்துகொள்ள முடியாது என்பதை இனவரைவியல் சான்றுகள் சுட்டிக்காட்டுகின்றன. மாறாக, பல காலங்கள் ஒருங்கே நிலவுகின்றன. இந்தக் காலங்கள் ஒன்றையொன்று வெட்டிக்கொள்கின்றன, போட்டியிடுகின்றன, ஒன்றையொன்று வடிவமைக்கின்றன. ஆகவே, போர் என்பது கடந்த காலத்தில் மட்டுமே அமைந்திருக்கவில்லை. அது நிறுவனங்கள், உடல்கள், நிலப்பரப்புகள் மற்றும் உணர்வுசார் உலகங்கள் என அனைத்திலும் சீரற்ற முறையில் நீடிக்கிறது. வெவ்வேறு சமூகங்கள் போரின் வெவ்வேறு "பின்" நிலைகளில் வாழ்கின்றன, மேலும் இந்த வேறுபாடுகள் அரசியல் வாழ்வையும், வரலாற்று உணர்வையும், நல்லிணக்கத்திற்கான சாத்தியக்கூறுகளையும் ஆழமாக வடிவமைக்கின்றன. போருக்குப் பிந்தைய இலங்கையைப் புரிந்துகொள்ள, பேரழிவு ஒரே சீராக முடிவடைவதில்லை என்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். வரலாற்று முடிவுகள் சீரற்ற முறையில் பரவியுள்ளன. சிலருக்கு நிறுவன ரீதியாகவும் குறியீட்டு ரீதியாகவும் ஒரு முடிவு எட்டப்பட அனுமதிக்கப்படுகிறது. மற்றவர்களோ தீர்க்கப்படாத காலச் சூழல்களுக்குள் தொடர்ந்து வாழ்கின்றனர்.

### ஆவணப்படுத்தலின் அரசியலும் மனித உரிமை ஆவணக்காப்பகங்களும்

அதிகாரபூர்வ அரசின் நினைவகம் வெற்றியினதும் தேசிய மீட்சியினதும் ஒரு கதையை நிலைப்படுத்த முயன்றால், சர்வதேச மனித உரிமைகள் ஆவணப்படுத்தலானது சான்றுகள், பொறுப்புக்கூறல், சாட்சியங்கள், சட்ட அங்கீகாரம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட முற்றிலும் வேறொரு ஆவணக்காப்பக முறையை அறிமுகப்படுத்துகிறது. போர் முடிவடைந்ததைத் தொடர்ந்த ஆண்டுகளில், சர்வதேச அமைப்புகள், ஐக்கிய நாடுகள் அமைப்புகள், மனித உரிமைகள் நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், புலம்பெயர் ஆதரவு வலையமைப்புகளின் பணிகள் மூலம் ஏராளமான அறிக்கைகள், சாட்சியங்கள், செயற்கைக்கோள் படங்கள், தடயவியல் பகுப்பாய்வுகள், சாட்சி வாக்குமூலங்கள், உயிரிழப்பு மதிப்பீடுகள், புலனாய்வு இதழ்கள் ஆகியவை வெளிவந்தன. இந்த ஆவணக்காப்பகங்கள் போர்க்கால வன்முறையை ஆவணப்படுத்தவும், பொதுமக்களின் துன்பங்களையும் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளையும் குறைத்து மதிப்பிட்ட அதிகாரபூர்வ கதைகளுக்குச் சவால் விடுக்கவும் முயன்றன. ஆயினும், போருக்குப் பிந்தைய இலங்கையில் ஆவணப்படுத்தலின் அரசியல் என்பது உண்மைக்கும் மறுப்புக்கும் இடையிலான ஓர் எளிய எதிர்ப்பை விட மிகவும் சிக்கலானது. மனித உரிமைகள் ஆவணக்காப்பகங்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவை அல்ல. அவை சட்டக் கட்டமைப்புகள், நிறுவன முன்னுரிமைகள், புவிசார் அரசியல் அழுத்தங்கள் மற்றும் சான்றுகளின் சட்டபூர்வத்தன்மைக்கான கோரிக்கைகளால் வடிவமைக்கப்பட்ட அறிவு உற்பத்தியின் ஒரு தனித்துவமான முறையை உருவாக்குகின்றன. அவை ஒரே நேரத்தில் அங்கீகாரத்தை சாத்தியமாக்குவதோடு, புதிய வகை நுண்புலக் கருத்துகளையும் உருவாக்குகின்றன. அவை நினைவுகளைப் பாதுகாப்பதோடு, அனுபவித்த துன்பங்களை நிர்வாக மற்றும் சட்டரீதியான பிரிவுகளாக மொழிபெயர்க்கவும் செய்கின்றன. எனவே, ஆவணப்படுத்தல் என்பது ஒரு தார்மீகத் தேவையாகவும், அதே சமயம் ஒரு பதற்றமான களமாகவும் மாறுகிறது.

பல உயிர் பிழைத்தவர்களுக்கும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கும், போருக்குப் பிறகு புலனாய்வாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் வருகையானது, அவர்களின் அனுபவங்கள் பகிரங்கமாக அங்கீகரிக்கப்பட்டதாகத் தோன்றிய சில தருணங்களில் ஒன்றாக அமைந்தது. மற்றபடி ஓரங்கட்டப்பட்ட துன்பங்கள் சர்வதேச உரையாடலில் நுழைவதற்கான ஒரு வழியாக சாட்சியம் அமைந்தது. வவுனியாவில், போரின் இறுதி மாதங்களில் காணாமல் போன தன் கணவர் பற்றி ஒரு பெண், சர்வதேசப் புலனாய்வாளர்களுடன் பேசியதைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார்: "குறைந்தபட்சம் யாரோ

ஒருவர் எங்கள் பேச்சைக் கவனமாகக் கேட்டார். இங்கே, பலர் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்த்தனர். வெளியாட்கள் வந்து விஷயங்களை எழுதினார்கள்." அவரது கூற்று, அங்கீகாரத்தின் குறியீட்டு முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது. ஆவணப்படுத்தல் சட்டரீதியான பொறுப்புக்கூறலுக்கான வாய்ப்பை மட்டுமல்ல, தார்மீகப் பார்வைக்கான வாய்ப்பையும் வழங்குகிறது. பதிவு செய்யப்படுவது என்பது, ஒரு வகையில், அழிவை எதிர்ப்பதாகும்.

அதே நேரத்தில், பல பதிலளிப்பவர்கள் இந்த செயல்முறைகள் குறித்து இருவிதமான மனநிலைகளை வெளிப்படுத்தினர். சாட்சியங்களைச் சேகரிப்பதில், பல ஆண்டுகளாக வெவ்வேறு அமைப்புகளிடம் அதிர்ச்சியூட்டும் அனுபவங்களை மீண்டும் மீண்டும் கூறுவது அடங்கியிருந்தது. கிளிநொச்சியில் உள்ள ஓர் அரசியற் செயற்பாட்டாளர் விளக்கினார்: "மக்கள் அரசு சாரா நிறுவனங்கள், ஆணையங்கள், பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஐ.நா. குழுக்கள் ஆகியோரிடம் வாக்குமூலம் அளித்துள்ளனர். சில நேரங்களில் அதே கதை மீண்டும் மீண்டும் சொல்லப்படுகிறது." இந்தத் திரும்பத் திரும்பக் கூறுதல் உணர்ச்சி ரீதியான சோர்வை உருவாக்குகிறது. சாட்சியம் அளிப்பது ஓர் உழைப்பாக மாறுகிறது. அது அர்த்தமுள்ள மாற்றத்தை அவசியமாக உருவாக்காமல், நேரம், உணர்ச்சி ஆற்றல் மற்றும் பாதிப்புக்குள்ளாகும் தன்மையைக் கோருகிறது. காணாமலாக்கப்பட்ட ஒருவரின் தாய் குறிப்பிட்டார்: "நாங்கள் பேசுகிறோம், அவர்கள் பதிவு செய்கிறார்கள், அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். ஆனால் எங்கள் வாழ்க்கை அப்படியேதான் இருக்கிறது."
ஆவணப்படுத்துதலுக்கும் வாழ்ந்த மாற்றத்திற்கும் இடையிலான இந்த இடைவெளி நேர்காணல்கள் முழுவதும் மீண்டும் மீண்டும் வெளிப்பட்டது. மனித உரிமை ஆவணக் காப்பகங்கள் சான்றுகளைப் பாதுகாத்து சர்வதேச உரையாடலை வடிவமைக்கக்கூடும், ஆயினும் அன்றாட வாழ்வில் அவற்றின் நடைமுறைத் தாக்கம் பெரும்பாலும் குறைவாகவோ அல்லது தாமதமாகவோ காணப்படுகிறது. அங்கீகாரம் என்பது நீதி, இழப்பீடு அல்லது அரசியல் தீர்வை அவசியமாக உருவாக்குவதில்லை. எனவே, ஆவணப்படுத்துதலின் அரசியல் காலத்துடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது.

மனித உரிமை அமைப்புகள் மெதுவாக, பெரும்பாலும் பல ஆண்டுகள் அல்லது பத்தாண்டுகளாகச் செயல்படுகின்றன. அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் உடனடிப் பொருளாதார மற்றும் உணர்ச்சி ரீதியான யதார்த்தங்களுடன் தொடர்ந்து வாழ்கின்றனர். சர்வதேச அறிக்கைகள் உலகளவில் பரவுகின்றன, ஆனால் உள்ளூர் நிலைமைகள் ஒப்பீட்டளவில் மாறாமல் இருக்கலாம். ஒரு முன்னாள் மனிதாபிமானப் பணியாளர் இவ்வாறு குறிப்பிட்டார்: "சர்வதேசப் பொறுப்புக்கூறலின் கால அளவுக்கும் உயிர்வாழ்வதற்கான கால அளவுக்கும் இடையில் சில நேரங்களில் ஒரு பொருத்தமின்மை உள்ளது". பல குடும்பங்களுக்கு, தீர்க்கப்படாத சட்ட மற்றும் வரலாற்றுச் செயல்முறைகளுடன் அன்றாட வாழ்க்கையும் தொடர்கிறது. காத்திருத்தல் மீண்டும் மையமாகிறது. காணாமல் போன உறவினர்களுக்காகவோ அல்லது நில ஆவணங்களுக்காகவோ காத்திருப்பது மட்டுமல்லாமல், அங்கீகாரம், நீதி அல்லது நிறுவன ரீதியான பதிலுக்காகவும் காத்திருத்தல்.

மனித உரிமை ஆவணக்காப்பகங்கள், வன்முறை புரிந்துகொள்ளப்படும் வடிவத்தையும் உருவாக்குகின்றன. ஒரு தமிழ் ஆர்வலர் விளக்கினார்: "சர்வதேச அமைப்புகள் குறிப்பிட்ட வகையான கேள்விகளைக் கேட்கின்றன, ஏனெனில் அவற்றுக்குச் சட்டச் சான்றுகள் தேவைப்படுகின்றன. ஆனால் மக்களின் வாழ்க்கை, வகைப்படுத்தல்களை விட மிகவும் சிக்கலானது".

சட்டரீதியான கருத்தியல்களுக்கும், அனுபவபூர்வமான சிக்கலான தன்மைக்கும் இடையிலான இந்த முரண்பாடு, ஆவணப்படுத்தல் அரசியலுக்கு மையமானது. ஆவணக்காப்பகம், சர்வதேசச் சட்டக் கட்டமைப்பிற்குள் கோரிக்கைகளைத் தெளிவுபடுத்துவதற்காக அவற்றை எளிமைப்படுத்துகிறது. ஆயினும், இந்த எளிமைப்படுத்தல், போர்க்கால அனுபவத்தின் சமூக மற்றும் உணர்ச்சிபூர்வமான தன்மையைச் சமப்படுத்தவும் கூடும். உதாரணமாக, இடப்பெயர்வு நிர்வாக ரீதியாக வகைப்படுத்தப்படலாம், ஆனால் இனவரைவியல் ரீதியாக அது உறவுமுறை வலைப்பின்னல்களின் சிதைவு, வாழ்வாதார இழப்பு, உணர்ச்சி ரீதியான திசைமாற்றம், சொந்தம் என்ற உணர்வில் ஏற்படும் நீண்டகால மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. அதேபோல், காணாமல் போதல் என்பது ஒரு சட்டரீதியான நிலை மட்டுமல்ல. அது அன்றாடக் காலத்தையும் குடும்ப வாழ்க்கையையும் மறுசீரமைக்கும் ஒரு நிலையாகும். முல்லைத்தீவில் உள்ள ஒரு பெண் இந்தச் சிக்கலான தன்மையை விவரித்தார்: "அவர்கள் கேள்விகள் கேட்கும்போது, திகதிகளையும் விவரங்களையும் கேட்கிறார்கள். ஆனால் அந்தக் காலங்களில் வாழ்வது

என்பது குழப்பம், பயம், ஓட்டம், மக்களை இழப்பது என்பதாக இருந்தது." அவரது கூற்று, அதிகாரத்துவச் சான்றுகளுக்கும் உடலால் உணரப்பட்ட நினைவுகளுக்கும் இடையிலான இடைவெளியை எடுத்துக்காட்டுகிறது. அதே நேரத்தில், மனித உரிமைகள் ஆவணக்காப்பகங்கள், அரசை மையமாகக் கொண்ட விவரிப்புகளுக்கு சவால் விடுப்பதாலேயே, அவை பெரும்பாலும் அரசியல் ரீதியாக சர்ச்சைக்குரியதாக மாறுகின்றன. பொதுமக்கள் உயிரிழப்புகள், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகள் மீதான குண்டுவீச்சு, அல்லது காணாமல் போதல் ஆகியவற்றை ஆவணப்படுத்தும் அறிக்கைகள், தேசியவாத சக்திகளால் ஒருதலைப்பட்சமானவை, மிகைப்படுத்தப்பட்டவை, அல்லது அரசியல் உள்நோக்கம் கொண்டவை எனக் கூறி அடிக்கடி நிராகரிக்கப்படுகின்றன.

ஓய்வுபெற்ற சிங்கள இராணுவ அதிகாரி ஒருவர் இந்த ஐயுறவை இவ்வாறு பிரதிபலித்தார்: "சர்வதேச அமைப்புகள் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவில்லை. அவை அரசுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் மட்டுமே கவனம் செலுத்தின." இந்தக் கண்ணோட்டம், ஆவணப்படுத்துதலே எவ்வாறு அரசியல்மயமாக்கப்படுகிறது என்பதை வெளிப்படுத்துகிறது. மனித உரிமைகள் ஆவணக்காப்பகங்கள் நடுநிலையான உண்மையாக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவை இறையாண்மை, தேசியம், சட்டபூர்வத்தன்மை ஆகிய போட்டிக் கட்டமைப்புகளின் மூலம் விளக்கப்படுகின்றன. பல அரசுத் தரப்பினருக்கு, சர்வதேச ஆவணப்படுத்துதல் என்பது போருக்குப் பிந்தைய வெற்றி விவரிப்புகளின் தார்மீக அடித்தளத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது. போர்க்கால வன்முறை சர்வதேச அளவில் குற்றச்செயல் அல்லது சட்டவிரோதமானது என அங்கீகரிக்கப்பட்டால், இராணுவ வெற்றியின் சட்டபூர்வத்தன்மையே நிலை குலைந்துவிடும். மனித உரிமைகள் அறிக்கைகளின் பரவலானது, அறிவின் சீரற்ற புவியியலையும் உருவாக்குகிறது. போரினால் பாதிக்கப்பட்ட பல சமூகங்கள் பல்வேறு அறிக்கைகள் இருப்பதை உணர்ந்திருந்தாலும், அவற்றை நேரடியாக அணுகும் வாய்ப்பு அவற்றுக்குக் கிடைக்காமல் இருக்கலாம். அரசு சாரா நிறுவனங்கள், ஆர்வலர்கள், புலம்பெயர் சமூக வலைப்பின்னல்கள் மற்றும் ஊடகச் செய்திகள் ஆகியவற்றின் மூலம் தகவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையில் பரவுகின்றன. டிஜிட்டல் ஊடகங்கள் இந்த ஆவணக்காப்பக நிலப்பரப்பை கணிசமாக மாற்றியுள்ளன. காணொளிகள், புகைப்படங்கள், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் கசிந்த போர்க்காலக் காட்சிகள் ஆகியவை இணையத் தளங்கள் வழியாக பரவலாகப் பரவி, பாரம்பரிய அரசால் கட்டுப்படுத்தப்படும் ஆவணக்காப்பகங்களைத் தவிர்த்து, நாடுகடந்த நினைவு வலைப்பின்னல்களை உருவாக்குகின்றன. இந்த டிஜிட்டல் ஆவணக்காப்பகங்களைத் தக்கவைப்பதில் புலம்பெயர் சமூகங்கள் குறிப்பாக முக்கிய பங்காற்றுகின்றன. இணையவழி நினைவுப் பக்கங்கள், ஆவணப்படத் திட்டங்கள், யூடியூப் காணொளிகள், சமூக ஊடகப் பிரசாரங்கள் ஆகியவை இலங்கையின் அதிகாரபூர்வ நினைவில் ஓரங்கட்டப்பட்டிருக்கும் விவரிப்புகளைப் பாதுகாக்கின்றன. ஓர் இளம் தமிழ் ஆர்வலர் குறிப்பிட்டார்: "அதிகாரபூர்வ வரலாற்றில் எளிதில் இடம்பெற முடியாத விஷயங்களுக்கான ஆவணக்காப்பகமாக இணையம் மாறியுள்ளது." ஆயினும், டிஜிட்டல் நினைவகம் புதிய சிக்கல்களையும் அறிமுகப்படுத்துகிறது. இணையவழி ஆவணக்காப்பகங்கள் பெரும்பாலும் உணர்ச்சிபூர்வமானவையாகவும், அரசியல் ரீதியாகப் பிளவுபட்டவையாகவும், சரிபார்ப்பதற்கு கடினமானவையாகவும் உள்ளன. படங்கள் சூழலிலிருந்து துண்டிக்கப்பட்டுப் பரவுகின்றன. அதே நேரத்தில் போட்டி விவரிப்புகள் 'அல்காரிதமிக்' மறுபடியாக்கத்தின் மூலம் தீவிரமடைகின்றன.

ஆவணப்படுத்துதலின் அரசியலும் அச்சம் மற்றும் கண்காணிப்பால் வடிவமைக்கப்படுகிறது. பல பதிலளித்தவர்கள், குறிப்பாக போருக்குப் பிந்தைய ஆரம்ப ஆண்டுகளில், விசாரணைகள் அல்லது சாட்சியச் சேகரிப்பு செயல்முறைகளில் பங்கேற்பது குறித்து தயக்கம் தெரிவித்ததாகக் கூறினர். கிளிநொச்சியில் உள்ள ஓர் ஆசிரியர் "விசாரணையாளர்களிடம் வெளிப்படையாகப் பேசினால் என்ன நடக்குமோ என்று மக்கள் கவலைப்பட்டனர்" என்றார். இந்த அச்சம் எப்போதும் நேரடி அச்சுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. நிச்சயமற்ற தன்மையே நடத்தையை வடிவமைத்தது. தனிநபர்கள், அங்கீகாரம் பெறுவதற்கான விருப்பத்திற்கு எதிராக, வெளிப்படையாகத் தெரிவதால் ஏற்படும் அபாயங்களை எடைபோட்டனர்.

பெண்கள் பெரும்பாலும் சாட்சியத்துடன் தங்களுக்குள்ள சிக்கலான உறவுகளை விவரித்தனர். காணாமல் போனவர்களின் தாய்மார்கள், விதவைகள் மற்றும் பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், போராட்ட இயக்கங்கள் மற்றும் ஆவணப்படுத்தும் முயற்சிகளில் அடிக்கடி முக்கிய நபர்களாக மாறினர். ஆயினும், பொதுவெளியில் தெரிவது அவர்களை

உணர்ச்சி ரீதியான சிரமத்திற்கும் அரசியல் ரீதியான ஆய்விற்கும் உள்ளாக்கியது. ஒரு தாய் இவ்வாறு குறிப்பிட்டார்: "ஆரம்பத்தில், பொதுவெளியில் பேசுவது அச்சமூட்டுவதாக இருந்தது. ஆனால் சிறிது காலத்திற்குப் பிறகு, பேசுவதை விட மௌனம் கடினமாகிவிட்டது". சாட்சியத்தின் மையத்தில் உள்ள தார்மீக, உணர்ச்சிபூர்வமான பதற்றத்தை அவரது கூற்று படம்பிடித்துக் காட்டுகிறது. பேசுவது ஆபத்தானது, சோர்வூட்டக்கூடியது, வேதனையானது. ஆயினும், மௌனம் என்பது காணாமல் போனவர்களையே கைவிடுவது போன்ற உணர்வைத் தரக்கூடும்.

மனித உரிமை ஆவணங்கள் கருத்தியல் ரீதியாக உருவாக்கப்படுவதில்லை என்பதை இந்த இயங்குமுறை வெளிப்படுத்துகிறது. பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வேதனையான அனுபவங்களை மீண்டும் மீண்டும் விவரிப்பது, ஆவணப்படுத்தல் செயல்முறையானது இறுதியில் அவர்களுக்கு அங்கீகாரத்தையோ அல்லது நீதியையோ பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில்தான் அமைகிறது; இத்தகைய ஆவணப் பணிகள் அவர்களின் அயராத உழைப்பையே பெரிதும் சார்ந்துள்ளன. அதே நேரத்தில், சாட்சியமே நினைவை உருமாற்றுகிறது. ஆணையங்கள், அரசு சாரா நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள், ஆய்வாளர்களிடம் மீண்டும் மீண்டும் சொல்லப்படும் கதைகள், படிப்படியாக நிறுவன எதிர்பார்ப்புகளால் வடிவமைக்கப்படுகின்றன. எந்த விவரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது, எந்தப் பிரிவுகள் முக்கியமானவை, மற்றும் எந்த வகையான கதையாடல்கள் சர்வதேச பார்வையாளர்களுக்குப் புரியும் வகையில் உள்ளன என்பதைத் தனிநபர்கள் கற்றுக்கொள்கிறார்கள். ஒரு செயற்பாட்டாளர் விளக்கினார்: "நிறுவனங்கள் புரிந்துகொள்ளும் வகையில் கதைகளைச் சொல்ல மக்கள் கற்றுக்கொள்கிறார்கள்". இதன் பொருள் சாட்சியம் பொய்யானது என்பதல்ல. மாறாக, நினைவும் நிறுவனங்களும் எவ்வாறு மீண்டும் மீண்டும் தொடர்பு கொள்கின்றன என்பதை இது பிரதிபலிக்கிறது. சாட்சியங்கள் ஆவணங்களை உருவாக்கும் அதே வேளையில், ஆவணங்களும் சாட்சியங்களை வடிவமைக்கின்றன.

முக்கியமாக, மனித உரிமை ஆவணப்படுத்தல் என்பது, உள்ளூர் கலாசார துக்கத்துடனும் நினைவுகூர்தல் வடிவங்களுடனும் பெரும்பாலும் இணக்கமின்றிக் காணப்படுகிறது. சர்வதேச கட்டமைப்புகள் சான்றுகள், சரிபார்ப்பு மற்றும் சட்டப் பொறுப்புக்கூறலுக்கு முன்னுரிமை அளிக்கின்றன, அதேசமயம் உள்ளூர் நினைவுப் பழக்கவழக்கங்கள் சடங்குகள், உறவுமுறைகள், ஆன்மீகம் மற்றும் உணர்ச்சித் தொடர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடும். முள்ளிவாய்க்காலில், நினைவு அனுசரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த ஒரு பூசாரி விளக்கினார்: "சர்வதேசத் தரப்பினர் சான்றுகளை விரும்புகிறார்கள். குடும்பங்கள் பெரும்பாலும் இறந்தவர்களுக்குக் கண்ணியத்தை விரும்புகின்றன". இந்த முன்னுரிமைகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்றன, ஆனால் ஒன்றல்ல. ஆவணப்படுத்தல் உண்மை அங்கீகாரத்தை நாடுகிறது; துக்கம் சமூக மற்றும் உணர்ச்சி ரீதியான மீட்சியை நாடுகிறது. எனவே, ஆவணப்படுத்தலின் அரசியலை, சான்றுகளைச் சேகரிக்கும் ஒரு தொழில்நுட்பச் செயல்முறையாகச் சுருக்கிவிட முடியாது. மனித உரிமை ஆவணக்காப்பகங்கள், இல்லையெனில் மறைந்துவிடக்கூடிய வரலாறுகளைப் பாதுகாக்கின்றன, ஆயினும் அவை குறிப்பிட்ட நிறுவனக் கட்டமைப்புகளுக்குள் துன்பத்தை மறுசீரமைக்கின்றன.

இறுதியில், அறிக்கைகள், சாட்சியங்கள் மற்றும் விசாரணைகளின் பெருக்கமானது, அந்தப் போர் வரலாற்று ரீதியாகத் தீர்க்கப்படாமல் உள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆவணப்படுத்துதலுக்காக அர்ப்பணிக்கப்பட்ட மகத்தான முயற்சியானது, இலங்கைக்குள்ளேயே ஒரு பகிரப்பட்ட ஒருமித்த கருத்து இல்லாததையே பிரதிபலிக்கிறது. ஒரு முடிவு எட்டப்படாமல் இருப்பதால் ஆவணக்காப்பகங்கள் பெருகுகின்றன. இது ஒரு சிக்கலான, பன்மைத்துவம் மிக்க மற்றும் நிலையற்ற வரலாற்று வெளியை வடிவமைக்கிறது. எந்தவொரு தனிப்பட்ட ஆவணக்காப்பகமும் போரை முழுமையாகக் கொண்டிருக்கவில்லை. மாறாக, போருக்குப் பிந்தைய இலங்கையானது, ஒன்றுடன் ஒன்று மேலெழும்பிப் போட்டியிடும் வரலாற்று உருவாக்க அமைப்புகளால் வகைப்படுத்தப்படுகிறது. அவை ஒவ்வொன்றும் போர் என்றால் என்ன, அதன் பின்விளைவுகள் எதைக் குறிக்கின்றன என்பதை வரையறுக்க முயல்கின்றன.

### போர் முடிவடைந்த பிறகு அதை எழுதுதல்

போர் முடிவடைந்த பிறகு அதை எழுதுவது என்பது, வரலாற்று நிகழ்வுகளின் ஒரு தொடர் வரிசையை வெறுமனே புனரமைப்பது அல்ல. அது நினைவின் நிலையற்ற தன்மை, ஆவணக்காப்பகங்களின் சீரற்ற தன்மை, மௌனத்தின் அரசியல், மற்றும் கதைசொல்லலின் தார்மீகச் சுமை ஆகியவற்றை எதிர்கொள்வதாகும். போருக்குப் பிந்தைய இலங்கையில், வரலாறு என்பது புறநிலையாகத் தொகுக்கப்படுவதற்காகக் காத்திருக்கும் ஒரு

நிலைபெற்ற அறிவுத் தளம் அல்ல. அது சட்டபூர்வத்தன்மை, அங்கீகாரம், இறையாண்மை, துன்பத்தின் பொருள் ஆகியவற்றிற்காகப் போட்டியிடும் சக்திகள் போராடும் ஒரு சர்ச்சைக்குரிய களமாகும். எனவே, போரை எழுதுவது என்பது உள்ளார்ந்த அரசியல் மற்றும் அறநெறி சார்ந்த ஒரு செயலாகிறது. போருக்குப் பிந்தைய வரலாற்று நிலப்பரப்பு, பல ஆவணக்காப்பக அமைப்புகளில் துண்டு துண்டாகப் பிரிந்துள்ளது என்பதை இந்தக் கட்டுரை காட்டியுள்ளது. இந்த ஆவணக்காப்பகங்கள் ஒரு தனித்துவமான வரலாற்று விவரிப்பில் ஒன்றிணைவதில்லை. மாறாக, அவை இணக்கமின்றி இணைந்து வாழ்கின்றன. வரலாற்றுப் பார்வைக்காக ஒன்றையொன்று சார்ந்திருக்கும் அதே வேளையில், அடிக்கடி ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. போரை எழுதுவதில் உள்ள சவால், துல்லியமாக இந்தப் பன்முகத்தன்மையில்தான் அடங்கியுள்ளது. ஒரு சீரான வரலாற்றை உருவாக்கும் எந்தவொரு முயற்சியும், புறக்கணிப்பு மற்றும் எளிமைப்படுத்தல் வடிவங்களை மீண்டும் உருவாக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. உத்தியோகபூர்வ ஆவணக்காப்பகங்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிப்பது, பொதுமக்களின் துன்பம், சர்ச்சைக்குரிய இறையாண்மை ஆகியவற்றின் பரந்த அனுபவங்களை அழிப்பதாகும். தேசியவாத எதிர் நினைவுகளை மட்டுமே சார்ந்திருப்பது, தமிழ்ச் சமூகங்களுக்குள்ளேயே உள்ள இருநிலைப்பாடு, நிர்ப்பந்தம், அரசியல் பிளவு உள்ளிட்ட உள்ளார்ந்த சிக்கலான தன்மையை மழுங்கடிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. மனித உரிமைகள் குறித்த சொற்பொழிவின் மூலம் மட்டுமே போரைக் கட்டமைப்பது, வன்முறையை வடிவமைத்த பரந்த வரலாற்று மற்றும் அரசியல் நிலைமைகளை மறைத்துவிடக்கூடும். எந்தவொரு தனிப்பட்ட ஆவணக்காப்பகமும் போரை முழுமையாகக் கொண்டிருக்கவில்லை.

இந்தக் கட்டுரை முழுவதும் முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் சான்றுகள், போருக்குப் பிந்தைய இலங்கையின் வரலாறு என்பது உண்மைகள், ஆவணங்கள் மூலம் மட்டுமல்லாமல், உணர்ச்சிபூர்வமான சூழல்கள், தடைப்பட்ட பேச்சு, இடஞ்சார்ந்த நினைவுகள், சடங்குப் பழக்கவழக்கங்கள், உடலால் உணரப்படும் மௌனம் ஆகியவற்றின் மூலமாகவும் நிலவுகிறது என்பதை வெளிப்படுத்துகின்றன. மக்கள் பேசுவதற்கு முன் தயங்கி நிற்பதிலும், தாய்மார்கள் கட்டில்களுக்கு அடியில் புகைப்படங்களைப் பாதுகாத்து வைப்பதிலும், நிலக்காட்சிகள் நினைவுகளைத் தூண்டுவதிலும், இளைய தலைமுறையினர் தாங்கள் முழுமையாகப் புரிந்துகொள்ளாத உணர்வுபூர்வமான வரலாறுகளை மரபுரிமையாகப் பெறுவதிலும் இது வெளிப்படுகிறது. இந்தச் சூழலில், வரலாற்றை எழுதுவது என்பது குரல் மற்றும் அதிகாரம் குறித்த கேள்விகளிலிருந்து பிரிக்க முடியாததாகிறது. போரை விவரிக்கும் உரிமை யாருக்கு உண்டு? எந்த வகையான துன்பங்கள் பொதுவெளியில் அங்கீகரிக்கப்படுகின்றன? எந்த மரணங்கள் தேசிய அளவில் துக்கிக்கத்தக்கவை? எந்த நினைவுகள் நிறுவனமயமாக்கப்படுகின்றன, எவை நிலையற்றவையாகவே இருக்கின்றன?

போரைப் பற்றி எழுதுவதற்கு, எதிர் ஆவணக்காப்பகங்கள் உட்பட அனைத்து ஆவணக்காப்பகங்களின் வரம்புகளையும் அங்கீகரிப்பது அவசியமாகிறது. நினைவகம் ஒருபோதும் தூய்மையானதாகவோ அல்லது முழுமையானதாகவோ இருப்பதில்லை. உயிர் பிழைத்தவர்கள் தேர்ந்தெடுத்து நினைவுகூர்கிறார்கள்; மௌனங்கள் சாட்சியங்களைத் தடைசெய்கின்றன. மனக்காயம் காலவரிசையைத் துண்டாக்குகிறது. அரசியல் சூழல்கள் விவரிப்பை வடிவமைக்கின்றன. அந்தரங்கமான ஆவணக்காப்பகங்கள் கூட தெளிவின்மையையும் முரண்பாட்டையும் கொண்டுள்ளன.

எழுத்தின் அரசியல், வழிமுறை சார்ந்த பணிவைக் கோருகிறது. ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றாசிரியர்கள், பத்திரிகையாளர்கள், செயற்பாட்டாளர்கள் தாங்கள் பகுப்பாய்வு செய்யும் ஆவணக் களத்திற்கு வெளியே நிற்பதில்லை. எந்தக் கதையாடல்கள் வெளிச்சத்திற்கு வருகின்றன, சட்டபூர்வ அங்கீகாரம் பெறுகின்றன என்பதை வடிவமைப்பதில் அவர்கள் பங்கேற்கின்றனர். மேற்கோள் காட்டுதல், கட்டமைத்தல், மொழிபெயர்ப்பு, வகைப்படுத்துதல், முக்கியத்துவம் அளித்தல் தொடர்பான தேர்வுகள் அனைத்தும் அறநெறி சார்ந்த விளைவுகளைக் கொண்டுள்ளன. போருக்குப் பிந்தைய சூழல்களில் இது குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது. ஏனெனில், சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், ஊடக அமைப்புகள் உள்ளிட்ட வெளித் தரப்பினர், தாங்கள் ஆவணப்படுத்தும் வரலாற்றைக் கொண்ட சமூகங்களை விட பெரும்பாலும் அதிக நிறுவன அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். மனித உரிமைகள் அறிக்கைகளும் கல்விசார் ஆய்வுகளும் உலகளவில் பரவக்கூடும், ஆனால் உள்ளூர் சமூகங்கள் தீர்க்கப்படாத துயரத்துடனும் நிலையற்ற தன்மையுடனும் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன. ஒரு செயற்பாட்டாளர் குறிப்பிட்டார்: “பலர் கதைகளைச்

சேகரிக்க இங்கு வருகிறார்கள். ஆனால், கதைகள் சேகரிக்கப்பட்ட பிறகு என்ன நடக்கிறது என்றும் சமூகங்கள் கேட்கின்றன." இந்தக் கேள்வி, ஆவணப்படுத்தலுக்குள்ளேயே உள்ள சுரண்டல் ஆற்றலை வெளிப்படுத்துகிறது. போரைப் பற்றி எழுதுவது, உயிர் பிழைத்தவர்கள் வாழும் நிலைமைகளை மாற்றாமலேயே, துன்பத்தை ஒரு தொழில்முறை அறிவாக மாற்றும் அபாயத்தைக் கொண்டுள்ளது. பிரச்சினை ஆவணப்படுத்தலில் இல்லை. ஆவணக்காப்பகங்களும் சாட்சியங்களும் போதிய ஆய்வுகள் இன்றி இருக்கும்போது, பல்வேறு வடிவங்களிலான வன்முறைகள் பொதுவெளியின் கவனத்திலிருந்து முற்றிலும் மறைந்துபோகும் அபாயம் உள்ளது. மாறாக, அதிகாரம் மற்றும் பிரதிநிதித்துவத்தின் சமச்சீரற்ற தன்மைகளை எழுத்து எவ்வாறு மீண்டும் உருவாக்காமல் தவிர்க்க முடியும் என்பதில்தான் சவால் உள்ளது.

களப்பணி முழுவதும் மீண்டும் மீண்டும் வெளிப்பட்ட ஓர் இனவரைவியல் பதற்றம், விவரிப்பிற்கும் சோர்விற்கும் இடையிலான உறவாகும். பல பதிலளிப்பாளர்கள் பல ஆண்டுகளாக பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆணையங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் பேசியிருந்தனர். சாட்சியம் என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படும் ஒரு வேலையாக மாறியது. முல்லைத்தீவில் ஒரு பெண்மணி சொன்னார்: "சில நேரங்களில், நம்மை விட நம் கதைகளே அதிகமாகப் பயணிக்கின்றன என்று தோன்றுகிறது." அவரது கூற்று, கதைப் பரவலுக்கும் வாழ்வின் அசைவின்மைக்கும் இடையிலான இடப்பெயர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அறிக்கைகள், மாநாடுகள், ஆவணப்படங்கள், சர்வதேச நிறுவனங்கள் வழியாகக் கதைகள் பயணிக்கின்றன, ஆனால் உயிர் பிழைத்தவர்கள் போருக்குப் பிந்தைய கட்டுப்படுத்தப்பட்ட யதார்த்தங்களுக்குள் புதைந்து கிடக்கிறார்கள். எனவே, போர் முடிந்த பிறகு அதைப் பற்றி எழுதுவதற்கு, பேசப்படுபவற்றில் மட்டுமல்ல, முறையான கதையாடலில் இணைக்கப்படுவதை எதிர்க்கும் விஷயங்களிலும் கவனம் தேவைப்படுகிறது. மௌனத்தை வெறுமனே ஒரு வெறுமையாகக் கருதாமல், பகுப்பாய்வு ரீதியாக அணுக வேண்டும். விமர்சனமின்றி மௌனத்தைப் பேச்சாக மாற்றுவது, நினைவுகள் செயல்படும் சமூக உலகங்களைத் தவறாகப் புரிந்துகொள்ளும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. அதேபோல், துண்டு துண்டான சாட்சியங்களை முழுமையற்ற சான்றுகள் என்று புறக்கணிக்கக் கூடாது. அந்தத் துண்டு துண்டான தன்மையே, வன்முறை அனுபவிக்கப்படும் மற்றும் நினைவுகூரப்படும் சூழல்களைப் பிரதிபலிக்கிறது. தடைப்பட்ட விவரிப்புகள், முரண்பாடுகள், இடைநிறுத்தங்கள், உணர்ச்சி ரீதியான குழப்பம் ஆகியவை பேரழிவு வரலாற்றைப் பற்றிய முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. மேலும், போர் ஒரு நிலையான வரலாற்று முடிவை எதிர்க்கிறது, ஏனெனில் அது கட்டமைப்பு ரீதியாகத் தொடர்கிறது. இராணுவமயமாக்கல், கண்காணிப்பு, இடப்பெயர்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் சர்ச்சைக்குரிய நினைவுப் பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தும் போருக்குப் பிந்தைய நிகழ்காலத்தை வடிவமைக்கின்றன. எனவே, "போர்" மற்றும் "போருக்குப் பின்" ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு நிலையற்றதாகிறது. வன்முறை என்பது தீவிரமான போரின் மூலம் மட்டுமல்ல, மாறாக ஆளுகை, இடஞ்சார்ந்த ஒழுங்குமுறை, ஆவணக் காப்பகச் சமச்சீரின்மை மற்றும் சீரற்ற சொந்தம் ஆகியவற்றின் மூலமாகவும் நீடிக்கிறது.

போர் முடிந்த பிறகு அதைப் பற்றி எழுதுவது என்பது, தார்மீக எளிமைப்படுத்தல் என்ற சிக்கலை எதிர்கொள்வதையும் உள்ளடக்கியுள்ளது. பொது விவரிப்புகள் பெரும்பாலும் கதாநாயகன் மற்றும் பாதிக்கப்பட்டவர், குற்றவாளி - நிரபராதி, எதிர்ப்பு - அடக்குமுறை ஆகியவற்றுக்கு இடையே தெளிவான வேறுபாடுகளைக் காட்ட முற்படுகின்றன. ஆயினும், இனவரைவியல் யதார்த்தங்கள் இந்த இருமைகளை அடிக்கடி சிக்கலாக்குகின்றன. ஆனால் பொதுமக்கள் தார்மீக ரீதியாக தெளிவற்ற தேர்வுகளின் மூலம் தங்கள் பிழைப்பை வழிநடத்தினர் என்பதை நாம் கண்டுள்ளோம்.

முன்னாள் போராளிகள், கண்ணோட்டத்தையும் சூழலையும் பொறுத்து, ஒரே நேரத்தில் பாதுகாவலர்களாகவும், அரசியல் இலட்சியவாதிகளாகவும், வன்முறையின் முகவர்களாகவும் நினைவுகூரப்படலாம். சமூகங்கள் தங்களுக்குள்ளேயே சாதி, வர்க்கம், பாலினம், புவியியல், அரசியல் சார்பு ஆகியவற்றால் வேறுபடுத்தப்பட்டிருந்தன. வரலாற்றை அறநெறியுடன் எழுதுவதற்கு, இந்தச் சிக்கலான தன்மையை ஒற்றை அரசியல் விவரிப்புகளாகச் சுருக்கிவிடாமல், அதைப் பாதுகாப்பதே அவசியமாகும். அதே நேரத்தில், இந்தச் சிக்கலான தன்மையானது தார்மீக சார்புவாதத்திற்கோ அல்லது வரலாற்று முடக்கத்திற்கோ ஒரு சாக்காகிவிடக் கூடாது. தெளிவின்மையை ஏற்றுக்கொள்வது, அதிகாரத்தின் கட்டமைப்புச் சமச்சீரற்ற தன்மைகளையோ, பொதுமக்களின் துன்பங்களையோ, அல்லது வன்முறையின் யதார்த்தங்களையோ அழித்துவிடாது. மாறாக, அது அறநெறித் தெளிவைக் கைவிடாமல், வரலாறு முரண்பாடுகளின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்று கோருகிறது. ஆகவே, ஒரே நேரத்தில் பல உண்மைகளைத் தாங்கக்கூடிய

வரலாற்றை எழுதுவதே சவாலாகும்.

போருக்குப் பிந்தைய வரலாற்றை ஓர் இறுதி செய்யப்பட்ட விவரிப்பாக அல்லாமல், ஒரு நிலையற்ற பேச்சுவார்த்தைக் களமாகவே சிறப்பாகப் புரிந்துகொள்ள முடியும் என்று இந்தக் கட்டுரையின் இனவரைவியல் அணுகுமுறை பரிந்துரைக்கிறது. நினைவுகள் தலைமுறைகள், அரசியல் சூழல்கள் மற்றும் இடங்கள் முழுவதும் மாறுகின்றன. ஆவணக்காப்பகங்கள் முழுமையடையாமல் இருக்கின்றன. மௌனங்கள் நீடிக்கின்றன. பழைய நினைவுகள் மங்கிப்போகும் அல்லது உருமாறும் வேளையில், புதிய ஆவண வடிவங்கள் தோன்றுகின்றன. ஆகவே, வரலாறு முழுமையடையாமல் உள்ளது. இந்த முழுமையடையாத தன்மை என்பது நல்லிணக்கம் அல்லது பொறுப்புக்கூறலின் தோல்வி மட்டுமல்ல. அது போருக்குப் பிந்தைய நிலையின் ஓர் அங்கமாகவே விளங்குகிறது. வெவ்வேறு சமூகங்கள், மோதலுடன் வெவ்வேறு கால மற்றும் தார்மீக உறவுகளைக் கொண்டுள்ளன.

இந்த வகையில், போருக்குப் பிந்தைய இலங்கையில் வரலாறு என்பது ஆளுகையின் ஒரு செயலூக்கமான களமாகவே நீடிக்கிறது. உத்தியோகபூர்வ நினைவு சட்டபூர்வத்தன்மையை ஒழுங்கமைக்கிறது. மௌனம் உயிர்வாழ்வை ஒழுங்குபடுத்துகிறது. மனித உரிமைகள் ஆவணப்படுத்தல் செயல்முறையானது சர்வதேச ரீதியான ஒரு பார்வையை வடிவமைக்கிறது. குடும்ப ஆவணக்காப்பகங்கள் நெருக்கமான தொடர்ச்சியைப் பாதுகாக்கின்றன. புலம்பெயர் சமூக வலைப்பின்னல்கள் நாடுகடந்த நினைவாற்றலை நிலைநிறுத்துகின்றன. இளைய தலைமுறையினர், போருக்கு அப்பாற்பட்ட எதிர்காலங்களைக் கற்பனை செய்ய முயலும் அதே வேளையில், துண்டு துண்டான உணர்வுபூர்வமான வரலாறுகளைப் பெறுகிறார்கள். இந்த இயக்கவியல் அனைத்தும் ஒன்றுசேர்ந்து, போர் என்பது நினைவின் வழியாக மட்டுமல்லாமல், அந்த நினைவே எவ்வாறு ஒழுங்கமைக்கப்படுகிறது, விவரிக்கப்படுகிறது, நிறுவனமயமாக்கப்படுகிறது என்பது குறித்த தொடர்ச்சியான போராட்டத்தின் வழியாகவும் தொடர்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றன.

### நிறைவுக் குறிப்புகள்

போருக்குப் பிந்தைய இலங்கை, ஒரு தனித்துவமான தேசிய நினைவின் தோற்றத்தால் வகைப்படுத்தப்படவில்லை. மாறாக, வரலாற்று உருவாக்கத்தின் போட்டி மற்றும் சமமற்ற ஆட்சிமுறைகளின் சகவாழ்வால் வகைப்படுத்தப்படுகிறது என்று இந்தக் கட்டுரை வாதிட்டுள்ளது. போரானது, வன்முறையை நேரடியாக அனுபவித்தவர்களின் நினைவுகளில் மட்டுமல்லாமல், ஆவணக்காப்பகங்கள், மௌனங்கள், நினைவுச் சடங்குகள், அதிகாரத்துவ வகைப்பாடுகள், எண்ணிம ஊடகங்கள், நிலப்பரப்புகள், தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்படுதல் ஆகியவற்றின் வழியாகவும் நிலைத்திருக்கிறது. இந்தச் சூழலில், வரலாறு என்பது வெறும் பின்னோக்கிய பார்வை மட்டுமல்ல. போருக்குப் பிந்தைய நாடு ஆளப்படுவதற்கும், எதிர்க்கப்படுவதற்கும், கற்பனை செய்யப்படுவதற்கும் பயன்படும் மையக் களங்களில் அதுவும் ஒன்றாகும்.

இலங்கையில் வரலாறு தொடர்பான இழுபறியானது, அடிப்படையில் அதன் இறையாண்மை மற்றும் சட்டபூர்வத்தன்மைக்கான ஒரு போராட்டமே என்பதை இந்த ஆய்வின் வழியே முன்வைக்கப்படும் பகுப்பாய்வு உறுதிப்படுத்துகிறது. இராணுவ வெற்றி, பிராந்திய ஒற்றுமை, தேசிய மீட்சி ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஒரு தார்மீக மற்றும் அரசியல் ஒழுங்கை நிலைப்படுத்த அதிகாரபூர்வ விவரிப்புகள் முயல்கின்றன. அருங்காட்சியகங்கள், பாடப்புத்தகங்கள், நினைவிடங்கள், அரச விழாக்கள், அபிவிருத்தி உரையாடல்கள் வழியாக, போருக்குப் பிந்தைய அரசு வரலாற்று ஒருமைப்பாட்டையும் கால முடிவையும் உருவாக்க முயற்சிக்கிறது. போரானது, அமைதியிலும் புனரமைப்பிலும் உச்சம் பெற்ற ஒரு வேதனையான ஆனால் அவசியமான அத்தியாயமாக, ஒரு நிறைவுற்ற வரலாறாகச் சித்தரிக்கப்படுகிறது. ஆயினும், இனவரைவியல் யதார்த்தங்கள் இந்த முடிவுரைக் கதையை மீண்டும் மீண்டும் சீர்குலைக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும், போர் ஆழமாக முடிவடையாமல் உள்ளது. குடும்பங்கள் காணாமல் போன உறவினர்களைத் தொடர்ந்து தேடிக்கொண்டிருக்கின்றன. உயிர் பிழைத்தவர்கள், எளிதில் சேதமடையக்கூடிய ஆவணங்களைத் தங்கள் வீடுகளிலும் தனிப்பட்ட இடங்களிலும் பாதுகாத்து வருகின்றனர். எச்சரிக்கை, நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றின் கீழ், நினைவுகூரும் நடைமுறைகள் அமைதியாகத் தொடர்கின்றன. இளைய தலைமுறையினர், மௌனங்கள், உணர்ச்சிகரமான சூழல்கள், சிதறிய கதைகளின் வழியாகத் துண்டு துண்டான வரலாறுகளைப் பெறுகிறார்கள். மனித உரிமைகள் ஆவணங்கள் உலகளவில் பரவிக்கொண்டிருக்க, உள்ளூர் சமூகங்கள் தீர்க்கப்படாத அரசியல், பொருளாதாரச் சூழல்களுக்குள் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன.

இது வரலாற்று ரீதியான ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, நல்லிணக்கமற்ற ஆவணப்

பன்மைத்துவம் என வர்ணிக்கப்படக்கூடிய ஒரு சூழலையே தோற்றுவித்துள்ளது. பலதரப்பட்ட வரலாறுகள் ஒருங்கே நிலவுகின்றன. ஆனால் அவை ஒரு பொதுவான கதைக்கட்டமைப்பில் ஒன்றிணைவதில்லை; மாறாக, அவை சீரற்ற முறையில் அங்கீகரிக்கப்பட்டும், வெவ்வேறு விதமாக நிறுவனமயமாக்கப்பட்டும், அரசியல் ரீதியாகப் போட்டியிடப்பட்டும் இருக்கின்றன. இந்தச் சீரற்ற தன்மை பரந்த அதிகாரக் கட்டமைப்புகளைப் பிரதிபலிக்கிறது. அதிகாரபூர்வ நினைவுகள் நிறுவன ரீதியான நிலைத்தன்மையையும் பொது அங்கீகாரத்தையும் கொண்டிருக்கின்றன. அதேசமயம் பல எதிர்நினைவுகள் அந்தரங்கமானவையாகவும், சிதறியவையாகவும், எளிதில் பாதிக்கப்படக்கூடியவையாகவும் இருக்கின்றன.

ஆவணக்காப்பகமே அடுக்குகள் கொண்டதாக மாறுகிறது. அதே நேரத்தில், மௌனத்தை வெறுமனே அடக்குமுறை அல்லது இல்லாமை என்று கருதாமல், அதை வரலாற்று ரீதியாகவும் இனவரைவியல் ரீதியாகவும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்தக் கட்டுரை கோருகிறது. போருக்குப் பிந்தைய இலங்கையில் மௌனம் பலவழிகளில் செயல்படுகிறது. எனவே, மௌனம் ஆவணக்காப்பகத்தின் எதிர்நிலையாக இல்லாமல் அதன் ஒரு பகுதியாக மாறுகிறது. வரலாறு எவ்வாறு கடத்தப்படுகிறது, துண்டாக்கப்படுகிறது, வாழப்படுகிறது என்பதை அது வடிவமைக்கிறது. இந்தப் புரிதல், மாற்றத்திற்கான நீதி மற்றும் நல்லிணக்க உரையாடல்களில் உள்ள மேலோங்கிய அனுமானங்களைச் சிக்கலாக்குகிறது. பல சர்வதேச மோதலுக்குப் பிந்தைய கட்டமைப்புகள், உண்மை பேசுதல், சாட்சியமளித்தல், பொது அங்கீகாரம் ஆகியவை இயல்பாகவே குணமடைதலுக்கும் ஜனநாயக மாற்றத்திற்கும் வழிவகுக்கும் என்று கருதுகின்றன. ஆயினும், இலங்கைச் சூழல், பேச்சுரிமையே சமமற்ற அரசியல் மற்றும் நிறுவனச் சூழல்களுக்குள் புதைந்து கிடக்கிறது என்பதை நிரூபிக்கிறது. சாட்சியமளித்தல் பொறுப்புக்கூறல் இல்லாமல் அங்கீகாரத்தை அளிக்கக்கூடும்; ஆவணங்கள் உலகளவில் பரவக்கூடும். ஆனால் உள்ளூர் நிலையற்ற தன்மை மாறாமல் தொடர்கிறது. ஆவணக்காப்பகம் விரிவடைகிறது. ஆனால் நீதி நிச்சயமற்றதாகவே உள்ளது.

இந்தக் கட்டுரை முழுவதும் மீண்டும் மீண்டும் வரும் ஒரு கருப்பொருள், புலப்படுவதற்கும் மாற்றத்திற்கும் இடையிலான இடைவெளியாகும். உயிர் பிழைத்தவர்கள், ஆணையங்கள், அரசு சாரா நிறுவனங்கள், பத்திரிகையாளர்கள், ஆராய்ச்சியாளர்களிடம், பல ஆண்டுகளாகத் தாங்கள் சாட்சியமளித்ததை மீண்டும் மீண்டும் விவரித்தனர். கதைகள் அறிக்கைகள், மாநாடுகள், ஆவணப்படங்கள், சர்வதேச நிறுவனங்கள் வழியாகப் பயணிக்கின்றன. ஆயினும், அன்றாட யதார்த்தங்கள் பெரும்பாலும் இராணுவமயமாக்கல், பொருளாதாரப் பாதுகாப்பின்மை, தீர்க்கப்படாத துக்கம், அரசியல் தெளிவின்மை ஆகியவற்றால் குறிக்கப்பட்டே இருக்கின்றன.

வெவ்வேறு சமூகங்கள் போரின் வெவ்வேறு “பின்” நிலைகளில் வாழ்கின்றன. சிலருக்குப் போர் நிறுவனரீதியாக முடிவடைகிறது, அதேசமயம் மற்றவர்களுக்கு அது உணர்வுபூர்வமாகவும், அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் தொடர்ந்து செயல்படுகிறது. இந்த சீரற்ற காலப்போக்கு, தலைமுறைகள் தோறும் குறிப்பாகத் தெளிவாகத் தெரிகிறது. இளைய தலைமுறையினர், மௌனம், எண்ணிம ஆவணக்காப்பகங்கள், குடும்ப நினைவுகள் மற்றும் போட்டி நிறைந்த பொதுக் கதைகள் ஆகியவற்றின் வழியே கடத்தப்படும் துண்டு துண்டான வரலாறுகளைப் பெறுகிறார்கள். போர்க்கால நிகழ்வுகள் குறித்த நேரடி நினைவுகள் தங்களுக்கு இல்லாதபோதிலும், வன்முறையால் வடிவமைக்கப்பட்ட நிலப்பரப்புகளுக்குள் அவர்கள் வளர்கிறார்கள். இலங்கையில் போருக்குப் பிந்தைய வரலாற்று உணர்வின் எதிர்காலத்தைப் புரிந்துகொள்வதற்கு இந்தத் தலைமுறை சார்ந்த நிலை மையமானது. நினைவுகள் இனி நேரடியாக உயிர் பிழைத்தவர்களால் மட்டும் கொண்டு செல்லப்படுவதில்லை. அவை பெருகிய முறையில் மரபுரிமையாகப் பெறப்பட்ட உணர்ச்சி உலகங்கள், நிறுவனக் கதைகள் மற்றும் ஊடகப்படுத்தப்பட்ட ஆவணக்காப்பகங்கள் வழியாகக் கடத்தப்படுகின்றன. அதே நேரத்தில், இளைய தலைமுறையினர் பெரும்பாலும் போரின் உணர்ச்சி மற்றும் அரசியல் அடைப்புகளுக்கு அப்பாற்பட்ட எதிர்காலங்களைத் தேடுகிறார்கள்.

பதிலளித்தவர்களில் பலர் வெளிப்படையான தேசியவாத அரசியல் அபிலாஷைகளை விட, கல்வி, இடப்பெயர்வு, வேலைவாய்ப்பு, சாதாரண நிலைத்தன்மை ஆகியவற்றை வலியுறுத்தினர். ஆயினும், இந்த அபிலாஷைகளே மோதலின் கட்டமைப்பு ரீதியான மரபுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே, போருக்குப் பிந்தைய இலங்கையின் வரலாற்றை, மீட்கப்பட வேண்டிய ஒரு நிலையான அறிவுத் தொகுப்பாகப் புரிந்துகொள்ள முடியாது. நினைவுகளின் இந்தப் பன்மைத்தன்மை, மோதலின் ஒற்றை அல்லது

முழுமையான வரலாற்றை எழுதும் சாத்தியத்திற்கு சவால் விடுகிறது. போரை விவரிக்கும் எந்தவொரு முயற்சியும் தவிர்க்க முடியாமல் சிதைவு, முரண்பாடு மற்றும் சமச்சீரற்ற தன்மையை எதிர்கொள்கிறது. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள இனவரைவியல் சான்றுகள், வெவ்வேறு நபர்கள் ஒரே நிகழ்வுகளை வெவ்வேறு விதமாக நினைவுகூர்கிறார்கள் என்பதையும், மௌனம் விவரிப்பைத் தடுக்கிறது என்பதையும், உணர்ச்சிபூர்வமான யதார்த்தங்கள் பெரும்பாலும் சட்ட அல்லது நிறுவன வகைகளை மீறுகின்றன என்பதையும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கின்றன. எனவே, போர் முடிவடைந்த பிறகு அதைப் பற்றி எழுதுவதற்கு வழிமுறை சார்ந்த பணிவு தேவைப்படுகிறது. ஆய்வாளர்களும் வரலாற்றாசிரியர்களும் தாங்கள் பகுப்பாய்வு செய்யும் நினைவுகளின் அரசியலுக்கு வெளியே தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியாது. கட்டமைத்தல், வகைப்படுத்துதல், மேற்கோள் காட்டுதல், மொழிபெயர்ப்பு, விளக்கம் குறித்த தேர்வுகள், எந்த வரலாறுகள் புலப்படும்படியாகவும் சட்டபூர்வமானதாகவும் மாறும் என்பதை வடிவமைக்கின்றன.

போருக்குப் பிந்தைய வரலாற்றை வெறும் நினைவுகூர்தலாகக் கருதாமல், அதை ஓர் ஆளுகைக் களமாக மறுபரிசீலனை செய்வதிலேயே இந்த கட்டுரையின் பரந்த கோட்பாட்டுப் பங்களிப்பு அடங்கியுள்ளது. நினைவாற்றல் என்பது நிறுவன ரீதியாகவும், இட ரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், அதிகாரத்துவ ரீதியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ஆவணக்காப்பகங்கள் கடந்த காலத்தை வெறுமனே பாதுகாப்பதில்லை. அவை நிகழ்காலத்தில் குடியுரிமை, சட்டபூர்வத்தன்மை மற்றும் அரசியல் சாத்தியக்கூறுகளை வடிவமைக்கின்றன.

அரசு நினைவாற்றல், அரசின் தார்மீகக் கட்டமைப்பை வரையறுப்பதன் மூலம் இறையாண்மையை நிலைப்படுத்துகிறது. மனித உரிமை ஆவணக்காப்பகங்கள் சர்வதேசப் பார்வையையும் சட்ட உரிமைகளையும் உருவாக்குகின்றன. குடும்ப ஆவணக்காப்பகங்கள், அழிவிலிருந்து நெருக்கமான தொடர்ச்சியைப் பாதுகாக்கின்றன. மௌனம், உயிர்வாழ்வையும் உணர்வுபூர்வமான சகிப்புத்தன்மையையும் ஒழுங்குபடுத்துகிறது. எண்ணிம நினைவாற்றல், நினைவுகூர்தலின் நாடுகடந்த வலைப்பின்னல்களை உருவாக்குகிறது. இவை அனைத்தும் ஒன்றிணைந்து, வரலாற்று உருவாக்கத்தின் ஒன்றுடன் ஒன்று மேற்பொருந்தும் போட்டியிடும் ஆட்சிமுறைகளை உருவாக்குகின்றன. இந்தப் பார்வை, நல்லிணக்கம் குறித்த மரபுசார்ந்த புரிதல்களையும் சிக்கலாக்குகிறது. நல்லிணக்கம் என்பது பெரும்பாலும் பகிரப்பட்ட நினைவாகவும் தேசிய ஒருமித்த கருத்தின் தோற்றமாகவும் கற்பனை செய்யப்படுகிறது. ஆயினும், போருக்குப் பிந்தைய சமூகங்கள், அதற்குப் பதிலாக நீடித்த வரலாற்றுப் பன்மைத்தன்மையாலும் சமச்சீரற்ற தன்மையாலும் வகைப்படுத்தப்படக்கூடும் என்று இலங்கையின் சூழல் சுட்டிக்காட்டுகிறது. வெவ்வேறு சமூகங்கள் அடிப்படையில் வேறுபட்ட வரலாற்று உலகங்களில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றன.

இந்தப் பின்புலத்தில், சவால் என்பது ஒற்றை ஒருமித்த கருத்தைத் திணிப்பது அல்ல, மாறாக, ஆதிக்கம், அழித்தல் அல்லது அச்சமின்றி பலதரப்பட்ட வரலாறுகள் இணைந்து வாழக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதே ஆகும். அத்தகைய ஒரு திட்டத்திற்கு, தேசிய ஒற்றுமையை வரலாற்று முடிவோடு சமன்படுத்தும் அரசை மையமாகக் கொண்ட விவரிப்புகளுக்கு அப்பால் செல்ல வேண்டியிருக்கும். மேலும், நினைவு என்பது கடந்த காலத்தைப் பற்றியது மட்டுமல்ல, நிகழ்காலத்தில் கண்ணியம், அங்கீகாரம் மற்றும் அரசியல் ரீதியான சொந்தம் சார்ந்திருத்தல் பற்றியது என்பதையும் அங்கீகரிக்க வேண்டியிருக்கும்.

நிறைவாக, போரினால் உருவாக்கப்பட்ட அரசியல் மற்றும் தார்மீகக் கேள்விகள் தீர்க்கப்படாமல் இருப்பதால், போருக்குப் பிந்தைய இலங்கையின் வரலாறு முழுமையடையாமல் உள்ளது என்பதை இக்கட்டுரை காட்டியுள்ளது. ஆவணக் காப்பகங்கள் தொடர்ந்து விரிவடைகின்றன. மௌனங்கள் நீடிக்கின்றன. குடும்பங்கள் தொடர்ந்து காத்திருக்கின்றன. நிலப்பரப்புகள் தொடர்ந்து நினைவுகளைச் சுமந்து செல்கின்றன. இளைய தலைமுறையினர் துண்டு துண்டான வரலாறுகளைத் தொடர்ந்து மரபுரிமையாகப் பெறுகின்றனர். போட்டிப் புனைவுகள் தங்களின் அங்கீகாரத்திற்காகத் தொடர்ந்து போராடுகின்றன. மக்கள் போரை நினைவில் வைத்திருப்பதால் மட்டுமல்ல, அதன் கட்டமைப்புகள் நிறுவனங்கள், இடங்கள், உணர்வுலகங்கள் மற்றும் சமமற்ற அங்கீகார அமைப்புகளுக்குள் ஆழமாகப் பதிந்திருப்பதால்தான் போர் நிலைத்திருக்கிறது. எனவே, வரலாறு என்பது போருக்குப் பிறகு வருவது அல்ல. அது, போர் தொடரும் வழிகளில் ஒன்றாகும். இந்தப் புரிதல், இந்தக் கட்டுரைத் தொடரின் பரந்த வாதத்துடன் நேரடியாக இணைகிறது. போருக்குப் பிந்தைய காலம் என்பது வன்முறையிலிருந்து அமைதிக்கான ஒரு முழுமையான மாற்றம் அல்ல. அது, பேரழிவின் பின்விளைவுகளில் ஆட்சிமுறை, நினைவகம், நிலப்பரப்பு, சமத்துவமின்மை, சொந்தம் என்ற உணர்வு ஆகியவை தொடர்ந்து மறுசீரமைக்கப்படும் ஒரு தொடர்ச்சியான நிலையாகும்.

# மன்னார்க் கூத்து மரபு: ஈழத்தமிழ்க் கூத்து மரபில் ஒரு புதிய கிளை

ஈழத்து மரபுவழி ஆற்றுகைக் கலைகளுக்கு ஒரு வரலாறும் வளர்ச்சியும் உண்டு. தென்மோடி, வடமோடி, சிந்துநடைக் கூத்துகள், வாசாப்பு, இசை நாடகம், பள்ளு, குறவஞ்சி, வசந்தன், மகுடி என அது பன்முகப்பட்டது. இவற்றுள் சில அருகிவிட்டன; சில கால ஓட்டத்துடன் நின்று போராடி நிலைக்கின்றன; சில மாறுகின்றன. காலந்தோறும் ஏற்பட்ட பண்பாட்டு கலப்புகளும், அதனை உருவாக்கிய அரசியல், பொருளாதார, சமூக காரணங்களும் இம்மாற்றங்களுக்கு அடித்தளமாக உள்ளன. இந்த பல்வேறு வகைப்பட்ட ஆற்றுகை வடிவங்கள் தத்தமக்கென அழகியலையும், அமைப்பையும், வெளிப்பாட்டுத் திறனையும் கொண்டுள்ளன; ஒன்றிலிருந்து ஒன்று பெற்றும் வளர்ந்துள்ளன. இந்த மாற்றங்களைப் புரிந்து கொள்வதும், அவை மாற்றம் பெற்றபோது அது சம்பந்தமாக நடந்த விவாதங்களை அறிவதும், இதன் இருப்பைத் தக்கவைக்கும் முயற்சிகளில் ஈடுபடுபவருக்கும், அதனை மேலும் வளர்த்துச் செல்ல விரும்புவோருக்கும் உதவியாக இருக்கும். இப் பல்வேறு ஆற்றுகை வடிவங்கள் பற்றியும் அவை கல்வி உலகில் ஏற்கப்பட்ட பின்னணிகள் பற்றியும், அதனால் இந்த ஆற்றுகைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றியும் அறிமுகம் செய்வதாக 'ஈழத்துத் தமிழரின் ஆற்றுகைக் கலைகள் : மரபும் மாற்றமும்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமைந்திருக்கும்.

## பகுதி 1


### சின்னையா மௌனகுரு



சின்னையா மௌனகுரு அவர்கள் இலங்கையின் மட்டக்களப்பைச் சேர்ந்த பேராசிரியர்; அரங்க ஆய்வாளர், பயிற்சியாளர், இயக்குநர், பிரதி உருவாக்குநர், நடிகர், கூத்துக் கலைஞர் என்று பல தளங்களில் இன்றும் இயங்கிவருபவர்.ஈழத்து அரங்கத்துறையின் வளர்ச்சிக்கு வித்திட்ட சிலரில் மௌனகுரு குறிப்பிடத்தக்கவர். 'இராவணேசன்', 'சங்காரம்' முதலிய புகழ்பெற்ற கூத்து நாடகங்கள் மௌனகுருவுக்கு தனியான அடையாளத்தை வழங்கின.
இவர், 20 ஆம் நூற்றாண்டு ஈழத்துத்தமிழ் இலக்கியம் – 1984, சடங்கில் இருந்து நாடகம் வரை – 1985, மௌனகுருவின் மூன்று நாடகங்கள் – 1985, தப்பி வந்த தாடி ஆடு – 1987, பழையதும் புதியதும் நாடகம் அரங்கியல் – 1992, சுவாமி விபுலானந்தர் காலமும் கருத்தும் – 1992, சங்காரம் – ஆற்றுகையும் தாக்கமும் (நாடகம்) – 1993, ஈழத்து தமிழ் நாடக அரங்கு – 1993, கால ஓட்டத்தினூடே ஒரு கவிஞன் – நீலாவணன் – 1994, கலை இலக்கிய கட்டுரைகள் – 1997, சக்தி பிறக்குது – நாடகம் – 1997, பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவும் ஈழத்து நாடக மரபும் – 1997, ஈழத்து நாடக அரங்கு – 2 ஆம் திருத்திய பதிப்பு – 2004, தமிழ்க் கூத்துக்கலை – வடமோடி ஆட்டப் பயிற்சிக்கான கைந்நூல் – 2010, கூத்து யாத்திரை – 2021, கூத்தே உன் பன்மை அழகு – 2021 போன்ற பலநூல்களை எழுதியுள்ளார்.

### மன்னார் மாவட்டம் - ஓர் அறிமுகம்
### இயற்கை அமைவு, மக்கள் மற்றும் தொழில்கள்

மன்னார் மாவட்டம் இலங்கையின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு முக்கிய மாவட்டமாகும். இது வட இலங்கைக்குள் அடங்குகிறது. மன்னார் மாவட்டம் பொதுவாக பெருநிலப்பகுதி (மாதோட்டப் பகுதி) மற்றும் மன்னார் தீவு என்ற இரு இயற்கைப் பகுதிகளைக் கொண்டதாகக் கருதப்படுகிறது மேற்குப் பகுதியில் மன்னார் வளைகுடா அமைந்துள்ளது. மாவட்டத்தின் பெரும்பகுதி சமவெளி நிலமாகவும் வறண்ட காலநிலையுடனும் காணப்படுகிறது. கடற்கரைகள், உப்பளங்கள், குளங்கள், கண்டல் காடுகள் மற்றும் பறவைகள் வாழும் சதுப்புநிலங்கள் இதன் இயற்கைச் சிறப்புகளாகும்.




மன்னார் மாவட்டம்

Image Source - investsrilanka.blogspot.com

மன்னார் மக்களின் வாழ்க்கை இயற்கை வளங்களை அடிப்படையாகக் கொண்டது. இங்குள்ள முக்கிய தொழில்கள் மீன்பிடித்தலும் விவசாயமும் ஆகும். மீன்பிடியில் கடல் மீன்பிடி, இறால் மற்றும் நண்டு பிடித்தல், உலர் மீன் தயாரித்தல் போன்றவை பரவலாக நடைபெறுகின்றன. விவசாயத்தில் நெல், வெங்காயம், மிளகாய், பயறு வகைகள் போன்ற பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. மேலும் கால்நடை வளர்ப்பு, குறிப்பாக மாடு மற்றும் ஆடு வளர்ப்பு, பல குடும்பங்களின் வாழ்வாதாரமாக உள்ளது. பனை சார்ந்த பொருட்கள் தயாரித்தல், சிறு வணிகம் மற்றும் அரசுத் துறை வேலைகளும் மக்களின் தொழில்களாக உள்ளன.

மன்னார் மாவட்டம் பல இன, பல மத மக்களைக் கொண்ட சமூகமாகும். இங்கு தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். அதோடு முஸ்லிம்களும் சிங்களவர்களும் வாழ்கின்றனர். மத அடிப்படையில் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் பௌத்தர்கள் உள்ளனர். மன்னாரின் ஒரு முக்கிய சிறப்பு என்னவென்றால், இலங்கையின் மற்ற வட மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது இங்கு கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்வதாகும். 2012 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, கிறிஸ்தவர்கள் சுமார் 57 சதவீதம், இந்துக்கள் சுமார் 24 சதவீதம், முஸ்லிம்கள் சுமார் 17 சதவீதம் மற்றும் பௌத்தர்கள் சுமார் 2 சதவீதம் இருந்தனர். இதனால் மன்னார் மாவட்டத்தின் மிகப்பெரிய மதச் சமூகமாக கிறிஸ்தவர்கள் விளங்குகின்றனர். போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மதம் பரவியதால் மன்னார் ஒரு முக்கிய கத்தோலிக்க மையமாக வளர்ந்தது. அதேவேளை, திருக்கேதீஸ்வரம் போன்ற புகழ்பெற்ற இந்துக் கோவில்கள் காரணமாக இந்து மரபும் இப்பகுதியில் வலுவாக நிலைத்துள்ளது. எனவே, இயற்கை வளம், வரலாற்றுப் பெருமை, மீன்பிடி சார்ந்த பொருளாதாரம் மற்றும் பல மத, பல இன மக்கள் இணைந்து வாழும் தன்மை ஆகியவற்றால் மன்னார் மாவட்டம் இலங்கையின் தனித்துவமான பகுதிகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

மன்னார் மாவட்டத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் பல நூற்றாண்டுகளாக உருவான வரலாற்றுச் சமூகங்களாகும். இவர்களின் பூர்வீகத்தை ஓர் இடத்துடன் மட்டும் இணைத்துக் கூற முடியாது.

பண்டைய காலத்தில் மாதோட்டம் (மாந்தை) இலங்கையின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. இந்தியா, அரேபியா மற்றும் பிற நாடுகளுடன் வாணிகத் தொடர்புகளை ஏற்படுத்திய வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக அது அறியப்படுகிறது. எனவே, மன்னாரில் தமிழ் மொழி பேசும் மக்கள் மிகப் பழங்காலத்திலிருந்தே வாழ்ந்து வருகின்றனர்.

## தமிழர்கள்

மன்னாரில் வாழும் தமிழர்களின் பூர்வீகத்தை ஒரே இடத்துடன் இணைத்துக் கூற முடியாது. மன்னார் மாவட்டத்தின் தமிழ் மக்கள் பல வரலாற்றுக் கட்டங்களில் உருவான ஒரு கலப்பு சமூகமாகக் கருதப்படுகின்றனர்.

### 1. மாதோட்டம் (மாந்தை) மற்றும் மன்னாரின் பழங்குடியிருப்புகள்

மாதோட்டம் (மாந்தை) பண்டைய காலத்திலிருந்தே இலங்கையின் முக்கிய துறைமுகமாக இருந்தது. சங்ககாலத்திலிருந்தே இப்பகுதியில் தமிழ் மொழி பேசும் மக்கள் வாழ்ந்ததாகத் தொல்பொருள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் காட்டுகின்றன. எனவே, மன்னாரில் வாழும் தமிழர்களில் ஒரு பகுதியினர் இப்பகுதியின் நீண்டகாலக் குடியிருப்பாளர்களின் வழித்தோன்றல்கள் எனக் கருதப்படுகின்றனர்.

**2. யாழ்ப்பாண இராச்சியத் தொடர்பு**

*13-17ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் மன்னாரும் இருந்தது. இதனால் யாழ்ப்பாணத்திலிருந்து நிர்வாகிகள், வணிகர்கள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் மன்னாரில் குடியேறினர். எனவே, மன்னார் தமிழர்களில் பலருக்கு யாழ்ப்பாணத் தொடர்பு உள்ளது.*

**3. தமிழகத் தொடர்பு**

*பண்டைய காலத்திலிருந்தே தமிழ்நாட்டிற்கும் மன்னாருக்கும் கடல்வழித் தொடர்பு இருந்தது. குறிப்பாக இராமேஸ்வரம், பாண்டிய நாடு, நாகப்பட்டினம் பகுதிகளிலிருந்து மக்கள் வர்த்தகம், மீன்பிடி மற்றும் மதச் செயல்பாடுகள் காரணமாக வந்து குடியேறினர். இதனால் தமிழக வேர்களும் காணப்படுகின்றன.*

**4. வன்னிப் பகுதித் தொடர்பு**

*மன்னாரின் உள்நாட்டுப் பகுதிகளில் வாழும் பல தமிழர்கள் வன்னிப் பிரதேசத்துடனும் தொடர்புடையவர்கள். வன்னி தலைமைத்துவங்களின் ஆட்சிக்காலத்தில் மக்கள் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளுக்கிடையே இடம்பெயர்ந்து வாழ்ந்தனர். எனவே, "மன்னார் தமிழர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமே வந்தவர்கள்" அல்லது "தமிழ்நாட்டிலிருந்து மட்டுமே வந்தவர்கள்" என்று கூறுவது சரியல்ல. மாறாக, மன்னார் தமிழர்கள் மன்னார்-மாதோட்டம் பகுதியின் பழங்குடியிருப்புகளையும், யாழ்ப்பாணம், வன்னி மற்றும் தமிழகத் தொடர்புகளையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுச் சமூகமாகப் புரிந்துகொள்ளப்படுகின்றனர்.*

**மன்னார் முஸ்லிம்கள்**

*மன்னார் முஸ்லிம்களின் வரலாறும் இதேபோல் பல்வேறு மூலங்களைக் கொண்டது. அரபு வணிகர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு மன்னாருக்கு வந்து வர்த்தகம் செய்தனர். பின்னர் அவர்கள் இங்கு குடியேறி உள்ளூர் மக்களுடன் கலந்துவாழ்ந்தனர். தமிழகத்தின் காயல்பட்டினம், கீழக்கரை போன்ற பகுதிகளிலிருந்தும் முஸ்லிம் வணிகர்கள் வந்து குடியேறினர். பின்னாளில் யாழ்ப்பாணம், புத்தளம், கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்தும் சில முஸ்லிம் குடும்பங்கள் மன்னாருக்கு வந்தன.*

*எனவே, மன்னார் வரலாற்றுக் காலம் முழுவதும் அனைத்துச் சமூகங்களும் அருகருகே வாழும் ஒரு கலப்புச் சமூகமாக அல்லது பிரதேசமாக மாறியது எனலாம். இங்கு வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரே இடத்திலிருந்து வந்தவர்கள் அல்லர். பண்டைய*



**திருக்கேதீஸ்வரம்**

Image Source - mathagal.com

*மாதோட்டம், யாழ்ப்பாணம், வன்னி, தமிழகம், அரேபியா மற்றும் இலங்கையின் பிற பகுதிகளுடனான தொடர்புகளின் மூலம் உருவான பல்வகை மரபுகளைக் கொண்ட சமூகங்களாக அவர்கள் இன்று வாழ்கின்றனர்.*

*மன்னாரில் இஸ்லாமியர்களின் வருகை பல கட்டங்களாக நடந்தது. பொதுவாக வரலாற்றாசிரியர்கள் கூறுவதன்படி, 8-15ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் அரபு வணிகர்கள் இலங்கையின் கடற்கரைப் பகுதிகளுக்கு வந்தபோது, மன்னாரும் ஒரு முக்கிய வர்த்தகத் துறைமுகமாக இருந்தது. குறிப்பாக முத்துக்குளிப்பு மற்றும் கடல் வணிகம் காரணமாக மன்னார் முக்கியத்துவம் பெற்றது.*

**மன்னார் முஸ்லிம்களின் பூர்வீகம் என்ன?**

*மன்னார் முஸ்லிம்கள் ஒரே இடத்திலிருந்து வந்தவர்கள் அல்லர். அவர்களது மூதாதையர்கள் பல்வேறு வழிகளில் வந்துள்ளனர்:*

**1. அரபு வணிகர்கள்**

*அரேபியத் தீபகற்பத்திலிருந்து வந்த முஸ்லிம் வணிகர்கள் மன்னார் உள்ளிட்ட கடற்கரைப் பகுதிகளில் குடியேறினர். அவர்கள் உள்ளூர் தமிழ் மக்களுடன் கலந்து திருமணம் செய்துகொண்டனர்.*

**2. தமிழகத் தொடர்பு**

*தமிழ்நாட்டின் காயல்பட்டினம், கீழக்கரை, நாகப்பட்டினம் போன்ற கடற்கரைப் பகுதிகளிலிருந்து முஸ்லிம் வணிகர்கள் மன்னாருக்கு வந்து குடியேறினர். எனவே, மன்னார் முஸ்லிம்களின் மொழி மற்றும் பண்பாட்டில் தமிழ்நாட்டின் தாக்கம் காணப்படுகிறது.*

**3. இலங்கையின் பிற பகுதிகளிலிருந்து குடியேற்றம்**

*காலப்போக்கில் யாழ்ப்பாணம், புத்தளம், கொழும்பு போன்ற பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் மன்னாருக்கு*

இடம்பெயர்ந்தனர். குறிப்பாக போர்க்கால இடப்பெயர்வுகளும் இதற்குக் காரணமாக இருந்தன. யாழ்ப்பாணத்திலிருந்தும் சில முஸ்லிம் குடும்பங்கள் மன்னாரில் குடியேறியுள்ளன. ஆனால், மன்னார் முஸ்லிம்கள் அனைவரும் யாழ்ப்பாணப் பூர்வீகத்தினர் என்று கூற முடியாது.

மன்னார் முஸ்லிம்களின் வரலாறு அரபு வணிகர்களின் வருகையுடன் தொடங்கி, தமிழ்நாட்டிலிருந்து வந்த முஸ்லிம் வணிகர்களின் குடியேற்றம் மற்றும் பின்னர் இலங்கையின் பல பகுதிகளிலிருந்து வந்த குடியேற்றங்களால் வளர்ந்தது. ஆகவே, அவர்களின் பூர்வீகம் யாழ்ப்பாணம் மட்டும் அல்ல; அரேபியா, தமிழகம் மற்றும் இலங்கையின் பல பகுதிகளுடனும் தொடர்புடையது. அவர்களின் தாய்மொழி தமிழாக இருப்பது, தமிழகத் தொடர்பும் வட இலங்கைத் தொடர்பும் மிகவும் வலுவாக இருந்ததைக் காட்டுகிறது.

### மன்னார்ச் சிங்கள மக்கள்

மன்னார் மாவட்டத்தில் சிங்கள மக்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே வாழ்கின்றனர். 2012 கணக்கெடுப்பின்படி சிங்களவர்கள் சுமார் 1.98% (1,961 பேர்) இருந்தனர். 2024 மக்கள்தொகைத் தரவுகளின்படி இந்த எண்ணிக்கை 678 பேராகப் பதிவாகியுள்ளது. அவர்கள் மன்னார் நகரம், தலைமன்னார், முசலி, நானாட்டான், மடு போன்ற பகுதிகளில் சிறிய அளவில் வாழ்கின்றனர். குறிப்பாக:

- அரசாங்க அலுவலர்கள்
- பாதுகாப்புப் படையினர் மற்றும் அவர்களது குடும்பங்கள்
- மீன்பிடி மற்றும் வணிகத் தொடர்புடைய சில குடும்பங்கள்

எனப் பல்வேறு காரணங்களால் அவர்கள் அங்கு குடியேறியுள்ளனர்.

மன்னாரில் வாழும் சிங்கள மக்களில் பெரும்பாலானோர் பாரம்பரியமாக பௌத்தர்கள். ஆனால் இலங்கையின் வடமேற்குக் கடலோரப் பகுதிகளில் (புத்தளம், சிலாபம் போன்ற இடங்களுடன் தொடர்புடைய) கத்தோலிக்கச் சிங்களக் குடும்பங்களும் உள்ளன. எனவே, மன்னாரிலுள்ள சிங்களர்கள் அனைவரும் பௌத்தர்கள் என்று கூற முடியாது.

ஆயினும், மாவட்ட அளவில் பௌத்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. மன்னார் மாவட்டத்தின் பெரும்பான்மை மதம் கிறிஸ்தவம் (முக்கியமாகக் கத்தோலிக்கம்) ஆகும்.

### போர்த்துக்கேயர் வருகையுடன் கத்தோலிக்க மத வருகை

அந்நியர்கள் இலங்கைக்கு வந்தபோது இந்த வடமேற்குப் பகுதி வழியாகத்தான் உள்ளே நுழைந்தார்கள் என்று ஒரு கருத்து உண்டு. அவர்கள் வருகைக்கு முன்னர் மாதோட்டம், மன்னார் ஆகிய பகுதிகள் முழுக்க முழுக்க உள்நாட்டுத் தெய்வ வழிபாடுகளையும் பாரம்பரிய இந்து வழிபாட்டு முறைகளையும் கொண்டிருந்தன. ஆனால் போர்த்துக்கேயர் வருகையின் பின்னர் இங்கே முதன்முதலாக கோட்டை கட்டப்பட்டதும், அவர்களது ஆட்சி அங்கு நிறுவப்பட்டதும் முக்கிய நிகழ்வுகளாகும். தங்கள் ஆட்சியை மேலும் பலப்படுத்த அவர்கள் மதத்தை ஒரு கருவியாகக் கையாண்டனர். கத்தோலிக்கம் ஒரு வகையில் அரச மதமாகியது.

கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதிலும் அதன் பால் மக்களை ஈர்ப்பதிலும் அரசு அதிக கவனம் செலுத்தியது. அதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. மேற்கு நாடுகளிலிருந்து இங்கு வந்த ஐரோப்பியர்கள் இந்த நாட்டின் பழக்கவழக்கங்களைக் கண்டு, அவை அநாகரிகமானவை, காட்டுமிராண்டித்தனமானவை என்று கருதினார்கள். அவற்றைச் சீர்திருத்தம் செய்ய கிறிஸ்தவ மதமே ஒரு கருவியாக அமையும் என்று எண்ணி கிறிஸ்தவத்தைப் பரப்ப ஆரம்பித்தார்கள். கிறிஸ்தவ மதம் வந்த பண்பாட்டுக் காரணம் இது.

ஆனால் அதற்கு மேலாக ஒரு காரணம் இருந்தது. அதாவது, அரசியல் அதிகாரத்தை ஸ்திரப்படுத்திக் கொள்ள ஒரு பண்பாட்டு ஆதிக்கம் அவர்களுக்குத் தேவைப்பட்டது. பண்பாட்டு ஆதிக்கம் படைகளின் ஆதிக்கத்தைவிடச் சிறந்தது. அது அடிமனதில் ஆழமாக வேரூன்றுவது. அந்தப் பண்பாட்டு ஆதிக்கமாகத்தான் மேற்கில் தோன்றிய மதமான கிறிஸ்தவம் இங்கு பரப்பப்பட்டது என்ற விளக்கமும் உண்டு.

இன்று மன்னார் பிரதேசம் என்றால் அது கத்தோலிக்க மதம் சார்ந்த பிரதேசம் என்ற ஒரு கருத்தும் உண்டு. மடு மாதா ஒரு சின்னமாக விளங்குகிறது. இந்து, கிறிஸ்தவ, தமிழ், சிங்கள மக்களை இணைக்கும் ஒரு திருத்தலமாக மடு மாதா ஆலயம் திகழ்கிறது எனலாம். ஆலயத் திருவிழாவில் இன, மத பேதமின்றி அனைவரும் இணைகின்றனர்.

வடமேற்குப் பிரதேசத்தில் மன்னார் தொடக்கம் சிலாபம், புத்தளம் ஊடாக கத்தோலிக்க மதம் சார்ந்த பண்பாடுகளைக் காணலாம். கத்தோலிக்க மதம் தமிழ், சிங்கள மக்களை இணைத்தது போல, கத்தோலிக்கக் கூத்து மரபும் தமிழ், சிங்கள மக்களை இணைத்தது.

என்றீக் எம்பரதோர் நாடகம் (ரஜதுங் கட்டுவ எனும் பெயரில்), எஸ்தாக்கியார் நாடகம், ஞான சௌந்தரி



மடுமாதா தேவாலயம்

Image Source - en.wikipedia.org

நாடகம் ஆகியன சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு அவர்கள் மத்தியில் அரங்கேற்றப்பட்டுள்ளன. இது சிங்கள மக்கள் மத்தியில் "நாடகம" எனவும் அழைக்கப்படுகிறது. இதனை மையமாக வைத்தே பேராசிரியர் சரத்சந்திரா 1950-60களில் தனது புகழ்பெற்ற மனமே, சிங்கபாகு ஆகிய நாடகங்களைத் தயாரித்தார். அது கூத்தின் இன்னொரு கிளை வளர்ச்சியாகும். அதன் பின்னரே மட்டக்களப்புக் கூத்து மரபை அடிநாதமாக வைத்து பேராசிரியர் வித்தியானந்தன் தனது கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை ஆகிய வடமோடி, தென்மோடி நாடகங்களைத் தயாரித்தார். அது பின்னர் விளக்கப்படும்.

## புதிய கூத்து மரபு - கத்தோலிக்கக் கூத்து மரபு

சிங்களவர், தமிழர் என்று பேதமின்றி இந்தப் பகுதியில் வாழ்ந்த அனைத்து மக்களையும் ஊடுருவியது இந்தப் புதிய கூத்து முறை. போர்த்துக்கேயர் இங்கு வந்த காலத்தில் மன்னார், மாதோட்டப் பகுதிகளில் ஒரு வலிமையான நாடக மரபு இருந்திருக்கிறது (அந்த மரபு பற்றி முந்தைய கட்டுரைகளில் விளக்கியுள்ளேன்). போர்த்துக்கலிலிருந்து வந்த கத்தோலிக்கர்களிடையேயும் ஒரு வலிமை வாய்ந்த நாடக மரபு இருந்திருக்கிறது.

வந்து சேர்ந்த கத்தோலிக்கக் கூத்து மரபும் ஏற்கனவே இருந்த கூத்து மரபும் இணைந்து மன்னாருக்கென ஒரு தனித்துவமான கூத்து மரபு உருவாகியிருக்கிறது போல் தெரிகிறது. இதனை நாங்கள் இன்னொரு விதமாக நோக்க வேண்டும். இதனை நாங்கள் ஒரு பண்பாட்டுக் கலப்பு எனலாம். இரண்டு வேறுபட்ட பண்பாடுகள் இணையும்போது, ஒன்றிலிருந்து ஒன்று கொடுத்தும் எடுத்தும் மாறி புதிதாக உருவாவதை வரலாறு எமக்குக் காட்டியிருக்கின்றது. இந்த வகையில்தான் மன்னார்க் கூத்தை நாங்கள் நோக்க வேண்டும். ஆரம்ப காலத்தில் வடக்கு மாகாணக் கூத்துகள் பற்றியும், முக்கியமாக யாழ்ப்பாணக் கூத்து முறைகள் பற்றியும், மட்டக்களப்புக் கூத்து முறைகள் பற்றியும் ஆராய்ந்த அறிஞர்கள் மன்னார்ப் பகுதியில் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பேரா. வித்தியானந்தன் அவர்கள் அந்த மரபைத் தமிழ்க் கூத்து மரபின் இன்னொரு கிளை என இனங்கண்ட படியினால்தான் அவர் மன்னாரில் 1960களின் ஆரம்பக் காலத்தில் அண்ணாவிமார் மாநாட்டை நடத்தியதுடன், அதனை ஒட்டி மன்னார்க் கூத்துகளான:

- மூவிராசாக்கள் நாடகம்
- என்றீக் எம்பரதோர் நாடகம்
- ஞான சௌந்தரி நாடகம்

ஆகிய மன்னாரில் வழக்கிலிருந்த கிறிஸ்தவக் கூத்துகளைப் பதிப்பித்தார்.

தென்பாங்கு, வடபாங்கு, வாசாப்பு எனக் கத்தோலிக்கக் கூத்து மரபுகள் மன்னாரில் இருக்கின்றன என்றும் கூறினார்.

வடபாங்கு யாழ்ப்பாண மரபைப் பின்பற்றியது என்றும், தென்பாங்கு மன்னாருக்குரியது என்றும் ஆரம்பகாலத்தில் ஒரு கருத்து உருவாகியிருந்தது. பின்னாளில் மன்னார்க் கூத்துகள் பற்றி ஆய்வுகள் வரத் தொடங்கின. அந்த ஆய்வுகள் மன்னார்க் கூத்துகளைப் பற்றி சில புதிய தகவல்களையும் புதிய கருத்துகளையும் தந்தன.

முக்கியமாக காரை. சுந்தரம்பிள்ளையின் வட இலங்கை நாடக மரபு என்னும் பி.எச்.டி. ஆய்வு மன்னார்க் கூத்துகள் பற்றி விஸ்தாரமாகக் கூறியது. அவர் அக்கூத்துகளை வட இலங்கை நாட்டார் மரபினுள் ஒன்றாகவே வைத்து விளக்கினார். பின்னாளில் வந்த ஆய்வுகள் மேலும் பல தகவல்களைத் தந்தன.

முக்கியமான நூல் அன்புராசா அடிகளார் எழுதிய மன்னார் கூத்துகள் எனும் நூலாகும். இது அவரது எம்.பில். ஆய்வாகும். கற்கிடந்தகுளம் பகுதியில் நிலவும் வாசகப்பாக்களை மையமாகக் கொண்டு ஜேசுதாசன் எழுதிய நற்கருணை வாசகப்பா நூல், வாசகப்பா பற்றிய சில செய்திகளைத் தருகிறது.

இந்த நூல்களையும், கள ஆய்வில் பெற்ற தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டே இங்கு மன்னார்க் கூத்துகள் பற்றிய செய்திகள் தரப்படுகின்றன. இக்கூத்து மரபை நாம் ஈழத்தமிழ்க் கூத்து எனும் பெரு மரத்தின் பிரதான புதிய கிளைகளில் ஒன்றாகக் கருதலாம்.

(தொடரும்)

# 1983 – 1991: உச்சமடைந்த இனப்படுகொலைகளும் ஈழப்போரின் பிராந்தியப் பரிமாணமும்

1833 முதல் 1921 வரை நீடித்த ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றின் முதலாவது காலகட்டத்தில், தமிழர்கள் அரசியல்ரீதியில் 'இலங்கையர்' என்றும், பண்பாட்டுரீதியில் 'தமிழர்' என்றும் அடையாளம் கொண்டிருந்தனர். 1921 ஆகஸ்ட் 15 அன்று சேர்.பொன். அருணாசலம் தேசிய காங்கிரஸில் இருந்து விலகி தமிழர் மகாசபையைத் தொடங்கியதுடன், இரண்டாவது காலகட்டம் ஆரம்பமானது. இது 1949 டிசம்பரில் தந்தை செல்வா அகில இலங்கை தமிழரசுக் கட்சியைத் தொடங்கும் வரை நீடித்தது. 1949 முதல் 1968 வரை நீடித்த மூன்றாவது காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் என வரையறுக்கப்பட்டு, சமஷ்டிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1968 இல் ஈழத்தமிழர் இளைஞர் இயக்கத்துடன் தொடங்கி, 2009 இல் ஆயுதப்போர் முடிவடையும் வரை நீடித்த நான்காவது காலகட்டத்தில், தனிநாட்டுக் கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 'ஈழத்தமிழர் அரசியல் வரலாறு' எனும் இத்தொடர், இந்த ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த முக்கிய நகர்வுகளைத் தொகுத்து வழங்குகிறது; அதன்மூலம், இன்னும் முழுமையடையாத ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றுக்கு ஓர் அடித்தளம் அமைக்க முயற்சிக்கின்றது

பகுதி 5


## சி. அ. யோதிலிங்கம்



சி. அ. யோதிலிங்கம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் சிறப்புக் கலைமாணிப்பட்டத்தையும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுமாணிப் பட்டத்தினையும் இலங்கைச் சட்டக்கல்லூரியில் சட்டமாணிப் பட்டத்தினையும் பெற்றவராவார்.

'இலங்கையின் அரசியல் யாப்புகள்', 'இலங்கையின் இனகுழும அரசியல்', 'சமாதான முன்னெடுப்பின் அரசியல் சவால்கள்', 'இலங்கையின் இனப்பிரச்சினையும் அரசியல் தீர்வு யோசனைகளும்', 'இலங்கையில் இனப்பிரச்சினையின் வரலாறு', 'அரசறிவியல் ஓர் அறிமுகம்', 'ஒப்பியல் அரசாங்கம்' போன்ற பல நூல்களை எழுதியுள்ள யோதிலிங்கம் பல ஆய்வுக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக எழுதிவருகின்றார்.

### சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு

பெரும்பான்மை இனத்தின் ஆதிக்கமுள்ள ஆட்சியமைப்பில் தேசிய இனங்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள், உரிமைகளைப் பாதுகாப்பது இன்று உலக ரீதியாகவே பெரும் பிரச்சினையாகவுள்ளது. பாதுகாக்கும் பொறுப்பினை பெரும்பான்மை இனத்தின் கைகளில் வழங்க முடியாது. அவ்வாறு வழங்கப்பட்டால் அவை இயல்பாகவே துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை சட்ட, நிர்வாக, நீதி நிறுவனங்கள் ஆகிய மூன்றும் இவ்விடயத்தில் துஷ்பிரயோகங்களை மேற்கொண்டே வந்திருக்கின்றன. சட்ட நிறுவனங்கள் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்களை இயற்றுவதற்கும், ஏற்கெனவே வழங்கப்பட்ட சட்ட ஏற்பாடுகளையும், உரிமைகளையும் நீக்குவதற்கும் என்றுமே பின்னின்றதில்லை. தனிச் சிங்களச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், 6 ஆவது திருத்தச் சட்டம், அவசரகாலச் சட்டம் எனப் பலவற்றினை இவ்வாறு நிறைவேற்றியிருந்தது. அதேவேளை 29 ஆவது பிரிவு போன்ற தமிழ் மக்களுக்கு சார்பான சட்ட ஏற்பாடுகளை நீக்கியும் இருக்கின்றது.

நிர்வாக நிறுவனங்கள் தமிழ் மக்களுக்கு சார்பான தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில்லை. தமிழ் மொழி அரச கரும மொழி விடயமும், 13 ஆவது திருத்தமும் இதற்கு நல்ல உதாரணங்களாகும். அதேவேளை சட்ட ஏற்பாடுகளில் சிங்கள மக்களுக்குச் சார்பாக இருக்கின்ற விடயங்களை நிறைவேற்றப் பின்னிற்பதுமில்லை. அரச கரும மொழிச் சட்டத்தினை சிங்களக் குடியேற்றங்களுள்ள பிரதேசங்களில் உடனடியாகவே பிரயோகித்தமை இதற்கு நல்ல சான்றாகும். ஆனால் மலையகம் உட்பட தென்னிலங்கையில் அதனைப் பிரயோகிப்பதில் அக்கறை காட்டவில்லை.

அதேவேளை சுற்றுநிருபங்களின் மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் உரிமைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கும் தயங்குவதில்லை. 13 ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட இவ்வாறான பல அதிகாரங்கள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. நீதித்துறையிலும் முன்னர் குறிப்பிட்டது போல இலங்கை நீதிமன்றங்கள் ஒருபோதும் தமிழ் மக்களுக்குச் சார்பாக தீர்ப்புகளை வழங்கியதில்லை. எனவே தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள், உரிமைகளுக்கான பாதுகாப்பை சிங்கள ஆதிக்க நிறுவனங்களிடம் ஒப்படைக்க முடியாது. அதனை தமிழ் மக்களிடமே ஒப்படைத்தல் வேண்டும் அல்லது தமிழ் மக்களுக்கென வீட்டோ அதிகாரம் கொண்ட கூட்டு அமைப்புகளிடம் அந்தப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். 13 ஆவது திருத்தத்தில் இத்தகைய ஏற்பாடுகள் எதுவுமில்லை. அங்கு பகிர்வு அதிகாரங்களே எதுவுமில்லாமல் இருக்கும் போது கூட்டு அதிகாரத்தையோ, கூட்டு அதிகாரத்தளத்தில் பகிர்வு அதிகாரங்களிற்கான பாதுகாப்பைப் பற்றியோ நாம் நினைத்தே பார்க்க முடியாது. பாதுகாப்புத் தளங்கள், அரசியல் யாப்பினைத் திருத்துவதில் பங்கு, கூட்டு அதிகாரத்தளத்தில் சுயாதீனமான பங்கு என்பவற்றிலேயே தங்கியுள்ளன. 13 ஆவது திருத்தத்தில் இவை எதுவுமே இல்லை.

### ராஜீவ் காந்திக்கு பிரபாகரன் எழுதிய கடிதங்கள்

இந்தியா-புலிகள் யுத்தம் மிகவும் கொடூரமானதாக, மூர்க்கத்தனம் மிக்கதாக அமைந்திருந்தது. இந்தப் போரில் இந்திய இராணுவமும் விடுதலைப் புலிகளின் கெரில்லா அணிகளும் பலத்த உயிரிழப்பை சந்தித்தன. 1987 அக்டோபர் 11 அன்று யாழ்ப்பாணம் மீது இந்திய இராணுவம் படையெடுப்பை மேற்கொண்ட அன்று பல்கலைக்கழகத்திற்கு அண்மித்த பிரம்படியில் 40 பொதுமக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது போன்று 1987 அக்டோபர் 21 அன்று யாழ்ப்பாணம் பொது மருத்துவமனையிலும், 1987 அக்டோபர் 27 அன்று சாவகச்சேரியிலும் மிருகத்தனமான படுகொலைகள் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறான கொலைகள் தமிழ் இனத்திற்கு ஏற்பட்ட பாரிய அழிவாகும். இந்தியாவுடன் போர் தொடங்கி மூன்று மாத காலத்துக்குள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு போர் நிறுத்தம் செய்து பேச்சுகளை நடத்தி சமரச உடன்பாட்டுக்கு வருமாறு மூன்று கடிதங்களை பிரபாகரன் எழுதினார். இவை முறையே 12.10.1987, 14.10.1987, 13.01.1988 ஆகிய திகதிகளில் எழுதப்பட்டன. இருப்பினும் மூன்று கடிதங்களுக்கும் ராஜீவ் காந்தி பதிலளிக்கவில்லை.

### மாகாணசபைத் தேர்தல் - 1988

1988 டிசம்பர் 10 இல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் அ. வரதராஜப் பெருமாள் வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முதலாவது முதலமைச்சரானார். 1990 மார்ச் 1 அன்று, இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையை விட்டுப் புறப்படும் தருவாயில், வடக்கு - கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள் மாகாணசபைக் கூட்டத்தில் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்திவிட்டு அமைதிப் படையினருடன் சேர்ந்து இந்தியா சென்றார். இதனை அடுத்து அரசுத்தலைவர் பிரேமதாசா மாகாணசபையைக் கலைத்து, நடுவண் அரசின் நேரடி ஆட்சியைக்

கொண்டு வந்தார். இலங்கையில் மாகாண சபைகள் (Provincial Councils) என்பது இலங்கை மாகாணங்களுக்கான சட்டவாக்க அவைகளாகும். இலங்கை அரசியலமைப்பின் படி, மாகாண சபையானது குறிப்பிட்ட மாகாணத்தின் வேளாண்மை, கல்வி, சுகாதாரம், வீடமைப்புத் திட்டம், உள்ளூராட்சி, சாலைவழிப் போக்குவரத்து, சமூக சேவை போன்றவற்றின் நிர்வாகங்களைக் கவனிக்கும். இவற்றை விட காவல்துறை அதிகாரம், காணி போன்றவற்றுக்கும் அரசியலமைப்பின் படி இதற்கு அதிகாரங்கள் உள்ளன. ஆனாலும் நடுவண் அரசு இவற்றுக்கான அதிகாரங்களை மாகாண அரசுக்கு வழங்க மறுத்து வருகின்றது. மாகாண சபைக்கு தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 1987 யூலை 29 இல் கையெழுத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி அதே ஆண்டு நவம்பர் 14 இல் இலங்கை நாடாளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது. 1988 பெப்ரவரி 3 இல் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

மாகாண சபைகள் அமைக்கப்படுவதற்கான நோக்கம் என்னவென இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் முகவுரையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

- இலங்கையின் இறைமையையும், தன்னாதிக்கத்தையும் ஒற்றை ஆட்சியையும் பாதுகாப்பதற்காகவும்,
- இலங்கை பல்லின மக்களான சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் வாழும் நாடாவதாலும், பல மொழி பேசும் ஒரு நாடாக ஏற்றுக் கொள்வதாலும்,
- பல்லின மக்கள் வாழ்வதால் அவ்வவ் இனத்திற்கு வெவ்வேறான மொழி, கலாசாரம், என்பன உண்டு என்பதை அங்கீகரிப்பதாலும்,
- தமிழ் மொழி பேசுபவர்கள் இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒன்றாகக் கலந்து வசிப்பதுடன், வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையாக வசிப்பதால் அவ் வடக்கு - கிழக்கு அவர்களது பூர்வீக பூமி என ஏற்றுக் கொள்வதாலும்,
- இலங்கை சுதந்திரமும், இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட ஒற்றையாட்சி என்பதாலும், அவற்றைப் பாதுகாக்க வேண்டியிருப்பதாலும்,

மாகாண சபைகள் அமைக்கப்படுகின்றன என்று கூறப்பட்டுள்ளது. இந்த ஒன்பது மாகாண சபைகளில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர இணக்கம் காணப்பட்டது. இவ்விணைப்பு நிரந்தர இணைப்பாக இருப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் 1988 டிசம்பர் 31 இற்குள் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 1988 செப்டம்பர் 2 இல் இரு மாகாணங்களும் வடக்கு-கிழக்கு மாகாண சபை என்ற பெயரில் இணைக்கப்பட்டன.

வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பான பொது வாக்கெடுப்பு ஒருபோதும் இடம்பெறவில்லை. ஒவ்வோர் ஆண்டும் அரசுத் தலைவர்களால் தற்காலிக இணைப்பாக நீட்டிக்கப்பட்டு வந்தது. இலங்கைத் தேசியவாதிகளால் இந்த இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வந்தது. 2006 யூலை 14 இல் மக்கள் விடுதலை முன்னணி கிழக்கு மாகாணத்துக்கெனத் தனியே மாகாண சபை நிறுவ வேண்டும் என இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. இவ்வழக்கு விசாரணையை அடுத்து அன்றைய அரசுத்தலைவர் ஜெயவர்த்தனாவினால் அறிவிக்கப்பட்ட இணைப்பு சட்டவிரோதமானது எனக் கூறி அதனை செல்லுபடியற்றதாக்குவதாக 2006 ஒக்டோபர் 16 இல் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இதனை அடுத்து 2007 ஜனவரி 1 இல் வடக்கு - கிழக்கு மாகாண சபை வட மாகாண சபை, கிழக்கு மாகாண சபை என இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அரசியலமைப்பின் 1988 ஆம் ஆண்டு 2ஆம் இலக்க 3(3) உட்பிரிவுச் சட்டத்தின் படி, ஒவ்வொரு மாகாண சபைக்கும் அந்தந்த மாகாணத்தின் மக்கள் தொகை, நிர்வாகப் பிரிவு மற்றும் ஏனைய காரணங்களைக் கருத்தில் கொண்டு தேர்தல் ஆணையாளர் உறுப்பினர் தொகையைத் தீர்மானிப்பார். இச்சட்டமூலத்தின் 13ஆம் பிரிவின் படி, மாகாண சபைக்குப் போட்டியிட விரும்புவோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றில் அல்லது சுயேட்சைக் குழு ஒன்றின் சார்பில் போட்டியிடலாம். இவ்வாறு போட்டியிடுபவர் மாகாணத்திற்குள் உள்ள நிர்வாக மாவட்டம் ஒன்றுக்கே போட்டியிடலாம். முழு மாகாணத்திற்கும் போட்டியிட முடியாது.

## ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியாதல்

ரணசிங்க பிரேமதாசா 1924ஆம் ஆண்டு யூன் 23ஆம் திகதி பிறந்தார். இவர் 1989 ஜனவரி 2ஆம் திகதி முதல் 1993 மே 1ஆம் திகதி வரை இலங்கையின் 3 ஆவது (நிறைவேற்று அதிகாரத்துடன் 2 ஆவது) ஜனாதிபதியாகப் பதவியில் இருந்தார். முன்னதாக இவர் 1978 முதல் 1989 வரை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அரசில் பிரதமராகப் பணியாற்றினார். 1986 இல் இவருக்கு "ஸ்ரீ லங்காபிமான்ய" என்ற இலங்கையின் அதியுயர் பட்டம் அரசுத்தலைவர் ஜூனியஸ் ரிச்சர்ட் ஜெயவர்த்தனாவால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இலங்கை வரலாற்றில் முதன்முறையாக இப்பட்டம் வழங்கப்பட்டது. பிரேமதாசா 1993 மே 1 அன்று கொழும்பு நகரில் நடைபெற்ற மே நாள் பேரணி

ஒன்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்பட்ட ஒருவரால் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தார். இவரது நினைவாக இவர் கொலை செய்யப்பட்ட ஆமர் வீதியில் ஓர் உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

## அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் கொலை

இவர் இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், இலங்கை நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்தார். இவர் இறப்பின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளராகவும் செயற்பட்டு வந்தார்.

எழுபதுகளின் இறுதியிலும், எண்பதுகளின் ஆரம்பத்திலும் அடிக்கடி நிகழ்ந்த இனக்கலவரங்கள், தமிழர் உரிமைகள் தொடர்பான சிங்கள அரசியற் கட்சிகளின் தீவிரப் போக்கு என்பன பாரம்பரியத் தமிழ்க் கட்சிகளின் இயலாமைத்தன்மையை எடுத்துக்காட்டின. இது தமிழ்ப் பகுதிகளில் தீவிரவாதப் போக்குக்கு வழிகோலியபோது, தமிழ் மக்கள் மீது அமிர்தலிங்கம் போன்ற தலைவர்களுக்கு இருந்த பிடி கைநழுவிப் போனது. பல சந்தர்ப்பங்களில் இந்தியாவில் ஒதுங்கியிருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. எனினும் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் தங்களுக்கு இருக்கக்கூடிய உலக அங்கீகாரத்தை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பயன்படுத்துவதற்கான கூடுதல் வாய்ப்புத் தங்களுக்கு இருப்பதாகக் கருதிய அமிர்தலிங்கமும் ஏனையவர்களும் அதற்கேற்ப நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார்கள்.

இதன்மூலம் இளைஞர்களுக்கும் அமிர்தலிங்கம் போன்றவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. 1989 யூலை 13ஆம் திகதி கொழும்பில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதே நாளில் அதே வீட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனும் கொல்லப்பட்டார். தொடக்கத்தில் இவர்களது கொலைகளுக்குப் பொறுப்பேற்க மறுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் பின்னாளில் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

## மாவீரர் தினம் பிரகடனம்

இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி தாயகத்திற்காகத் தமது உயிரை ஈந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களையும், புலிகளோடு இணைந்து உயிர் ஈந்த ஈழப் புரட்சிகர மாணவர் இயக்க உறுப்பினர்களையும், மற்றும் குட்டிமணி, தங்கத்துரை போன்ற வேறு சில ஈழப் போராட்டப் போராளிகளையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செய்து பெருமைப்படுத்தும் நாள் ஆகும். இதற்குரிய நாளாக நவம்பர் 27ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 1989 இல் பிரகடனம் செய்யப்பட்டது. உலகின் பல்வேறு தேசங்கள் தமது போர் வீரர்களைக் கௌரவிப்பதற்காகக் கடைப்பிடிக்கும் நினைவு தினங்களைப் போலவே, ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மாவீரர் நாளும் அமைந்திருக்கின்றது. ஈழத் தமிழர் அநேகர் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தாலும், ஈழப் போராட்டத்தில் மடிந்த வீரர்களுக்கு மரியாதை செய்வர். மற்ற இயக்கங்களுடைய போராளிகளுக்கும் இவ்வாறு வணக்கம் செலுத்தும் நாட்கள் உண்டு.

விடுதலைப் புலிகளின் லெப். சங்கர் (சத்தியநாதன்) என்ற முதல் மாவீரனின் நினைவு நாள்தான் நவம்பர் 27. விடுதலைப் புலிகளின் சிறந்த தளபதியாக விளங்கிய சங்கர் மீது சிங்கள இராணுவம் கடும் கோபம் கொண்டிருந்தது. 1982ஆம் ஆண்டு இராணுவத்தின் தேடுதல் வேட்டைக்கு இலக்காகி, 1982ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதியன்று சிங்கள இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டார். சங்கர் தப்பி ஓட முயன்றபோது, வயிற்றில் குண்டு பாய்ந்தது. அப்படியும் சிங்கள இராணுவத்தினரிடம் சிக்காமல் தப்பித்து மேற்சிகிச்சைக்காக தமிழகம் சென்றார். ஆனால், சிகிச்சை பலனின்றி அவரது தலைவர் பிரபாகரனின் மடியிலேயே சங்கரின் உயிர் பிரிந்தது.

## ராஜீவ் காந்தி கொலை

ஸ்ரீபெரும்புதூரில் 1991 மே 21 அன்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் மூலம் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். இக்கொலைத் தாக்குதலை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் தேன்மொழி ராசரத்தினம் என்ற தனு மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது. இத்தாக்குதலில் ராஜீவ் காந்தி உட்பட குறைந்தது 14 பேர் உயிரிழந்தனர். இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியமை, இந்திய இராணுவ நடவடிக்கைகளால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவை இத்தாக்குதலுக்கான பின்னணிக் காரணங்களாக இந்திய நீதிமன்றங்களால் சுட்டிக்காட்டப்பட்டன.

ராஜீவ் காந்தி சம்பவம் நடைபெறுவதற்கு சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன்னர் சென்னை வந்திருந்தார். பின்னர் வெள்ளை நிற அம்பாசிடர் வாகனத்தில் ஸ்ரீபெரும்புதூருக்குச் சென்று தேர்தல் பிரச்சார நிகழ்வுகளில் பங்கேற்றார். அவருடன் ஒரு வெளிநாட்டு பத்திரிகையாளர் பயணித்தார். ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தை அடைந்த அவர் வாகனத்திலிருந்து இறங்கி மேடையை நோக்கி நடக்கத் தொடங்கினார். வழியிலே பல ஆதரவாளர்கள், காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள்

மற்றும் பள்ளி மாணவர்கள் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். இரவு 10.21 மணியளவில் தனு அவரை அணுகி வணக்கம் தெரிவித்தார். அவரது கால்களைத் தொட்டு வணங்குவதற்காகக் குனிந்தபோது, தனது உடையில் மறைத்து வைத்திருந்த ஆர்.டி.எக்ஸ். வெடிபொருளை வெடிக்கச் செய்தார். இதன் விளைவாக ராஜீவ் காந்தியும் மேலும் பதினான்கு பேரும் உயிரிழந்தனர். இச்சம்பவம் அங்கு இருந்த ஒரு புகைப்படக்காரரின் ஒளிப்படக் கருவியில் பதிவாகியிருந்தது.

ராஜீவ் காந்தி, தான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்க இந்திய அமைதிப்படையை மீண்டும் அனுப்புவேன் என்று 1990 ஆகஸ்ட் 21-28 தேதியிட்ட சண்டே (Sunday) இதழுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார். இதுவே அவரைக் கொலை செய்ய விடுதலைப் புலிகள் எடுத்த முடிவுக்கான முக்கிய காரணமாக இருந்ததாக இந்திய உச்ச நீதிமன்றம் பின்னர் குறிப்பிட்டது. அப்போதைய தமிழ்நாடு ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங், தனது அதிகாரபூர்வ நெறிமுறைகளை மீறி, தமிழ்நாட்டிற்கு வந்தால் ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து இருப்பதாக இருமுறை எச்சரித்திருந்தார். 1992 யூன் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கையில், முன்னாள் பிரதமருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் போதுமானதாக இருந்தன என்றும், உள்ளூர் காங்கிரஸ் கட்சித் தலைவர்களே அவற்றைச் சீர்குலைத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய உச்ச நீதிமன்றம், ராஜீவ் காந்தியின் கொலை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தனிப்பட்ட விரோதத்தின் அடிப்படையில் நடத்தப்பட்டது என்று குறிப்பிட்டது. மேலும், 1987 அக்டோபரில் 12 புலிகளின் தற்கொலைகளையும், திலீபனின் உண்ணாவிரத மரணத்தையும் பின்னணிச் சம்பவங்களாகக் குறிப்பிட்டது. அதேவேளை, இக்கொலை அரசை மிரட்டும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை என்றும், இதனை தீவிரவாதச் செயலாக வகைப்படுத்த முடியாது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டதாகப் பதிவாகியுள்ளது.

விசாரணை, பயங்கரவாத மற்றும் சீர்கேட்டு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்தின் (தடா) கீழ் நடத்தப்பட்டது. சென்னையில் அமைக்கப்பட்ட தடா நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை விதித்தது. எனினும் மனித உரிமை அமைப்புகள், இவ்விசாரணை நியாயமான விசாரணைக்கான தரநிலைகளைப் பூர்த்தி செய்யவில்லை எனக் கண்டனம் தெரிவித்தன. குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்கள் தீர்ப்பின் முக்கிய ஆதாரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் பின்னர் அவை வற்புறுத்தலின் பேரில் பெறப்பட்டவை எனக் குற்றஞ்சாட்டப்பட்டது. உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்ட பின்னர் நான்கு பேருக்கு மட்டும் மரண தண்டனை உறுதிசெய்யப்பட்டது.

முருகன், பேரறிவாளன், சாந்தன் மற்றும் நளினி ஆகிய நால்வருக்கும் உச்ச நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. பின்னர் சோனியா காந்தியின் பரிந்துரையின் அடிப்படையில் நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. மற்ற மூவரின் கருணை மனுக்கள் 2011 ஆகஸ்ட் மாதத்தில் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர்களின் மரண தண்டனையை நிறைவேற்ற 2011 செப்டம்பர் 9ஆம் தேதி நிர்ணயிக்கப்பட்டது. இந்தத் தண்டனையை ரத்து செய்யக் கோரி பல அரசியல் மற்றும் திராவிட இயக்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்தன. 2011 ஆகஸ்ட் 30 அன்று சென்னை உயர்நீதிமன்றம் இம்மூவரின் மரண தண்டனையை எட்டு வாரங்களுக்கு நிறுத்திவைத்தது. மேலும், அவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என தமிழ்நாடு சட்டமன்றம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்களின் மரண தண்டனையை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ப. சதாசிவம், ரஞ்சன் கோகாய் மற்றும் சி. கே. சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு 2014 பெப்ரவரி 18 அன்று ரத்து செய்தது. மேலும், சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழு பேரையும் விடுதலை செய்யலாம் என்ற தமிழ்நாடு அமைச்சரவையின் முடிவு மத்திய அரசுக்கு அனுப்பப்படும் என்றும், மத்திய அரசு மூன்று நாட்களுக்குள் பதிலளிக்காவிட்டால் அவர்களை தமிழக அரசே விடுதலை செய்யும் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார்.

ராஜீவ் காந்தி படுகொலை குறித்து விசாரணை மேற்கொண்ட ஜெயின் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், இக்கொலையுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சதித் திட்டங்கள் குறித்து மேலதிக விசாரணை நடத்துவதற்காக இந்திய அரசால் 1998 டிசம்பர் மாதத்தில் பல்நோக்கு ஒழுங்கு நடவடிக்கை கண்காணிப்பு முகமை நிறுவப்பட்டது. இந்த விசாரணை அமைப்பில் இந்தியாவின் முக்கிய புலனாய்வு மற்றும் அமலாக்க நிறுவனங்களான 'சிபிஐ', 'றோ', இந்திய உளவுத்துறை, அமலாக்க இயக்குநரகம் மற்றும் வருவாய் புலனாய்வு இயக்குநரகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இடம்பெற்றிருந்தனர்.

# உலக முதலாளித்துவ அமைப்பின் சமத்துவமற்ற விருத்தி: சமீர் அமின் கோட்பாடு பற்றிய ஓர் அறிமுகம்

1920களில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரில் கொழும்பு நகரில் ஓர் உயர்கல்வி நிறுவனம் தாபிக்கப்பட்டது. இக்கல்லூரி லண்டன் பல்கலைக்கழகத்தின் இளங்கலை/ விஞ்ஞானப் பட்டப்படிப்புக்கு வெளிவாரி பரீட்சார்த்திகளான இலங்கை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் கல்வி நிறுவனமாகச் செயற்பட்டது. 1942 இல் இக்கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு தனித்து இயங்க ஆரம்பித்தது. காலப்போக்கில் நாட்டின் பிறபகுதிகளிலும் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்பட்டன. இலங்கையில் பல்கலைக்கழக முறை (University System) ஒன்று உருவாகியது. இம்மாற்றங்கள் மேற்குறித்த மூன்று கற்கைத்துறைகளிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. 'இலங்கையின் வரலாறும், பொருளியலும், சமூகவியலும்' என்ற இத்தொடரில் இக்கற்கைத்துறைகளின் வளர்ச்சி பற்றிய மதிப்பீடுகள், முக்கிய ஆய்வாளர்களின் நூல்களினதும், ஆய்வுக் கட்டுரைகளினதும் அறிமுகமும் விமர்சனமும், ஆய்வாளர்களின் கோட்பாட்டுப் பங்களிப்புகள் (Theoretical Contributions), அவர்களின் புலமைத்துறை வாழ்க்கை வரலாறு, மாணவர் பரம்பரைகளின் உருவாக்கம், அரசியல் – சமூக – பண்பாட்டு உயர்குழக்களின் (Elites) உருவாக்கம் என்பன குறித்த பகுப்பாய்வுகளாக அமையும் கட்டுரைகள் பதிவிடப்படும்


## கந்தையா சண்முகலிங்கம்



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

## சமீர் அமின் (1931 - 2018)

2018ஆம் ஆண்டில் 86 வயதில் காலமான பொருளியலாளர் சமீர் அமின் எகிப்து நாட்டில் பிறந்தவர். 1947இல் கல்வி கற்பதற்காகப் பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகருக்குச் சென்ற அவர், பரிஸ் நகரிலேயே இறுதிவரை வாழ்ந்து வந்தார். 1957ஆம் ஆண்டில் 'The Structural Effects of the International Integra tion of PreCapitalist Economies' என்னும் தலைப்பிலான ஆய்வேட்டைச் சமர்ப்பித்து Ph.D. பட்டத்தை இவர் பெற்றுக்கொண்டார். இந்த ஆய்வேடு பின்னர் 'Accumu lation on a World Scale' என்னும் நூலாக 1974இல் பிரசுரிக்கப்பட்டது.



சமீர் அமின்

Image Source - entreprises-magazine.com

40க்கு மேற்பட்ட ஆய்வு நூல்களையும், ஏராளமான கட்டுரைகளையும் எழுதிய சமீர் அமினின் இன்னொரு நூலின் தலைப்பு 'சமத்துவமற்ற விருத்தி' (Unequal Development) என்பதாகும்.




Image Source - goodreads.com

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக முதலாளித்துவம் (World Capitalism), ஏகாதிபத்தியம் (Imperial ism), காலனித்துவம் (Colonialism) குறித்த ஆய்வுகளில் சார்புக்கோட்பாடு (Dependency Theory) முக்கியம் வாய்ந்த கோட்பாடாக அமைந்தது. போல் பரன் (Paul Baran), அந்த்ரே குந்தர் பிராங்க் (Andre Gunder Frank), இம்மானுவேல் வலர்ஸ்டீன் (Immanuel Wallerstein), சமீர் அமின் ஆகியோர் முக்கியமான சார்புக் கோட்பாட்டாளர்களாவர்.

இக்கட்டுரை சமீர் அமின் அவர்களின் 'சமத்துவமற்ற விருத்தி' என்னும் எண்ணக்கருவை முதன்மைப்படுத்தி, அவரின் கோட்பாட்டை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது.

## மையமும், சார்பு மண்டலமும்

மையம் (Centre), சார்பு மண்டலம் (Periphery) என்ற இரண்டு எண்ணக்கருக்களை சார்புக் கோட்பாடு அறிமுகம் செய்தது. இந்த இரண்டின் இணைப்பாக அமையும் உலக முறைமை (World System) ஒன்று உருவாகி இருப்பதாக இக்கோட்பாடு விளக்கம் தந்தது. ஆய்வுக்கான அலகாக தனித்தனி நாடுகளைக் கொள்வதை விடுத்து முழு உலகையும் ஓர் அலகாகக் கொண்டு நோக்கும் உலக முறைமை என்ற கருத்து சார்புக் கோட்பாட்டின் சிறப்பு அம்சமாகும். உலக முறைமைக்குள் இரண்டு மாதிரிகளை (Models) சமீர் அமின் காண்கிறார். அவை:

1. சுயத்துவம் உடைய மையப் பொருளாதாரம் (Auto Centric Economy)

2. சார்புப் பொருளாதாரம் (Peripheral Economy)

இந்த இருவேறு போக்குகளின் வெளிப்பாடே உலக மட்டத்தில் நிகழும் சுரண்டலும் மூலதனத் திரட்சியும் (Accumulation), அதன் விளைவான சமத்துவமற்ற விருத்தியும் என்பது சமீர் அமின் முடிவு.

### சுயத்துவமுடைய மையப் பொருளாதாரமும் சார்புப் பொருளாதாரமும்

மையப் பொருளாதார நாடுகள் உற்பத்திச் சாதனங்களான மூலதனப் பொருட்கள், மக்களின் நுகர்வுக்கான நுகர்வுப் பொருட்கள் என்ற இரண்டையும் உற்பத்தி செய்வன. இந்நாடுகளில் இவ்விரு துறைகளும் ஒன்றோடொன்று பிணைப்புற்றும், ஒன்றுக்கு ஒன்று ஆதரவாகவும் செயற்படும். கைத்தொழில், விவசாயம் என்ற இரு துறைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுகின்றன. பொருளாதார வளர்ச்சி, மாற்றம், ஏற்ற இறக்கங்கள் என்பன சுயத்துவம் உடைய நாடுகளில் உள்ளிருந்தே எழுகின்றன. வெளிக்காரணிகள் இரண்டாம் நிலையானவை.

சார்பு நாடுகளின் பொருளாதாரம் நேர் எதிரான தன்மை கொண்டது. அங்கு சுயத்துவத்திற்கு மாறாக சார்புநிலை காணப்படும். சார்பு நாடுகளின் பிரதான இயல்புகளில் ஒன்று மிகை விருத்தியுடைய ஏற்றுமதித் துறையாகும். கோப்பி, தேயிலை, கொக்கோ, வாழைப்பழம், கரும்பு ஆகிய ஏற்றுமதிப் பயிர் உற்பத்தியும் கனிமப் பொருட்களின் ஏற்றுமதியும் சார்பு

நாடுகளில் விருத்தி பெற்றிருந்தது. இயந்திரங்கள், இடைத்தரப் பொருட்கள் போன்ற மூலதனப் பொருட்களின் உற்பத்தி சார்பு நாடுகளில் வளர்ச்சி பெறவில்லை. நுகர்வுப் பொருட் கைத்தொழில் என்னும் மென் கைத்தொழில் ஓரளவு விருத்தி பெற்ற போதும் கனரகக் கைத்தொழில்கள் வளரவில்லை. தொழில்துறைகளும், விவசாயமும் பிணைப்பு உடையனவாய் வளரவில்லை. மைய நாடுகளின் பொருளாதாரத்திற்கு மாறான போக்கில் சார்பு நாடுகளின் பொருளாதாரம் அமைந்தது. சமீர் அமின் முன்வைக்கும் இந்த மாதிரிகள் உலக முறைமையை விளக்குவதற்கான சிறப்பு மாதிரிகள் ஆகும்.

## உற்பத்தி முறைமைகள் (Modes of Production)

இலத்தீன் அமெரிக்காவில் நிலமானியம் இருப்பதாகக் கூறுவது பொய்ப்புனைவு. இங்கு மூலை முடுக்கெல்லாம் காணப்படுவது முதலாளித்துவம்தான் என்று கூறினார் அந்த்ரே குந்தர் பிராங்க். சமீர் அமின் இந்தக் கருத்துடன் உடன்பாடு இல்லாதவர். சார்பு நாடுகளின் பொருளாதாரம் ஒரே சமயத்தில் பல உற்பத்தி முறைமைகளைக் கொண்டிருக்கும் ஒரு கலவை அமைப்பு என்ற கருத்தை சமீர் அமின் கூறுகிறார். பிராங்க் பரிவர்த்தனை உறவுகளின் (Exchange Relations) அடிப்படையில் முதலாளித்துவத்தை விளக்கினார். அமின் கோட்பாடும் பரிவர்த்தனை உறவுகளின்படி அமைந்த விளக்கமே ஆயினும், உற்பத்தி முறைமைகளுக்கும் இவர் முதன்மை அளிக்கிறார். மைய நாடுகளின் ஊடுருவலும் ஆதிக்கமும் சார்புப் பொருளாதாரங்களைத் திரிபுபடுத்தியுள்ளன. மிகை விருத்தியுடைய ஏற்றுமதித்துறை (Over Developed Export Sector) என்ற வடிவில் இந்தத் திரிபு வெளிப்படுகிறது. வர்த்தக உறவுகள் மூலம் உலக முறைமையில் சார்பு நாடுகள் இணைக்கப்பட்டுள்ளன. சமத்துவமற்ற உறவுகள் உலக முறைமையின் அடிப்படை இயல்பாக உள்ளன.

சார்பு நாடுகளில் நிலவும் உற்பத்தி முறைகளின் பன்மைத்துவம் என்னும் கருத்து அந்நாடுகளின் சமூக உருவாக்கம் பற்றிய ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் கருத்தாகும். அது குறைந்த கூலியை வழங்குவதற்காக முதலாளித்துவத்திற்கு முந்திய உற்பத்தி முறைகளை வைத்துக் கொள்கிறது. குறைந்த கூலிக்காக விளைதிறன் மட்டத்தையும் குறைநிலையில் வைத்திருக்கவும் முனைகிறது. மார்க்சிய ஆய்வாளரான S.B.D. de சில்வா இலங்கையின் தோட்ட முதலாளித்துவத்தின் இயல்பைப் பற்றி பின்வருமாறு எழுதினார்.

“தோட்டத்துறையின் தொழில்நுட்பப் பின்னடைவு உற்பத்தி விளைதிறனையும் குறைமட்டத்தில் வைத்திருக்கிறது. குறைந்த கூலியைக் கொடுப்பதுதான் இதன் பின்னணியில் உள்ள விடயம். வெளித்தோற்றத்தில் தெரியும் முதலாளித்துவ வடிவங்களுக்குப் பின்னே தொழில் உறவுகளில் முதலாளித்துவத்திற்கு முந்திய முறைகள் தோட்டங்களில் நடைமுறையில் இருப்பது முக்கியமான பண்புகளில் ஒன்றாகும்” (‘The Political Economy Of Underdevelopment (1982)’).

மலையகம் பற்றி மட்டுமன்றி இலங்கையின் வடக்குக் கிழக்கின் உற்பத்தி முறைமைகள், அப்பகுதிகளின் சமூக உருவாக்கம் (Social Formation) பற்றிய ஆய்வுகளில் பிரயோகிக்கப்படக்கூடிய கருத்து இது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது.

## சுயத்துவமான விருத்தி சாத்தியமில்லை

சார்பு நாடுகளில் சுயத்துவமான விருத்தி சாத்தியமில்லை என்ற முடிவை சமீர் அமின் அழுத்திக் கூறுகிறார். அமின், பிராங்க் இருவரும் இக்கருத்தில் ஒற்றுமை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஏன் சுயத்துவமான வளர்ச்சி சாத்தியமில்லை என்பதற்கு சமீர் அமின் பின்வரும் காரணங்களை எடுத்துக் கூறுகிறார்.

1. சார்பு நாடுகளின் உள்ளகக் கட்டமைப்பும் உற்பத்தி உறவுகளும் வளர்ச்சிக்குத் தடையானவை.
2. சமனற்ற சிறப்புத் தேர்ச்சி (Unequal Specialisation) சார்புப் பொருளாதாரத்தைத் திரிபுபடுத்தியுள்ளது.
3. மிதமிஞ்சிய சுரண்டல் (Super Exploitation) வளங்களை அபகரிக்கிறது.
4. மிகை உற்பத்தி வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

## எதிர்வாதங்கள்

ஹொங்கொங், தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் துரித வளர்ச்சியை எப்படிப் புரிந்து கொள்வது என்ற பிரச்சினை 1980களிலும் 1990களிலும் மார்க்சியர்களிடையே சுவையான விவாதங்களுக்கு இடமளித்தது. பில் வாரன் (Bill Warren) என்பவர் எழுதிய “ஏகாதிபத்தியம்: முதலாளித்துவத்தின் முன்னோடி (Imperialism: Pioneer of Capitalism)” என்ற நூல் 1980ல் பிரசுரிக்கப்பட்டது. இளமையிலேயே காலமான பில் வாரன் சர்ச்சைக்குரிய சுவையான நூலை விட்டுச் சென்றார். ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் கார்ல் மார்க்ஸ் முதலாளித்துவம் பற்றி எழுதியபோது, மேற்கில் தோன்றிய முதலாளித்துவம் உலகம் முழுவதையும் தன்னுள் இணைத்து முதலாளித்துவ உற்பத்தி முறைக்குள் கொண்டு வருகிறது என்று கூறினார். பில் வாரன் அந்தக் கருத்திற்குப் புத்துருவம்

கொடுத்து, ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் முன்னோடி என்றார். ஏகாதிபத்தியம்தான் குறைவிருத்திக்குக் காரணம் என்ற விளக்கத்தைத் தலைகீழாக்கும் சுவாரசியமான வாதம் இது. சமீர் அமின் போன்றோர் ஹொங்கொங் போன்ற நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை தங்கியிருக்கும் விருத்தி அல்லது சார்பு விருத்தி (Dependent Development) என்றனர். சிலர் உலக மட்டத்தில் புதிய தொழில் பிரிப்பு நிகழ்கிறது (New International Division of Labour) என்றனர்.

பீட்டர் வூஸ்லி (Peter Worsley) என்னும் மார்க்சியர் ஹொங்கொங் நாட்டின் உதாரணத்தைக் காட்டி சில சந்தேகங்களை 1990ஆம் ஆண்டில் எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்தார். அவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

1. ஹொங்கொங்கில் முதலாளித்துவ வளர்ச்சி மேற்குநாட்டு முதலாளித்துவத்தால் எழுச்சி பெற்றதல்ல. சீனப் புரட்சியின் பின்னர் 1949இல் ஷாங்காய் துணிநெசவுத் தொழிலுக்கு முன்னணி பெற்ற இடமாக இருந்தது. ஹொங்கொங் முதலாளிகள் தங்கள் பிள்ளைகளை ஹார்வார்டிற்கும் ஒக்ஸ்போர்டிற்கும் மேற்படிப்புக்காக அனுப்பவில்லை. ஐக்கிய இராச்சியத்தின் லோவல் இன்ஸ்டிடியூட், அமெரிக்காவின் MIT ஆகியவற்றில் தொழில்நுட்பம் படிக்க அனுப்பினார்கள்.

2. ஹொங்கொங் எல்லோருக்கும் இரண்டாம் நிலைக் கல்வி என்ற நிலையை விரைவில் எட்டியது. அந்த நாட்டின் தொழிலாளர்களை பயிற்சியற்ற உடலுழைப்பாளர் என்று கூற முடியாது.

3. புரட்சியின் பின் சீனத் தொழிலாளர் வர்க்கம் எப்படி அடங்கிப்போகும் பண்பைப் பெற்றதோ, அதேபோன்றே ஹொங்கொங் தொழிலாளர் வர்க்கமும் தீவிர தொழிற்சங்க அரசியலைக் கைவிட்டது.

4. இதற்குத் தகுந்த சமூகக் காரணங்களும் இருக்கவே செய்தன. ஹொங்கொங்கின் பிரித்தானிய காலனித்துவம் அங்கே சமூக நலத்திட்டங்களை முழுமையாக அமுல் செய்தது. இது ஒருவகையான சர்வாதிகார சமூகநலமுறை (Authoritarian Welfarism) ஆகும். இக்காலத்தில் தைவானும், தென்கொரியாவும் ராணுவமயப்படுத்தப்பட்ட சமூகங்களாக இருந்தன.

5. ஹொங்கொங்கின் தொழிலாளர் குடும்பங்களின் 80%த்தினர் தரமான வீட்டு வசதிகளைப் பெற்றனர். உலகிலேயே மிகப்பெரிய பொதுத்துறை வீட்டமைப்புத் திட்டத்தை ஹொங்கொங் நிறைவேற்றியது. வீட்டுத்துறை வருமானத்தின் 50% மானியமாக வழங்கப்பட்டது.

6. ரொட்ஸ்கியின் “அரச முதலாளித்துவம்” என்ற கருத்தை NICs தொடர்பில் கூறலாம் என்று நைகல் ஹாரிஸ் (Nigel Harris) வாதிடுகிறார். அரசின் நெறிப்படுத்தலில் முதலாளித்துவம் இந்நாடுகளில் வளர்கிறது.

பீட்டர் வூஸ்லியின் மேற்கூறிய கருத்துகள், சந்தேகங்கள் என்ற வகையில் மார்க்சிஸ்டுகள் பலரால் முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு உதாரணங்களாகும்.

### சமத்துவமின்மையின் புதிய வடிவங்கள்

1970களில் தென்கிழக்கு ஆசியாவில் ஹொங்கொங், தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் ஆகிய நான்கு நாடுகள் துரிதமான வளர்ச்சியை அடைந்தன. இவை “ஆசியாவின் புலிகள்” என்ற பெயரைப் பெற்றன. இலத்தீன் அமெரிக்காவில் பிரேசில், மெக்சிக்கோ என்ற இரு நாடுகளும் கைத்தொழில் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்திருந்தன. ‘புதிதாகக் கைத்தொழில் வளர்ச்சியடையும் நாடுகள் (Newly Industrializing Countries - NICs)’ என்னும் குழு உருவாக்கம் பெற்றுக் கொண்டிருந்தது. சார்பு மண்டலத்தில் விருத்தி என்பது சாத்தியமில்லை என்று கூறிய சார்புக் கோட்பாட்டாளர்கள் இந்த வளர்ச்சியை விளக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஹொங்கொங் போன்ற நாடுகளின் வளர்ச்சியை சமீர் அமின் சமத்துவமின்மையின் புதிய வடிவங்கள் என வர்ணித்தார். இதற்கு அவர் கூறிய காரணங்கள்:

1. இந்த வளர்ச்சி சில விசேட சூழமைவுகளின் தற்செயல் சேர்க்கையின் விளைவு ஆகும்.

2. இந்த வளர்ச்சி ஏனைய சார்பு நாடுகளால் பின்பற்றப்படக்கூடியதல்ல.

3. NICs நாடுகளின் வளர்ச்சியில் வெளிப்படும் குறைகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.

### மார்க்சியத் திரிபு

இந்த நாடுகளின் வளர்ச்சி பற்றி பாராட்டுரை வழங்கிய பொருளியலாளர்களை அமின் அனுபவவாதிகள்

*(Empiricists)* என்றும், அவர்களது விளக்கங்களை மார்க்சியத் திரிபு *(UnMarxist)* என்றும் கூறினார். இந்த ஆய்வுகளை "புள்ளிவிவர விளையாட்டு", "மேலோட்டமானவை", "வெறும் தோற்ற அளவிலான நிலையில் விடயங்களை அணுகும் முறை" என்ற அடைமொழிகளைக் கூறி நிராகரித்தார்.

சமீர் அமின் இவ்விதம் நிராகரிப்பது நியாயமற்றது என்றும் தோன்றுகிறது. இருந்தபோதும் அவரது முறையியலின் முக்கிய அம்சங்களோடு இணைத்து நோக்கும்போது அவருடைய வாதங்களில் அமைந்துள்ள தர்க்கம் வெளிப்படும்.

**1. ஆய்வுக்கான அலகு (Unit of Analysis)**

ஹொங்கொங் அல்லது தைவான் என்று ஆய்வு அலகை தனித்த நாடு என்ற நிலைக்குச் சுருக்குவதை சமீர் அமின் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தவறான முறை என்கிறார். வெறும் தோற்றங்களைக் காட்டிச் சாரத்தை *(Essence)* மறைப்பதுதான் இந்த முறை. உலக முறைமையின் பாகமாக அமையும் ஹொங்கொங் அல்லது தைவான் பெறும் வகிபாகம் என்ன என்பதே கேள்வி.

**2. உள்ளக இயக்க ஆற்றல் (Internal Dynamism)**

சார்பு நாடுகளில் உள்ளக இயக்க ஆற்றல் இல்லை என்பது அனுமானம். ஆதலால் அங்கு ஏற்படும் மாற்றங்கள் மையத்தின் செயற்பாடுகள் மூலம் விளக்கப்பட வேண்டியவை.

**3. அமைப்பியல் இயல்புகள் (Structural Features)**

நபர் ஒருவருக்கான உற்பத்தி *(Production Per Capita)* போன்ற அளவுகோல்கள் விருத்தி ஏற்பட்டதை ஆதாரப்படுத்தலாம். ஆனால் இவை அமைப்பியல் இயல்புகளை மறைக்கும் அளவுகோல்கள் ஆகும். சார்பு நாடு ஒன்றின் வளர்ச்சியில் திடீர் உலுப்பல் *(Sudden Jerk)* நிகழலாம். அதனை அடுத்து திடீர் முட்டுக்கட்டைகளும், தேக்கங்களும் உருவாகலாம் இந்த அமைப்பியல் ரீதியான மாற்றங்களைப் பின்வரும் முறைகளில் பரிசீலிக்க வேண்டும்.

1. ஏற்றுமதியை ஆதாரமாகக் கொண்ட உற்பத்தியை நோக்கிய திரிபு *(Extraversion)*

2. பிறழ்வு முறையான பெருவளர்ச்சி *(Hypertrophy)*

3. மென் கைத்தொழில் சார்ந்த திரிபு

ஆகிய அடிப்படையான கட்டமைப்பு இயல்புகள் நீடிக்கின்றனவா? அல்லது நிலைமாற்றத்திற்கு உதவுகின்றனவா? என்பதே பிரச்சினை.

## உலக முறைமை

சார்புக் கோட்பாட்டின் விளக்கங்கள் உலக முறைமை, அதனுள் அமையும் மையம், சார்பு என்ற எதிர்நிலைகள் என்ற அணுகுமுறை சார்ந்தவை. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இந்த எதிர்நிலை இயல்புகளை எடுத்துக்காட்டுகிறது.

| இயல்புகள் | மையம் | சார்பு மண்டலம் |
|---|---|---|
| 1 | உள்நாட்டுச் சந்தையின் விரிவாக்கத்தின் மூலம் விருத்தி பெற்றது. | வெளியில் இருந்து வந்த தாக்கத்தினாலும் உலகச் சந்தையின் பாதிப்பினாலும் மாற்றம் பெற்றது. |
| 2 | முன்னைய உற்பத்திமுறைகளை பூரணமாக அழித்து முதலாளித்துவ முறை நாட்டின் சகல முறைகள், பிராந்தியங்கள் எங்கும் வியாபித்தல். | பல்வகை உற்பத்தி முறைகள். ஒருங்கே இருத்தல். ஆனால் முதலாளித்துவ முறை மேலாதிக்கம் பெற்று இருத்தல். |
| 3 | சமூக உறவுகளில் ஓரினத் தன்மை. | சமூக உறவுகளில் பன்மைத்துவம். |

| | | |
|---|---|---|
| 4 | தொழிலாளி – முதலாளி வர்க்கப் போராட்டம் மேலோங்குதல், வர்க்க முரண் இருகூறாக சமூகத்தைப் பிரித்தல். | இரு கூறான சமூகப் பிளவு இல்லை. |
| 5 | தேசிய முதலாளித்துவ வளர்ச்சி. | அந்நிய முதலாளித்துவத்தின் ஆதிக்கத்திற்குப் பணிந்து போகும் உள்நாட்டு முதலாளித்துவம். |
| 6 | சுயத்துவமான பொருளாதாரம். | தங்கியிருக்கும் சார்புப் பொருளாதாரம். |

## குறைகள்

சார்புப் பொருளியல் கோட்பாட்டின் பொதுவான குறைகள் பல சமீர் அமின் கோட்பாட்டிலும் வெளிப்படுகின்றன.

1. ஆய்வுக்கான அலகாக தனி நாடுகளை எடுத்துக் கொள்வதை சமீர் அமின் தவிர்ப்பதனால், வர்க்கப் போராட்டம் பற்றி பேசும்போதும் உலகு தழுவிய மட்டத்திலான வர்க்கப் போராட்டம் பற்றியே பேச வேண்டி ஏற்படுகிறது. அப்படியானால் உள்நாட்டு மட்டத்தின் அரசியல் கொள்கையை வகுப்பது எவ்வாறு என்பது பிரதான கேள்வியாக உள்ளது. இதற்குப் பொருத்தமான விடை இல்லை.
2. சார்பு நாடுகள் தப்பிக் கொள்ள முடியாத வலை ஒன்றினுள் அகப்பட்டுள்ளன. குறைவிருத்தி அவற்றின் தலைவிதி. இதற்கான மாற்றுவழி ஏகாதிபத்தியத்துடனான பிணைப்புகள் அனைத்தையும் முறித்துக் கொள்வதாகும் என்ற வகையில் சமீர் அமின் கருத்தை விளக்க முடியும். இவ்விளக்கத்தை, கம்போடியா வழியில் சென்று பேரழிவுக்கு உள்ளாவதுதான் பிணைப்புகளை அறுக்கும் இந்த வழியா எனச் சிலர் விமர்சித்தனர்.

மார்க்சியம் உற்பத்தி முறை பற்றிய பரிசீலனையில் ஆரம்பிக்கும் முறையியலைக் கொண்டது. சமீர் அமின் போன்றவர்கள் சந்தை உறவுகளான வர்த்தகம், பரிவர்த்தனை (Exchange Relation) என்ற உறவுகளின் மட்டத்திற்கு ஆய்வுகளை விஸ்தரித்து மார்க்சியத்தைத் திரிபுபடுத்தியுள்ளனர் என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

சார்புக் கோட்பாட்டாளர்களில் முக்கியமான ஒருவர் சமீர் அமின். இலத்தீன் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு தோன்றிய இக்கோட்பாட்டை எகிப்தியரான சமீர் அமின் ஆபிரிக்க நாடுகளின் அனுபவத்திற்கு உரியதாக விஸ்தரித்தார். மேற்கு ஆபிரிக்க நாடுகளின் காலனித்துவ காலப் பொருளாதார வரலாறு பற்றிய விரிவான ஆய்வுகளாக இவரது நூல்கள் அமைந்தன.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மார்க்சியப் பொருளியல், நவமார்க்சியம் ஆகிய விடயங்கள் பற்றிய விவாதம் ஒன்றை சமீர் அமின் பெயரைக் குறிப்பிடாமல் நடத்துவது சாத்தியமில்லை. அவரின் எழுத்துகள் கவனிப்புக்குரியனவாய் இருந்து வருகின்றன.




Image Source - amazon.in

# மலையக வீதிப்பாடல் இலக்கியம்: சப்ரகமுவ , தென் மாகாணங்களின் முன்னோடிகள்

இலங்கையின் மலையக நாட்டார் மரபு, அழகியலையும் வாழ்வியலையும் மட்டுமல்ல; எதிர்ப்புவாதச் சிந்தனைகளையும் வெளிப்படுத்துபவை. சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக மலையக மக்களிடையே தோன்றிய எதிர்ப்புணர்வுகள் பல்வேறு கலைவடிவங்களாகவும் உருமாறியுள்ளன. அவ்வகையில் சமூக அடையாளச் சிக்கல், உரிமை மறுப்பு, வரலாற்றுப் புறக்கணிப்பு, பொருளாதாரத் திண்டாட்டம் ஆகிய அனுபவங்களின் எதிரொலியாக, 'மலையக வீதிப்பாடல்கள்' உருவாகுவதைக் காண்கின்றோம். முச்சந்தி இலக்கிய வகையின் ஒரு முக்கியகூறாக விளங்கும் இப்பாடல்கள், எழுச்சிக் கோசங்களையும், அரசியற் சிந்தனைகளையும் முன்வைப்பவை. இப்பாடல்கள் சித்திரிக்கும் விடயப்பரப்புகளையும், அவற்றை இயற்றிய பாடலாசிரியர்களையும், அவர்களுக்குப் பின்னணியாக அமைந்த சூழ்நிலைகளையும் ஆவணப்படுத்தும் நோக்கம் கருதியதாக 'மலையக வீதிப்பாடல்கள்: சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள்' எனும் இத்தொடர் பரிணமிக்கும். தலைப்பில் அமைந்தது போலவே, அவ்வாறு எழுந்த பாடல்கள் ஏற்படுத்திய சமூக, அரசியல் எழுச்சித் தாக்கங்கள் தொடர்பிலும் இத்தொடரின் உள்ளடக்கம் விரிவுபெறும்.


## அருணாசலம் லெட்சுமணன்



'ம.மா கொத் உனுக்கொட்டுவ தமிழ் வித்தியாலயத்தின்' அதிபரான அருணாசலம் லெட்சுமணன், 'நிகர்' சமூக கலை இலக்கிய அரங்கத்தின் பிரதம அமைப்பாளருமாவார். தேசிய, பன்னாட்டு ஆய்வரங்குகளில் பங்கேற்று ஆய்வுக்கட்டுரைகளை முன்வைத்து வருகிறார். 2023இல் மலேசியாவில் இடம்பெற்ற பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் ஓர் ஆய்வுக்கட்டுரையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தேசிய, பன்னாட்டு இதழ்களில் தொடர்ந்து எழுதிவருகிறார். பயண இலக்கியங்கள், சமூக, கலை, இலக்கிய, கல்வித்துறைச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இவர் ஒரு கவிஞருமாவார். சிறுவர் பாடல்கள், சிறுவர் இலக்கியம் தொடர்பான விமர்சனங்கள், ஆய்வுகளை தொடர்ந்து எழுதி வருகிறார். சிறுவர் கதைகள் எழுதுவதிலும் ஆர்வம் கொண்டவர்.

ச ப்ரகமுவ மாகாணத்திலிருந்தும் சில வீதிப்பாடலாசிரியர்கள் தமது படைப்புகளைத் தந்துள்ளார்கள். குறிப்பாக, கேகாலை மாவட்டத்தின் எட்டியாந்தோட்டைப் பிரதேசத்துடன் இவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். இம்மாகாணத்தின் மற்றுமொரு அங்கமான இரத்தினபுரி மாவட்டத்திலும் பெருந்தோட்டப் பொருளாதாரக் கட்டமைப்பு நிலவுவதால், அங்கேயும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் செறிந்து வாழ்கின்றனர். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே இம்மாவட்டத்தில் இவர்களது குடியேற்றம் ஆரம்பமாகியது. "இரத்தினங்களின் நகரம்" எனப் பொருள்படும் வகையில் இரத்தினபுரி என்று அழைக்கப்படும் இம்மாவட்டம், உலகப் புகழ்பெற்ற இரத்தினக்கற்களின் விளைநிலமாகத் திகழ்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்பகுதி இரத்தினக்கல் வர்த்தகத்தில் சர்வதேசக் கவனத்தை ஈர்த்திருந்தது. போர்த்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்களின் ஆக்கிரமிப்பு முயற்சிகளுக்கு இம்மாவட்டத்தின் இயற்கை வளங்களே முதன்மைக் காரணங்களாக அமைந்தன; பின்னர் இது பிரித்தானியர்களின் முழுமையான நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. தற்போது இப்பிரதேசத்தில் கித்துள் உற்பத்தி, தேயிலை மற்றும் இரப்பர் பெருந்தோட்டத் தொழில்கள் பிரதான வாழ்வாதாரங்களாக உள்ளன. இந்தப் பெருந்தோட்டத் துறையினை மையப்படுத்தியே இந்திய வம்சாவளித் தமிழர்களின் இருப்பு இன்றும் தொடர்கிறது.

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் இந்த மாவட்டத்தில் ஒரு தொடர்கதையாகவே இருந்து வருகின்றன. குறிப்பாக, 1983ஆம் ஆண்டு நாடு தழுவிய ரீதியில் அரங்கேறிய வன்செயல்களில் அதிகளவு பாதிப்புகளைச் சந்தித்த ஒரு மாவட்டமாக இது அடையாளப்படுத்தப்படுகிறது. இங்கு வாழும் முஸ்லிம் மக்களும் சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். அதேபோன்று, இந்திய வம்சாவளித் தமிழர்களை இலக்காகக் கொண்டு தோட்டப்பகுதிகளில் பல வன்முறைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இத்தகைய தாக்குதல்களைப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளே முன்னின்று நடத்தியதற்கான வரலாற்றுப் பதிவுகள் கவனிக்கத்தக்கவை. வன்முறைச் சம்பவங்களின் வரலாற்றில், 1998ஆம் ஆண்டில் இந்திய வம்சாவளித் தமிழர்களின் 800க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட நிகழ்வு மிக முக்கியமானதாகும். வன்முறைகள் மட்டுமன்றி, பெருந்தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடிகளும் இவர்களின் இயல்பு வாழ்க்கையை அவ்வப்போது சீர்குலைக்கின்றன. அண்மையில் கூட, ஒரு தொழிலாளி தனது வீட்டு வசதிக்காக மேற்கொண்ட கட்டுமானப் பணிகளுக்காக, தோட்ட நிர்வாகமே கூலிப்படையைப் பயன்படுத்தி மிரட்டல் விடுத்த சம்பவம் இவர்களின் வாழ்வாதாரப் போராட்டத்திற்குச் சான்றாக அமைகிறது.

ஒவ்வொரு ஆண்டும் இயற்கை அனர்த்தங்களின் சவால்களை எதிர்கொள்ளும் ஒரு பகுதியாக இரத்தினபுரி மாவட்டம் விளங்குகின்றது. குறிப்பாக, மண்சரிவு அபாயமும் தொடர்ச்சியான வெள்ளப்பெருக்கும் இப்பகுதி மக்களின் வருடாந்தப் பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன. இத்தகைய அனர்த்தச் சூழலில், தோட்டத் தொழிற்துறையைச் சார்ந்த இந்திய வம்சாவளித் தொழிலாளர்கள் மிக மோசமான பாதிப்புகளுக்கு உள்ளாவது குறிப்பிடத்தக்கதாகும். விசாலமான நிலப்பரப்பைக் கொண்ட இம்மாவட்டத்தில், மலையகத் தமிழ் மக்கள் சிதறிய நிலையில் குறைந்த செறிவிலேயே வாழ்கின்றனர்; இத்தகைய வாழ்வியல் சூழல் அவர்களின் இருப்பைச் சிக்கலானதாக்குகின்றது. மேலும், இவர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான முன்னெடுப்புகளும் மிகுந்த சவால்கள் நிறைந்ததாகவே தொடர்கின்றன.

### சப்ரகமுவ மாகாண மலையகத் தமிழர்களின் குரல் - (கஹவத்தை, அவுப்பை) வீ.பி. கருப்பையாவின் பாடல்கள்

இரத்தினபுரி மாவட்டத்தின் கஹவத்தை பகுதியில் நீண்டகாலமாக வசித்து வரும் இந்திய வம்சாவளித் தமிழர்கள், அப்பகுதியின் மக்கள் தொகையில் சுமார் இருபது சதவீதத்தினர் என மதிப்பிடப்படுகின்றனர். இப்பகுதியைச் சேர்ந்த வீதிப்பாடலாசிரியரான வீ.பி. கருப்பையா, 1961 ஆம் ஆண்டில் "தொழிலாளர் தொண்டு கீதம்" என்ற நூலை வெளியிட்டார். ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு முன்னதாகவே இத்தொகுப்பு வெளியானதால், அதற்கு முற்பட்ட காலப்பகுதியின் சமூக அரசியல் சூழலை இது பிரதிபலிக்கிறது.

அவரது பாடல்கள் பிரதானமாக பின்வரும் விடயங்களை மையப்படுத்துகின்றன:

- வாக்குரிமை மற்றும் பிரஜாவுரிமை பறிப்பு தொடர்பான கவலைகள்.
- தொழிலாளர்களை அமைப்பாக்குவதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு.
- இந்திய வம்சாவளித் தமிழர்களின் வரலாற்றுப் பங்களிப்பை இராமாயண பூர்வீகத் தொடர்புடன் இணைத்து விளக்குதல்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள "நாலடி கும்மி" எனும் பாடலின் வரிகள், புலம்பெயர்ந்து வந்த தொழிலாளர்களின் தியாகத்தையும் அவர்கள் எதிர்கொண்ட சவால்களையும் கீழ்வருமாறு விவரிக்கின்றன:

*"பாரத நாட்டை மறந்து இலங்கையில்*
*பாட்டாளி மக்களாய் வந்தவரே*
*வானர சூரர்களாண்ட மலை நாட்டை*
*வாழாயமாய் வெட்டி மீண்டவரே*
*உங்களுக்கே திங்கே சொந்தமிருக்கென்று*
*ஓட்டு உரிமையுந்தான் பறித்து - இந்த*
*நாட்டிலிருந்து கடத்திவிட - என்ன*
*நாய மிருக்குது கேளுங்களே*
*வாதாடி வெள்ளையராண்டிடவும் - நல்ல*
*வாங்சமு குபலாத் தோன்றிடவும்*
*மேதாவியாக்கி இன்னாட்டைத் திருத்திடக்*
*கூட்டமாய் நம்மையழைத் திடவும்*
*ஓட்டுப்பதுவு உரிமைகளு - மிந்த*
*நாட்டிலே சொந்தமிருக்கு தென்று*
*போட்டு பலனை எடுத்துத் திடமுடந்*
*தோட்டங்களாக அமைத்திட னென்று*
*கூட்டி வந்த மலை நாட்டினிலே - நம்மை*
*வாட்டி வதைத்த ஆங்கிலேயர்*
*காட்டிக் கொடுத்து நடந்து விட்டார் - சொந்த*
*நாட்டுக்கு ஓட்டம் பிடித்து விட்டார்"*

ஏனைய படைப்பாளர்கள் முன்வைத்த அதே கருப்பொருள் இவரிடமும் தென்பட்டாலும், வீ.பி. கருப்பையாவின் தனித்துவமான அணுகுமுறை மற்றவர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காட்டுகிறது. இன்றைய காலகட்டத்திலும் வீட்டு வசதிகள் குறித்த ஏக்கம் தொடர்கின்ற நிலையில், பாடலாசிரியரின் கூர்மையான அவதானிப்பில் உருவான பின்வரும் வரிகள் மிகவும் முக்கியமானவை:

"ஊட்டுங் குழந்தையைத் தொட்டிலிலே - விளை
யாடிடும் பாலரை பட்டியிலே
விட்டுப் பிரிந்து உழைத்தவர்க்கு தங்க
வீடுகில்லையாந் தோழர்களே
நாடு பகைத்திடும் நேரத்திலே - நாமள்
தேடும் பணத்தை விரயத்திலே
கோடு வளக்குக் குடிகளுக்கு - விட்டு
மோடையராகினோந் தோழர்களே"

பாடலாசிரியர் தனது மனக்குமுறல்களைப் இவ்வாறு பாடல்கள் வழியாகப் பதிவு செய்துள்ள போதிலும், இறுதியாக இறைவனே தங்களைக் காக்க வேண்டும் என்ற தீர்வை முன்வைக்கின்றார்.

"என்ன முடிவு கொடுப்பாரோ இந்த
ஏழைகள் வாழப் பொறுப்பாரோ
மாலுமரனும் உமையவளும் - லங்கை
மாதாவும் நம்மளைக் காப்பாரோ"

இவ்வரிகளில் விஷ்ணு, சிவன், பார்வதி மீதான நம்பிக்கையும் இலங்கை நாட்டின் மீதான பற்றும் வெளிப்பாடாக உள்ளது.

இந்திய விடுதலைப் போராட்டத்தின் தாக்கத்தால் காந்தியக் கொள்கைகள் உலகளாவிய ரீதியில் கவனத்தை ஈர்த்தன. குறிப்பாக, இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் மத்தியில் மகாத்மா காந்தி ஒரு நம்பிக்கைக்குரிய மாமனிதராகப் போற்றப்பட்டார். அந்த வகையில் காந்தியையும் அவரது கொள்கைகளையும் சிறப்பிக்கும் வகையில் அமைந்த பின்வரும் வரிகள் மிகுந்த அவதானத்திற்குரியவை:

"சங்கரனை போலுதித்த எங்கள் மஹான்காந்தி - கை
ராட்டினத்தை யேந்தி - சுய
ராட்சியத்தை வாங்கி - அந்த
திங்களணிந்தோன் பதத்தை சேர்ந்தனர் வேதாந்தி
அமரர்கள் கொண்டாடுங் காந்தி அஹிமிஜை தந்தாரே மக்கள்
அகந்தனில் நின்றாரே - சிறை
வாசத்திலே இருந்து பயந்தெளியவும் வைத்தாரே"

பாடலாசிரியர் வீ.பி. கருப்பையாவின் படைப்புகளில் தொழிலாளர்களின் உயர்வினைப் பறைசாற்றும் வரிகள் சிறப்பான கவனத்தைப் பெறுகின்றன. அதேநேரம், அப்பாடல்களில் காணப்படும் எழுத்துப்பிழைகள் ஒரு குறைபாடாகவே உற்றுநோக்கப்படுகின்றன. இத்தகைய

பிழைகள் பாடலின் பொருளிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு, இவை ஆசிரியரின் கவனக்குறைவால் ஏற்பட்டவையா அல்லது அச்சுக்கோர்ப்பில் நிகழ்ந்த தவறுகளா என்ற ஐயத்தையும் தோற்றுவிக்கின்றன.

மேலும், இவரது பாடல்களில் பாரதியாரின் கவிதைச் செல்வாக்கு மேலோங்கியிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

*"கழந்திரஞ் செழித்தோங்க உலகைக்கார்த்த வந்தொழிலாளி - அகத்தில்ச்*
*சிறந்தவந் தொழிலாளி - வருமந்*
*தீர்த்த வந்தொழிலாளி - நாடு*
*கவுறுவமாய் வாழுதர்க்குக் காவலந் தொழிலாளி*
*அஞ்சிக்குனிந்து கெஞ்சி பயந்து நயந்த வந்தொழிலாளி ஞாயந்*
*தெரிந்தவந் தொழிலாளி - நாட்டை*
*அடைந்தவன் தொழிலாளி - பெரிய*
*ரோட்டு வங்களா கோற்ட்டுக்கச்சேறி போடவந் தொழிலாளி*
*ஊட்டுங் குழந்தை வீட்டில் வாட உழைத்தவந் தொழிலாளி காட்டை*
*அழித்தவந் தொழிலாளி - மேட்டைக்*
*கறைத்தவன் தொழிலாளி - போட்ட*
*வேட்டுவெடி கல்ப்பாறைக்குயிரைக் கொடுத்தவன் தொழிலாளி"*

திரைப்படப் பாடல்களின் மெட்டுகளைத் லாவகமாகக் கையாண்டு கருத்துகளைக் கொண்டு செல்லும் பாங்கு இவரிடமும் காணப்படுகிறது. குறிப்பாக, இவரது பாடல் ஒன்று "ஆண்டு வந்த காலம் போச்சுங்கோ" என்ற பாடலின் மெட்டைப் பயன்படுத்தி, மகாத்மா காந்தியின் சேவையைப் புகழுவதோடு, தொழிற்சங்கங்களின் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

இலங்கையில் இந்திய வம்சாவளி மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க காந்தியச் சிந்தனைகளின் அடிப்படையில் உருவான இலங்கை இந்திய காங்கிரஸ் அமைப்பின் சிறப்பை எடுத்துரைக்கும் இவர், அந்த இயக்கத்தில் தொழிலாளர்கள் இணைய வேண்டியதன் தேவையையும் அதன் முக்கியத்துவத்தையும் தனது வரிகள் மூலம் உரக்கச் சொல்கிறார்.

*"ஆங்கில அரசாங்கஞ் செய்த*
*தீங்கையகற்றத் துணிந்த சங்கம்*
*ஏங்கிடும் தொழிலாளர் மக்களை*
*இணைத்ததுந் தொழிலாளர் சங்கம்*
*எழில் மிகும் பலம் பொருந்தி நமது*
*குலம் விரிவுறத் திகழும் கட்சியை*
*விற்கவு மனந்துணிந்திடாதிங்கோ வீணாசையாலே*
*வேசம் போட்டு அலைந்திடாதிங்கோ..."*

தொழிற்களத்தில் நிலவும் வேலைப்பளு, கடுமையான உழைப்பு மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புகள் மட்டுமன்றி, அங்கு தோன்றும் முரண்பாடுகளும் இவரது பாடல்களில் முக்கிய அவதானத்தைப் பெறுகின்றன. போதைப் பழக்கம் குறித்த எச்சரிக்கையை வழங்கி, அதிலிருந்து விலகி வாழ வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் போக்கும் இவரது பாடல் ஒன்றில் சிறப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக, மதுப்பழக்கத்தினால் விளையும் தீய விளைவுகளைத் தொடர்ந்து வலியுறுத்தும்போது,

"கத்திக்கு அஞ்சாத கள்ளு
கழுத்தையறுக்கத் துணிந்த கள்ளு
காமவிரோதக் குரோதக் கள்ளு
கடவுள் நீதியை மறக்குங் கள்ளு
அடக்கமாக நடக்கும் பெண்களைக்
கெடுக்க நினைத்து இழுக்குங் கள்ளு
குடிக்கவுமனம் வைத்திடாதீங்கோ - சாராயங்கள்ளால்
குடும்பமும் அலங்கோலமாகுங்கோ..."
என எடுத்துரைக்கிறார். மேலும்,
"அருந்தவமாயீன் றெடுத்த
சிறந்திடு நம் குழந்தைகளை
அறிவு தருங் கல்வியிலே
அமர்த்த மனமில்லா மலே
ஆசையற்றுக் குடியினாலே
மோசம் போன குடும்ப மெல்லாம்"

என கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். இப்பாட்டின் இறுதியை,

*“தேசம் போற போக்கைப் பாருங்கோ - கருப்பையா சொல்லை*

*சிந்தித்து உணர்ந்து கேளுங்கோ.....”*

என நிறைவு செய்கிறார்.

கருப்பையாவின் பாடல்கள் தொழிற்சங்கத்தின் மேன்மையை வலியுறுத்தும் கருத்தியல் செழுமை மிக்கவையாகவும், சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பனவாகவும் அமைகின்றன. குறிப்பாக, “சித்ரா பருவமதில்” என்ற மெட்டில் அமைந்த “வாருங்கள் தோழர்களே வளமுடங் கூறுவேங் கேளுங்களே” எனத் தொடங்கும் பாடல் குறிப்பிடத்தக்கது. 1961ஆம் ஆண்டு “காவத்தை பியசிரி பிரஸ்” மூலம் வெளியிடப்பட்ட இத்தொகுப்பு, அக்காலத்தில் இருபத்தைந்து சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. தமிழியல் ஆய்வுகளில் ‘அரை வாய்மொழிப்பாடல்’ என்ற எண்ணக்கரு முக்கியத்துவம் பெறும் நிலையில், கருப்பையாவின் இந்தப் படைப்புகள் மிகுந்த உன்னிப்புடன் நோக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

### தென் மாகாண மலையகத் தமிழர்களின் குரல் - (தெனியாய) எம்.கே. முனியாண்டித் தேவரின் பாடல்கள்

வரலாற்று ரீதியாக மகாத்துறை மற்றும் தெவுந்துறை என வழங்கப்பட்ட மாத்தறை மாவட்டமானது, தொன்மையான காலம் முதற்கொண்டே இந்திய மீனவர்களின் வருகை மற்றும் வணிகத் தொடர்புகளின் ஊடாகத் தமிழர்களுடன் பின்னிப் பிணைந்த ஒரு களமாகத் திகழ்கின்றது. எனினும், பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின் பின்னரே தோட்டத் தொழிலாளர்கள், நகர சுத்தித் தொழிலாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் எனப் பல்வேறு தளங்களில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஒரு தனித்துவமான சமூகமாக இங்கு நிலைபெறத் தொடங்கினர்.

மாத்தறை மாவட்டத்தில் தமிழர்கள் பரவலாகச் சிதறி வாழ்ந்தாலும், தெனியாய தேர்தல் தொகுதியிலேயே அவர்கள் ஓரளவுக்குச் செறிவாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக, இத்தொகுதியிலுள்ள கொட்டப்பொல, பஸ்கொட மற்றும் பிற்றபெத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மட்டுமே இவர்களது இருப்பு ஓரளவு கவனிக்கத்தக்கதாக உள்ளது; இருப்பினும் இது மொத்த சனத்தொகையில் இரண்டு சதவீதமாகவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தென் மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான காலி மற்றும் அம்பாந்தோட்டையிலும் தமிழர்களின் நிலை மாத்தறை மாவட்டத்தைப் போன்றே அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.


எம். கே. முனியாண்டித்தேவர்

இப்பகுதியில் தமிழர்களின் பண்பாட்டு அடையாளங்களாக ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் மற்றும் கதிர்வேலாயுத சுவாமி ஆலயம் ஆகியன விளங்குகின்றன. இந்திய வம்சாவளித் தமிழர்களின் வாழ்வியலை இலக்கிய ரீதியாக அடையாளப்படுத்துவதில் எம்.கே. முனியாண்டித் தேவரின் பங்களிப்பு மிக முக்கியமானது. இராமநாதபுரத்தைச் சேர்ந்த சங்கரலிங்க உபாத்தியாயரின் சீடராகத் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் இவர், ஏ. கருப்பையா தேவரைத் தனது சீடராகக் குறிப்பிட்டுத் தனது பாடல் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார்.

1960ஆம் ஆண்டில் கொழும்பு, புதிய செட்டித்தெருவில் அமைந்த சரஸ்வதி பிரஸ்சில் அச்சிடப்பட்டு, பாடலாசிரியரால் நேரடியாக விநியோகிக்கப்பட்ட “தொழிலாளர் நிம்மதி இல்லா வாழ்க்கை” எனும் பாடல் தொகுப்பு 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டது. நான்காவது பாகமாக வெளிவந்துள்ள இத்தொகுப்பு, இதற்கு முன்னதாக மூன்று பாகங்கள் வெளியாகியுள்ளதை உறுதிப்படுத்துகின்றது. எதிர்காலத்தில் இவ்வாசிரியரின் ஏனைய தொகுப்புகளோ அல்லது அவரது மாணாக்கரின் படைப்புகளோ கண்டறியப்பட்டால், மலையக இலக்கியப் பரப்பிற்கு தென் மாகாணம் வழங்கிய காத்திரமான பங்களிப்பினை இன்னும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும். தற்போதைய நிலையில், தென் மாகாணத்திலிருந்து மலையக இலக்கியத்திற்கு வலுச்சேர்த்தோர் குறித்த வரலாற்றுச் சான்றுகள் மிக அரிதாகவே கிடைக்கப்பெறுகின்றன.

*“தோட்ட நிலவரம் கெட்டு போச்சு*

*துரைமார்கள் சங்கமே மேலே ஆச்சு - பெரும்*

*பணக்காரர் கூச்சலே வேடிக்கை யாச்சு*

*பாட்டாளி மக்களே புலம்பலாச்சு”*

எனத் தொடங்கும் பாடலில் முனியாண்டித் தேவர் தோட்ட நிர்வாகத்தின் கெடுபிடித் தன்மைகளையும்

வியாபாரிகளால் மக்கள் ஏமாற்றப்படும் நிலைமையையும் எடுத்துரைக்கிறார். இத்தொகுப்பு நூல் ஏனைய பாடல் திரட்டுகளில் இருந்து தனித்து நிற்பதை உணர முடிகிறது. பொதுவாக ஏனைய பாடல்களில் பாடலாசிரியர் மட்டுமே தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலையில், இந்தப் பாடலாசிரியர் ஒரு படி மேலே சென்று பாடலை இயற்றியவர் பெயரையும் அதனைப் பாடுபவர் பெயரையும் பதிவு செய்துள்ளார்.

*“மனிதனை மனிதன் மேய்க்க லாச்சு*

*மானமில்லா வார்த்தைகளும் கேக்க லாச்சு - நல்*

*மதியோடு இயற்றினார் முனியாண்டித் தேவரும்*

*இசையோடு பாடினார் கணபதிப் பாண்டியரும்...”*

முனியாண்டித் தேவரின் படைப்புகளில், வீதிப்பாடகர்கள் தங்கள் வாழ்வின் இறுதிக் காலத்தில் ஆன்மீகத்தின் பால் ஈர்க்கப்படும் பொதுவான இயல்பினைக் காணமுடிகிறது. அக்காலத்தில் புகழ்பெற்றிருந்த “அமிர்த யோகம்” திரைப்படப் பாடலின் மெட்டைத் தழுவி, “அடிமையாகி வாடுகின்றோம் ஆண்டவனே - இதை அகற்றித் தானே காக்க வேண்டும் தாண்டவனே” என்று அவர் பாடுகிறார். இதன் மூலம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பழனி முருகனும் கதிர்காமக் கந்தனும் காக்க வேண்டுமென அவர் வேண்டுவதை அறியலாம். மேலும், “இந்த உலகினிலே ஒருகொடுமை இதில் - உழைப்பாளிக்கே பெரும்வறுமை” என்ற வரிகளின் வாயிலாக, வர்க்க ரீதியான ஏற்றத்தாழ்வுகளால் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை அவர் நுட்பமாகப் புலப்படுத்துகிறார்.

“தமிழரை தமிழர் கெடுத்திடலாமோ” என்று வினா எழுப்பும் பாடல், “மனிதனை மனிதன் சாப்பிடுறாண்டா” என்ற மெட்டில் அமைந்து தொடர்வதை நாம் காணலாம். “அநியாயக் கொள்கை அதிகமாயிருக்குது நாட்டிலே - அந்நிய நாடென்று அடங்கியிருக்கிறோம் வீட்டிலே” எனும் வரிகள், சமூகம் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்த ஆழமான அவதானிப்புகளைப் பதிவு செய்கின்றன. அதேவேளை, “கள்ளங் கபடந் தெரியாதவனே” என்ற மெட்டில் உருவான பாடல், அன்றாட வாழ்வில் பெண் தொழிலாளர்கள் அனுபவிக்கும் துயரங்களை விவரிக்கிறது. இந்தப் பாடல் பெண்களின் அன்றாடச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டுவதோடு நின்றுவிடாமல், அவற்றுக்கான தீர்வை நோக்கிய முன்னெடுப்புகளையும் உள்ளடக்கி விரிவடைகிறது.

சித்தர்களின் தத்துவச் சிந்தனைகள் வீதிப்பாடல்களில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, பதினெண் சித்தர்களில் ஒருவரும் பட்டினத்தாரின் சீடருமான பத்திரிகிரியாரின் செல்வாக்கு முனியாண்டித் தேவரின் பாடல்களில் விரவிக்கிடப்பதைக் காணலாம். ஒரு காலத்தில் மன்னராகத் திகழ்ந்து, பின் ஞானம் பெற்றுச் சித்தராக மாறிய பத்திரிகிரியாரின் பாடல்கள் “எக்காலம்?” என்ற வினாவோடு நிறைவுபெறும் இயல்பைக் கொண்டவை. இத்தகைய தனித்துவமான நடையையே முனியாண்டித் தேவரும் தனது படைப்புகளில் கையாண்டுள்ளார். பத்திரிகிரியார் இயற்றிய 232 பாடல்களும் ஈற்றடியில் இக்கேள்வியைச் சுமந்தே நிற்கின்றன. ஈரடிப் பாடல்களாக அமையும் இவற்றிற்குச் சான்றாகப் பின்வரும் வரிகளைக் குறிப்பிடலாம்:

*“ஆட்டம் ஒன்றும் இல்லாமல் அசைவுசற்றும் காணாமல்*

*தேட்டம் அற்ற வான்பொருளைத் தேடுவதும் எக்காலம்?” (215)*

*“முன்னை வினையால் அறிவுமுற்றாமல் பின்மறைந்தால்*

*அன்னை தனைத்தேடி அமுதுண்பது எக்காலம்?” (216)*

*“கள்ளுண்டவர்போல் களிதரும் ஆனந்தம் அதால்*

*தள்ளுண்டு நின்றாடித் தடைப்படுவது எக்காலம்?” (217)*

*மேற்படி சித்தரின் அணுகுமுறையினை முனியாண்டித் தேவரும் பிரயோகிப்பதைக் காணலாம்.*

*“ஆகா அடிமைவிட்டு ஆதிக்க மண்ணாடி - நாம்*

*தாய்நாடு சென்று தார்ப்பிடிப்ப தெக்காலம்?*

*கடனாகி கவலையாகி காலமெல்லாம் அடிமையாகி*

*கொடூரமான அடிமை நீங்கி சொந்த ஊர் குடிகொள்வதெக்காலம்?*

*வஞ்சகர் நாட்டினிலே வறுமையின் வாழ்வை விட்டு - ஆதி*

*மெய்நாடு சென்று மேலி கொள்வதெக்காலம்?”*

தொகையறாவாக இடம்பெற்றுள்ள மேற்கண்ட வரிகள், தாயகத்தின் மீதான ஆழமான ஏக்கத்தையே பிரதானமாக வெளிப்படுத்துகின்றன. இதில்

கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சம் என்னவெனில், "மேலி" என்ற சொல் ஏர் அல்லது கலப்பையைக் குறிப்பதாகும். "மேலி கொள்வதெக்காலம்" என அவர் வெளிப்படுத்தும் தவிப்பு, தற்போதைய தொழில்துறையிலிருந்து விடுபட்டு, மீண்டும் உழவுத் தொழிலில் ஈடுபட வேண்டும் என்ற அவரது வேட்கையையும் முனைப்பையும் புலப்படுத்துகிறது.

மலையக வீதிப்பாடலாசிரியர்களில் ஒரு சிலரே தமது படைப்புகளில் "தொகையறா" உத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். அவர்களுள் முனியாண்டித் தேவர் மிகவும் முக்கியமானவர். "நிமிர்ந்து பேசவும் உரிமையில்லை, இவங்க சொன்னதை செய்தும் நலமுமில்லை" என்ற முழக்கத்தின் வாயிலாக, அவர் தனது வர்க்கத்தினருக்கான நீதியைக் கோரி நிற்கிறார். அவரது ஆதங்கத்தைச் சுமந்த பாடலின் வரிகள் பின்வருமாறு அமைகின்றன:

*"பரிதாபம் இந்த இலங்கையிலே*
*இது பரிதாபம் - தமிழ்*

*மனிதரை மனிதன் மேய்த்து வருவதும் பரிதாபம்*

*துணிவாகப் பேசும் கங்காணி கையில் கம்புங்*
*குடையுமிருக்குது*

*நடுக்கங்கொண்ட பாவையர் முதுகில் கொழுந்துக்*
*கூடையுமிருக்குது"*

இத்தகைய வெளிப்பாடுகள், அன்றைய காலத்துப் பெருந்தோட்ட வாழ்வியலின் அவலங்களையும், தொழிலாளர்கள் மீதான அதிகார வர்க்கத்தின் ஒடுக்குமுறையையும் ஆழமாக விவரிக்கின்றன.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களின் துயரநிலை குறித்து இந்திய அரசு காட்டிவரும் பாராமுகத்தை இவரது பாடல்கள் வன்மையாகக் கண்டிக்கின்றன. அத்துடன், தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் தலைமைகளுக்கு எதிரான விமர்சனக் கருத்துகளும் இப்பாடல்களில் வலுவாகப் பதிவாகியுள்ளன.

"இந்தியர்கள் இலங்கையிலே ஏங்குகின்றாரே இந்திய

நாட்டு வேந்தன் நேரு சும்மா இருந்துவிட்டாரே"

மேலும், அன்றைய காலத்துத் தலைவர்களான அசீஸ் மற்றும் தொண்டமான் ஆகியோர் மக்களின் உண்மை நிலைமையை முறையாக விளக்கத் தவறிவிட்டனர் என்பதையும், "அசீஸ், தொண்டமானுக்கு உண்மை நிலைமையை விளக்கத் தெரியல" என்று நேரடியாகவே பெயர்களைச் சுட்டிச் சாடுவதை இப்பாடல் வரிகளில் அவதானிக்க முடிகிறது.

மலையக வீதிப்பாடலாசிரியர்களில் ஒரு சிலரே தமது படைப்புகளில் "தொகையறா உத்தியைப் பயன்படுத்தியுள்ளனர். அவர்களுள் முனியாண்டித் தேவர் மிகவும் முக்கியமானவர். "நிமிர்ந்து பேசவும் உரிமையில்லை, இவங்க சொன்னதை செய்தும் நலமுமில்லை என்ற முழக்கத்தின் வாயிலாக, அவர் தனது வர்க்கத்தினருக்கான நீதியைக் கோரி நிற்கிறார்.

இரண்டு வெவ்வேறு மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் என்ற போதிலும், இவ்விரு பாடலாசிரியர்களும் அந்தந்தப் பகுதிகளுக்கே உரிய தனித்துவமான பாதிப்புகளைத் தாண்டி, மலையக சமூகத்திற்கே பொதுவான பிரச்சினைகளையே தமது படைப்புகளில் முதன்மைப்படுத்தியுள்ளனர். நேரில் கண்ட அனுபவங்களின் வெளிப்பாடாகத் தமது உணர்வுகளைப் பாடல்களாகப் பதிவு செய்துள்ள இவர்களின் முயற்சி, ஆழ்ந்த கவனத்திற்குரிய ஒன்றாகத் திகழ்கிறது. சமகாலத்தைச் சேர்ந்த இவ்விரு படைப்பாளிகளும் தத்தம் மாகாணங்களின் இலக்கிய முன்னெடுப்புகளுக்கு அடிக்கோடிட்ட முன்னோடிகளாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. மலையக இலக்கிய வரலாற்றில் எதிர்ப்புக் குரல்களைப் பதிவு செய்து, ஒரு புதிய எழுச்சி மிகு இலக்கியப் பரப்பை உருவாக்கியவர்களில் இவ்விரு பாடலாசிரியர்களுக்கும் மிக முக்கிய இடமுண்டு என்பதைத் தெள்ளத்தெளிவாகக் கூறலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. யோகராசா. செ. (2023). ஈழத்து முச்சந்தி இலக்கியம். மகுடம் பப்ளிகேசன்.

2. முத்துலிங்கம் பெ. (2012). பரதேசம் போன தமிழர்களின் பரிதாபப் பாடல்கள். கயல் கவின் புக்ஸ்.

3. சாரல் நாடன். (1997). மலையகம் வளர்த்த தமிழ். துரவி வெளியீட்டகம்.

4. கருப்பையா. வீ.பி. (1961). தொழிலாளர் தொண்டு கீதம். காவத்தை பியசிரி பிரஸ்.

5. முனியாண்டித்தேவர். எம்.கே. (1960). தொழிலாளர் நிம்மதி இல்லா வாழ்க்கை. சரஸ்வதி பிரஸ்.

6. மாணிக்கவாசகர். ஞா. (2017). சித்தர் பாடல்கள். உமா பதிப்பகம்.

# இலங்கையில் தமிழர்கள் மத்தியில் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடைய சடங்குகளும் நிகழ்த்துகலைகளும்

இலங்கைத் தமிழர்களிடையே கண்ணகி வழிபாடு என்றும் சிங்கள மக்களிடையே பத்தினி வழிபாடு என்றும் வழங்கப்பட்டு வரும் வழிபாடுகளுடன் தொடர்புடைய சடங்குசார் நிகழ்த்து கலைகளில் ஒன்றாகவே 'கொம்புமுறி' விளையாட்டு இடம்பெற்று வருகின்றது. இக்கொம்புமுறி விளையாட்டு சமயம், கலை ஆகிய இரு துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இது சிங்களவர்களால் 'அங்கெலிய' என்று அழைக்கப்படுகின்றது. இந்நிகழ்வு ஆடி மாதத்தில் அறுவடைக்குப் பின்னரான காலப்பகுதியில் நிகழ்த்தப்படுவது வழக்கம். தமிழர்களின் கொம்புமுறிக்கும் சிங்களவர்களின் அங்கெலியவிற்கும் பல ஒற்றுமைகள் இருப்பினும் அவை தமக்கிடையே தனித்துவமான பண்புகளையும் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் கண்ணகி வழிபாட்டிற்கும் அதனுடன் தொடர்புடைய நிகழ்த்து கலையான கொம்புமுறி விளையாட்டுக்கும் இடையிலான தொடர்பினையும், அதன் சமுதாய மானிடவியல் பின்புலத்தினையும், கொம்புமுறி விளையாட்டின் சடங்குசார் நிகழ்த்துகலை முறைமையினையும், தமிழ் – சிங்கள கொம்புமுறி விளையாட்டுகளுக்கு இடையிலான ஒற்றுமை – வேற்றுமைகளையும் ஆராய்வதாக 'கொம்புமுறி விளையாட்டு: இலங்கையில் கண்ணகி – பத்தினி வழிபாட்டின் எச்சம்' எனும் இத்தொடர் இடம்பெறுகின்றது.



## கிருபாகரன் கவிதாஞ்சன்

கிருபாகரன் கவிதாஞ்சன் மட்டக்களப்பு மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைமாணிப் பட்டத்தையும் அதே பல்கலைக்கழகத்தில் தமிழ் முதுகலை மாணிப் பட்டத்தையும் பெற்றவர் ஆவார்.

தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முது தத்துவமாணிப் பட்டத்திற்கான ஆய்வாளராக தொடர்ந்தும் தனது கல்விப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். நாட்டுப்புறவியல், நாடகமும் அரங்கியிலும் ஆகிய துறைகளிலும் பல ஆக்கங்களைத் தற்காலத்தில் எழுதி வருகின்றார். என்பதோடு இவர் சிறந்த மேடை நடிகரும் ஆவார்.

பன்னெடுங்காலந்தொட்டுக் கோயில்கள் சமூக நிறுவனங்களாக இயங்கி வந்திருக்கின்றன. சமூகத்தைத் தன்னுடன் பிணைத்துக்கொள்ள, மனிதனின் அன்றாட வாழ்வியலுடன் தொடர்புபட்ட விடயங்களான நம்பிக்கை அடிப்படையிலான சடங்குகளும் அதனுடன் இணைந்த நிகழ்த்துகலைகளும் கோயில்களினூடாக வளர்த்தெடுக்கப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காலத்திலே கோயில்களினூடாக முன்னெடுக்கப்பட்ட சடங்குகளும் நிகழ்த்துகலைகளும் சமூகத்தினரை ஒன்றுதிரட்டுகின்ற களமாக விளங்கி வந்திருக்கின்றன.

## வைகாசிக் குளிர்த்திச் சடங்கு

கண்ணகி அம்மன் ஆலயத்தில் வருடம் ஒருதடவை வைகாசி மாதத்தில் வருகின்ற பூரணையில் இடம்பெறுகின்ற சடங்கு குளிர்த்திச் சடங்காகும். இதனை 'வைகாசிச் சடங்கு' என்றும் மக்கள் அழைக்கின்றனர். குளிர்த்தி என்பது கோபத்தைத் தணித்தல் என்று பொருள்படுமென்றும் மதுரையைக் கண்ணகி எரித்தபோது ஏற்பட்ட நெருப்பை அணைத்து ஒரு முடிவுக்குக் கொண்டுவருவது போல் இக்குளிர்த்தி நடைபெறுகின்றதென்றும், கணநாத் ஒபயசேகர குறிப்பிடுகின்றார்.[1] மட்டக்களப்பு மான்மியம் குளிர்ச்சி என்பது குளிர்த்தி ஆகியிருக்கலாம் எனக் கூறுகின்றது.[2]

மதுரையை எரித்த கண்ணகி கோபம் தாங்காது இடைச்சேரிக்கு வந்தாள். அங்குள்ள ஆயர்கள் அவளைக் குளிர்விக்க நெய், தயிர் முதலானவற்றை அவளின் மார்பில் பூசி வெப்பத்தைத் தணித்துத் தம்மைக் காக்கும்படி வேண்டினர். இவர்களின் வேண்டுகோளின்படி கண்ணகி கோபம் தணிந்து குளிர்ந்து அவர்களை வாழ்த்திச் சென்றாள். அதனை நினைவு கூறுகின்ற வகையிலே குளிர்த்திச் சடங்கு இடம்பெறுகின்றதென்று இலங்கையில் இந்துக்கள் மத்தியிலே தொன்மக் கதையொன்று காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் குளிர்த்திப் பாடல்வரிகள் உறுதிசெய்கின்றன.

*"இப்பா ரிடந்தனில் வந்தாள்*

*இடைச்சேரி வாழ்விக்க வந்தாள் வந்தாள்*

*ஒப்பான பாலகர்க் கான அன்பாய்*

*ஒரு மாபத்தினி வந்தாள்"*[3]

கண்ணகியின் கோபத்தழலில் பிராமணரும் பெண்டிரும் பசுக்களும் அழியக்கூடாது என இளங்கோவடிகள் எழுதியுள்ளார். ஆனால் கண்ணகியம்மன் குளிர்த்திப்பாடல்களில்,



**கண்ணகி அம்மன்**

Image Source - maddunews.com

"எச்சேரி வெந்தாலும் இடைச்சேரி வேகாமல்

பச்சேரி வெந்தாலும் பறைச்சேரி வேகாமல்..."[4]

என்று காணப்படுவதும் மனங்கொள்ளத்தக்கது.

## வண்ணான் கூய் அறிவிப்பு

கண்ணகி அம்மன் கோயிலில் குளிர்த்திச் சடங்கிற்காகக் கதவு திறப்பதற்கு முன்னரே ஊர்மக்கள் கூடிச் சகல ஏற்பாடுகளையும் தீர்மானிப்பர். கதவு திறப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே இரவில் வண்ணான் கூய் போடுதல் இடம்பெறும். பிரசவமானோர், பூப்படைந்தோர், வீட்டுக்குத் தூரமானோர் ஊரைவிட்டு வெளியேறும்படி கூறிக் கூப்பாடு போடப்படும். அவர்கள் ஊரைவிட்டு வேறிடம் செல்வார்கள். இந்நிகழ்வுடன் புலால் உணவு உண்ணுதலும் விலக்கப்படும். இதனால் ஊரே சுத்தமடையும். ஊர்மக்கள் கூடி ஆலய வளவு தொடக்கம் அயல் முழுவதையும் சுத்தம் செய்வர். வெளியிடங்களில் தங்கியுள்ள சகலருமே கண்ணகை அம்மன் சடங்கு என்றவுடன் ஊர் திரும்பிவிடுவது மரபாகும்.[5]

## கதவு திறத்தல் சடங்கு

வைகாசி மாதப் பூரணையினை அண்டிய குறிப்பிட்ட சில நாட்களின் முன்னர் கண்ணகியம்மன் கோயில்கள் திறக்கப்பட்டுவிடும். மந்திரப் பூசனைகளோடு தேங்காய் உடைத்தலுடன் கதவு திறக்கும் சடங்கு ஆரம்பமாகும். பெரும்பாலான இடங்களில் ஒரு ஞாயிறு இரவு கதவு திறத்தல் இடம்பெறும். சில ஊர்களில் வெள்ளிக்கிழமை இரவும் ஆரம்பமாகும். கதவு திறத்தலுடன் ஒன்பது நாட்கள் அல்லது பதினொரு நாட்கள் இச்சடங்கு நிகழும். சில கிராமங்களில் கதவு திறத்தல் சடங்கிற்கான

சோறுகொடுத்தல் தலைமை வண்ணக்கர் வீட்டிலே இடம்பெறும். இதனைச் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள கம்மடுவச் சடங்கின் முன்னர் கப்புறாளையின் வீட்டிலே 'பீ பத்' கொடுக்கும் சடங்குடன் ஒப்பிட்டு நோக்கமுடியும்.

கதவு திறப்பதற்கு முன்னர் கட்டாடியார் என்று அழைக்கப்படுகின்ற பூசகர் தலையில் நீரை வார்த்து 'மாத்து' உடுத்தி ஊர் முழுவதும் காவல் செய்வதற்காகப் புனிதத் தீர்த்தத்தினைத் தெளிப்பார். இதன் பின்னரே பூசைப் பொருட்களைத் தட்டில் வைத்து கோயில் திறப்பினையும் அதனுடன் வைத்துப் பூசை செய்வார். சில கிராமங்களில் ஒரே தடவையில் கதவு திறக்காதவிடத்து கட்டாடியார் ஏழு தடவை தலையில் நீரை வார்த்து ஏழு தடவை மாத்து உடுத்திய பின்னரே கதவினைத் திறப்பார் என்று கூறப்படுகின்றது. சில ஊர்களில் கலியாணக்கால் வெட்டி கடல்நீரினைக் கொண்டுவந்து தெளித்த பின்னரே கதவு திறக்கும் வழக்கம் உண்டு.

## கல்யாணக்கால் சடங்கு

இச்சடங்கினைக் 'கல்யாணச் சடங்கு' என்றும் அழைப்பர். கதவு திறந்ததிலிருந்து ஒவ்வொரு நாளும் மதியம், இரவு எனச் சடங்குகள் நடைபெறும். திருக்குளிர்த்திக்கு முன்னர் கல்யாணக்கால் சடங்கு இடம்பெறுவது வழக்கமாகும். கட்டாடியார் பெண்ணைப் போல் சேலை உடுத்தி முக்காடிட்டு பறைமேளம் ஒலிக்க, பெண்களின் குரவை ஒலிக்க, 'அரோகரா' சத்தத்துடன் கல்யாணக்கால் வெட்டும் இடத்திற்குச் செல்வார்.[6] முன்பே பார்த்துத் தீர்மானித்த மரத்தடியிலே மடை வைத்துப் பூசை செய்யப்படும். கல்யாணக்காலிற்கு அநேகமாக பூவரசு மரமே தெரிவு செய்யப்படும். அதன் பின்னர் அம்மரம் கட்டாடியாரால் வெட்டப்படும். கல்யாணக்காலினை வெட்டிக்கொண்டு திரும்பும்போது கட்டாடியார் உருவேறிய நிலையிலேயே ஓட்டமாகக் கோயிலுக்குள் செல்வார்.



கல்யாணக்கால் அலங்காரம்

Image Source - thulanch.blogspot.com

வெட்டிக் கொண்டுவரப்பட்ட கல்யாணக்கால் மூலஸ்தானத்திற்கு முன்னே உள்ள கல்யாண மண்டபத்திலே நடுவே இதற்காக அமைக்கப்பட்டிருக்கும் மேடையின் மீது நடப்பட்டு அழகான சேலைகளினால் அலங்கரிக்கப்பட்டு பெண் போன்ற தோற்றம் தருகின்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கும். இதனைக் கண்ணகியம்மனாகப் பாவித்து கோவலனுக்குத் திருமணம் செய்விக்கப்படும். கட்டாடியாரே கோவலனாக வேடமிட்டு கல்யாணக்காலிற்குத் தாலியைக் கட்டுவார். இதன்போது கல்யாண ஏடு படித்தலும் இடம்பெறும். பூசை நேரங்களின் போது திருநீறு, தீர்த்தத்துடன் வெற்றிலை, பாக்கும் கல்யாணப் பலகாரமும் பக்தர்களுக்கு வழங்கப்படும்.

## கும்பச் சடங்கு

கலியாணக்காலிற்கு முன்னர் பூரணக்கும்பமும் மடையும் வைக்கப்படும். இதற்காக நெல் குவியலாகக் கொட்டப்பட்டு அதற்கு மேலேதான் பூரணக்கும்பம் வைக்கப்படும். இது வெற்றிலை, பாக்கு, கமுகம்பாளை, தாமரைப்பூ, வேப்பிலை போன்றவற்றைக் கொண்டு அலங்கரிக்கப்படும். கட்டாடியார் இக்கும்பத்தின் முன்னே வந்து உடுக்கையினைப் பலமாக அடிப்பார். அதன்போது தீராத நோயுள்ளவர்கள் கும்பத்தினைச் சுற்றி நிற்பார்கள். அவர்கள் மீது இந்த உடுக்கை பட்டால் அவர்களின் நோய்கள் நீங்கும் என்பது ஐதீகம்.

## பச்சைகட்டிச் சடங்கு

மட்டக்களப்பு ஆரையம்பதி கண்ணகி அம்மன் கோயிலில் வைகாசிச் சடங்கின் ஏழாம் நாள் நடைபெறுகின்ற சடங்கு பச்சைகட்டிச் சடங்கு எனப்படுகின்றது. இச் சடங்கின் போது அம்மனிற்கு நிவேதனமாகக் கனியாத காய்ப்பருவம் கொண்ட பழ வகைகளே படைக்கப்படுகின்றன. கண்ணகி கோவலனுடன் மதுரை வந்து சேர்ந்த நாள் தொடக்கம் அவர்களின் உணவிற்காக ஆயர் குலத்தவர்கள் பச்சை அரிசியும் பச்சைக் காய்கறிகளும் கொடுத்துக் காப்பாற்றியதை நினைவுகூரும் முகமாகவே இப் பச்சைகட்டிச் சடங்கு நடைபெறுகின்றது. பச்சைகட்டி என்ற சொல்லாடல் காரைதீவுக் கண்ணகியம்மன் ஆலயத்திலும் வழக்கில் உண்டு. அங்கு வைகாசிச் சடங்கு நாட்களில் தினமும் பகற்பூசையில் படைக்கப்படுகின்ற கறியமுதே பச்சைகட்டி என்று கூறப்படுகின்றது.

## வைகாசிப் பொங்கல்

நேர்த்திக்கடனாக அம்மனிற்குக் கொடுக்கப்பட்ட நெல்லை ஆலயத்தில் பெண்கள் கூடி குற்றி

அரிசியாக்குவர். இவ்வாறு குற்றிய அரிசியை அம்மனிற்காகப் பொங்கும் நிகழ்வு 'விநாயகப்பானை வைத்தல்' எனப்படும். ஆலய முன்றலில் அடுப்பு மூட்டி மூன்று பானைகளை அடுப்பிலே வைப்பர். பானையில் பால் பொங்கும் வேளையில் நடுவிலுள்ள பானைப்பாலை எடுத்துச் சென்று அம்மனுடைய மடையில் வைப்பர். பொங்கலிற்கான பாலினை மாட்டுப்பட்டி அதிகமாகவுள்ள கிராமங்களில் மக்கள் நேர்த்தியாகக் கொண்டுவந்து கொடுப்பர். விநாயகப்பானையில் பொங்கிய பாலானது, நேர்த்திக்காகப் பொங்கல் பொங்குகின்ற மக்கள் அனைவரிற்கும் பகிர்ந்து கொடுக்கப்படும். இறுதியில் ஒவ்வொருவரினது பொங்கல் பானையிலிருந்தும் மூன்று அகப்பைப் பொங்கல் அள்ளப்பட்டு அம்மனிற்குப் படைக்கப்படும். படைக்கப்பட்ட அப்பொங்கல் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படும்.

### திருக்குளிர்த்திச் சடங்கு

வைகாசி மாதப் பூரணையில் திருக்குளிர்த்தி ஆடுதல் இடம்பெறும். இதன்போது குளிர்த்தி ஏடு படிக்கப்படும். கண்ணகை அம்மனது மதுரையை எரித்த கோபமானது தம் பூசனைகளினால் தணிந்து குளிருமாறு அம்மனை வேண்டுதல் செய்து குளிர்த்திப் பாடல்களைப் பாடுவர்.[7] அதன்போது கட்டாடியார் பெண் வேடம் தாங்கி வந்து கரைத்து வைத்த மஞ்சள் நீரினை வேப்பிலைகளால் தோய்த்து மக்களிற்குத் தெளிப்பார். இக் குளிர்த்தி நீர் உடலில் படும்போது நோய்கள் தீரும் என்பது ஐதீகம்.

“காளி புடைசூழுங் காவிரிப் பூம்பட்டிணத்தில்

வாழ்வணிகர் தங்குலத்து மாதே குளிர்ந்தருள்வாய்”[8]

என்று வாழிப்பாடல் பாடப்பட்ட பின்னர் குளிர்த்திச் சடங்கு நிறைவுபெறும். அதன்பின்னர் பக்தர்கள் அனைவருக்கும் குளிர்த்திப் பானகம் வழங்கப்படும். அதன்பின்னர் கட்டாடியார் மூலஸ்தானத்தினுள்ளே தூண்டாமணி விளக்கினை எரியவிட்டுக் கதவினை மூடுவார். பின்னர் ஒவ்வொரு கதவாக அடைக்கப்படும்.

### எட்டாம் நாள் சடங்கு

இச்சடங்கினைத் தெளிவுச்சடங்கு என்றும் கூறுவர். குளிர்த்திச் சடங்கு நிறைவடைந்து எட்டுநாட்களின் பின்னர் இச்சடங்கு இடம்பெறும். அன்றையநாள் கட்டாடியார் கோயிலுக்குச் சென்று தலையில் நீரை வார்த்து மாத்து உடுத்திப் பயபக்தியுடன் கதவைத் திறப்பார். குளிர்த்தியன்று ஏற்றிவைத்த விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தால் ஊர் உலகிற்கு நன்மை நடக்கும் என்ற நம்பிக்கையும் அணைந்து போனால் தீமை நடக்கும் என்ற நம்பிக்கையும் மக்கள் மத்தியிலே காணப்படுகின்றது. பின்னர் கட்டாடியார் மூலஸ்தானத்திலே மடைவைத்துப் பூசை செய்வார். இதன்பின்னர் கோயிற் கதவு அடைக்கப்படும். இதன்போது அடைக்கப்படுகின்ற கதவு மீண்டும் அடுத்தவருடம் வைகாசிச் சடங்கின்போதே திறக்கப்படும்.

### வைகாசிக் குளிர்த்திச் சடங்குடனும் கொம்பு விளையாட்டுடனும் தொடர்புடைய நிகழ்த்துகலைகள்

### குரவை போடுதல்



மட்டக்களப்பு ஆரையம்பதி கண்ணகி அம்மன் கோயில்

Image Source - ta.wikipedia.org

இலங்கையில் கிராமங்கள் தோறும் இடம்பெறும் சமய விழாக்களிலும் மங்கல நிகழ்ச்சிகளான திருமண வீடுகளிலும் பூப்பு நீராட்டு வீடுகளிலும் குரவை போடுதல் இடம்பெறுகின்றது. இக்குரவை போடுதல், மனமகிழ்ச்சியை உண்டுபண்ணுதல் அல்லது மன மகிழ்ச்சியினை வெளிப்படுத்துதல் என்னும் அடிப்படை நோக்குடனே நிகழ்த்தப்படுகின்றது. குரவையை மட்டக்களப்புப் பிரதேசத்தில் குலவை என்று குறிப்பிடுகின்றனர். இக்குரவை கண்ணகியம்மன் வழிபாட்டுடன் அதிகம் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மட்டக்களப்பிலுள்ள முஸ்லிம் பெண்கள் கூட மங்கள நிகழ்ச்சிகளில் குரவை ஒலி செய்கின்றனர்.

நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டுப் பெண்கள் கண்ணகியம்மன் சடங்கு நடைபெறும் காலங்களில் குலவை போடுவார்கள். அம்மனின் சந்நிதியில் குலவை போடுதல் புனிதமான தொண்டு எனப் பக்தர்கள் கருதுவதோடு தமது குலவையை அம்மன் விரும்புகின்றாள் என்றும் அது அவளை மகிழ்விக்கும் என்றும் நம்புகின்றனர். கண்ணகி அம்மன் சடங்கின் ஐந்தாம் நாள் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடப்பதனைக் குறிக்கின்ற 'கல்யாணப் படிப்பு' நடைபெறும். இத் திருக்கல்யாண நிகழ்ச்சியன்று

குலவை போடுதல் மிகவும் சிறப்பானதாகும். வைகாசிச் சடங்கின் எட்டாம் நாள் குளிர்த்திச் சடங்கு நடைபெறும் போதும் குலவை போடப்படுகின்றது. கண்ணகியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய போர்த் தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல், ஏடகம் (தேர்) ஊர்வலம் வருதல் ஆகிய சந்தர்ப்பங்களிலும் பெண்களது குரவை இடம்பெறுகின்றது. இந்நிகழ்ச்சிகளில் ஆண்களும் குலவை போடுவதைக் காரைதீவில் காணமுடிகின்றது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியைத் தெய்வமாகப் போற்றிய குன்றக் கானக் குறமகளிர் குரவையாடியமை குறிப்பிடத்தக்கது. உடல் நலம் குன்றித் தம் பெண்மக்கள் இருக்குங்காலத்து, தாயார் அவர்களுடைய நோயின் கடுமையினைக் குறைக்குமாறு கண்ணகியம்மனை வேண்டி 'மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு நாட்களுக்கு நின் கோயில் காத்து குரவையிட்டுச் செல்வேன்' என்று நேர்த்திக்கடன் செய்வதிலிருந்து குரவையிடுதல் கண்ணகி வழிபாட்டுடன் எத்தகைய பிணைந்த நிகழ்ச்சியாயிற்று என்பதனை நாம் அறிந்து கொள்ளுதல் கூடும்.[9]

### காவடியாட்டம்

ஆலயங்களின் உற்சவங்களின் போது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டாகக் காவடியாட்டம் இடம்பெறுகின்றது. இவ் ஆட்டத்தின் போது தாளக்கட்டிற்கமையப் பாடல்கள் பாடப்படுகின்றன. முருகன், பிள்ளையார், மாரியம்மன், கண்ணகியம்மன் போன்ற தெய்வங்களைப் பற்றியதாக இப்பாடல்கள் காணப்படும். இது முழுமையாகத் தன்னைச் சமயச் சடங்குகளிலிருந்து விடுவித்துக் கொள்ளவில்லை. தமிழ்நாட்டிலே இடம்பெறும் பாற்காவடி, பன்னீர்க்காவடி, பூப்புக்காவடி, ஆனந்தக்காவடி, சக்கரக்காவடி, சந்தனக்காவடி, முட்காவடி போன்ற பல்வகையான காவடி ஆட்டங்களுள் பாற்காவடியும் முட்காவடியுமே இலங்கையில் கண்ணகி வழிபாட்டுடன் நிகழ்த்தப்படுகின்றன.

### கரகாட்டம்

கண்ணகி கோயில்களில் இடம்பெறும் கலையாடல்களுள் கரகாட்டமும் ஒன்றாகக் காணப்படுகின்றது. சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகையான ஆடல்களுள் ஒன்றான குடக்கூத்திலிருந்தே இன்றைய கரகாட்டம் தோன்றியிருக்க வேண்டும் என்று ஒருசாரார் கருதுகின்றனர். மட்டக்களப்பில் செட்டிபாளையம் கண்ணகியம்மன் கோயிலில் கரகாட்டத்தின் போது பாடப்படுகின்ற பாடல்கள் மாரியம்மன், முருகன், கண்ணகி போன்ற தெய்வங்களை வேண்டிப் பாடப்படுகின்றன. இதன்போது ஒரு சிறுமி கண்ணகி போன்று வேடமிட்டுக்கொண்டு நிற்பாள். இச்சிறுமியைச் சுற்றியே கரகாட்டம் ஆடப்படும். இது ஏடக ஊர்வலத்தின் போது ஏடகத்தின் முன்னர் ஆடப்படுகின்றது.

### பள்ளுக்கு வளைதல்

கிழக்கிலங்கையில் தம்பிலுவில் கண்ணகியம்மன் ஆலயத்தில் மட்டுமே கொம்பு விளையாட்டின் போதும் வைகாசிச் சடங்கின் போதும் பள்ளுக்கு வளைதல் இடம்பெறுகின்றது. கொம்பு விளையாட்டின் போது, போர்த்தேங்காய் உடைப்பதற்கு முன்னர் வட சேரியினரும் தென் சேரியினரும் இணைந்து ஆடுகின்ற நிகழ்வே பள்ளுக்கு வளைதல் ஆகும். காய்ந்த தென்னம் ஓலைகளை ஒன்றாகக் கயிற்றினால் சேர்த்துக் கட்டி அதற்குத் தீ மூட்டிப் பின்னர் அது எரிகின்றபோது அதனைச் சுற்றி இரண்டு கைகளையும் தட்டியவண்ணம் கண்ணகி அம்மனிற்குரிய பள்ளுப் பாடல்களைப் பாடி ஆடுவர்.

வெற்றி பெற்ற கொம்பு ஊரைச் சுற்றி வலம் செல்வதற்கு முன்னரும் பள்ளுக்கு வளைதல் இடம்பெறும். கண்ணகியம்மன் ஊருக்குள் வலம் செல்ல முன்னர் தீய விடயங்கள் அனைத்தையும் இத்தீயில் எரிய வைப்பதற்காகவே தீ மூட்டப்படுவதாக மக்கள் நம்புகின்றனர். கண்ணகி மதுரை நகரினை எரித்த சிலப்பதிகாரக் கதையினை இது நினைவுபடுத்துகின்றது.

பள்ளுக்கு வளைவதில் ஆண்கள் மட்டுமே ஆடுவர். ஏனையோர் பார்வையாளர்களாக இருப்பர். பள்ளுக்கு வளைகின்ற போது ஆலயக் கற்பூரகனாரினால் கண்ணகியம்மன் பள்ளுப் பாடல் இராக தாளத்துடன் பாடப்படுகின்றது. இவ்வாறு பாடப்படுகின்ற போது உடுக்கை, சவணிக்கை, சல்லரி போன்ற வாத்தியங்கள் வாசிக்கப்படும். இவ்வாத்தியங்களை வாசிப்போரும் தத்தமது வாத்தியத்தினை இசைத்தவாறு வட்டமாக ஆடுவர்.

### வசந்தன் கூத்து

வசந்தன் கூத்து நாட்டார் கலை வடிவங்களுள் காணப்படுகின்ற ஓர் ஆடற்கலை வடிவமாகும். கிழக்கிலங்கையின் பல பாகங்களிலும் செழிப்பாக வளர்ந்து வந்த நாட்டார் கலைகளுள் வசந்தன் கூத்தும் ஒன்றாகும். கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புபட்ட பக்தி கலந்த நிகழ்த்துகலையாக இக்கூத்து காணப்படுகின்றது.

இதனை எட்டுப் பேர், பன்னிரண்டு பேராகச் சேர்ந்து ஆடுவார்கள். ஆடும்போது ஒவ்வொருவரும் கைகளில் சிறு கோல்களைப் பிடித்து அவற்றை ஒன்றோடொன்று தட்டி ஆடுவர். இதனால் இவ்வசந்தனாட்டம் ஒரு விதத்தில் கோலாட்டத்தை ஒத்திருக்கும் என்று சதாசிவ ஐயர் கூறுகின்றார்.[10]

வசந்தன் கூத்து தமிழர்களால் 'வசந்தகாலம்' என்று கூறப்படுகின்ற, சித்திரை, வைகாசி, ஆனி போன்ற மாதங்களிலே சிறப்பாக இடம்பெறுவதால் கால அடிப்படையில் வசந்தன் எனப் பெயர் பெறுவதாயிற்று. வசந்த காலத்திற்குரிய ஆடலோடு கூடிய பாடலாதலின் 'வசந்தன் கவி' ஆயிற்று. இது காலத்தினால் பெற்ற பெயராகும்.[11]
"கோலாட்டத்தைப் பெரும்பாலும் கிராமங்களில் நடக்கும் வசந்தகால விளையாட்டு என்றே கூறலாம்" எனக் கலைக்களஞ்சியம் விளக்கம் தருகின்றது.[12] வசந்தம் என்பதற்கு இன்பம் என்ற பொருளுமுண்டு. சுவாமி விபுலானந்தர் வசந்த காலத்திற்குரித்தானபடியால் இவை வசந்தன் எனப் பெயர் பெற்றன என்கின்றார்.[13]

மட்டக்களப்பில் மார்கழி மழையை எதிர்பார்த்தே விதைப்புகள் நிகழும். பங்குனி மாதத்தில் அறுவடை நடைபெறும். சித்திரையில் வீடுகளில் நெல்லும் பொருளும் நிறைந்து கிடக்கும். இக்காலமே அவர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய காலமாக, வசந்த காலமாக இருக்கும். இக்காலங்களிலேயே இப்பிரதேசத்தில் வசந்தன் ஆட்டம், பறைமேளக் கூத்து, மகிடிக் கூத்து ஆகியன இடம்பெறும். 'மக்கள் வயல் வேலைகள் முடிந்த பின் நிறைந்த இன்பத்தினால் ஆடும் ஓர் இனிய கூத்து' என்று வீ.சி. கந்தையா கூறுவதும் மனங்கொள்ளத்தக்கது.[14]

வசந்தன் பாடல்களில் பள்ளர்களே முக்கிய இடம் பெறுகின்றனர். இது தமிழில் உள்ள பள்ளு இலக்கிய வடிவத்தினை ஒத்திருப்பினும், முழுமையான பள்ளு என இதனைக் கொள்ள முடியாதுள்ளது. எனினும் பள்ளின் மூலக்கூறுகளை இங்கு காணமுடிகின்றது.

பல வகையான ஆடல்களும் பாடல்களும் கொண்டு காணப்படுகின்ற இவ்வசந்தன் கூத்தில் கண்ணகி வழிபாட்டினைச் சார்ந்தனவாக, 'அம்மன் பள்ளு', 'மாதவி நடனம்', 'கூவாய் குயிலே வசந்தன்' முதலியன காணப்படுகின்றன.

இவற்றில் காணப்படும் கண்ணகி வழிபாடு, சிலப்பதிகாரத்திற்கு மாறான ஒன்றாகத் தோன்றுகின்றது. கண்ணகியின் பிறப்பு தெய்வீக முறையிலே இப்பாடல்களில் காட்டப்பட்டுள்ளது.

"உருவில் லாத மாய மாகியே - நுதல்விழிதனில்

ஒருபொறி கவிழ்ந் துறக்க மானதே

விருத ராசர்கள் புகழ்தென் பாண்டியன் -
வீற்றிருக்கின்ற

வேளை அன்னதில் மாங்கனி யானதே"[15]

இறைவனின் நெற்றிக்கண் பொறியொன்று மாங்கனியாகி, அம்மாங்கனியே பின்னர் கண்ணகியாக மாற்றம் பெற்றது என்று அம்மன் பள்ளு வசந்தனில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கதையானது, கண்ணகி வழக்குரையின் கதையினை ஒத்துக் காணப்படுகின்றது.

கொம்பு விளையாட்டின் பின்னர் வெற்றி பெற்ற சேரியினரின் கொம்பு, கொம்புத்தட்டில் வைக்கப்பட்டு ஏடகத்தில் ஊர்வலமாகக் கொண்டுவரப்படும். இதன்போது முக்கியமான இடங்களில் (கொம்புச்சந்தி) கொம்புத்தட்டை வைத்து விட்டு ஆறு அல்லது எட்டு அல்லது பன்னிரண்டு பேர் ஒன்றாகக் கூடி வசந்தன் கூத்தினை ஆடுவர். இவற்றின் அடிப்படையில் தொகுத்து நோக்குகின்ற போது முக்கியமான மூன்று சந்தர்ப்பங்களின் போது இவ்வசந்தன் கூத்து ஆடப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

1. வயல் வேலைகள் முடிந்து ஓய்வான நேரங்களில் ஆடுதல்.
2. கண்ணகியம்மன் கோயில் குளிர்த்திச் சடங்கின் போது கோயிலின் முன்பாக ஆடுதல்.
3. கொம்பு முறித்துத் தேரில் கொம்பினை ஊர்வலமாகக் கொண்டு வரும்போது சந்திகளில் நின்று ஆடுதல்.

இதிலிருந்து மக்களின் தொழிலுடனும் வழிபாட்டுடனும் வசந்தன் கூத்து தொடர்புபடுவதனைக் காணமுடிகின்றது. வசந்தன் கூத்தினை சிங்கள மக்களிடையே நிலவும் கோலம் என்ற கலையுடன் சி. மௌனகுரு தொடர்புபடுத்துகின்றார்.[16] இ. பாலசுந்தரம் இதனை சிங்கள மக்கள் மத்தியிலுள்ள கோலாட்டமான லீஹெலியுடன் ஒப்பிடுகின்றார்.[17]

### கோவலன் கூத்து

ஈழத்தில் பிராந்திய வேறுபாடுகளுடன் கூடிய சிலப்பதிகாரப் புத்தாக்கப் பிரதிகளும் சிலப்பதிகாரத்தின் கதைக்கூறுகளை அடிப்படையாகக் கொண்ட பாடல்கள் பலவும் தமிழ், சிங்கள

மக்களிடையே தோன்றி நிலைபெற்றுள்ளன. அவ்வாறு ஈழத்தின் வன்னிப் பிரதேசத்தில் சிலப்பதிகாரக் கதைமரபானது கூத்து வடிவமாகப் பயில்நிலையில் இருந்து வருகின்றது. வன்னிப் பிரதேசத்தில் நெடுங்காலந்தொட்டு சிலம்பு கூறல் என்னும் கண்ணகி வரலாற்றைப் படிப்பதோடு, அதே சரிதத்தைக் கூத்தாகவும் ஆடத் தொடங்கியிருக்கின்றார்கள். இக்கூத்து அவர்களின் ஒரு நேர்த்திக்கடனாகவே கண்ணகியம்மனிற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது. பண்டைக்காலம் தொடக்கம் முள்ளியவளை, தண்ணீரூற்று, வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு, வட்டுவாகல், மணற்குடியிருப்பு, சிலாவத்தை, அளம்பில், செம்மலை, குமிழமுனை போன்ற இடங்களில் கோவலன் கூத்து ஆடப்பட்டு வருகின்றது. இவற்றையெல்லாம் விட முல்லைத்தீவுப் பிரதேசத்தில் ஆடப்பட்டு வந்த கோவலன் கூத்து ஒரு தனிப்பாணியில் அமைந்துள்ளது. இப்பகுதியிலுள்ள அருவி வெட்டுப் பாடல்கள், பள்ளுப் பாடல்கள், சிலம்பு கூறல் பாடல் மெட்டுகள் போன்றவை இந்தக் கூத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கூத்தின் ஆட்டமுறைகளும் மற்றைய கூத்துகளை விட வேறுபட்டவையாக இருக்கின்றன.[18]

இக்கிராமங்களில் பரம்பரையாக வரும் அண்ணாவிமார் கூத்தைப் பழக்கி, அவ்வூர் கண்ணகியம்மன் கோயிலில் ஆடுவது வழக்கம். புதுக்குடியிருப்பில் த. பொன்னம்பலம் அண்ணாவியார் 1926ஆம் ஆண்டளவில் கோவலன் கூத்தைப் பழக்கி மேடையேற்றியதாக வாய்வழித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கூத்தில் நடித்த பலர் பிற்காலத்தில் அண்ணாவிமாராக இருந்துள்ளனர்.[19]

கோவலன் கூத்து முற்றிலும் ஆண்கள் பங்குபற்றும் கூத்தாகும். இது நேர்த்திக்காக ஆடப்பட்டதால் பெண்களைச் சேர்த்து ஆடுவது தவிர்க்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் கூத்தைப் பழக ஆரம்பிக்கும் போதும் கும்பம் வைத்துக் கற்பூரம் கொழுத்தி, தேவாரத்துடன் ஆரம்பிப்பது மரபு. வேளாண்மையின் அறுவடை முடிந்த பின்னரே கோவலன் கூத்தாடும் காலம் ஆரம்பமாகும்.

வன்னிப் பிரதேசத்தின் பிரதானமான சீவனோபாயமாக அமைவது விவசாயமே. தமது விவசாய நடவடிக்கைகளிற்கு இயற்கையையே நம்பியிருக்கின்றனர். வெப்பமும் வெப்பத்தினால் வருகின்ற நோய்களும் கண்ணகியின் சீற்றத்தினாலேயே ஏற்படுகின்றன என்று இவர்கள் நம்புகின்றனர். அம்மனின் சீற்றத்தைத் தணிவித்தால் மழை பெய்து நாடு வளம் பெற்று, மக்கள் நோய் நொடியின்றி இன்பமாக வாழலாம் என்பது இவர்களின் நம்பிக்கை. இதனால் அம்மனின் சீற்றத்தைத் தணிவிக்க நேர்த்தி வைக்கின்றனர். நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டே கோவலன் கூத்து இங்கு இடம்பெறுகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. Gananath Obeyesekere, (1994), The Cult of the Goddess Pattini, London, University of Chicago, p.556.
2. சா., ஆறுமுகம் (1994), செட்டிபாளையம் அருள்மிகு கண்ணகியம்மன் ஆலயமும் குருக்கள் மடமும், ஆலய நிருவாகம், மட்டக்களப்பு, பக்.17.
3. கண., ஆறுமுகம் (பதிப்பாசிரியர்), (2008), கண்ணகை அம்மன் பத்ததியும் பாடல்களும், சண் அச்சகம், மட்டக்களப்பு, பக்.7.
4. மேலது, பக்.13.
5. க., தங்கேஸ்வரி (2008), கிழக்கிலங்கை வழிபாட்டுப் பாரம்பரியங்கள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, பக்.171.
6. க., தங்கேஸ்வரி, மு.கு.நூ. பக்.174-175.
7. வி.சீ., கந்தையா (1964), மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், பக்.168.
8. மேலது, பக்.141.
9. வி.சீ., கந்தையா, மு.கு.நூ, பக்.193.
10. சதாசிவ ஐயர், வசந்தன் கவித்திரட்டு, முன்னுரை.
11. சுவாமி விபுலானந்தர் (1953), வசந்தன் கவி, ஸ்ரீலங்கா, பக்.22.
12. கலைக்களஞ்சியம், தொகுதி4, பக்.37.
13. சுவாமி விபுலானந்தர், மு.கு.நூ, பக்.21.
14. வி.சீ., கந்தையா, மு.கு.நூ, பக்.200.
15. வி.சீ., கந்தையா, மு.கு.நூ, பக்.200.
16. சி., மௌனகுரு (2005), நாடகம்அரங்கியல் பழையதும் புதியதும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, பக்.67.
17. மேலது, பக்.67.
18. அருணா செல்லத்துரை (2000), வன்னிப்பிராந்தியக் கூத்துக்கள் பாரம்பரியத் தேடல், அருணா வெளியீட்டகம், கொழும்பு, பக்.47.

# வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் அடையாளமும் புவியியல் சுயவிவரமும்

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பாலும் வறண்ட மற்றும் அரை வறண்ட காலநிலைச் சூழலுக்குட்பட்ட பகுதிகளாகும். இப்பகுதிகளில் உள்ள ஆற்றுப்படுகைகள் (River Basins) நீர் வளங்களின் முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன. இவை குடிநீர், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, தொழில் மற்றும் சூழலியல் சமநிலைக்கான ஆதாரங்களாகவும் உள்ளன. முரண்பாடுகள், நிலவளப் பயன்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள், காடழிப்பு, கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு, நிலத்தடி நீரின் அதிகப்படியான பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவை இவ்வாற்றுப் படுகைகளின் நீரியல் சமநிலையைப் பாதித்துள்ளன. எனவே, இவற்றின் தற்போதைய நிலையை அறிவியல் மற்றும் தரவுசார்ந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் கூடிய திறம்பட்ட பயன்பாட்டிற்கான வழிமுறைகளை முன்வைப்பது கட்டாயமானதாகும். 'வடக்கு – கிழக்குப் பிராந்தியங்களின் ஆற்றுப்படுகைகளின் நீர்வள இருப்பும் பயன்பாட்டிற்கான ஒருங்கிணைந்த மூலோபாயங்களும்' எனும் இக்கட்டுரைத் தொடர், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் அனைத்து ஆற்றுப்படுகைகளையும் ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் நீர் வளத்தின் திறம்பட்ட பயன்பாட்டையும் சமநிலைப்படுத்தும் வழிமுறைகளை முன்வைக்கும். இது நிலைத்த வளர்ச்சிக்கான அறிவியல் மற்றும் கொள்கை அடிப்படையிலான வழிகாட்டி ஆவணமாகவும் அமையும்.

## பகுதி 2




### சுப்ரமணியம் சிவகுமார்

கலாநிதி. சுப்ரமணியம் சிவகுமார் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் இளங்கலைப் (BSc Eng.) பட்டமும், இந்தியத் தொழில்நுட்பக்கழகம் ரூர்க்கியில் (IIT Roorkee) நீர்வள மேம்பாட்டுத்துறையில் முதுகலைப் (MSc) பட்டமும், மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் (PhD) பட்டமும் பெற்றவர். பின்னர் நோர்வேயின் உயிரியல் அறிவியல் பல்கலைக்கழகத்திலும் (NMBU, s), வடகிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்திலும் (Bod) பிந்தைய முனைவர் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராகவும், நீர்ப்பாசனப் பொறியாளராகவும் 28 ஆண்டுகள் சேவையாற்றியுள்ளார். யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பல்கலைக்கழகங்களில் மூத்த விரிவுரையாளராகச் செயற்பட்டார். விவசாய அமைச்சகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும், வடமாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகவும் பணியாற்றினார். பல்வேறு சர்வதேசப் பல்கலைக்கழகங்களில் விருந்தினர் விரிவுரைகளையும், முக்கிய உரைகளையும் (Keynote Speeches) நிகழ்த்தியுள்ள இவர், குறியீட்டு அறிவியல் இதழ்களில் 45க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டுள்ளதோடு, இதுவரை 7 நூல்களையும் எழுதியுள்ளார். மேலும், 18 சர்வதேச மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்துள்ளார்.

## 2.1.1.2 அகத்திமுறிப்பு குளம்

அருவி ஆறு (மல்வத்து ஓயா) குறுக்கே மறுகட்டமைக்கப்பட்டு, வலதுகரை உள்வாய்க்கால் மூலம் கட்டுக்கரைக் குளத்திற்கும், இடதுகரை அகத்திமுறிப்பு உள்வாய்க்கால் மூலம் அகத்திமுறிப்பு திட்டத்திற்கும் நீர் வழங்கும் வகையில் அமைக்கப்பட்டது. கட்டுக்கரைக் குளம் மற்றும் அகத்திமுறிப்பு திட்டங்களின் கீழ் பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்புகள் முறையே 24,438 ஏக்கரும் 6,231 ஏக்கரும் ஆகும். இவ்விரு திட்டங்களிலும் முறையே 162 மற்றும் 40 சிறிய குளங்களின் கீழ் உள்ள நிலப்பரப்புகளும் அடங்குகின்றன.

அகத்திமுறிப்பு திட்டம், தேக்கம் அணைக்கட்டின் (அருவி ஆறு) இடதுகரையில் அமைந்துள்ளதுடன், சுமார் 1930 ஆம் ஆண்டு கட்டமைக்கப்பட்டது. இந்தத் திட்டம், தேக்கம் அணைக்கட்டின் இடதுகரையிலிருந்து பிரியும் உள்வாய்க்காலையும், இரண்டு தலைவாய்கள் (Regulator) மூலம் கட்டுப்படுத்தப்படும் நீர்விநியோக அமைப்பையும் கொண்டுள்ளது. இத்திட்டம் 24 சிறிய குளங்களுக்கும், 14 சிறிய குளங்களுக்கு நீர் வழங்கும் அகத்திமுறிப்பு பெரிய குளத்திற்கும் நீர் வழங்குகிறது. உள்வாய்க்காலின் நீளம் சுமார் 15.75 மைல்கள் ஆகும். திட்டத்தின் கீழ் பயிரிட திட்டமிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு 6,231 ஏக்கராக இருந்தாலும், ஒதுக்கீட்டுப் பகுதிகளிலும் பயிரிடப்படுவதால் நடைமுறையில் 7,000 ஏக்கரிற்கு மேற்பட்ட நிலப்பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.

**Hydro data of Akathimurippu Kulam**

| Catchment Area | 1.5 sq.mls. |
|---|---|
| Acreage | 4,538 acres. |
| Capacity | 6,948 ac. ft |
| Full supply level | 34.8 ft. MSL |
| High flood level | 35.6 ft. MSL |
| Length of bund | 3.65 miles |
| Bund Top Level | 36.8 ft.MSL |
| Top Width | 6 ft. |
| Crest level of spill | 34.8 ft. MSL |
| Type of spill | C.O. |
| Length of spill | 225 ft. |
| Sluice Type | Tower |
| Size of opening | 2.5ft dia – 3nos & 1ft dia – 10nos |

இந்த வாய்க்காலின் நீளத்தில் மொத்தம் ஒன்பது கிளை நீரெடுப்புகள் (Offtakes) அமைந்துள்ளன. வாய்க்கால் இறுதியில் அகத்திமுறிப்பு குளத்தைச் சென்றடைகிறது. இந்த வாய்க்காலின் தலைவாய்கள் 01 மைல் 4,300 அடி தொலைவில் அமைந்துள்ளன; அவற்றில் இரண்டு கதவுகள் உள்ளன. தலைவாய்க்கு மேல்பகுதியில் ஐந்து வாய்க்கால் வான் அமைப்புகள் (Canal Spills) காணப்படுகின்றன. முதல் நான்கு வாய்க்கால் வான்கள் மரத்தடுப்பு அமைப்புகளுடன் காணப்படுகின்றன; ஐந்தாவது வாய்க்கால் வான் நான்கு திறப்புகளைக் கொண்ட திருகு முறை உயர்த்தும் அமைப்புடன் பொருத்தப்பட்டுள்ளது. வாய்க்கால் 07 மைல் 3,700 அடி வரை எந்தக் கிளை நீரெடுப்பும் இன்றித் தொடர்கிறது. இத்திட்டம் சுமார் 2,560 விவசாயக் குடும்பங்களின் வயல்வெளிகளுக்கு நிச்சயமான பாசன நீரை வழங்குகிறது.

அகத்திமுறிப்பு குளம் முசலி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ளது. 1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மோதல்களின் காரணமாக அகத்திமுறிப்பு குளம் கைவிடப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டது. விவசாயிகள் இடம்பெயர்க்கப்பட்டதுடன், 1990க்குப் பின்னர் திட்டத்தின் பராமரிப்பும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், தேக்கம் அணைக்கட்டின் மேற்பகுதியில் பல அணைக்கட்டுகள் அமைக்கப்பட்டதும், அருவி ஆறு நீர்ப்பிடிப்பு பகுதியில் கைவிடப்பட்டிருந்த குளங்கள் மீளமைக்கப்பட்டதும் காரணமாக, அண்மைக் காலங்களில் அருவி ஆற்றின் நீரோட்டம் குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. இதன் விளைவாக, அகத்திமுறிப்பு வாய்க்காலின் கீழுள்ள கிராமக் குளங்களுக்கு போதுமான அளவு நீர் நிரப்பம் கிடைக்காமல், வறட்சி ஆண்டுகளில் பயிரிழப்புகள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

நீண்டகாலமாகச் செயல்பட்டிருந்ததால், அருவி ஆற்றிலிருந்து நீர் பகிர்வு செய்யப்படும் போது கட்டுக்கரைக் குளத்திற்கு முன்னுரிமை வழங்கும் நடைமுறை நிலவுகிறது. மேலும், கட்டுக்கரைக் குளத்திற்கான உள்வாயின் அடித்தளம் அகத்திமுறிப்பு உள்வாயை விட 2 அடி தாழ்வாக அமைந்துள்ளது.

கட்டுக்கரை திட்டத்தின் கீழ் பயிரிடப்படும் நிலப்பரப்பு 15,578 ஏக்கரில் இருந்து 24,438 ஏக்கராக உயர்ந்துள்ளதுடன், அகத்திமுறிப்பு திட்டத்தின் கீழ் உள்ள நிலப்பரப்பும் 4,538 ஏக்கரில் இருந்து 5,794 ஏக்கராக அதிகரித்துள்ளது. மேல்நிலப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு வளங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டதாலும், பிரதான பாசனத் திட்டங்களில் கடுமையான நீர்முகாமைத்துவ நடைமுறைகள் பின்பற்றப்பட்டதாலும், இவ்விரு

திட்டங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவு நீர்வரத்து தற்போது இல்லை. இதன் விளைவாக, பெரும்போக சாகுபடியின் இறுதிக்கட்டங்களில் இரு திட்டங்களும் கடுமையான நீர்ப்பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன. சிறுபோக சாகுபடி மிகவும் குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுகிறது.

இதனால், பெரும்போக பருவத்தில் தொடர்ந்து ஏற்படும் பயிரிழப்புகளைத் தடுக்கும் நோக்கில், அருவி ஆற்றின் தென்பகுதியில் கல் ஆறு மற்றும் அகத்தி ஆறு நீர்த்தேக்கங்களை அமைத்து, அகத்திமுறிப்பு திட்டத்திற்கு மேலதிக நீர் வழங்கும் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அருவி ஆற்றிலிருந்து நீர் திறக்க இயலாத காலங்களில், இந்த நீர்த்தேக்கங்கள் அகத்திமுறிப்பு திட்டத்திற்கு துணை நீராதாரமாகச் செயல்படும். எனினும், இந்நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு அகத்திமுறிப்பு திட்டத்தின் முழு நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை. ஆகையால், இந்நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்ட பின்னரும், அருவி ஆற்றிலிருந்து குறைந்த அளவிலான நீர்விடுவிப்பு நடைமுறை தொடர வேண்டும்.

### 2.1.1.3 கல் ஆறு நீர்த்தேக்கம் - அகத்திமுறிப்பு திட்டத்திற்கு மேலதிக நீர் வழங்கும் திட்டம் 1

முன்மொழியப்பட்ட கல் ஆறு நீர்த்தேக்கம், கல் ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது. இதன் அமைவிடக் குறியீடு C/17 (7.70 x 3.60) ஆகும்.

கல் ஆறு நீர்த்தேக்கத் தளத்தை அடைய, முருங்கன்-சிலாவத்துறை-மறிச்சுக்கட்டி வீதியில் பயணித்து, கொண்டச்சி சந்தியில் இடதுபுறமாகத் திரும்பி கொண்டச்சி-பாய்மடு-அனுராதபுரம் வீதியூடாகச் செல்ல வேண்டும். கொண்டச்சி சந்தியிலிருந்து சுமார் 8 மைல் தொலைவில், பிரதான வீதிக் கட்டைவாய்க்கு (Causeway) மேற்பகுதியில், முன்மொழியப்பட்ட கல் ஆறு நீர்த்தேக்கத் தளம் அமைந்துள்ளது.

முன்மொழியப்பட்ட நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்பு பரப்பளவு 41.60 சதுர மைல்கள் ஆகும். ISO நீர்வரத்து வளைவின் (ISO Yield Curve) அடிப்படையில், ஒரு சதுர மைலுக்கு 300 ஏக்கர் அடி (Ac.ft.) நீர்வரத்துக் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி மொத்த (Gross) நீர்வரத்து 12,480 ஏக்கர் அடி ஆகும். இதில் 70 சதவீதம் பயனுள்ள நீர்வரத்தாகக் கணக்கிடப்படுவதால், பயனுள்ள நீர்வரத்து 8,736 ஏக்கர் அடியாக மதிப்பிடப்படுகிறது.

இந்த நீர்ப்பிடிப்பு பரப்பிலிருந்து கிடைக்கும் 8,736 ஏக்கர் அடி பயனுள்ள நீர்வரத்திலிருந்து 7,500 ஏக்கர் அடி நீரைச் சேமிக்கக்கூடிய வகையில், கல் ஆற்றின் குறுக்கே அணை அமைத்து நீர்த்தேக்கம் உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்தின் முழுமையான ஆய்வுகள் மற்றும் நிலஅளவீட்டுக் கணக்கெடுப்புகள் நிறைவடைந்த பின்னர், 7,500 ஏக்கர் அடி பயனுள்ள கொள்ளளவைப் பெறும் வகையில் முழுச் சேமிப்பு மட்டம் (F.S.L. - Full Supply Level) உயர்த்தப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

முன்மொழியப்பட்ட உள்வாய்க்கால்களிலிருந்து, தற்போது கைவிடப்பட்டுள்ள பழைய வாய்க்காலின் வழியாக சுமார் 1.5 மைல் தூரம் வரை புதிய வாய்க்கால் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர், மாவில்லு பகுதியின் மேல்பகுதியை ஒட்டியவாறு வாய்க்கால் தொடரும். அகத்தி ஆறு நீர்த்தேக்கப் பகுதியில் இருந்து அதிகப்படியான நீரை மாவில்லு பகுதிக்கு வெளியேற்றவும், தேவையான சமயங்களில் தேவையான அளவு நீரை வாய்க்காலுக்குள் திருப்பி விடவும் கட்டுப்பாட்டு அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

முன்மொழியப்பட்ட வாய்க்கால் மேலும் சுமார் 5 மைல்கள் நீளமாகத் தொடர்ந்த பின்னர், இரு கிளைகளாகப் பிரிக்கப்படும். அவற்றில் கட்டுப்பாட்டு அமைப்புகள் பொருத்தப்பட்டு, சோனகனெடுங்குளம் மற்றும் அகத்திமுறிப்பு குளங்களுக்கு நீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்படும். இவ்வாய்க்கால்களின் மொத்த நீளம் சுமார் 9.5 மைல்கள் ஆகும்.

### 2.1.1.4 அகத்தி ஆறு நீர்த்தேக்கம் - அகத்திமுறிப்பு திட்டத்திற்கு மேலதிக நீர் வழங்கும் திட்டம் 2

அகத்தி ஆறு நீர்த்தேக்கம், அகத்தி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளதுடன், அதன் அமைவிடக் குறியீடு C/17 (8.90 x 6.15) ஆகும்.

2,961 ஏக்கர் அடி பயனுள்ள நீர்வரத்திலிருந்து 2,100 ஏக்கர் அடி நீரைச் சேமிக்கக்கூடிய நீர்த்தேக்கம் உருவாக்க முன்மொழியப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்தின் முழுமையான ஆய்வுகள் மற்றும் நிலஅளவீட்டு கணக்கெடுப்புகள் நிறைவடைந்த பின்னர், 2,100 ஏக்கர் அடி பயனுள்ள கொள்ளளவைப் பெறும் வகையில் முழுச் சேமிப்பு மட்டம் (FSL - Full Supply Level) உயர்த்தப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்படுகிறது. மேலும், கல் ஆற்றிலிருந்து அகத்திமுறிப்பு திட்டத்திற்கான முன்மொழியப்பட்ட ஊட்ட வாய்க்காலின் (Feeder Channel) அடித்தள மட்டத்தைக் கருத்தில் கொண்டு, அணைக்கட்டின் அமைவிடம் கீழ்ப்பகுதிக்கு மாற்றப்பட வேண்டியிருக்கலாம்.

முன்மொழியப்பட்ட உள்வாய்க்கால்களிலிருந்து, அகத்திமுறிப்பு திட்டத்திற்கான ஊட்ட வாய்க்காலுடன் இணைக்கும் வகையில், தேவையான நீர்வீழ்ச்சிக் கட்டமைப்புகளுடன் (Drop Structures) சுமார் 0.7 மைல் நீளமுடைய நீரூட்டும் வாய்க்காலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட வேண்டும். முன்மொழியப்பட்ட நீர்த்தேக்கத் தளத்தில் அகத்தி ஆற்றின் படுக்கை மட்டம் உயரமாக இருந்தால், அதிகபட்ச நீரெடுப்பு (Maximum Drawoff) சாத்தியமாகும் வகையில் நீர்த்தேக்கத் தளம் கீழ்நோக்கி மாற்றப்படலாம்.

துருசின் அடித்தள மட்டம் (Sill Level), முழுச் சேமிப்பு மட்டம் (FSL) மற்றும் அணையின் மேற்பகுதி மட்டம் (BTL) ஆகியவை தற்காலிகமாக முறையே 100 அடி RL, 105 அடி RL மற்றும் 112 RL அடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளன. எனினும், முழுமையான ஆய்வுகள் மற்றும் நிலஅளவீட்டு கணக்கெடுப்புகள் நிறைவடைந்த பின்னர் இம்மட்டங்கள் மறுஆய்வு செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டியிருக்கலாம்.

### 2.1.1.5 பாவற்குளம்

வவுனியாவில் உள்ள மிகப்பெரிய குளங்களில் ஒன்றான பாவற்குளம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தொன்மையான நீர்ப்பாசனக் குளமாகக் கருதப்படுகிறது. கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்தது. கி.மு. 3ஆம் நூற்றாண்டில் நாக மன்னர்களால் கட்டப்பட்டது. குளத்தை அண்டிய பகுதிகளில் குருவித்தலைப் பாவற்கொடிகள் அதிகமாகக் காணப்பட்டபடியால் இந்தக் குளம் பாவற்காய்க்குளம் என அழைக்கப்பட்டது. காலப்போக்கில் பாவற்காய்க்குளம் என்பது பாவற்குளம் எனச் சுருங்கிவிட்டது. வன்னிப் பிரதேசத்தின் தென்பகுதி நதியான அருவியாற்றின் பிரதான கிளையாகிய கல்லாற்றை மலைப்பாங்கான இடத்தில் மறித்துக் கட்டி இரண்டு குளங்கள் உருவாக்கப்பட்டன. தற்போது இவற்றில் ஒன்று பாவற்குளம் என அழைக்கப்படுகிறது. இதனோடு ஒட்டியுள்ள மற்றைய குளம் உளுக்குளம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.



பாவற்குளம்

பாவற்குளத்துடன் தொடுக்கப்பட்டிருக்கும் உளுக்குளத்திற்கும் பாவற்குளத்து நீர் பாய்கின்றது. மிகப் பெரிய நீர்ப்பாசனத் திட்டமான பாவற்குளத்தின் அணைகளில் புராதன கலிங்குக் கற்களின் எச்சங்கள் காணப்படுகின்றன. கலிங்குகள் பொதுவாக வாயில் கொட்டுடன் கூடியவையாக இருக்கின்றன. அதாவது கணிசமான அளவு அகலமும் சிறிய தடிப்பமுடைய நீண்ட கல்துண்டங்கள் கலிங்கின் ஓரங்களில் போடப்பட்டு மிகவும் கவனமாகப் பொருத்தப்பட்டுள்ளன.

கல்வேலைப்பாட்டுக்குப் பின்னால் செங்கல் வேலை செய்யப்பட்டு ஆதாரம் அளிக்கப்படுகின்றது. வாயில் கொட்டுடன் கூடிய கலிங்குகள் ஐந்தை தற்போதும் காணக்கூடியதாக உள்ளது. மேலும் இதுவரை தனக்குத் தெரிந்த மட்டில் இலங்கைத்தீவிலுள்ள நான்குக்கும் மேற்பட்ட கலிங்குகளுடன் கூடிய ஒரேயொரு குளம் இது என திரு. பாக்கர் கூறுகிறார். கலிங்குகளில் புறநடையாக உள்ள ஒன்று தவிர ஏனையவை நன்னிலையில் உள்ளன. இலங்கையில் உள்ள குளங்களுள் பாவற்குளமே 4 கலிங்குகளைக் கொண்டிருப்பதாக ஜே.பி. லூயிஸ் குறிப்பிடுகின்றார். இக்குளத்தின் கலிங்குகள் இரண்டில் பயன்படுத்தப்பட்டிருந்த கட்டடக் கற்துண்டங்கள் (துருசுக் கற்கள்), பதவியாக் கலிங்கில் பயன்படுத்தப்பட்டிருந்தவற்றை விட மிகப் பழமையானவை. பதவியாக் கலிங்கு கி.பி. 3ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டது. பாவற்குளத்தின் கலிங்குகளை அமைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கும் செங்கற்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தவை என பாக்கர் குறிப்பிட்டுள்ளார்.

இக்குளம் பற்றி ஜே.பி. லூயிஸ் தனது Manual of Vanni District என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பாவற்குளத்தில் இரண்டு புராதன நீர்ப்பாசனக் கால்வாய் எச்சங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவை முறையே 3 மைல் மற்றும் 2¼ மைல் நீளத்தைக் கொண்டவையாக அமைந்துள்ளன. இக்குளம் சுமார் 2 மைல் நீளமான அணைகளைக் கொண்டுள்ளது. இந்த அணைகளின் உட்புறச் சரிவுகளில் அலைகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அலைகல் (RipRap) பாதுகாப்பு அடுக்குகள் பொதுவாக இடப்பட்டுள்ளன.

பல நூற்றாண்டுகளாக முறையாகப் பராமரிக்கப்படாததாலும், அணைக்கட்டில் ஏற்பட்ட உடைப்புகளாலும் இக்குளம் கைவிடப்பட்டுப் புதர்கள் மண்டிய நிலையை அடைந்தது. இதன் பின்னர், 1958 ஆம் ஆண்டில் இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம் இக்குளத்தைக் கண்டறிந்து, அதன் அணைக்கட்டைப் புனரமைத்து மீண்டும் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தது.

பாவற்குளம், அருவி ஆறு நீர்ப்பிடிப்பு மண்டலத்தின் கீழ் உள்ள கல் ஆறு மற்றும் கல்குண்டமடு ஆறு ஆகிய நீர்வழிகளிலிருந்து நீரைப் பெறுகிறது. இக்குளம் தற்போது 4,134 ஏக்கர் பரப்பளவிலான நெற்செய்கை மற்றும் பிற பயிர்ச்செய்கைகளுக்கு பாசன நீர் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 1,700 விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பயனடைந்து வருகின்றன.

வடக்கு மாகாணத்தின் வறண்ட வலயப் பகுதியில் அமைந்துள்ள பாவற்குளம், அப்பகுதியின் உணவுப் பாதுகாப்பு, விவசாய உற்பத்தி மற்றும் கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக மகா மற்றும் யாலா பருவங்களில் சாகுபடி நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதில் இக்குளத்தின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

பாவற்குளத்தில் உள்ள வான் 125 அடி நீளமும், 60 அடி அகலமும் உடையது. வான்கள் வழமையில் கலிங்குகளாகக் கட்டப்பட்டன. அதாவது தூண்கள் தொடராக அமைக்கப்பட்டதன் மூலம் சட்டக அமைப்பின் மீது அணை ஏற்படுத்தி நிர்மாணிக்கப்பட்டது. இதன் மூலம் ஏறத்தாழ 2 அடி ஆழத்துக்கு மேலதிக நீரைப் பிடித்து வைத்துக்கொள்ள முடிந்தது. பாவற்குளத்தில் இத்தகைய கலிங்கு ஒன்றைக் காணமுடியும்.

இத்தூண்கள் பருமனிலும் வடிவத்திலும் மிகவும் ஒழுங்கற்றவை. பெரிய தூணுக்கு முற்பக்கமாகச் சில அங்குலங்கள் விலகி 5 அல்லது 6 அடி உயரமுள்ள குறுகிய தூண் உள்ளது. இச்சிறிய தூண்களின் நிரை, வான் பாயும் நீருக்குச் சற்று முன்பக்கமாக குளக்கட்டின் மத்திய கோட்டின் வழியே குளப்பக்கமாக அமைந்துள்ளது. இச்சிறு தூண்களிடையே தடிகளும் மண்ணும் கொண்டு தற்காலிக அணை ஒன்று எழுப்பப்பட்டிருக்கும். வடகிழக்குப் பருவமழைக் காலத்தின் இறுதியில் மேலதிக நீரைச் சேமித்து வைக்க வேண்டிய தேவையின் போது, இத்தகைய உயர்ந்த தூண்களுக்கு இடையே அணை ஏற்படுத்தப்பட்டு நீர் தேக்கி வைக்கப்படும். அதி உயரமான தூண்கள் எவ்விதப் பயன்பாடும் அற்றனவாக உள்ளன. சிலவேளை கலிங்கை மூடி வெள்ளம் பாயும்போது பாதசாரிகளால் இது தற்காலிக அடிப்பாலத்தின் இறங்குதுறையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது எனலாம். இதன் மூலம் பயணிகள் எப்போதாவது வான் நீருக்கு மேலாகப் பாயும் வெள்ளத்தைக் கடந்து செல்லக்கூடியதாயுள்ளது.

குளத்தின் அணைக்கட்டுப் பகுதியில் முன்னொரு காலத்தில் உயரமான பாறையில் அமைந்திருந்த சிறிய சிதைவுகளும், மலர்களைத் தூவி வழிபடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பெரிய பீடம் ஒன்றும் காணப்பட்டது. இப்பீடம் இப்போது 'அரச ஆசனம்' எனப்படுகிறது. இப்பீடம் பற்றித் திரு. பாக்கர் கூறுவதாவது: "இப்பீடத்திலிருந்து குளத்தினதும், அதன் தளத்தினதும் ஒரு பகுதியையும் மிக நன்கு தரிசிக்க முடியும். இவ்வாறே எதிர்த்திசையிலிருந்தும் தரிசிக்கலாம். தமிழ் ஆட்சியாளர் ஒருவரின் ஆணைக்கமைய தற்போதைய இடத்தில் இப்பீடம் வைக்கப்பட்டிருக்கலாம்."

ஐந்துதலை நாகபாம்பை வழிபட்ட நாகர்களின் கற்பனை திறனில் உருவாகிய பல சிற்ப வடிவங்கள் இருக்கின்றன. ஐந்துதலை நாகம் என்பது கற்பனை வடிவமா என்பது ஆய்வுக்குரிய விடயமாகும். அந்தவகையில் நீர்ப்பாசனத்திற்கு பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து குளங்களைக் கட்டுவதில் தலைசிறந்தவர்களான நாகர்கள், தங்களது காவல் தெய்வமான ஐந்துதலை நாக உருவங்களை கருங்கற்களில் பொறித்து குளக்கட்டுகளில் வைத்து வழிபட்டுள்ளமைக்கு ஆதாரமாக பல இடங்களில் ஐந்துதலை நாகச்சிலைகள் உள்ளன. இவை பாவற்குளத்திலும் உண்டு.



*கருங்கல்லில் ஐந்து தலை நாக பாம்பின் சிற்பம்*

இக்குளத்தின் அணைக்கட்டில் காணப்படும் பெரிய கருங்கல்லில் ஐந்து தலை நாக பாம்பின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. குளக்கட்டில் தனிக்கல்லில் பொறிக்கப்பட்ட நாகச்சிலை தற்போது குளக்கட்டின் துருசு மேல் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இதைப் போன்ற சிற்பத்துடன் கூடிய கல் ஒன்று செட்டிகுளம் பிரதேசத்தில் உள்ள மதுவைத்தகுளம் அணைக்கட்டில் இருக்கிறது. இக்குளங்கள் நாக மன்னர்களால் ஒரே காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம். இந்த நீர்த்தேக்கம் யாரால் எக்காலத்தில் கட்டப்பட்டது என்பது பற்றி இதுவரை எந்தத் தகவலும் இல்லை. ஆனால் நிச்சயமாக இக்குளம் பற்றி பழைய வரலாற்றுக் குறிப்புகளில் இடம்பெற்றிருக்க வேண்டும். அப்பழைய பெயரை அறிந்தால் மட்டுமே இக்குளம் பற்றி மேலும் பல சுவாரசியமான தகவல்களைப் பெற முடியும்.

ஆறுமுகம் (1969) குறிப்பிட்டதன்படி, பாவற்குளத்தின் அணைக்கட்டு சுமார் 2 மைல் நீளமுடையதாக

இருந்தது. 1960களின் இறுதிப் பகுதியில் இக்குளம் சுமார் 27,000 ஏக்கர் அடி நீரைத் தாங்கக்கூடிய சேமிப்புக் கொள்ளளவைக் கொண்டிருந்ததுடன், முழுச் சேமிப்பு மட்டத்தில் (Full Supply Level) நீர் பரவிய பரப்பளவு சுமார் 3,000 ஏக்கராகக் காணப்பட்டது. இக்குளத்தின் நீர்ப்பிடிப்பு பரப்பளவு சுமார் 115 சதுர மைல்கள் ஆகும்.

பாவற்குளம், வடக்கு வறண்ட வலயப் பகுதியில் அமைந்துள்ள முக்கியமான நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாக விளங்குகிறது. பரந்த நீர்ப்பிடிப்பு பரப்பும் அதிக நீர்தாங்கு கொள்ளளவும் காரணமாக, இக்குளம் விவசாய உற்பத்தி மற்றும் நீர்வள முகாமைத்துவத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. குறிப்பாக பருவ மழைநீரைச் சேமித்து, கீழ்நிலப் பகுதிகளில் உள்ள வயல்வெளிகளுக்கு திட்டமிட்ட முறையில் பாசன நீர் வழங்கும் திறனை இக்குளம் கொண்டிருந்தது.

**Hydro data of Pavatkulam**

| Catchment Area | 115 sq.mls. |
|---|---|
| Acreage | 4,134 acres. |
| Capacity | 27,000 ac. ft |
| Full supply level | 233.5′ MSL |
| High flood level | 237.5′ MSL |
| Length of bund | 1.95 miles |
| Bund Top Level | 243′ MSL |
| Top Width | 14 ft. |
| Location of spill | LB |
| Crest level of spill | 233.5′ MSL |
| Sluice Type | Tower |
| Size of opening | LB -3.5ft dia & RB – 4.75x4ft |

| Location of Spill | Center spill | | |
|---|---|---|---|
| Type | C.O | Rock face | High flood wall |
| Level (ft above MSL) | 233.5 | 233.5 | 237.5 |
| Length (ft.) | 299 | 250.5 | 742.5 |
| Number of gate | 0 | 0 | 0 |
| Location of Spill | RB | | |
| Type | C.O | Rock face | Radial Gate |
| Level (ft above MSL) | 233.5 | 233.5 | 223.5 |
| Length (ft.) | 365 | 145 | 223 |
| Number of gate | 0 | 0 | 4 nos |

தற்போது பாவற்குளத்தில் ஒரு தாண்டு (Spill) மற்றும் இரண்டு தலைவாய்கள் (Sluices) அமைந்துள்ளன.

இத்தலைவாய்கள் மூலம் குளத்தில் சேமிக்கப்படும் நீர் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் வெளியேற்றப்பட்டு, கீழ்ப்பகுதிகளில் உள்ள நெற்செய்கை மற்றும் பிற பயிர்ச்செய்கைகளுக்கு பாசனநீர் வழங்கப்படுகின்றது. மேலும், தாண்டு அமைப்பு அதிகப்படியான வெள்ள நீரைப் பாதுகாப்பாக வெளியேற்றுவதன் மூலம் அணைக்கட்டின் பாதுகாப்பையும் நீர்த்தேக்கத்தின் நிலைத்தன்மையையும் உறுதிப்படுத்துகிறது.

### 2.1.1.6 இரட்டைப் பெரியகுளம்

இரட்டைப் பெரியகுளம், கல் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள முக்கியமான நீர்ப்பாசனக் குளம். இக்குளம் 3,534 ஏக்கர் அடி (Acre Feet) கொள்ளளவை உடையதாகும். இது இடது கரை, வலது கரை மற்றும் மத்திய ஒழுக்கு வாயில்களைக் கொண்ட வழக்கமான மண் அணைக்கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வலது கரையின் இறுதிப்பகுதியில் தெளிவான மேல்வெளிப்பு (Clear Overflow) அமைப்புடனும் இயற்கை வெள்ளப்பாய்வு வசதியுடனும் கூடிய உபரி நீர்பாய்ச்சி (Spillway) அமைக்கப்பட்டுள்ளது. மேலும், அணைக்கட்டு இயற்கையாகக் காணப்படும் பாறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட வகையில் அமைந்துள்ளதால், அதன் நிலைத்தன்மையும் பாதுகாப்பும் வலுப்பெற்றுள்ளன.

**Hydro data of Irataiperiyakulam**

| Catchment Area | 12.24 sq.mls. |
|---|---|
| Acreage | 550 acres. |
| Capacity | 3533 ac. Ft |
| Full supply level | 115.4′ MSL |
| High flood level | 118′ MSL |
| Length of bund | 5320 ft. |
| Bund Top Level | 121′ MSL |
| Top Width | 11 ft. |
| Crest level of spill | LB 115.4′ MSL |
| Type of spill | C.O -.LB & RB |
| Length of spill | LB - 100ft & RB -150ft. |
| Tower Sluice Size of opening | LB - 1ft dia, Center – 1.5ft dia & RB – 0.75ftdia |

இக்குளத்தின் கீழ் மொத்தமாக சுமார் 550 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தற்போது சுமார் 340 விவசாயக் குடும்பங்கள் இக்குளத்தின் மூலம் பெரும்போக மற்றும் சிறுபோகப் பருவங்களில் நெல் செய்கையில் ஈடுபட்டு வாழ்வாதார நன்மைகளைப் பெற்று வருகின்றன. இதன் மூலம் பிராந்திய வேளாண் உற்பத்தி மேம்படுவதோடு, கிராமப்புற மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இக்குளம் முக்கிய பங்காற்றுகிறது.

வரலாற்றுப் பின்னணியில், இக்குளம் 1886 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டதுடன், பின்னர் 1995 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப்புனரமைப்பு நடவடிக்கைகள் மூலம் குளத்தின் நீர்த்தேக்க திறன், அணைக்கட்டின் பாதுகாப்பு மற்றும் பாசன செயல்திறன் ஆகியவை மேம்படுத்தப்பட்டுள்ளன. இதனால், இரட்டைப் பெரியகுளம் இப்பகுதியின் நிலையான நீர்வள முகாமைத்துவத்திற்கும் வேளாண் வளர்ச்சிக்கும் ஆதாரமான பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்பாகத் திகழ்கிறது.

### 2.1.1.7 முகத்தான் குளம்

முகத்தான் குளம் என்பது வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து பெறப்படும் நீராலும், மருதமடுக் குளத்தின் உபரி நீராலும் ஊட்டமளிக்கப்படும் முக்கியமான நீர்ப்பாசனக் குளமாகும். இக்குளம் வவுனியா மாவட்டத்தின் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முகத்தான் குளம் பகுதியில் அமைந்துள்ளது.

**Hydro data of Muhathankulam**

| | |
|---|---|
| Catchment Area | 34 sq.mls. |
| Acreage | 774 acres. |
| Capacity | 2,400 ac. Ft |
| Full supply level | 174' MSL |
| High flood level | 177.25' MSL |
| Length | 1.13 miles |
| Bund Top Level | 180.5' MSL |
| Top Width | 9 ft. |
| Location of spill | RB |
| Crest level of spill | 174' MSL |
| Length of C.O. spill | 630 ft. |
| Tower Sluice Size of opening | 2ft dia |

இக்குளம் அப்பகுதியின் பாரம்பரிய புவியீர்ப்பு நீர்ப்பாசன (Gravity Irrigation) அமைப்புகளில் ஒன்றாக விளங்கி, விவசாய நடவடிக்கைகளுக்கு அத்தியாவசியமான நீர்வள ஆதாரமாகச் செயல்படுகிறது. குறிப்பாக மழைக்காலங்களில் சேமிக்கப்படும் நீர், பெரும்போக மற்றும் சிறுபோகப் பருவங்களில் நெல் மற்றும் பிற பயிர்ச் செய்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவதால், உள்ளூர் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கிறது.

மருதமடுக் குளத்தின் உபரி நீரைப் பெறும் தன்மையால், முகத்தான் குளம் பருவமழை மாற்றங்களின் போதும் ஒரு நிலையான நீர்வளத்தைப் பேணும் திறன் கொண்டதாகக் கருதப்படுகிறது. மேலும், இக்குளம் நிலத்தடி நீர் மீள்சேர்க்கை, சுற்றுச்சூழல் சமநிலைப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புற சமூகங்களின் சமூக-பொருளாதார முன்னேற்றம் ஆகியவற்றிலும் முக்கிய பங்காற்றுகிறது. இதனால், முகத்தான் குளம் பிராந்தியத்தின் நிலையான வேளாண் வளர்ச்சிக்கும் நீர்வள முகாமைத்துவத்திற்கும் ஆதாரமான பாரம்பரிய நீர்ப்பாசன வளமாகக் காணப்படுகிறது.

### 2.1.1.8 மருதமடுக் குளம்

மருதமடுக் குளம் நறுவிலி ஆற்றின் நீரால் ஊட்டமளிக்கப்படும் முக்கியமான நீர்ப்பாசனக் குளமாகும். இக்குளம் வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மருதமடுப் பகுதியில் அமைந்துள்ளது. பிராந்தியத்தின் பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்புகளில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ள இக்குளம், அப்பகுதி வேளாண் செயற்பாடுகளுக்கு அத்தியாவசியமான நீர்வள ஆதாரமாக விளங்குகிறது.

இக்குளத்தின் கீழ் சுமார் 438 ஏக்கர் பரப்பளவிலான நெல் மற்றும் பிற பயிர்ச் செய்கைகளுக்கு (OFC) பாசன நீர் வழங்கப்படுகிறது. இதன் மூலம் பெரும்போக மற்றும் சிறுபோகப் பருவங்களில் விவசாய உற்பத்தி மேம்படுவதோடு, பல விவசாயக் குடும்பங்களின் வாழ்வாதாரமும் உறுதிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, நெல் செய்கையுடன் இணைந்து பலவகை துணைப் பயிர்ச் செய்கைகளும் (Cash Crops) மேற்கொள்ளப்படுவதால், உள்ளூர் உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்கும் இக்குளம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகிறது.

**Hydro data of Maruthamadu Kulam**

| | |
|---|---|
| Catchment Area | 14.6 sq.mls. |
| Acreage | 438 acres. |
| Capacity | 1499 ac. Ft |
| Full supply level | 112.5' M.SL |
| High flood level | 114' MSL |
| Length | 0.625 miles |
| Bund Top Level | 116' MSL |
| Top Width | 5 ft. |
| Location of spill | LB |
| Crest level of spill | 112.5' MSL |
| Length of C.O. spill | LB - 100 ft. & RB – 150ft. |
| Sluice Type | Tower |
| Size of opening | LB -0.75ft dia, Center – 1ft dia. and RB – 0.75ft di |

மருதமடுக் குளத்தின் நீர்ப்பிடிப்பு பரப்பளவு சுமார் 14.6 சதுர மைல்கள் ஆகும். இப்பரந்த நீர்ப்பிடிப்பு பகுதி மழைநீரைச் சேகரித்து குளத்திற்குள் கொண்டுவருவதன் மூலம், ஆண்டு முழுவதும் நீர்வள நிலைத்தன்மையைப் பேண உதவுகிறது. மேலும், இக்குளத்தின் மொத்த நீர்த்தேக்க கொள்ளளவு 1,500 ஏக்கர் அடி (Acre Feet) ஆகும். இந்த நீர்த்தேக்கத் திறன், பருவமழைக் காலங்களில் சேமிக்கப்படும் நீரை வறட்சிக் காலங்களில் திறம்பட பயன்படுத்துவதற்கு வழிவகுக்கிறது.

இக்குளம் விவசாயத் தேவைகளை நிறைவேற்றுவதோடு மட்டுமல்லாமல், நிலத்தடி நீர் மீள்சேர்க்கை, சுற்றுச்சூழல் சமநிலைப் பாதுகாப்பு மற்றும் உள்ளூர் உயிரியல் அமைப்புகளின் நிலைத்தன்மை ஆகியவற்றிலும் முக்கிய பங்காற்றுகிறது. இதனால், மருதமடுக் குளம் வவுனியா பிராந்தியத்தின் நிலையான நீர்வள முகாமைத்துவத்திற்கும் வேளாண் முன்னேற்றத்திற்கும் ஆதாரமான பாரம்பரிய நீர்ப்பாசன வளமாகக் கருதப்படுகிறது.

### 2.1.1.9 இராஜேந்திரன் குளம்

இராஜேந்திரன் குளம் என்பது தனது சொந்த நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து நீரைப் பெறும் முக்கியமான பாரம்பரிய நீர்ப்பாசனக் குளமாகும். இக்குளம் வவுனியா மாவட்டத்தின் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட இராஜேந்திரன் குளம் கிராமத்தில் அமைந்துள்ளது. அப்பகுதியின் வேளாண் நடவடிக்கைகளுக்கு ஆதாரமாக விளங்கும் இக்குளம், கிராமப்புற மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றுகிறது.

Hydro data of Rajendrankulam

| Catchment Area | 2.4 sq.mls. |
|---|---|
| Acreage | 295 acres. |
| Capacity | 849 ac. Ft |
| Full supply level | 174' MSL |
| High flood level | 177.25' MSL |
| Length | 0.61 miles |
| Bund Top Level | 273.5' MSL |
| Top Width | 8 ft. |
| Location, Crest level of spill | RB 174' MSL |
| Length of C.O spill | 110 ft. |
| Sluice Type | Tower |
| Size of opening | LB & RB – 9" dia |

இக்குளத்தின் மூலம் சுமார் 295 ஏக்கர் பரப்பளவிலான நெல் மற்றும் பிற வயல் பயிர்ச் (Other Field Crops) செய்கைகளுக்கு பாசன நீர் வழங்கப்படுகிறது.

இதன் காரணமாக பெரும்போக மற்றும் சிறுபோகப் பருவங்களில் விவசாய உற்பத்தி நிலைத்தன்மையுடன் முன்னெடுக்கப்படுவதோடு, உள்ளூர் விவசாயக் குடும்பங்களின் பொருளாதார நிலையும் மேம்படுகிறது. நெல் செய்கைக்கு அப்பாற்பட்ட பல்வேறு துணைப் பயிர்களும் இக்குளத்தின் நீர்வளத்தை அடிப்படையாகக் கொண்டு பயிரிடப்படுகின்றன.

இராஜேந்திரன் குளத்தின் நீர்ப்பிடிப்பு பரப்பளவு சுமார் 2.40 சதுர மைல்கள் ஆகும். இந்த நீர்ப்பிடிப்பு பகுதி மழைநீரைச் சேமித்து குளத்திற்கு வழங்குவதன் மூலம், பருவகால நீர்வள தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

மேலும், இக்குளத்தின் மொத்த நீர்த்தேக்க கொள்ளளவு 850 ஏக்கர் அடி (Acre Feet) ஆகும். இந்நீர்த்தேக்க திறன், வறட்சிக் காலங்களிலும் விவசாயத் தேவைகளுக்கான நீர் விநியோகத்தை ஓரளவு நிலைநிறுத்த உதவுகிறது

இக்குளம் வேளாண் உற்பத்திக்கான ஆதாரமாக மட்டுமன்றி, நிலத்தடி நீர் மீள்சேர்க்கை, சுற்றுச்சூழல் சமநிலைப் பாதுகாப்பு மற்றும் உள்ளூர் உயிரியல் அமைப்புகளின் நிலைத்தன்மை ஆகியவற்றிலும் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது. இதனால், இராஜேந்திரன் குளம் வவுனியா பிராந்தியத்தின் நிலையான நீர்வள முகாமைத்துவத்திற்கும் பாரம்பரிய வேளாண் மரபைப் பாதுகாப்பதற்கும் முக்கியத்துவம் வாய்ந்த நீர்ப்பாசன வளமாகக் கருதப்படுகிறது.

## 2.2 மோதரகம ஆற்றுப்படுகை



### 2.2.1 மோதரகம அணைக்கட்டு மற்றும் வியாடிக்குளம் திட்டம்

மோதரகம அணைக்கட்டு மற்றும் வியாடிக்குளம் திட்டம் C/22 (4.50 x 5.70) அமைவிடக் குறியீட்டில் அமைந்துள்ளது. இது முசலி பிரதேச செயலாளர் பிரிவிலும் முருங்கன் பாசன பொறியியலாளர் பிரிவிலும் அமைந்துள்ள ஒரு முக்கிய பாசனத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் மொத்தமாக 1,223 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படுவதுடன், சுமார் 421 விவசாயக் குடும்பங்கள் இதன் மூலம் நேரடியாகப் பயனடைந்து வருகின்றன.

மோதரகம அணைக்கட்டுத் திட்டம், பொதுவாக "வியாடிக்குளம் திட்டம்" என அழைக்கப்படுகிறது. இந்தத் திட்டம் முசலி பிரதேசத்தில் உள்ள சிறுபாசன மற்றும் கிராமப்புற விவசாய அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றும் பாசன அமைப்பாகும். மோதரகம ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மோதரகம அணைக்கட்டு, சுமார் 640 அடி நீளமுடையதாகும். இதில் 42 அங்குல விட்டம் கொண்ட மூன்று கோபுர வடிவ துருசுகள் (Tower Sluices) அமைக்கப்பட்டுள்ளன.

அணைக்கட்டிலிருந்து தொடங்கும் உள்வாய்க்கால் சுமார் 5 மைல் 3 செயின் (Chains) நீளமுடையதாகக் காணப்படுவதுடன், அதன் வழித்தடத்தில் பல வடிகால் கடப்புகள் (Drainage Crossings) அமைக்கப்பட்டுள்ளன. இந்த உள்வாய்க்கால் மூலம் மோதரகம அணைக்கட்டிலிருந்து வியாடிக்குளம் நீர்த்தேக்கத்திற்கு நீர் மாற்றி வழங்கப்படுகிறது. பின்னர், வியாடிக்குளத்தின் துருசு ஊடாக அதன் கீழ் அமைந்துள்ள பிற சிறிய குளங்களுக்கு நீர் விநியோகிக்கப்படுகிறது.

வியாடிக்குளம் அணையின் மண் அணை (Embankment) சுமார் 1 மைல் 33 செயின் நீளமுடையதாகும். இக்குளத்தின் நீர்த் தாங்கு கொள்ளளவு சுமார் 840 ஏக்கர் அடி (Ac.ft.) ஆகும். மேலும், இடதுகரை வான் (LB Spill) சுமார் 500 அடி நீளத்தில் அமைந்துள்ளது.

**Hydro data of Viyadekulam**

| | |
|---|---|
| Catchment Area | 3.5 sq.mls. + inflow from inlet canal |
| Acreage | 1,223 acres. |
| Capacity | 1,760 ac. ft |
| Full supply level | 59.2' M.SL |
| High flood level | 59.8' MSL |
| Length of bund | 2.15 Miles |
| Bund Top Level | 62.3' MSL |
| Top Width | 12-15 ft. |
| Location of spill | RB |
| Crest level of spill | 59.2' MSL |
| Type of spill | C.O. |
| Length of spill | 500 ft. |
| Sluice Type | Tower |
| Size of opening | 6x4ft – 2nos |

இந்தத் திட்டம், முசலி பிரதேசத்தில் உள்ள பல சிறு குளங்களுக்கும் அவற்றின் கீழ் உள்ள வயல்வெளிகளுக்கும் பாசனநீர் வழங்கும் ஒருங்கிணைந்த பாசன அமைப்பாக விளங்குகிறது.

குறிப்பாக மழைப்பொழிவு குறைவாகக் காணப்படும் காலங்களில், இத்திட்டம் விவசாய உற்பத்தியை நிலைநிறுத்துவதில் முக்கிய பங்களிப்பை வழங்குகிறது.

வியாடிக்குளம் திட்டத்தின் கீழ் உள்ள சிறுகுளங்கள் மற்றும் சாகுபடிப் பரப்பளவுகள்:

1. ஆத்திக்குளி - 105 ஏக்கர்
2. பாலைக்குளி - 195 ஏக்கர்
3. மறிச்சுக்கட்டி - 250 ஏக்கர்
4. புளியங்குளம் - 260 ஏக்கர்
5. கோரைமோட்டை - 80 ஏக்கர்
6. கரடிக்குளி - 85 ஏக்கர்

மேற்கண்ட குளங்களின கீழ் மொத்தமாக 1,223 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி மேற்கொள்ளப்படுவதுடன், சுமார் 421 விவசாயக் குடும்பங்கள் இத்திட்டத்தின் மூலம் நேரடியாகப் பயனடைகின்றன.

இதனால், மோதரகம அணைக்கட்டு மற்றும் வியாடிக்குளம் திட்டம் முசலி பிரதேசத்தின் கிராமப்புற வாழ்வாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகிறது.

(தொடரும்)

# மலையக நாட்டுப்புற வாழ்வியலில் அம்மை நோய் தொடர்பான சடங்கு

கப்டன் ஹென்றி பேர்ட் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிச் செய்கையோடு மலையக மக்களின் வாய்மொழிப் பாடல் வரலாறு ஆரம்பிக்கின்றது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக ஆங்கிலேயரின் பூரண கட்டுப்பாட்டில், அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்டு, கடுமையான உழைப்புச் சுரண்டலுக்கு உட்பட்டு இம்மக்கள் வாழ்ந்தமையால், உலகில் உள்ள நாட்டுப்புறப் பாடல்களில் இருந்து இவர்களின் பாடல்கள் தனித்துவம் பெறுகின்றன. இத்தகைய இருள் சூழ்ந்த வாழ்வியலுக்குள் சிக்கிய மக்களின் வரலாறு, துன்பம், துயரம் ஆகியவற்றை இவர்களின் வாய்மொழிப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இன்று, மலையக மக்களின் 200 வருடகாலப் பண்பாட்டைத் தீர்மானிக்கும் முக்கிய கூறுகளாகவும் இவை திகழ்கின்றன. அந்தவகையில், மலையக மக்களின் வரலாற்றையும் வாழ்வியலையும் அவர்களது வாய்மொழிப்பாடல்கள் வழியாகப் புரிந்துகொள்ளும் நோக்குடன் எழுதப்படுவதாக, 'மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் பேசும் வாழ்வியல்' எனும் இத்தொடர் அமைகின்றது.




**வேலாயுதம் இராமர்**

வேலாயுதம் இராமர், கொ.புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரில் ஆசிரியராக பணியாற்றி வருகின்றார். கவிஞர், நாடகம், திரைப்பட நடிகர், மலையக நாட்டார் இலக்கிய செயற்பாட்டாளர் என பல்துறைசார்ந்து செயற்படுவதோடு மலையக கூத்து தொடர்பாகவும் செயற்பட்டு வருகின்றார்.

மனிதனுடைய ஒட்டுமொத்த சமூக வாழ்க்கையானது பலவகையான நிகழ்வுகளால் ஊடுருவப்பட்ட வலைப்பின்னலாக அமைந்துள்ளது. இந்நிலையில், அதன் பல்வேறு தாக்கங்களை வெளிப்படுத்தும் சமூக நடத்தைகளையும் கலை-இலக்கியங்களையும், அவற்றின் உட்சிக்கல் தன்மைக்கு ஏற்ப களஆய்வுக்கு உட்படுத்தி ஆராய்வது இன்றியமையாததாகும். எனவே, மலையக மக்களின் கலை மற்றும் சமூக அசைவியக்கங்களின் கருத்தாக்கங்களை ஆராய்வதற்கு பல்வேறு கோட்பாடுகளையும் கருத்தாக்கங்களையும் நமது தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்வது அவசியமாகிறது. இந்தக் கோட்பாடுகள் வெவ்வேறான இயல்புகளைக் கொண்டிருந்தாலும், அவற்றுக்கிடையிலான மாறுபாடுகளைக் காட்டிலும், ஓர் ஆய்வுப் பொருளைத் துல்லியமாகப் புரிந்துகொள்வதற்கும் விளக்குவதற்கும் அவை எந்தளவிற்குப் பயன்படுகின்றன என்பதைக் கவனிப்பதே மிக முக்கியமானதாகும்.

உழைக்கும் மக்களாகிய மலையக மக்களின் வாய்மொழி மரபுகளையும் அவற்றின் உள்ளார்ந்த பண்புகளையும் அறிந்துகொள்வதற்கு அவர்களது வாழ்வியல் முறையே முக்கிய ஆதாரமாகத் திகழ்கிறது. இந்நிலையில், மலையக வாய்மொழிப் பாடல்கள், வழிபாட்டு முறைகள், சமய வழக்காறுகள் மற்றும் சடங்குகள் போன்றவற்றை, அவற்றை உருவாக்கிய மக்களின் வாழ்வியல் பின்னணியுடன் இணைத்துப் புரிந்துகொள்வது எவ்வாறு சாத்தியமாகிறது என்பதைக் கருத்தில் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது. குறிப்பாக, மலையக மக்களின் வாழ்க்கை முறையில் அம்மன் வழிபாட்டோடு தொடர்புடைய அம்மை நோய் பற்றிய நம்பிக்கைகளையும், அதனுடன் இணைந்துள்ள சடங்காசாரங்களையும் விளக்குவதே இதன் நோக்கமாகும்.

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதால், தென்னிந்தியக் கலை, கலாசாரம் மற்றும் வழிபாட்டு மரபுகள் அவர்களது வாழ்வோடும் உணர்வோடும் இரண்டறக் கலந்தவையாகக் காணப்படுகின்றன. அவர்கள் இலங்கைக்கு வந்த காலத்தில் அடர்ந்த காடுகள், நோய்கள், அச்சங்கள் மற்றும் பல்வேறு இன்னல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக அம்மனை வழிபடும் முறையைப் பின்பற்றினர். இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறிய பின்னர், அம்மனுக்கு ஆலயங்களை அமைத்து வழிபடும் மரபை தொடர்ந்து பேணிவந்தனர். இந்த நிலையில், மாரியம்மன் தம்மீது கொண்ட அன்பும் விருப்பமும் காரணமாகவே அம்மை நோய் தமக்கு ஏற்படுகின்றது என அவர்கள் நம்பினர். எனவே, நோயின் தாக்கத்தால் அவர்கள் மனமுடைந்து போகவில்லை. மாறாக, அம்மனின் அருளாலும் கருணையாலும் இது தமக்கு ஏற்பட்டதாகக் கருதி, முழு நம்பிக்கையுடன் அதனை ஏற்றுக்கொண்டனர். இதனால், அம்மை நோயுடன் தொடர்புடைய நடைமுறைகள் தெய்வீகச் சடங்குகளாகக் கருதப்பட்டு தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன.

லயத்து வாழ்க்கை மிகவும் நெருக்கமான சமூக அமைப்பைக் கொண்டிருந்ததால், ஒருவருக்கு அம்மை நோய் ஏற்பட்டால் அது விரைவாக மற்றவர்களுக்கும் பரவக்கூடிய வாய்ப்பு இருந்தது. இருப்பினும், அதனை அவர்கள் மருத்துவ ரீதியான நோயாக மட்டும் கருதவில்லை. மாறாக, அதன்மூலம் மாரியம்மன் உடலிலும் உள்ளத்திலும் குடிகொண்டிருப்பதாக நம்பினர்.

அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் முதலில் தனிமைப்படுத்தப்படுவர். அவர்களைச் சுற்றி வேப்பிலை, பொன்னாவரை போன்ற இலைகள் வைக்கப்படும். மஞ்சள் கலந்த நீரே குடிப்பதற்கும் முகம் கழுவுவதற்கும் வழங்கப்படும். மஞ்சளும் வேப்பிலையும் அம்மனுக்கு உகந்தவை என்ற நம்பிக்கை இன்றும் இவர்களிடையே நிலவுகிறது.

நோய் ஏற்பட்ட மூன்றாவது நாளுக்குப் பின்னர் தலைக்கு நீர் ஊற்றும் சடங்கு நடைபெறும். இதில் ஒரு பெரிய குடமும் இரண்டு சிறிய குடங்களும் பயன்படுத்தப்படுகின்றன. அதிகாலையில் யாரும் பார்க்காத நேரத்தில் இந்த நீர் தலைக்கு ஊற்றப்படும். பின்னர் சூடம் ஏற்றி இறக்கி, புதிய வேட்டி விரித்து அதில் நோயாளியை அமர வைப்பர். இந்நிகழ்வு மிகுந்த பயபக்தியுடன் மேற்கொள்ளப்படும் ஒரு சம்பிரதாயமாகக் கருதப்படுகிறது.

ஒருவருக்கு அம்மை நோய் பீடித்திருக்கும் காலப்பகுதியில் வீட்டில் சைவ உணவு மட்டுமே சமைக்கப்படும். "அம்மியில் எந்தப் பொருளும் அரைக்கப்படாது", "அம்மி தட்டக்கூடாது" என்பது ஒரு முக்கிய நம்பிக்கையாகும். அதேபோல், "எண்ணெய்ச் சட்டி வைக்கக் கூடாது", "கறி வகைகள் தாளிக்கப்படக் கூடாது" எனும் நம்பிக்கைகளும் காணப்படுகின்றன. வெளிநபர்கள் வீட்டிற்குள் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். வீட்டிலிருந்து வெளியே சென்றவர்கள் விளக்கு வைக்கும் நேரத்திற்கு முன்பாகவே வீடு திரும்ப வேண்டும். இவ்வாறான

கடுமையான கட்டுப்பாடுகள் இன்றளவும் சில இடங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

மேலும், அம்மை "விளையாடும்" காலத்தில் வாழை இலையிலேயே உணவு பரிமாறப்படும். வீட்டில் பயன்படும் எந்தப் பொருளையும் நோயாளி தொடக்கூடாது. அவரை வேலை செய்ய வைக்கவும் கூடாது. அவருக்குத் தேவையான இளநீரும் ஆனை வாழைப்பழமும் வழங்கப்படும். குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், அயலவர்கள் கூட இந்நடைமுறைகளுக்கு மதிப்பளித்து அதே ஒழுங்குகளைப் பின்பற்றுவார்கள்.

இந்தக் காலப்பகுதியில், அம்மனின் மனமகிழ்ச்சிக்காக மாரியம்மன் தாலாட்டு பாடுவது ஒரு முக்கியமான பண்பாட்டு நடைமுறையாகக் கருதப்படுகிறது. அம்மையின் தீவிரத்திற்கேற்ப இந்தத் தாலாட்டு ஐந்து நாட்கள், ஏழு நாட்கள் அல்லது ஒன்பது நாட்கள் வரை பாடப்படும். தாலாட்டைப் பாடுபவர் உடல் மற்றும் மனத் தூய்மையுடன் இருந்து, அம்மை நோயால் பாதிக்கப்பட்டவருக்கு நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கும் வகையில் பாடுவார். இதன்போது குடும்ப உறுப்பினர்களில் ஒருவர் சூடம் ஏற்றிக் காட்டி, மாரியம்மனைச் சாந்தப்படுத்தும் வழிபாட்டையும் மேற்கொள்வார்.

*"மாரி மகமாயி மணி மந்திர சேகரியே*

*ஆயி உமையவளே ஆதி சிவன் தேவியரே*

*மாரித்தாய் வள்ளியே மகாராணி வாருமம்மா*

*மாயன் சகோதரியே மாரிமுத்து வாருமம்மா*

*ஆயன் சகோதரியே ஆஸ்தான மாரிமுத்து*

*தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா"*

*"திக்கெல்லாம் போற்றும் எக்காலத் தேவியரே*

*எக்காலத் தேவியரே திக்கெல்லாம் நின்ற சக்தி*

*கண்ண புரத்தாளே காரண சௌந்தரியே*

*காரண சௌந்தரியே நாராயணன் தங்கையரே*

*நல்லமுத்து மாரியரே நாகக்கன்னி தேவியரே*

*பார் உலகில் இக்கதையைப் படித்தோர் மிகவாழி*

*நாரணியார் தன் கதையை நாள்தோறும் வாசிப்போர்*

*பாரில் புத்திர பாக்கியம் படைத்து மிக வாழ்வாரே*

*மாரி திருக்கதையை மணமகிழ்ந்து கேட்போரும்*

*தேவி திருக்கதையை தீர்க்கமாய் கேட்போரும்*

*பாடிப் படித்தோரும் பாக்கியத்தைத் தான் பெறுவர்*

*நாடித் துதிப்போரும் நற்கதியைத் தான் அடைவர்*

*ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூன்றி*

*மூங்கில் போல் சுற்ற முசியாமல் வாழ்ந்திருப்பர்"*

என இந்த மாரியம்மன் தாலாட்டு நிறைவு பெறுகிறது (இது மிக நீண்ட நெடிய பாடல் என்பதால் முதல் பகுதியும் இறுதிப் பகுதியும் மட்டுமே இங்கு தரப்படுகிறது). இதன்மூலம், அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர் அல்லது "அம்மை விளையாடியவர்" எனக் கருதப்படுபவர் படிப்படியாக நலம்பெறுவார் என்று நம்பப்படுகிறது. அதன் பின்னர், அம்மன் ஆலயத்துக்கு தண்ணீர்க் குடம் எடுத்துச் சென்று கோவிலை வலம் வந்து அம்மனுக்கு அபிஷேகம் செய்வர்.

இதனைத் தொடர்ந்து நேர்த்திக்கடன்கள் பல்வேறு முறைகளில் நிறைவேற்றப்படுகின்றன. அம்மை விளையாடியவர் ஊர் முழுவதும் சென்று மடிப்பிச்சை எடுப்பார். அவ்வாறு பெறப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து ஆலயத்தில் வைத்து கஞ்சி காய்ச்சி பக்தர்களுக்கு வழங்குவார். மற்றொரு முறையில், பச்சை அரிசியை ஊறவைத்து இடித்து, அதனுடன் சீனி அல்லது சர்க்கரை கலந்து அம்மனுக்குப் பூஜை செய்து பின்னர் பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குவார்கள். இவ்வாறான சடங்குகள் அம்மை நோயிலிருந்து குணமடைந்தவர்கள் நிறைவேற்றும் முக்கியமான நேர்த்திக்கடன்களாகக் கருதப்படுகின்றன.

மேலும், அம்மனுக்குக் "கண்ணடக்கம்" வைப்பதாகவும் பக்தர்கள் வேண்டிக்கொள்வர். அம்மன் திருவிழா நடைபெறும் காலத்தில் கரகம் பாலித்தல் சிறப்பாக நடைபெறும். அந்தக் கரகத்தில் மஞ்சளால் அம்மனின் முகம் வடிவமைக்கப்பட்டிருக்கும். அம்மன் ஊர்வலமாக வரும்போது, கரகத்தில் உள்ள அம்மனுக்கு கண்ணடக்கம் சாத்தி தாம் எடுத்த நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர்.

*"மார்பினில் முத்தையம்மா மாதாவே*

*நீ இறங்கு*

*வயிற்றில் முத்தையம்மா மகேஸ்வரி*

*நீ இறங்கு*

*துடையினில் முத்தையம்மா தூயவளே*

*நீ இறங்கு*

*கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி*

*நீ இறங்கு*

*பாதத்தை அம்மா பாரினில் இறக்கி விடு*

*பூமியிலே இறக்கி விடு*

*பெற்றவளே காருமம்மா*

*பெற்றவளே தாயே பேரரசி மாரிமுத்தே*

*உற்ற துணை இருந்து*

*உகந்தமே காருமம்மா*

*உன்னை விட பூமிதனில்*

*உறுதித்துணை வேறுமுண்டோ*

*பக்கத்துணை இருந்து பாதுகாத்து*

*ரட்சி அம்மா*

*செக்கச் சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே"*

அம்மை இறங்குவதற்காக அம்மை போட்ட இடங்களைச் சொல்லி, மாரியை வேண்டும் பாடல் இது. இவ்வாறு மலையக மக்களின் வாய்மொழி மரபுகளிலும் பாடல்களிலும், அம்மை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு சடங்காச்சாரங்களையும் நம்பிக்கைகளையும் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் நோய் தொடர்பான கருத்துருவாக்கங்கள் பல்வேறு மூலங்களிலிருந்து தோன்றுகின்றன. குறிப்பாக, நோய் குறித்த நம்பிக்கைகள், பண்பாட்டு வழியிலான உடலியல் புரிதல்கள், நோய்க்கான காரண-காரிய விளக்கங்கள், நோய் வகைப்பாடுகள், நோயறிதல் முறைகள், குணப்படுத்தும் வழிமுறைகள், மருந்து மற்றும் சிகிச்சை முறைகளின் செயல்திறன் குறித்த எண்ணக்கருக்கள் உள்ளிட்ட பல்வேறு கூறுகள் பண்பாட்டின் அடித்தளங்களோடு இணைந்தே உருவாகின்றன. இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு சமூகமும் நோயை வரையறை செய்கிறது. அதேபோன்று, அந்த நோயைக் குணப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் சிகிச்சை நடைமுறைகளையும் தமது பண்பாட்டு அனுபவங்களின் அடிப்படையில் தேர்ந்தெடுத்து நடைமுறைப்படுத்துகிறது.

இந்தப் பின்னணியில், மலையக மக்களின் வாழ்வியலில் அம்மை நோய் ஒரு முக்கியமான நோயாகக் கருதப்படுவதோடு, அதனை எதிர்கொள்வதற்கும் குணப்படுத்துவதற்கும் மேற்குறிப்பிட்ட சடங்காச்சார நடைமுறைகளும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்நடைமுறைகள் வெறுமனே நோய் நீக்கச் சடங்குகளாக மட்டுமன்றி, அந்த சமூகத்தின் நம்பிக்கைகள், வாழ்வியல் அனுபவங்கள் மற்றும் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்தும் முக்கியமான பண்பாட்டுக் கூறுகளாகவும் திகழ்கின்றன.

அதேவேளை, நோயால் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களைக் குணப்படுத்தும் பொறுப்பில் உள்ள குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள் மற்றும் சமூகத்தினரும் மொழி, பண்பாடு, பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகளால் வேறுபட்டவர்களாக இருந்தபோதிலும், இந்நோயை எதிர்கொள்வதில் ஊர்ப் பெரியவர்கள், பூசாரிகள் மற்றும் ஆலயப் பண்டாரங்களின் வழிகாட்டுதலையே அதிகம் நம்பியுள்ளனர். அவர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் அம்மை நோயைக் குணப்படுத்துவதற்கான பல்வேறு சடங்குகளும் நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையக மக்களின் வாழ்வியல் முறையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய நோய்களுள் அம்மை நோய் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்காக சமூகத்தில் பின்பற்றப்பட்ட நடைமுறைகளும், மாரியம்மன் மீது மக்கள் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கைகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாகக் காணப்படுகின்றன. நோயிலிருந்து முழுமையான குணமடைதலைப் பெறும் நோக்கில், அவர்கள் பல்வேறு சடங்குகளையும் நம்பிக்கைகளையும் கடைப்பிடித்து வருகின்றனர். அம்மை நோயை மையமாகக் கொண்டு உருவான இந்நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் சமூக நடைமுறைகள் மலையக மக்களின் வாழ்வியலில் முக்கிய கூறுகளுள் ஒன்றாகக் கருதப்பட வேண்டியவையாகும்.

## சான்றாதாரங்கள்


1. பக்தவத்சல பாரதி. (2014). இலங்கை-இந்திய மானிடவியல். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

2. தனஞ்செயன், ஆ. (2012). குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும். சென்னை: பாவை பிரின்டர்ஸ்.

3. தனஞ்செயன், ஆ. (2015). விளிம்புநிலை மக்கள் வழக்காறுகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

4. வேலுப்பிள்ளை, சி.வி. (1976). மாமன் மகளே. கொழும்பு: சுதந்திரம் அச்சகம்.

# 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டச் சமூகம்: அடிமைத்தனமும் மீட்சியும்

மலையகத் தமிழர்களின் புதிய வரலாற்றை இருபத்தோராம் நூற்றாண்டு அரசியல், பண்பாட்டுச் சூழலுக்கேற்ப எழுத வேண்டிய தேவை இன்றியமையாதது ஆகும். இவர்களின் 200 ஆண்டுகால வாழ்வு, இலங்கையின் பெருந்தோட்டங்களில் ஒரு வரலாற்று விபத்தாக நிகழ்ந்திருந்தாலும், இவர்களுக்கென்று ஒரு நெடிய பாரம்பரியம் உண்டு என்பதை மறுக்க முடியாது. இந்த நெடும்பயணத்தில், இவர்கள் நூற்றுக்கணக்கான வன்முறைகளுக்கும், குடியுரிமை பறிப்பு, நிலவுரிமை பறிப்பு உள்ளிட்ட பாகுபாடுகளுக்கும் ஆளாகினர். சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தங்களால் இவர்களில் சரிபாதிக்கும் மேற்பட்டவர்கள் நாடு கடத்தப்பட்டனர். எஞ்சியவர்கள் இலங்கையின் ஏனைய சமூகங்களால் அடிமைக் குடிகளாகவே பார்க்கப்பட்டனர். ஆயினும், இத்தகைய அவலங்களுக்கு மத்தியிலும், இந்த மக்கள் தமது தனித்துவமான மொழி, பண்பாடு, உற்பத்தி முறை, கூட்டு உளவியல் ஆகியவற்றைத் தக்கவைத்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையில், இந்நூற்றாண்டின் கண்ணோட்டத்தில், அவர்களது தனித்துவமான இருப்பை நிலைநிறுத்தும் முகமாக அவர்களுக்கான ஒரு புதிய அரசியல் – பண்பாட்டு அடையாளத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உணரப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு 'மலையகத் தமிழர்களின் அரசியலும் பண்பாடும்' எனும் இத்தொடர் எழுதப்படுகின்றது.


## பொன் பிரபாகரன்



பொன்.பிரபாகரன், யாழ். பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவப் பட்டம் பெற்றவர். பட்டப்பின் டிப்ளோமாவை இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலும், ஊடகவியலில் டிப்ளோமாப் பட்டத்தை கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். மேலும், கொழும்பு வணிகப் பள்ளியில் செயற்றிட்ட முகாமைத்துவப் பட்டத்தைப் பெற்றுள்ளார். அரசியல், பொருளாதாரம், பண்பாடு போன்ற தளங்களில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். 'காமன் கூத்து'(மலையக தமிழரின் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு), 'உப்பு ரொட்டி' (கவிதைத் தொகுப்பு), 'மலையகத் தமிழரின் சமூகவியலும் அரசியலும்' என்பன இவரது நூல்களாகும்.

**18** ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் நாட்டின் மிகப்பெரும் வதிவிடத் தொழிலாளர் சமூகமாகத் தோட்டத் தொழிலாளர்களே விளங்கினர். தென்னிந்தியாவிலிருந்து நிலமற்ற ஏழைகள், விவசாயக் கூலிகள் மற்றும் சிறு விவசாயிகள் தேயிலை, கோப்பி, தென்னை மற்றும் இறப்பர் தோட்டப் பணிகளுக்காக பிரித்தானியப் பெருந்தோட்ட உரிமையாளர்களால் அழைத்து வரப்பட்டனர். இக்குடியேற்றத் தொழிலாளர்களினதும் அவர்களைச் சார்ந்து வாழ்ந்தவர்களினதும் எண்ணிக்கை 1891 இல் 2,35,000 ஆகவும், 1921 இல் 5,00,000 ஆகவும், பின்னர் 1931 ஆம் ஆண்டில் 7,00,000 ஆகவும் பாரிய வளர்ச்சி கண்டது.

பெருந்தோட்ட உரிமையாளர்கள் ஆள்திரட்டும் பணிகளுக்காக கங்காணிகளுக்கு முற்பணங்களை வழங்கியதுடன், தொழிலுக்கு வரும் ஒவ்வொரு தொழிலாளிக்காகவும் கங்காணிகளுக்கு தினசரி ஒரு தொகை பணம் வழங்கப்பட்டது. இது 'பென்ஸ் காசு' என அழைக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் தொழிலாளர்களுக்கான அரிசி விநியோகம், குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் கடைகளை நடத்துதல் போன்ற பணிகளை கங்காணிகள் மேற்கொண்டனர். எனினும், தோட்ட முகாமையாளருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் இடைத்தரகர்களாகச் செயற்படுவதே அவர்களின் பிரதான பணியாக இருந்தது. தொழிலாளர்கள் நிரந்தரத் தொழிலாளர்களாக மாறும் வரை இந்நிலை நீடித்த போதிலும், கடன் வழங்குபவர் மற்றும் கடை உரிமையாளர் என்ற அவர்களின் பாத்திரம் தொடர்ந்தும் நீடித்தது.

தொழில் கட்டுப்பாட்டாளரான பி. ரிட் என்பவர், "இலங்கைவாழ் இந்தியத் தொழிலாளர்கள் கடனிலேயே பிறக்கிறார்கள், கடனிலேயே வாழ்கிறார்கள், கடனிலேயே மரணிக்கிறார்கள்" என்று அவர்களின் அவல நிலையை விவரிக்கின்றார். இச்சூழலில் கங்காணிகள் ஒரு முக்கிய பங்கு வகித்தனர்; அவர்கள் தோட்ட உரிமையாளர்களிடமிருந்து நேரடியாகப் பணத்தைப் பெற்று தொழிலாளர்களுக்குக் கடன் வழங்குபவர்களாகவும், அத்தியாவசியப் பொருட்களைக் கடனுக்கு விநியோகிக்கும் ஏகபோக உரிமையாளர்களாகவும் திகழ்ந்தனர். 1908 ஆம் ஆண்டு தொழில் ஆணையகத்தின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுவது போல, தொழிலாளர்கள் தங்களின் கடன் சுமை எவ்வளவு என்பதைக்கூட அறிய முடியாதவாறு கங்காணிமார் உண்மைகளை மறைத்தனர். இக்கடன் சுமை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்ததால், பாமரத் தொழிலாளர்கள் மிக எளிதாகப் பல்வேறு மோசடிகளுக்குப் பலியாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மாதாந்த ஊதியம் வழங்கப்படும் தருணங்களில், கங்காணிகள் தொழிலாளர்களின் கூலியை அபகரித்துக் கொண்டமையால் அவர்களின் கடன் சுமை ஒருபோதும் தீராத ஒன்றாகவே நீடித்தது. ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற்கு தொழிலாளர்களை மாற்றுவதற்காக தோட்ட உரிமையாளர்கள் கங்காணிமாருக்கு வழங்கிய முற்பணமானது, அத்தொழிலாளர்கள் முந்தைய தோட்டங்களில் வைத்திருந்த கடன்களை அடைப்பதற்கே பயன்படுத்தப்பட்டது. இக்கடன் தொகையை தொழிலாளர்களிடமிருந்து மீளப்பெற கங்காணிகள் 'துண்டு முறைமையை' கையாண்டனர். இம்முறைமையின் ஊடாக தொழிலாளர்கள் கங்காணிகளிடம் நிரந்தரக் கடனாளிகளாக மாற்றப்பட்டனர். 1921 ஆம் ஆண்டளவில் இத்துண்டு முறைமையின் கீழ் நிலுவையில் இருந்த கடன் பாக்கிகளுக்காக தொழிலாளர்கள் மீது சிவில் வழக்குகளும், சில சந்தர்ப்பங்களில் தடுப்புக் காவல் உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டன.

1927ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் நடைமுறைக்கு வரும் வரை, தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் முறையாக நிர்ணயிக்கப்படாமலேயே இருந்தது. இந்த வருமானம் அவர்களின் அத்தியாவசிய வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்ட எக்காலத்திலும் போதுமானதாக அமையவில்லை. நகர்ப்புறத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வு மற்றும் தோட்டத்துறையில் நிலவிய தீவிர ஆள் பற்றாக்குறை போன்ற சூழல்களிலும் கூட, தோட்டத் தொழிலாளர்களின் கூலி மட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அரசியல் ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டும், முறையான பேரம் பேசும் சக்தியற்றும் காணப்பட்ட இத்தொழிலாளர்கள், ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அதே நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

1908 ஆம் ஆண்டு தொழில் ஆணையகத்தின் அறிக்கையின்படி (பக். 38), தோட்டத் தொழிலாளர்களின் ஊதியம் குறித்து ஒரு தோட்டத்துரை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: "இலங்கையில் நான் கழித்த 14 ஆண்டுகளில், ஆண்களுக்கான கூலி 33 சதமாகவும், பெண்களுக்கான கூலி 25 சதமாகவும் எவ்வித மாற்றமுமின்றி ஒரே

மட்டத்திலேயே பேணப்பட்டு வந்துள்ளது”. இத்தகைய குறைந்த ஊதியச் சூழலில், தோட்டத் தொழிலாளர்களுக்குச் சந்தை விலையை விட 14% குறைவான விலையில் அரிசி விநியோகிக்கப்பட்டதுடன், ஒரு லயன் அறையும் சிறிய விவசாய நிலமும் இலவசமாக வழங்கப்பட்டன.

பெருந்தோட்டத்துறையில் நிலவிய சுகாதாரச் சூழல் மிகவும் மோசமானதாகக் காணப்பட்டது. இப்பகுதிகளில் மரண வீதமும், குறிப்பாகச் சிசு மரண வீதமும் மிக உயர்ந்து காணப்பட்டன. தொழிலாளர்கள் மத்தியில் நோய்வாய்ப்படும் தன்மை, போசாக்கின்மை மற்றும் கடுமையான வேலைப்பளு போன்ற சவால்கள் நிலவிய போதிலும், தோட்ட உடைமையாளர்கள் அவர்களின் உடல்நலக் குறைபாடுகளைக் கண்டுகொள்ளவில்லை. அத்துடன், அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகளோ முறையான மருந்துகளோ போதிய அளவில் வழங்கப்படவில்லை.

பெருந்தோட்டத்துறையில் நிலவிய இக்கட்டான வாழ்வியல் சூழலை 1884 ஆம் ஆண்டில் தோட்டத்துறை மருத்துவ அதிகாரி ஒருவர் இவ்வாறு ஆவணப்படுத்தியுள்ளார்: “இந்தத் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக எவ்வித உடைமைகளும் இல்லை. அவர்கள் தினக்கூலிகளாகவும், தோட்டங்களிலேயே தங்கி வாழ்பவர்களாகவும் இருக்கின்றனர். நோய்வாய்ப்பட்டாலோ அல்லது வேறு காரணங்களாலோ வேலைக்குச் சமூகமளிக்கத் தவறினால், அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதில்லை”.

மரண விகிதங்கள் குறித்த தரவுகள் அக்காலகட்டத்தில் நிலவிய அவலத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றன. 1883 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையின்படி, 1883-1891 இடைப்பட்ட காலத்தில் பொதுவான மரண விகிதம் 7.42% ஆக இருந்தபோது, தோட்டத்துறையில் அது 21% என்ற அதீத மட்டத்தில் காணப்பட்டது. இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் கட்டுப்பாட்டாளரின் 1925 ஆம் ஆண்டு அறிக்கையின்படி, 1920 இல் தோட்டத்துறையின் மரண விகிதம் 1,000 பேருக்கு 52 ஆகப் பதிவாகியிருந்தது. குறிப்பாகச் சிசு மரண விகிதமானது, தேசிய ரீதியாக 182 ஆக இருந்த நிலையில், தோட்டத்துறையில் 1,000 பிறப்புகளுக்கு 224 ஆக மிக உயர்ந்து காணப்பட்டது. இந்த நெருக்கடியான சுகாதாரச் சூழலைக் கருத்திற்கொண்டே, பெருந்தோட்ட வைத்தியசாலைகளை நிறுவுவதற்கு அந்த ஆணைக்குழு பரிந்துரைத்தது. தோட்டத் தொழிலாளர்கள் அதிகாலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை உணவு, தண்ணீர் அல்லது ஓய்வு இன்றி உழைக்கக் கட்டாயப்படுத்தப்பட்டனர். 1914 இல் இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல தோட்டத்தில் மட்டும் 6 தொழிலாளர்கள் பட்டினியால் வீதியில் இறந்து கிடந்ததாக வைத்தியர் கி. ரிவான் பதிவு செய்துள்ளார். போதிய ஊதியமோ உணவோ கிடைக்காததால் 1914 இல் பிட்டகந்த தோட்டத் தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேறினர். 1924 இல் 19% மரண வீதமும், 1925 இல் 55% சிசு மரண வீதமும் இந்தியத் தொழிலாளர்களிடையே நிலவியதாக இந்திய குடியேற்றத் தொழிலாளர் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். இது நாடளாவிய ரீதியில் காணப்பட்ட 20% விகிதத்தை விட மிக அதிகமாகும்.

1911 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின்படி, இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் கலாசார வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கிய காரணியாகக் குறைந்த எழுத்தறிவு மட்டம் விளங்கியது. தேசிய அளவில் எழுத்தறிவு விகிதம் 26.1% ஆக இருந்தபோதிலும், இந்தியத் தொழிலாளர்களிடையே ஆண்களின் எழுத்தறிவு 12.3% முதல் 20% வரை மட்டுமே காணப்பட்டது. குறிப்பாக, பெண்களின் எழுத்தறிவு விகிதம் வெறும் 1.5% என்ற மிகக் குறைந்த மட்டத்திலேயே பதிவாகியிருந்தது.

1904-1906 காலப்பகுதியில் வெறும் இரண்டு தோட்டப் பாடசாலைகளும் மிகக்குறைந்த எண்ணிக்கையிலான மிஷனரிப் பாடசாலைகளும் மட்டுமே இயங்கி வந்தன. தோட்டப் பிள்ளைகளின் கல்வி குறித்த விவகாரம் பிரித்தானிய பொதுச்சபையில் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து, காலனித்துவக் குடியேற்ற நாட்டுச் செயலாளர் இது குறித்து தோட்ட முதலாளிமார் சம்மேளனத் தலைவரிடம் விளக்கம் கோரினார். இதற்குப் பதிலளித்த சம்மேளனத் தலைவர், தொழிலாளர் வர்க்கத்தினருக்குக் கட்டாயக் கல்வி வழங்குவதற்கான சூழல் இன்னும் உருவாகவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார். 1920 ஆம் ஆண்டு கல்வி கட்டளைச்சட்டம் இயற்றப்பட்ட பின்னரே தோட்டச் சிறுவர்களுக்கு அடிப்படைக் கல்வி வழங்கப்பட்டது; இருப்பினும், அது தேசிய கல்வித் தராதரங்களுக்கு இணையாக இருக்கவில்லை.

தென்னிந்தியாவின் பின்தங்கிய சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த இத்தொழிலாளர்கள் மத்தியில் பிணக்குகளும் சமூகச் சீரழிவுகளும் அதிகளவில் காணப்பட்டன. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஒருவித அடிமை முறையிலேயே வைக்கப்பட்டிருந்தனர்.

தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள், உணவு விநியோகம் மற்றும் அடிப்படைத் தேவைகள் அனைத்தும் தோட்ட உரிமையாளர்களின் நேரடிக் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. குறிப்பாக, அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தோட்டக் கங்காணிமாரின் கடைகளையே முழுமையாகச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. கடன் சுமை மற்றும் நடமாட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக, இந்தியத் தொழிலாளர்கள் 1930ஆம் ஆண்டு வரை ஒரு முறைமைப்படுத்தப்பட்ட வாழ்வியலைக் கொண்டிருக்கவில்லை. அதேநேரம், வெளித்தொடர்புகள் குறைவாக இருந்தமையால் அவர்கள் பிரதான சமூக நீரோட்டத்தோடு இணையவும் முடியவில்லை.

தோட்டக் கங்காணிமார் தொழிலாளர்களைக் கடுமையான கண்காணிப்பிற்கு உள்ளாக்கியதுடன், அவர்களுக்குத் தண்டனைகளையும் வழங்கினர். 1919 ஆம் ஆண்டில் குடியேற்ற தொழிலாளர் ஆணையகம் இத்தகைய தண்டனைகள் குறித்துக் கவனம் செலுத்திய போதிலும், தோட்டத்துரைமார் அதனைப் பொருட்படுத்தவில்லை. மேலும், லயன் குடியிருப்புகளின் நெருக்குவாரமான சூழல் காரணமாகத் தோட்டத்துறையில் சுதந்திரமான இயக்கங்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் இல்லாது போயின.

தோட்டத் தொழிலாளர்களின் நலன் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாக 1841 மற்றும் 1865 ஆகிய ஆண்டுகளில் எஜமான்வேலையாள் சட்டங்கள் இயற்றப்பட்டன. இருப்பினும், இச்சட்டங்கள் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த அளவிலான பாதுகாப்பையே உறுதி செய்தன. இதன் பின்னர், 1872ஆம் ஆண்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான மருந்துத் தேவைகள் கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், 1889ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் கட்டளைச் சட்டமானது, குடிவரவுத் தொழிலாளர்களின் ஒப்பந்தக் கோவைகளை மதிப்பதற்கும் அவர்களின் கடன் கொடுப்பனவுகளை முறைப்படுத்துவதற்குமான ஒரு முயற்சியாக அமைந்தது.

தொழிலாளர்களின் விநியோகச் சங்கிலியைச் சீராகப் பேணுவதையே இத்தகைய சட்ட நடவடிக்கைகள் முதன்மையாக இலக்காகக் கொண்டிருந்தன. இந்திய அரசு, இலங்கையிலுள்ள இந்தியக் குடியேற்றத் தொழிலாளர்களின் நலன் குறித்து இலங்கை அரசுக்குத் தொடர்ச்சியான அழுத்தங்களைக் கொடுத்த பின்னரே, அவர்கள் தொடர்பான சட்டவாக்கங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக, 1919, 1921 மற்றும் 1922 ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தங்கள், 1865 ஆம் ஆண்டின் எஜமான்வேலையாள் சட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள், 1920 ஆம் ஆண்டின் தோட்டத் தொழிலாளர் கல்விச் சட்டம் மற்றும் 1927 ஆம் ஆண்டின் குறைந்தபட்ச கூலிச் சட்டம் ஆகியவற்றின் ஊடாகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரத் தொடங்கியது. அத்துடன், இந்திய தேசியவாதச் சிந்தனைகளின் உத்வேகத்தால் பெருந்தோட்டத் துறையில் தொழிற்சங்க இயக்கங்களும் வேரூன்றின.

பெருந்தோட்டத்துறையில் அமர்த்தப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள், முதலாளிமார்களுடனும் கங்காணிகளுடனும் அவ்வப்போது மோதல்களில் ஈடுபட்டு வந்தனர். அக்காலகட்டத்தில் நடைமுறையிலிருந்த சட்ட விதிகளின்படி, இத்தகைய மோதல்கள் தண்டனைக்குரிய குற்றங்களாகவே கருதப்பட்டன. அதேவேளை, ஒரு கங்காணி தான் நிர்வகிக்கும் குழுவிலுள்ள தொழிலாளர்களை, தனது விருப்பத்திற்கு ஏற்ப ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற்கு இடமாற்றம் செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

### போடைஸ் தோட்டத்தொழிலாளரின் வேலைநிறுத்தம் - 1896

1896 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதியிட்ட 'Times of Ceylon' பத்திரிகைச் செய்தி மற்றும் இந்தியக் குடியேற்றத் தொழிலாளர் கட்டுப்பாட்டாளரின் 1925 ஆம் ஆண்டு அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில், போடைஸ் தோட்டத்தைச் சேர்ந்த 70 தொழிலாளர்கள் ஒரு வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது தலைமைக் கங்காணியின் அறிவுறுத்தலுக்கு இணங்க முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டமானது, குத்தகையாளர் ஒப்பந்த மீறல் காரணமாகவே கங்காணியின் தூண்டுதலால் அரங்கேறியது.

இந்தக் காலக்கட்டத்தில், தேசம் முழுவதும் தொழிலாளர் பிரிவுகள், நலன்புரி அமைப்புகள், சங்கங்கள், சகாய நிதிச் சங்கங்கள் மற்றும் சீட்டுக் குழுக்கள் எனப் பல்வேறு வடிவங்களில் தொழிலாளர்கள் சிறு குழுக்களாகத் திரளத் தொடங்கினர். மலையகத் தொழிலாளர்களின் இந்த அமைப்பு ரீதியான எழுச்சிக்கு இணையாக, நகர்ப்புறத் தொழிலாளர்களும் படிப்படியாகத் தங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டு வந்தனர்.

**03 JUNE**

# ‘வடக்கு–கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்’

## நூல் வெளியீட்டு நிகழ்வு

## கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி மண்டபம்.



கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு பேரவையின் ஆதரவுடன் எழுநா வெளியீடாகிய, அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்களின் ‘வடக்கு கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்’ நூலின் வெளியீட்டு நிகழ்வு 03.06.2026 (புதன்கிழமை), பி.ப 2.00 மணிக்கு மாவட்ட திறன் விருத்தி மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக முன்னாள் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. த. குருகுலராஜா மற்றும் ஓய்வுநிலைப் பாடசாலை அதிபர் திரு. சி. பாலகிருஸ்ணன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு. ச. மோகனபவன், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் திரு. இ. த. ஜெயசீலன் மற்றும் கரைச்சி பிரதேச செயலாளர் திரு. தி. முகுந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களின் தமிழ்மொழி வாழ்த்தோடு ஆரம்பமாகிய இந்நிகழ்விற்கு மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல மாணவர்கள் வரவேற்பு நடனத்தை வழங்கியிருந்தனர்.வரவேற்புரையினை கிளிநொச்சி மாவட்ட சிரேஸ்ட கலாசார அலுவலர் திருமதி மாலினி அவர்கள் வழங்கியிருந்தார். அதனைத் தொடர்ந்து நூல் வெளியீட்டுரையினை சிரேஸ்ட விரிவுரையாளரும் முன்னாள் பொருளியற்றுறைத் தலைவருமாகிய திரு. எஸ். எஸ். உதயகுமார் வழங்க, மதிப்பீட்டுரையினை பேராசிரியரும் முன்னாள் அரசறிவியற்றுறைத் தலைவருமாகிய பேராசிரியர் த. கணேசலிங்கம் வழங்கியிருந்தார்.

நூலின் முதன்மைப் பிரதிகளை நிகழ்வின் அனுசரணையாளர்களும் சிறப்புப் பிரதிகளை விருந்தினர்களும் பெற்றுக்கொண்டனர்.

நூலாசிரியரின் ஏற்புரையை தொடர்ந்து, வைத்தியர் திவாரகா கேதீஸ்வரனின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள், இலக்கிய செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# ‘வடக்கு– கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்’

## நூல் அறிமுக நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கம்

**03 JUNE**




எழுநாவின் வெளியீடாகிய திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்களின் ‘வடக்கு கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்’ நூலின் அறிமுக நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் அறிவோர் ஒன்றுகூடலில் 03.06.2026 அன்று இடம்பெற்றது. கலாநிதி எஸ். கே. பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் மதிப்பீட்டுரையினை வழங்கியிருந்தார்.

படங்கள் – திரு. தம்பையா ராஜரட்னம்

13
JUNE

# ‘உத்தியாக்கள்: கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்’

## நூல் அறிமுக நிகழ்வு ஏழாலை மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம்.







மக்கள் கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில், யாழ் ஏழாலை மகாவித்தியாலயத்தில் 13.06.2026 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற ”நூறு நூல்கள் மலரட்டும் புத்தக அரங்க விழாவில் மூன்று நூல்களின் அறிமுகம் இடம்பெற்றது.

அவற்றில், எழுநா வெளியீடான, திரு. கமலநாதன் பத்திநாதன் அவர்களின் ‘உத்தியாக்கள்: கிழக்கிலங்கை கடலோர வேடர்களின் பண்பாட்டு அசைவுகள்’ எனும் நூலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நூலுக்கான அறிமுக உரையை மூத்த எழுத்தாளர் திரு. வடகோவை வரதராஜன் அவர்கள் வழங்கியிருந்தார். மாணவர்கள், வாசகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# ‘மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை : நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்’

15
JUNE

## நூல் அறிமுக நிகழ்வு சித்தாண்டி, கூடாரம்.



மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் அறவழிப்போராட்டத்தின் 1000 நாள் நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட நிகழ்வின் ஒரு அங்கமாக எழுநாவின் வெளியீடாகிய திரு. வை. ஜெயமுருகனின் ‘மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு – மாதவனை மேய்ச்சல் தரை : நில அடையாளம், இன அரசியல், வாழ்வாதாரம்’ நூலின் அறிமுகம் சித்தாண்டி, கூடாரத்தில் 15.06.2026 (திங்கட்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு இடம்பெற்றது. இந்நிகழ்வில், நூலிற்கான அறிமுகவுரையினை திரு. சார்ள்ஸ் அன்ரனிதாஸ் அவர்கள் வழங்கியதுடன், நூல் ஆய்வுரையை திரு. க. குருநாதன் அவர்கள் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் அருட்தந்தை லூக், சட்டத்தரணி ஜெயசிங்கம், சிவில் சமூக செயற்பாட்டாளர் எஸ். சிவயோகநாதன், மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி அ. அமலநாயகி, பண்ணையாளர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' நூல் அறிமுக நிகழ்வு

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபம்

திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்களின் மணி விழா மற்றும் சேவை நலன் பாராட்டு விழாவில், அவரது எழுநா வெளியீடாகிய 'வடக்குகிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' நூலின் அறிமுக நிகழ்வு கடந்த 18.06.2026 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திரு. இ.த. ஜெயசீலன் அவர்களின் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் அதிபர் திரு. இ. பெருமாள் கணேசன் அவர்கள் நூல் அறிமுக உரையை ஆற்றினார். நூல் குறித்து அவர் குறிப்பிடுகையில், கிளிநொச்சி மண்ணிலிருந்து வெளியாகியுள்ள சிறந்த ஆய்வு நூலாக இதனைக் கருதுவதாகத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், "நவீன பொருளாதாரக் கொள்கைகளை மையப்படுத்தி, ஒவ்வொரு துறையையும் பற்றிய விரிவான புள்ளிவிவரங்களைக் கொண்டதாக வெளிவந்துள்ள இந்நூல், சேவைத்துறையினர், நிர்வாகிகள், தொழில் முயற்சியாளர்கள், செயல்திட்ட வடிவமைப்பாளர்கள் மற்றும் பொது அறிவை வளர்த்துக்கொள்ள விரும்புவோருக்கு சிறந்த கையேடாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

நூலுக்கான ஆய்வுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைப் பேராசிரியர் சி. விஜயகுமார் அவர்கள் வழங்கினார். அவர் தனது உரையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மையப்படுத்திய ஆய்வு நிறுவனங்கள் மற்றும் அவற்றின் வெளியீடுகளின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

நூலறிமுக நிகழ்வைத் தொடர்ந்து, திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.







18
JUNE

# எழுநா வெளியீடு






















முன்பதிவுகளுக்கு +94 777 97 5029


எழுநா
வடக்கு - கிழக்குப்
பிராந்திய அபிவிருத்தியும்
உயிர்ப்பல்வகைமையும்
சி.ஜேம்சன் அரசகேசரி


எழுநா
யாழ்ப்பாணத்தில்
சாதி அமைப்பும்
சமூக உறவுகளும்
தொகுப்பும் தமிழாக்கமும்:
சந்தையா சண்முகலிங்கம்


எழுநா
உத்தியாக்கள்
கிழக்கிலங்கை கடலோர வேடர்களின்
பண்பாட்டு அசைவுகள்
கமலநாதன் பத்திநாதன்


எழுநா
மாறுபாடில்லா
உண்டி
சித்தமருத்துவர்
தியாகராஜா சுதர்மன்


எழுநா
சூழ்ச்சிகளையும்
சதிகளையும்
கடந்த வரலாறு
இரா.சடகோபன்


எழுநா
பதார்த்த
சூடாமணி
பால. சிவகடாட்சம்


எழுநா
வடக்குப் பிராந்தியக்
காலநிலையியல்
நாகமுத்து பிரதீபராஜா


எழுநா
வாசலிலே கிருசாந்தி
செம்மணி தொடர்பான கவிதைகள்
தொகுப்பு:
எழுநா கலை பண்பாட்டு நடுவம்


எழுநா
மன்னார் தீவில்
கனிம மணல் அகழ்வு
சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகள்
வை. ஜெயமுருகன்


இரு நூற்றாண்டு
மலையகம்
வலியும் வாழ்வும்


யாழ்ப்பாணக் குடாநாட்டின்
நூலகப் பாரம்பரியம்
ஒரு வரலாற்றுத் தேடல்
என். செல்வராஜா


தமிழ்ப் பண்பாடு
ஊற்றுகளும் ஓட்டங்களும்
ந. இரவீந்திரன்


யாழ்ப்பாண
மருத்துவ வரலாறு
பாலசுப்பிரமணியம் துவாரகன்


பாக்கியநாதன் அகிலன்
மரபுரிமைகளைப்
பறைதல்


இலங்கையின் கறவை மாடு
வளர்ப்புப் பொருளாதாரம்
கால்நடை வைத்தியர்
சி. கிருபானந்தகுமாரன்


இருத்தலின் மீது
கவியும்
இன்மைகள்
இளங்கோ


பசுமை
எனும்
பேரபாயம்
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ


வடக்கு – கிழக்கு
மாகாணங்களின் வளங்களும்
உள்ளூர்ப் பொருளாதார
அபிவிருத்தியும்
அமரசிங்கம் கேதீஸ்வரன்

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE***

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

**0207 341 7300**
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply

# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

**OUR GROUP OF COMPANIES**

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

**CSR INITIATIVE**

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# Nimal Vinayagamoothy, CPA, CGA
Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

மானுடம் நிறுவனம்
maanudam foundation

# நூல்சார் செயற்பாடுகள்







தமிழ் அச்சுப் பண்பாட்டிலும் பதிப்பு வரலாற்றிலும் ஈழத்து அறிஞர் பணிகள் முன்னோடியானவை. வரலாற்றுக் கனதி மிக்கவை. ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோரின் சீர்பதித்த நற்பதிப்புகளும் நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சிப் பதிப்புகளும் தமிழை அச்சு யுகத்திற்குத் தயார்படுத்தியும் தகுதிப்படுத்தியும் வைத்தவை. தமிழ்ச் சமூகத்தின் ஆய்வு அறிவுச் சூழலையும் படைப்பாக்கச் சூழலையும் மேன்மையுறச் செய்தவை. பாடாய்க் கிடந்த ஏடுகளை, எழுதா எழுத்தான அச்சு வாகனம் ஏற்றிப் பவனிவரச் செய்து, தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை நல்கியவை. ஈழத்தில் தமிழ், தமிழர் குறித்த எந்தவொரு ஆய்வும் ஈழத்துப் பதிப்புலகின் அறிகையின்றிப் பூர்த்தியாகாது. ஆய்வுப் பரப்பில் ஈழத்துப் பதிப்புலகானது. வரலாறு மற்றும் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில், இதுவரை அதிகம் கவனிப்புறவில்லை. இதனால், ஈழத்துத் தமிழ்ப் பதிப்புலகின் திசைவழிகளை அடையாளம் காணவும் அதன்வழி வரலாற்றைக் கட்டமைக்கவும் 'ஈழத்தில் அச்சுப் பண்பாடும் பதிப்பும்' எனும் பொருண்மையில் 'ஆறாவது சர்வதேச தமிழியல் ஆய்வு மாநாட்டை எமது துறை ஒழுங்குசெய்தது. மாநாட்டில் நிகழ்த்தப்பெற்ற ஆதார கருதி உரையையும் சமர்ப்பிக்கப்பெற்ற 27 ஆய்வுக் கட்டுரைகளையும் கொண்டு உருவானதே இந்நூல். தமிழியலுக்கு எம் தமிழ்த்துறையின் நன்கொடையாக அமையும் இந்நூல் அச்சுப் பண்பாடு, பதிப்பு வரலாறு ஆகியவற்றில் ஈழத்தின் சென்ற காலத்துப் பழுதிலாத் திறம் மீது ஒளி பாய்ச்சுகின்றது.

அனுசரணை:
மானுடம் நிறுவனம்
www.maanudam.org




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
## ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

SS CAKES

# Say "I Do"
## to Sweet Perfection!

Planning your dream wedding? Look no further! At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.

**+94 76 347 0055**

We do delivery around the world



# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை  அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# Protection For You & Your Family

## Our services

Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «



## Are You Getting Million Dollar Advice?



**Sritharan Thurairajah** CLU, CHS

Life100
INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

*Simple Solution in a Critical Situation*